பழைய ஆந்திர க்ஷத்திரியர்களாகிய

# கம்மவார் சரித்திரம்

முதற் பகுதி

(பூர்வோத்தர குல நிர்ணயம்)

ஆசிரியர் :


கொத்த பாவைய சௌதரி


மொழிபெயர்ப்பாளர் :


கோ. வெ. கோவிந்தசாமி நாயுடு அவர்கள்



கிராமஜோதி நூலகம்

மயிலாப்பூர் :: சென்னை - 4

முதற் பதிப்பு: ஜனவரி, 1953

★

தமிழாக்க உரிமை மொழிபெயர்ப்பாளர்க்கே

★

விலை ரூ. 4

★

நேஷனல் ஆர்ட் பிரஸ்
சென்னை - 18

# பதிப்பாளரின் குறிப்பு

தமிழில் நாயுடு, நாயகர் என்று வழங்கும் வகுப்பினர்கள் கம்ம வார், வெலமவார், பலஜவார் என்ற மூன்று பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்களின் தாய் மொழி தெலுங்கு. இவர்கள் தமிழ் நாட்டில் குடியேறிப் பல தலைமுறைகள் ஆய்விட்டன. இப்பொழுது இவர்கள் ஆந்திர தேசப் பழக்க வழக்கங்களுடன் தமிழ்ப் பழக்க வழக்கங்களையும் அநுசரித்துப் படிப்பில் தமிழும் ஆங்கிலமும் பயின்று ஆந்திரம் படிக்கப் பழகாதவர்களாய் விட்டார்கள். ஆதலின் ஆந்திரர்களுக்கும் இவர்களுக்கும் பாஷை பேதங்களும் பழக்க வழக்க வேறுபாடுகளும் காணப்படுகின்றன. இன்று நாயுடு மக்களிற் பலர் தமிழ்மொழியிற் சிறந்த புலமை பெற்று நூல்கள் எழுதியும் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் தமிழாசிரியர்களாகப் பணி செய்தும் திகழ்கின்றனர். இந்த மூன்று பிரிவினருள் கம்மவார் பல துறைகளில் முன்னேறி உள்ளார்கள். சிறப்பாகக் கோவை ஜில்லாவில் இவர்கள் வியாபாரத் துறையிலும் விவசாயத்திலும் நுட்பமான அறிவும் அநுபவமும் பெற்று விளங்குகிறார்கள். கோவை ஜில்லாவிற் காணப்படும் இயந்திரத் தொழிற்சாலைகள் பல இந்த வகுப்பினர் நிறுவினவைகளே. அங்கே வித்தாரமான நிலப் பரப்பில் விஞ்ஞான ரீதியில் இவர்கள் செய்து வரும் வேளாண்மை வியக்கத் தக்கது.

திருவாளர் கோ. வெ. கோவிந்தசாமி நாயுடு அவர்கள் இந்த வர்க்கத்தினருள் ஒருவர். அவர்களுடைய அறிமுகம் எனக்கு முதன் முதல் 1944 மே மாதம் கிடைத்தது. அப்பொழுது நான் சில நாள் உடனிருந்து அவர்களுடன் நெருங்கிப் பழகி வந்தேன். அன்று முதல் எங்கள் தொடர்பு வளர்ந்து வருகிறது.

திருவாளர் நாயுடு அவர்கள் தமிழில் நல்ல புலமை பெற்றவர். சங்க நூல்களாகிய எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களையும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, கம்பராமாயணம், திவ்யப் பிரபந்தம் முதலிய பிற நூல்களையும் நன்கு பயின்றவர். இந்த முதுமைப் பருவத்திலும் அவர்கள் அந்த நூல்களிலிருந்து பல செய்யுட்களைத் தட்டுத் தடையின்றி மனப் பாடமாகச் சொல்வதை அவருடன் சில மணிகள் பழகுவோர் உணர்ந்துகொள்ளக் கூடும். தமிழறிஞரைச் சந்திக்கும் போது அவர்களுடைய சம்பாஷணை முழுவதும் தமிழ்க் கல்வியைப் பற்றியதாகவே இருக்கும். தாய் மொழியாகிய தெலுங்கிலும் அவர்களுக்கு நல்ல பயிற்சி உண்டென்பது

கம்மவார் சரித்திரம் என்னும் இந்த நூலை அவர்கள் தெலுங்கிலிருந்து மொழி பெயர்த்ததிலிருந்து புலனாகும்.

நண்பர் நாயுடு அவர்கள் கல்வித் துறையில் மட்டுமன்றி அரசியல், சமூகம் விவசாயம் முதலியவற்றிலும் சிறந்த புலமை பெற்றவர். விவசாய, பிராணி வளர்ப்பு ஆராய்ச்சியின் பொருட்டு நான் கோவை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்தபோதெல் லாம் அவர்களுடன் சல்லாபஞ் செய்து இந்த அருங் குணங்கள் அவர்கள் பால் இருப்பதை நேரில் உணர்ந்து கொண்டேன். செல்வச் சீமானே ஆயினும் அவர் எளிய வாழ்க்கையையே மேற்கொண்டுள்ளார். தெய்வ சிந்தனையும் தரும குணமும் அடக்கமும் அவர்களுக்கு முக்கிய மான அணிகலன்கள். திரு நாயுடு அவர்கள் உடுமலைப் பேட்டையில் தம் சொந்தச் செலவில் பெண்களுக்கென்று ஓர் உயர்தரப் பாடசாலை யையும் கல்லூரி ஒன்றையும் ஏற்படுத்திச் செவ்வனே நடத்தி வருகிறார். இளைஞர்களுக்குப் போர்த் திறமையை உண்டாக்கி அவர்களை வீர புருஷர்களாக்கத் தக்க ஒரு ஸ்தாபனத்தைத் தம்மால் நிறுவ அவர்கள் சில ஆண்டுகளாக ஆர்வம் கொண்டுள்ளார்கள்.

கல்வியும் செல்வமும் அவற்றிற்கேற்ற கொடைக் குணமும் பிற நல்லியல்புகளும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற திரு நாயுடு அவர்கள் இன்று தம் இனத்தாராகிய கம்மவார்களின் சரித்திரத்தைத் தமிழில் எழுதி அவ் வகுப்பாரில் பலரும் அதனைப் படித்துக் கம்மவாரின் பழம் பெருமையை உணர்ந்து அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றவர் ஆவர். அவர்களது உள்ளம் அந்த இனத் தாரின் நன்மையை மட்டும் நாடுவதோடு நின்றுவிடவில்லை. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற பரந்து பட்ட நோக்க முடையவர்கள். அவர்களுடைய முயற்சிகளால் ஏற்படக்கூடிய நன்மைகள் எல்லாம் தேவையுள்ள அவற்றை நுகரும் தகுதி வாய்ந்த இந்திய மக்கள் யாவரும் அநுபவிக்க வேண்டும் என்று அவர்கள் அடிக்கடி கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்.

இந்தப் புத்தகம் நல்ல வடிவில் வெளி வந்து பல இடங்களிற் பரவ வேண்டும் என்பது அவர்கள் விருப்பம். இதனைப் பதிப்பித்தற்கு ஏற்பட்ட செலவுத் தொகை முழுவதையும் அவர்களே ஏற்றுக்கொண்டு நூல் அச்சாகி வருங் காலத்தில் அப்பொழுது அப்பொழுது பல ஆலோசனைகளைக் கூறிப் பல வகையிலும் உதவி செய்துள்ளார்கள். அவர்கள் பின்னும் பல ஆண்டுகள் உளநல உடல் நலங்களோடு வாழ வேண்டுமென்று இறைவனை வேண்டுவதே நாம் அவர்களுக்குச் செய் யும் கைம்மாறாகும்.

இங்ஙனம்

ச. கு. கணபதி ஐயர்

# மொழிபெயர்ப்பாளரின் முன்னுரை

தமிழ் நாட்டின் பல இடங்களிற் கம்மவார் மக்கள் காணப் பெறுகின்றனர். அவர்கள் ஆந்திர தேசத்திலிருந்து இந்தப் பகுதியிற் குடி புகுந்து உத்தேசமாக ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேற் கழிந்து விட்டன. அவர்களுடைய வர்க்கத்தினரில் நானும் ஒருவன். கம்மவாரைப் பற்றிய விரிவான வரலாறு ஒன்றை எழுத வேண்டும் என்பது என் நீண்ட நாள் அவா. ஆனல் அதனை நிறைவேற்றற்கு ஏற்ற கருவிகளும் வாய்ப்பும் இதற்கு முன் எனக்குக் கிடைக்கவில்லை. **ஸ்ரீ கொத்த பாவைய சௌதரி அவர்கள்** தெலுங்கு மொழியில் விரிவாக எழுதியுள்ள கம்மவார் சரித்திரத்தைச் சில ஆண்டுகளுக்கு முன் நான் கண்ணுற்ற போது அதனையே தமிழில் பெயர்த்து வெளியிடுவது பின்னும் சிறப்பாக இருக்குமென்று கருதி இப்பொழுது அதனை மொழிபெயர்த்து மூன்று பகுதிகளாகத் தந்துள்ளேன். இப்பொழுது வெளிவந்துள்ளது முதற் பகுதியாகும். ஏனைய இரு பகுதிகள் விரைவில் வெளிவரக்கூடும். கம்மவார் சரித்திரத்தின் தமிழாக்கத்துக்குத் தம் அநுமதியை அன்புடன் அளித்த கொத்த பாவைய சௌதரி அவர்களுக்கு நான் என்றும் கடமைப் பட்டுள்ளேன்.

இந்த நூலைப் பற்றிய விவரங்கள் இதனை முதன் முதலில் ஆந்திர மொழியிலே தந்த கொத்த பாவைய சௌதரி அவர்களுடைய முன்னுரையால் விளங்கும். அது இப் புத்தகத்துள் தனியே பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது.

இந்த முதற் பகுதியின் கையெழுத்துப் பிரதியை நன்கு பரிசோதித்தும் இது அச்சாகி வரும் காலத்து ஒப்பு நோக்குதல் விஷயமாக உதவியும் இதனைச் சிறந்த முறையில் காண்பதற்கு உபகரித்த ஸ்ரீமதி சீதா தேவி அவர்களுக்கும், இதனைத் தம் நூலகப் பதிப்பாக வெளியிட்டுதவிய கிராம ஜோதி நூலகத்தின் சொந்தக்காரராகிய **ஸ்ரீ ச. கு. கணபதி ஐயர், எம். ஏ.,** அவர்களுக்கும் என்னுடைய நன்றி. இந்நூலுக்குச் சிறப்புரை வழங்கியுள்ள அறிஞர் பலருக்கும் நான் கடமைப் பட்டவன் ஆவேன்.

இங்ஙனம்

உடுமலைப்பேட்டை,
12—1—1953

**கோ. வெ. கோவிந்தசாமி நாயுடு**

# நூலாசிரியர் முன்னுரை

நம்மவாரின் உண்மைச் சரித்திரத்தை எழுத வெகுகாலமாக முயற்சிகள் நடந்துவந்தன. அவை முற்றுப்பெறவில்லை. கம்ம வாருடைய பிறப்பையும் பூர்வோத்தரங்களையும் பற்றிச் சரியாகத் தெரிந்துகொள்ள யாராலும் முடியவில்லை. கல் வெட்டுகளின் எடுத்துக்காட்டுகளோடு இவர்கள் வரலாற்றைச் சொல்லும் நூல் இதுகாறும் வெளிவரவில்லை. ஆந்திரர் சரித்திரத்தை எழுதிய ஸ்ரீவீரபத்ரராவ் பந்துலுவின் அபிப்பிராயத்தை ஒட்டியும் சில புராணக் கதைகளை ஒட்டியும் சுருக்கமாகச் சில நூல்கள் எழுந்தன. அந்த நூல்களிலிருந்து எல்லா விஷயங்களையும் அறிந்து கொள்ள முடியவில்லை. சரித்திரப் பிரசித்தி பெற்ற கம்மவீரர்களை நினைவுறுத்தும் நூல்கள் எழ வேண்டியது அவசியம் என்று சொல்லத் தேவையில்லை. ஒரு தேச சரித்திரத்தை எழுதுவதற்கும் தனிப்பட்ட ஒரு சமூக சரித்திரத்தை எழுதுவதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. அரசர்களைப்பற்றி அறிந்து கொள்வதற்கு நாணயங்கள், சாஸனங்கள், பழைய சிற்பங்கள், இவை ஆதாரமாயிருந்து உதவுகின்றன. சமூகத்தைப் பற்றிய சரித்திரங்களுக்கு இத்தகைய சௌகரியங்கள் அதிகமாகக் கிடைப்பதில்லை.

இந்த நூலை எழுதும் போது கம்மவாரைத் தவிர வேறு சில சமூகத்தாரையும் பற்றி எழுதவேண்டி யிருந்ததால் அவர்களையும் பற்றி ஆராய வேண்டியிருந்தது. அப்படி ஆராயும்போது எந்தச் சமூகத்தினருக்கும் ஏற்றத் தாழ்வைக் கற்பிக்காமல், பாரபட்சமில்லாமல் என் அறிவுக் கெட்டிய உண்மையை நான் வெளியிட்டிருக்கிறேன். ஆனால் என்னையும் அறியாமல் சில விபரீதங்கள் ஏற்பட்டிருந்தாலும் அதனால் யாருக்காவது வருத்தம் ஏற்பட்டிருந்தாலும் அறிவாளிகள் என்னை மன்னிப்பார்களென்று நினைக்கிறேன். அதோடு குற்றங்களைத் தெரிவித்து என்னை உற்சாகப் படுத்துவார்களென்று நம்பியே கஷ்டமான இச்செய்கையில் முனைந்தேன்.

எந்தச் சரித்திரத்தை எழுதமுயன்ருலும் வேண்டிய சாதனங்கள் இருந்தாலொழிய அதனைச் சரியாக எழுத முடியாது. மகாராஜாக் களுடைய சாஸனங்களும், சரித்திரம் சம்பந்தப்பட்ட நூல்களும் சில தலைமுறைகளுக்கு முந்திய செய்திகளை மட்டுமே தெரிவிக்க முடியும். அதற்கும் முந்திய விஷயங்களை வாய்ப் பேச்சாலேயே அறியவேண்டியிருக்கிறது. அவற்றுள் வித்தியாசப்படுவதைச் சரிப்படுத்தித் தவறுகளை நீக்கி உள்ளபடி வெளிப்படுத்துவது கஷ்டமான காரியம். இப்படிச் செய்வதைச் சிலர் விரும்புவதும் இல்லை. அதனல் இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் வரை யிலும் இந்த நூலை எழுதும் உத்தேசமே எனக்கு இருக்கவில்லை. அதற்குத் தகுந்த திறமையும் எனக்கு இல்லை; சாதனங்கள் கிடைப்பதும் கஷ்டமென்றே நான் நினைத்தேன்.

தெய்வாதீனமாக 1936 - ஆம் வருஷத்தில் அனந்தபூரில் கம்ரமகாராஜு பத்திரிகை என்ற ஒன்றை ஆரம்பித்தார்கள். அதனைச் சார்ந்தோர் என்னிடம் வந்து என் சகாயத்தை விரும்பினர் கள். அச்சமயம் என்னிடமிருந்த விஷயங்களைக் கட்டுரைகளாக எழுதித்தர நான் சம்மதித்தேன்.

பத்திரிகையில் செய்திகள் வர வர எனக்கு இச் சரித்திரத்தை எழுதவேண்டுமென்ற உத்சாகம் உண்டாயிற்று. வேறு சிலநூல் களை ஆராய்ந்து இந்நூலின் மூன்ரும் பாகத்தில் வெளியிடத் தகுந்த சில கட்டுரைகளையும் அந்தப் பத்திரிகையில் வெளியிட்டேன். அந் தப் பத்திரிகையில் நானும் மற்றவர்களும் வெளியிட்ட வீட்டுப் பெயர்களும் கோத்திரப் பெயர்களும் எனக்கு இந்தச் சரித்திரம் எழுதத் துணைபுரிந்தன. ஸ்ரீவீரபத்ரராவும் மற்ற சரித்திராசிரி யர்களும் கம்மவாரைச் சோழரென்றும், சில இடங்களில் சாளுக் கிய காகதீயர்களென்றும் சொல்லியிருக்கிருர்களே ஒழியத் தகுந்த சான்று ஒன்றும் கொடுக்கவில்லை. சில இடங்களில் கம்மவார் என்றும் சில இடங்களில் வெலமவார் என்றும் எழுதியிருக்கிருர் கள். ரெட்டிகளே கம்மவார் ஆய்விட்டார்களென்றும் எழுதி யிருக்கிருர்கள். இவைகள் சரியான ஆராய்ச்சிகள் அல்ல; சில சரித்திராசிரியர்களின் தவருன ஊகமே. அவற்றையெல்லாம் சரிப்படுத்த சமுத்திரம்போன்ற இந்தக் கம்ம சரித்திரத்தை எழுது

வது அவசியமாயிற்று. கம்மவார் பிரமுகர்களைப் பற்றியும் அந்தச் சரித்திரங்கள் சொல்லவில்லை. இப்படியிருக்க 1937 - ஆம் வருஷம் பிப்ரவரி 18 - ஆம் தேதி சென்னை அஸெம்பிளி எலெக்ஷன் போது நான் சற்று அஜாக்கிரதையாக இருந்ததால் மோட்டார் விபத்தில் சிக்கிப் பிழைத்ததே புனர்ஜன்மமாகிவிட்டது. தெய்வம் இந்தச் சரித்திரத்தை எழுத நியமித்ததாலோ என்னவோ பிழைத்துவிட்டேன். இருந்தாலும் பழைய நிலைமை வரவில்லை. கால் நொண்டியாகி எங்கும் நகர முடியாமல் போய்விட்டது. அச்சமயத்தில் சென்னையிலும் ராசமகேந்திரவரத்திலும் கிடைத்த சில சாஸனங்களால் இச் சரித்திரம் எழுத வசதி கிடைத்தது. விபத்திலிருந்து தப்பிப் பிழைத்ததுமுதல் இச் சரித்திரத்தை எழுதவேண்டும் என்ற சங்கல்பம் உறுதிப்பட்டது. என் சக்திக்கு இயன்ற வரையில் சில சாஸனங்களையும் வேறு நூல்களையும் விலைக்கு வாங்கினேன். அவற்றை ஆதாரமாகக்கொண்டு இதை எழுதத் தொடங்கினேன். அந்த நூல்களின் பெயரை அந்த அந்தப் பக்கங்களில் அடிக்குறிப்பாகக் கொடுத்திருக்கிறேன். வேதசாஸ்திரங்களிலிருந்தும் சாஸனசம்பந்தப்பட்ட அறிக்கைகளிலிருந்தும் சில சான்றுகளைக் காட்டியிருக்கிறேன். இவைகள் வேறு நூல்களிலிருந்து எடுத்தவை. அந்த நூலாசிரியர்கள் மன்னித்துக்கொள்ள வேண்டும்.

சிதம்பரத்தில் இருந்த ஸ்ரீகொத்த தக்ஷிணாமூர்த்தி சௌதரி என்ற ஒரு பி. ஏ. மாணவர் எமிக்ரர்பிகா இண்டிகாவிலிருந்து சில நகல்களையும் ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட சில பத்திரிகைகளையும் வேண்டியபோது எனக்கு அனுப்பி உதவினார். சில ஸம்ஸ்கிருத சுலோகங்களுக்கு வெம்படி கோட்டீச்சுவர சாஸ்திரி என்பவர் அர்த்தம் தெரிவித்துச் சகாயம் செய்தார். இதை அச்சிடச் சில பிரமுகர்களைத் தேடவேண்டியவனானேன். இதற்காக உழைத்த கொத்தசுப்பையகாரு, கொத்தபள்ளி ராமையகாரு இவர்களுக்கு நன்றி.

நான் பாரதியிலும் கம்ரமகாராஜு பத்திரிகையிலும் வெளியிட்ட சில செய்திகள் இந்தப் புத்தகத்தில் சில வேறுபாடுகளுடன் சேர்க்கப்பெற்றுள்ளன. பிற்கால ஆராய்ச்சியால் ஏற்பட்டது இது.

கம்ம, வெலம, ரெட்டி, ராஜா முதலிய வகுப்பினர்களைப் பற்றிப் பொதுவாகச் சொல்வது சுலபம். ஆனால் 14 - ஆம் நூற்றாண்டுக்கு முந்திய கம்மவாரைப் பற்றிப் பிரித்துச் சொல்வது மிகவும் கஷ்டம். தகுந்தபடி ஆராய்ந்து பின்வரும் பாகங்களில் அவர்களைப் பற்றிச் சொல்ல நினைத்திருக்கிறேன்.

கம்மவாரின் பூர்வசரித்திரம் வெளிப்படுவதில் வேறுசில ஜாதியாருக்கு இஷ்டமில்லை. உடனே வெளிவர வேண்டுமென்று சில கம்மவார் அவசரப்பட்டார்கள். என்றாலும் தகுந்த பண உதவி எனக்குக் கிடைக்கவில்லை. இப்போதாவது, கம்மவார் வெறும் வாய்ப்பேச்சோடு நில்லாமல் பண உதவி செய்தால் மற்றப் பாகங்களும் சீக்கிரம் வெளிவரும்.

மற்றச் சமூகங்கள் உன்னத நிலைமைக்கு வந்திருக்கின்றன. கம்மவார்களே! நீங்கள் உங்கள் உண்மை நிலையைத் தெரிந்து கொண்டு உங்களை உயர்த்திக்கொள்ள வேண்டிய முயற்சி செய்யுங்களென்று வேண்டிக்கொள்கிறேன்.

இந்த முதல்பாகத்தில் கம்மவார் முதலில் சூரியசந்திர வமிசத்தினராக இருந்து பிறகு சதுர்த்தர்களாக இருந்தார்கள் என்பது புலப்படுகிறது. இதில் பல சரித்திராம்சங்களைக் கொடுத்திருக்கிறேன். சோழ, சாளுக்கிய, ஹைஹய, துர்ஜய வம்சங்களிலிருந்தே கம்மவார் தோன்றினர் என்பதற்குக் குறிப்புகளைக் காண்பித்திருக்கிறேன். சரித்திர அறிஞர்கள் இதைக் கவனிக்க வேண்டும்.

இந்நூலை அச்சிடப் பணசகாயம் செய்தவர்களுக் கெல்லாம் என் நன்றி.

சங்கம ஜாகர்ல மூடி,
30—8—1937.

இங்ஙனம்
கொத்த பாவைய சௌதரி

# பொருள் அடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1 கம்மவார் ஆந்திரர்கள் ... | 1 |
| வேதகாலத்தும் பின்பும் ஆந்திரர்கள் நிலைமை ... | 4 |
| ஆந்திரர் ஆரியர்களுடன் கலந்து கோத்திர சூத்திரங்களை ஏற்படுத்திக் கொள்ளல் ... | 11 |
| 2 ஆந்திரர்களின் ராஜ்ய அபிவிருத்தி ... | 24 |
| ஆந்திரர்கள் கர்மத்தில் ஈடுபட்டவர்கள் ... | 29 |
| கம்ம ராஷ்டிரம் கம்ம நாடானது ... | 30 |
| 3 சூரியவம்சத்துப் பல கிளைகள் ... | 32 |
| சந்திரவம்சத்தின் பிரிவுகள் ... | 37 |
| துர்ஜயன் யார்? ... | 39 |
| சோழர்கள் எல்லோரும் ஒரே வம்சத்தினரா? ... | 47 |
| கம்மவார் கரிகால துர்ஜய வம்சத்தவர்கள் ... | 48 |
| சூரிய சந்திர வம்சங்களில் புத்த சமண மதங்கள் பரவல் | 60 |
| சூரிய சந்திர வம்சங்களில் சைவ வைணவ மதங்கள் வியாபித்தல் ... | 64 |
| சூரிய சந்திரவம்சத்தார் சோழ விருது தரித்த காலம் | 66 |
| கம்மவாரின் முன்னோர்கள் ... | 70 |
| ஜாதிக் கலப்பு ... | 72 |
| சோழ அரசர் சம்பந்தங்கள் ... | 76 |
| துர்ஜய குலத்தவருடைய சம்பந்தங்கள் ... | 86 |
| ஹைஹய வம்சத்தினரும், சாளுக்கிய அரசர்களும் கம்மவாரா? ... | 93 |
| சூரிய சந்திரவம்சத்து அரசர்களின் சட்ட விரோதமான சந்ததியார் ... | 114 |
| துர்ஜய குலத்தினரும் சோழ சாளுக்கியர்களும் கம்ம, வெலம ராஜ குலத்தாராய்ப் பிரிதல் ... | 116 |
| சரித்திரக்காரர்களின் அபிப்பிராயம் ... | 127 |
| சோழர்களைப் பற்றிய அவர் கொள்கை ... | 128 |
| ரெட்டி ... | 142 |
| ரெட்டிகளிலிருந்தா கம்மவார் தோன்றினர்? ... | 146 |
| போஜர்கள் கம்மவாரா? ... | 149 |
| நாயடு, நாயகுடு, நேனி, நீடு என்னும் குலப் பெயர்கள் | 150 |

| | | |
|---|---|---|
| கம்மவார் சௌதரிகள் ஆனது | ... | 152 |
| கம்மவார் என்னும் சொல்லின் பிறப்பு | ... | 160 |
| கும்பினிகள் கம்மவார் ஆனார்களா? | ... | 169 |
| வர்மா | ... | 174 |
| வீட்டுப் பெயர்கள் | ... | 176 |
| கோத்திரம் மாறுதல் | ... | 181 |
| கம்மவார் வகை | ... | 186 |
| கம்மவாருக்கும் பூணூல் உண்டு | ... | 187 |
| கம்மவாரின் ஆசாரங்கள் | ... | 192 |
| கம்மவாரின் வீட்டுப் பெயர்களும் கோத்திரங்களும்... | | 196 |
| இக்ஷ்வாகு வம்சத்தரசர்கள் | ... | 232 |
| கம்மவாரின் மூல புருஷர்களும் பிரிவும் | ... | 234 |
| தாசவர்மா, இரண்டாம் கரிகாலன், தொண்டைமான் | | 236 |
| துர்ஜயன் | ... | 237 |
| மல்ல வர்மா | ... | 237 |
| புத்த வர்மா II | ... | 239 |
| தெலுங்குப் பிஜ்ஜன | ... | 240 |
| வீரப்பிரதாப சோழ மகாதேவன் | ... | 242 |
| புண்ணிய குமார சோழன் | ... | 242 |
| சத்யாதித்யன் | ... | 245 |
| முதல் பராந்தக தேவன் | ... | 246 |
| அரிஞ்சயன் | ... | 247 |
| இரண்டாம் பராந்தக தேவன் | ... | 247 |
| ராஜராஜ தேவன் | ... | 248 |
| சடைச் சோழ பீமன் | ... | 249 |
| வெல நாட்டு இரண்டாம் மல்ல ராஜன் | ... | 251 |
| ஹைஹய வமிசத்தினர் | ... | 251 |
| கொனராஜ பரே(ன்)டு | ... | 254 |
| விக்கிரம சோழன் | ... | 255 |
| உத்துங்க சோழன் | ... | 255 |
| ஹ ஹிவர சோழன் | ... | 256 |
| வரதர்ம சோழன் (மனுச் சோழன்) | ... | 256 |
| சத்தியேந்திர சோழன் | ... | 256 |
| மனு ஜேந்திர சோழன் | ... | 257 |
| உத்தம சோழன் | ... | 257 |
| கிழைச் சாளுக்கிய சக்கர வர்த்திகள் | ... | 258 |
| கோட்டவார் | ... | 269 |
| கரிகாலனைப் பற்றிய வேறு சில செய்திகள் | ... | 273 |
| துர்ஜய குலத்தினர் சதுர்த்தர்கள் ஆன காலம் | ... | 276 |
| அநுபந்தம் | ... | 279 |

# கம்மவார் சரித்திரம்

## முதற் பாகம்

### காப்பு

திருவோங் கியகம்ம நாட்டுயர் துர்ச்சயர் சீர்ச்சரிதை
தருவோங் கியதேன் நிகராந் திரந்தமிழ் தன்னிற்செய
உருவோங் கியவடி யார்க்கருள் செய்யு முயரருவி
வருவேங் கடத்தெம் பெருமான் கழலிணை வந்திப்பனே.

## 1. கம்மவார் ஆந்திரர்கள்

காலச் சுழலிலே மறைந்துபோன கம்மவார்களுடைய சரித்திரத்தை வெளிக்கொணர்ந்து அறிவது மிகக் கஷ்டமான செயலே. ஆனாலும் ஊக்கத்துடன் அதைப்பற்றி அறிந்து கொள்ள முயலுவோம்.

சென்னை ராஜ்யத்தில் சாதாரணமாக எல்லா ஜில்லாக்களிலுமே இப்பொழுது கம்மவார் வசிக்கிறார்கள். 'இவர்கள் இதற்கு முன் எவ்விடத்தில் வசித்தார்கள்? இவர்களுடைய தாய்ப் பாஷை எது?' என்ற கேள்விகள் எழுகின்றன. இவர்கள் ஆந்திர தேசத்தில் வசித்து ஆந்திர பாஷையைத் தாய்ப்பாஷையாகக் கொண்டவர்களென்று இதற்குப் பதில் சொல்லித் தீரவேண்டும்; முக்கியமாக, முற்காலத்தில் ஆந்திர ராஜதானிகளாக இருந்த ஸ்ரீகாகுளம், தரணிக்கோட்டை, ஒருகல்லு, வேங்கிராஜ்யம் ஆகிய இடங்களில் பரவி அங்கேயே தங்கிவிட்டார்கள். பின்பு தென் தேசங்களில் குடியேறி அங்கே ராஜ்யங்களையும் நிலபுலன்களையும் சம்பாதித்துக்கொண்டதாகத் தெரிகிறது. அதனாலேயே இன்று கம்மவார் எல்லா ஜில்லாக்களிலும் பரவியிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

திராவிட குடும்பத்தைச் சேர்ந்த தமிழ்ப்பாஷையில் தோன்றியதே ஆந்திரர் பாஷை. அதனால் ஆந்திரர்களுக்குள்ளே ஒரு பிரிவினராகிய இவர்கள் முன்பு தமிழர்களாய் இருந்திருக்கவேண்டும் என்று ஒரு கொள்கை இருந்தது. கொஞ்ச காலத்துக்கு முன் ஆந்திர சர்வகலாசாலையார் பிரசுரித்த ஆந்திர பாஷா சரிதத்தை[1] முடியப் படித்தேன். பிறகு ஆந்திரமும் தமிழைப் போலவே பிராகிருதம், பாலி ஆகிய பாஷைகளிலிருந்து பிறந்ததாகவோ அல்லது அந்தப் பாஷைகளின் காலத்திலிருந்து வழங்கி வருவதாகவோ தெரிவதால் மேற்கண்ட கொள்கையை அங்கீகரிக்க முடியவில்லை.

வேதகாலத்திலேயே ஆரியர் வசித்த இடங்களில் ஆந்திரர்களும் இருந்தார்கள் என்று நினைக்கவேண்டி இருக்கிறது. அவர்கள் வசித்தது தென்னிந்தியாவில் அல்ல; வட இந்துஸ்தானம் என்று தெரிகிறது. அதனால் ஆரியர் காலத்திலேயே இந்துதேசத்தில் வசித்த ஆதி மனிதர்களாக அவர்கள் இருந்திருக்கவேண்டும்.

கம்மவார் ஆந்திரர்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்று சொல்ல இடம் இல்லை. முதன்முதலில் ஆந்திரர்களுக்குள் ஒரு பிரிவினராகிய கம்மவார் எந்த எந்த இடங்களில் எந்த எந்தப் பெயரோடு வசித்தார்கள் என்பவற்றையும் எந்த மதங்களை அநுசரித்து எந்த எந்த அரசாங்கங்களை ஏற்படுத்தி ஆண்டு வந்தார்கள் என்பவற்றையும் படிப்பீர்கள். முதலில் கம்மவாரின் ஜன சங்கியையைச் சர்க்காரின் 1921ளு கணக்குப் பிரகாரம் விவரிக்கிறேன்.

| | |
|---|---|
| கிருஷ்ணா ஜில்லா | 2,26,734 |
| நெல்லூர் | 99,969 |
| திருநெல்வேலி | 56,868 |
| அனந்தபுரம் | 39,917 |
| கோயம்புத்தூர் | 53,569 |
| கடப்பை | 20,171 |
| மதராஸ் | 1,920 |
| கர்நூல் | 14,313 |

1. டாக்டர் சிலுகூரி நாராயணராவ் எழுதியது.

| | |
|---|---|
| சேலம் | 4,808 |
| தஞ்சாவூர் | 2,484 |
| மதுரை | 19,990 |
| குன்டூர் | 3,16,668 |
| கோதாவரி | 56,260 |
| ராமநாதபுரம் | 52,849 |
| சித்தூர் | 95,448 |
| செங்கல்பட்டு | 35,160 |
| பல்லாரி | 4,716 |
| கோதாவரி | 2,229 |
| வட ஆர்க்காடு | 28,227 |
| தென் ஆர்க்காடு | 12,743 |
| திரிசிராப்பள்ளி | 3,955 |
| மொத்தம் | 11,48,998 |

இன்னும் சிலர் மைசூர், நைஜாம் ராஜ்யங்களில் இருக்கிறார்கள். முதலில் **டெக்கானில்** ஸ்திரமாக வசித்த இவர்கள் தென் சமுத்திரம் வரையிலும் பரவியதன் காரணத்தை முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். கம்மவார் எந்த ஜில்லாவில் இருந்தாலும் அவர்களுடைய தாய்ப்பாஷை ஆந்திரமே. ஆந்திர பாஷை பிறந்தது முதல் உன்னத நிலைக்கு வருமளவும் அதாவது ஏறக்குறைய 10-ஆம் நூற்ருண்டு வரையிலும் இவர்களது தாய்ப் பாஷை ஆந்திரமானலும் ராஜபாஷைகள் அல்லது வெளியில் பழகிய பாஷைகள் ஸம்ஸ்கிருதமும் பிராகிருதமுமே. இதற்கு முன் ஆந்திரர்கள் பைசாசபாஷையை உபயோகித்து வந்தார்கள். ஆந்திர லிபி[1] இருந்தபோதிலும் ஸம்ஸ்கிருத, பிராகிருத லிபிகளையே அதிகமாக உபயோகித்து வந்ததாகத் தெரிகிறது. இப்பொழுது அவர்கள் கன்னடம், தமிழ், மலையாளம், ஆங்கிலம் முதலிய பாஷைகளின் லிபிகளெம் ஆந்திர பாஷையோடு கூட உபயோகிக்கும்படி ஆகிவிட்டது.

1. கி. பி. முதல் நூற்ருண்டில் வாழ்ந்த ஆந்திர அரசர்கள் பைசாச பாஷையில் நூல்கள் எழுதுவித்தார்கள். ஆந்திரர் சரிதை 1-ஆம் பாகம்.

சென்ற நூற்றுண்டில் கம்மவாரில் சிலர் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த நாகப்பூர், ஜப்பல்பூர் பிராந்தியங்களுக்குக்கூடப் போய் வசித்தார்கள். ஆனால் இப்பொழுது அவர்களுடைய ஜனத்தொகை விவரம் நமக்குக் கிடைக்கவில்லை. கம்மவார் அருகில் இருக்கும் ஓட்ர (கஞ்சம்) தேசத்துக்குப் போகாதது ஆச்சரியந்தான். அங்கே இரண்டொருவர் தவிரக் கம்மவார் இல்லை.

கம்மவார் ஆந்திரர்கள் ஆகையால் முதலில் ஆந்திரர்களைப் பற்றி அறிந்துகொள்ளுவோம்.

## வேதகாலத்தும் பின்பும் ஆந்திரர்களின் நிலைமை

நம் நாட்டில் நமக்குக் கிடைக்கக்கூடிய பழைய நூல்கள் வேதங்களே. இவற்றைக்கொண்டே நம் தேசம், மதம், பல தனிப்பட்ட ஜாதி இவற்றைப்பற்றிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. வேதங்களுக்கு முந்திய நூல்கள் எந்தத் தேசத்திலும் எந்தப் பாஷையிலும் இருக்கவில்லை. ஆரியர்கள் தம் தெய்வங்களைக் குறித்தும் தங்கள் சரித்திரங்களைக் குறித்தும் பழக்கங்களைப்பற்றியும் வெளி விவகாரங்களைப் பற்றியும் பாடி வைத்த புகழ்ச்சிப் பாடல்களே வேதங்கள். ஆரியர்கள் சிந்துநதிக் கரைக்கு வந்த பின்பு கொஞ்சங் கொஞ்சமாக வேதங்களைப் பாடியிருக்கவேண்டும். இந்த வேதங்களில் ஒரு பாகத்தில் ஐதரேயப் பிராம்மணத்தில் ஆந்திரர்களைக் குறித்து இந்த வாக்கியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

"தஸ்ய : விச்வாமித்ரஸ்யைகசதம் புத்ரா ஆஸு:, பஞ்சாசத் ஏகஜ்யாயாம் ஸோமதுச்சஸ:, பஞ்சாசத் கனீயாம்ஸ: தத்வைஜ்யாயாம்ஸோனதே குலம் மேனிரே, தான் அனுவ்யாஜஹாரன் தான் வ: ப்ரஜா பக்ஷிஸ் தேதி த ஏதேந்த்ரா: புண்ட்ரா: சபரா: புளிந்தா மூதிபா இத்யுதந்த்யா பஹவோ பவந்தி வைச்வாமித்ரா தஸ்யூனும் பூயிஷ்டா:" புண்ட்ரர், சபரர், புளிந்தர், மூதிபாதர் ஆகியோரின் பக்கத்தில் ஆந்திரர் 500 பேர் அக்காலத்தில் இருந்தார்கள்; அவர்கள் விசுவாமித்திர சந்ததியார் என்றும் [1] தஸ்யர்

---

1. தஸ்யர் என்னும் பதப் பொருள் : ரிக் வேதத்தில் அறிஞர்களானவர்கள் ஆரியர்கள்; இதற்கு மாறன குணம் உள்ளவர்கள் தஸ்யர்கள் என்று காணப்படுகிறது.

கள் என்றும் இதனால் தெரிகிறது. முதலில் ஆரியர்கள் மற்றவர்களை (தம்மில் வேறுபட்டவர்களை) மிலேச்சர் என்றோ தஸ்யர் என்றோ நினைத்ததாகத் தெரிகிறது.

ஆந்திரர்கள் பின்பு அரசுக்காக ஆரியர்களுடன் போராடிக் கொண்டிருந்ததாகத் தோன்றுகிறது. பாகவதத்தில் வரும் சாணூர மல்லன் ஆந்திரன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடைசியில் ஆந்திரர்கள், ஆரியருடன் கொள்வனை கொடுப்பனை முதலிய சம்பந்தங்களால் அவர்களோடு கலந்து ஆரியர்கள் ஏற்படுத்திய நான்கு வருணங்களில் சேர்ந்துபோய்விட்டார்கள். இந்த நான்கு வருணப் பிரிவு வேதகாலத்திலேயே ஏற்பட்டிருந்தாலும் அது தொழிலை அநுசரித்தே உண்டானது என்று தெளிவாகத் தெரிகிறது. ஆரியர்கள் முதலில் பிராம்மண, க்ஷத்திரிய, வைசியர் என்னும் மூன்று ஜாதிகளையே ஏற்படுத்தினார்கள்.

பிராம்மணர்கள் யாகங்களை நடத்தித் தேவதைகளைத் திருப்தி செய்து ஆரியரின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டியிருந்தது. ஆரியர் ஆக்கிரமித்த ராஜ்யங்களைச் சம்ரக்ஷணை செய்வதே க்ஷத்திரியர்களின் கடமையாக இருந்தது. தேசத்தின் நாலா பக்கங்களிலும் உழுதல், வாணிபஞ் செய்தல், பசு சம்ரக்ஷணை செய்தல் ஆகியவை வைசியரின் தொழில்கள். தாம் ஜயித்த தேசங்களில் மேல்ஜாதிகளோடு சேர்க்கத் தகுதி இல்லாதவர்களை எல்லாம் சூத்திரர்கள் அல்லது தஸ்யர் என்று பிரித்தார்கள். கூரிய அறிவு, மனவேற்றுமை, உடல்வேற்றுமை இவைகளைக் கொண்டு முதலில் இந்த ஜாதியை வகுத்தார்கள்; பிறகு தகுதி சம்பாதித்துக்கொண்டவர்களை மேல்ஜாதிகளில் சேர்த்து வந்தார்கள். இப்படிச் சேர்க்கும் அதிகாரம் ஒவ்வோர் ஆரியப் பிராம்மணனுக்கும் இருந்தது. இவ்விஷயத்தைப்பற்றிக் காண்வ சதபதப் பிராம்மணத்தில் 34-2-1-27-இல் ஒரு வாக்கியம் இருக்கிறது.

**'யோ யக்ஞாச் சந்தோப்யஸ்தஸ்மாத்யத்ய ப்ரப்ராம்மணோ தீக்ஷதே ராஜன்யோ வா வைச்யோ வா ப்ராம்மண இத்யேவைநமாஹு"ரேதா்ஷி ப்ராம்மணோ ஜாயதே.'**

**இதன் பொருள் :**

அரசர்களுக்காயினும் வைசியர்களுக்காயினும் வேத தீக்ஷை கொடுத்து அரசனாகவாவது யாக தீக்ஷை கொடுத்துப் பிராம்மணனாகவாவது ஒவ்வொரு பிராம்மணனும் செய்யலாம்.

ஐதரேயப் பிராம்மணமும் இந்தக் கொள்கையை உறுதிப்படுத்துகிறது. இவை ஆந்திரர் சரித்திரத்தில் 5-ஆம் பாகத்தில் எழுதப்பெற்றிருக்கின்றன. தஸ்யர்களின் மூலபுருஷராகிய விசுவாமித்திரர் இப்படியே முறையாகச் சந்திர வம்ச அரசனாகவும் பின்பு பிராம்மணனாகவும் ஆகியிருக்கலாம். இப்படியே பரசுராமர், 'பெஸ்தலு' என்னும் ஜாதியாரைப் பிராம்மணர்களாக்கினார். இந்த விஷயம் ஸ்காந்தபுராணத்தில் இருக்கிறது. இந்த ஜாதிகளைக் குறித்து மனுஸ்மிருதியிலும் இப்படிச் சொல்லி இருக்கிறது:

'சூத்ரோ ப்ராம்மணதாःமேதி,
பிராம்மணச் சைதி சூத்ரதாம்
க்ஷத்ரியாஜ் ஜாதமேவம்து
வித்யாத் வைச்யாத் ததைவச'

**இதன் பொருள் :**

சூத்திரனானாலும் நல்ல வித்துவானானால் பிராம்மணன் ஆவான்; இல்லாவிட்டால் பிராம்மணனும் சூத்திரன் ஆவான். இப்படியே வைசியர்களும் க்ஷத்திரியர்களும் தம் தம் குணங்களையும் தொழில்களையும் ஒட்டி ஜாதிபேதம் அடைகிறார்கள். ஆபஸ்தம்ப ஸூத்திரங்களிலும் இந்தக் கருத்தே காணப்படுகிறது. ஜாபாலம்போபநிஷத் முதலியவற்றிலும் இப்படியே ஜாதி விஷயம் எழுதப்பட்டிருக்கிறது.

அந்தக் காலத்தில் ஆரியர்கள், சிருஷ்டியில் பெருமை வாய்ந்த சக்திகள் எல்லாவற்றையுமே பூஜித்து வந்தார்கள். சூரியன், சந்திரன், அக்கினி, இந்திரன் அல்லது மழை, அருணோதயம் அல்லது ருத்திரன், சர்ப்பங்கள் ஆகிய இயற்கையின்

விசித்திர வஸ்துக்களே (Elements) அவர்களுடைய தெய்வங்களாக இருந்தன. ஆந்திரர் ஆரியருடன் கலந்த பின்பு ஆரியருடைய தெய்வங்களை வணங்கி வந்தார்கள். ஆனால் தம் தாய்ப்பாஷையாகிய ஆந்திரத்தை மட்டும் மறக்கவில்லை.

ஆந்திரர்களுக்குள் பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் பலர் ஏற்பட்டார்கள். இப்படி ஏற்பட்டவர்களுக்குள் சூரியனைப் பூஜித்தவர்கள் சூரிய வமிசத்தவராகவும் சந்திரனைப் பூஜித்தவர்கள் சந்திரவமிசத்தவராகவும் பிரக்கியாதி அடைந்தார்கள்.

மகாபாரதம் ஆரண்ய பர்வம் 188-ஆவது அத்தியாயத்தில் ஆந்திரர்களைப்பற்றி எழுதும்போது, அவர்கள் ஆரிய தர்மங்களை அநுஷ்டித்து வந்ததாக எழுதப்பட்டிருக்கிறது. இந்த விஷயம் போதாயன சூத்திரங்களிலும் மனுஸ்மிருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் ஆந்திரர்கள் வெகு காலத்துக்குப் பின்னரே கொஞ்சங் கொஞ்சமாக ஆரியருடன் கலந்திருப்பார்கள் என்று சொல்லவேண்டி வருகிறது.

கி. மு. ஏறக்குறைய 250 வருஷங்களுக்கு முன் நம் நாட்டை ஆண்ட அசோக சக்கரவர்த்தியின் காலத்தில், 'மெகஸ்தனீஸ்' என்னும் மேல்நாட்டு ஆசாமி ஒருவர் நம் நாட்டுக்கு வந்தார். இவரும், 'ஆந்திரர்கள் அரசாட்சியில் திறமைபெற்ற வீரர்கள்' என்றும், 'அவர்கள் கலிங்க, மோதுப (மூதிபாத), உபேர (சபர) ஜாதியாரின் அக்கம்பக்கத்தில் வசிப்பவர்கள்' என்றும் எழுதியிருக்கிறார். அக்காலத்து ஆந்திரர்களுக்குச் சுற்றிலும் கோட்டை கொத்தளங்களோடு கூடிய முப்பது பட்டணங்களும் பல கிராமங்களும் இருந்ததாக எழுதியிருக்கிறார். அவர்களுக்கு ஒரு லட்சம் சைனியமும் இரண்டாயிரம் ஒட்டகங்களும் ஆயிரம் யானைகளும் இருந்தன; சந்திரகுப்த மௌரியனுக்கு அடுத்தபடியாக இவர்கள் சைனியமே பெரிதென்றும் எழுதியிருக்கிறார். மேல்நாட்டைச் சார்ந்த 'ப்ளினி'[1] என்பவரே இந்த விஷயங்களைத் தெரிவிக்கிறார். வாயுபுராணத்தில்கூட ஆந்திரர்கள் செய்தி வருகிறது. இவற்றை ஆதாரமாகக்கொண்டு பார்த்தால் ஆந்திரர்கள் பிராம்மணங்களின் (வேத) காலத்தில் தாழ்ந்த நிலையில்

1. இவர் கி. பி. 23-79 வருஷங்களுக்கு இடைக்காலத்தவர்.

இருந்தாலும் மௌரிய அரசர் காலத்தில் மிக்க உன்னத நிலேக்கு வந்ததாகத் தெரிகிறது.

அந்தபுரம் என்பது தெலவாஹா (இப்பொழுது தேல் என்று பெயர் பெற்றது) என்னும் ஆற்றங்கரையில் இருந்ததென்று புத்தர் காலத்து, 'செரிவானிஜ ஜாதகம்' என்னும் நூலில் உள்ள கதையால் தெரிகிறது. பைதான் பிரதேசத்துக்குப் பௌத்த மதம் பரவிய காலத்தில் அதற்கு அந்தகதேசம் என்ற பெயர் இருந்தது. தக்ஷசிலா சர்வகலாசாலேயில் கல்வி கற்றுத் தேர்ந்த ஒரு பிராம்மண வாலிபன் ஆந்திர தேசத்துக்குப் புறப்பட்டுப் போனதாக ஒரு கதையில் வருகிறது. சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ் நூல்களில், 'ஆந்திரர்கள்' என்ற பெயர் காணப்படா விட்டாலும் வடக்கத்தியர் என்னும் அர்த்தத்தைக் கொடுக்கும், 'வடுகர், வடுக நாடு' என்னும் பெயர்கள் அவற்றில் இருக்கின்றன. ராஜகிருகத்தின் அருகே அந்தகவிந்தை என்னும் நதியும் சிரா வஸ்தி நகரத்தை அடுத்து அந்தகவனமும் இருக்கின்றனவாம்.

பிருகத் ஸம்ஹிதையை எழுதிய வராகமிகிராசாரியரும் விதர்ப்ப, சேதி தேசங்களுடன் ஆந்திர தேசத்தையும் தம் நூலில் குறிப்பிட்டிருக்கிறார். வாத்ஸ்யாயனரின் காமசூத்திரத்திலும் ஆந்திரர்களின் சமூக விவகாரங்களேப்பற்றிச் சொல்லப்பட்டிருக் கிறது. தண்டி கவி எழுதிய தசகுமார சரிதத்திலும் ஆந்திர நகரப் பிரஸ்தாபம் வருகிறது. கலிங்க தேசத்திலிருந்து சில நாட்கள் பயணத்தில் ஆந்திர நகரம் இருக்கிறதென்றும் அதை ஜயசிம்ம ராஜன் ஆண்டுகொண்டிருந்தான் என்றும் அதில் எழுதப்பட்டிருக்கிறது.

இவன் கிழக்குச் சாளுக்கிய அரசனுகிய குப்ஜ விஷ்ணுவர்த் தனனுடைய புத்திரனுகிய ஜயசிம்மனே என்றும் வேங்கி நகரம் என்று வழங்கிய நகரமே ஆந்திர நகரமென்றும் சரித்திரக்காரர் கள் நினைக்கிறார்கள். [1]

இந்த ஜயசிம்மன் காலத்திலேயே ஆந்திரபாஷை உருப் பெற்றது என்று நம்பலாம். சுமாராக இதே காலத்தில் ஜைமினி

1. J. A. H. R. S. Vol. X, Pages 112 - 113.

பூர்வ மீமாம்ச சூத்திரங்களுக்குப் பாஷ்யம் எழுதிய குமாரிலபட்டர் என்பவர் ஆந்திர திராவிட பாஷை என்னும் பதத்தை உபயோகித் திருக்கிறார். இதனால் ஆந்திர திராவிட சம்பந்தம் அக்காலத்தி லேயே ஏற்பட்டதாகக் காணப்படுகிறது. திராவிடம் என்னும் சொல் தமிழ்ப்பாஷை ஒன்றுக்கு மட்டும் வழங்கப்படவில்லை. அதனால் ஆந்திரம் இன்றைத் தமிழ்ப்பாஷையிலிருந்து பிறந்த தாகச் சொல்ல முடியாது. குமாரிலபட்டர் என்பவர் ஓர் ஆந்திரர். ஜயமங்களம் என்னும் கிராமத்தில் இருந்தவர். இந்தக் கிராமம் ஆந்திர, உத்கல தேசங்களின் எல்லையில் இருந்தது என்று ஜின விஜயம் என்னும் ஜைன நூலில் எழுதப்பட்டிருக்கிறது. இனிச் சாசனங்களைக் கொண்டு ஆந்திர ராஜ்யத்தின் காலத்தை அறிந்து கொள்வோம்.

கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து ஆந்திரர்களுக்குள், 'சாதகர்ணி அரசர்கள்' [1] அரசாட்சி செலுத்தி வந்ததாகச் சில சாசனங்களால் தெரிகிறது. ஒரு சாசனத்தில் மூன்றும் சாதகர்ணி யின் பிரஸ்தாபம் வருகிறது. இரண்டாம் நூற்றாண்டில் காஞ்சி புரத்திலிருந்து அரசு செய்த சிவஸ்கந்தவர்மனின் மைதவோலு பழைய பிராகிருத சாஸனம் ஒன்று காணப்படுகிறது. இதில் ஆந்திரதேசத்தில் உள்ள விரிபர என்னும் கிராமத்தைப் பிராம்மணர்களுக்குக் கொடுத்ததாக எழுதப்பட்டிருக்கிறது. ஆந்திரத்தின் எல்லை மைசூரைச் சார்ந்த கோலார் ஜில்லா வரையில் பரவியிருந்ததாக 4-ஆம் நூற்றாண்டுச் சாசனம் ஒன்றால் தெரிகிறது.[2] இப்படியே வேறு சில சாசனங்களும் இருக் கின்றன.

இப்படி வேதகாலத்திலிருந்து இதுவரையிலும் பிரசித்தி பெற்ற ஆந்திரர்களுக்கு ஆந்திரர் என்னும் பெயர் எப்படி வந்த தென்பதைத் தெரிந்துகொள்ள முயலுவோம்.

---

1. ஹாலன் எழுதிய சப்தசதி என்னும் நூலில் கோதாவரி நதி பாயும் எல்லாவற்றுள்ளும் சாதவாகன அரசாங்கத்தோடு ஒப்பான சிறந்த அரசாங்கம் மற்றொன்று இல்லை என்று எழுதியிருக்கிறார். இதனாலும் சாதவாகனர்கள் ஆந்திரதேசத்தைச் சேர்ந்தவர்களே என்பது உறுதிப்படுகிறது.

2. Ind. Ant. XV, Page 175.

இதுவரையில் சிலர் அந்திரர் என்றும் சிலர் ஆந்திரர் என்றும் வழங்கி வந்ததை நீங்கள் கவனித்திருப்பீர்கள். அந்திரர் என்ற சொல்லே ஆந்திரர் என்று திரிந்தது. விந்திய மலைக்குத் தெற்கே அடர்ந்த காட்டில் வசித்து வந்தவர்களை அந்திரர்கள் என்று மற்றவர்கள் அழைத்தார்கள் என்று சிலர் சொல்கிறார்கள். ஆந்திர ராஜ்யம் தேல்[1] என்னும் நதிப் பிராந்தியத்திலிருந்து சிறிது சிறிதாக இதுவரையில் வந்துவிட்டதாக நாம் அறிந்து கொள்ளலாம்.

ஸ்ரீகாகுளத்திலிருந்து அரசு செலுத்திய ஆந்திர விஷ்ணு என்பவர் தாம் கட்டிய கோயிலின் மூர்த்திக்கு ஆந்திரவிஷ்ணு என்று பெயர் இட்டிருக்கிறார்.[2] இவரே முதல் ஆந்திர அரசனாக இருக்கலாம் என்பது சிலர் அபிப்பிராயம். தெலுங்கில், 'அம்' என்றால் யுத்தம்; 'த்ர' என்னும் பதத்துக்கு யுத்தத்தில் தேர்ச்சி பெற்றவன் என்று பொருள். ஆந்திரர்கள் சிறந்த வீரர்களாதலால் இந்தப் பெயர் வந்திருக்கும் என்று, 'ஆர்யமஞ்ஜு ஸ்ரீ மூலகல்பம்' என்னும் பௌத்த நூல் சொல்கிறது.

மேற்கண்ட விஷயங்களால் ஆந்திரர்களின் பழைமையும் புகழும் அவர்களுடைய விசாலமான ராஜ்யமும் நமது பார்வைக்குச் சுலபமாகத் தெரிகின்றன என்பதற்குச் சந்தேகமில்லை. ஆந்திர ராஜ்யங்களின் ஒவ்வொரு முக்கியபட்டினமும் ஒவ்வொரு காலத்தில் தலைநகராக இருக்கும்படி ஜனங்கள் விரும்பியதாகத் தெரிகிறது. ஆந்திரர்கள் மெல்ல மெல்ல த்ரிலிங்க தேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டதால் அவ்விடத்திலிருந்தவர்களைத் (தெலுங்குவார்) தெலுங்கர்கள் என்று விவகரித்ததாகத் தெரிகிறது. எப்படிப் பார்த்தாலும் தெலுங்கு என்கிற சொல்லைவிட ஆந்திரம்

1. இது துல்யபாகா நதி என்றும் இது கோதாவரியின் ஒரு பாகமாக இருக்கும் என்றும் ஓர் அபிப்பிராயம் இருக்கிறது. J. A. H. R. S. Vol. IV, Page 30.

2. இந்த ஸ்தல புராணத்தில் நாகதேவ பட்டாரகர் என்னும் பிராம்மணருக்கு ஆந்திரநாயக ஸ்வாமி (விஷ்ணு) பிறந்து ஒரு பிராம்மண கன்னிகையை மணந்தார் என்று எழுதப்பட்டிருக்கிறது.

என்ற சொல்லே வேதங்களில் வழங்குவதால் பழைமையானது. ஆந்திரர்கள் ஆண்டது ஆந்திர தேசம்; அவர்கள் பேசுவது ஆந்திர பாஷை.

## ஆந்திரர் ஆரியர்களுடன் கலந்து கோத்திர சூத்திரங்களை ஏற்படுத்திக்கொள்ளல்

ஆந்திரர்கள் வேதகாலத்தில் கிராமங்களின் வெளியில் வசித்து வந்தார்கள் என்று மனுஸ்மிருதி தெரிவிக்கிறது. அதோடு அவர்கள் விதேகதேசத்தில் பிறந்தவர்கள் என்றும் எழுதப் பட்டிருக்கிறது. அவர்கள் பிறகு ஆரியர்களுடன் சேர்ந்துவிட்ட தாகத் தோன்றுகிறது. இது சுமார் கி. மு. ஆறுயிரம் வருஷங் களுக்கு முன்னால் நடந்திருக்கலாம். ஆந்திரப் பிராம்மணர்களில் இன்றைக்கும் ஆரியர்கள் என்ற ஒரு பிரிவு இருக்கிறது. ஆந்திரர்கள் ஆரியர்களோடு கலந்த பின்பு அவர்களுடைய பழக்கத்தையொட்டி யாகங்கள் முதலியவைகளைச் செய்து கொண்டு வந்தார்கள்.

இதற்குப் பின் நமது தேசம் முழுவதற்கும், 'ஆரியாவர்த்தம்' என்னும் பெயர் வந்தது. அதற்குப் பின் பரதன் முதலிய சக்கரவர்த்திகள் அரசாட்சி செய்ததனால், 'பரதவர்ஷம்' என்னும் பெயரும் ஏற்பட்டது.

ஆரியாவர்த்தத்தை ஆரியர்கள் ஆளத் தொடங்கிய பின் ஆரியர் கொள்கைகள் தேசம் பூராவும் பரவின. தங்களோடு சேர்ந்தவர்கள் எல்லோருக்கும் ஆரியர்கள் தங்கள் கோத்திர, சூத்திரங்களை ஏற்படுத்தினார்கள். பிராம்மணர்களில் ஆந்திரர், திராவிடர், உத்கலர், கர்நாடகர், மகாராஷ்டிரர் என்று சொல்லப் படுகிற பத்து விதப் பிராம்மணர்கள் இருக்கிறார்கள். ஆரிய மதத்தார் எல்லோருக்கும் இன்று 'வழங்கிவரும் கோத்திரங்கள் தம் தம் மூலபுருஷர்களுடைய பெயர்களே என்று நினைத்துப் பிரமிக்கிறார்கள். இது தவறு. ஆரியர்கள் தங்களுடைய சங்கத் தில் சேர்ந்த எல்லோருக்கும் - எந்தத் தேசத்தாராயினும் - முதலில் ரிஷிகோத்திரங்களை ஏற்படுத்தினார்கள். இந்த முறை நான்கு வருணத்தார்களுக்கும் பொதுவாக வைக்கப்பட்டது. கோத்திரங்

கள் அந்தக் காலத்தில் ஆரிய சம்பிரதாயங்களையும் மதக் கட்டுப் பாடுகளையும் சொல்லிக்கொடுத்த ரிஷிகளுடைய பெயர்களே; அதாவது குருபரம்பரை. சிலரைப் பொறுத்தமட்டில் அவர்கள் மூலபுருஷர்களாக இருக்கலாம்.

எல்லாக் குலத்தவர்களுக்கும் அவர்கள் மூல புருஷர்கள் அல்ல. இந்த ரிஷிகள் நான்கு குலத்தாருக்கும் மதாசாரியர் களாக இருந்து ஒவ்வொரு பிரிவினருக்கும் ஒவ்வொருவர் தலைவ ராக இருந்ததாகத் தெரிகிறது. மதபோதனைகளில் மிகத் தேர்ச்சி அடைந்தவர்கள் சூத்திரங்களை அறிந்திருந்தார்கள். இவர்கள் கோத்திர ரிஷிகளுக்கு மேலதிகாரிகள் என்றும் சொல்லலாம். ஆரியமதத்தை நன்ருகப் போதிக்கக்கூடிய ரிஷிகள் அனைவரும் கோத்திர புருஷர்களாகவே மதிக்கப்பட்டிருந்தார்கள். அதனுல் அவர்கள் முதலில் எந்தக் குலத்தினராயிருந்தாலும் ரிஷி என்னும் யோக்கியதையை அடைந்தபின்பே மதாசாரிய ஸ்தானம் பெற்று, கோத்திர புருஷர்கள் ஆனதற்குப் பல திருஷ்டாந்தங்கள் கிடைக் கின்றன. இந்த மதாசாரியர்களைப் புரோகிதர்கள் என்றும் சொல்வது உண்டு. கீழே வரும் பேளுர்த் திராவிடப் பிராம்மண வம்சங்களில் அப்பல்ல, சீலா, பண்டி, மருவாட, விசுவநாத ஆகிய பல மாறுபட்ட குடும்பப்பெயர்கள் உள்ளவர்கள் எல்லோரும் குத்ஸ கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். பிரவர ரிஷிகளில் க்ஷத்திரியனுகிய மாந்தாதா என்ற ரிஷியின் பெயர் இருக்கிறது. 'ஆசாள்ள' என்னும் பிராம்மணர்கள் க்ஷத்திரிய னுகிய கௌசிகரின் கோத்திரத்தை உடையவர்களாய் இருக் கின்றனர். ஹரிதகோத்திரத்தார் ஆகிய 'பவ்வெத்துல', 'ராம் பட்ல' குடும்பத்தார்களுக்கும் பிரவரர்களில் க்ஷத்திரியனுகிய அம்பரீஷன் வருகிருர். இப்படியே திமிலத் திராவிடப் பிராம் மணர்களில் ஹரிதகோத்திரத்தைச் சேர்ந்த காசி சோமயாஜுல வாரு, முடியாவாரு, ராணீவாரு, ராம்பட்லவாரு ஆகியவர்களின் பிரவரர்களிலும் அம்பரீஷனின் பெயர் இருக்கிறது. இவற்றை யெல்லாம் பார்க்கும்போது[1] இந்த அரசர்கள் ரிஷித்வம் அடைந்து, மதாசாரியர்களாய்ப் பிராம்மணர்களுக்குங்கூடப்

1. திராவிட வம்ச சரித்திரம்.

பிரவர ரிஷிகளானதாக வெளிப்படுகிறது. பிரவர ரிஷிகள் அந்த அந்த வம்சத்தில் பிரசித்தம் அடைந்தவர்கள் என்று சிலர் நினைக்கிறார்கள். அப்படியானால் இன்னும் பிராம்மணர்களில் இருக்கும் முத்கல கௌசிக கோத்திரத்தார்களும் சுனக மித்திரிய கண்வ விஷ்ணுவர்த்தன ஹரித ரதீதர வீதஹவ்ய முதலிய கோத்திரத்தார்களும் அந்த அந்த வம்சத்தார்கள் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. இது ஒன்றுக்கொன்று முரண்பட்ட விஷயமாக இருக்கிறது.

ரதீதர கோத்திரத்தாருடைய பிரவரர்களிலும் ஹரித கோத்திரத்தாருடைய பிரவரர்களிலும் ஆங்கீரஸ ரிஷியின் பெயர் காணப்படுகிறது. இதனால் அந்த க்ஷத்திரிய வம்சங்களுக்குச் சம்பந்தம் இல்லாத ரிஷிகள் அந்தக் குலத்தில் பிறந்தார்கள் என்று சொல்ல வேண்டி இருக்கிறது. அதனால் மேலே சொன்ன ரிஷிகள் எல்லாக் குலங்களிலும் பிறந்து மதாசாரியர்கள் ஆனார்கள்; இவர்கள் க்ஷத்திரியர்களாக இருந்த காலம் வரை, கோத்திரத் தலைவர்கள் ஆகவில்லை; தவத்தின் மிகுதியாலும் மத அதிகாரத்தாலும் பிராம்மணத்துவத்தை அடைந்து கோத்திரத் தலைவர்கள் ஆனார்கள் என்றெல்லாம் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இவ் விஷயத்தை இன்னும் ஆராய்ந்து பார்ப்போம்.

இனி, பிராம்மண கோத்திரத்தை விட்டு வைசியர்களுடைய கோத்திரங்களைப் பரிசீலனை செய்வோம். கன்யகா புராணப் பிடிகையில் சொன்னபடி கோத்திரப் பிரவர ரிஷிகளின் பெயர்கள்:

| கோத்திர ரிஷி | பிரவர ரிஷி |
|---|---|
| வசிஷ்டர் | வசிஷ்டர் |
| கதம்பர் | கௌத்ஸர் |
| கிரமசிஷ்டர் | சரபங்கர் |
| தனகுலம் | கிருஷ்ணர் |
| பீமசிஷ்டர் | ஜாபாலி |
| இக்ஷ்வாகு | மஹாதேஜஸ்கர் |
| கணமுகர் | கசியபர் |
| முஷ்டிகர் | முசுகுந்தர் |

| கோத்திர ரிஷி | பிரவர ரிஷி |
|---|---|
| சௌனகர் | சௌனகர் |
| மன்யகுலம் | மாண்டவ்யர் |
| (கர்ண) கர்ணட | கண்வர் |
| கண்ட | பல்லவர் |
| ஜானு | ஜஹ்னு |
| விக்கிரமசிஷ்டர் | விசுவாமித்திரர் |
| ஸாந்தால | வால்மீகி |

என்று சொல்லப்படுகிறது.

இவற்றால் வைசியர்களுக்குள் நானாவித ஜாதியார் இருப்பதாயும் பிராம்மணர்களுள் உள்ள கோத்திரப் பிரவரர்கள் இவர்களிலும் இருப்பதாகவும் தெரிகிறது. பத்தாம் நூற்றாண்டு முதல் இந்தக் கோத்திரங்களே வைசியர்களுக்கு இருப்பதாகச் சாஸனங்கள் தெரிவிக்கின்றன. இதுபோலவே விச்வாமித்திர, பாரத்வாஜ, ஆத்ரேய, காச்யப, வசிஷ்ட, கௌண்டின்ய கோத்திரங்கள் பிராம்மணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் பொதுவாக இருக்கின்றன.[1]

மற்ற ஜாதியாரில் இந்தக் கோத்திரங்கள் எதுவரை இருக்கின்றன என்பதைப் பார்ப்போம்.

கோட்ட ஸ்ரீராமகவி என்பவர் சானந்தோபாக்கியானம் என்னும் நூலில் தாம் கௌசிககோத்திரத்தில் பிறந்தவன் என்று எழுதியிருக்கிறார். இவர் சூத்திர ஜாதியினர் என்று ஆந்திரகவிகளின் சரித்திரம் எழுதிய ஸ்ரீ வீரேசலிங்கம் பந்துலு அவர்கள் நிச்சயித்திருக்கிறார்.

பழைய சாஸனங்களை நடுநிலைமையோடு ஆராய்ந்து பார்த்தால் இந்த ரிஷி கோத்திரங்கள் எல்லாக் குலத்தார்களுக்கும் இருப்பதாகத் திருஷ்டாந்தங்கள் காணப்படுகின்றன.

---

1. கோத்திரப் பிரவர சங்கிரகம், திராவிட வம்ச சரித்திரம் இவற்றைப் பார்க்க. ஹைஹய வம்சத்து அரசர்களுக்குள்ளும் கௌண்டின்ய கோத்திரம் இருப்பதாய் டங்கேடி கண்டமராஜுவின் ஸ்ரீகூர்மநாதாலயசாசனம் சொல்கிறது. (S. I. I. Vol. V, P. 470) சோழ அரசர்கள் அனைவரும் காசியப சுபகோத்திரத்தார் என்று பல சாசனங்கள் சொல்கின்றன. S. I. I. Volumes.

பல்லவ அரசர்கள் 5, 6 நூற்றாண்டுகளில் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட காலத்தில் அங்கே கைலாசநாத ஸ்வாமி கோயிலைக் கட்டி வைத்து அதில் பல தானசாஸனங்களை எழுதியிருக்கிறார்கள். அவற்றில் ராஜசிம்ம பல்லவேசுவரனுடைய சாஸனமும் இரண்டாவது சிம்மவர்மன் அமராவதியில் எழுதிய சாஸனமும் பார்த்தோம். (S. I. I. Vol. 1. P. 12 & 26) அவர்கள் பரத்வாஜ வம்சத்தில் பிறந்த அசுவத்தாமாவுக்கும், மதானி என்னும் தேவகன்னிக்கும் பிறந்தவர்கள் என்றும் பாரத்வாஜ கோத்திரத்தார் என்றும் தெரியவருகிறது. இவ்வமிசத்தார் அக்காலத்தில் தொழில் மூலமே க்ஷத்திரியர்கள் ஆனதாகத் தோன்றுகிறது. கி. பி. 1218-ஆம் ஆண்டில் அரசாண்ட பல்லவ அரசனாகிய அபிதேவ மவிதேவ சாஸனமும் அப்படியே சொல்கிறது.

சந்திரவமிசத்தரசர்கள் மானவ்ய, ஹாரீதர்களின் சந்ததியார் அல்லர் என்றாலும் மானவ்ய கோத்திரத்தார் என்றும் ஹாரீத புத்திரர்கள் என்றும் அந்த வமிசத்தில் வந்த வாதாபி சாளுக்கியர்களுடைய சாஸனங்களால் தெளிவாகத் தெரிகிறது.

இந்தச் சந்திர வம்சத்திற்குள் கீழ்க் காங்க வம்சத்து அரசர்கள் ஆத்திரேய கோத்திரத்தாராக இருக்கிறார்கள். சாலிவாகன சகாப்தம் 1363-ஆம் வருஷத்தில் சர்வஜ்ஞ தேவராஜன் சிக்காகோலு தாலூகா ஸ்ரீகூர்மம் என்னும் ஊரில் கூர்மநாத ஸ்வாமிக்கு எழுதிக்கொடுத்த பூதான சாஸனத்தில் சாமரைக்காகப் பாரத்துவாஜ கோத்திரத்தானாகிய அப்பலநாயுடுமகன் பஞ்சாதி நாரத நாயுடுவுக்குப் பூமி கொடுத்ததாக எழுதப்பட்டிருக்கிறது. மாண்டவ்ய கோத்திரத்தானாகிய போலிசெட்டி சாலிவாகன சகம் 1123-ஆம் வருஷத்தில் எழுதிய சாஸனம் ஒன்று தக்ஷாராம பீமேசுவரர் கோயிலில் இருக்கிறது. அவர் பலிஜ, அல்லது சாலி (நெசவு) செட்டி ஆனாலும் இங்கே கோத்திரம் கவனிக்கவேண்டிய விஷயம்.

இவையன்றி யாதவ வம்சத்து அரசர்களுக்கும் ரிஷி கோத்திரங்கள் இருப்பதாகப் பிரமாணங்கள் கிடைக்கின்றன. காட்டம

ராஜன் என்பவருடைய பாட்டனாகிய வல்லுராஜன் ஆத்திரேய கோத்திரத்தில் பிறந்தவர் என்று தசகுமார சரித்திரத்தில் எழுதப் பட்டிருக்கிறது.

கி. பி. 1000-ஆம் வருஷத்தில் இரண்டாம் அம்மராஜ விஜயா தித்தியனுடைய குரவாடா சாஸனத்தில் கீழ்க்கண்ட சுலோகம் எழுதப்பட்டிருக்கிறது.

"ஆசீச்சிமுறு வாஸ்தவ்யோ தேவார்யோ தேவஸந்நிப:
பாரத்வாஜான்வய: கம்மகுலஜ: குலவர்த்தன:
தஸ்யாம் பவத்ஸுத: ஶ்ரீமான் கோவிந்தோ குருநந்தன:
சிரௌத ஸ்மார்த்த க்ரியாதாரஸ் தத்தமஸ்ஸ த்விஜோத்தம:"

இதில் சொல்லப்பட்ட கம்ம குலத்தவர் (தெலுங்குப்) பிராம் மண குலத்துக்குள் இருக்கிற கரணகம்மலு, பொப்பூரிகம்மலு, ஆறுவேலகம்மலு என்று சிலர் விவாதம் செய்தாலும் அவர் களுக்குப் பாரத்துவாஜ கோத்திரம் ஒத்துவர வேண்டுமே! இதே போல் கி. பி. 1101-ஆம் ஆண்டில் ஐந்தாவது மேற்குச் சாளுக்கிய விக்கிரமாதித்தனது சாஸனத்திலும் கம்மகுலத்தில் பிறந்தவனும் தீதகோத்திரத்தானும் ஆன 'வெண்ணியபட்' பிராம்மணன் என்று எழுதப்பட்டிருக்கிறது. தீதகோத்திரத்தைக் கொண்டு பார்த்தால் இவன் கம்மவார் குலத்தவனாயிருக்கவேண்டும். ஒரு வேளை ரதீதர கோத்திரத்தை, 'தீத' என்று மாற்றியிருந்தாலும் ரதீதரனும் க்ஷத்திரியன்தானே! தைதா கிராமத்தான் என்பதால் தீத கோத்திரம் உண்டாகிறது. இந்தக் கோத்திரம் பிராம்மணர் களில் இல்லை. திமிலத் திராவிடப் பிராம்மணர்களில் கம்மவார் என்ற குலப் பெயர் உள்ளவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் காசியபகோத்திரத்தவர்கள். (திராவிடப் பிராம்மணர்கள் வலங்கை மானிவிருந்து சென்று, பேரூர் முதலிய ஊர்களில் குடியேறிய தமிழ்ப் பிராம்மணர்களே.)

கம்மவாருக்கு ஆதியிலிருந்தே காசியபம் முதலிய ரிஷி கோத் திரங்கள் இருப்பது மேலே சொல்லிய செய்திகளாலும் இன்னும் வரப்போகும் செய்திகளாலும் உறுதிப்படும். பாரம்பரியமாகக் கம்மவார் புகழையே சொல்லும் பட்ராஜுக்களுடைய கோத்திரங்

களும் காசியபாதி ரிஷி கோத்திரங்களாகவே இருக்கின்றன. கம்மவாருக்கும் மற்ற வருணத்தாரைப் போலவே முதலில் ரிஷி கோத்திரங்கள் இருந்தன; பிறகு அவர்கள் பௌத்த மதத்தில் சேர்ந்ததால் அவற்றை வெகு காலம் மறந்தனர். திரும்பவும் இந்துமதத்துக்கு வந்தபோது கிராம கோத்திரங்கள் ஏற்பட்ட தாகத் தெரிகிறது. இதைப்பற்றி வேறிடத்தில் சொல்வோம்.

கோத்திரம் என்னும் சொல்லுக்குச் சரியான அர்த்தம் என்ன வென்று பார்ப்போம். கோத்திரம் என்றால் பசுமந்தை. இதைச் சொல்லுகிறவர்கள் ஆரியர்கள். ஆரியர்கள் நம் நாட்டுக்கு வரும்பொழுது பசுமந்தைகளை ஓட்டிக்கொண்டு வந்தனர் என்றும் ஒரு பசுமந்தையின் தலைவன் பெயரையே கூட வசிப்பவர்கள் வைத்துக்கொண்டு வந்தார்கள் என்றும் அதனால் இன்ன கோத்திரம் என்றால் இன்ன பசுக்கூட்டம் என்று குறிப் பிட்டு வந்தார்கள் என்றும் சொல்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் பிரபலம் ஆனவர்களுடைய பெயர்களே பிரவரர்கள் என்றும் சொல்லுகிறார்கள்.

கோத்திரம் என்றால் சுவர்க்கத்தைக் காப்பது; இதற்குச் சந் ததி என்பதைப் பரியாய பதமாக உபயோகித்திருப்பதால், மேல் உலகத்தைப் பித்ரு தேவதைகள் அடையச் சந்ததிகளே காரணம் ஆவதால் கோத்திரம் என்ற பெயரை வைத்துக்கொண்டதாகச் சிலர் அபிப்பிராயம்.

கோத்திர புருஷர்கள் சிலருக்கு மட்டும் குலமுன்னோராக அமைந்திருக்கலாம். ஆனால் பொதுவாக, கோத்திரம் என்றால் ஆசாரிய சிஷ்ய பரம்பரை என்றே கொள்ளவேண்டும். சந்ததி என்பதற்கு ஆதாரம் இல்லை. வாக்கியத்தின் பொருளும் அப்படி இல்லை. கோத்திர புருஷர்கள் மதபோதகர்களாகிய ரிஷிகள் என்றும் அவர்கள் தம் மதபோதனைகளால் எல்லோரையும் சுவர்க்கம் முதலிய மேல் உலகங்களைப் பெறச் செய்வதால் இப் பெயர்கள் வந்தன என்றும் திடமாக நம்பலாம்.

மற்றொரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். விசுவாமித் திரர் ஆந்திரர்களுக்கு மூல புருஷர் என்று வேதங்களில் எடுத் துக் காட்டியிருப்பதை முன்பு படித்தோம். அப்படிப்பட்டவர்

ஆரியப் பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வருணங்களுக்கு எப்படி மூல புருஷர் ஆக முடியும்? என்பதை நன்ருக யோசித்தால் மேலே சொன்ன விஷயங்களின் உண்மை புலப்படும்.

இப்படி ஆரியர்கள் தங்களது மதத்துக்கு அஸ்திவாரம் போட்டு எல்லாக் குலத்தினருக்கும் மதபோதனை செய்ய ரிஷிகளைக் கோத்திர புருஷர்களாக்கினார்கள். ஒவ்வொரு பிராந்தியத்துக்கோ ஒவ்வொரு கிளைக்கோ வேறு வேறு ரிஷிகளை அமர்த்தினார்கள். சில முக்கிய அம்சங்களை அவர்களுக்கு மேலிருந்து சொல்லி ஸ்தாபித்து விவரிக்க, சூத்திரம் அறிந்த ரிஷிகளை ஏற்படுத்தினார்கள். இவர்கள் (போ)பௌதாயனர், ஆசுவலாயனர், ஆபஸ்தம்பர் முதலிய ரிஷிகளே. பின்னும் கோத்திர ரிஷிகளுக்கு உதவியாக அவர்களைவிடக் குறைந்த அநுபவம் உள்ளவர்களையோ அல்லது அருகில் இருப்பவர்களையோ சில (உப) ரிஷிகளை அமர்த்தித் தம் மதபோதனையை எங்கும் விரியச் செய்தார்கள். இதுதான், கோத்திர, சூத்திர, பிரவரங்களின் ரகசியம். கோத்திரங்களின் ஜனத்தொகையை ஒட்டி, திரயார்ஷேயம் (மூன்று ரிஷிகளைக் கொண்டது), பஞ்சார்ஷேயம், ஸப்தார்ஷேயம் என்று ரிஷிகளின் எண்ணிக்கையை மாற்றி அமைத்து வந்தார்கள்.

இப்பொழுது பிராம்மணர்கள் மட்டும் கோத்திர, சூத்திர, பிரவரங்களை உபயோகிக்கிருர்கள். மற்றக் குலத்தவர்கள் கோத்திரம் ஒன்றை மட்டும் உபயோகத்தில் வைத்துக்கொண்டிருக்கிருர்கள். இந்த ஜாதிகளில் காலக்கிரமத்தில் ரிஷி கோத்திரங்களே மாறி, கிராம கோத்திரங்களும் வேறு சில கோத்திரங்களும் உண்டாயின. அவற்றை வேறிடத்தில் தெரிவிக்கிறோம்.

இன்றைக்கும் வெலமவாரில் சிலர் ரிஷி கோத்திரத்தாராக இருக்கிருர்கள். பலிஜ புராணத்தில் உள்ளபடி:

| வீட்டுப் பெயர் | கோத்திரம் |
|---|---|
| ஆக்கு நாரியார் | ஸ்ரீவத்ஸம் |
| உதெல்ல | கௌண்டின்ய |
| விதிப்பாக | வசிஷ்ட |

| வீட்டுப் பெயர் | கோத்திரம் |
|---|---|
| நானி செட்டி | ஸ்ரீவத்ஸ |
| பாகல் / போகல | சாண்டில்ய |
| | ஆத்ரேய |
| போயிந்தல | ஸப்தரிஷி |
| பதியாரு செட்டி | கௌண்டின்ய |

இந்த ரிஷி கோத்திரங்கள் இல்லாதவர்களுக்குக் கிராம கோத்திரங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் மேலே சொன்ன விஷயங்களையே உறுதிப்படுத்துகின்றன.

க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களுக்கும் பிரவரங்கள் முதலியவை உண்டென்றும் அவர்களுக்குள் ஸங்கர (கலப்பு) ஜாதியாருக்குப் புரோகிதருடைய கோத்திரப் பிரவரங்களையே வைக்க வேண்டுமென்றும் அக்கினி புராணத்தில் உள்ள கீழ்க்கண்ட சுலோகம் உறுதிப்படுத்துகிறது.

**"க்ஷத்ரிய வைச்ய சூத்ராணும், கோத்ரம் சப்ரவராதிகம்**
**ததான்யஸங்கராணும் சயேகாம் விப்ரஸ்ய யாஜகா:"**

இதனாலும் கோத்திரங்கள் மத அதிகாரிகளின் பெயர்களேயன்றி மூல புருஷர்களுடைய பெயர்கள் அல்ல என்பது தெரிகிறதன்றோ! பிரவரங்கள் எல்லாக் குலத்தவருக்கும் இருப்பது தெரிந்த விஷயம். இதைத் தவிர இந்த விஷயத்துக்கு மூல சூத்திர ஆதாரங்களையும் தெரியப்படுத்தினாலொழிய, கோத்திரங்கள் மத அதிகாரிகளுடைய பெயர்களே, எல்லாக் குலத்தவருக்கும் அவை உண்டு என்பவற்றைப் பண்டிதர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அதனால் இவற்றுக்குச் சம்பந்தப்பட்ட ஆசுவலாயன சிரௌத சூத்திரம் 12-15—ஐ இங்கே காண்பிக்கிறேன்:

**"க்ஷத்திரிய வைச்யயோருபதிஷ்டா திதிஷ்ட கோத்ரம்,**
**இதி உத்வாஹதத்வோ அபிச.**
**புரோஹிதப்ரவரோ ராக்ஞாம் ".**

ஆபஸ்தம்ப ப்ரவர காண்டம் 11-இல் இப்படி இருக்கிறது:

"புரோஹிதஸ்ய ப்ரவரேண ராஜா ப்ரவ்ருணீத இதி விக்ஞாயதே. ॥'
புர: ஏனம் ததாதீதி புரோஹித:. க்ஷத்ரியோ தர்விஹோமிக:. ॥
அபிஜனவித்யாவ்ருத்திஸஹித: நஸ்ய ப்ரவரேண ராஜா அபிஷிக்த:. ॥
ப்ரவ்ருணீதே ப்ராம்மனேபி ராஜ்யம் ப்ராப்த: புரோஹிதப்ரவரேண
ப்ரவ்ருணீதே". ॥"

இந்த ஸூத்ரங்களால் அரசர்களுக்கும் வைசியர்களுக்கும் புரோகிதருடைய பிரவரத்தையே சொல்லவேண்டும் என்றும்;[1] ஒருவேளை பிராம்மணன் அரசனானலும் புரோகிதப்ரவரத்தையே வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் அபிப்பிராயம் இருப்பது புலனாகிறது. இந்த ஸூத்ரங்கள் எழுதிய காலத்தில் சூத்திரர்களுக்கு மேலே கண்ட ஏற்பாடு உண்டாகவில்லை என்று தெரிந்து கொள்ள வேண்டும். இந்த ஸூத்ரங்களின் கொள்கைப்படியே சூரிய, சந்திர வம்ச அரசர்களுக்குள் ரிஷி கோத்திரங்கள் செலாவணியாயின. புராணகாலத்தில் சூத்திரர்களுக்கும் இவை ஏற்பட்டன.[2] ஸ்காந்த புராணத்தில் ஸஹ்யாத்ரி கண்டத்தில் சூரிய வம்சத்தரசர்களுக்கு 12 கோத்திரங்களும் சந்திர வம்சத்தரசர்களுக்கு 25 கோத்திரங்களும் (ரிஷி கோத்திரங்களே) எழுதப்பட்டிருக்கின்றன.

"ஸூர்யவம்சோத்பவானும் ஹி கோத்ராணி த்வாதசைவஹி;
பஞ்சவிம்சதி ஸோமானும் கோத்ராணி முனிரப்ரவீத்".

நூல் விரிந்துவிடும் என்ற பயத்தால் அவற்றைக் குறிக்கவில்லை. இவைகளுக்குத் திருஷ்டாந்தமாக, சமீப காலத்தில் அகப்பட்ட ஜனமேஜய மகாராஜனுடைய சாஸனத்தில்[3] ஸ்ரீபாத கோத்திரத்தில் பிறந்தவன் - அதாவது குரு கோத்திரத்தில் பிறந்தவன் - என்று ஜனமேஜய மகாராஜனைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அந்தச் சாஸனத்தில் ஸ்ரீ என்னும் முத

1. ஜயார்த்தப் பிரகாசிகை.

2. சூத்திர கமலாகர ஸ்மிருதியில் சூத்திரர்களுக்குக் காசியபகோத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது.

3. Ind. Ant. Vol. IV, P. 333. இச்சாஸனம் யுதிஷ்டிர சகம் 89-ஆம் வருஷத்தில் எழுதப்பட்டது.

லெழுத்து அழிந்துபோய், 'பாதகோத்திரஜ' என்னும் எழுத்துக்களே காணப்படுகின்றன. அது ஸ்ரீபாத கோத்திரமே ஆகும்.

சாலிவாகன சகம் 1297-ஆம் வருஷத்துப் பத்மி நாயுடு என்பவனை ஆத்ரேய கோத்திரத்தவன் என்றும், சா. ச. 1208-ஆம் வருஷத்துத் தம்மிநாயுடு என்பவனை வசிஷ்ட கோத்திரத்தவன் என்றும், சா. ச. 1209-ஆம் வருஷத்துப் புருஷோத்தம நாயுடு பாரத்வாஜகோத்திரத்தான் என்றும், சா.ச.1220-ஆம்வருஷத்து லக்கண நாயகன் கௌசிக கோத்திரத்தான் என்றும், சா. ச. 1262-ஆம் வருஷத்துத் தாள்ள திருவடி நாயுடு வசிஷ்ட கோத்திரத்தவன் என்றும் இவர்களும் இவர்களுடைய வம்சத்தவர்களும் சிம்மாசலத்தில் ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமி கோயிலில் எழுதுவித்த தான சாஸனங்களின் மூலம் தெரிகிறது. (S. I. I. Vol VI, Nos. 881, 885, 896, 897, 917). விசுவப் பிராம்மணர் என்பவர்களுக்கும் பழங்காலத்திலிருந்து ரிஷி கோத்திரங்களும் ஆசுவலாயன, போதாயன சூத்திரங்களும் இருந்துவருகின்றன. ஆரியமதத்தைப் பின்பற்றிய ஆந்திரர்களில் எல்லா வகுப்பினருக்கும் முதலில் ரிஷி கோத்திரங்களே ஏற்பட்டன என்பது இதனால் உறுதிப்படுகிறது. ஆந்திரர்களுக்கு மட்டும் என்ன, ஆரிய மதத்தவர்களாகிய மற்ற எல்லாப் பாஷை பேசுவோருக்கும் இந்த முறை ஏற்பட்டதென்பது நம்பத்தகுந்த உண்மை.

ஆரியமதத்தைப் பரவச் செய்யும்பொருட்டு ஆரியர்கள் சலியாமல் உழைத்தார்கள். அந்நிய நாட்டாராகிய சகர், யவனர், பஹ்லவர், ஸிதி என்னும் ஜாதியார் இங்கே குடியேறிய போது ஆரியர்கள் அவர்களுடன் யுத்தங்கள் செய்தாலும் பிற்காலத்தில் மெல்ல மெல்ல அவர்களைத் தங்கள் மதத்தில் சேர்த்துக்கொண்டார்கள். ஆந்திர ஆரியர்களுக்கும் வந்தவர்களுக்கும் கல்யாணம் நடத்தி மதத்தை விரிவு செய்துகொண்டதாகக் கி. பி. முதல் நூற்றாண்டின் தேச சரித்திரத்தால் தெரியவருகிறது. (ஆந்திரர் சரித்திரம், 1-ஆம் பாகம்.)[1] இவர்கள் எல்லோரும் ஆந்திரர்

1. ஆந்திர அடிமை அரசர்களில் புலுமாயி என்ற சாலிவாகனனுடைய மனைவியும் வாசிஷ்டபுத்திர என்ற சாதகர்ணியின் மனைவியும் அந்நிய நாட்டுச் சக அரசபுத்திரிகள் என்று சரித்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள். இவைகளுக்கு ஆதாரம் கிடைத்திருக்கிறது.

களுடன் கலந்து கோத்திர சூத்திராதிகளை ஏற்றுக்கொண்டார்கள். அதனாலேயே பல்லவர்கள் பாரத்வாஜ கோத்திரத்தார்களாய் அதன்பின் பாரத்வாஜ சந்ததியார் என்றே சாஸனங்களில் எழுத ஆரம்பித்தார்கள். மேலே சொன்ன எல்லோரையும் முதலில் க்ஷத்திரியர்களாகவே சேர்த்துக்கொண்டாலும் பிறகு சிலர் பிராம் மணர்களுக்குள்ளும் சேர்ந்தார்கள். பல்லவர்களில் சிலர் கிரம மாகப் பிராம்மணர்கள் ஆனதற்குச் சாஸன திருஷ்டாந்தங்கள் கிடைக்கின்றன. பாதப ராஜாவினுடைய அரும்பாக்கம் சாஸ னத்திலும் குப்பனையா சாஸனத்திலும் இவைகளைக் காணலாம். எபிகிராபிகா இண்டிகா, வால்யூம் 9, பக்கம் 131-இலும் பார்க்க லாம். அக்கினி குல க்ஷத்திரியர்களும் அக்கினிவேசியப் பிராமணர் களும் இப்படி உண்டானவர்களாகவே இருக்கலாமென்று சில சரித்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

இனிக் கோத்திரங்கள் உண்டான காலத்தைப்பற்றிக் கொஞ் சம் தெரிந்துகொள்வோம். கோத்திர, சூத்திரப் பிரவர ரிஷி களில் சூத்திரக்ஞர்களே பிரதானமானவர்கள். வேதத்தின் ஒவ் வொரு பகுதியையும் சூத்திரங்களாக எழுதி வைத்ததால் இவர் களுக்கு இந்தப் பெயர் வந்தது. சூத்திரக்ஞர்களில் போதாயனர் முற்பட்டவர் என்றும் அவருக்குப் பிற்பட்ட காலத்தில் இருந்தவர் ஆபஸ்தம்பர் என்றும் டாக்டர் ஜார்ஜ்பூலர் துரை தெரிவிக்கிறார். இவர் ஆபஸ்தம்பர் கி. மு. 4 அல்லது 5-ஆம் நூற்றாண்டில் இருந் திருக்கவேண்டும் என்று சொல்லுகிறார். இவர் ஆபஸ்தம்ப சூத் திரங்களை நன்றாக ஆராய்ந்தவர். ஆந்திரர்களில் பெரும்பாலும் பிராம்மணர்கள் ஆபஸ்தம்ப சூத்திரத்தாராக இருப்பதால் ஆபஸ் தம்பர் ஆந்திரராய் இருக்கலாம் என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள். போதாயனர் காலத்துக்குப் பின் ஆரிய மதக் கட்டுப்பாடுகள் தளர்ந்துவிட்டன. ஆபஸ்தம்பர் வந்தவுடன் சில புதிய நிபந்தனைகளையும் கட்டுத்திட்டங்களையும் செய்தார். மத விஷயங்களில் கண்டிப்பான நிபந்தனைகளை ஏற்படுத்திய தாக அவருடைய சூத்திரங்களிலிருந்து தெரிகின்றது. இந்தக் காலத்திலிருந்து ஜாதிக் கலப்புகள் கிரமமாகக் குறையச் சந்தர்ப் பம் இருக்கிறது.

இந்தச் சூத்திரக்ஞர்களுடைய காலம் கி. மு. 4—ஆம் நூற்றாண்டென்றும் 5-ஆம் நூற்றாண்டென்றும் அபிப்பிராய பேதம் இருந்தாலும் இவர்கள் காலத்திலேயே கோத்திர, சூத்திரப் பிரவரங்கள் ஸ்திரப்படுத்தப்பட்டன என்று தெரிகிறது. போதாயனர் கி. மு. 14-ஆம் நூற்றாண்டுக்காரர் என்று சியாமசாஸ்திரி முதலான பண்டிதர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்வளவு முற்பட்டவர் அல்லர் என்பது சிலர் கொள்கை (கலிங்க தேச சரித்திரம், பக். 283). கால நிர்ணயத்தில் அபிப்பிராய பேதம் இருந்தாலும் இவர்கள் காலத்தில் கோத்திரம் முதலியவை ஏற்பட்டன ; ஆரிய, ஆந்திரர்களுக்கும் அவர்களோடு சேர்ந்த அந்நிய நாட்டினருக்கும் இவை ஏற்பட்டன என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. இவை ஏற்படும் முன் சாமானியமாகக் குரு கோத்திரம் என்று சொல்லிக்கொண்டிருந்ததற்கு ஜனமேஜயன் சாஸனமே பிரமாணமாக இருக்கிறது.

## 2. ஆந்திரர்களின் ராஜ்ய அபிவிருத்தி

கி. மு. 6000-க்கு முன்பே நம் நாட்டில் இருந்த ஆந்திரர்கள் ஆரியர்களோடு கலந்துவிட்டபின் சிலர் பிராம் மணர்களாகவும் சிலர் க்ஷத்திரியர்களாகவும் சிலர் வைசி யர்களாகவும் பிரிந்தார்கள் என்று முன்பே தெரிந்துகொண் டோம். இப்படிப் பிரிந்த க்ஷத்திரியர்களே சாஸனங்களில், 'ரட்டுலு' என்றும், மகாரட்டுலு என்றும் பெயர் பெற்ருர்கள். ராட் அல்லது க்ஷத்திரிய வம்சத்தில் சூரிய வம்சமும் ஒன்று. இவர்கள் சூரியனை ஆராதித்து வந்ததால் இந்தப் பெயர் வந்திருக் கும். சூரியன் மூலமாக இந்த வம்சம் உற்பத்தியானதாகச் சொல்லும் புராணக் கதைகளை நம்ப இடம் இல்லை. சூரிய வம் சத்து அரசர்கள் முதலில் அயோத்தியையே ராஜதானி நகரமாகக் கொண்டு அரசு செய்தாலும் பிற்காலத்தில் பல கிளைகளாகப் பிரிந்து பல இடங்களில் ராஜதானிகளை ஏற்படுத்திக்கொண்டு ஆண்டதாகப் புராணங்கள் சொல்லுகின்றன. ஸ்ரீராமனுடைய காலத்துக்கு முன்பே[1] இக்ஷ்வாகு வம்சத்தரசர்கள் (50 தலை முறைகளுக்கு முன்) சிராவஸ்தி நகரை உண்டாக்கியதாகவும் ஸ்ரீராமர் அந்நகரத்தைத் தம் குமாரர்களில் ஒருவனுக்கு ராஜ தானி நகரமாகக் கொடுத்து மற்ருெருவனுக்கு அயோத்தியைக் கொடுத்ததாகவும் தெரிகிறது.

அதன்பின் அவர்களுடைய வம்சத்தில் முறையாகக் காந் தாரம், தக்ஷசிலா, புஷ்கராவதி, அங்கதாபுரம், சம்பாபுரம், பிரதி பாலபுரம், தனதுபுரம் என்பவற்றைச் சில அரசர்கள் ஆண்டதற் குப் புராணப் பிரமாணங்கள் பல இருக்கின்றன. காந்தாரம்[2] இக்காலத்துக் கந்தஹாரம் என்றும் சம்பாபுரம் அங்கதேசம்

---

1. ஸ்ரீராமனுடைய ஜாதக சக்கரத்தைக்கொண்டு அவர் கி. மு. 3122-க்கு முந்தியவர் என்று ஜோதிட அறிஞர்கள் சொல்லுகிருர்கள்-ஜ்யோதிஷ ரகஸ்யம் என்னும் நூலைப் பார்க்க.

2. ஆந்திர சரித்திரம், 5.

என்றும் பிரதிபாலபுரம் ரேபல்லி தாலூக்காவைச் சேர்ந்த பட்டிப் ரோலு என்றும் தனதுபுரம் சந்தவோலு என்றும் சரித்திரக் காரர்கள் ஊகிக்கிறார்கள்.

ஸ்ரீராமனுடைய தம்பியாகிய பரதன் காந்தாரத்தையும் அவனுடைய மகனாகிய தக்ஷன் தக்ஷசிலா நகரத்தையும் புஷ்கரன் புஷ்கராவதியையும் லக்ஷ்மணனுடைய குமாரன் அங்கதன் அங்கதாபுரத்தையும் ராஜதானிகளாகக் கொண்டு ஆண்டு வந்தது புராணப் பிரசித்தம்.

இப்படிப் பல இடங்களில் ராஜதானிகளை உண்டாக்கி ஆண்டு வந்த சூரியவம்சத்தில் இக்ஷ்வாகுவின் வம்சமே பிரசித்தமானது. அயோத்தியை ஆண்டவர்கள் இவர்களே.

கி. மு. 3122-க்கு முன் இந்த வம்சத்தில் ஸ்ரீராமன் பிறந்து அரசாட்சி செய்துவந்தார். அவருக்குப் பின் சுமார் 33 அரசர்கள் ஆண்டதாகத் தெரிகிறது. மகாபாரத யுத்த காலத்தில் பிருஹத்பலன் என்ற இக்ஷ்வாகு வம்சத்து அரசன் அயோத்தியை ஆண்டான். பாரத யுத்தம் கி. மு. 1470- வாக்கில் நடந்திருக்கும் என்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். மேலே சொன்ன முப்பத்துமூன்று அரசர்களும் தலைக்கு ஐம்பது வருஷ காலம் அரசாட்சி செய்ததாக ஏற்படுகிறது. இக்காலச் சரித்திரக்காரர்களுடைய கணக்குக்கு இது சற்று அதிகமாக இருந்தாலும் அக்காலத்தவர் உடல் வலிமை பெற்றிருந்ததால் சராசரி 50 வருஷங்கள் ஆண்டிருக்கலாம் என்று நம்பினால் கணக்குச் சரிப்பட்டு வருகிறது.

மகாபாரத யுத்தம் முடிந்த பின்பு தகுந்த வீரர்களும் பண்டிதர்களும் நசித்துவிட்டதால் பிற்காலச் சரித்திரம் அதிகமாகத் தெரியவில்லை. ஆனால் கி. மு. 4, 5-ஆம் நூற்றாண்டின் பௌத்த ஜாதகக் கதைகளிலும் ஜைன மத நூல்களிலும் இந்த இக்ஷ்வாகு வம்சத்து அரசர்களுடைய பெயர்கள் காணப்படுகின்றன. யசோதரன், தனதன் முதலிய பிரதிபாலபுரத்து அரசர்கள் இவ்வம்சத்து அரசர்களே எனலாம். இதற்குப் பின் 3-ஆம் நூற்றாண்டு வரையில் இவர்களைப்பற்றி நமக்கு

விசேஷமாக ஒன்றும் தெரியவில்லை. 3-ஆவது நூற்றூண்டில் இச்சூரிய வம்சத்து அரசர்கள் அயோத்தியைத் தாண்டி ஆந்திர தேசத்தின் மத்திய பாகத்திலும் ராஜதானிகளை நிர்மாணித்துக் கொண்டதாகத் தெரிகிறது. 3-ஆவது நூற்றூண்டில் இக்ஷ்வாகு வம்சத்தவனுகிய வீரபுருஷதத்தன் காலத்துச் சாஸனம் ஒன்று பெஜவாடாவை அடுத்த பேதவோலு என்னும் ஊரில் (கம்பத்தில்) காணப்படுவதால் அக்காலத்தில் ஆந்திர தேசத்தைச் சூரிய வம்சத்து அரசர்களே ஆண்டு வந்ததாகத் தெரிகிறது. நாகார்ஜுனமலைச் சாஸனங்களிலும் இக்ஷ்வாகு அரசர்களுடையவை இருக்கின்றன. இவை பல்நாடு தாலூகா மாசெர்ல என்னும் ஊருக்குப் பதினைந்து மைல் தூரத்தில் இருக்கின்றன.

கி. பி. 200—ல் இக்ஷ்வாகு அரசனுகிய சாதமூல ஸ்ரீ என்பவனும் கி. பி. 250-ல் வீரபுருஷதத்தனும் இரண்டாம் சாதமூலனும் ஆந்திர தேசத்தை ஆண்டுவந்தனர். இப்படிப் பல காரணங்களால் சூரியவம்சத்து அரசர்கள் ஆந்திரர்கள் என்று சொல்லலாம்.

குண்டூர் ஜில்லா ரிப்போர்ட்டுகளைக் கொண்டும் மாலெபாடி தாமிர சாஸனங்களைக் கொண்டும் ஆரியவம்சத்துச் சோழ அரசர்களுடைய சரித்திரங்கள் ஓரளவு தெரிகின்றன. 10-ஆம் நூற்றூண்டுக்குப் பிற்பட்டவற்றை 2-ஆம் பாகத்தில் காணலாம். சந்திர வம்சத்தைச் சேர்ந்த ஆந்திரர்கள் அதிஷ்டானபுரம், ஹஸ்தினுபுரம், மாஹிஷ்மதீபுரம், மதுரை, சேதிதேசம், தர்மாரணியம், காம்பில்யம், கௌசாம்பி, அயோத்தி, மகோதயம், கிரிவிரஜம் முதலியவற்றைத் தலைநகராகக்கொண்டு அந்தத் தேசங்களை ஆட்சி செய்து வந்ததாகப் புராணங்கள் சொல்கின்றன.

மேலே சொன்ன அதிஷ்டானபுரம் இப்பொழுது நைஜாமில் உள்ள பைட்டணநகரம் என்றும் அஸ்தினுபுரம் டெல்லி என்றும் மதுரை வடமதுரை என்றும் சேதி தேசம் மத்திய மாகாணத்தில் உள்ள தேவார் நகரம் என்றும் சரித்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

உதயணன் முதலிய 59 சந்திரவம்சத்து அரசர்கள் கௌசாம்பியில் அரசாட்சி செலுத்தியதாகச் சில சாஸனங்கள் சொல்கின்றன. சந்திரவம்சத்து அரசர்கள் முறையே ஹைஹயர் என்றும் சாளுக்கிய, யது, வ்ருஷ்ணி, போஜ, அந்தக, காங்க வம்சத்தார் என்றும் தங்களைச் சொல்லிக்கொண்டதாகப் பழங் கவிகள் இயற்றிய நூல்கள் சாட்சி சொல்கின்றன. சிலருக்குச் சாஸனங்கள் ஆதாரமாக இருக்கின்றன. இவர்களில் சிலர் கல்யாணபுரத்திலும் வேங்கிதேசத்திலும் ஆட்சி செய்தனர். கலிங்கத்தை ஆக்கிரமித்தவர்களைக் காங்க வம்சத்தார் என்றார்கள்.[1]

இப்படி, பிராம்மண வம்சத்திலிருந்தோ அல்லது வேறு வம்சத்திலிருந்தோ பிரபலமாகி ஆந்திர சாதவாகனர் என்றும் சாதகர்ணிகள் என்றும் பிரசித்தி பெற்றனர் ஒருகிளை அரசர்கள். இவர்கள் சாளுக்கியர்களைப் போலவே மானவ்ய கோத்திரர்கள், ஹாரீத புத்திரர்கள் என்று சொல்லிக்கொண்டு கி. மு. 1,2-ஆம் நூற்றாண்டுகளிலும் அதற்கு முன்பும் நம் தேசத்தை ஆண்டார்கள் என்று யக்ஞஸ்ரீ சாதகர்ணி, கௌதமீபுத்ர சாதகர்ணீ முதலியவர்களுடைய நாணயங்களையும் சாஸனங்களையும் பரிசோதகர்கள் ஆராய்ந்து கண்டுபிடித்தார்கள். புராணங்களில் இடம் பெற்ற ஆந்திர அரசர்களில் நெமிகிருஷ்ண, ப்ரவில்லபேன, லம்போதர, அபிலக என்ற பெயர்களை உடைய நாணயங்கள் பல தரணிக்கோட்டையிலும் குடிவாடாவிலும் மகாராஷ்டிரத்திலும் கிடைத்தன. இப்படிப் புராணகாலத்திலிருந்து சாதவாகனர் என்றும் அந்தகர் என்றும் சூரிய சந்திர வம்சத்தார் என்றும் பல பெயர்களோடு நம் தேசத்தை ஆண்டவர்கள் ஆந்திரர்களே என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். சாளுக்கிய ராஜராஜ நரேந்திரன் ஆந்திரபாஷையைத் தாய்மொழியாகக் கொண்டிருந்ததால் தான் நன்னயபட்டார கவியைக் கொண்டு ஆந்திர மகாபாரதம் எழுதுவிக்க ஆசைப்பட்டிருப்பார். இவர் சந்திர வம்சத்தவர். சாளுக்கியர்களுடைய கோத்திரங்களே ஆந்திர சாதவாகனர்

---

1. காலகர்ய அரசர்கள் ஹைஹய வம்சத்தவர். விஜயநகர ராயர்கள் யது வம்சத்தவர். ராஜராஜ நரேந்திரன் சாளுக்கியன்.

களுக்கும் இருந்தனவென்று மேலே சொன்னோம். சாளுக்கியர்கள் ஆந்திரர்களே என்று பல சாஸனங்களில் காணப்படுகிறது.[1]

சூரிய வம்சத்திலிருந்து வந்த காகதிய அரசர்கள்கூட ஆந்திர அரசர்களென்று சாஸனங்களில் காட்டப்பட்டிருக்கிறது. இவர்களும் சாளுக்கியர்களும் கி. பி. 7 முதல் 14-ஆம் நூற்றாண்டு வரையில் ஆந்திரதேசத்தை ஆண்டார்கள். இவர்கள் மட்டும் இந்தப் பெயர்களால் அழைக்கப்பட்டார்கள்.

ஆந்திரர்களுக்கு ஆந்திர எழுத்துக்கள் ஏற்படும் முன்பு பைசாசம், பிராம்மீ, சம்ஸ்கிருதம் முதலிய எழுத்துக்கள் ஆதாரமாக இருந்தன. அதனால் கிறிஸ்துவுக்கு முன்னால் எழுதிய சாஸனங்களும் சரித்திரங்களும் அந்தப் பாஷைகளிலேயே எழுதப் பட்டிருந்தன. ஆந்திரராஜ்யம் இக்ஷ்வாகு வம்சத்தாரிடமிருந்து நழுவியபின்-3-ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து-பல்லவ அரசர்கள் கைக்கு வந்தது. அவர்கள் 6-ஆம் நூற்றாண்டுவரையிலும் ஆண்டு வந்ததாகத் தெரிகிறது. அங்கே அந்தக் காலத்திலேயே சில சிற்றரசுகள் தலையெடுத்தன.

சிற்றரசர்களில் ஆனந்தகோத்திர ராஜாக்கள், பிருகத்பலாயனர், காயனர், பித்ருபக்தர்களாகிய மாதர அரசர்கள் முக்கியமானவர்கள். இவர்கள் கி. பி. 420 முதல் 615 வரையில் ஆண்டார்கள். கலிங்கத்தில் கிழக்குக் காங்க அரசர்களும் சைலோத்பவ, நந்திவர்த்தன அரசர்களும் நளராஜர்களும் 5,6-ஆம் நூற்றாண்டுகளில் ஆண்டதாகத் திருஷ்டாந்தங்கள் கிடைத்துள்ளன. இவர்கள் அனைவரும் பௌத்த, சைவ, வைணவ மதத்தினராய்ப் பல கோவில்களையும் அக்கிரகாரங்களையும் உண்டுபண்ணினார்கள். இவர்கள் அனைவரும் பழைய ஆந்திர வம்சங்களிலிருந்து பிரிந்தவர்களே என்பதில் சந்தேகமில்லை. இவர்கள்

---

1. நம் நாட்டை 4-ஆம் நூற்றாண்டு முதல் ஆண்டு வந்த பல்லவர்கள் ஆந்திரர்களே என்று கே. ஆர். சுப்பிரமண்யஐயர் தம் நூலில் நிச்சயப்படுத்தி இருக்கிறார். வின்ஸென்ட் ஸ்மித் துரை அவர்களும் அப்படியே அபிப்பிராயப்படுகிறார். ஸ்ரீ சிலுகூரி வீரபத்திரராவ் பந்துலு இவர்கள் அந்நிய நாட்டினர் மெல்ல மெல்ல ஆந்திரர்களாகிவிட்டனர் என்கிறார்.

எந்த எந்தக் குலத்தவர்கள் எந்த எந்தப் பெயருடன் மாறியிருக்கிறார்கள் என்பது விளங்கவில்லை. இக்ஷ்வாகு வம்சத்தார், பல்லவர், சைலோத்பவர்கள் இவர்களுடைய ஜாதிகளைக் கண்டுபிடித்துவிட்டார்கள். மற்றவர்களுடைய விவரம் இதுவரை தெரியவில்லை.

## ஆந்திரர்கள் கர்மத்தில் ஈடுபட்டவர்கள்

**வே**தகாலத்திலிருந்து ஆந்திரர்கள் ஆரியருடன் கலந்து வந்ததால் அவர்கள் ஏற்படுத்திய யாகாதி கர்மங்களைச் செய்து வந்து, 'கர்மபரர்' அதாவது கர்மங்களைச் செய்பவர்கள் ஆனார்கள்.

அவர்களில் சூரியனைப் பூசித்து அதற்கு உரிய சின்னங்களை அணிந்தவர்கள் சூரிய வம்சத்தவர்; சந்திரனைப் பூசித்து அதற்கு உரிய சின்னங்களை அணிந்தவர்கள் சந்திரவம்சத்தவர் என்ற பெயர்கள் வழங்கியதாகத் தெரிகிறது. சூரிய வம்சத்தவனாகிய வீரபுருஷதத்தன் கி. பி. மூன்றும் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பெஜவாடா பிரிவை ஆண்டு தன் தேசத்துக்குக் கம்மகராடம் என்ற பெயர் இருப்பதாகப் பேதவோலு சாஸனத்தில் எழுதி வைத்தான். அப்போது வழங்கி வந்த சம்ஸ்கிருத, பாலி பாஷைகளில் ரகரமெய் குறைந்து அப்படி எழுதியிருந்தாலும் பின்பு கர்மகராடம் என்று சொல்லிக்கொண்டு வந்ததற்குத் திருஷ்டாந்தங்கள் இருக்கின்றன. நாலாம் நூற்றாண்டுப் பல்லவ அரசர்கள் ஆந்திரதேசத்தை ஆண்டபொழுது கர்மகராடம் என்று அழைத்ததாகச் சாஸனதிருஷ்டாந்தங்களுடன் சரித்திராசிரியர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

7-ஆம் நூற்றாண்டில் இரண்டாம் புலிகேசியின் கொப்பரம் தாமிர சாஸனத்திலும் 8-ஆம் நூற்றாண்டில் ஆண்ட 2-ஆம் ஜயசிம்மனுடைய பெணுகபறு என்ற ஊரின் தான சாஸனத்திலும் கர்மராஷ்டிரம் என்று எழுதப்பட்டிருக்கிறது. இவர்கள் சாளுக்கிய மன்னர்கள். கர்மக ராஷ்டிரமானது கம்ம ராஷ்டிரமாகியது. அதற்குச் சேர்ந்த பாகங்களைக் கம்ம நாடு, வெலநாடு என்று பின் வந்த மன்னர்கள் குறித்து வந்தார்கள்.

## கம்ம ராஷ்டிரம் கம்ம நாடானது

அப்படி எந்தக் காலத்திலிருந்து வழங்கிவந்தார்கள் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. ஆந்திர சோழ மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் கம்ம நாடு என்று விவகரித்ததாகச் சான்றுகள் கிடைக்கின்றன. சாலிவாகன சகம் 1056-இல் இத்தேசத்தை ஆண்ட கொணிதென சோழன் (காமசோழன்) கொட்டிய தொன என்னும் ஊரில் ஸ்ரீ சங்கரஸ்வாமி கோயிலில் எழுதிய சாஸனத்திலும், ஷை சகம் 1070-இல் அவ்விடத்தில் திரிபுவனமல்ல சோழன் எழுதிய சாஸனத்திலும் அக்காலத்தில் வேறிடங்களில் எழுதப்பட்ட சாஸனங்களிலும்[1] அவர்கள் ஆட்சி செய்த ராஜ்யத்தைக் கம்மநாடு என்றே விவகரித்ததாகத் தெரிகிறது. இந்த ராஜ்யத்துக்கு நரஸராவ் பேட்டைத் தாலுக்காவிலுள்ள கொட்டிய தொன என்னும் ஊர் தலைநகரமாக இருந்தது.

கம்மராஷ்டிரம் என்னும் பதம் இதற்கு முந்தியே வழக்கத்தில் இருந்தது. 6-ஆம் நூற்றாண்டில் விஷ்ணுகுண்டி அரசர்களில் ஒருவராகிய 3-ஆம் மாதவவர்மாவின் புலம்பூர் சாஸனத்தில் கம்ம ராஷ்டிரத்தைச் சேர்ந்த குனூரில் உள்ள சிவசர்மா என்னும் பிராம்மணனுக்குத் தானம் கொடுத்ததாக எழுதியிருக்கிறது.

கம்மவாருடைய ராஷ்டிரம் ஆனதால் கம்மராஷ்டிரம், கம்ம நாடு என்னும் பெயர்கள் ஏற்பட்டிருக்கக் கூடாதா என்னும் கேள்வி எழலாம். அதைப்பற்றிப் பிறகு ஆலோசிப்போம்.

கம்மவார் என்னும் பெயர் பழைய நூல்களில் எவ்விடத்திலும் காணப்படவில்லை; 15-ஆம் நூற்றாண்டுவரை எந்தச் சாஸனங்களிலும் இல்லை. 10, 11-ஆம் நூற்றாண்டுகளில் எழுதிய சாஸனங்கள் சிலவற்றில் மட்டும் கம்மகுலப் பிராம்மணர்கள், கம்ம கோமட்லு இவர்களைப் பற்றிக் காணப்படுகின்றன.

தௌர்வாச தேவீ புராணத்தில் எழுதப்பட்டிருக்கிற கம்ரராஜன் சந்திர வம்சத்தவன். இவன் சந்ததியார் கொஞ்ச காலம் ஆந்திர தேசத்தை ஆண்டதாகத் தெரிகிறது. பிற்காலத்தில்

---

1. J. A. H. R. S., Vol. IX & மங்கி யுவராஜா எழுதுவித்த சந்தலூர் சாஸனத்திலும் கம்ம ராஷ்டிரம் என்று காணப்படுகிறது.

அந்த வம்சத்தில் பிரதாபருத்திரன் பிறப்பான் என்று எழுதியிருப்பதைப் பார்த்தால் இப்புராணம் பிரதாபருத்திரன் காலத்திலோ, பின்போ கற்பனை செய்து எழுதியிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. 2-ஆம் பிரதாபருத்திரன் சந்திர வம்சத்தானும் கம்ம குலத்தானும் ஆனதால் அப்படி எழுதியிருக்கலாம்.

பிரதாபருத்திரன் கம்மவார்களுடைய முன்னோர்களில் ஒருவன் என்பதற்குப் பின்னால் திருஷ்டாந்தம் தெரிவிக்கப்படும். இந்த நூல் பூராவும் கற்பனையே என்று எழுதும் சரித்திரக்காரர்கள் கொள்கையை நான் ஒப்பவில்லை. இதிலும் கொஞ்சம் உண்மை இருக்கிறது என்பதைப் பின்னால் சொல்லுகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றொரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். சரித்திரங்களில் காணப்படும் சாளுக்கியர், கதம்பர், பல்லவர் என்ற பெயர்களே கற்பனையாக இருக்கலாம் என்று சரித்திரக்காரர்கள் சந்தேகப்படுகிறார்கள். அக்காலத்தில் இது போன்ற பெயர்களை வைத்துப் புராணம் எழுதுவது வழக்கமாக இருந்திருக்கலாம். ஏனென்றால் கம்ராஜன் என்ற பெயர் மற்ற நூல்களிலும் சாஸனங்களிலும் காணப்படவில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் உண்மை என்று சொல்லத்தான் வேண்டும். பிரதாபருத்திரன் சந்திர வம்சத்தவன், கம்மவாரின் பூர்விகன் என்று அறிந்தவர்களே இப்புராணத்தை எழுதி வைத்தார்கள் என்று சொல்லவேண்டும். அதனால் கம்ம நாடு, கம்ம ராஷ்டிரத்தையொட்டி வந்ததென்பதை இப்போது நம்புவோம்.

கம்மவார் என்னும் பெயர் எப்படி வந்தது என்பதை பின்பு விவரிப்போம். கம்மராஷ்டிரத்தில் கம்மநாடு ஒரு பாகமும் வெலமநாடு வேறொரு பாகமுமாக இருந்தன. கம்மராஷ்டிரத்திலிருந்து இதைப் பிரித்ததால், வெல (வெளி) நாடு[1] என்னும் பெயர் வந்திருக்கும்.

---

1. காகணி, கணபதி ருத்ராம்பா இவர்கள் காலத்து மால்காபுரச் சாஸனத்தில் தெளிவாக 'வெளிநாடு' என்றே எழுதியிருக்கிறது. பௌத்த ஜைன மதங்கள் பரவிய பாகத்தை வெளிநாடாக்கி இருக்க வேண்டும். பின்பு இது 'ஆறுவேல' ஆயிற்று.

# 3. சூரிய வம்சத்துப் பல கிளைகள்

ஆந்திரர்களுக்குள் 'ரட்டுலு' என்ற க்ஷத்திரியர்கள் சூரிய வம்சத்தாராகச் சொல்லப்பட்டு வந்திருக்கிறார்கள் என்று முன்பே சொல்லியிருக்கிறேன். காலக்கிரமத்தில் இந்த வம்சத்தில் பல கிளைகள் ஏற்பட்டன. இக்ஷ்வாகு, பூகிய, குலகதனிக, ஹிரண்யக, சகர வம்சங்கள் இதன் கிளைகளாக 3-ஆம் நூற்றாண்டில் பிரிந்தன என்று நாகார்ஜுன மலைக்கருகே கிடைத்த இவ்வம்சத்தாரின் சாஸனங்களின் மூலம் தெரியவருகிறது. இவர்களுக்குள் உறவுமுறை இருந்ததாகவே தெரிகிறது.

மேலும் இச்சூரிய வம்சத்தில் சலிகி, தலவார என்னும் கிளைகள் இருப்பதாக வேறு சாஸனங்களால் தெரிந்துகொண்டிருக்கிறோம். 'மகாதலவாரி' என்னும் விருதுப்பெயர் கொண்ட அரசர்களும் பூகிய வம்சத்தில் இருக்கிறார்கள்.

மேலே சொல்லப்பட்ட பிரிவினர்கள் எல்லோரும் இப்போது எவ்வெப் பெயர்களுடன் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வது சாத்தியம் இல்லை. 3-ஆம் நூற்றாண்டில் இக்ஷ்வாகு வம்சத்து வீர புருஷதத்தன் ஆட்சியில், பூகிய வம்சத்து வாசிஷ்ட புத்திர மகாகந்தஸ்ரீ, கண்ட சகராங்கன், மகாதலவாரி விஷ்ணு ஸ்ரீ, ஹிரண்யக வம்சத்தானாகிய கந்தசலிகி ரெம்மனகுடு, தனக குடும்பத்துக் கந்த விசாகான்னகன் ஆகியவர்கள் பிரசித்தி பெற்ற சேனாபதிகளும் அரச பந்துக்களுமாக இருந்தனர். இவ்விஷயம் நாகார்ஜுன மலைச் சாஸனத்தால் வெளிப்படுகிறது.

கி. மு. 6000-க்கு முன் இச்சூரிய வம்சத்தில் பல கிளைகள் பிரிந்தன என்பதில் ஆச்சரியம் இல்லை.

## சூரிய வம்சத்தார் சோழர்களாதல்

கும்மநாட்டிலே அரசாட்சி செய்த சூரிய வம்சத்தவர்களும் காஞ்சிபுரம் முதலிய தமிழ் நாடுகளில் ஆண்ட சூரிய வம்சத்தவர்

களும் 5 முதல் 12-ஆம் நூற்றூண்டு வரையில் தம்மைச் சோழ அரசர்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். இதற்குப் பல சாஸனங்களும் சான்றுகளும் கிடைத்திருக்கின்றன.[1] இவ்வம் சத்து மூலபுருஷனை கரிகாலசோழனுடைய தகப்பனார் சடைச் சோழன் என்றும் (உருவப் பஃறேர் இளஞ்சேட்சென்னி) இந்தச் சோழன் அயோத்தியைச் சேர்ந்தவன் என்றும் ஒரு சாஸனத் தால் தெரிகிறது. இவர்கள் சோழவாடி என்னும் பிரதேசத்தில் இருந்து சோழநாட்டை ஆண்டதால் சோழர் என்று பெயர் வகித்ததாகத் தெரிகிறது. வேதகாலத்தில் சோழர் என்னும் பெயர் இருந்ததாகத் தெரியவில்லை.

வால்மீகி ராமாயணத்தில் ஆந்திரர்களையும் சோழர்களையும் பற்றிக் கிஷ்கிந்தாகாண்டம் 41: 13-இல் 'ததைவாந்த்ராஶ்ச, புண்ட் ராஶ்ச பாண்ட்யான் சோளாம்ஶ்ச கேரளான்' என்று சொல்லு கிறார். இதனால் ராமாயண காலத்திலேயே சோழதேசத்தாரைச் சோழர்கள் என்று அழைத்ததாக அறிந்துகொள்ளலாம்.

கி. பி. சுமார் 5-ஆம் நூற்றூண்டில் சோழவாடியில் இருந்த கரி கால வம்சத்தார் சோழதேசத்துக்குப் போய்ச் சோழர்கள் என்ற பெயரைக் கௌரவமாக ஏற்றுக்கொண்டார்கள் என்று தோன்று கிறது. ஆந்திரதேசத்தின் நடுப்பாகத்துக்கு வந்த சோழர் களுக்கும் சோழநாட்டுச் சோழர்களுக்கும் மூலபுருஷன் கரிகாலனே, ஆனதால் அவர்கள் அனைவரும் ஒரே இடத்தில் பிறந்து வளர்ந்து பிரிந்து வாழ்ந்ததாகக் காணப்படுகிறது. பாண்டிய, சோழ, சேர, கோலு ஜாதியார்கள் துஷ்யந்த னுடைய வம்சத்தவர் என்று அக்கினி புராணமும் ஹரிவம்சமும் சொல்லுகின்றன. அசோகசக்கரவர்த்தியின் 13-ஆம் சிலா சாஸனத்திலும் ஆந்திரர், சோழர் என்னும் கிளைகளைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது.[2] சோழர்கள் தாமிரபர்ணிக் கரையில் வசித்தவர்கள் என்று இதில் எழுதப்பட்டிருக்கிறது. கி. மு. பல நூற்றூண்டுகளுக்கு முன்பே சோழர்கள் என்று அழைக்கப்பட்ட

1. S. I. I. vol. 1-IV.
2. Sri R. Bandarkar's the early history of India, & கலிங்க தேச சரித்திரம், பக். 22. அநுபந்தம்.

இவ்வம்சத்தாருக்கு இப்பெயர் வந்ததன் காரணம் தெரியவில்லை. சோழ அரசர்கள் அனைவரும் சூரியவம்சத்தார்கள் என்றே சாஸனங்களில் எழுதிக்கொண் டிருப்பதாலும் இவர்களில் பலர் ஆந்திரசோழர்களாக இருப்பதாலும் இவர்கள் முதலில் ஆந்திரர்களாக இருந்திருக்கலாமென்று நினைக்க இடம் இருக்கிறது. இதற்கு வேறொரு திருஷ்டாந்தமும் காணப்படுகிறது.

நாகார்ஜுனமலையில் கிடைத்த இக்ஷ்வாகு வம்சத்தவருடைய சிலாசாஸனங்கள் மூலம் சூரியவம்சத்தவர்கள் சிங்க இலச்சினை (ராஜமுத்திரை)உள்ளவர்கள் என்று தெரிகிறது.இந்த முத்திரையே ஆந்திரசோழர் சாஸனங்களில் காணப்படுகின்றது.

ரேநாட்டு மேலபாடு என்னும் ஊரின் சாஸனத்தை எழுதிய புண்ணியகுமாரசோழன் ரேநாட்டுச்சோழர்களுக்கு மூலபுருஷன் என்று சரித்திரக்காரர்கள் நம்புவதாலும் ஆந்திரசோழர்கள் சிங்க இலச்சினை உள்ள இக்ஷ்வாகு வம்சத்தினர் என்பதே உறுதிப்படுகிறது.

வெலநாட்டுச் சோழரைத்[1] தவிர்த்து, ஆந்திரசோழர்கள் அனைவரும் காசியப கோத்திரத்தார் என்றும் சூரிய வம்சத்தினர் என்றும் கரிகாலன் சந்ததியார் என்றும் தங்கள் சாஸனங்களில் சொல்லிக்கொள்வதாலும் இதில் பொய் இருக்காது.

கி. பி. 7-ஆவது நூற்றாண்டில் புண்ணியகுமாரனுடைய மாலெபாடி சாஸனத்திலும் கரிகாலன் தினகரகுல மன்னன் என்று எழுதப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டுச் சோழர்களும் சூரிய வம்சத்தவர்கள்; கரிகாலன் சந்ததியார் காசியப கோத்திரத்தார் என்று சொல்லிக்கொண்டார்கள். ஆனால் சிங்க இலச்சினைக்குப் பதில், தாங்கள் வேறு கிளை என்று காண்பிக்க வியாக்கிரம் அதாவது புலி இலச்சினை பொறித்துக்கொண்டார்கள். முன் சொன்னவர்களுடைய மூலபுருஷர்களாகிய இக்ஷ்வாகு வம்சத்தார் சிங்க இலச்சினை பொறித்துக்கொண்டிருக்க இவர்கள் அதை மாற்றிக்கொண்ட காரணம் தெரியவில்லை; காஞ்சிபுரம் வந்த பின் ஏற்படுத்திக்கொண்டதாக ஊகிக்க இடம் இருக்கிறது.

---

1. See J. A. H. R. S. Vol. X, pp. 25-26.

5-ஆம் நூற்றாண்டின் காலத்தவை என்று நினைக்கும் சில தமிழ் நூல்களிலும் கரிகாலன் சூரிய வம்சத்தவன் என்றே சொல்லப் பட்டிருக்கிறது.

சோழர்கள் ஆந்திரர்களிலிருந்து வந்தவர்களே என்பதற்கு மற்றோர் ஆதாரமும் காணப்படுகிறது. வேதகாலத்தில் ஆந்திரர் கள் என்று சொல்லிக்கொண்டவர்களிலிருந்தே இக்காலத்துத் தெலுங்கர், சில தமிழர், கன்னடர், மகாராஷ்டிரர், மலையாளத் தார் எல்லோரும் உற்பத்தியானதாகப் பழைய மொஹெஞ்ஜ தாரோ - ஹரப்ப லிபி சாஸனத்தை ஆராய்ந்து அதற்கென்றே ஒரு புத்தகம் எழுதிய காள்ளகூரி சூரியநாராயண அபிப்பிராயப் படுகிறார். ஈசுவரனும் ஆனிபீ' பாரதியில், 'அகதன கர சாஸனம்' என்ற வியாசத்தில் அவர் எழுதியவற்றை இங்கே எழுதுகிறேன்:

"மொஹெஞ்ஜதாரோ - ஹரப்ப லிபியை விஸ்தாரமாய் ஆராய்ந்தேன். இந்த லிபியை உபயோகித்த ஆந்திரர்களின் இக்காலத்துச் சந்ததியாராகிய சில தெலுங்கர், சில மகாராஷ்டிரர், சில கன்னடர், சில தமிழர், சில மலையாளிகள் ஆகியோர்கள் இப் பொழுது எந்த ஜாதி, பாஷைகளை உடையவர்களாய் இருந்தாலும் பூணூல் அணிந்து காயத்திரி ஜபிக்கும் ஹிந்துக்கள் அனைவரும் ஆந்திரர்களே. மொஹெஞ்ஜதாரோ-ஹரப்ப லிபியில் தெலுங்கு மகாராஷ்டிரப் பெயர்களும் பேச்சும் எனக்குக் காணப்பட்டன. அதனாலேயே அப்பாஷை ஆந்திரம் என்று சொல்ல ஆதாரம் கிடைத்தது." - வேதங்களை உண்டாக்கிய ஆரியருக்குப் பாஷை எழுத்துக்கள் உண்டாகும் முன்பே இந்த ஆந்திர பாஷை ஏற்பட்ட தென்று இவர் அபிப்பிராயப்படுகிறார்.

இந்த ஹரப்ப லிபி ஆந்திரரின் பாஷையாக இருந்ததென்பது ஆந்திரர் கேட்டு மகிழவேண்டிய விஷயம். இதுவரை கிடைத்த சாஸன எழுத்துக்களில் எல்லாம் இதுவே மிகவும் பழைமை யானது.

ஐதரேயப் பிராம்மணத்தில் ஆந்திரர் பெயர் மட்டும் இருந்து, திராவிட, கன்னட, மகாராஷ்டிரரின் பெயர்கள் இல்லாதிருப்ப தாலும் ஆராய்ச்சியாளர்களுடைய அபிப்பிராயத்தை அநுசரித் தும் ஆந்திரரிலிருந்தே மற்ற ஜாதிகள் உண்டானதாக நாம் நம்ப

லாம். இதனால் காஞ்சிபுரச் சோழர்கள் ஆந்திரர்களா தமிழர்களா என்னும் சந்தேகம் தீருகிறது. அவர்களும் சூரிய வம்சத்து ஆந்திரர் இனத்தவரே என்று நம்பலாம். பஞ்சத் திராவிடர் என்பது இன்று தமிழர், கன்னடர், ஆந்திரர், மகாராஷ்டிரர், குஜராத்தியர் ஆகியவர்களைக் குறிக்கிறது. அதுவும் இவ்விஷயத்தை உறுதிப்படுத்துகிறது. இப்படியே, 'ராத்' துரை திராவிட சப்தத்துக்கு உரையெழுதும் சம்ஸ்கிருத நிகண்டில் எழுதியிருக்கிறார். பஞ்சத் திரமிளாதிபதி என்னும் சொல்லைக் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில் கல்வெட்டிலும் உதாரணம் காட்டியிருக்கிறது. ராஜேந்திரசோழன் பஞ்சத் திரமிளாதிபதி என்று சொல்லப்படுகிறார். ஆந்திரசோழர்களும் தமிழ்ச்சோழர்களும் பந்துக்கள் என்பதற்கும் இவர்கள் ஆந்திரர்களே என்பதற்கும் அவர்களிடையே சம்பந்தம் இருந்ததே சாட்சி.

இந்தச் சோழர்களில் சிலர் மேற்கு ஆசியாவுக்குச் சென்று அங்கே சமுத்திரக்கரையில் சால்டியான தீவை நிருமித்ததாக வுகிக்கிறார்கள். சோழர்கள் ஆந்திரரிலிருந்து வந்து துணிவும் வீரமும் உடையவர்களாய் ஆசியாவின் வேறு பாகங்களிலும் சென்று ஆண்டார்கள் என்பதனால் நாம் பெருமை கொள்ள வேண்டும்.

கி. பி. 11, 12-ஆம் நூற்றாண்டுகளில் சந்தவோலு என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட வெலநாட்டுச் சோழர்கள் தங்களைச் சந்திரவம்சத்தார் என்று சொல்லிக்கொண்டதாகச் சாஸனங்களால் தெரிகிறது.[1] எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும்போது சூரிய, சந்திர வம்சத்தவர்களையே சோழர்களென்று குறித்ததாக நாம் தெரிந்துகொள்ளலாம். சந்திர வம்சத்துச் சாளுக்கிய மன்னர்களும் - குலோத்துங்க சக்கரவர்த்தி காலத்திலிருந்து (11-ம் நூற்றாண்டு)—'சோழர்கள்' என்னும் பட்டத்தைத் தாங்கியதால் சாளுக்கியசோழர்கள் என்று அவர்கள் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இந்தச் சாளுக்கியர்களுடைய ஆட்சிக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்களும் சந்திரவம்சத்துப் பிரிவினருமான ஹைஹய மன்னர்கள் (கோன நாட்டரசர்கள்)

1. S. I. I. Vol. IV, pp. 239 - 240. (A.R. No. 280-81-1892)

கூட 11, 12-ஆம் நூற்றுண்டுகளில் ' சோழர் ' என்னும் பெயரை வைத்துக்கொண்டதாகப் பிட்டாபுரம், கந்திருப்ப சாஸனங்களால் தெரியவருகிறது. இந்தச் சூரிய, சந்திர வம்சத்துச் சோழஅரசர்களில் சிலர் தங்களைச் சதுர்த்தவம்சத்தார் என்று சொல்லிக் கொண்டதற்குக் காரணம் வரப்போகும் சரித்திரத்தைப் படித்தால் தெரியும்.

தஞ்சை ஆந்திர நாயக்க மன்னர்கள் சரித்திரத்திலும் இத்தேசத்துக்குச் சோழதேசம் என்று பெயர் வந்ததற்குக் காரணம் எழுதப்பட்டிருக்கிறது.

சோழவாடியிலிருந்தும் அயோத்தியிலிருந்தும் வந்த ஆந்திரர்கள், கரிகாலன் காலத்தில் சிதைந்திருந்தவற்றை முறைசெய்ததாலும் இவர்களுக்குச் சோழர்கள் என்ற பெயர் வந்ததென்று நம்பவேண்டி இருக்கிறது.

பழங்குடிகளாகிய கள்ளர்களுக்கும் இவர்களுக்கும் சம்பந்தங்கள் காணப்படவில்லை. சோழதேசத்தைக் கைப்பற்றி ஆண்டவர்கள் சூரியவம்சத்தவர்களானதால் கள்ளர்கள் அவ்விடத்துப் பழங்குடிகளாக இருக்கவேண்டும்.

## சந்திரவம்சத்தின் பிரிவுகள்

சூரியவம்சத்துக் கரிகாலனுடைய சந்ததியார் எல்லோரும் வரிசையாகச் சோழர்கள் என்று சொல்லிக்கொண்டதைப் பற்றி இதற்கு முன் படித்தோம். இது 5-இலிருந்து 15-ஆம் நூற்றுண்டு வரையில் நடந்து வந்தது. இனிச் சந்திரவம்சத்தில் ஏற்பட்ட பிரிவுகளைப்பற்றித் தெரிந்துகொள்வோம்.

புராணங்களில் சொல்லியபடி சந்திரவம்சத்தில் யது, வ்ருஷ்ணி, போஜ, அந்தக என்ற பிரிவுகள் ஏற்பட்டன. இப்பிரிவுகளைப்பற்றிய சிலாசாஸனங்கள் கிடைக்கவில்லை. யதுவம்சத்தில் ஏற்பட்ட கிளைகளையே சாஸனங்களின் மூலம் சொல்லிக் கொண்டதாகத் தெரிகிறது.

ராஷ்டிரகூட அரசர்கள் யதுவம்சத்தவனுகிய சாத்யகி வம்சத்தார்களென்று தங்கள் சாஸனங்களில் எழுதிக்கொண்டிருக்கிறுர்கள். விஜயநகரத்து ஹரிஹரராயர் முதலியவர்கள்

தங்களை யதுவம்சத்திலிருந்து வந்தவர்களென்றே சொல்லிக் கொண்டார்கள். சாளுக்கியர்களும் சந்திரவம்சத்தவனாகிய உதயணன் குலத்தவர்கள் என்று கோனநாட்டரசர் சாஸனங் களின் மூலம் தெரிகிறது.[1] யதுவம்சத்தில் பிரிந்த ஹைஹய வம்சத்தார் என்றும் கோன நாட்டரசர்கள் சொல்லிக்கொண்டு வந்தார்கள்.

சந்திரவம்சத்திலிருந்து ஹைஹயவம்சம் உற்பத்தியான தாகப் புராணங்களும் வருணிக்கின்றன. சேதிதேசத்தை ஆண்ட காலசூர்ய அரசர்களும் கோனநாட்டரசர்களும் பல்நாட்டில் ஆட்சி செய்த அனுகுராஜன் முதலானவர்களும் தங்கள் தங்கள் சாஸனங்களில் ஹைஹய வம்சத்தினர் என்றே எழுதிக்கொண் டிருந்தார்கள்.

இவர்கள் அனைவரும் ஒரே வம்சத்தினரா அல்லது இவர் கள் அனைவருக்கும் மூலபுருஷன் ஒருவன்தானு என்பவற்றை அறியச் சரித்திர சம்பந்தமான ஆதாரம் இல்லை. ஆனால் எல்லோ ரும் க்ஷத்திரிய குலத்தார் என்பதில் ஆக்ஷேபம் இல்லை. கலிங்கதேசத்துக் காங்க வம்ச அரசர்களும் சந்திரவம்சத்தவர்கள் என்றே சொல்லிவந்தார்கள். இப்படி இன்னும் அநேகம் கிளைகள் இருக்கும். இவர்கள் எல்லோரும் இப்பொழுது எந்த எந்தப் பெயருடன் விவகரிக்கிறார்கள் என்று சொல்ல விரும் பினால் அது ஒரு தனிச் சரித்திரம் ஆகும். ஆகையால் இவ்விஷ யத்தை விட்டுவிடுகிறேன்.

இச்சந்திர வம்சத்தில் ஹைஹய வம்சத்தினர் என்று சொல்லி வந்தவர்களும் சாளுக்கியர் என்று சொல்லிக்கொண்டவர்களும் சூரியவம்சச் சோழர் என்று சொல்லிக்கொண்டவர்களுடன் அதிகமாகச் சம்பந்தம் செய்து ஒரு ஜாதியாகவே இருந்து வந்தார்கள். இச் சோழவம்சத்தின் மூலபுருஷர்கள் கரிகாலனும் தர்ஜயன் என்பவனுமே.

கம்மவாருக்கு இந்தச் சூரிய, சந்திரவம்சத்துச் சோழ, ஹைஹய, சாளுக்கியர்களே மூலபுருஷர்கள் என்பதற்குத் திருஷ் டாந்தங்கள் தருகிறேன்: முதலில் சோழவம்சத்தில் வந்த கரிகால

1. பிட்டாபுரம் கந்திருப்ப சாஸனம்.

னுடைய பிறப்பு, துர்ஜயனுடைய பிறப்பு முதலியவற்றை ஆராய்வது நம் கடமையாகும். கரிகாலன் சூரியவம்சத்தவன் என்பதற்குப் பல சாஸனங்களும் பழந் தமிழ்ச் சங்க நூல்களும் ஆதாரமாக இருக்கின்றன.[1] ஆகையால் துர்ஜயனைப்பற்றித் தெரிந்து கொள்வோம்.

## துர்ஜயன் யார்?

கி. பி. 11, 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் ஆந்திரதேசத்தை ஆண்ட பல அரசர்களும் அரச பந்துக்களும் தாங்கள் துர்ஜயனுடைய[2] வம்சத்தவர்களென்று தம்பட்டம் அடித்துக்கொள்வது போல் கல்வெட்டுக்கள் செய்திருக்கிறார்கள். இவ்வளவு அரசர்களுக்கும் மூலபுருஷனைச் சொல்லப்பட்ட இந்தத் துர்ஜய மகாராஜன் யார்? எந்த வம்சத்தவன்? என்பவற்றைத் தெரிந்து கொண்டாலன்றிக் கம்மவார் சரித்திரத்துக்கு மூலாதாரம் இல்லை. ஏனென்றால் கம்மவாரில் பலர் இந்தத் துர்ஜயனுடைய சந்ததிகளே.

சில புராணங்களில் சந்திரவம்சத்தில் ஒரு துர்ஜயராஜன் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் ஹைஹய வம்சத்துத் தாளஜங்கன் புத்திரனாகிய வீதிஹோத்திரனுக்குப் பேரன். 11 முதல் 13-ஆம் நூற்றாண்டுச் சாஸனங்களில் காணப்படும் துர்ஜயனும் இவனும் ஒரே வம்சத்தார் என்றோ அல்லது ஒருவர் என்றோ சரித்திரக்காரர்கள் சொல்லவில்லை. துரியோதனனுக்குத் துர்ஜயகுமாரன் என்ற மகன் இருந்ததாகக் காணப்படுகிறது. ஆனாலும் அதற்கும் சரித்திரத் தடை இருக்கிறது. நம் துர்ஜயனுடைய காலத்துச் சாஸனங்களோ சரித்திரமோ இல்லை. ஆதலால் அவனுடைய உண்மையான விருத்தாந்தத்தையும் குலத்தையும் நிர்ணயிப்பது கஷ்டம். அவன் லக்கதரா மண்டலத்தில் ஆட்சி செலுத்தியதாக அவ்வம்சத்தார் சிலர் நம்புகிறார்கள். பாரதி 10-ம் வால்யூம் 2-ம் பத்திரிகையில்

---

1. தென்னிந்தியச் சாஸனங்கள், தெலிங்கானா, நெல்லூர்ச் சாஸனங்கள், சிலப்பதிகாரம், பட்டினப்பாலை, புறநானூறு, புண்ணியகுமார சோழனுடைய 8-ஆம் நூற்றாண்டு 'மாலெபாடி' சாஸனம்.

2. S. I. I. Vol. IV.

வெளிவந்த வம்சக் கிளையில், 'சூர்ய குலாவதம்ஸ, ஹைஹய வம்சோத்தாரக, நரபால மகுடமணி காந்தாயுக்த, லக்கதரா பரிபாலனம் செய்த துர்ஜய மகாராஜன்' என்று எழுதியிருக்கிறார்கள். ஹைஹயவம்சம் சந்திரவம்சத்து உட்பிரிவானாலும் சந்திரவம்சமும் சூரியவம்சத்தில் அடங்கியதே என்று புராணங்கள் சொல்லுகின்றன. சில இடங்களில் இவர் எழுதியது போலவே ஹைஹயவம்சத்தைச் சூரியவம்சம் என்றே நினைத்து வந்ததற்குத் திருஷ்டாந்தங்கள் கிடைக்கின்றன.

கோனநாட்டு ஹைஹய அரசர்களின் மூலபுருஷனை வருணிக்கப்பட்ட ராஜபரேடு ஆத்திரேய கோத்திரத்தான் என்றும் ஸ்ரீ ராமனுடைய வம்சத்தான் என்றும் மாஹிஷ்மதிபுரத்தரசனாகிய ஹைஹய ராஜன் என்றும் சாளுக்கிய வீரபத்திர அரசனுடைய தாயாகிய அன்யமாம்பாள், பாலகொல்லு க்ஷீராராமேச்வரர் கோயிலில் நந்தி ஸ்தம்பத்தில் சாலிவாகன சகம் 1183-ஆம் வருஷம் ஒரு சாஸனத்தில்[1] எழுதுவித்திருக்கிறாள். அக்காலத்தில் ஹைஹய வம்சத்தினரைச் சூரியவம்சமென்றும் எழுதி வந்தார்கள்.

துர்ஜயனுக்குப் பின் பல தலைமுறைகள் கடந்தபின், 11-ஆம் நூற்றாண்டு முதல் எழுதிய சாஸனங்கள் சிலவற்றில் அவன் கரிகாலனுடைய வம்சத்தில் வந்தவனே என்றும் சூரியவம்சத்தவன் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. அவை கீழே குறிக்கப்படுகின்றன:

1. கி. பி. 1260-ஆம் வருஷம் காகதி கணபதிதேவ சக்கரவர்த்தியின் சேனாதிபதியாகிய திக்க சமூபதி எழுதுவித்த காரபாடு சாஸனத்தில் துர்ஜயன் சூரியவம்சத்தவன் என்றும் கரிகாலன் மரபில் வந்தவன் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. (எபிகிராபிகா இண்டிகா, வால்யூம் XVIII, 346-355.)

1. "ஸ்ரீகாந்த நாபி கமலாதஜ ஆவிராஸீத், தஸ்மாச்ச கச்யபமுனிஸ் தரணிஸ்ததோபூத்; யத்வம்ச கத்த ஜகத: ப்ரபுதாபிலாஷீ தேவோபி ஜன்மரஹிதோ ஜனி ராமசந்த்ர.

"தத்வம்சே ஜனி வல்லப: க்ஷிதிப்ருதா மாஹிஷ்மதீவல்லப: ப்ரக்யாதோ புவி கண்டபெண்டரேவ இத்யுத்தாமகீர்த்திக்ரம: தஸ்மாத் ராஜபரேடு பூபதிரபூதாத்ரேயகோத்ரோம்னதஸ் தத்புத்ரோஜனி பீமவல்லபக்ருப: ஸ்ரீஹைஹயாக்ரேஸர: (S. I. I. Vol. No. V. pp. 121.)

2. அதே நூற்றாண்டில் கி. பி. 1245-இல் இம்மடி தேவரட்டிக் கிரனுடைய பாகாலா சாஸனத்திலும் மேலே சொன்னபடியே எழுதப்பட்டிருக்கிறது.

3. சா. சகம் 1183-இல் காகதி கணபதிதேவ சக்கரவர்த்தியும் ருத்திராம்பாளும் எழுதுவித்த சாஸனம்; 4. இதே நூற்றாண்டில் காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் ஆலயத்தில் ஸாமந்த போஜன் எழுதுவித்த சாஸனம்.

மேல் இரண்டிலும் கரிகாலனுடைய பெயர்இல்லை. ஆனல் துர்ஜயன் சூரியவம்சத்தில் பிறந்ததாகவே எழுதியிருக்கிறது.

5. தெலிங்கான சாஸனங்களில் கூடூர்ச் சாஸனப் பகுதியிலும் துர்ஜயன், காரககாலன் என்னும் பெயர்கள் இருக்கின்றன. துர்ஜயவம்சத்தில் பிறந்த விரியால எர்ர மகாராஜனுடைய புத்திரனகிய பேதராஜனை பாஸ்கர அரசனகிய காகதி சக்கரவர்த்திக்குத் தத்துப் புத்திரனகக் கொடுத்ததாக எழுதப்பட்டிருக்கிறது. பாஸ்கரவிபு என்பது சிலர் சொல்லுகிறதுபோல் அரசனுடைய பெயர் அல்ல. காகதி சக்கரவர்த்தி சூரியவம்சத்தவர் ஆனதால் அப்படிச் சொல்லியிருக்கிறர்கள். இவர் சூரியவம்சமானதால் (அதே வம்சத்துத்) துர்ஜயவம்சத்துப் பேதராஜனைத் தத்து எடுத்துக்கொண்டதாகத் தெரிகிறது. இது மற்றச் சாஸனங்களைவிடப் பழையதானலும் வருஷம் குறிக்கப்படவில்லை.

6. மனுமசாகி கணபயராஜனுடைய அனுமஞ்சிபல்லெ சாஸனமும் 13-ஆம் நூற்றாண்டிலேயே எழுதப்பட்டது. துர்ஜய வம்சத்தவனகிய இவனைக் குறித்து 'தத்ராஸ்தி பாஹூஜ குலாபரணம்' என்று இதிலும் எழுதப்பட்டிருக்கிறது.

7. சாகிவம்சத்தினரின் சில சாஸனங்களில் துர்ஜய குலத்தவராகிய சாகிகள் மனுமகுலத்தைச் சேர்ந்தவர்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. இதனலும் துர்ஜயன் சூரியவம்சத்தவனென்று ஏற்படுகிறது- (இந்தச் சாகிவார் சாஸனங்களைப் Ins. 254, 257, 259, 273, 275, 279, 283, 284, 300, 301, 309, 319 of 1924 பார்க்கவேண்டும்.)

ஒருபுறம் இவ்வளவு சாஸனங்களும் துர்ஜயன் சூரியவம்சத்தவன் என்றும் சில கரிகாலனுடைய வம்சத்தவன்

என்றும் சொல்லுகின்றன. வேறு சில சாஸனங்களில் துர்ஜயன் நான்காம் வருணத்தவன் என்று எழுதப்பட்டிருக்கிறது. அவைகளில் சிலவற்றையும் இங்கே உதாரணம் காட்டுகிறேன்:

1. மல்யாலகுண்ட தண்டாதிபன் (சேனாதிபதி) எழுதுவித்த பூதபூர் சாஸனம்—சா. ச. 1181-ஆம் வருஷத்தில் எழுதியது (தேலிங்கானா சாஸனம், பக். 53).

2. ஸ்ரீகாகுளம், ஆலூரி போத்திநாயுடுவின் சாஸனம். காலம் தெரியவில்லை. (S. I. I. Vol. IV, பக். 317.) அநுபந்தம்.

3. பரிச்சேத பண்டய ராஜு எழுதுவித்த ஸ்ரீபீமேச்வராலய சாஸனத்தில் (S, I. I. Vol. IV, பக். 370) இவனும் தான் நான்காம் வருணம் என்றும் துர்ஜயன் குலத்தவன் என்றும் எழுதுவித்தான். இது சா. ச. 1205-இல் எழுதியது.

துர்ஜயனுடையவம்சம் என்று எழுதிக்கொண்டு, எந்த வருணம் என்று தெரிவிக்காத சாஸனங்கள் சில இருக்கின்றன. துர்ஜயனுடைய பெயரைச் சொல்லாவிட்டாலும் மற்ற விஷயங்களின் சம்பந்தத்தால் துர்ஜயனுடையவம்சம் என்று கிரகிக்கக்கூடிய சில சாஸனங்களும் இருக்கின்றன. இவற்றை எழுதியவர்கள் நம் ஆந்திர ராஜாக்களில் கொண்டபடமடிசீமை அரசர்களும் நதவாடிசீமை அரசர்களும் கோன கண்ட்ரவாடி சீமை அரசர்களும் ஆவர். இவை அதிகமாக இருப்பதால் புத்தக விரிவை அஞ்சி அவற்றை இங்கே சேர்க்கவில்லை. மேலே கண்ட எல்லோரும் ஒருவருக்கொருவர் பந்துத்வம் உள்ளவர்களே என்று சரித்திரம் வெளிப்படையாக உறுதிப்படுத்துகிறது. துர்ஜயவம்சத்தாருக்கும் சந்திரவம்சத்தாராகிய வெலநாட்டுச் சோழர்களுக்கும் சம்பந்தங்கள் இருந்திருக்கின்றன. இப்படி ஒன்றுக்கொன்று முரண்பட்ட ரீதியில் ஒரே நூற்றூண்டில் எழுதப்பட்ட சாஸனங்களில் சிலர் துர்ஜயனைச் சூரியவம்சத்தவன் என்றும் சிலர் சதுர்த்தவம்சத்தவன் என்றும் எழுதுவதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்வோம். துர்ஜயனுடைய சமகாலச் சான்றுகளாவது அவனுடைய சாஸனங்களாவது இதுவரையில் கிடைக்கவில்லை. இனிமேல் கிடைத்

தாலும் கணபதிதேவ சக்கரவர்த்தியும்அவர் சேனாதிபதியும் எழுதுவித்த சாஸனங்களை நம்பாதவர்கள் அவற்றை மட்டும் நம்புவார்கள் என்ற நிச்சயம் ஏது? 'சம்சயாத்மா விநச்யதி' என்றபடி அவர்கள் எப்பொழுதும் அவநம்பிக்கையோடு வருந்துவார்கள். இப்படிப்பட்டவர்கள் பிற்காலத்தில் வித்யாநாதன் எழுதிய பிரதாபருத்ர யசோபூஷணம் (தெலுங்கு)[1] என்ற நூலை மட்டும் ஏன் மதிக்கவேண்டும்? இதுபோன்ற ஆராய்ச்சிகளில் 'தெரியவில்லை' என்று விட்டுவிடாமல் சரித்திர ஆராய்ச்சியாளர் பலர் பல வழிகளில் ஆராய்ந்து, துர்ஜயவம்சத்தவர் சிலர் பெருமைக்காகவே சூரியவம்சத்தினர் என்று எழுதிக்கொண்டார்களென்று பிரசாரம் செய்யவும் துணிந்தார்கள்.[2] தம் சமகாலத்தவருடைய ஆக்ஷேபத்துக்கு இலக்காகும் பகிரங்க சாஸனங்களில் சாதாரணமாக யாரும் குலத்தை மறைத்து எழுதமாட்டார்கள் என்பதே என் அபிப்பிராயம். இதைப்பற்றி இப்படிச் சொல்வதைக் காட்டிலும் பொதுவாக எடுத்துக்காட்டுவது நியாயம் என்று தோன்றுகிறது. அக்காலத்தில் (13-ஆம் நூற்றாண்டு வரையில்) சூத்திரர்களுக்குத் தம் முன்னோர்களுடைய பெயரால் தேவாலயம் ஸ்தாபிக்கும் அதிகாரம் இல்லை:

ஸ்லோகம் :

"ஸ்த்ரீணும் அநுபநீதானும் சூத்ரானும் ச நரேச்வர,
ஸ்தாபனே நாதிகாரோஸ்தி விஷ்ணோர்வா சங்கரஸ்யச,
யச்சூத்ரஸ் ஸம்ஸ்க்ருதம் லிங்கம் விஷ்ணும் வாபி ஜபேன் நர:
இஹவாத்யந்த துக்கானி பச்யத்யர் முஷ்மிகேகிமு
சூத்ரோவா அநுபநீதோவா ஸ்த்ரியோவா பதிதோபிவா
கேசவம் வா சிவம்வாபி ஸ்ப்ருஷ்ட்வா நரகமச்னுதே"

---

1. இந்த நூலில், 'காகதிய வம்சம் (இது துர்ஜயன் வம்சம்) சூரிய சந்திர வம்சங்களை ஜயிக்கிறது. காகதியர் குலப்பெருமையை வளர்க்கும் எங்களால் சூரிய சந்திர வம்சங்களின் கீர்த்தி குறைந்தது' என்ற பொருள் கொண்ட ஸ்லோகம் இருக்கிறது. இது இரண்டாம் பிரதாபருத்திரன் காலத்தில் இயற்றப்பெற்றது.

2. சதுர்த்த வம்சத்தினர் என்று எழுதிக்கொண்டு மனுகுல (சூரியவம்ச) பிருதுகளை வகித்தவர் பலர் உண்டு- ரேசர்ல, பில்லலமர்ரி, பேத்திரெட்டி, கோனகன்ன ரெட்டி முதலிய பலர். (தெலிங். சாஸ. 30, 35, 37, 39, 40, 51, 159; ஆந்திரர் சரிதை 5-ஆம் பாகம், 502-ஆம் பக்கமும் பார்க்க.)

பிருகந்நாரதிய ஸ்மிருதியில் இந்தச் சுலோகம் காணப் படுகிறது. சதுர்த்தகுலத்தவர் என்றும் துர்ஜயவம்சத்தார்என்றும் எழுதிக்கொண்ட மல்யால குண்டய சேனாதிபதியின் பார்யை யாகிய குப்பாம்பாள் தன் நாயகன் பெயரால் லிங்கப் பிரதிஷ்டை செய்து பல பூமிகளைக் கொடுத்திருந்தாள். இப்படியே துர்ஜய வம்சத்தவர் அநேகர் சைவ, வைணவ தேவாலயங்களைத் தம்தம் வம்சத்தவர் பெயரால் ஸ்தாபித்து, அவற்றை எல்லா ஜாதியாரும் சேவிக்கும்படி செய்ததாகப் பல சாஸன திருஷ்டாந்தங்கள் இருக் கின்றன. விரிவை அஞ்சி இதில் எழுதவில்லை.

இதை விட்டுவிட்டு, தர்க்கத்துக்குச் சாதகமாக, கணபதிதேவ சக்கரவர்த்தியின் சேனாதிபதிகளுடைய சாஸனங்களையும் தள்ளி விடலாம் என்றாலும் அதற்கு முன்னரே எழுதப்பட்ட துர்ஜய வம்சத்தாராகிய சாகிவாருடைய சாஸனங்களில் தெளிவாக 'மனும குலத்தார்' என்று எழுதிக்கொண்டிருக்கிறார்களே, அதற்கு என்ன சொல்வார்கள்? இந்த 'ஸாகி' வம்சத்தாரின் சாஸனங்கள் எல்லாம் சா. ச. 1100 வது முதல் ஒரு நூற்றாண்டு காலம் வரையில் ஏற்பட்டவை. ஸாகி குலத்தார் இன்றைக்கும் க்ஷத்திரியர்கள் வம்சத்துக்கு உதாரணமாக—க்ஷத்திரியர்களாக இருக்கிறார்களல்லவா? குடிமெட்ட (கோயில்மேடு) ஸாகிகள் துர்ஜயவம்சத்தார் என்று ஸ்பஷ்டமாகச் சாஸனங்களில் சொல்லிக்கொண்டிருப்பதாலும் பல்நாட்டு ஸாகிகள் ஹைஹய வம்சத்தார் என்று சொல்லிக்கொண்டிருப்பதாலும் துர்ஜயவம்சத் தார் முதலில் சதுர்த்தர்கள் அல்லர் என்று தெரிகிறது. இவர்கள் சதுர்த்தவம்சம் என்று சொல்லிக்கொண்ட தரணிக்கோட்டை அர சர்களுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்ததாக நினைத்தால் அவர்களுடையது தனஞ்சய கோத்திரமாக இருக்கிறது. இந்தத் தனஞ்ஜய கோத்திரத்தார்கள் இப்பொழுது க்ஷத்திரியர்களில் இருக்கிறார்கள். நதவாடி சீமை அரசர்கள் ஏன் சதுர்த்தர்கள் என்று சொல்லிக்கொண்டார்கள் என்ற கேள்வி வரும். அவர்களும் மேலே சொன்ன வம்சங்களுடன் சம்பந்தம் செய்து வந்ததனால் அவர்களும் தனி ஜாதி அல்ல என்று தெரிகிறது. மேலும் இவ்வம்சத்தார் அனைவரும் சூரியவம்சத்தில் வந்த

கரிகாலன் வம்சத்தினர் என்று சொல்லிக்கொண்ட ஆந்திர சோழர்களுடனும் சாளுக்கியர்களுடனும் சம்பந்தங்கள் செய்து வந்ததைப் பார்த்தாலும் இவர்கள் முதலில் க்ஷத்திரியர்களாகவே இருந்திருக்க வேண்டும் என்பது திடப்படுகிறது. இவர்கள் எல்லோரும் க்ஷத்திரியர் அல்லர் என்றால் ஆந்திரதேசத்தில் பழைய காலத்து க்ஷத்திரியர்கள் யார் என்ற கேள்வி எழும். அதற்கு எந்தச் சரித்திரக்காரரும் பதில் சொல்லமாட்டார்கள். க்ஷத்திரியர்களே இல்லை என்பார்களா? இருப்பவர்களை இல்லை என்பார்களா? இவற்றையெல்லாம் பார்த்தால் துர்ஜயவம்சத்தவர் சூத்திரர்கள் அல்லர் என்பது தெளிவாகிறதல்லவா? வேறோர் ஆதாரத்தைக் கொண்டும் துர்ஜயன் சூரியவம்சத்தவனே என்று சொல்லலாம். இதை மறுக்கும் சரித்திரக்காரர்கள் அவர்கள் வாதிக்கும் விஷயத்தை அவர்களே ருஜுப்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கும். பல்நாட்டு சாகிவார் ஹைஹய வம்சத்து க்ஷத்திரியர்கள் என்று சொல்லிக்கொண்ட ரீதியிலும் சாகிவார் க்ஷத்திரியர்களே ஆவர்.

நான் மிக யோசித்து மேற்கூறிய இரண்டு சாஸனங்களும் உண்மை என்று தீர்மானித்தேன். இவ்விரண்டையும் எப்படிச் சேர்க்கவேண்டும் என்றால் துர்ஜயன் முதலில் சூரிய வம்சத்தைச் சேர்ந்த ஹைஹய வம்சத்திலாவது கரிகாலனுடைய வம்சத்திலாவது பிறந்திருக்க வேண்டும். ஆனால் அவனுடைய வம்சத்தார் பிறகு பௌத்த, ஜைன மதங்களில் சேர்ந்திருப்பார்கள். துர்ஜய வம்சத்தாராகிய காகதி பேதராஜு[1], ப்ரோலராஜு[1] இவர்கள் ஜைனமதத்தினரென்பது சரித்திரம் ஒப்புக்கொண்ட விஷயமே. ஜைனமதத்து 24 தீர்த்தங்கரர்களில் 22 பேர் இக்ஷ்வாகு வம்சத்தினர் என்றால் (ஆந்திரர் சரித்திரம் 5-ஆம் பாகம்) அக்காலத்தில் ஜைனமதம் சூரியவம்சத்தாரை எவ்வளவு தூரம் ஆகர்ஷித்திருக்கிறது என்பது தெரிகிறது. சந்திரவம்சத்தார்களென்று சில சாஸனங்களில்[1] சொல்லிக்கொண்ட வெலநாட்டு அரசர்களும் காகதியர்களைப் போலவே பௌத்த ஜைன மதங்களில் சேர்ந்திருப்பார்கள். சில சாளுக்கியர்களும் அப்படியே

1. S. I. I. Vol IV. pp. 140.

சேர்ந்திருப்பார்கள்.[1] இவர்கள் அனைவரும் சில நூற்றுண்டுகளுக்குப் பிறகு மறுபடி தலைதூக்கிய பிராம்மண, சைவ, வைஷ்ணவ மதங்களில் சேர்ந்திருப்பார்கள்.[2] காகதிய இரண்டாம் பேதராஜன் காலத்தில் காகதியர்களுக்குள் சைவமதம் புகுந்தது. அவனைச் சைவன் என்று சரித்திரக்காரர்கள் நினைத்தார்கள். பேதராஜன் கட்டிய பேதேச்வர ஆலயமும் சிவபுரம் என்னும் தீர்த்தமும் இதற்குப் பிரமாணமாக இருக்கின்றன. துர்ஜய வம்சத்தார் மறுபடியும் சைவ, வைணவ மதங்களில் சேரும் காலத்தில் பிராம்மண மதத்தில் ஜாதிப் பிரிவு மும்முரமாக இருந்திருக்கலாம். அதனால் பிற மதத்திற்கு மாறித் திரும்பியவர்களைச் சதுர்த்த வம்சத்தில் சேர்த்துக்கொண்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் தேவாலயங்கள் முதலியவற்றை ஸ்தாபிப்பதில் தடை செய்வதில்லை. அக்காலத்தில் அந்தமாதிரி சேவைகள் அவசியமாக இருந்தன. அந்தக் காரணத்தாலேயே அவர்கள் சில சாஸனங்களில் சதுர்த்தவம்சம் என்று எழுதிக்கொண்டிருக்கலாம். சிலர் பழமையான சூரிய சந்திர வம்சங்களை மட்டுமே சாஸனங்களில் எழுதியிருப்பர்.

அது உண்மையாயிருந்ததாலேயே பகிரங்க சிலாசாஸனங்களில் எழுதியிருப்பார்கள். சிலர் இந்த இரண்டு அர்த்தமும் உண்டாகும்படி எழுதிக்கொண்டிருக்கிறார்கள். ரேசெர்ல, பில்லலமர்ரி, பேத்திரெட்டி, கோன கன்னரெட்டி, ரேசெர்ல காமிரெட்டி, கோட்டரெட்டி, காமி ரெட்டி, வட்லூரி அரசனாகிய குண்டப்ப நாயகர் இவர்களைப்பற்றி எழுதிய சாஸனங்களில் மனுமகுலத்தார் சூரியவம்சத்தார் என்ற விருதுகளுடன் சதுர்த்த வம்சத்தார் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. தெலிங்கான சாஸனங்கள் 30, 35, 37, 39, 40, 51, 159

1. சா, ச. 644-ஆம் வருஷத்துச் சாளுக்கியர்களில் மூன்றும் ஜயசிம்மனுடைய காலத்தில் ஜைனக் கோயிலுக்கு அவனுடைய பாட்டி முசினிகொண்டா என்னும் கிராமத்தைத் தானம் செய்தாள். அக்காலத்தில் ஜைன, சைவ மதங்கள் சமமாகப் பார்க்கப்பட்டன.

2. ஆத்ரேய கோத்திரத்தில், சந்திரவம்சத்தில் பிறந்தவர்கள் என்று சொல்லிக்கொண்ட காங்க வம்சத்தா (அனந்தவர்ம சோழகங்க ராஜா முதலியவர்கள்) குடைய முன்னோர் அப்படிச் சொல்லிக்கொள்ளாதது வேறு மதத்தில் இருந்ததாலேயே. ஆனால் சிலர் நினைப்பதைப்போல் சந்திரவம்சம் என்று சொல்லிக்கொண்டதாக எழுத முடியாது.

பாருங்கள். இந்தக் காரணங்களால் சூரியவம்சத்தவர்களே மதம் மாறிய தோஷத்தால் சதுர்த்தர்கள் ஆனதாகச் சொல்வதற்குச் சந்தேகமில்லை. வெலநாட்டுச் சோழ அரசர்கள் சந்திரவம்சத்தார்கள் என்றும் சதுர்த்தவம்சத்தார் என்றும் இரண்டுவிதமாகச் சாஸனங்கள் எழுதுவித்தார்கள். இவர்களுக்கு மூலபுருஷன் மல்லவர்மா (கொண்டபடமடி ராஜுலு). மேற்கு மலைச் சீமை அரசர்களுக்கு மூலபுருஷன் புத்தவர்மா. ஆந்திரசோழ அரசர்களுக்குத் தாசவர்மா மூலபுருஷன். வர்மா என்ற பட்டம் கொண்டவர்களெல்லோரும் அக்காலத்தில் ஒரே குலத்தவர் - அதாவது க்ஷத்திரியர்களே. வெலநாட்டுச் சோழ அரசர்களும் தங்கள் குலத்தைப்பற்றி இரண்டு விதமாகச் சொல்லிக்கொண்டார்கள். அதுபோலவே துர்ஜயவம்சத்தார்களும் சொல்லிக் கொண்டார்கள் என்றும் இது மதமாற்றத்தால் வந்த தோஷம் என்றும் ஆதியில் துர்ஜயவம்சத்தார் க்ஷத்திரியர்களே என்றும் கிரகித்துக்கொள்ள வேண்டும்.

வர்மா என்ற பெயரை அக்காலத்தில் க்ஷத்திரியர்கள் மட்டுமே வைத்துக்கொண்டார்கள்.

## சோழர்கள் எல்லோரும் ஒரே வம்சத்தினரா ?

மேலே சொன்ன காரணங்களால் துர்ஜயனைச் சில சாஸனங்கள் சதுர்த்தவம்சத்தவனைச் சொன்னாலும் அவனுடைய வம்சத்தார்களும் சோழ பட்டம் தரித்தவர்களும் மேற்கு மலைச் சீமை அரசர்களும் கோன கண்ட்ரவாடி அரசர்களும் சூரியவம்சத்துக் கரிகாலனுடைய வம்சம் என்று சொல்லிக்கொண்ட ஆந்திர சோழர்களும் இவர்களுடைய உட்பிரிவுகளாகிய கம்மநாட்டு, ரேநாட்டு, பொத்தப்பிநாட்டு, நெல்லூர்ச்சோழர்களும் காஞ்சிபுரச் சோழர்களும் ஒரு ஜாதியார் என்றே நினைக்கவேண்டியிருக்கிறது. இவர்கள் வேறு வேறு இடங்களில் இருந்தாலும் ஒருவருக்கு ஒருவர் சம்பந்தம் செய்துகொண்டிருந்ததாகச் சரித்திரம் வெளிப்படையாகச் சொல்லுகிறது—ஆந்திரர்கள் சரித்திரத்தைப் பாருங்கள். இவர்களுடைய உறவுமுறைகளைப்பற்றிப் பின்னால் சொல்லுகிறேன். இதற்கு ஒத்து வரும் சில உதாரணங்களை இங்கே காட்டுகிறேன்:

சாளுக்கிய விக்கிரம சகம் 26-ஆம் வருஷத்தில், பூண்டூர் ஹல்லகரச, சோழ அரசன் பூண்டூரில் எழுதுவித்த சாஸனங்களில் 'அயோத்திய சிம்மாஸன', 'வராக லாஞ்சன' விருதுகளை எழுதிக் கொண்டிருக்கிறான். தெலிங்கானு சாஸனங்கள் பக்கம் 155. இவன் ஆந்திரசோழன். ஆனாலும் கரிகாலனுடைய வம்சத்தார்கள் என்று சொல்லிக்கொண்ட சோழ அரசர்களின் சந்ததியாயிருந்தும் அவர்களைப் போலவே சிங்க இலச்சினையாவது காஞ்சிபுரச் சோழர்களைப் போலப் புலி இலச்சினையாவது உபயோகிக்காமல் காகதியர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் உரிய வராகஇலச்சினையைத் தரிப்பானேன்? காகதியர்களும் இந்த வம்சத்தைச் சேர்ந்தவர்களானதால் அவர்களுடைய இலச்சினையையும் அயோத்தி சிங்காசன விருதையும் தரித்திருக்கலாம். காஞ்சிபுரச் சோழர்களுக்கும் தெலுங்குச்சோழர்களுக்கும் நிறையச் சம்பந்தங்கள் இருக்கின்றன. ஆந்திரசோழர்களுக்கு மூலபுருஷர்களில் ஒருவனகிய தெலுகு பிஜ்ஜன இரண்டாவது கரிகாலனுடைய வம்சத்தவன் என்று பல சாஸனங்கள் சொல்லுகின்றன. அவற்றைத் தள்ள வேண்டிய அவசியம் இல்லை.

## கம்மவார் கரிகால துர்ஜயவம்சத்தவர்கள்

இன்றைக் கம்மவார் துர்ஜயனுடைய வம்சத்தார்களும் கரிகாலனுடைய வம்சத்தார்களுமான சோழஅரசர்களின் சந்ததியார் என்பதற்கும் அவர்களுடைய சுற்றத்தார்கள் என்பதற்கும் இங்கே பிரமாணங்கள் காணப்படுகின்றன. இவற்றில் காண்பிக்கப்பட்ட சிலாசாஸனங்களின் நகல்கள் அநுபந்தத்தில் இருக்கின்றன. அவற்றைப் பாருங்கள். கரிகாலனும் துர்ஜயனும் சூரியவம்சத்தார் என்று முன்பே சொல்லியிருக்கிறேன்.

பிற்காலத்தில் துர்ஜயவம்சத்தார் சதுர்த்தர்களான விவரங்களைப் பிறகு எழுதுகிறேன்.

1. ஸ்ரீகாகுளம் ஸ்ரீ வல்லபசுவாமிக்கு ஆலூரி மல்லிநாயுடு மகன் போத்தி நாயுடு தானம் கொடுத்து எழுதுவித்த சாஸனத்தில்[1] தான் துர்ஜய வம்சத்தவன் என்றும் தன் வம்சம்

1. S. I. I. Vol IV, pp. 317.

சதுர்த்த வம்சம் என்றும் எழுதியிருக்கிறார்: அநுபந்தம் பார்க்க. இவருக்குப் 'பிடுவராதித்ய', 'சலமத்து கண்ட' முதலிய விருதுகள் உள்ளன. பிடுவராதித்ய என்ற விருது வெலநாட்டுச் சோழனாகிய இரண்டாம் மல்ல பூபாலனுக்கு உண்டென்று வேறு சில சாஸனங்களின்[1] மூலம் தெரிகிறது. சலமத்துகண்ட அல்லது சலமர்த்திகண்ட என்னும் விருதை, துர்ஜயவம்சத்துக் காகதீய அரசர்களும் சந்திரவம்சத்து வெலநாட்டு அரசர்களும் வைத்துக் கொண்டிருந்தார்கள். வெலநாட்டுச் சோழஅரசர்கள் தரித்த வேறு சில விருதுகளைக்கூட இவர் தரித்துக்கொண் டிருந்தார். இதனால் வெலநாட்டு அரசர்களும் காகதீயர்களும் ஒரே இனத்தவர் என்பதும் இவர் அந்த இனத்தைச் சேர்ந்தவர் என்பதும் தெரிகிறது. ஆலூரிவார் இப்போதும் கம்மவாரில் உளர். அவர்கள் துர்ஜய வம்சத்தவர்களே. ஆலூரிவாரில் ஆந்திர க்ஷத்திரியர்களும் உளர். அவர்கள் சதுர்த்தர்கள் அல்லர்.

2. சா. ச. 1043-ஆம் வருஷத்தில் ஸ்ரீமன் மகாமண்டலேசுவர எருவதொண்டய ராஜன், ஸ்ரீ பீமேசுவர ஆலயத்தில் எழுதுவித்த தான சாஸனத்தில்[2] தாம் சூரிய வம்சோத்பவன் என்றும் காசியப கோத்திரத்தவன் என்றும் கரிகாலன் சந்ததியைச் சேர்ந்தவனென்றும் இவர் எழுதிக்கொண்டார். இந்த எருவ வம்சத்தார் இன்றைக்கும் கம்மவாரில் எருவவார் என்று சொல்லப் படுகிறார்கள். இந்த வீட்டுப் பெயர் மற்ற வகுப்புக்களில் காணப் படவில்லை.

3. (எருவ) பக்திராஜகுமாரனை அனதேவ மகாராஜா சா. ச. 1326-ஆம் வருஷத்தில் ஸ்ரீ தக்ஷாராம பீமேசுவரார் ஆலயத்தில் எழுதுவித்த தான சாஸனத்திலும்[3] அவர் சூரிய வம்சத்தவர் என்றும் பக்திராஜகுமாரன் என்றும் பூர்ண சிங்காசனதீசன் என்றும் சோழவம்சத்தவன் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த அனதேவ மகாராஜருடைய வீட்டுப் பெயர் எருவவார் என்று அவருடைய மற்றொரு சாஸனத்தின் மூலம் தெரிகிறது.

1. S. I. I. Vol IV. pp. 405.
2. S. I. I. vol. IV, pp. 420.
3. S. I. I. vol. IV, pp. 474.

ராஜமகேந்திரம் மியூஸியத்தில் உள்ள தாமிர சாஸனம்[1] கடப்பை ஜில்லா தாள்ளப்ரொத்துட்டூரில் உள்ள ஆஞ்சநேயர் கோவில் சாஸனம் இவற்றிலும் சில தனிப்பாடல்களிலும் எருவ பீமராஜனைப்பற்றி எழுதும்போது இந்த வீட்டுப்பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலே சொன்ன பக்திராஜனுக்குக் கொள்பாட்டனாகிய ஒரு பீமராஜனைப்பற்றி ராஜமகேந்திரபுர சாஸனத்தில் வருணிக்கப்பட்டிருக்கிறது. மற்றொரு பீமராஜன் இவருக்குச் சகோதரன். இதில் இவர் இரண்டாமவர் எனலாம்.

4. இந்த எருவ அனதேவராஜன் சூரியவம்சத்தவனே என்பதற்கு ஸ்ரீ பீமேசுவர புராணத்தில் ஸ்ரீநாதகவி எழுதிய 'வேங்கி களிங்கலாதிகானின்னியு னெக்க நாண்ட-னேருவ பீம ந்ருபாலு தாடிகினி' என்ற தனிப்பாடலும் சான்றாகிறது.

'பானுமத் குல வீரபத்ரான்ன தேவேந்த்ர கர்வ ஸம்ரம்பம்பு கட்டி பெட்டி' ஸ்ரீநாத மகாகவி எதிர்க்கட்சி ரெட்டி ஸம்ஸ்தான கவியாக இருந்தபோதிலும் உண்மையை வெளியிட்டிருக்கிறார். இந்த வீரபத்திர ராஜன் அனதேவ சோழன் மகன். தந்தையும் மகனுமாகிய இவர்கள் சூரிய குலத்தவர் என்று எழுதியது கவனிக்கத்தகுந்தது. கம்மவாரில் எருவவார் வெகு காலமாகப் பிரசித்தி பெற்ற அரச குடும்பத்தினர் என்பது மேலே காட்டிய திருஷ்டாந்தங்களால் தெளிவாகிறது. இவர்கள் கரிகாலன் வழி வந்த சூரிய வம்சத்தவர்கள்.

5. எருவ மல்வி தேவ சோழன், காகதி ருத்ரமதேவி சக்கரவர்த்தினி காலத்தில் அவளுக்கு விரோதியானதால் அவள் தன் சேனாபதியாகிய அம்பதேவன் மூலம் படையெடுத்து மல்லி தேவனை வென்றதாக A. R. No. 268 of 1905-இல் உள்ள சாஸனத்தின் மூலம் தெரிகிறது. சோழப் பட்டத்துடன் சேர்ந்த இந்த வீட்டுப் பெயரைக் கவனிக்க வேண்டும். ஆந்திரசோழர்களில் மல்லிதேவன் என்ற பெயர் பலருக்கு இருந்திருக்கிறது. இவர்கள் ஓபிலி சித்தி தேவ சோழனது பூர்விகர்கள். இரண்டாம் பாகத்தில் இச்சரித்திரம் எழுதப்படும். மல்லிதேவ சோழன் இவர்கள் வம்சத்தவரில் ஒருவனே என்பதையும் இவனுடைய வம்சத்

1. J. A. H. R. S. Vol. II pp. 1.

தவரே இன்றைக் கம்மவார்களில் உள்ள எருவவார் என்பதையும் அறியலாம். இவர்களில் சிலர் ரெட்டிகளுடன் சம்பந்தம் செய்திருக்கிறார்கள்.[1]

6. சா. ச. 1158-ஆம் வருஷத்தில் விப்பர்ல அமரிநாயகன் பெஜவாடாவில் மல்லீசுவரருக்குத் தீபதானம் செய்து எழுதுவித்த தானசாஸனம்.[2] இதில் தாம் துர்ஜய குல விபூஷணன் என்று சொல்லிக்கொண்டார். இந்த விப்பர்லவார் இன்றும் கம்மவாரில் இருக்கிறார்கள் (அநுபந்தம் பார்க்க).

7. நதவாடி சீமையை ஆண்ட ஸாகி மன்மசாகி கணபதிராஜன் அனுமஞ்சினபல்லியில் எழுதுவித்த சாஸனம்-[3] தான் விப்பர்ல வம்சத்தவன் (விப்பர்ல கோத்திரமாயிருக்கலாம்) என்றும் பாஹுஜ குலாபரணன் என்றும் எழுதிக்கொண்டிருக்கிறான் (அநுபந்தம் பார்க்க). இந்த ஸாகிவாரும் விப்பர்ல கோத்திரத்தாரும் கம்மவாரில் இருக்கிறார்கள்.

8. ஸாகிவார் துர்ஜய குலத்தார் என்பதற்குப் பல சாஸனங்கள் இருக்கின்றன. அவற்றில் சாகி போதராஜு சாஸனம் ஒன்று. இது சா. ச. 1121-இல் எழுதியது (S. I. I. Vol. IV· P. 245). இவர்களில் சிலர் ஆந்திர க்ஷத்திரியர்களுக்கு மூலபுருஷர்களாகக் கருதப்படுகிறார்கள். கம்மவாரில் ஸாகிவார் நைஜாம் ராஜ்யத்தில் இருப்பதாகத் தெரிகிறது.

9. மல்யால குண்ட சேனாபதியும் அவருடைய மனைவி குப்பாம்பாளும் எழுதுவித்த பூதபூர், வர்த்தமானபுர சாஸனங்கள்.[4] இவற்றில் மல்யால அல்லது மல்லாலவார் துர்ஜயகுலத்தவர் என்றும் சதுர்த்தகுலத்தவர் என்றும் எழுதியிருப்பதோடு காகதீய அரசர்களும் அப்பேர்ப்பட்டவர்களே என்று எழுதியிருக்கிறார்கள். மல்யாலவாரு கம்மவாரில் மல்லெலவாராக இருக்கிறார்கள். உச்சரிப்பில் வீட்டுப்பெயர்கள் சற்று மாறியிருக்

1. அனவேமா ரெட்டி மகளை எருவ் பிமராஜு மணந்ததாகக் கோருமில்லி சாஸனங்களால் தெரிகிறது.

2. S. I. I. Vol. IV. பக். 248.

3. Ins. No. 283. of 1924.

4. தெலிங்கான சாஸனங்கள், பக். 53.

தாலும் இவர்கள் துர்ஜயகுலத்தவர் என்பதில் சந்தேகம் இல்லை. பிராம்மணர்களில் மல்யாலவாரு இருந்தாலும் அவர்கள் துர்ஜய குலத்தார் அல்லாததால் இது அவர்களுக்குப் பொருந்தாது. காப்பு மல்யாலவாரைப் பற்றிப் பின்னர் எழுதப்படும்.

10. சா. ச. 1037-ஆம் ஞு நல்லூரி வெல்லாலனி ஸ்ரீ தக்ஷா ராம பீமேசுவரர் கோயில் சாஸனத்தில்(S. I. I. Vol. IV, P. 464) நல்லூரிவார் பேரூர் நாட்டு க்ஷத்திரியர்கள் என்று தெளிவாக எழுதியிருக்கிறது (அநுபந்தம் பார்க்க). பேரூர், கோதாவரி ஜில்லா அமலாபுரம் தாலூக்காவில் உள்ளது. கம்மவாரில் இன்றும் நல்லூரார் இருக்கின்றனர். அதனால் இவர்கள் பேரூர் க்ஷத்திரியர்கள். சா. ச. 1022-ம் வருஷத்து மற்றொரு சாஸனத்தி லும் (S. I. I. Vol. IV, P. 338) குலோத்துங்க சோழ நல்லூரி ருக்கும என்பவளைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது. இந்த ருக்கும, குலோத்துங்கனுக்குச் சம்பந்தப்பட்டவளாதலாலும் பல நல்லூர்கள் இருப்பதாலும் இப்படி எழுதியிருக்கலாம். இந்த வீட்டுப்பெயருக்கு உரிய ஊர்ப்பெயர் குலோத்துங்க சக்கர வர்த்திக்குச் சம்பந்தப்பட்டிருக்கலாம். வெல்லாலனி சாஸனத் தால் நல்லூரிவார் க்ஷத்திரியர்கள் என்பது தெரிகிறதனால் இது மெய்யே ஆகும்.

11. வென்ன சோழ ராஜன் என்ற ஹைஹய வம்சத்து அரசன் மனைவி பிம்மலதேவி சா. ச. 1159-ஆம் ஆண்டில் ஸ்ரீ பீமேசுவராலயத்தில் எழுதுவித்த சாஸனத்தால் இவள் பெத முன்னூட்டிரெட்டி புத்திரி என்று தெரிகிறது. சோழ ராஜனை வென்னசோழன் என்று எழுதியிருக்கிறது. கம்ம வாரில் இப்போது இருக்கும் வென்னம்வார் வென்னசோழன் பெயரால் தம் வீட்டுப்பெயரைத் தரித்தனர் என்பதற்கு இடம் இருக்கிறது. ஏனென்றால் வென்னசோழன் சோழ சாளுக்கியர் உறவினன்; ஹைஹய வம்சத்தவன்; கோனநாட்டரசர்களில் சேர்ந்தவன். கம்மவாரில் 'கோன'வாரும் இருப்பதால் கோன நாட்டரசர்களும் கம்மவாரின் பூர்விகர்களே என்று சொல்ல இடம் இருக்கிறது. வென்னம்வார் ரேபல்லி தாலூக்காவில் பிர சித்தியாக இருக்கிறார்கள். ஹைஹயவம்சத்தரசர்கள் முறையே

கோன, வென்னம் என்ற வீட்டுப்பெயர்களைக் கொண்டிருப்ப தற்குச் சந்தர்ப்பம் உள்ளது.

(12) துர்ஜயவம்சத்தாரும் வல்லுட்ல கோத்திரத்தவர்களு மான ப்ரோல ரௌத்து (வீரன்) குமாரர்களான எக்கிநாயுடு, ருத்திரி நாயுடு, பினருத்திரி நாயுடு, போதி நாயுடு ஆகியவர்கள் காகதீய ருத்ரமதேவி சக்கரவர்த்தினிக்கு மெய்காப்பாளராக இருந்ததாகத் (E. R. எபிகிராபிகா ரிப்போர்ட் 1916, பக். 135) தெரிகிறது. இந்த வல்லவுட்ல அல்லது வல்லுட்ல கோத்திரத்தார் கம்மவாரில் வாசிரெட்டி, திவி, முப்பானேனி முதலிய வீட்டுப் பெயர்களுடையவர்களாக இருக்கிறார்கள். கோத்திரப் பட்டியலைப் பாருங்கள். வல்லுட்ல கோத்திரத்தார் ரெட்டிகளிலும் இருந்தாலும் ரெட்டிகள் துர்ஜயவம்சத்தவர் என்று சொல்லிக் கொள்ள ஆதாரம் இல்லாததால் இது அவர்களுக்குப் பொருந் தாது. ரெட்டிகள் மிகச் சில இடங்களில் தவிர நாயுடுப் பட்டம் ஏற்கவில்லை; ரெட்டிப் பட்டந்தான் வழக்கத்தில் இருக் கிறது. அதனாலும் மேலே சொல்லிய கோத்திரத்தார் கம்மவாரின் முன்னோர்களே என்று நினைக்க வேண்டும். இவர்களுடைய காலம் சா. ச. 1199. ஆகையால் உறுதியான பிரமாணம் உள்ளதே (Epcole 335 of 15 பார்க்க).

13. மல்யாலவாரு துர்ஜயவம்சத்தவர் என்பதற்கு வேறு சில ஆதாரங்களும் இருக்கின்றன. மல்யால காட்ட சமூபதி (சேனாபதி)யும் சௌட சேனானி (சேனாபதி)யும் கொண்டிபர்த்தி யில் எழுதுவித்த 12-ஆம் நூற்றாண்டின் சாஸனங்களில் மல்யால வாரு துர்ஜயவம்சத்தார் என்று விளக்கமாக எழுதப்பட்டிருக் கிறது (தெலிங்கானா சாஸன சம்புடம் 19, 42. பார்க்க).

14. தக்ஷாராம ஸ்ரீ பீமேசுவராலயத்தில் மல்லல வேமாத்ரி ரெட்டி எழுதுவித்த சாஸனத் (S. I. I. Vol. IV, P. 568) தில் 'மல்லல' பதத்தை வழங்கியிருக்கிறார். இதே இன்று 'மல்லெல' ஆக மாறிவிட்டதென்று சொல்லலாம். இவர் துர்ஜயவம்சத்தவன் என்றே எழுதிக்கொண்டார்.

15. ஸ்ரீரங்க மகாத்மியம் என்னும் நூலின் ஆசிரியனாகிய கட்டவரத ராஜேந்திரன் தான் தெலுங்கு பிஜ்ஜன வம்சத்தவ

னென்றும் அந்த வம்சத்து ஸ்ரீரங்கராஜுவுக்குப் பிறந்த கட்ட ஹரிதாஸ ராஜுவின் புத்திரன் என்றும் அதில் எழுதியிருக்கிறான். இது புத்தகமாகிக் காக்கிநாடா ஆந்திர பரிஷத் புத்தகாலயத்தில் இருக்கிறது. இந்தக் கட்ட வம்சத்தவர்கள் கட்டாவாராக அதிகமாகக் கம்மவார்களில் இருக்கிறார்கள். இவர்கள் 'வாசிரெட்டி'களுக்குப் பந்துக்கள். கட்டாவம்சத்தில் பிறந்த சியாமலாம்பாளை வாசிரெட்டி ஸ்ரீசைலபதி விவாகம் செய்துகொண்டதாக வாசிரெட்டி வம்ச சரித்திரம் தெரிவிக்கிறது. கட்டவரத ராஜு பல கிரந்தங்களை எழுதியிருக்கிறார். கட்டாவாரு ஆந்திர க்ஷத்திரியர்களிலும் பட்ராஜுக்களிலும் குறைவாக இருப்பதோடு ஆதியில் இவர்கள் ஒரே ஜாதி என்பதற்கு அடையாளமாக இருக்கிறார்கள்.

16. சா. ச. 1047-இல் நேலகொண்டபல்லி என்னும் ஊரில் கந்தூரி ருத்ரயன சோழராஜன் எழுதுவித்த சாஸனத்தால் [1] இவர் 'கந்தூரி' என்ற வீட்டுப்பெயர் உடையவர் என்று தெரிகிறது. இவர் கரிகாலன் வம்சத்தவர். கம்மவாரில் இப்பொழுது இருக்கும் கந்தார, கந்தால, கந்துல கும்ட, குந்தூர் முதலிய வீட்டுப்பெயர்களை உடையவர்கள் இந்த வம்சத்தாராக இருக்கலாம். கந்தூரி கோகர்ண உதயசோழர் என்னும் அரசர்களும் கந்தூரி என்ற வீட்டுப்பெயரைக் கொண்டிருந்ததாகச் சாஸனங்கள் தெரிவிக்கின்றன.

17. பூண்டூர் அரசனும் கி. பி. 1106-க்குச் சரியான சாளுக்கிய விக்கிரமசகம் 26-ம் வருஷத்தவனும் கரிகாலன் வம்சத்தவனுமாகிய ஹல்லகரச சோழராஜனுடைய வீட்டுப் பெயர் பூண்டூர் என வழங்கிவந்ததாக அவ்விடத்துச் சாஸனங்களால் தெரிகிறது.[2]

---

1. ஸ்வஸ்தி ஸ்ரீ சகவருஷம் 1047 ஆகும்- மன்மத ஸம்- ஸ்ரீமன் மண்டலேசுவர கந்தூரி ருத்ரயன சோடமகாராஜா ராஜ்யத்தில் கொண்டபல்லி (தெலிங்காணு சாஸனம். பக். 155).

2. ஸமதிகத பஞ்ச மகா சப்த மகாமண்டலேச்வர னயோத்யாவிம்ஹாஸன வராக லாஞ்சனம் புடுக்கூர்ப் புரவரேச்வரம் பயானே கள்ளனளம்பூர புஜங்க ரிபுபக்ஷ்ய காரணம் கோவிந்த நரசிம்ஹம் பத்மாவதி லப்த வரப்ரஸாதம் யசஸ்ஸுதா தவளித திக்வரேயேனும் ஆகாரபய பைஷஜ்ய சாஸ்த்ர தானவிநோதனும் ம்ருகமதாமோத ஸ்ரீமத் த்ரிபுவன மல்லதேவ பாதாராதக, பஞ்சபள ஸ்ரதகம் நாமாதி ஸமஸ்த ப்ரசஸ்தி ஸஹிதம் ஸ்ரீமன் மகாமண்டலேச்வரம் பூண்டூரே ஹல்லகரஸர் ஸ்வஸ்தி ஸ்ரீ சாளுக்கிய விக்ரம வர்ஷத 26-னேய பிரபவ ஸம்வத்ஸர பௌஷ்யத-தெலிங்காணு சாஸனங்கள். பக். 128-129.

கம்மவாரில் இப்பொழுது உள்ள பூண்டூரிவார் இவ்வம்சத்தவர்கள் என்றே ஊகிக்கவேண்டியிருக்கிறது. பூண்டூர் பொண்டூராக மருவி வந்திருக்கலாம்.

18. 'கோடூர்ப் புரவரேச்வர'ப்பட்டம் தரித்த கரிகால வம்சத்தவனாகிய மல்லரஸ சோழன் முதலானவர்கள் 'கோடூர்' என்ற வீட்டுப்பெயரைக் கொண்டிருந்ததாகக் காணப்படுகிறது. கம்மவாரில் இப்பொழுதும் கோடூர் வீட்டுப்பெயர் உள்ளவர்கள் இருக்கிறார்கள். மல்லரஸசோழ சாஸனம் ஒன்று மப்பளபூடி பிரம்மேசுவராலயத்தில் இருக்கிறது.[1] கோடூரை ராஜதானியாகக் கொண்டு ஆண்ட தெலுங்குச் சோழ அரசர்களில் பலர் 'கோடூர்ப் புரவரேசுவரம்' என்ற விருதைக் கொண்டிருந்தாலும் சிலரே கோடூர் வீட்டுப்பெயரை வைத்துக்கொண் டிருந்ததாகத் தெரிகிறது.

19. திக்கன சோமயாஜியின் நிர்வசன உத்தரராமாயணத்தை அங்கிதம் பெற்றுக்கொண்ட (பொத்தப்பிநாட்டு) மனுமசித்தி ராஜகுலத்தவனாகிய திக்கராஜன், 'இம்மடி திக்க ராஜன்' என்று விவகரிக்கப்பட்டதாகத் தெரிகிறது: கிருஷ்ணபுர சாஸனம் (Nellore inscriptions). ஸோமயாஜி இவ்வம்சம் சூரிய வம்சமே என்று வருணித்திருக்கிறார். இந்த இம்மடியார் இன்றும் கம்மவாரில் இருக்கிறார்கள். மற்ற வகுப்புக்களில் இருந்தாலும் அவர்கள் இந்த வம்சத்தவர்களாகத் தோன்றவில்லை. திக்கராஜன் 13-ஆம் நூற்றாண்டினன்; தெலுங்குச்சோழன்; அதனால் சூரியவம்சத்தவன். சா. ச. 1213-இல் இருந்த இம்மடி மல்லிகார்ஜுன நாயக்கர் இந்த வீட்டுப்பெயரையே உபயோகித்திருக்கிறார்: (தெலிங். சாஸ. பக். 76).

20. ராச்சூர், ரேபல்லிக் கோட்டைகளைக் கட்டி ஆண்ட 16-அல்லது 17-ஆம் நூற்றாண்டுச் சூரிய தேவர எர்ர ராஜனுக்கும் திம்மராஜனுக்கும் கரிகாலன் வம்சத்துச் சோழர்களுக்கெல்லாம் விருதுகளான உறையூர்ப் புரவரேசுவர, உறையூர்ப்புர விஹார, உறையூரி ஸ்ரீபாத பத்மாராதக என்ற விருதுகள் இருந்ததாகச் சில தனிப்பாடல்கள் மூலம் தெரிகிறது. இந்தப் பாடல்

1. தெலிங். சாஸனங்கள். பக். 131.

கள் 16-ம் நூற்றுண்டில் எழுந்தவை என்று தெரிகிறது. இந்த விருதுகளால் சூரியதேவர பட்டம் உள்ளவர்கள், உறையூரி விருதை வகித்த தெலுங்குச்சோழ அரசர்களாகவோ கரிகாலன் வம்சத்தவர்களாகிய காஞ்சிபுரச் சோழர்களாகவோ இருக்க வேண்டும். இந்தத் தெலுங்குச் சோழர்கள் அந்த விருதுகளைத் தரித்தவர்கள். சூரியதேவர என்ற வீட்டுப்பெயரே இவர் களுடைய வம்சத்தைத் தெரிவிக்கிறதல்லவா? இவர்கள் முன்பு ராச்சூர்-பேட்டேரு கோட்டைகளுக்குத் தலைவர்களாக இருந்திருக் கிறார்கள்: (உள்ளூர் ரிகார்டு Vol 41. பக். 471).

21. வெலநாட்டுக் கொங்க அரச வம்சத்துக்கு அடிமை என்று சொல்லிக்கொண்ட 12-ஆம் நூற்றுண்டினனுகிய கொல்லூர்த் தலைவன் சிந்தமநாயுடு. அவன் பெயரால் இன்றைக் கும் கம்மவாரில் சிந்தமநேனிவார் இருக்கிறார்கள். சிந்தமநாயுடு வின் பேரத்தி காமம்மாள் சா. ச. 1076-இல் எழுதுவித்த அவனிகட்ட சாஸனத்தில் சிந்தமநாயுடு கொங்கராஜன் வம்சத்திற்கு அடிமை என்று எழுதி வைத்தாள்: (S. I. I. Vol IV, P. 308). கொங்கராஜன் சந்திரவம்சத்திலிருந்து மத மாறுதல்அடைந்து நான்காம் வருணத்தவன் ஆனவன். கொல் லூர்ப் பக்கத்தில் இப்பொழுதும் சிந்தமநேனிவார் இருப்பதால் அவர்கள் இந்த வம்சத்தார் என்பதில் சந்தேகமில்லை. ஒருவேளை அவர்கள் கொல்லூர்த் தலைமை காரணமாகக் கொல்லூரிவாராக இருக்கக்கூடாதா என்று கேட்கலாம். கொல்லூரிவாரும் கம்ம வாரில் இருக்கிறார்கள். அதனால் மேலே சொன்னவர்கள் வெல நாட்டுச் சோழ அரச சந்ததிகள் என்றே சொல்லவேண்டியிருக் கிறது.

22. வெலநாட்டுச் சோழ அரசர்களிலும் அவர்களுடைய பந்துக்களிலும் உள்ள பண்டராஜு, பண்டிநாயகடு என்ற பெயர்களால் கம்மவாரில் இன்றைக்கும் பண்டாவார் இருப்பது தெரிகிறது. அதனால் இந்தப் பண்டா வம்சத்தார் வெலநாட்டுச் சோழ அரசர்களின் வம்சம் என்று சொல்லவேண்டியிருக்கிறது. இவர்கள் சந்திரவம்சத்திலிருந்து தாழ்ந்து சதுர்த்தர்களானார்கள் என்று முன்னமே சொல்லியிருக்கிறேன்.

23. துர்ஜயவம்சத்தில் வந்த கொண்டபடமடிசீமைப் புத்தராஜன் வம்சத்திலும் வெலநாட்டுச் சோழவம்சத்திலும் உள்ள மண்டவர்மா, மண்டராஜன் என்னும் பெயர்களின் திரிபாகக் கம்மவார்களில் மண்டாவார் ஏற்பட்டதாகத் தோன்றுகிறது. கம்மவாரில் இன்றும் மண்டாவார் இருக்கிறார்கள். இவர்கள் துர்ஜய அல்லது வெலநாடு வம்சத்தைச் சார்ந்தவர்களாக இருக்கலாம்.

24. ஜடாசோழ ராஜ்யத்தை உத்தாரம் செய்தவர் என்றும் மனும குலாபரணம் என்றும் சொல்லிக்கொண்ட பெஜவாடா கண்டிவாடி மன்யபுரத்து அரசன் காலப்ப நாயுடு. இனுமெள்ள என்னும் இடத்தில் இவர் சாஸனம்[1] இருக்கிறது. காலப்பநாயுடுவின் வம்சத்தார் பெஜவாடா, கண்டிவாடிகளை ஆண்டு பின்பு பெஜவாடா வீட்டுப்பெயரையே வைத்துக் கொண்டதாகத் தெரிகிறது. கம்மவாரில் இன்னும் பெஜவாடாவார் இருக்கிறார்கள். காலப்பநாயுடு மனுமகுலாபரணன் என்று சொல்லிக்கொள்வதால் சூரியவம்சத்தவனே. இவனுடைய சாஸனம் சா. ச. 1176 ஆம் வருஷத்ததாக இருக்கிறது. பெஜவாடாவார் ரெட்டிகளைத் தவிர வேறு குலங்களில் காணப்படுவதில்லை. அதாவது சூரியவம்சத்தார் என்று சொல்லிக்கொள்பவர்களில் இல்லை என்று சொல்லலாம். இவர்களில் சிலர் 'மன்னெ' என்ற வீட்டுப்பெயரை உடையவர்கள். கம்மவாரில் மன்னெவார், இனுமெள்ள கோத்திரத்தாராக இருப்பதால் இது உறுதிப்படுகிறது.

25. மனுகுலவார்தி வர்த்தன, சுதாகர, வெலிசர்லபுர சாஸன முதலிய விருதுகள் உள்ள மல்லிநாயகனு சா. ச. 1082-இல் எழுதுவித்த முரிகிபூடி சாஸனத்தில் மல்லிநாயகனு தன்னை மனுமகுலத்தவன் என்று எழுதிக்கொண்டிருக்கிறான். இவ்வம்சத்தார்கள் வெலிசர்ல என்ற வீட்டுப்பெயரையாவது கோத்திரத்தையாவது தரித்திருப்பார்கள். இந்தக் கோத்திரத்தார் (நிம்மகட்டவாரு) இப்போதும் கம்மவாரில் இருப்பதால் இவர்கள் சூரியகுலத்தார் என்று சொல்லலாம்.

---

1. S. I. I. Vol. VI, No. 602.

26. 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் நெல்லூரை ஆண்டவர்கள் தெலுங்குச்சோழர்கள். சா. ச. 1212-இல் சோழமல்லி தேவர் இருந்தார். இந்த வம்சத்தார் நெல்லூரை ஆண்டதால் நெல்லூரையே வீட்டுப்பெயராகக் கொண்டார்கள் என்று தோன்றுகிறது. கம்மவாரில் இப்போதும் நெல்லூரிவார் இருக்கிறார்கள். நெல்லூர்ச்சோழர்களும் கரிகாலன் குலத்தைச் சேர்ந்த சூரியவம்சத்தார்களே.

27. சலமர்த்திகண்ட அல்லது சலமத்துகண்ட விருதை வெலநாட்டு அரசர்களும் துர்ஜயகுலத்துக் காகதீய அரசர்களும் (பிரதாபருத்திரனுடைய முன்னோர்கள்) தரித்து வந்ததாக அவர்களுடைய சாஸனங்களால் தெரிகிறது. இந்த விருதை மற்ற அரசர்கள் வைத்துக்கொள்ளவில்லை. கம்மவார் இக்குலத்தைச் சேர்ந்தவர்களானதாலேயே இந்த விருது வந்திருக்கலாம். இந்த விருது 16 அல்லது 17-ம் நூற்றாண்டுக் காலத்து ராவிள்ள லிங்க ராஜனுக்கு இருந்ததாகச் சௌகந்திக பிரசவாபஹரணம் என்னும் நூலினால் தெரிகிறது. இந்த விருது ஆலூரி போத்தி நாயுடுவுக்கு இருந்ததாக முன்னமேயே சொல்லியிருக்கிறேன். ராவிள்ளவாருக்கும் இருந்ததாக இப்போது தெரிந்துவிட்டது. அதனால் இதைக் கம்மவாரின் முன்னோர்களே வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது உறுதிப்படுகிறது. மேலும் வெலநாட்டு அரசர்களும் காகதீயர்களும் கம்மவாரின் முன்னோர்களே என்பதும் தெரிகிறது. இவர்கள் சந்திர, சூரிய வம்சத்தவர்களென்றும் முன்னமேயே தெரிந்துகொண்டோம்.

28. துர்ஜயகுலத்துப் புத்தவர்மாவின் வம்சத்தவர் என்று சொல்லிக்கொண்டு 11, 12 ஆம் நூற்றாண்டுகளில் ஆண்ட மகா மண்டலேசுவர சோழ ராஜன், மனும சோழ ராஜன், மனும மண்ட ராஜன் முதலியவர்கள் முறையாக நாதெண்ட்ல என்னுமிடத்தில் வசித்து அவ்விடத்து மூலஸ்தானப் பெருமானுக்குப் பல மான்யங்கள் கொடுத்திருந்தார்கள். இவ்வம்சத்தவர்கள் நாதெண்ட்ல என்னும் வீட்டுப்பெயரை வைத்துக்கொண்டார்கள் என்று சொல்லச் சந்தர்ப்பம் இருக்கிறது. கம்மவாரில் இருக்கும் நாதெண்ட்லவார் இவ்வம்சத்தார்களாக இருக்கலாம். நாதெண்ட்ல

பிராம்மணர்களும் இருக்கிறார்கள்; மற்ற வகுப்பினர் இல்லை. அக்காலத்தில் அங்கே வசித்த பிராம்மணர்கள் அந்த வீட்டுப் பெயரை வைத்துக்கொண் டிருக்கலாம்.

29. வல்லூரை ராஜதானியாகக் கொண்டு மகாராஜபதி (மார்ஜ வாடி) என்னும் ஏழாயிரம் கிராமங்களை 12ஆம் நூற்றாண்டில் ஆண்ட தெலுங்குச்சோழ அரசர்களில் மதுராந்தக பொத்தப்பிச் சோழ நல்லசித்தி ராஜனும் அவன் வம்சத்தாரும் முறையாக வல்லூரில் வசித்ததால் அவர்கள் வீட்டுப்பெயர் வல்லூராயிற்று. இந்த வல்லூர் கடப்பை ஜில்லாவில் உள்ளது. கம்மவாரில் வல்லூரிவார் இருக்கின்றனர். அதனால் இவர்கள் கரிகாலன் சந்ததியாராகிய சோழர்களே என்பது திடப்படுகிறது.

பிராம்மணர்களிலும் வல்லூரிவார் இருக்கிறார்கள்; ஆனால் சோழவம்சத்தார்அல்லர். இப்படியே ஹைதராபாத்தில் நெக்கொண்டாவில் வசித்தவர்கள் அந்தப் பெயரை வைத்துக்கொண் டிருக்கிறார்கள். நெக்கொண்டா கம்மவாரும் இருக்கிறார்கள்.

கம்மவார் துர்ஜயகுலத்தார் என்பதற்குக் கோத்திரங்களிலும் வீட்டுப்பெயர்களிலும் பல உதாரணங்கள் இருக்கின்றன. பார்க்கப் பார்க்கக் கம்மவார் துர்ஜயகுலத்தார் என்பதற்கும் வெலநாட்டு, தெலுங்கு, காஞ்சிபுரச் சோழர்களின் சந்ததியார் என்பதற்கும் ஆதாரங்கள் கிடைக்கின்றன.[1] இதனால் சோழ ராஜாக்கள் எல்லோரும் ஒரே கிளையில் வந்தவர்கள்; காலக்கிரமத்தில் வேறு மதத்தில் சேர்ந்து பிரிந்துவிட்டார்கள்; சிலர் சதுர்த்தர்களென்றும் சிலர் சூரியவம்சத்தார்கள் என்றும் சொல்லிக்கொண்டார்கள் என்று அறிந்துகொள்ளலாம். இச்சோழர்களில் மல்லவர்மா, தாசவர்மா, தெலுங்குப் பிஜ்ஜன ஆகியவர்களே கம்மவாரின் மூலபுருஷர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்களுடைய பந்துக்களாகிய ஹைஹய வம்சத்தவர்களும் கம்மவாரில் சிலருக்கு மூலபுருஷர்களாக இருப்பார்கள். கொல்லிப்பாகை அரசர்களும் துர்ஜயகுலத்தாரும் ஆன அவ்வம்சத்தவர்கள் கொல்லி அல்லது கொல்லிபாக என்ற வீட்டுப்பெயர் கொண்டிருக்கவேண்டும் என்று ஊகிக்கிறேன். கம்மவாரில் கொல்லி

1. அவற்றை இரண்டாம் பாகத்தில் வெளியிடுவோம்.

பாக என்ற பெயர் இல்லை; கொல்லிவார் இருக்கிறார்கள். கொல்லிபாக, தூர்ஜயவம்சத்திலிருந்தே இக்காலத்து க்ஷத்திரியருடைய பல பிரிவுகள் ஏற்பட்டன. இதற்குத் தென்னிந்திய சாஸனம் 4-ம் பாகம் நெ. 986-ம் 1106-ம் பிரமாணங்களாக இருக்கின்றன.

## சூரிய சந்திரவம்சங்களில் புத்த சமண மதங்கள் பரவல்

கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முன்பே புத்தர்[1] என்னும் மகான் நம் நாட்டில் பிறந்து ஒரு புதிய மதத்தை ஸ்தாபித்தார். அம்மதத்தின் முக்கியமான 'கொள்கை பிராணிகளிடத்தில் அன்புவைத்தல் (அஹிம்சை). இதை அநுஷ்டானத்தில் கொண்டுவந்ததும், அது நம் நாட்டில் வைதிகமத வழக்கப்படி பல உயிர்ப்பலிகளும் யாகங்களும் செய்து அலுத்துவிட்ட ஜனங்களை வெகுவாகக் கவர்ந்தது.[2] அதனால் நம் தேசத்தில் சில நாட்டினர் தவிர, ஆரியமதத்தினராகிய ஆந்திரர் அனைவரும் இம்மதத்தில் சேர்ந்தார்கள். இப்படி அசோகசக்கரவர்த்தியின் காலத்தில் நடந்தது.[3] புத்த மதப் பெயரால் பல ஸ்தூபங்கள் நம் நாட்டில் எழுந்தன. ஆந்திர தேசத்தில் பட்டிப்ரோலு, அமராவதி, ஜக்கையபேட்ட, சந்தவோலு, கண்டஸால, நாகார்ஜுன மலை முதலிய பிரதேசங்களில் பௌத்த ஸ்தூபங்கள் நிருமிக்கப்பட்டன. சூரிய, சந்திர வம்சத்தார் பெரும்பாலோர் பௌத்தமதத்தில் சேர்ந்துவிட்டார்கள். அவர்களே மேற்கண்ட ஸ்தூபிகளை எழுப்பினர். அவர்களுடைய தானசாஸனங்கள் சமீபகாலத்தில் வெளிவந்தன. இந்த மத மாற்றம் எவ்வளவு காலம் நடந்தென்பதைச் சரியாக அறியத் தக்க சாதனங்கள் இல்லா

1. புத்தர் கி. மு. 557-ஆம் வருஷம் பிறந்து கி. மு. 477-இல் இறந்தாரென்று ஒருவரும் கி. மு. 563-இல் பிறந்து, கி. மு. 483-இல் இறந்தாரென்று ஒருவரும் எழுதியிருக்கிறார்கள்.

2. தான்யகடகத்துப் பௌத்த ஸ்தூப சாஸனத்தால் தோல் வேலை செய்பவனும் நாககருவன் மகனும் ஆகிய விதிகன் என்பவன் தன் பந்துமித்திரர்களுடன் வந்து அங்கே தானசாஸனம் எழுதியதாகத் தெரிகிறது. பிராம்மண முகுந்த சர்மா என்பவனுடைய மற்றொரு தானசாஸனமும் அதில் இருக்கிறது. அக்காலத்தில் எல்லா ஜாதியாருக்கும் ஒரேவிதமான உரிமை பௌத்த விஹாரங்களில் இருந்ததாகச் சாஸனங்கள் தெரிவிக்கின்றன.

3. இவ்விஷயம் அசோகனுடைய 13-ஆம் சாஸனத்தில் இருக்கிறது.

விட்டாலும் சில நூற்றாண்டுகள் வரையில் நடந்திருக்கும் என்பது உண்மை. பௌத்தமதச் சின்னமாகிய சிங்க இலச்சினையை 2-ம் நூற்றாண்டில் ஆண்ட இக்ஷ்வாகு வம்சத்தார் உபயோகித்தார்கள்.[1] பௌத்தமதத்துக்கு முன் சிலர் சமணமதத்தில் பிரவேசித்தனர்.[2] பௌத்தமதத்துக்குப் பின் சிலகாலம் வரையில் சமணமதமும் நம் நாட்டில் பரவியிருந்தது. ஜைன தீர்த்தங்கரர்கள் இருபத்து நால்வரில் இருபது பேர் இக்ஷ்வாகு வம்சத்தவர்களே. இதனாலேயே சூரியவம்சத்தார் எவ்வளவு அதிகமாகச் சமணமதத்தைத் தழுவினார்கள் என்பதை ஊகிக்கலாம். பௌத்த, சமணமதங்கள் சுமார் 6-ம் நூற்றாண்டு வரையில் நம் தேசத்தில் விருத்தியடைந்து பிறகு கொஞ்சங்கொஞ்சமாக க்ஷீணிக்க ஆரம்பித்தன. சாளுக்கியர்கள் முதலில் சமணமதத்தில் இருந்தவர்கள்[3]. வைதிகமதத்தைப் பரப்பப் பிராம்மணர்கள் மறுபடியும் தீவிரமாகப் பிரயாசைப் பட்டனர். அதற்காக வைதிகமதத்தில் சைவ வைணவப் பிரிவுகள் தோன்றின. ஒன்றுக்கொன்று விரோதபாவம் ஏற்பட்டதென்றாலும் போட்டியிட்டு இருமதங்களும் வளர்ந்தன. சைவ, வைணவமதங்கள் 4-ம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே வளர்ந்ததற்குச் சான்றுகள் உள்ளன. அக்காலத்தில் இருந்த விஷ்ணுகுண்டி அரசர்களும் சாலங்காய அரசர்களும் இம்மதத்தவர்களே. சைவ, வைணவமதத்தினர் பௌத்தமதத்தவர்களைத் திரும்பவும் தம்மோடு சேர்த்துக்கொள்ளத் தலைப்பட்டனர். சமணமதத்திலும் புத்தமதத்திலும் சேர்ந்த சூரியவம்சத்தரசர்கள் புத்துயிர் பெற்ற சைவ, வைணவ மதங்களுக்குத் திரும்பினர்.

இப்படிச் சேரும்போது அக்காலத்து மதக் கட்டுப்பாடுகளுக்கிணங்கப் பிராம்மணர்கள் புதிதாகச் சேர்ந்தவர்களை ஸத்சூத்திரர் எனப்படும் நாலாம் வருணத்தவர்களாகவே சேர்த்துக்கொண்டதாகத் தெரிகிறது. இதற்கு ஆதாரமாகக் குலோத்துங்க சோழ சக்கரவர்த்தியின் காலத்து 11-ம் நூற்றாண்டுச் சில பல்லவர் சாஸ

1. நாகார்ஜுன மலைச்சாஸனங்கள். Ep. Ind. XI, pp. 87.

2. சமண மதாச்சாரியராகிய மகாவீரர் கி. மு. 599-இல் பிறந்து கி. மு. 467-இல் இறந்ததாக ஒருவர் எழுதியிருக்கிறார். இவர் காலத்துக்கு முன்பே சமணமதம் இருந்தது. J. A. H. R. S. vol. IV pp. 227.

3. ஆந்திரர் சரித்திரம். 1-ஆம் பாகம், பக். 259.

னங்களில் ஸத்சூத்திரர் என்ற பெயர் காணப்படுகிறது.[1] அதற்கு முன் இந்த ஸத்சூத்திரப் பெயர் இவர்களில் காணப்படவில்லை.

தவிர, 12, 13-ம் நூற்றுண்டுகளில் இருந்தவர்களில் பில்லல மர்ரிபேத்தி ரெட்டி, கோன கன்னுரெட்டி, ரேசர்ல பேத்தி ரெட்டி, காமிரெட்டி, காட்ரெட்டி முதலியவர்களைப்பற்றிச் சொல்லப்பட்ட சாஸனங்களில் சதுர்த்த வம்சத்தவர் என்றும் மனுமகுலா பரணர் என்றும் இரு விதங்களாக எழுதப்பட்ட காரணம் இந்த மதம் மாறிய குற்றமே என்பது உறுதிப்படுகிறது. இப்படியே வெலநாட்டுச்சோழர்கள் விஷயமாகச் சில சாஸனங்களில் சதுர்த்தவம்சத்தவர் என்றும் சிலவற்றில் சந்திரவம்சத்தவர் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இதுவும் மத மாற்றத்தால் ஏற்பட்டதென்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை. இவர்களுடைய மூல புருஷர்களாகிய துர்ஜயவம்சத்துப் புத்தவர்மாவும் சந்திர வம்சத்து மல்லவர்மாவும் இப்படியே சதுர்த்த குலத்தில் சேர்ந்திருக்கவேண்டும். இப்படிச் சைவ - வைணவ மதங்கள், கி. பி. 1000 வருஷங்கள் வரையில் - தேவாலயப் பிரதிஷ்டைகள், ஜாதி குலக் கட்டுப்பாடுகள், மதக் கட்டுப்பாடுகள், இவற்றின் மூலம் புதிய ஏற்பாடுகளைச் செய்து அரசர்களின் சலுகைகளைப் பெற்று வளர்ந்தன. இந்தக் கட்டுப்பாடுகள் ஒரு புறம் இப்படி ஏற்பட்டாலும் அரசர்கள் அவற்றை அதிகமாகப் பொருட்படுத்தாமல் வேதகால வழக்கப்படியே எல்லா வம்சத்தார்களுள்ளும் சம்பந்தம் செய்துகொண்டு சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் தம்தம் ராஜ்யாபிவிருத்திக்கும் க்ஷேமத்துக்கும் உகந்தபடி நடந்து வந்தனர். இதைப் பின்னல் பார்க்கலாம்.

பௌத்த, சமணமதங்களில் சேர்ந்த சூரிய, சந்திர வம்சத்தவர்களுக்குக் கோத்திரங்களின் பழக்கம் மறைந்துவிட்டது.[2]

---

1. S. I. I. Vol. IV, pp. 429.

2. சா. ச. 644-ம் வருஷத்துச் சாளுக்கிய ராஜனுகிய மூன்றும் விஷ்ணுவர்த்தனனுடைய காலத்தில் அவனுடைய பாட்டியாகிய ஐயன மகாதேவி தன் பேரனுக்குப் பேரனான விஷ்ணுவர்த்தனனுடைய க்ஷேமத்தை உத்தேசித்துப் பிஜவாடாவில் நதும்ப வஸ்தி என்னும் சமணப்பள்ளிக்கு 'முசினிகொண்டா' என்னும் கிராமத்தைத் தானமாகக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. சந்திர வம்சச் சாளுக்கியர்களும் சமணமதத்தில் வைத்திருந்த அபிமானம் இதனால் தெரிகிறது: (C. P. No. 9. of 1916 & 17).

அவர்கள் திரும்பவும் சைவ, வைணவமதங்களில் சேர்ந்தபோது ஆரிய மதானுசாரப்படி கோத்திரங்களை வைத்துக்கொள்ள வேண்டியிருந்தது. அதற்கு முன்பே சில நூற்றாண்டுகள் பௌத்த, சமணமதங்களில் இருந்த இவர்களுடைய முன்னோர்களின் ரிஷி கோத்திரங்கள் இன்னவை என்று நிர்ணயிக்க முடியவில்லை. சிலர் மட்டும் தெரிந்தவரையில் காசியப கோத்திரம் முதலியவற்றை ஏற்றனர். இப்படிக் கோத்திரம் ஏற்பட்ட வம்சத்தவரில் ஆந்திர சோழர்களும் காஞ்சிபுரச்சோழர்களும் வந்திருப்பர். வெல நாட்டுச் சோழ அரசர்கள் மானவ்ய ஸகோத்திரர்களும் ஹாரித புத்திரர்களுமாகச் சில சாஸனங்களில் காணப்பட்டாலும் அவர்கள் கோத்திரத்தைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. பிற்காலத்தில் அவர்களுடைய சாஸனங்களில் கோத்திரத்தை மனமறிந்து விட்டுவிட்டே, சதுர்த்தர்களென்று எழுதிக்கொண்டதாகத் தோன்றுகிறது. இப்படிச் சிலகாலம் சென்றபின் இந்த வம்சத்தாரும் மற்ற சூரிய, சந்திர வம்சத்தாரும் தாங்கள் எந்த எந்தக் கிராமங்களில் வசித்துவந்தார்களோ அந்த அந்தக் கிராமங்களின் பெயர்களையே கோத்திரங்களாக உபயோகித்தார்களென்று தோன்றுகிறது. சந்திரவம்சத்தாரில் 'கோட்டா (கோட்டை) வார் தம் முன்னோர்களில் ஒருவரான தனஞ்ஜயன் என்பவருடைய பெயரால் கோத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டு சதுர்த்தர் ஆனார்கள். மறுபடியும் ஜைனமதம் ஒருபுறம் வளர்ந்து நம் தேசத்தவர்களை வசப்படுத்திக்கொண்டது. இப்படி இவர்கள் எத்தனை முறை பிற மதங்களுக்கு மாறினார்கள் என்பது நமக்குத் தெரியாது. மொத்தத்தில் 12-ஆம் நூற்றாண்டு வரையில் சைவ, வைணவ மதங்களுடன் மற்ற மதங்கள் போட்டியிட்டுப் பரவி வந்தன என்று நம்பலாம்.

11-ஆம் நூற்றாண்டில் ஆந்திரதேசத்தை ஆட்சிசெய்த காகதிப்ரோல ராஜு[1] முதலியவர்களும் அதற்கு முன் ஆண்ட ராஷ்டிரகூட அரசர்களும் சமண, பௌத்த மதத்தினராகவே இருந்தார்கள் என்பதற்குச் சரித்திர ஆதாரம் இருக்கிறது. கோட்டை இரண்டாம் கேதராஜன் சைவனாயிருந்தபோதிலும் அவன் காலத்திலும், அதாவது 12-ம் நூற்றாண்டின் பிற்பகுதி

யிலும் பௌத்த ஆராதனை இருந்ததென்பது அவனுடைய தான சாஸனத்தின் மூலம் தெரிகிறது. [1]

## சூரிய சந்திரவம்சங்களில் சைவவைணவ மதங்கள் வியாபித்தல்

சந்திரவம்சத்தார் என்று சொல்லிக்கொண்ட கலிங்கநாட்டுக் காங்க அரசர்கள் ஏறக்குறைய 6-ஆம் நூற்றாண்டிலிருந்து சைவர்களாகவே இருந்தனர். [2]

வேங்கி தேசத்தை 7-ஆம் நூற்றாண்டு முதல் ஆண்ட சாளுக்கிய குப்ஜ விஷ்ணு வர்த்தனர் முதலியவர்களும் அவர்களுக்குப் பின் வந்த அரசர்களும் வரிசையாகச் சைவ மத அபிமானிகளாகவே இருந்ததாகப் பல திருஷ்டாந்தங்களால் தெரிகிறது. அவர்களுடைய சரிதம் இப்புத்தகத்தின் கடைசியில் இருக்கிறது. காகதீய அரசர்களில் திரிபுவனமல்ல பேதராஜன் (கி. பி. 1080-1115 க்கு இடையில் ஆண்டவன்) காலத்திலிருந்து அவர்கள் சைவர்களானதாகத் தெரிகிறது. இப்படியே நதவாடி நாடு, கொண்டபடமடி சீமா, வெலநாடு, கம்மநாடு, தரணிக்கோட்டை இவற்றின் அரசர்கள் எல்லோரும் உறவினர்களாதலால் சைவமதத்தில் புகுந்துவிட்டார்கள். மற்றொருபுறம் வைணவ மதம் வெகு வேகமாகப் பரவியதன் காரணமாகச் சைவமதத்தில் வீரசைவ மதம் என்று ஒன்று பிரிந்தது. அப்படியே வீரவைஷ்ணவம் தலையெடுத்தது. இம்மதங்களில் ஜாதி முக்கியமாகக் கருதப்படவில்லை. ஒரு மதத்ினர் எல்லோரும் சமானமானவர்களே. அவர்களுள் எல்லோருக்கும் சமமான மரியாதையும் பந்தி போஜனமும் உண்டு. கோவில் பிரசாதங்களும் கொடுக்கப்பட்டன. இந்த மதத்தார் வேறு வேறு சின்னங்களைத் தரிக்க ஆரம்பித்தனர்.

வீரசைவ மதத்தவர் எல்லோரும் லிங்கம், ருத்திராக்ஷம், விபூதி இவற்றை விதிப்படி தரித்துச் சிவ பஞ்சாக்ஷரீ மந்திரோ

---

1 சா. ச. 1104-இல் இந்த அரசன் கந்தேரு, மேடிகொண்டுரு, டொங்கிபர்ரு முதலிய கிராமங்களைப் புத்தருக்குச் சமர்ப்பித்தார்- (ஆந்திரர் சரித்திரம், 5-ஆம் பாகம்).

2 ஸத்ய வர்மதேவ, ஹஸ்திவர்ம, இந்திரவர்மர் II களைப்பற்றி அவர்களுடைய சிக்காகோல் முதலிய இடத்துச் சாஸனங்களில் அப்படி எழுதியிருக்கிறது. (I. A. H. R. S. Vol. VI, pp. 75-77).

பாசனை செய்துவந்தனர். அதிலே ஏற்கனவே ஆராத்யர் முதலியவர்கள் இருந்தனர். புதிதாகச் சேர்ந்த சூத்திரர் முதலியவர்களை ஜங்கமர், லிங்கபலிஜலு என்ற பெயர்களால் அழைத்தனர். இம் மதத்துக்குப் பஸவேச்வரர் என்னும் ஞானி முக்கியமானவர். இவர் வீரசைவர்கள் எல்லோரையும் சிவ சொரூபமாகப் பாவித் துத் தாம் பூஜை செய்து பிறரையும் அப்படியே செய்யச் சொல்லியவர். இவர் ஹைஹயவம்சத்து, பிஜ்ஜன என்னும் அரசனுக்கு மந்திரியாக இருந்து அவனை அம்மதத்தில் சேர்த்ததோடு அவனுடைய ராஜ்யம் முழுவதிலும் இப்புதிய மதத்தைப் பரவச் செய்தார். இவருடைய சகோதரியின் மகனாகிய சென்னவசவனும் இவருக்குப் பின் இம்மதத்தை வளரச் செய்தான். இப்படி இம்மதம் பரவிய காலத்தில் இது காரணமாகப் பல யுத்தங்கள் நடந்தன; பலர் இறந்தனர். அக்காலத்தில் ஏதாவது ஒரு மதத்தில் சேராமல் இருக்க முடியாது. இது 12-ஆம் நூற்றாண்டின் விஷயம். பண்டிதாராத்யர், பால்குரிக்கி சோமநாத கவி போன்றவர்கள் இம்மதாபிமானிகளாக இருந்தும் துணிந்து பிராம்மண குலத்தை விட்டுப் பல ஜாதிகள் கலந்த கூட்டத்தில் இருக்க மனம் ஒப்பவில்லை; அதனால் சாதாரணச் சைவர்களாகவே இருந்தனர்.

பின்பு நம் தேசத்தில் ராமானுஜர் என்னும் வீர வைஷ்ணவ மதாச்சாரியார் தோன்றி, அம்மதத்தின் உத்தம மார்க்கத்தை மக்களுக்குப் போதித்தார். குலோத்துங்க சோழன் மகனாகிய விக்கிரம சோழன் அவரைத் தருவித்துத் தன் தேசத்தில் வைணவ மதத்தைப் பரப்பச் செய்தான்.

ஹைஹயவம்சத்தினராகிய அனுகுராஜன் முதலியவர்கள் இந்தக் காலத்திலோ தம்மாமந்திரி குமாரனாகிய பிரம்ம நாயுடு காலத்திலோ இந்த வீர வைஷ்ணவ மதத்தில் சேர்ந்துவிட்டார்கள். திருமண் ஸ்ரீசூர்ண நாமம் தரிப்பதும் தோள்களில் சங்கு சக்கர முத்திரைகளால் சுட்டுக்கொள்வதும் மகாவிஷ்ணுவை ஆராதித்தலும் இம்மதத்தின் சின்னங்கள். இவற்றைத் தரித்த வைஷ்ணவர்கள் எக்குலத்தாரானாலும் சமமான மரியாதைகளைப் பெற்றனர். தெய்வப் பிரசாதத்தில் பாகம் பெறவும் இவர்கள் எல்லோருக்கும் தகுதி இருந்தது. தர்ஜயவம்சத்

தார் பலர் இம்மதத்தில் சேர்ந்துவிட்டார்கள். தீண்டாச் சாதியைச் சேர்ந்த தாசரியாகிய கன்னம நாயுடு இம்மதத்தில் சேர்ந்து பல்நாட்டுப் பிரம்மநாயுடுவின் அபிமான புத்திரனுகியதாக ஸ்ரீநாத கவியின் பல்நாட்டுச் சரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. எல்லாக் குலத்தாரும் சேர்ந்து சாப்பிட்டதாக அதில் காணப்படுகிறது. ஆனல் வேறு மதத்தைச் சேர்ந்த கிட்டிய பந்துக்களேயும் விலக்கிவிடுவார்கள். வீரசைவ, வீரவைணவ மதங்களில் பிற மதத் துவேஷமே முக்கிய ஸ்தானத்தை அலங்கரித்தது. வீரவைணவ மதத்தில் சாத்தாணி என்ற சூத்திரப் புரோகிதர்கள் ஏற்பட்டனர். 12-ஆம் நூற்ருண்டில் அந்த அந்த மதக் கோட்பாடுகளே அனுசரித்து ஜனங்கள் எந்த உறவினரையும் சரி, மத பேதம் உண்டான இடத்தில் விலக்கிவிட்டுப் போஜனம் முதலிய சம்பந்தங்களேக்கூட நீக்கிக்கொண்டனர். அதனுலேதான் ஆந்திரநாட்டில் ஒவ்வொரு குலத்தினரும் பல கிளேகளாகப் பிரிந்து ஒவ்வொருவரும் தமக்குத் தாமே பெரியவர் என்று நினேத்துக் கொண்டு, சமயம் கிடைத்தபோதெல்லாம் மற்ற மதத்தினரை ஏளனம் செய்து அவர்களுக்கு இடுக்கண் செய்தார்கள்; ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளாமல் சண்டையிட்டார்கள். பலாத்கார முறையிலும் சிலரைத் தம் தம் மதத்தில் சேர்த்தார்கள். அதனுலேயே 'தாத்தாச்சாரியார் முத்திரை புஜங்களில் தவறினுலும் முதுகில் தவருது' என்னும் பழமொழி ஆந்திரதேசத்தில் வழங்குகிறது.

## சூரிய, சந்திரவம்சத்தார் சோழ விருது தரித்த காலம்

இப்பொழுது நைஜாம் ராஜ்யத்தில் இருக்கும் ஆந்திரநாட்டின் சில பகுதிகள் (மகபூப் நகரம், நல்லகொண்ட ஜில்லாக்கள்) முன்பு சோழவாடா என்னும் பெயருடன் வழங்கியதாகப் பண்டிதாராத்ய சரித்திரத்தில் உள்ள இந்தப் பத்தியத்தால் தெரிகிறது.

> "சோள வாளிகாக க்ஷோணீதலேச
> வேளவாளிகி கர்த்தனே யட்டுலனின" பக். 287.

10-ஆம் நூற்ருண்டில் சாளுக்கிய அரசனுகிய இரண்டாம் அரிகேசரியின் முன்னேர்கள் சோளவாடி ராஜ்யத்தை ஆண்டு வந்ததாக

டாக்டர் ப்லேட் துரை, 'கன்னட ஜில்லாக்களின் ராஜ வம்சம்' என்னும் நூலில் 380-ஆம் பக்கத்தில் எழுதியிருக்கிறார்.[1] சோளம் விளைவதால் இதற்கு இந்தப் பெயர் வந்திருக்கும் என்று சில சரித்திராசிரியர்கள் கருதுகிறார்கள். தென் தேசத்தில் இருக்கும் சோழநாட்டுக்கும் சோளநாடு என்னும் பெயர் இருப்பதாக 10-ம் நூற்றாண்டிலே ஆண்ட வீரமகேந்திர நுளம்ப ராஜனுடைய கர்ஸனபல்விச் சாஸனத்தின் மூலம் தெரிகிறது. இத்தேசத்தை முதலில் ஆண்டவர்களே சோர, அல்லது சோழ அரசர்களென்று பிரசித்தி பெற்றார்களென்றும், முற்காலத்தில் இங்கே திருடர்கள் அதிகமாக இருந்ததால் சோர தேசம் என்றும், சோரம் சோழ மாயிற்றென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.[2] சோழப் பட்டத்தை முதலில் எந்த அரசர்கள் தங்கள் பெயருடன் சேர்த்துக் கொண்டார்கள் என்று ஆராய்வோம். இந்தப் பட்டம் அசோகர் கால முதல் இருக்கிறதென்றும் ஒரு தேசத்துக்குப் பெயராக வழங்கியதென்றும் முன்னமே சொன்னோம். இத்தேசம் தென் தேசமே. ஆனால் 5-ஆம் நூற்றாண்டில் இருந்ததாகக் கருதப் படும் கரிகால் சோழனும் அவர் தந்தையாகிய சடைச் சோழனும் 7-ஆம் நூற்றாண்டின் ரே நாட்டுச் சோழனும்[3] (பரிப்பிரதாபன்) 6-ஆம் நூற்றாண்டின் வீரப்பிரதாப சோழனும் (பாபட்ல ரிபோர்ட்) கிரிமிகாந்தச் சோழனும் சோழப் பட்டம் தரித்ததாகச் சில பழைய சாஸனங்கள் மூலமாகவும் வேறு ஆதாரங்களாலும் தெரிகிறது. அதனால் இப்பட்டத்தைச் சோளவாடிச் சூரியவம்சத் தவரே முதலில் வைத்துக்கொண்டதாகத் தோன்றுகிறது.

இனித் தெற்கே இருக்கும் சோழதேசத்தைப் பற்றி ஆராய் வோம். சரித்திர காலச் சோழர்களில் கரிகாலனுடைய மரபில் வந்த விஜயாலய சோழனே இவர்களில் முதல்வன். இவன் சோழன் என்ற பட்டத்தைச் சேர்த்துக்கொண்டதாக ஆதாரம் இல்லை. பிறகு வந்த அரசர்கள் இப்பட்டத்தைத் தங்கள் பெயரோடு சேர்த்துக்கொண்டார்கள். கி. பி. 907-ஆம் வருஷம் முதல் காஞ்சி

1. J. A. H. R. S. Vol. VIpp .182-3.
2. ஆந்திர பாஷா சரிதம்; ஆந். சர்வகலாசாலைப் பிரசுரம்.
3. Ep. Ind. XI.

புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட முதல்பராந்தகனுக்கு வீரசோழன் என்னும் பெயர் இருந்ததாகச் சாஸனங்கள் மூலம் தெரிகிறது. பிறகு காஞ்சிபுரச் சோழர்களில் உத்தமசோழன், சுந்தரசோழன் முதலிய பெயர்கள் காணப்படுகின்றன.

இப்படியே சா. ச. 904-ஆம் வருஷத்து ஆந்திரசோழனுகிய சடைச் சோழபீமனும் சோழப்பட்டத்தை உபயோகித்ததோடு தன் முன்னோர்களில் ஒருவன் பெயராகிய சோழத் திரிநேத்திரன் என்னும் விருதையும் தரித்தான். அதனுல் இந்தச் சோழப் பட்டத்தின் ஆரம்பகாலம் தெரியவில்லை.

இதற்குமுன் வேத காலத்தில் ஆந்திரர்கள் என்ற பெயரால் அழைக்கப்பட்டவர்கள் விருத்தியானதையும் ஆந்திரசோழர் என்பவர்கள் இக்ஷ்வாகு வம்சத்தவர்களே என்பதையும் தெரிந்து கொண்டோம். இதனுல் வேத காலத்தில் ஆந்திரர்கள் என்று கருதப்பட்டவர்கள் ஆரியர் கொள்கைப்படி இக்ஷ்வாகு அல்லது சூரியவம்சத்தவர்கள் என்று அழைக்கப்பட்டவர்களே. அவர்களில் சோழவாடியில் வசித்த சிலர் சோழர்களென்று பிரசித்தி அடைந்தார்கள் என்றும் அவர்களே காஞ்சிபுரம் முதலிய பிரதேசங்களுக்குச் சென்று காஞ்சிபுரச் சோழர்களானுர்கள் என்றும் ஊகிக்கலாம். ஆந்திரதேச மத்திய பாகத்துக்குப் போனவர்கள் ஆந்திரசோழர்கள் என்று பிரசித்திபெற்றூர்கள். இப்படியே பொத்தப்பிநாடு, ரேநாடு, கோடூர், நெல்லூர் முதலிய இடங்களுக்குப் போன ஆந்திரசோழர்கள் அந்த அந்த இடப் பெயர்களைத் தம் தம் பெயர்களுடன் சேர்த்துக்கொண்டார்கள் என்று ஊகிக்கலாம். துர்ஜயவம்சத்தாரும் தனஞ்ஜய வம்சத்தாரும் சோழப்பட்டத்தை அதிகமாக உபயோகித்ததாகத் தோன்றுகிறது. ஆந்திர சப்தத்தைப்போல் இது கிறிஸ்துவுக்கு முன்பிருந்தே இருப்பதால் இதன் பிறப்பைப்பற்றி ஆராய்ச்சி செய்து சொல்லமுடியாது.

சூரியவம்சத்தவர்களைப் பார்த்த சந்திரவம்சத்தவர்களும் சோழப்பட்டத்தை 11-ஆம் நூற்றூண்டு முதல் வைத்துக்கொண்டதாகத் தெரிகிறது. சா. ச. 1000-ம் வாக்கில் இருந்த கிழைச் சாளுக்கிய சக்கரவர்த்தியும் ராஜராஜநரேந்திரன் புத்திரனுமாகிய

முதல் குலோத்துங்க சோழச் சக்கரவர்த்தி தன் தாய்மாமன் அரசாகிய தமிழ்ச் சோழதேசத்தைப் பெற்றுக்கொண்டதிலிருந்து அந் நாட்டின்மேல் உள்ள அபிமானத்தினால் சோழப்பட்டத்தையும் 'ரவிகுலதிலக' என்னும் விருதையும் ஏற்றுக்கொண் டிருக்கவேண்டும். அதுமுதல் சந்திரவம்சத்தின் ஒரு கிளையாகிய கீழைச் சாளுக்கியர்களும் அவர்களுக்குச் சம்பந்தப்பட்ட வெலநாட்டரசர்களும் கூடச் சோழப்பட்டத்தை ஏற்றுக்கொண்டனர். சோழப்பட்டம் இப்படிப் பல ராஜகுடும்பங்களில் வழங்கியதால், 'யதாராஜா ததாப்பிரஜா' என்றபடி பொதுஜனங்களுக்குள்ளும் இவ்வழக்கம் புகுந்தது. சோழ என்ற பெயரைத் தரித்தாலே சூரிய, சந்திரவம்சத்தவர் என்று தெரிவிக்கும் ரீதியில் அக்காலத்தவர் உபயோகித்திருக்கிறார்கள். 11-ஆம் நூற்றாண்டிலிருந்து ஹைஹயவம்சத்தினராகிய கோனசீமை அரசர்களும் (வென்ன சோழராஜன் முதலியவர்கள்) இந்தப் பட்டத்தை வைத்துக்கொண்டார்கள். இதற்குமுன் தொழிலால் க்ஷத்திரியர்களாயிருந்த அனைவரும் எந்தக் குலத்தாராக இருந்தாலும் எந்த மதத்தினராக இருந்தாலும் (வர்மாந்த நாமாபி நரேந்திர சின்னம்) என்றபடி 'வர்மா' என்ற பட்டப் பெயரை வைத்துக்கொண் டிருந்ததாகத் தெரிகிறது. சோழர்களும் 'வர்மா' என்று சொல்லிக்கொண்டது உண்டு.

சிலாபோகம், ஸ்தலாபோகம் என்பதுபோல் சொல்லுக்கும் ஏற்றமும் வீழ்ச்சியும் வருங்காலம் உண்டென்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் கொஞ்சகாலம் இவ்வம்சத்தாரே 'வர்மாப்' பட்டத்தையும் பிறகு சோழப் பட்டத்தையும் தரித்து அதன் பின் அதுவும் நசித்ததற்கு என்ன காரணம்?

சோழப்பட்டம் ஏறக்குறையப் பதினைந்தாம் நூற்றாண்டுவரையில் அமுலில் இருந்தது. பிறகு ஜனங்களுக்கு அசாத்திய வெறுப்பு வந்ததோ அப்பட்டத்தின் மேல் யார் பழிவாங்கினார்களோ தெரியாது. அந்த வம்சங்களுடன் சோழப்பட்டமும் தேய்ந்து மாய்ந்து வந்தது. துருக்கர்களின் பிரதாபம் தேசத்தில் அதிகரித்ததால் அவர்களுடைய பட்டங்களின்மேல் ஜனங்களுக்கு ஆசை விழுந்தது ஒரு காரணம். சந்திரவம்சத்து யதுவின் குலத்தார் தலையெடுத்ததும் (துங்கபத்திரா நதிக்கரையில்

விஜய நகரம் முதலிய இடங்களில்) இந்தப் பட்டத்தின் மதிப்புக் குறையக் காரணமாயிற்று. சோழவம்சத்தில் பல கிளைகள் ஏற்பட்டதும் ஒரு காரணமாகும். இப்பிரிவினரே ரே நாட்டார், கம்மவார், வெலமவார் என்று அந்த அந்தப் பிரதேசங்களின் வழக்குக்குத் தகுந்தபடி பெயர் வைத்துக்கொண்டதாகத் தோன்றுகிறது.

## கம்மவாரின் முன்னோர்கள்

கம்மவார் சூரிய, சந்திரவம்சத்தவர்களென்று தெரிந்து கொண்டோம். அதனாலேயே சூரிய, சந்திரவம்சத்தார் எல்லோரும் கம்மவாரின் முன்னோர்கள் என்று சொல்ல முடியாது. சூரிய, சந்திர கோளங்களிலிருந்து மனிதர்கள் பிறந்தார்கள் என்று புராணங்கள் சொன்னாலும் அது இயற்கைக்குப் பொருந்தாததால் அதை நம்ப முடியாது. வேதகாலத்தில் குல நிர்ணயம் இல்லாதபோது சூரிய ஆராதனையும் சூரியக் கொடி முதலிய விருதுகளும் கொண்ட ஆரியர்களும் ஆரியர் அல்லாதவர்களும் சூரியவம்சத்தவர்கள் ஆனதாகத் தோன்றுகிறது. இந்த முறையிலே சந்திரவம்சத்தவரும் தோன்றியிருப்பர். இதுதான் உண்மை. இவர்கள் க்ஷத்திரியத் தொழில் செய்தவர்கள். சூரிய வம்சத்தில் தூர்ஜய, கரிகால் சோழ வம்சத்தவர்களும் அவர்களோடு சம்பந்தப்பட்டவர்களுமே கம்மவாரின் முன்னோர்களாயிருப்பார்கள். இப்பொழுது சூரிய, சந்திரவம்சத்தாரென்று சொல்லிக்கொள்பவர்கள் பலர் பல இடங்களில் இருக்கிறார்கள்; பல பாஷைகள் பேசுகிறார்கள். மகாராஷ்டிர தேசத்துப் 'பான்ஸ்லேக்'களும் விஜய நகரம், ஜயபூர் ஸம்ஸ்தானாதிபதிகள் (கஜபதிகள்), முதலிய தெலுங்கர்களும் கோரக்பூராரும் குஜராத்தியில் சிலரும் கேரள, நேபாள அரசவம்சத்தாரும் கூர்மவம்சம் என்று சொல்லிக்கொள்ளும் மராட்டியரும் குவாலியர் ஸம்ஸ்தானத்துச் சிந்தியாக்களும் சதாரா, நாகப்பூர் ஜில்லாக்களில் இருக்கும் அரச குடும்பங்களும் ராஜபுத்திரர்களும் சூரியவம்சத்தினர் என்றே சொல்லிக்கொள்ளுகிறார்கள். இவர்கள் அனைவரும் ஆதிகால முதல், ஆரிய மத வழக்கப்படி, சூரிய பூஜை செய்து, தொழிலினால் சூரியவம்ச க்ஷத்திரியர்களென்று மதிக்கப்

பெற்றார்கள் என்று நம்பலாம். கம்மவாரின் தாய்ப் பாஷை ஆந்திரமானதால் வேறு பாஷை பேசுபவர்களைக் கம்மவாரின் முன்னோர் என்று சொல்ல முடியாது. முன்பு படித்தபடி மிகப் பழையதான ஆந்திர மொழியிலிருந்தே மகாராஷ்டிரம் முதலிய பாஷைகள் உண்டாயின என்று நம்ப இடமிருந்தாலும் வெகு காலத்துக்கு முன்னமே இந்த மகாராஷ்டிரம் முதலிய பாஷை பேசுவோர் அந்த அந்தத் தேசங்களில் தங்கி அங்கேயே சூரியவம்சத்தவர்கள் என்று சொல்லப்பட்டார்களேயன்றி ஆந்திரதேசத்துக்கு வந்து கம்மவாராக மாறியிருக்க முடியாது. அதனால் மேலே சொன்னவர்கள் எல்லோரும் சூரியவம்சத்தினராக இருந்தாலும் கம்மவாரின் முன்னோர் அல்லர் என்பதை உறுதியாகச் சொல்லலாம்.

ஆறும் நூற்றாண்டில் கரிகால் சோழன் காகிதபுரத் (ஓரங்கல்) துக்கு வரும் முன்பே சூரியவம்சத்தில் பூகிய, ஸகர, ஸலிகி, தலவார வம்சங்கள் இருந்ததாக, நாகார்ஜுன மலை, ஜக்கைய பேட்டை முதலிய இடங்களில் கிடைத்த சாஸனங்களால் தெரிய வருவதாக ஆராய்ச்சியாளர் நிர்ணயித்தனர்.[1] மாதவ வர்மாவின் சந்ததியாராகிய சூரியவம்சத்தார் சிலர் உளர். இப்படிச் சூரிய வம்சத்தில் எவ்வளவு பிரிவினைகள் ஏற்பட்டுக் காலச் சுழலில் மறைந்தனவோ எந்த எந்தப் பெயருடன் இருக்கின்றனவோ நமக்குத் தெரியாது. பல்லவ அரசர்களும் சூரியவம்சத்தில் சம்பந்தம் செய்த பின்பு காஞ்சிபுரத் தலைவர்கள் என்றும் சூரியவம்சத்தவர்கள் என்றும் சொல்லிக்கொண்டு வந்ததாகக் கொண்டூரி, பொத்திய நாயக்கன், நாகதேவன், பிரகொட்டம் என்னும் இடத்தில் பய்யராஜன் மனைவியாகிய கொம்மிதேவி முதலியவர்கள் எழுதுவித்த சா. ச. 1037, 1053, 1054-ஆம் வருஷத்துப் பெஜவாடா மல்லேச்வரர் கோயில் சாஸனங்களாலும்[2] தக்ஷாராம பீமேச்வரர் கோயில் சாஸனங்களாலும் தெரிகிறது. உண்மையில் இவர்களுடைய முன்னோர் சூரியவம்சத்தினருடன் சம்பந்தம் செய்துகொண்டதால் இவர்கள் சூரிய குலத்தினர் என்று எழுதிக்

---

1. ஆந்திரர் சரித்திரம் 5-ஆம் பாகம்; இதில் 6-ஆம் நூற்றாண்டென்றது 5-ஆம் நூற்றாண்டாயிருக்கலாம்.

2 S. I. I. Vol. IV. pp. 240, 243, 249, 422.

கொண்டது குற்றம் ஆகாது. இவர்களுடைய பழைய விருத்தாந்தத்தை முன்பே எழுதியிருக்கிறேன். இவர்களைப் போன்றவர்கள் எல்லோரும் கம்மவாரில் சேர்ந்திருக்கவேண்டும். ஏனெனில் இந்தக் குண்டுரிவார் கம்மவாரில் இருக்கிறார்கள். கொண்டுரி, நாளடைவில் 'குண்டுரி'யாக மாறியிருக்கலாம். இது போலவே சந்திர வம்சத்திலும் யது, வ்ருஷ்ணி, போஜ, அந்தகக் கிளைகளும் சாளுக்கிய, காங்க, துளுவ, சங்கமம் முதலிய கிளைகளும் இருப்பதாகப் புராணங்களாலும் சாஸனங்களாலும் அறிகிறோம். இப் பிரிவுகளின் பெயர்கள் அவர்கள் வசிக்கும் தேசங்களுக்கும் சம்பந்தங்களுக்கும் ஒப்ப மாறுதல் அடைந்ததாகத் தோன்றுகிறது.

மேலே சொன்ன விஷயங்களால், கம்மவார் சூரியவம்சத்தினர் என்று சொன்னதால் சூரியவம்சத்தைச் சார்ந்த மகாராஷ்டிரர் முதலியவர்களுடைய சந்ததியார் ஆகார். கூர்மவம்ச க்ஷத்திரியர்களும் கம்மவாரின் முன்னோர் என்பது வெறும் பிரமையே என்றும் தீர்ந்துவிட்டது. இவர்களும் சூரியகுலத்தினரே என்பதால் விபரீதம் ஒன்றும் ஏற்படாது. இப்படியே சந்திரவம்சத்தில் சிலர் மட்டுமே அதாவது சூரியவம்சத்தில் சம்பந்தம் செய்தவர்கள் மட்டுமே கம்மவாரின் முன்னோர்களாக இருப்பார்கள்.

நேபாளத்து அரசர்களும் கேரள தேசத்து அரசர்களும் சூரிய வம்சத்தினரே என்பது அவர்களுடைய பழைய சாஸனங்களிலிருந்து தெரிகிறதல்லவா? இவர்கள் எல்லோரும் கம்மவாரின் முன்னோர்கள் என்றால் சிரிப்புக்கு இடமாகும் அன்றோ! இது போலவே சந்திரவம்சத்தார் என்று சொல்லிக்கொண்ட ராஷ்டிரகூடர்களும் விஜயநகர அரசர்களும் கம்மவாரின் முன்னோர் அல்லர். இவர்கள் எல்லோரும் இந்து மதத்தினரேயானாலும் தேச, பாஷைகளில் மிக மிக வித்தியாசம் உள்ளவர்கள். அப்படிப்பட்டவர்கள் அந்த அந்தப் பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு மூல புருஷர்கள்.

## ஜாதிக் கலப்பு

பிராம்மணர்களில் சூரியவம்ச, சந்திரவம்ச க்ஷத்திரியர்கள் பலர் சேர்ந்துவிட்டதாகப் புராணங்கள் முறையிடுகின்றன. அக்

காலத்தில் தொழில் காரணமாகக் குலப் பிரிவினை அமுலில் இருந்ததாலேயே இப்படி நடந்திருக்கும். இந்த வழக்கம் வேத காலம் முதல் கி. பி. 1000 வரை நடைமுறையில் இருந்திருக்கலாம். அந்தக் காலத்துச் சம்பந்தங்களை இனி வரும் பகுதியில் படிப்பீர்கள். பழைய சாஸனங்களிலும் ஒரு குலத்தார் வேறொரு குலத்தில் சேர்ந்ததற்கு ஆதாரங்கள் கிடைக்கின்றன. பல்லவர்களில் சிலர் பிராம்மணர்கள் என்று அரும்பாக்கம் சாஸனத்தால் தெரிகிறது. புராணத்தில் பரசுராமர் சில குலத்தாரைப் பிராம்மணர்களாக்கியதாக எழுதியிருக்கிறது. இதை முன்பே விவரித்திருக்கிறேன். கி. பி. 673–ஆம் வருஷத்துச் சந்தலூர்ச் சாஸனத்தில்[1] போயப் பிராம்மணர்கள் சிலருடைய பெயர்கள் காணப்படுகின்றன. இதனால் அதற்கு முன்பே போயர் என்னும் வகுப்பார் பிராம்மணத் தொழிலை ஏற்றுக் கௌண்டின்ய கோத்திரத்தார்களாய் இருந்ததாகத் தெரிகிறது. அக்காலத்தில் 'போயர்' என்ற குலப் பெயரை இடையர்களே வைத்துக்கொண்டிருந்ததாகச் சாஸனச் சான்றுகள் உள.

கம்மகுலத்துப் பிராம்மணர்களைப்பற்றிக் கி. பி. 1000-ஆம் வருஷத்து இரண்டாம் அம்மராஜ விஜயாதித்தியனுடைய குரவாடா சாஸனத்திலும் கி. பி. 1011-ஆம் வருஷத்து (மேற்குச் சாளுக்கியர்) விக்கிரமாதித்தனுடைய ஆலூர்ச் சாஸனத்திலும் காணப்படுகிறது.[2] கம்ம கோமட்லு என்பவர்களைப் பற்றி சா. ச. 990-ஆம் வருஷ காலத்துக் கம்மகோமட்டி பாப்பையாவின் தக்ஷாராம சாஸனத்தாலும் சா. ச. 1072-ஆம் வருஷத்துக் கம்ம கோமட்டி கொம்மிசெட்டி சாஸனத்தாலும் சா. ச. 1123-ஆம் வருஷத்துக் கம்மகோமட்டி அமிதமசெட்டி ஸரஸிபுர (ஏலூர்)

1 "ஏஷக்ராமோஸ்மாபி: பிராம்மணேப்ய: சாங்தோகேப்ய: கௌண்டின்ய கோத்ரேப்ய: ஷட்கர்ம நிரதேப்ய: ஸததாவிச்சின்ன பஞ்சமஹாயக்ஞ க்ரியேப்ய: குடாரவாஸ்தவ்யாயத்வே, அம்சேவம்க்ர போயாயத்வே, கொல்லிபுரோ போயாயத்வே, பிதன போயாயத்வே: குரியத போயாயத்வே, காளபவ கோத்ராய கோதிங்கி போயாயத்வே, அம்சே ஏவமேத்யப்ய: பிர்மதேய மர்யாதயா ஸர்வ பரிஹாரேசபேதோ தேவபோக ஹலவர்ஜம்"-சந்தலூர்ச் சாஸனம் - எபிகிராபிகா இண்டிகா, பாகம் 8. பக். 236.

2 "விப்ர குள கமள பாஸ்கரம், பார்வரோல் கண்டம் ஸப்த கிராமாக்ர கண்யாம்,கம்மகுலோத்பவம் இத கோத்ரம் திண்டபண்டித புத்ரம்"-ஆலூர்ச்சாஸனம்.

சாஸனத்தாலும் நாம் அறிகிறோம்[1]. தெலுங்குப்பிராம்மணர்களில் இன்றைக்கும் பொப்பூரிகம்ம, ஆறுவேலகம்ம, கரணகம்ம என்பவர்கள் இருக்கிறார்கள்.

வைசியர்களின் கன்னிகா புராணத்தில் வைசியர் சிலர்-200 கோத்திரத்தார் (200 பேராக இருக்கலாம்) -கம்மவாரில் சேர்ந்து விட்டதாக எழுதியிருக்கிறது.[2] இதற்குச் சான்றாகக் கம்ம கோமட்டிகள் காணப்படுவதோடு வைசியர்களில் பலருக்கு இருக்கும் குலப்பெயர்க் கோத்திரங்கள் கம்மவாரில் சிலருக்கு இருப்பதால் அவர்கள் எல்லோரும் ஆதியில் வைசியத் தொழில் நடத்தி வந்ததாகத் தெரிகிறது. 'பெத மக்கென' என்னும் கிராமத்துச் சாஸனத்தில் கம்மவாரில் பிற ஜாதியார் சேர்ந்ததாக எழுதியிருப்பதாகச் சரித்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள்.[3] மேலே கண்ட செய்திகளால் பிற ஜாதியார் கம்மவாரிலும் கம்மவார் பிற ஜாதியிலும் கலந்துவிட்டார்களென்று நினைக்க இடமிருக்கிறது. இவற்றை ஆராயாதுவிட்டால் விஷயம் பொய்யென்பர். கம்ம பிராம்மணர்களையும் கம்ம கோமட்டிகளையும் பற்றி ஆராய்வோம்.

கம்ம பிராம்மணர், கம்ம கோமட்டிகள் என்றால் கம்மநாட்டுப் பிராம்மணர்கள் கம்மநாட்டுக் கோமட்டிகள் என்று ஆகக்கூடாதா என்று சிலர் கேட்கலாம். மேலே சொன்ன சாஸனத்தில் கம்ம குலத்தில் பிறந்த பிராம்மணர்கள் என்றே ஸ்பஷ்டமாக எழுதியிருக்கிறது. போயப் பிராம்மணர்கள் இருப்பதுபோல்[4] கம்ம பிராம்மணர்களும் இருக்கலாம். ஆனால் மற்றொரு பிரச்னையும் எழலாம். 13—ஆம் நூற்றாண்டுக்கு முன் கம்மவார் என்று யாரும் எழுதிக்கொண்டதாக ஆதாரம் இல்லையே; அப்படியிருக்க இந்தப் பிராம்மணர்களும் கோமட்டிகளும் கம்மநாட்டில் இருந்த

---

1 S. I. I. vol. IV.

2 "கம்மடவாரென்னும் கம்மவாரில் ஈனகுலத்தவர் இருநூறுபேர் சேர்ந்தார்கள்" என்று காணப்படுகிறது.

3 ஆந்திரச் சரித்திரம் 5-ஆம் பாகம்.

4 பொப்பூரிகம்ம, ஆறுவேலகம்ம, கரணகம்ம என்பவர்கள் பிராம்மணர்களில் இருப்பதால் அவர்களே கம்மநாட்டுப் பிராம்மணர்கள் என்று சொல்ல முடியாது. அந்த அந்தக் கிராமத்துக் கம்மவாரே பிராம்மணர்கள் என்று சொல்வதே பொருத்தம்.

வர்கள் அல்லது கர்ம குலத்தவர் என்னும் பொருள்கள் பொருந்துமே எனலாம். இதைச் சாவதானமாக ஆராயவேண்டும்.

கம்ம என்ற பெயர் ஒரு ஜாதியைக் குறித்தது எந்தக் காலம் முதலாக என்பது தெரியவில்லை. திமில திராவிடப் (தெலுங்கு தேசத்துக்கு வலங்கைமானிலிருந்து போன) பிராம்மணர்களில் கம்மவார் என்ற ஒரு பிரிவு இருக்கிறது. இவர்கள் காசியப கோத்திரத்தார். இவர்களில் கண்ட்ர மாணிக்கம், மிளகு, மழநாடு, பழமானேரி, சுண்டைக்காய் என்னும் ஐந்து பிரிவுகள் இருக்கின்றன. முன்குடுமியார் (புரச்சூடர்) சோழியர் என்ற இரு பெயர்களும் சோழர்களுக்குப் பொருந்தும். சோழநாட்டினரையே சோழியர் என்றும் சுண்டைக்காய் என்றும் ஒரு வகையாகச் சுட்டியிருக்கிறார்கள். சோழர்கள் கம்மவாரின் முன்னோர் என்பதையும் காசியப கோத்திரத்தார் என்பதையும் படிக்கப்போகிறீர்கள்.

கம்மவாரில் இப்பொழுதும் அன்னங்குல கோத்திரத்தாரும் கனுமூராரும் பால குல கோத்திரத்தாரும் குலகோட்ட அல்லது கோட்டகுலவாரும் கனிகுல கோத்திரத்தாரும் இருக்கிறார்கள். குல என்ற பதத்தில் முடியும் பெயர்கள் வைசியர்களுக்குமட்டுமே உண்டு என்பதை முன்னமேயே சொல்லியிருக்கிறோம். இது தவிரக் கம்மவாரில் கோழடி, கோமடி நீடு என்ற வீட்டுப் பெயர்கள் இருக்கின்றன. இவர்கள் எல்லோரும் ஆதியில் வைசியத் தொழிலில் இருந்து கன்னிகா புராணத்தில் சொல்லியபடி கம்மவாரில் சேர்ந்திருப்பார்களென்று நம்பும்படி இருக்கிறது.

கம்மவாரின் முன்னோர் முதலில் சூரியவம்சத்தினராக இருந்து சந்திரவம்சத்தினருடன் சம்பந்தங்கள் செய்ததால் இரு வம்சங்களும் கம்மவாரில் இருக்கின்றன. இவ்விஷயத்தை வேறோர் இடத்தில் விவரிப்போம். 'பெதமக்கென' சாஸனத்தில் கம்மவாரில் வேறு சில குலத்தார் சேர்ந்ததாக எழுதப்பட்டிருக்கிறது (ஆந்திரர் சரித்திரம் 5-ஆம் பாகம்).

இப்படி எல்லாக் குலத்தாருமே தொழிலால் ஒன்றுபட்டதாகச் சரித்திரக்காரர்கள் சான்றுகூடத் தருகிறார்கள். இப்படிக் கலப்பதை மதாசாரியர்களும் அவர்களை அனுசரித்த அரசர்களும்

தடுக்க முயன்றார்கள். கி. பி. 10–ஆம் நூற்றாண்டு வரையில் இப்படி ஜாதிக் கலப்பு நடந்துகொண்டுதான் இருந்தது. 2–ஆம் நூற்றாண்டில் ஆண்ட ஆந்திர அரசனாகிய கௌதமீபுத்திர சாதகர்ணி தன் விருதில் ஜாதிக் கலப்பைத் தடைசெய்தவன் என்று எழுதிக் கொண்டிருக்கிறான் (EP. Ind. Vol. 8, P. 90, No. 2). பொது ஜனங்களைவிடச் சுயேச்சையுடைய அரசர்களே அதிகமாகக் கலப்புக்கு இடங்கொடுத்ததாக இனிமேல் படிப்பீர்கள்.

## சோழஅரசர் சம்பந்தங்கள்

வெலநாட்டுச்சோழர்கள் தவிர, தெலுங்குச்சோழ அரசர்களும் காஞ்சிபுரச்சோழர்களும் சூரியவம்சத்தவரே என்று சொல்லிக்கொண்டார்கள். இதற்குப் பல சான்றுகள் உள்ளன. வெலநாட்டுச்சோழர்கள் மட்டும் சதுர்த்தர்கள் என்றும் சந்திர வம்சத்தார் என்றும் எழுதிக்கொண்டார்கள். அதனால் இவர்களுக்கும் மற்ற சூரியவம்சச் சோழர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றும் வேறு ஜாதியினரென்றும் சரித்திரக்காரர்கள் சிலர் நினைக்கலாம். சூரிய, சந்திரவம்சங்களுக்குள் எப்பொழுதுமே சம்பந்தம் இருந்திருக்கிறது. அந்த வம்சங்களிலிருந்து தள்ளப்பட்டுச் சதுர்த்தர்களானவர்களுடன் அவர்களுக்குச் சம்பந்தம் இருந்ததாகத் தெரிகிறது. கி. பி. 1000-ம் வருஷம் வரையிலும் பின்பும் சோழ, சாளுக்கிய, காங்க வம்சங்கள் எனப்படும் சூரிய, சந்திர வம்சங்கள் இஷ்டப்படி தமக்குள் சம்பந்தம் செய்துகொண்டார்கள். மேலும் தொழிலால் க்ஷத்திரியர்களாகிய பல்லவ, வைதும்ப ராஷ்டிரகூட அரசர்களுடனும் சம்பந்தம் செய்தார்கள். சில உதாரணங்களை இங்கே காண்பிக்கிறேன்:

1. 10–ஆம் நூற்றாண்டில் ஆண்ட காஞ்சிபுரச் சோழர்களில் முதல் பராந்தக சோழன் கேரள ராஜகுமாரியை மணந்தான். கேரள ராஜ வம்சத்தார் சூரிய குலத்தினர்; இவர்களைப் பற்றிய விவரங்கள் தெரியாவிடினும் இவர்கள் சூரியவம்சத்தினரே என்பது உறுதி. (S. I. I. Vol. 1, P. 112).

2. காஞ்சிபுரச்சோழனை பராந்தகனுடைய மகனாகிய அரிஞ்ஜயன் மணந்த மூவரில் வைதும்ப ராணியாகிய கல்யாணி ஒருத்தி;

ஆந்திரசோழபீமனுடைய மகளாகிய குந்தவை மற்றெருத்தி. இந்தச் சோழபீமன் சடைச் சோழபீமனுக இருக்கலாம். அதனுல் இது சூரியவம்சத்தின் இரு பிரிவுகளின் சம்பந்தமாக இருக்கலாம்- (A. R. E. 26, 1 of 1921. J. A. H. R. S. X. P. 180.)

3. இரண்டாம் பராந்தகனுகிய சுந்தரசோழன் தன் மகளாகிய குந்தவையைப் பல்லவ அரசனுகிய வந்தியத்தேவனுக்குக் கொடுத்து மணம் செய்வித்தான். இவனும் 10-ஆம் நூற்றுண்டினனே - (S. I. I. Vol. I. P. 112.)

4. 11-ஆம் நூற்றுண்டில் கலிங்கநாட்டு அரசனுகிய அனந்தவர்ம சோழ கங்கராஜன் ஜயங்கொண்டார் சோழமாதேவியை மணந்தான். இவள் காஞ்சிபுரச்சோழன் மகள். (J. A. H. R. S. Vol. IV.) காங்கர் சந்திர வம்சத்தார். அதனுல் இது சூரிய, சந்திரவம்சத்தாரின் சம்பந்தம்.

5. 11-ஆம் நூற்றுண்டில் ராஜராஜன் என்னும் ராஜகேசரி வர்மா (காஞ்சிபுரச்சோழன்) தன் மகளாகிய குந்தவையைக் கிழைச் சாளுக்கியனுகிய விமலாதித்தியனுக்குக் கொடுத்தான் - (S. I. I. Vol. I. P. 112.) இதுவும் சூரிய, சந்திரவம்சங்களின் சம்பந்தமே.

6. இரண்டாம் மதுராந்தகனெனப்படும் ராஜேந்திரசோழன் தன் மகளாகிய அம்மங்காதேவியை 11-ஆம் நூற்றுண்டில் கிழைச் சாளுக்கியனுகிய ராஜராஜ நரேந்திரனுக்குக் கொடுத்து விவாகம் செய்வித்தான். (S. I. I. Vol. I. P. 112.) இதுவும் சூரிய சந்திரவம்சங்களின் சம்பந்தமே.

7. 10-ஆம் நூற்றுண்டின் காங்க வம்சத்தவனுகிய வஜ்ரஹஸ்தன் V ஹைஹய ராஜ குமாரியாகிய விஜய மகாதேவியை மணந்தான். (No. 112 C. S. I. I. Vol. V. P. 412.) இது சந்திரவம்சத்தின் இரு பிரிவினருடைய சம்பந்தம். இந்த வஜ்ர ஹஸ்தனுடைய தந்தையான காமார்ணவன் வைதும்ப ராஜ கன்னியாகிய வினயமகாதேவியை மணந்தான். (J.A.H.R.S. Vol. VI, P. 201.)

8. ராஜேந்திர தேவன் என்னும் சோழ ராஜன் தன் மகள் மதுராந்தகியை 11-ஆம் நூற்றுண்டின் முதல் குலோத்துங்க

சோழ தேவன் என்னும் சாளுக்கிய அரசனுக்குக் கொடுத்தான். இக்குலோத்துங்கனே ராஜராஜநரேந்திரனுடைய மகனும் சந்திர குலத்தினனும் ஆவான் - (S. I. I. Vol. I. P. 52.)

9. தெலுங்குச்சோழர்களில் பல்லயசோழன் என்பவன் ஹைஹயகுலப் பெண்ணாகிய ஸ்ரீயாதேவியை 12-ஆம் நூற்றாண்டில் மணந்தான் - (நன்னெசோழனுடைய குமாரசம்பவம்.) இது சூரிய, சந்திரவம்சச் சம்பந்தமே.

10. அனந்தவர்ம சோழ கங்க தேவனுடைய தந்தையாகிய தேவேந்திர வர்ம ராஜ ராஜன் ராஜேந்திர சோழ ராஜனுடைய குமாரியாகிய ராஜசுந்தரியை 11-ஆம் நூற்றாண்டில் மணந்ததாகச் சில சாஸனங்களால் தெரிகிறது - (பாரதி பத்திரிகை கார்த்திகை இதழ் and C. P. NO. 4, A R. for 1918-19.) இதுவும் சூரிய, சந்திரவம்ச சம்பந்தமே.

11. 9-ஆம் நூற்றாண்டின் கீழைச் சாளுக்கிய அரசனாகிய கலி விஷ்ணுவர்த்தனன் ராஷ்டிரகூட ராஜகுமாரி சுசீலையை மணந்தான் – (ஆந்திரர் சரித்திரம் 5-ஆம் பாகம், பக். 46.)

12. காங்கவம்சத்துப் பூதுக ராஜன் 10-ஆம் நூற்றாண்டில் ராஷ்டிரகூட அரசனாகிய 3–ஆம் கிருஷ்ணராஜனுடைய சகோதரியை மணந்தான். இருவரும் சந்திரவம்சத்தினரேயானாலும் வேறு வேறு பிரிவினர்.

13. 12-ஆம் நூற்றாண்டில் பல்நாட்டு வீரனாகிய தொட்ட நாயக்கனுடைய மகன் பாதன்னனை[1] (துர்ஜயவம்சத்தவன்) ஹைஹயவம்சத்தவனாகிய சாகி அனுகுராஜன் வளர்த்துக் கொண்டதாகப் பல்நாட்டு வீர சரிதத்தால் தெரிகிறது.

14. இந்தச் சாகி அனுகுராஜன், சந்திரவம்சத்து வெலநாட்டுச் சோழ குமாரியாகிய மைலமதேவியை மணந்துகொண்டு பல்நாடு சீமையைச் சீதனமாகப் பெற்றான்.

---

1. இவன் துர்ஜயகுலத்தவன் என்பதற்கு வெலமவார் துர்ஜயவம்சத்தவர் என்று கூடூர்ச் சாஸனம் தெளிவாகத் தெரிவிப்பதே காரணம்.

15. அனுகுராஜனுடைய தத்துப்பிள்ளையாகிய பாதன்ன வெலகாட்டுச் சோழவமிசத்துக் கிருஷ்ணராஜனுடைய மகள் முக்தலவாம்பாளை மணந்தான்.

16. இதே நூற்றாண்டில் நலகாமராஜன் மகள் பேரம்மாவைக் கல்யாணபுரத்தரசனும் ஹைஹயவம்சத்தவனுமாகிய ராசமல்லன் மணந்தான். (14, 15, 16 நம்பர்களின் சம்பந்தங்களுக்கு ஆந்திரர் சரித்திரம் பார்க்க.)

17. 13-ஆம் நூற்றாண்டில் நிடதவோலு பிரதேசத்தை ஆண்ட சாளுக்கிய அரசனாகிய இந்துசேகர சக்கரவர்த்திக்கும் உதயாம்பிகைக்கும் பிறந்த அன்னமாம்பாவை ஹைஹயவம்சத்து அரசனாகிய கோனபீமராஜன் மணந்தான். (S. I. I. Vol. V, P. 45.)

18. சாளுக்கிய அரசனாகிய நிடதப்ரோலு மகாதேவ சக்கரவர்த்தியின் மகளாகிய பினவுதய மகாதேவியை 13-ஆம் நூற்றாண்டில் கோனகணபதி அரசன் மணந்தான். இது சாளுக்கிய, ஹைஹயவம்சங்களின் சம்பந்தம். (S. I. I. Vol. V, P. 47.)

19. காங்க வம்சத்து அரசனாகிய் மூன்றாம் வஜ்ரஹஸ்தன் வைதும்பராணியாகிய வினயமகாதேவியை மணந்தான். (J. A. H. R. S, Vol. VIII. pp. 165.)

20. கி. பி. 1198-1211-ஆம் வருஷங்களின் நடுவில் ஆண்ட காங்கவம்சத்து அரசனாகிய மூன்றாம் ராஜராஜன் சாளுக்கிய கன்னியாகிய மாங்குவையை மணந்தான். இது சந்திரவம்சத்தின் இரு பிரிவுகளின் சம்பந்தம். (J. A. H. R. S. Vol. VI, P. 212.)

21. ஹைஹயவம்சத்துப் பரமார்த்த தேவன், காங்கவம்சத்தவனாகிய அனங்க பீம ராஜனுடைய (கி. பி. 1211-1245 நடுவில் ஆண்டவன்) மகளாகிய சந்திரதேவியைக் கல்யாணம் செய்து கொண்டான் - (புவனேச்வர சாஸனம்.) இதுவும் சந்திரவம்சத்தின் இரு பிரிவுகளுடைய சம்பந்தமே.

22. கி. பி. 1264-1279 வருஷங்களின் இடையே ஆண்ட காங்கவம்சத்தவனாகிய பானுதேவன் 1, சாளுக்கிய ராஜகுமாரியாகிய ஜக்கல தேவியை மணந்தான் – (C. P. grant of Narasimha II).

இதுவும் சந்திரவம்சத்தின் இரு பிரிவுகளின் சம்பந்தம்.

23. 11-ஆம் நூற்றுண்டில் கலிங்க நாட்டை ஆண்டு மிகக் கீர்த்தி பெற்ற அனந்தவர்ம கங்க ராஜனுக்கு இருந்த ஐந்து மனைவிகளில் ஒருத்தி (இந்திரா) சூரியவம்சத்துப் பெண். இவள் மகனுகிய ராகவராஜனும் முறைப்படி ராஜ்யத்துக்கு வந்தான். (J. A. H. R. S. Vol. VI, P. 212.)

24. கலிங்கத்தை ஆண்ட - 14-ஆம் நூற்றுண்டின் இடையில் இருந்த காங்க அரசனுகிய மூன்றும் பானுதேவன் சாளுக்கிய ராஜகுமாரி ஹீராதேவியை மணந்தான்—(J. A. S. B. Vol. LXIV, Pts. 1—2.)

25. 12-ஆம் நூற்றுண்டில் கம்மநாட்டை ஆண்ட தெலுங்குச் சோழர்களில் திரிபுவன மல்லதேவ சோழனுடைய தாயாகிய ச்ரியாதேவிக்கு, ஆந்திர சக்கரவர்த்தியும், சாளுக்கியனும் ஆன விஜயாதித்தியதேவன் தாய்மாமன் என்றும் அவளுடைய தாய், சடைச்சோழனுடைய பேரத்தி என்றும் கொட்டியதொன சாஸனம் தெரிவிக்கிறது. (S. I. I. Vol. VI, P. 634) இது சூரிய சந்திரவம்சங்களின் சம்பந்தம்.

வெலநாட்டுச் சோழ அரசர்கள், தம்மைப்போலவே சந்திர வம்சத்திலிருந்து சதுர்த்தர்களான, தனஞ்ஜய கோத்திரத்தாராகிய கோட்டை வம்சத்தாருடன் முதலில் சம்பந்தம் செய்து கொண்டிருந்தார்கள் என்பதற்குக் கீழ்க்காணும் செய்தி திருஷ்டாந்தம் ஆகிறது.

கி. பி. 1132-1160 வருஷங்களுக்கு இடைக்காலத்தில் சந்தவோலுவைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட வெலநாட்டு இரண்டாம் கொங்கராஜனுடைய சகோதரியாகிய சப்பமதேவியைத் தரணிக் கோட்டை அரசனுகிய கோட்டகேத ராஜன் மகன் பீமராஜனுக்குக் கொடுத்தார்கள். இந்த விஷயம் அமராவதியிலிருக்கும் கேதராஜன் சாஸனத்தால் தெரிகிறது.[1] இந்தச் சம்பந்தத்தாலேயே

---

1 ‘கொங்க க்ஷிதீச சகிஜோ, பகிஜோ குணட்யா, ஸ்ப்பாஹ்வயா கமலசாருதராஸ்புடஸ்ரீ:, தஸ்யாபவத் ப்ரியதமா புருஷோத்தமஸ்ய.........’

கேதராஜன் II பிரசித்தியடைந்தான். கோட்டை அரசர்கள், பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நதவாடி சீமை அரசர்களைப் போலவே துர்ஜய வம்சத்துக் காகதிய அரசர்களுடன் சம்பந்தம் செய்து அவர்களுக்குச் சிற்றரசர்களாக ஆண்டு வந்ததாகவும், வெலநாட்டு அரசர்களுடைய சம்பந்தத்தைக் குறைத்துக் கொண்டதாகவும் கீழே காணும் செய்தியால் தெரிகிறது. அதோடு வெலநாட்டு அரசர்களும் துர்ஜய வம்சத்துக் கொண்டபடமடி சீமை அரசர்களுடனும் கோனகன்ட்ரவாடி அரசர்களுடனும் சம்பந்தம் செய்ததாகத் தெரிகிறது.

1. கி. பி. 1163 இலிருந்து 1181 வரையில் சந்தவோலு தலை நகராக ஆண்ட வெலநாட்டு இரண்டாம் சோழ ராஜன் மனைவி யரில் ஒருத்தியாகிய பண்டமாம்பா, கோனகண்ட்ரவாடி பசுபதி அரசனுடைய குமாரி என்று தெரிகிறது.[1]

2. வெலநாட்டு இரண்டாம் சோழனின் இளைய மனைவி யாகிய அக்கம்மா கொண்டபடமடி புத்தராஜனுடைய தங்கை.[2]

3. கி. பி. 1181 முதல் 1186 வரையில் சந்தவோலில் ஆண்ட வெலநாட்டு மூன்றும் கொங்கராஜன் மனைவி ஜயாம்பிகையும், கொண்டபடமடி சீமை ராஜகுமாரிதான்.[3]

கொண்டபடமடி சீமை அரசர்கள் புத்தவர்மாவின் வம்சத் தைச் சேர்ந்தவர்கள். இந்தப் புத்தவர்மாவின் வம்சத்தினரே இக்காலத்து ஆந்திர க்ஷத்திரியர்கள் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. பரிச்சேதர்களும் இவ்வம்சத்தாரே. இவர்கள் வெலநாட்டு அரசர்களுடன் செய்து கொண்ட சம்பந்தங்களே இவர்களுக்குப் பெருமை தந்தன. கோட்டை வம்சத்தார் தனஞ் ஜயனை மூலபுருஷனாகக் கொண்ட சதுர்த்த வம்சத்தார் என்றும் இவர்களுடைய பழைய குடும்பப் பெயர் 'போலெ' என்றும் தெரி

1. இவன் எழுதிய பீமேச்வரர் கோயில் சாஸனத்தைப் பார்க்க. S. I. I. Vol. V.

2. ஆந்திரர் சரித்திரம், 5 - ஆம் பாகம், பக்கம் 864 - 865.

3. ஆந்திரர் சரித்திரம், 5-ஆம் பாகம், பக்கம் 864-865.

விக்கும் ஒரு சாஸனம் இருக்கிறது.[1] இது பெதமக்கென கிராமத்தில் பூரம மகாதேவி எழுதுவித்தது.

தரணிக்கோட்டை அரசர்கள் காலக்கிரமத்தில் கோட்டை என்ற வீட்டுப் பெயரைக் கொண்டிருந்தாலும் அவ்வம்சத்தார் சிலர் 'போலெ'வாராகவே இருப்பதாகப் பாவிக்கலாம். கம்மவாரில் இன்றைக்கும் 'போலெனி, போலூரி, போலு, போலு மெட்ட, போலினேனி' முதலிய வீட்டுப் பெயர்கள் உள்ளவர்களில் எல்லோருமோ, அல்லது சிலரோ, இந்த வம்சத்தவர்கள் என்று தோன்றுகிறது. கோட்டைவாரும் இக்காலத்துக் கம்மவாரில் இருக்கிறார்கள்.

மேலே சொன்ன சம்பந்தங்களில், காங்க வம்சத்தாருடைய சம்பந்தத்தைப்பற்றி அதிகமாக இருக்கின்றன. பர்லாகிமிடி, பெதகிமிடி, சினிகிமிடி அரசர்கள் காங்க வம்சத்தினர் என்று அவர்களுடைய பூர்வ சரித்திரங்களால் தெளிவாகத் தெரிகிறது.[2]

இந்தக் காங்க வம்சத்தாரிடம் சேனாதிபதிகளாக இருந்து கம்மவார் அவர்களுடன் சம்பந்தம் செய்துகொண்டிருந்ததாகத் தெரிகிறது. சமீபத்தில் கிடைத்த 'தர்ம நந்தன விலாஸம்' என்னும் பிரபந்தத்தாலும் அவர்களுடைய விஷயம் ஓரளவு தெரிகிறது. இந்த நூல் விஜயநகர மகாராஜா (பூசபாட்டி - நாராயண கஜபதி) விடம் தண்டநாயகனாக இருந்தவனும் விசாகப்பட்டணம் ஜில்லா பண்டு பல்வித் தலைவனும் கந்தாள கோத்திரத்தவனும் ஆகிய வெலிசேடி குருராயுடு என்னும் கம்ம குலத்தவனுக்காக, காள்ளகூரி சூரய மந்திரி மகனாகிய கௌரிகாந்த கவியால் எழுதப்பட்டது. இந்த நூலுக்குப் பாட்டுடைத் தலைவன் குருராயன். இந்த நூலில் அவனுடைய முன்னோர்கள், காங்க வம்சத்தாரிடம் பல சம்மானங்களையும் விருதுகளையும் பெற்றதாக ஆசிரியர் விவரித்திருக்கிறார். இந்த நூல் இப்பொழுது அடிதமு ராமா ராவ் என்னும் அறிஞரிடம் இருக்கிறது.

முகம்மதியர் காலத்திலோ, அவருடன் சேர்ந்து கொண்ட விஜயநகர கஜபதிகள் காலத்திலோ கங்க வம்ச ராஜ்யத்தின்

1. J. A. H. R. S. Vol. II, Page 270.
2. கலிங்க தேச சரித்திரம், பக்கம் 411 - 416.

பெரும் பகுதி கஜபதிகளுடைய கையின்கீழ் வந்தது. அதுவரையில் அங்கே சேனாதிபதிகளாக இருந்த கம்மவார், கஜபதிகளுக்கும் சேனாதிபதிகளாக இருந்ததாக இந்தப் புஸ்தகத்தில் காணப்படுகிறது. குருராயனுடைய எஜமானனாகிய நாராயண கஜபதியைப் பற்றியும் இதில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. கம்மவாரில் பலர் சோழ, தூர்ஜய வம்சத்தாராகக் காணப்படுவதால் அவர்களுடைய பந்துக்களாகிய சாளுக்கிய, ஹைஹய வம்சத்தாரும் அவ்வம்சங்களில் சேர்ந்திருப்பதால் இவர்கள் எல்லோரும் சமானமான க்ஷத்திரியர்களே.

இப்படிச் சோழ அரசர்கள் எல்லோரும் சமமான சம்பந்தங்களைச் செய்துகொண்டிருப்பதால் வெலநாட்டு அரசர்கள் தாழ்வாகத் தோன்றவில்லை. காஞ்சிபுரச் சோழர்கள் பல்லவர்களுடன் சம்பந்தம் செய்தது தமக்குப் புதுமையாகத் தோன்றினாலும் சரியான சம்பந்தம்தான். பல்லவர்கள் ஆரியமதத்தைச் சேர்ந்தது முதல் க்ஷத்திரியர்களாகிய சூரிய சந்திர வம்சத்தவர்களுடன் சம்பந்தம் செய்து வந்ததாகத் தெரிகிறது. ஆந்திர, சாதவாகன அரசர்களுக்கும், இவர்களுக்கும் உறவு முறை இருக்கிறது. முதல் விஜயாதித்திய சக்கரவர்த்தியின் மகனாகிய விஷ்ணுவர்த்தனன் சந்திர வம்சத்தவனாய் இருந்தும் பல்லவ ராஜகுமாரியை மணந்தான்.

ஆதிகாலத்துப் பல்லவ அரசர்களில் 'வீரகுரச' என்பவன் நாகராஜ கன்னிகையை மணந்ததாகச் சரித்திரம் சொல்லுகிறது. மேலும் கோபாலதேவன் என்னும் பல்லவ அரசன் தான் கைகேய வம்சத்தில் பிறந்தவன் என்று ஹல்திபுர சாஸனத்தில் எழுதிக்கொண்டிருக்கிறான்.[1] இவனுடைய தாய் கேகய ராஜகுமாரி என்று சரித்திரக்காரர்கள் ஊகிக்கிறார்கள். பல்லவ ராஜ வம்சம் இன்று எந்த நிலையில் இருந்தாலும் அவர்களும் முதலில் மற்ற க்ஷத்திரியர்களுக்குச் சமானமானவர்களே என்பதற்குப் பிரமாணங்கள் கிடைக்கின்றன. [2]பழைய சாஸனங்கள் சில

1. EP. Ind. Vol. XXI, Page 173.

2. S. I. I. Vol. Pages 9, 12, 25, 26. அமராவதி, காஞ்சிபுரச் சாஸனங்கள்.

வற்றில் பல்லவ அரசர்கள், தாம் அசுவத்தாமாவின் சந்ததியார் என்றும் அசுவத்தாமாவுக்கும், மதானி என்ற அப்ஸரஸுக்கும் பிறந்ததாகவும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். சந்திர வம்சத்தாரும் புரூரவ சக்கரவர்த்திக்கும், தேவதாசியாகிய ஊர்வசிக்கும் பிறந்தார்கள் என்று புராணம் சொல்லுகிறது அல்லவா? தேவதாசிகளுக்கு இது போன்ற கௌரவம் 12 - ஆம் நூற்றாண்டுவரையில் இருந்ததாகத் தோன்றுகிறது.[1] அசுவத்தாமா பிராம்மணனாக இருந்தும் க்ஷத்திரியத்தொழிலை மேற்கொண்டதால் அவ்வம்சத்தார் என்று சொல்லிக்கொண்ட பல்லவர்களை அக்காலத்தில் க்ஷத்திரியர்கள் என்றே மதித்தார்கள். பின்பு அவர்கள் குலாசாரங்களை விட்டதால் வசிஷ்டர் அவர்களை க்ஷத்திரியர்களிலிருந்தும் மாற்றி விட்டதாக, ஹரிவம்ச புராணத்தில் வரும் சுலோகத்தால் தெரிய வருகிறது.

சுலோகம் :

“ சகா யவனு காம்போஜா:-பாரதா: பஹ்லவா: ததா
கோலி சர்ப்பா: சமாஹிஷா: தர்ப்பாஸ் சோலாஸ் ஸகேரளா:
ஸர்வே தே க்ஷத்திரியாஸ்தாத தேஷாம் தர்மோ நிராக்ருத:
வஸிஷ்டவசனுத் ராஜன் ஸகரேண மஹாத்மனு ”

பல்லவ அரசர்கள் சூரிய வம்சத்தினரென்று சாஸனச் சான்றுகள் கிடைக்கின்றன.[2] பல்லவ, சோழ, சக, யவன, காம்போஜ, பாரத, கேரளர்கள் முதலில் க்ஷத்திரியர்களாக இருந்ததாக இச்சுலோகத்தினால் தெரிகிறது. இவர்கள் எல்லோரும் ஆரிய மதத்தை மேற்கொண்டு க்ஷத்திரியர்கள் ஆகியிருக்கலாம். பல்லவர்கள் சூரிய வம்சத்தினர் என்று எழுதிக்கொண்ட சாஸனங்கள் சா. ச. 1037 - 1053 காலத்தனவாக இருக்கின்றன. மேலே சொன்ன வம்சங்களெல்லாம் முதலில் தொழில் மூலம் க்ஷத்திரியர்களாக மதிக்கப்பட்டன. பிறகு வஸிஷ்டருடைய ஆக்ஞை

1. பெதமுன்னூடி ஸானுலு என்னும் தேவதாசிகளை அரசர் சிலர் மணந்து கொண்டார்களென்று சில சாஸனங்கள் சொல்லுகின்றன. ஹைஹய வம்சத்து வென்ன சோழ ராஜன் மனைவி இப்படி மணந்தவளே, இவள் ரெட்டி குலத்தவள். S. S. Vol. VI. இந்தத் தேவதாசிகள் ரெட்டி குலத்தவர் என்று தெரிகிறது.

2. S. I. I. Vol. IV, Pages 240, 250.

யால் அவர்களை அரசர்களாகப் பாவிக்கக்கூடாது என்று ஏற்பட்டதாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் அவர்கள் பிராம்மணர்களை அநுசரித்துக் கர்மாக்கள் செய்யாததே என்று சொல்லலாம். பிற்காலத்துப் பல்லவர்களையும், இடையர்களையும் கொண்டு, பழைய அரசர்கள் எல்லோரும் இடைச்சேரி ஜாதி என்று ஊகித்தல் தவறு. க்ஷத்திரியர்களே குலவழக்கங்களை விட்டு இடையர் முதலிய ஜாதிகளாக மாறிவிட்டார்கள் என்று கொள்ளவேண்டும். சந்திர வம்சத்தார் சிலரும் காலக்கிரமத்தில் வீரபலிஜ தர்மங்களை அனுசரித்து, பலிஜர்களாகவும், உடையார்களாகவும் மாறிவிட்டதாக அவர்கள் சரித்திரங்களாலும் சாஸனங்களாலும் தெரிகிறது.[1] இது போலவே, புந்தேல்கண்ட் க்ஷத்திரியர்களையும் 'பொந்திலிகள்' என்று அழைத்ததாகத் தெரிகிறது. புண்ட்ரகர், திராவிடர், யவனர், சாக்கியர், பல்லவர் இவர்கள் எல்லோரும் அரசர்களாக இருந்து, பிராம்மணர்களை அனுசரித்து அவர்களுடைய மதவிதிகளைச் செய்யாமல் விட்டதால் சூத்திரர் ஆனார்கள் என்று மனுஸ்மிருதியிலும் காணப்படுகிறது. இதில் சோழர்கள் எல்லோருடைய விஷயமும் எழுதப்பட்டிருக்கிறது. 'வேல நாட்டுச் சோழர்கள்' என்று தனிப்படக் குறிப்பிடவில்லை.

மேலே சொன்ன ஜாதியாரில் இருபிரிவினரை மட்டும் குறிப்பிட்டு, இவர்கள் பிராம்மணர்களுக்கு வரி செலுத்தாததால் சூத்திரர்களாக மாற்றப்பட்டார்கள் என்று பதஞ்ஜலி பாஷ்யகாரர் சொல்லியிருக்கிறார். சாக்கியர், யவனர், காம்போஜர் ஆகியவர்கள் சூத்திரர்களாய்விட்டதாக ஸ்ரீ மகா பாரதத்தில் அனுசாஸனிக பர்வத்தில் காணப்படுகிறது. வேத காலத்தில் பிராம்மணர்கள், மற்றவர்களை ராஜாக்களாக்கவும் பிராம்மணர்களாக்கவும் எப்படிப்பட்ட அதிகாரம் பெற்றிருந்தார்கள் என்பதை முன்பே சொல்லியிருக்கிறேன். சூரிய, சந்திரர்களைத் தொழுததாலேயே மட்டும் அல்லாமல், வேத தீக்ஷையால் சிலரை ராஜாக்க

---

1. விஜயநகர அரசர்களில் அச்சுத ராயருடைய குமாரர் சின வெங்கடாத்ரி ராயரைக் குமார வெங்கடாத்ரி என்றும், சிக்க உடையார் என்றும் அழைத்ததாக 'ஆரவிடு வம்சம்' என்னும் நூலில் இருக்கிறது. இது ஹீராசன்துரை எழுதியது. இதே விஷயம் 'அளியராம ராயலு' என்னும் நூலிலும் 63 - ஆம் பக்கத்தில் இருக்கிறது.

ளாகவும், யாக தீக்ஷையால் சிலரைப் பிராம்மணர்களாகவும் வைசியர்களாகவும் அக்காலத்தில் மாற்றிவந்தார்கள். இந்த மாற்றம், கூரிய அறிவு, ஆழ்ந்த படிப்பு, வீரதீரம் முதலியவற்றுக் கேற்ப, தகுதி நோக்கிச் செய்யப்பட்டது என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். பாகவதம் போன்ற புராணங்களில் பல அரசர்கள் பிராம்மணர்களானதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது; சொல்ல இங்கே இடம் இல்லை.

சோழ ராஜர்களும் தமக்குச் சமமானவர்களுடனேயே சம்பந்தம் செய்துவந்தார்கள் என்றும், வெல நாட்டுச் சோழர்களும் மற்றச் சோழர்களும் சம நிலையிலேயே பழகிவந்தார்கள் என்றும் நாம் தெரிந்துகொள்ளலாம். மேலே காட்டிய சோழ, சாளுக்கிய, கதம்ப, காங்க, பல்லவ, ராஷ்டிரகூட, காகதீய அரசர்கள் க்ஷத்திரியர்கள் அல்லர் என்று சரித்திரக்காரர்கள் சொல்வது போல் நினைத்தால் நம் நாட்டில் க்ஷத்திரியர்களே இருக்கவில்லை என்று சொல்லவேண்டும். இது மிக அநியாயம். க்ஷத்திரியர்களே பண்பாடு குன்றிவிட்டார்கள் என்பது உண்மை. இக்காலத்து ஆந்திர க்ஷத்திரியர்களும் கஜபதிகளும் இவ்வம்சத்தினரே.

11 - ஆம் நூற்றாண்டிலிருந்து ஜாதி பேதங்கள் அதிகமாயின; மனம் போனபடி சம்பந்தம் செய்துகொள்ளுவது நின்று தமக்குச் சமமானவர்களுடன் சம்பந்தம் செய்யும் கட்டுப்பாடு ஏற்பட்டதாகத் தோன்றுகிறது. இதுவரையிலும் தம் தம் ராஜ்யத்தின் முன்னேற்றம், ராஷ்டிரத்தின் நலன் இவற்றைக் குறியாக வைத்துக்கொண்டு பல பிரிவினரும் சம்பந்தம் செய்துகொண்டிருந்ததாகத் தோன்றுகிறது. தவிர, பெண்களை மணப்பதில், இவர்கள் எல்லோரும் பெண்களை ஓர் ஐசுவரியமாக மதித்தார்களேயன்றி, அவர்களுக்கு வம்சத்தின் முக்கியத்துவம் கொடுத்ததாகத் தெரியவில்லை.

## துர்ஜய குலத்தவருடைய சம்பந்தங்கள்

(காகதியர், வெல நாட்டுச் சோழர், தெலுங்குச் சோழர், கோட்டவார் எல்லோரும் ஒரு குலத்தவரே.)

**11, 12, 13** - ஆம் நூற்ருண்டுகளில் ஆந்திரத்தை ஆண்ட தோடு தூர்ஜய வம்சத்தவர் என்று சொல்லிக்கொண்ட காகதீய அர சர்கள், சூரிய வம்சத்தினர் என்று சொல்லிக்கொண்ட தெலுங்குச் சோழர்கள், சந்திர வம்சத்தவர்கள் என்றும் சதுர்த்தர்கள் என் றும் சொல்லிக்கொண்ட வெல நாட்டுச் சோழர்கள், சோழப் பட் டத்தை வைத்துக்கொண்டு தனஞ்ஜய குலத்தார் என்றும் சொல் லிக்கொண்ட கோட்டை அரசர்கள் ஆகிய எல்லோரும் ஒரே ஜாதியார் என்பதற்குச் சரித்திரப் பிரமாணங்கள் கிடைக்கின்றன. இவர்கள் எல்லோருக்குள்ளும் உறவுமுறை இருப்பதற்கு ஆதாரம் இருக்கிறது. அவற்றில் சிலவற்றை எழுதுகிறேன். இந்த ஜாதி யாரே, கம்மவாருக்கும் வெலமவாருக்கும் முன்னோர்கள். ஆனல் தூர்ஜய வம்சத்துக் காகதீய அரசர்களின் வைப்பாட்டிகளுக்குப் பிறந்தவர்கள் கம்ம, வெலமவாராக இருக்கலாமோ என்று சிலர் சந்தேகித்தனர். இதுவரையில் படித்தவற்றைக் கொண்டு பார்த் தால் அப்படிச் சந்தேகிக்க இடம் இல்லை. தூர்ஜய வம்சத்தவர், முன்னல் சொன்னபடி, சூரிய வம்சத்திலிருந்து வீழ்ச்சியடைந்து சதுர்த்த வம்சத்தில் சேர்ந்தவர்கள் ஆனதால் அந்த வம்சத்தார் களுடனும், தம்மைப்போலவே சந்திர வம்சத்திலிருந்து சமண, பௌத்த மதத்தில் சேர்ந்து திரும்பவும் சதுர்த்த வம்சத்துக்கு வந்த வர்களுடனும் சூரிய சந்திர வம்சங்கள் என்று கருதப்பட்ட சோழ, சாளுக்கிய, ஹைஹய வம்சத்தாருடனும் மட்டுமே சம்பந்தம் செய்துவந்தனர். ரெட்டி ராஜாக்களுடனும் சில சமயங்களில் சம் பந்தம் செய்து வந்தார்கள். இவை எல்லாம் அக்காலத்தில் சம மான ராஜவம்சங்களே. ஆகையால் அவற்றைப்பற்றிச் சரித்திரக் காரர்கள் சந்தேகிக்க வேண்டியதில்லை. தெரிந்தமட்டும் அந்தச் சம்பந்தங்களைப் பார்ப்போம்.

(1) காகதீய முதல் பிரதாபருத்ரன் எனப்படும் ருத்ரதேவன் (கி. பி. 1155 - 96) தூர்ஜய வம்சத்தவனுய் இருந்தும் கந்தூரி உத யன சோழன் என்னும் தெலுங்குச் சோழ அரசன் குமாரி பத்மா வதியை மணந்தான். இந்தச் சோழன் சூரிய வம்சத்தவன். தூர்ஜய வம்சம் சூரிய வம்சத்தில் சேர்ந்ததாகையால் இந்த விவா கம் தகுந்த சம்பந்தமே. அனுமகொண்ட சாஸனம்.

(2) சதுர்த்த வம்சத்தினர் என்று வெளிப்படையாக எழுதிக்கொண்ட வெல நாட்டுக் குலோத்துங்க சோழ கொங்க ராஜன் II சகோதரியாகிய சப்பமதேவியை கி. பி. 1180—ஆ வாக்கில் கோட்டை இரண்டாம் பிமராஜனுக்குக் (கோட்டை இரண்டாம் கேதராஜுவின் தந்தை) கொடுத்து விவாகம் செய்யப்பட்டது. கோட்டையார் தனஞ்ஜய கோத்திரத்தார் ஆவர். அதனால் சூரிய வம்சமாகவோ, சந்திர வம்சமாகவோ இருக்க வேண்டும். ஆனால் வெலநாட்டுச் சோழர்களைப் போலவே தாழ்த்தப்பட்டுச் சதுர்த்தர்கள் ஆனவர்கள். சமானர்கள் ஆனதாலேயே சம்பந்தம் ஏற்பட்டது. இந்த வெலநாட்டு அரசர்களில் சிலர் சந்திரவம்சம் என்று எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.[1]

(3) கி. பி. 1198 - 1261 வருஷங்களுக்கு இடையே ஒரு கல்லில் ஆண்ட காகதீய கணபதி தேவ சக்கரவர்த்தியின் தங்கையாகிய மயிலம்மா அல்லது குந்தலாம்பாளை (மகாதேவ ராஜுவின் பெண்) நதவாடி சீமை அரசனாகிய ருத்ரராஜனுக்குக் கொடுத்தார்கள். இருவரும் தூர்ஜய வம்சத்தார் ஆகையினால் இச்சம்பந்தம் தகுந்ததே. (Ep. Colle. 204—1903)

(4) கணபதி தேவ சக்கரவர்த்தியின் இரண்டாவது பெண் கணபாம்பாளைக் கோட்டை பேதராஜனுக்குக் கொடுத்தார்கள். சூரிய சந்திர வம்சத்தினர் ஆனதாலேயே (வீழ்ச்சியடைந்தவர்கள்) இரு பிரிவினருக்கும் சம்பந்தம் ஏற்பட்டது. இப்போதும் கம்மவாரில் கோட்டைவார் இருக்கிறார்கள்.

(5) கொண்டபடமடி புத்தராஜன் தங்கையாகிய அக்கம்மாளை வெலநாட்டு அரசனாகிய ராஜேந்திர சோழனுக்குக் (கி. பி. 1163 - இலிருந்து 1181 வரையில்) கொடுத்து மணம் செய்வித்தார்கள். இது சதுர்த்த வம்சத்தவராகிய சந்திரவம்ச, தூர்ஜய வம்சங்களின் சம்பந்தம்.

(6) இந்த புத்தராஜ வம்சத்து ஜயாம்பிகா என்பவள் வெலநாட்டு மூன்றும் குலோத்துங்க சோழ கொங்க ராஜனுடைய

1. S. I. I. Vol. VI, Page 240. வெலநாட்டு மகாதேவ ராஜன் சாஸனம்.

(கி. பி 1181 - 86) பட்டமகிஷியானள். இதுவும் சந்திர வம்ச, துர்ஜய வம்சங்களின் சம்பந்தமே.

(7) கணபதி தேவ சக்கரவர்த்தி, ஜாயப்பநாயகன் என்னும் ஜய வம்சத்தானுடைய சகோதரிகளாகிய நாராம்பாளேயும், பேராம்பாளேயும் மணந்தான். (கணபவரம், சேப்ரோலு சாஸனங்கள்.) இவர்களுடைய தந்தை சின்னச் சோழன். இவனுடைய பேரைக் கொண்டே சோழ ராஜன் என்பது தெரிந்தாலும் சரித்திரக்காரர்களில் சிலர் ஜாயப்ப நாயகரின் குலத்தைப்பற்றிச் சந்தேகித்தார்கள். இவன் கரிகால வம்சத்துச் சோழன் ஆனதாலேயே சக்கரவர்த்தி இவனுடன் சம்பந்தம் செய்தார். இந்தச் சக்கரவர்த்திக்குச் சோமிதேவி என்னும் பட்டமகிஷி இருந்தது உண்மை. அதனுல் மற்ற மனேவிமார் தாழ்ந்த குலத்தவர் என்று சொல்லக்கூடாது. (Ep. Ind. iii. P. 84)

(8) கணபதி தேவ சக்கரவர்த்தியின் மகளாகிய ருத்ரம தேவியைச் சாளுக்கிய வம்சத்து வீரபத்ர ராஜனுக்குக் கொடுத்தார்கள். சாளுக்கியர்கள் சந்திர வம்சத்தினர் ஆதலால் சூரிய வம்சச் சம்பந்தம் பொருத்தமே. மேலே கண்ட நான்கு பாராவின் சம்பந்தங்களுக்கும் ஆந்திர சரித்திரம் 5 - ஆம் பாகத்தைப் பார்க்க.

(9) கி. பி. 1261-95 வருஷங்களுக்கு இடையே ஓருகல் ராஜதானியில் ஆண்ட ருத்ரமதேவிச் சக்கரவர்த்தினியின் மகள் ருய்யாம்பாளே, பிராம்மணனுகிய இந்துலூரி அன்னயாமாத்தியனுக்குக் கொடுத்தார்கள். பிராம்மணனுயிருந்தாலும் க்ஷத்திரியத் தொழில் செய்ததால் அவனுக்குப் பெண்ணேக் கொடுத்ததாகத் தோன்றுகிறது. (ஆந்திரர் சரித்திரம், V பாகம்.)

(10) ருத்ரமதேவியின் தளபதியாகிய மல்யால குண்டையா, கோனபுத்தா ரெட்டியின் மகளாகிய குப்பாம்பாளே மணந்தான். இது ரெட்டிகளுக்கும், துர்ஜய வம்சத்தினருக்கும் நடந்த சம்பந்தம். (பூதபூர் சாஸனம்.)

(11) 14 - ஆம் நூற்றுண்டில் கொண்டவீடு சீமையை ஆண்ட அனவேமா ரெட்டியின் மகளே (எருவ) பக்தீச்வர சோழ

ராஜனுடைய மகனுகிய பீமராஜனுக்குக் கொடுத்தார்கள். இதுவும் சூரிய வம்சத்தினருக்கும் ரெட்டிகளுக்கும் நடந்த சம்பந்தமே. (கோருமில்லி சாஸனம்)[1] இந்த ரெட்டிகளும் சூரிய சந்திர வம்சத்தினராகிய ராஷ்டிரகூடர்களின் சந்ததியார் ஆனதாலேயே சூரிய வம்சத்தினரின் சம்பந்தம் ஏற்பட்டது.

(12) மேலே சொன்ன பீமராஜன் மகள் வேமாம்பாவை அல்லாட ரெட்டி மணந்தான். இதுவும் அது போன்றதே.[2]

(13) ராஜமகேந்திரவரத்தில் ஆண்ட 14 - ஆம் நூற்றுண்டின் காட்டய வேமா ரெட்டி மகன் காட்டய ரெட்டிக்கு, விஜய நகரத்து அரசனும், சந்திர வம்சத்தவனுமான இரண்டாம் ஹரிஹர ராயரின் மகளாகிய ஹரிஹராம்பாவைக் கொடுத்ததாகக் கோருமில்லி சாஸனம் சொல்லுகிறது. சந்திர சூரிய வம்சங்களின் சம்பந்தமானதால் எல்லோருக்கும் சம்மதமான சம்பந்தமே. ரெட்டிகளும் மற்றவர்களைப் போல் சூரிய வம்சத்திலிருந்து தள்ளப்பட்டவர்களாய் இருக்கின்றனர்.

(14) இரண்டாம் பிரதாபருத்திர சக்கரவர்த்திக்கு ஜுட்டய கங்கா ரெட்டி என்னும் மகன் இருந்து கண்டி கோட்டைச் சீமையை ஆண்டுவந்ததாக கி. பி. 1313 ஞு செந்தூர் (செரனூர்) முதலிய சாஸனங்களால் தெரிகிறது. அதனுல் பிரதாபருத்திர சக்கரவர்த்தி ரெட்டியுடன் சம்பந்தம் செய்திருக்க வேண்டும் என்று தெளிவாகிறது. ரெட்டிகளுக்கும், துர்ஜய வம்சத்தினருக்கும் ஆன சம்பந்தம் சரியானதே என்று இவற்றுல் தெரிகிறது.

(15) நளகாம வீரா ரெட்டி மகள் முக்தாம்பாவை துர்ஜய வம்சத்து வத்ஸவாய ராஜன் மணந்தான். துர்ஜய வம்சத்தாருக்

1. சுலோகம்,

'சசிவ சக்ரஸ்ய சிவேவ சம்போ; பத்மேவ ஸா பத்மவிலோசனஸ்ய
வேமாம்பிகா சோளகுலேந்து பீமபூபாத்மஜா, பூமஹிளாஸ்யஜாயா'

2. சிவலீலா விலாஸம் என்னும் நூல் இப்படிச் சொல்லுகிறது :

பரித ஸ்ரீநிதி யம்மஹி ரமனு டொப்பென் ஜோளபக்தி ஷிதிச்
வருஸ-சினுண்டகு பீமலிங்கமனுஜே சச்ரேஷ்டு ஸ்த்புத்ரி பாஸ்
வர காருண்ய தசா ஜனுவன விதாஸ்ந்தாத்ரி வேமாம்பிகன்
வரியிஞ்சென் பறிபக்தி கௌரவ த்ருட்வ்யாபார ஸ்த்யாம்பிகன்.

கும் ரெட்டிகளுக்கும் ஏற்பட்ட சம்பந்தங்களில் இதுவும் ஒன்று. (பாரதி – தொகுதி, 10, இதழ் 2, பக்கம் 273.)

(16) பன்னிரண்டாம் நூற்றாண்டில் இருந்த ஹைஹய வம்சத்துப் பல்நாட்டு அனுகுராஜன், வெலநாட்டு ராஜகுமாரி மைலம தேவியை மணந்தான். இது ஹைஹய வம்சத்தினராகிய சந்திர வம்சத்தாருக்கும், சந்திர வம்சத்திலிருந்து சதுர்த்தர்கள் ஆகியவர்களுக்கும் ஆன சம்பந்தம். (ஆந்திரர் சரித்திரம், பாகம் V.)

(17) ஹைஹய வம்சத்தானாகிய பல்நாட்டு அனுகுராஜனுடைய தத்துப்பிள்ளையாகிய பெத்தநாயுடு, கஞ்செர்ல நகரத்து அரசனாகிய கிருஷ்ண கந்தர்வ அரசன் மகள் முக்தலாவாம்பாளை மணந்தான். இதுவும் மேலே சொன்ன சம்பந்தம் போன்றதே. இது ஆரிய முறையில் செய்யப்பட்ட விவாகம்.

இப்படி எத்தனை பக்கம் புரட்டினாலும் துர்ஜய குலத்தார் சூரிய சந்திர வம்சங்களுடனும், அவற்றிலிருந்து மதம் மாறிய சதுர்த்தர்களாகியவர்களுடனும் சம்பந்தங்கள் செய்துகொண்டதாகத் தோன்றுகிறதேயன்றி, சென்ற நூற்றாண்டுகளில் நடந்தது போல் இஷ்டப்படி சம்பந்தம் செய்துகொள்ளவில்லை என்று தெரிகிறது. தங்களுக்குச் சமமான ரெட்டிகளுடன் சம்பந்தம் செய்து கொண்டதைப் பற்றி மேலே படித்தோம். அதனால்தான் துர்ஜய் குலத்தார் பலருக்கு ரெட்டிப் பட்டம் இருக்கிறது. ரெட்டிகளில் பலரும் முதலில் சூரிய வம்சத்தினராயிருந்து பிறகு துர்ஜய குலத்துக் கம்மவாரைப் போலவே மத மாறுதலால் சதுர்த்தர் ஆனதாகத் தோன்றுகிறது. ராச்சூர் துர்க்கம் சுவரில் காணப்படும் கி. பி. 1284-ஆம் வருஷத்து, கோனகன்ன ரெட்டி சாஸனத்தில் அவருக்கு மனுகுல மார்த்தாண்டன் என்னும் விருது காணப்படுகிறது. மேலும் பில்லலமர்ரியில் இருக்கும் ரேசர்லநாமி ரெட்டி முதலியவர்களின் சாஸனங்களிலும் 'மனுமகுலாதித்ய' விருதுடன் சதுர்த்த குலம் என்றும் காணப்படுகிறது.[1] இப்படியே ரேசர்ல சாஸன கர்த்தாவாகிய மாரசானி கேதிரெட்டி சாஸனத்திலும் 'மனும குல வம்சத்தவன்' என்று எழுதப்பட்டிருக்

1. தெலிங்கான சாஸனம்.

கிறது. மனும குலம் என்பது சூரிய குலத்தின் பரியாய நாமம் என்று பல சாஸனங்களில் உபயோகித்திருக்கிறார்கள். இதனாலும் ரெட்டிகளில் பலர் முதல் முதலில் சூரிய வம்சத்தார்களே என்று முடிவாகிறது. சில சரித்திரக்காரர்கள் அவர்களை ராஷ்டிரகூடரின் சந்ததி என்பதற்கு ரட்டடி, ரட்டு போன்ற பதங்களை ஆதாரமாகக் கொள்கிறார்கள். சொற்களைக் கொண்டு வம்சங்களை நிர்ணயிப்பதைவிடத் தெளிவாக இருக்கும் சாஸனங்களைக் கொண்டே ரெட்டி குலத்தை நிர்ணயம் செய்வது சரியாக இருக்கும் என்பதை அவர்களும் அறிவார்கள். ராஷ்டிரகூடரும் சந்திர வம்சத்தாரென்றும் யது வம்சத்தைச் சேர்ந்த சாத்தியகியின் சந்ததியார் என்றும் சாஸனங்களில் எழுதிக்கொண்டார்கள்.

காகதீய அரசர்களும், வெலநாட்டுச் சோழர்களும் துர்ஜய வம்சத்தவர்கள் என்றும், சந்திர வம்சத்தினர் என்றும் முறையே சொல்லிக்கொண்டதோடு இரு பிரிவினரும் 'சலமர்த்திகண்ட' விருதை வைத்துக்கொண்டதாலும் மற்ற வம்சத்தினருக்கு அந்த விருது இல்லாததாலும் அவர்கள் செய்துகொண்ட சம்பந்தங்களாலும்[1] இக்கிளைகள் இரண்டும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவை என்று அறிய முடிகிறது. அதனால் தலைமுறை தலைமுறையாக இந்த இரு பிரிவினருக்கும் இவ்விருது இருக்கிறது. ராஜ்ய விஷயத்தில் இவர்கள் பரஸ்பர விரோதிகளாகவே இருந்தார்கள். மேலே பார்த்த விஷயங்களால் 11-ஆம் நூற்றாண்டிலிருந்து துர்ஜய குலத்தார் தம் முன்னோர்களைப் போல் மனம்போனபடிவிவாக சம்பந்தங்கள் செய்துகொள்ளவில்லை; தமக்குச் சமமானவர்களுடனும், தங்கள் ஜாதியாருடனும் மட்டுமே சம்பந்தம் செய்துகொண்டார்கள் என்று நம்பும்படி இருக்கிறது.

வெல நாட்டுச் சோழர்கள் சந்திர வம்சத்தார் என்றும், சதுர்த்த வம்சத்தார் என்றும் சொல்லிக்கொண்டாலும் அவர்

1. இந்த இரு பிரிவினரும் தனஞ்ஜய வம்சத்தினராகிய கோட்டை அரசர்களுடன் சம்பந்தம் செய்து வந்தனர். கொண்டபடமடி அரசர்களோடு, வெலநாட்டு அரசர்களும், நதவாடி சீமை அரசர்களுடன், காகதீய அரசர்களும் பின்பு சம்பந்தம் செய்து வந்தார்கள். இவர்கள் எல்லோரும் துர்ஜயகுலத்தவரே. இவ்விஷயங்களுக்கு ஆந்திரர் சரித்திரம், V பாகம், பக்கம் 359 முதல் 367 வரைக்கும் பார்க்க. கோட்டை அரசின் சந்ததியாரென்று இக்காலத்து ஆந்திர க்ஷத்திரியர்கள் சொல்லிக்கொள்கிறார்கள்.

களும், துர்ஜய வம்சத்தவர்களும் ஒரே ஜாதியார் என்பதற்கு மேற்சொன்ன சம்பந்தங்களோடு அக்காலத்துப் பொதுஜனங்களுடைய அபிப்பிராயமும் ஒன்றுபடுகிறது. அதனாலேயே வெலநாட்டு ராஜேந்திர சோழன் ஸிரிபுர கிராமத்து மூலஸ்தான ராமேசுவரர் கோவில் சா. ச. 1087-ஆம் வருஷத்துச் சாஸனத்தில் துர்ஜய குலப் பிராகாரன் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

(Ep. Colle. 49 of 1909 சாஸன பத்திய மஞ்சரி.)

இதனாலும் வெல நாட்டுச் சோழர்களும், காகதியர்களும் ஒரு பிரிவினர் என்பது உறுதிப்படுகிறது.

## ஹைஹய வம்சத்தினரும், சாளுக்கிய அரசர்களும் கம்மவாரா ?

சூரிய வம்சத்தவர்களாகிய தெலுங்குச் சோழர்களும் துர்ஜய வம்சத்தினரும் இக்காலத்துக் கம்மவாரில் சிலருக்கு முன்னோர்கள் என்று முன்பு தெரிந்துகொண்டோம். ஆந்திர தேசத்தில் பெரும் பகுதியை வேங்கி, ராஜமகேந்திரவரம் ராஜதானிகளாக ஆண்டு வந்த - ஏழாம் நூற்றுண்டு முதல் 12-ஆம் நூற்றுண்டு வரையில் மிகக் கீர்த்தியுடன் ஆந்திர மகாபாரதம் முதலிய சிறந்த நூல்கள் எழுதக் காரணமாக இருந்த ராஜராஜ நரேந்திரன் முதலிய சாளுக்கிய அரசர்களும் கம்மவார் சிலரின் முன்னோர்களா என்பதை ஆராய வேண்டியிருக்கிறது. எப்படியோ ஒரு சம்பந்தம் ஏற்பட்டுவிட்டபின் அந்தப் பிரிவினரோ அல்லது குடும்பத்தினரோ ஒரே ஜாதியாய்விடுவது உலகத்தில் பொதுவான வழக்கம். சாளுக்கியர்கள் சோழர்களைப் போல் சூரிய வம்சத்தினர் அல்லர்; சந்திர வம்சத்தினர்; இவர்கள் மானவ்ய கோத்திரத்தார்; ஹாரீத புத்திரர்கள்.

இந்த இரு பிரிவினர்களுக்கும் ஆதியிலிருந்து சம்பந்தங்கள் இருந்திருப்பதாகப் புராணங்கள் சொல்லுவதாலும் அதைப் பொய் என்று தள்ள முடியாததாலும் சூரிய சந்திர வம்சத்தார் ஒரே ஜாதியினர் என்று கொள்ளவேண்டும். இவற்றைச் சாஸன மூலமாகத் தெரிந்துகொள்வோம்.

(1) கி. பி. 990 (சா. ச. 912 வருஷம்) வாக்கில் ஆண்ட சடைச்சோழ பீமராஜன் என்னும் ஆந்திர சோழனுடைய சகோதரியைக் கீழைச் சாளுக்கிய அரசர்களில் ஒருவனுகிய பாதபன் மணந்துகொண்டதாக, சடைச்சோழ பீமனுடைய காஞ்சிபுரச் சாஸனத்தால் தெரிகிறது.[1]

(2) துர்ஜய வம்சத்தில் காகதீய ருத்திரம தேவி சக்கரவர்த்தினி, சாளுக்கிய வம்சத்தினனும், நிடதவோலு அரசனும் ஆகிய வீரபத்திர ராஜனை மணந்ததாகச் சரித்திரங்கள் சொல்லுகின்றன.[2] இவர்கள் 13-ஆம் நூற்றுண்டினர்.

(3) காகதீய ருத்திரம தேவி சக்கரவர்த்தினி வளர்ப்புப் பெண்ணுகிய மும்மடியம்மையைச் சாளுக்கிய அரசனுகிய நிடதபிரோலு மகாதேவராஜன் மணந்தான். இவன் வீரபத்திர ராஜனுடைய சகோதரன் என்று சரித்திரக்காரர்கள் கண்டுபிடித்தார்கள்.

(4) தெலுங்குச் சோழர்களில் திரிபுவன மல்லதேவ சோழனுடைய தாயார் சிரியாதேவிக்குச் சாளுக்கிய அரசனுகிய விஜயாதித்யன் தாய்மாமன். திரிபுவன மல்லதேவ சோழன் கம்மநாட்டை 12-ஆம் நூற்றுண்டில் ஆண்ட அரசன். காஞ்சிபுரச் சோழர்களுக்கும், சாளுக்கிய அரசர்களுக்கும் உள்ள சம்பந்தங்களைப்பற்றி முன்பே தெரிவித்திருக்கிறேன்.

இப்படிச் சோழர்களுக்கும் சாளுக்கியர்களுக்கும் நடந்த சம்பந்தங்களைப் பற்றிக் கணக்கிட முடியாது. துர்ஜய வம்சத்தினரும், சாளுக்கியர்களுங்கூடச் சந்திரவம்சத்தின் ஒருபிரிவாகிய ஹைஹய வம்சத்தினருடன் நிறையச் சம்பந்தங்கள் செய்திருப்பதாக, திருஷ்டாந்தங்கள் கிடைக்கின்றன. ஹைஹயர்கள் முதல் முதலில் மாஹிஷ்மதி நகரத்து அரசர்களாய்ச் சேதி தேசத்தை ஆண்டவர்கள். காலஞ்சுரி கோட்டைக்குத் தலைவர்கள் என்று

1. J. A. H. R. S. Vol. X.
2. ஆந்திரச் சரித்திரம், 5–ஆம் பாகம்.

விருது தரித்து, களசுரி (காளசுர்ய) அரசர்கள் என்றும் கீர்த்தி வகித்தனர். இவர்களில் ஒரு பிரிவினரே பல்நாட்டில் சாகிவார் என்றும் (மாதவீபுரத்தில்), மற்றொரு பிரிவினர் கோனசீமையில் கோனவார் என்றும் 11, 12 நூற்றுண்டுகளில் ஆண்டதாகத் தெரிகிறது. இந்த ஹைஹய வம்சத்தினருடனே தூர்ஜய சாளுக்கியப் பிரிவினர் வெகு காலமாகச் சம்பந்தங்கள் செய்து கொண்டு ஒரே ஜாதியினராக இருந்தனர். அவற்றை இங்கே சொல்கிறேன்.

(1) கோனசத்தி ராஜன் என்னும் ஹைஹய வம்சத்தவன் சா. ச. 1057 இல் ஸ்ரீ பீமேச்வராலயத்தில் எழுதுவித்த சாஸனத்தால்[1] அவனுடைய தாயாகிய தொண்டிதேவி சூரிய வம்சத்துப் பெண் என்று தெரிகிறது.[2] இவள் தெலுங்குச் சோழ ராஜகுமாரியாய் இருக்கலாம். சாளுக்கிய அரசனுகிய விஜயாதித்யன் இவளுடைய தாய் மாமன் என்று A. R. No. 188 of 1899 சாஸனம் தெரிவிக்கிறது.

(2) கோன மும்மடி ராஜன் மனைவி, சாளுக்கிய ராய பூபாலனுடைய குமாரியாகிய ராஜாதேவி என்று சா. ச. 1057 காலத்திய சாஸனம் ஒன்றால் தெரிகிறது.[3]

(3) கோன கணபதிதேவ மகாராஜன், சாளுக்கிய மகா தேவச் சக்கரவர்த்தி மகளாகிய பின உதய மகாதேவியைக் கல்யாணம் செய்துகொண்டதாக அவள் எழுதுவித்த சா. ச. 1218 காலத்து க்ஷீரா ராமேச்வராலயத்துச் சாஸனம் தெரிவிக்கிறது.[4]

---

1. சூரிய வம்ச திலகோஸ்ய அஸீன் நாம்னு
2. தமிதாகுலஜா ஸ்ரீ தொண்டிதேவி தி
(S.I.I. Vol. IV, No. 1080)
3. 'சாணக்யான்வய ராய பூப சசிஞேயா சந்த்ரிகேவாத்மஜா
ராஜாதேவ்யதி பாதிராஜகுலஜ ஸ்திரீணும் குணோரக்ரணீ
(S. I. I. Vol.IV, No.1156)
4. S. I. I. Vol. V, Page 47.

(4) கோனபீமராஜன் மனைவி, சாளுக்கிய ராஜகுமாரியாகிய அன்யமாம்பா என்று க்ஷீரா ராமேச்வராலயத்து மற்றொரு சாஸனம் சொல்லுகிறது.[1] இவள் சா. ச. 1090 காலத்தவள்.

(5) நான்காம் விஷ்ணுவர்த்தனச் சாளுக்கிய சக்கரவர்த்தி, ஹைஹய வம்சத்துக் கன்னிகையை மணந்து இரண்டாம் விஜயாதித்யனுடைய தம்பியாகிய நிருபருத்திரன் என்னும் குமாரனைப் பெற்றான். (J. A. H. R. S. Vol. III, Page 150) இந்தச் சக்கரவர்த்தி 9—ஆம் நூற்றாண்டினன்.

கோன ராஜேந்திர சோழனுடைய புத்திரனாகிய வென்ன சோழ ராஜன் ப்ரெங்கேடி, வீரப்பரெட்டி புத்திரியாகிய பிம்மல தேவியை மணந்ததாக அவள் எழுதுவித்த சா. ச. 1159—ஆம் காலத்து பீமேச்வராலய சாஸனத்தால் தெரிகிறது.[2] வீரப்ப ரெட்டி முன்னூடி காப்பு (குடியானவர்) களில் சேர்ந்தவர். கம்மவாரில் இப்போதும் முன்னூருவார் இருப்பதாலும், கோனவார் இருப்பதாலும் இவர்கள் கம்மவார் என்று சொல்லலாம்.

வென்ன சோழ ராஜனின் பெயரால் ஏற்பட்ட வென்னம் வாரும் கம்மவாரில் இப்பொழுது இருக்கிறார்கள். அதனால் சாளுக்கிய சம்பந்தங்களும், துர்ஜய வம்சத்துச் சம்பந்தங்களும் செய்த கோனசீமை அரசர்கள் எல்லோரும் இந்தக் கோனவார், வென்னம்வாருடைய முன்னோர்களே. கோனசீமை அரசர்களெல்லோரும் ஹைஹய வம்சத்தினர் என்று சொல்லிக் கொண்டதாகக் கோன சோழராஜன், சத்திராஜன், மல்லராஜன், பீமராஜன், மும்மடிராஜன், அன்னமல்லய, தேவராஜன் இவர்களுடைய பீமேச்வராலய சாஸனங்களின் மூலம் தெரிகிறது.[3] இதில் வரும் சோழ ராஜனுடைய பெயரன் மறுபடியும் மனும சோழ ராஜன் என்று பிரசித்தி பெற்றான். ஹைஹய வம்சத்தாராகிய கோனசீமை அரசர்களும் இவ்விதமே சோழப் பட்டத்தை உபயோகித்ததாலும் மேலே சொன்ன சோழ, சாளுக்கிய சோழ

1. S. I. I. Vol. V. Page 46.
2. S. I. I. Vol .IV, No. 1145
3. S. I. I. Vol. IV, Pages 346, 359, 360, 391, 394, 425 பார்க்க.

சம்பந்தங்களாலும் மேற்சொல்லிய குலத்தாருடன் ஒன்றுபட்டதாகத் தெரிகிறது. இவர்களில் சிலர் ஒருவேளை இக்காலத்துக் காப்பு, தெலகாலு இவர்களில் உள்ள கோனவாருக்கும் மூல புருஷர்கள் ஆகலாம். ஆனால் மேலே சொன்ன சூரிய வம்சத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் மட்டும் ராஜ வம்சத்தினருக்கும், கம்மவாருக்கும் மூல புருஷர்கள் என்று சொல்லவேண்டும். இன்று கம்மவாரில் உள்ள முரிகொண்டவாரு, முதிகொண்ட சாளுக்கிய அரசர்களுடைய சந்ததிகளாய் இருக்கலாம். முதி கொண்ட, வழக்கத்தில் முரிகொண்டவராய் மாறியிருக்கலாம். ஆந்திர சரித்திரத்தை எழுதிய ஸ்ரீ சி. வீரபத்திரராவ் பந்துலு அவர்களும் வேங்கி தேசத்தை ஆண்ட சாளுக்கியர்கள் கம்ம, வெலம ஜாதியாரே தவிர வேருகத் தோன்றவில்லை என்று அபிப்பிராயப்படுகிருர். [ஆந்திரர் சரித்திரம் 5–ஆம் பாகம். பக். 441.] காலஞ் சென்ற ஸ்ரீ குமர ராஜு*, லக்ஷ்மணராவ் பந்துலு அவர்களும் சாளுக்கியர்கள் வெலமவார் என்று அபிப்பிராயப்பட்டார். அதைப் பற்றிக் கீழ்க் குறிப்பைப் பாருங்கள்.

கிழைச் சாளுக்கியர்கள் என்று முதலில் சொல்லிக்கொண்டு சோழர்களுடன் சம்பந்தங்கள் அதிகரித்தபின் சாளுக்கிய சோழர்களாக மாறியவர்களும் ஹைஹய வம்சத்தாரும் சோழப் பட்டத்தையே கொண்டவர்கள். பிறகு அந்த அந்தப் பிராந்தியங்களில் உள்ள வழக்கங்களை அனுசரித்து மகம்மதியர் படையெடுப்புக்களால் சாளுக்கிய, சோழ, ஹைஹயப் பட்டங்களைக் குறைத்துக் கம்ம, வெலம ராஜ குலத்தார் என்ற பெயரை முக்கியமாக வைத்துக் கொண்டதாகத் தெரிகிறது. சாளுக்கிய அரசர்கள் கம்மவாருக்கும், வெலமவாருக்கும் முன்னேர்களே. என்பதற்கு முன்பு தெரிவித்த துர்ஜய, சோழ வம்சத்தவர்களுடன்

---

* சாரதா என்னும் பத்திரிகையில் அவர் எழுதிய வியாசத்தின் ஒரு பகுதி, 'தமிழில்' திவாகரம் என்னும் நிகண்டு இருக்கிறது. இது 9, 10 நூற்றுண்டுக் காலத்தது. இன்னும் முந்தியதென்றும் சொல்லுகிருர்கள். இதில் சாளுக்கிய வேந்தர், வேள்குல அரசர் என்பவை பரியாய நாமமாக இருக்கின்றன. அக்காலத்தில் சாளுக்கியரை வேள்குலம் என்று தமிழில் சொல்லிவந்ததாகத் தெரிகிறது. இப்பொழுது அவர்களையே வெள்ளாளர் என்கிருர்கள். இவர்கள் சூத்திரர்கள். தெலுங்கு நாட்டு வெலமவார், கன்னட நாட்டு ஒக்கிலியர் இவர்களும் வேள் ஜாதியார் என்று சொல்லலாம். இவர்களெல்லோரும் ஒரு ஜாதியாய் இருந்தாலும் தேச பேதத்தால் பெயர்கள் மாறுபட்டன.'

சம்பந்தமும், உறவு முறையும் இருப்பதோடு பின்வரும் திருஷ்டாந்தங்களும் உள்ளன.

(1) சாளுக்கிய வம்சத்து (விஷ்ணு வர்த்தன விருது உடையவர்கள்) நிடதப்ரோலு மகாதேவ சக்கரவர்த்தியின் மகளாகிய பின உதய மகாதேவி சா. ச. 1228–ஆம் வருஷத்தில் க்ஷீராராமேச்வராலயத் (பால கொல்லு) தில் எழுதுவித்த தான சாஸனத்தினுல்[1] மகாதேவ சக்கரவர்த்தி நிடதப்ரோலு என்ற வீட்டுப் பெயர் கொண்டதாகக் காணப்படுகிறது. இந்த வீட்டுப் பெயர் உள்ளவர்கள் இன்றும் கம்மவாரில் ராமச்சந்திரபுரம் தாலுகா சிந்தலூர் முதலிய கிராமங்களில் இருக்கிருர்கள். ஆந்திர க்ஷத்திரியர்களிலும் இந்த வீட்டுப் பெயர் உள்ளவர்கள் இருப்பதாகக் கேள்வி. நிடதப்ரோலு மகாதேவ சக்கரவர்த்திக்கும், துர்ஜயவம்சத்தில் பிறந்த காகதிய ருத்திரம தேவி சக்கரவர்த்தினிக்கும் வளர்ப்புப் பெண்ணுகிய மும்மடாம்பாளுக்குப் பிறந்தவனே. காகதி இரண்டாம் பிரதாப ருத்திர சக்கரவர்த்தி. இவர் கம்மவாரில் மூல புருஷன் என்று தௌர்வாஸ தேவி புராணத்தில் எழுதியிருப்பதும் இதை உறுதிப்படுத்துகிறது.

(2) சாளுக்கிய அரசர்கள் ஓரளவு ஆளும் அதிகாரத்தை யார் பொறுப்பில் விட்டிருந்தார்களோ, அவர்கள் எல்லோரும் 'அடப்பா' வீட்டுப் பெயர் உள்ளவர்களாய் இருக்கிருர்கள். ஆகையால் பிராம்மணர்களிலும், கம்மவாரிலும், காப்புக்களிலும் அடப்பாவார் இருக்கிருர்கள். கம்மவாரிலும், காப்புக்களிலும் உள்ள அடப்பாவார் சாளுக்கிய ராஜவம்சத்தினரே. அடப்பா. விஷ்ணுவர்த்தன சக்கரவர்த்தி பிரம்மாதிராய முதலியோர் ஸ்ரீ பீமேச்வராலயத்தில் எழுதுவித்த சாஸனங்களே இதற்குப் பிரமாணங்களாக இருக்கின்றன.[2]

(3) முதிகொண்ட சாளுக்கிய அரசர்கள் முதிகொண்ட என்னும் ஊரில் வசித்ததால் அந்த ஊர்ப் பெயரையே வீட்டுப் பெயராகக் கொண்டார்கள். இவர்களுக்கு மூல புருஷனுகிய

1. S. I. I. Vol. V. Page 49.
2. J. A. H. R. S. Vol VI. Pages 223—224 பார்க்க.
3. S. I. I. Vol. IV P. 465

கோகிராஜன் பெயரால் 'கோகா' என்னும் வீட்டுப் பெயரைக் கொண்டவர்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். இவன் கொக்கிலி அரசன் என்பது சரித்திரக்காரர்களின் அபிப்பிராயம்.[1] கம்ம வாரில் முரகொண்டவாரும், கோகவாரும் இருக்கிறார்கள். முதி கொண்ட வழக்கத்தில் முரகொண்டா ஆகியிருக்கலாம். கோகா வார் வெலமவாரிலும் இருக்கின்றனர். முடிகொண்ட வத்ஸராஜன் சாஸனங்கள் சில, ஸ்ரீ பீமேச்வராலயத்தில் இருக்கின்றன. இவனும் இவ்வம்சத்தவனுகவே இருக்கலாம். முதிகொண்ட அரசர்களின் சாஸனம் ஒன்று "இண்டியன்' ஆன்டிக்வேரி, 1903" என்னும் நூலில் பிரசுரிக்கப்பட்டது.

(4) வெல நாட்டுச் சோழ அரசர்களும், சாளுக்கிய அரசர் களும் மானவ்ய சகோத்திரத்தார் என்றும் ஹாரீத புத்திரர்கள் என்றும் சொல்லிக் கொண்டவர்களே. வெலநாட்டு அரசர்கள் அப்படிச் சொல்லிக் கொண்டதற்கு வெலநாட்டு மகாதேவராஜன் சாஸனமே பிரமாணம்.[2] வெலநாட்டு ராஜேந்திர சோழராஜனை சாளுக்கிய சக்கரவர்த்தியாகிய குலோத்துங்க சோழன் வளர்த்துக் கொண்டதாலும் இந்த இரு வம்சங்களும் ஒரே ஜாதி என்பது திடப்படுகிறது. ஸிரிபுர சாஸனத்தில் வெலநாட்டு அரசன் துர்ஜய குலத்தவனுக வர்ணிக்கப்பட்டதும் இந்த அம்சத்தையே பலப்படுத்துகிறது. மகாதேவராஜன் சாஸனத்தில் அவருக்கு 'ஸித்திபுர வராதீச்வர' என்ற விருது சொல்லப்பட்டது. ஸித்தி புரம் தெனுலிக்கு ஆறு மைல் தூரத்தில் இருக்கும் சுத்தபல்லெ என்னும் ஊரே. கம்மவாரில் இப்பொழுதும் சுத்தபல்லிவார் இருப்பதால் வெலநாட்டு ராஜவம்சத்தாரே இவர்கள். சுத்த பல்லி யார் ரெட்டிகளிலும் இருந்தாலும் அவர்கள் சோழ வம்சத்தினர் அல்லர்.

(5) சா. ச. 1350 காலத்துச் சாளுக்கிய வம்சத்தவனுகிய கொல்லவாட—நரசிம்ம ராஜனின் மனைவி வீராம்பாள் பாஞ்ச தார்ல என்னுமிடத்தில் தர்மேச்வர ஸ்வாமி கோவிலில் மடைப் பள்ளி கட்டுவித்து எழுதுவித்த தான சாஸனத்தால் இவர்கள்

1. J. A. H. R. S. Vol. XI. P. 83.
2. S. I. I. Vol. IV P. 239

கொல்லவாடா என்னும் வீட்டுப் பெயர் உள்ளவர்கள் என்பது தெரிகிறது. கொல்லவாடவார் எந்த ஜாதியிலும் இல்லை. பிராம்மண, வைசிய, கம்ம குலங்களில் கொல்ல பூடியார் இருக்கின்றனர். கொல்லவாடா என்பதே கொல்லபூடியாக மாறியது என்று தோன்றுகிறது. அதனால் கம்மவாரில் உள்ள கொல்ல பூடியார் இவ்வம்சத்தினராக இருக்கலாம். இது ஆராயவேண்டிய விஷயம்.

(6) சர்வலோகாச்ரய, ஸ்ரீ விஷ்ணுவர்த்தன விருதுள்ள எலமஞ்சி சோழ கங்க அரசர்கள் சிம்மாசலத்தில் ஸ்ரீ நரசிம்ம சுவாமி கோவிலில் எழுதுவித்த சா. ச. 1313 காலத்து, தான சாஸனத்தினாலும்,[1] சா. ச. 1294–ஆம் வருஷத்தில் எலமஞ்சி–உபேந்திரதேவ சக்கரவர்த்தி அக்கோயிலிலேயே எழுதுவித்த சாஸனத்தாலும்,[2] சா. ச. 1323–இல் எலமஞ்சி விச்வேச்வர தேவசக்கரவர்த்தி அங்கேயே எழுதுவித்த சாஸனத்தாலும்,[3] சா. ச. 1310-இல் அங்கேயே எலமஞ்சி மகாராஜன் மகள் அம்பிகாதேவி எழுதுவித்த சாஸனத்தாலும்,[4] சாளுக்கிய வம்சத்தினர் சிலர் எலமஞ்சி என்ற வீட்டுப் பெயரைக் கொண்டதாகத் தெரிகிறது. இந்த சாஸனங்கள் சிலவற்றில் அவர்களுடைய வம்சாவளி ராஜ ராஜ நரேந்திரனுடைய காலம் முதல் இருக்கிறது. எலமஞ்சிவார் கம்மவாரில் பிரமுகர்களாக இப்பொழுதும் ஏலூர், தெனலி பிராந்தியங்களில் இருக்கிறார்கள். எலமஞ்சியார் ஆந்திரக்ஷத்திரியர்களிலும் இருக்கிறார்கள் என்று கேள்வி. இந்த வீட்டுப் பெயர், சாஸனங்களின் காலத்துக்கு முன்பே இருந்ததாகச் சாஸனங்களின் மூலம் தெரிகிறது. சா. ச. 1072–இல் ஸ்ரீதக்ஷாராம பீமேச்வராலயத்தில் எலமஞ்சி – கொம்மி நாயகடு எழுதுவித்த சாஸனம் காணப்படுகிறது.[5] சாளுக்கிய வம்சத்துக் கோகிலிராஜன் எலமஞ்சியைத் தலை நகராகக்கொண்டு ஆண்டபின் கி. பி. 718–க்குப் பின் எந்தக் காலத்திலோ இந்த வீட்டுப் பெயர் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

---

1. S. I. I. Vol. VI No. 705
2. S. I. I. Vol. VI No. 921
3. S. I. I. Vol. VI No. 919
4. S. I. I. Vol. VI No. 916
5. S. I. I. Vol: IV P 391

மேற்கூறிய விஷயங்களால் சாளுக்கியர்களில் சிலர் க்ஷத்திரியர்களிலும், சிலர் கம்மவாரிலும், சிலர் வெலமவாரிலும் இருந்ததாகத் தெரிகிறது. சாளுக்கியரில் சிலர் உபயோகித்த தோலேட்டி, அடப்பா என்னும் வீட்டுப் பெயர்கள் காப்பு ஜாதியாரிலும் இருக்கின்றனர்.

மேலும் சர்வஸித்தி தாலுகா, பாஞ்சதார்லா சாஸனங்களைப் பார்த்தால் இந்த சாளுக்கிய வம்சத்தார் பலர் மகா பாத்ருடு, பாத்ருடு என்ற விருதுகளைத் தரித்துப் பல சாஸனங்கள் எழுதுவித்ததாகத் தோன்றுகிறது. இந்தப் பெயர்களை விசேஷமாக உத்கல, கலிங்க தேசத்தார் மட்டுமே உபயோகப்படுத்தியதாகத் தெரிகிறது.[1] வெலமவாரிலும், கம்மவாரிலும் இந்த வழக்கம் இல்லை.[2] இந்தப் பெயர் பிரதானி, தேகட்டி, பிரக்கட, கஜபதி, அவசுவபதி, நரபதி போன்ற ஒரு பட்டமே. பாத்ருடு என்ற பட்டத்தை இப்பொழுது சிஷ்டு-கரணகம்மலு என்னும் ஜாதியாரும் உபயோகிக்கிறார்கள். இந்தப் பெயர்கள் உபயோகப்பட்ட முறையைக் கீழே காணலாம்.

இந்தப் பெயரைக் கொண்டு எலமஞ்சி வீட்டுப் பெயர் உள்ள மேற்சொன்ன சாளுக்கியர்கள் - பாத்திர, மகா பாத்திர என்ற பட்டங்களைக் கொண்டவர்கள்—இக்காலத்துப் பாத்ருடு என்பவர்களுக்கு (சிஷ்டு கர்ண கம்மலு முதலானவர்கள்) மூல புருஷர்களாக இருப்பார்களா? அப்படியானால் அவர்கள் கம்மவாருக்கு மூல புருஷர்களாக இருக்கமுடியாது என்று சிலர் சந்தேகிக்கலாம். அப்படிப்பட்ட சந்தேகத்துக்கு இடமில்லை. ஏனென்றால் சாளுக்கிய ராஜ்யமானது, ராஜமகேந்திரவரம், வேங்கிதேசம் இவ்விடங்களிலிருந்து நழுவி பிட்டாபுரத்துக்குப் போய் அங்கிருந்து இவ்வம்சத்தார் சிலர் வடக்கே சென்று எலமஞ்சிலியில் நிலைத்துவிட்டார்கள் என்றும் அங்கே, இவர்களுடைய உறவினர்களும் சந்திர வம்சத்தார்களும், கலிங்க அரசர்களும் ஆகிய காங்கர்களுக்குச் சிற்றரசர்களாக இருந்தார்கள் என்றும் சாஸனம் மூலம் தெரிகிறது. கலிங்க, உத்கல தேசங்களில் பாத்ருடு என்ற பட்டம்

---

1. S. I. I. Vol. VI 656 முதல் 669 வரைக்கும் உள்ள சாஸனங்கள்

2. பிராம்மணர்களில் இன்றும் பலபத்ரபாத்திரன் என்ற வீட்டுப் பெயர் உடையவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஆந்திரப் பிராம்மணர்கள்.

அனேகமாகச் சிற்றரசர்களுக்கும், பிரதானிகளுக்கும் வழங்கப் பட்டதாக சரித்திர சான்றுகள் கிடைக்கின்றன. அதனால் இவர்களும் அந்தப் பட்டத்தை உபயோகித்திருந்தாலும் கௌடகள, பதிகள், முகம்மதியர்கள் முதலியோருடைய படையெடுப்புக்குத் தாங்காமல் காங்க ராஜ்யத்தோடு தம் தம் சிற்றரசர்களும் நசித்து விட எலமஞ்சியார் மறுபடியும் வந்த வழியே திரும்பித் தெனலி, ஏலூர்ப் பக்கத்தில் குடியேறினதாகத் தெரிகிறது.

இவர்கள் முகம்மதியர்களுடன் போராடி முதல் முதலில் காங்க அரசர்களுக்கு வெற்றியை உண்டாக்கினார்கள் என்று இவர்களுடைய சம காலத்தவர்களாகிய கோன அரசர்களின் பாஞ்சதார்ல சாஸனத்தாலும்[1] வேறு பல திருஷ்டாந்தங்களாலும் தெரிகிறது. இந்தச் சாளுக்கிய வம்சத்தில் பிற்காலத்தில் வந்த சர்வராஜு முதலிய பெரிய தலைவர்களையும் சிந்தபல்லிக் கணவாய் யுத்தத்தில் ஒன்று முகம்மதியர்கள் கி. பி. 1599 - ஆம் வருஷத்தில் முகுந்த பலேந்திரனுடைய ராஜ்யத்தை அபகரித்ததாக பைராமல், அமன் மூல்க் என்னும் முகம்மதிய சேனாதிபதி எழுதுவித்த ஸ்ரீ கூர்மத்துச் சாஸனம் ஒன்றால் தெரிகிறது.[2] அதுமுதல் எலமஞ்சி வம்சத்தில் இறந்தவர் தவிர மிஞ்சியவர்கள் ராஜ்யபிரஷ்டர்களாய் போன வழியே திரும்பி வந்துவிட்டார்களென்றும் ராஜ்யம் போனபின் பாத்திர, மகா பாத்திர பட்டங்கள் அர்த்தமற்றவை என்று விட்டு விட்டார்கள் என்றும் ஊகிக்கலாம். பாஞ்சதார்ல சாஸனங்களில் இந்த பாத்திரப் பட்டத்தைச் சாளுக்கியர்கள் கி. பி. 1538 - ஆம் வருஷம் வரைக்கும் உபயோகித்ததாக ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது.

இனிமேல், பாத்ருடு பட்டத்தை இப்பொழுது உபயோகிக்கும் சிஷ்டு கர்ண கம்ம ஜாதிக்கும், கம்மவாருக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா என்பதை ஆராய்வோம். இதை அறிந்து கொள்ளும் முன், கம்ம என்ற சொல் கம்ம குலத்தார் என்று எழுதிக்

---

1. “ஏகம் சித்ர மிதம்து பண்டுவ சுரத்ராணுர்த்த சேவா பரீத்ராணுர்த்தம் பிரதிகம்ய பாகுவிபவைன் நிர்ஜித்ய டில்லீ பதிம் துவாவிம்சத்யு குதந்திபின் மை மதாஜை த்ரேந்திரர் முத்கல க்ஷோணிசாயசபூபதி : சுரவரஸ்த்ரீ ப்யஸ் துருஷ்காண்யபி” (S. I. I. Vol. VI. No. 657)

2. S. I. I. Vol. V. No. 1312

கொண்ட பிராம்மணர்களுக்கும், கோமட்டிகளுக்கும், கரண கம்மர்களுக்கும் முதலில் வந்ததா, அல்லது கம்மவாருக்கு முதலில் வந்ததா என்னும் விஷயத்தைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லை. இந்தப்பெயர் கம்ம ராஷ்டிரத்தில் வசித்ததால் வந்தது என்று நம்பினால் கம்மவாருக்கும் மேலே சொன்ன மற்றவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்று தீர்மானிக்கலாம். இதைப்பற்றிய விவரங்கள் பின்னால் வருகின்றன.

பாத்திர என்ற விருதைக் கொண்ட எலமஞ்சியார் (சாளுக்கியர்) கம்மவாரின் முன்னோர்கள் அல்லர் என்று சந்தேகிப்பவர்கள், கீழே காணும் விஷயங்களையும் கவனித்தால் அவர்களுடைய சந்தேகம் தீரும்.

இதுவரையில் படித்தவற்றிலிருந்து கம்மவார் துர்ஜய வம்சத்தை சேர்ந்தவர்களென்பது ருஜுவாகிறது அல்லவா? துர்ஜய வம்சத்து ருத்திரம தேவியைச் சாளுக்கிய மகாதேவ சக்கரவர்த்தி மணந்துகொண்டான் என்பதைத் தெரிந்து கொண்டோம். மகாதேவ சக்கரவர்த்தியின் வீட்டுப் பெயரைக்கொண்ட கிடதவோலு வார் கம்மவாரில் இருக்கிறார்களன்றோ. பாத்ருடு முதலிய பட்டங்களை சாளுக்கியர்களும் சூரிய வம்சத்தாரும் பிராம்மணர்களும் கூட உபயோகித்திருக்கிறார்கள் என்பதற்குத் திருஷ்டாந்தங்கள் இருப்பதைப் பாருங்கள். சா. ச. 1381 - இல் சூரிய வம்சத்தானாகிய சந்துதேவ மகா பாத்திரனுடைய மகனாகிய ஹம்பிரகுமார மகா பாத்ருடுவின் சாஸனம் ஒன்று சிம்மாசல நரசிம்மர் ஆலயத்தில் இருக்கிறது.[1] இப்படியே சூரிய வம்சத்தாராகிய கஜபதி அரசர்களில் திருமல ரௌத்தராய மகா பாத்ருடு, குமார ஹம்பிர மகா பாத்ருடுவினுடைய மகன் நரஹரி பாத்ருடு, ஜன்யாலக சவா பாத்ருடு, பஸ்சிம பால சந்திர மகா பாத்ருடு முதலியவர்களைத் தாம் பிடித்துக் கொண்டதாக அமராவதியில் கிருஷ்ணதேவராயர் சாஸனத்தில் எழுதி வைத்திருக்கிறார்.[2] இவர்களெல்லோரும் கௌட கஜபதிகளின் பிரிவினர் என்று தோன்றுகிறது. சா. ச.

1. S. I. I. Vol. VI. No. 1088
2. A. R. No. 222 of 1297

1212 - இல் நரசிம்ம தேவராஜா காலத்துச் சாஸனம் ஒன்றில் [1] அந்தரங்கம் பாத்ருடு என்னும் பிராம்மணனுடைய பிரஸ்தாபம் வருகிறது. இப்படி பிராம்மணர் பலர் மகா பாத்திர, பாத்திரப் பட்டங்களை உபயோகித்ததாக சாஸனங்களில் காணப்படுகின்றன.[2] அதனால் பாத்திர, மகாபாத்திரப் பட்டங்கள் சூரிய சந்திர வம்சத்தினரைத் தவிர உத்தியோகச் சின்னமாகப் பிறரும் உபயோகித்ததாக நிச்சயப்படுகிறது. அதனால் பாத்திரப் பட்டதாரிகளெல்லோரும் சிஷ்டு கரண கம்ம முதலிய ஓட்ர ஜாதியாரின் முன்னோர்களே என்று சொல்ல முடியாது. சரித்திரக்காரர்கள் பலர் இந்தப் பட்டங்கள் உத்தியோகச் சின்னங்களே என்று சொல்லுகிறார்கள். [3]

இதனால் சாளுக்கிய அரசர்களில் பாத்திர பட்டதாரிகளாயிருந்தவர்கள் கம்மவாரின் முன்னோர்கள் என்பதற்கு ஆக்ஷேபணை ஒன்றும் இல்லை. அவரவர்கள் வசிக்கும் பிரதேசங்களை ஒட்டியும், செய்யும் உத்தியோகத்தைப் பொறுத்தும் இந்த விருதுகள் ஏற்பட்டன என்று நம்பலாம்.

இனிமேல் சாளுக்கியர்களில் பாத்திரர்களும் கம்மவாரின் முன்னோர்களாயிருக்கலாமென்றும் தெரிவித்தோம். அவர்களில் சிலர் காப்புக்களாகவும் மெல்ல மெல்ல வந்து விட்டார்கள் என்று ஊகிக்கலாம். அதற்கு வேண்டிய ஆதாரங்களை முன்பே சொல்லியிருக்கிறேன். வெலமவார் கூட கம்மவாரிலிருந்தே பிரிந்தார்கள் என்பதையும் முன்பே தெரிந்து கொண்டோம். இவ்வளவு தனித்தனி ஜாதிகளாக மாறுவது நடக்கக்கூடுமா என்று கேட்கலாம். இன்னும் இக்காலத்து ஆந்திர க்ஷத்திரர்கள்கூட இவ்வம்

1. S. I. I. Vol. VI No. 1137 & J. A. H. R. S. Vol. VIII Page 52 இலும் இவ்விஷயங்களிருக்கின்றன.

2. S. I. I. Vol. V. Nos. 1150-1167 முதலியவற்றைப் பார்க்க

3. ஸ்ரீ. R. சுப்பாராவ் பந்துலு M. A. L. T. இந்த ஆராய்ச்சியாளர் பாத்திரப் பட்டம் ராணுவ, மிலிட்டரி, சைனிய உத்தியோகச் சின்னமே என்று சொல்கிறார். J. A. H. R. S. Vol. VIII Pages 54, 74.

ஒட்ர தேசத்து அரசர்களும், மந்திரிகளும் இந்த விருதைத் தரித்ததாகச் சில சரித்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள். J. A. H. R. S. vol III & IV.

சேனாதிபதிகள் பாத்திர என்று அழைக்கப்பட்டதாக ஸ்ரீ ஜயந்தி ராமையபந்துலு அவர்கள் எழுதியிருக்கிறார். J. A. H. R. S. vol. II பக். 213.

சத்திலிருந்தவர்கள் என்று அறிந்தீர்களானால் மற்ற சங்கதிகளையும் நிஜமே என்று ஒப்புக்கொள்ள வேண்டும். இவைகளுக்கு மத பேதங்களே காரணம் என்றும், மதங்களில் ஒவ்வொரு முறை புரட்சி ஏற்பட்ட பொழுதும் அதனால் பல பேதங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும் நம்பலாம். இந்த விவரங்கள் அடுத்த பக்கத்திலிருக்கின்றன.

கலிங்க தேசத்துக் காங்க ராஜாக்களிடமும், கஜபதிகளிடமும், உத்தியோகம் வகித்த சோழ சாளுக்கிய தூர்ஜய வம்சத்தினர் வெகுகாலம் அங்கேயே இருந்து பாத்ருடு என்று சொல்லிக் கொண்டாலும் அவர்கள் கம்ம, காப்பு, வெலம ராஜ வம்சங்களுக்குச் சேர்ந்தவர்களே என்பது மேலே கண்ட விஷயங்களால் தெரிகிறது. கம்மவார் கஜபதிகளின் சேனாதிபதிகளாகவும், சிற்றரசர்களாகவும், இருந்ததற்குத் திருஷ்டாந்தங்கள் உள்ளன.[1] சாளுக்கிய அரசர்களுக்குப் பந்துக்கள் என்று சில சாஸனங்களில் சொல்லப்பட்ட, 'பட்வர்த்தன' வம்சத்தார் ஜைனப் பிராமணர்கள் என்று சரித்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள்.[2] இந்தப் பட்வர்த்தன ஜாதியைச் சேர்ந்த சமண சந்நியாசினி ஒருத்தி, சாளுக்கிய இரண்டாம் அம்மராஜ விஜயாதித்தியனுடைய வைப்பு மனைவியாக இருந்தாளென்று சாஸனங்கள் சொல்லுகின்றன. இந்த வகுப்பைச் சேர்ந்த, திரிகால யோக சித்தாந்த தேவர் என்பவர் விமலாதித்திய சக்ரவர்த்திக்குக் குருவானார், பட்வர்த்தன வம்சத்தவனாகிய மகா காளன் என்பவன், முதல் சாளுக்கிய பீமனுக்கு மாற்றாந்தாய் வழித் தம்பியின் மகனாக இருந்தான். பட்வர்த்தன நிருப காமனுடைய புத்திரனும் பாட்டாதித்தியனுடைய பெயரனுமான கண்ட நாராயணன், இரண்டாம் அம்மராஜ விஜயாதித்தியனுடைய மைத்துனனாய் இருந்தான்.

---

1. வெல சேடிவார் என்னும் கம்ம குலத்தார் பண்டுபல்லி அரசர்களாகவும் விஜயநகர, கஜபதி சம்ஸ்தானங்களில் சிற்றரசர்களாகவும், சேனாதிபதிகளாகவும் இருந்ததாகவும், அவர்களுடைய முன்னோர்கள் காங்க அரசர்களின் சிற்றரசர்கள் என்றும் வெலசேடி-குர்வாராயனைப் பாட்டுடைத் தலைவனாக்கி எழுதப்பட்ட தர்மநந்தன விலாஸம் என்னும் நூலில் இருக்கிறது. இந்தக் காவியம் இன்னும் அச்சிடப்படவில்லை. இவ்விஷயங்கள் கலிங்க சரித்திரத்திலும் எழுதப்பட்டுள்ளன.

2. பட்வர்த்தன ஜாதியார் இப்பொழுது நாகப்பூரில் இருக்கிறார்கள்; இவர்கள் பிராம்மணர்களே.

இந்தப் பட்வர்த்தனர்கள் பிராம்மணர்களாக இருந்து கொண்டு அதே சமயத்தில் சாளுக்கிய ராஜாக்களுக்குப் பந்துக்களாகவும் சேனுதிபதிகளாகவும் இருந்து அரசாங்க நிர்வாகங்களில் உதவி செய்தார்கள்; சில அக்கிரகாரங்களேயும் பெற்ருர்கள். இரண்டாம் அம்மராஜன், பொத்திய என்னும் பட்வர்த்தனனுக்கு நோமி என்ற இடத்தைத் தானம் கொடுத்ததாகப் பந்தர் (ஆலூர்)ச் சாஸனம் தெரிவிக்கிறது. இப்படியே, கொல்லபி கண்ட-விஜயாதித்தியன் தன்னிடம் மந்திரியாகவும் சேனுதிபதியாகவும் இருந்த பண்டனுதித்தியனுக்கு, கொண்டூர் என்னும் கிராமத்தையும், மகா காளனுக்கு ஜுஜ்ஜூர் என்னும் கிராமத்தையும் கொடுத்தான். பாதபன் ஆரும்பாக கிராமத்தைக் கண்ட நாராயண பட்வர்த்தனனுக்குக் கொடுத்தான். இந்தப் பட்வர்த்தன வம்சத்தினரே இக்காலத்து நியோகிப் பிராம்மணர்களாய் இருக்கலாமென்று ஸ்ரீ சி. வீரபத்திரராவ் பந்துலு அபிப்பிராயப்படுகிருர். இவர்கள் காலம் வரைக்கும் பிராம்மணர்களுக்கும் அரசர்களுக்கும் அந்யோந்ய சம்பந்தங்கள் இருந்ததாக இதனுலும் வேறு பல திருஷ்டாந்தங்களாலும் தெரிகிறது. புராண காலத்தில் நடந்ததுபோல் சாளுக்கிய குலத்தவர் பலர், பிராம்மணர்களோடு கலந்துபோய் நியோகிப் பிராம்மணர்களாய்விட்டதாகத் தெரிகிறது. சாளுக்கிய ராஜ ராஜ நரேந்திரன் நன்னய பட்டைப் பற்றிச் சொல்லும்பொழுது தன் குலப் பிராம்மணன் என்றதாகவும் தெலுங்குப் பாரதத்தில் புரோகிதன் என்ற பொருளில் எழுதப்படவில்லை ; 'பட்டு' அல்லது பட்டாரக குலத்தினரே சாளுக்கியர் என்பதாகவும், நன்னயபட்டு இவ்வம்சத்தினரே என்று குறிப்பிட்டதாகவும் பண்டிதர்களில் சிலர் அபிப்பிராயப்படுகிருர்கள். ராஜ ராஜ நரேந்திர பட்டாபிஷேக சஞ்சிகையைப் பாருங்கள்.

சாளுக்கிய அரசர்களும் காலக்கிரமத்தில் தங்களைப் பிராம்மணர்கள் என்று சாஸனங்களில் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். ராஜராஜன், நந்தம்பூடி சாஸனத்திலும், சக்திவர்மா, பபுபர்ரு சாஸனத்திலும் பாதபராஜன், ஆரும்பாக சாஸனத்திலும் இரண்டாம் சாளுக்கிய பீமன், விஷ்ணு வர்த்தன புத்ர

விஜயாதித்தியன் இவர்களுடைய சாஸனங்களிலும் 'பிரம்மண்ய' விருதுகளை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய சந்ததியார் மட்டும் க்ஷத்திரியர்களாகவே இருந்து ஆண்டு வந்த தாக அவர்களுடைய சாஸனங்களால் தெளிவாகிறது. இவர்கள் பிரம்மத்துவ சித்தி பெற்று விட்டோம் என்ற அபிப்பிராயத்தா லேயே அப்படி எழுதிக் கொண்டிருக்கவேண்டும்.

பட்வர்த்தன வம்சத்தார் கர்ண ஜாதியாராகிய காயஸ்தர் என்னும் கொள்கையும் இருக்கிறது. இவர்கள் சிஷ்டு-கர்ண கம்ம வார் என்று சரித்திரக்காரர்கள் சிலர் நினைக்கிறார்கள்.

சிஷ்டு கரணர்களைக் குறித்துக் கலிங்க தேச சரித்திரத்தில், முகலிங்கம் என்னும் கட்டுரையில், பிரசித்தி பெற்ற சரித்திரக் காரராகிய, ஸ்ரீ பாவராஜு - வெங்கட கிருஷ்ணராவ் எம். ஏ. பி. எல். அவர்கள் இப்படி எழுதியிருக்கிறார்.

"காயஸ்தர்கள்: இவர்களை இப்பொழுது ஆந்திர தேசத்தில், சிஷ்டி அல்லது சிருஷ்டி கரணமுலு என்று சொல்லுகிறோம். இங்கே இப்பொழுது காயஸ்தர் இல்லை. முன்பு இருந்த சில காயஸ்தர்கள் க்ஷத்திரியர்களோடும் கம்மவாருடனும் கலந்து போய்விட்டார்கள். காயஸ்தர்களில் கர்ணம் வேலையை ஏற்றுக் கொண்டவர்களை (சிஷ்டி) கர்ண காயஸ்தர் என்றும், மற்றவர் களைக் காயஸ்தர் அல்லது காளிங்கர் என்றும் சொல்வது வழக்க மாய் விட்டது. காளிங்கர்களில் இப்பொழுது பிராம்மணர்க ளென்றும் மற்றவர்களென்றும் பேதம் இல்லை. வெகு காலத்துக்கு முன்பே இந்தப் பேதம் இல்லை என்பது என் நம்பிக்கை. ஸ்ரீ கரணம் என்று சேர்த்துக்கொண்ட காயஸ்த நாயகர்கள் முகலிங்க சாஸனத்தில் காணப்படுகிறார்கள். அவர்களே இக் காலத்து சிஷ்டு அல்லது சிருஷ்டி ஸ்ரீ கரணமுலு என்னும் ஜாதியார் என்று நினைக்கிறேன். இவர்களே முக்காலத்துக் கலிங்க பிராம்மணர்கள் என்றும் ஊகிக்கிறேன்.

இந்த அபிப்பிராயம் எந்தமட்டும் பொருந்துமென்று நிர்ண யிக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆனால் ஐக்கிய மாகாணத்தில் இப்பொழுதும் காயஸ்தர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு

சிஷ்டு கரணமலு என்னும் பெயர் இல்லை. கம்மவாரில் காயஸ்தர்கள் கலந்து விட்டதாகவும் அவர்களில் சிலரே சிஷ்டு கரண ஜாதியார் என்றும் இவர் எழுதுகிறார். அதற்கு உதாரணம் ஏதாவது காண்பித்திருந்தால் நன்றாய் இருக்கும். காகதீய அரசர்களின்கீழ், காயஸ்த வம்சத்தார் கங்கயசாஹிணி முதலியோர் பிரதிநிதிகளாக இருந்து பெயர் பெற்றார்கள். அவர்கள் ஸ்பஷ்டமாக காயஸ்தர் என்று சொல்லிக் கொண்டார்களே யல்லாமல் சிஷ்டு கரணர் என்று சொல்லிக்கொள்ளவில்லை. இது ஆலோசிக்க வேண்டிய விஷயம்.

ஆந்திர சாதகர்ணி அரசர்கள் கிறிஸ்துவுக்கு முதல் நூற்றாண்டிலிருந்து ஆண்டவர்கள். இவர்களில் கடைசியாக ஆண்ட சிலர் மாணவ்ய சகோத்திரத்தார் என்றும், ஹாரீத புத்திரர்கள் என்றும் எழுதிக் கொண்டதற்கு அத்தாட்சிகள் இருக்கின்றன. † சாளுக்கிய அரசர்கள் முதலில் இருந்து இப்படியே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதைக் கொண்டு சாளுக்கிய அரசர்கள் ஆந்திர சாதகர்ணிகளின் பிரிவினர் என்று நினைத்தால் கரண அல்லது காயஸ்த வம்சத்தினர் சிலர் கம்மவாரில் சேர்ந்தார்கள் என்று சொல்லலாம். காயஸ்தர் சந்திர வம்மசத்தாரென்றும் பிரம்மாவின் உடலில் பிறந்தவர்கள் என்றும் வைதேஹனுக்கும் மாஹிஷ்யப் பெண்ணுக்கும் பிறந்தவர்கள் என்றும் கலப்பு ஜாதியினர் என்றும் சூத்திரர்களை விடக் குறைந்த ஜாதியினர் என்றும் பல புராணங்கள் சொல்லுகின்றன. ஆனால் அதைப் பிரமாணமாக எடுத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் கரண ராஜாக்கள் அல்லது ஆந்திர சாதகர்ணிகள் தம் சாஸனங்களில் பிரம்மன்யர்கள் என்றும், ஜாதிக் கலப்பைத் தடுத்தோம் என்றும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். (Ep. Ind. Vol VIII. Page 90)

கீழைச் சாளுக்கிய அரசர்களில் விமலாதித்யனுடைய காலத்திலிருந்து (கி. பி. 1011) மட்டுமே சந்திர வம்சத்தினர் என்று சொல்லிக் கொண்டதாகவும் அதற்கு முன்பு சொல்லிக் கொள்ளவில்லை யென்றும் சரித்திரக்காரர்கள் சொல்லுகிறார்கள். விமலாதித்யனுடைய கிரணங்கிபூலி சாஸனத்திலும் வீர சோழனுடைய

† ராஜ ராஜேந்திர நரேந்திர பட்டாபிஷேக சஞ்சிகை.

செல்லூர்ச் சாஸனத்திலும் நனயபட்டின் மகாபாரதத்திலும் சந்திர வம்சமென்றே தெளிவாகச் சொல்லியிருந்தாலும் அதற்கு முந்திய சாஸனங்களில் இல்லாததே சந்தேகத்துக்குக் காரணம். அதற்குமுன் சாளுக்கிய அரசர்களில் ஜைனமதம் அதிகமாகப் பரவியிருந்ததால் சந்திர வம்சத்தை நினைக்காமல் இருந்திருக்கலாம். வேறொரு திருஷ்டாந்தத்தாலும் இவர்கள் சந்திர வம்சத்தினரே எனலாம். மாணவ்ய சகோத்திரர், ஹாரீத புத்திரர் என்று முதலிலிருந்து சாளுக்கியர்கள் சொல்லிக் கொண்டார்களல்லவா? ஆந்திர சாதகர்ணிகளும் இப்படியே சொல்லிக் கொண்டார்கள். சூரிய சந்திர வம்சத்தினர் ஹாரீத கோத்திரர்கள் என்று ஸ்காந்த புராணம் சஹ்யாத்ரி கண்டத்தில் காணப்படுகிறது. 30-ஆவது அத்தியாயம் பாருங்கள்.

அதனால் சாளுக்கியர்கள் சந்திர வம்சத்தினர் என்பதில் ஆக்ஷேபணையில்லை. கி. பி. 692 காலத்து மேற்குச் சாளுக்கிய வினயாதித்தியனுடைய சாஸனத்திலும் சாளுக்கியர் சந்திர வம்சத்தின ரென்றே தெளிவாக எழுதியிருக்கிறேன். தௌர்வாஸ தேவி புராணக் கதை ஓரளவுக்கு உண்மை யென்றே நினைக்க வேண்டும். பிரதாபருத்திரன் II சாளுக்கியர் சொல்லிக் கொண்டபடி சந்திரவம்சத்தினன் ஆனதாலும் கம்மாவாருக்கு முன்னோன் ஆனதாலும் அந்தப் புராணத்தில் பிரதாபருத்திரன் வருங் காலத்தில் கம்ம குலத்தில் பிறப்பான் என்று எழுதப்பட்டது.

புராணங்களுக்குப் பழமை கொடுப்பதற்காக சிலர் எல்லா ராஜாக்களையும் வருங்கால ராஜாக்களாக்கி விட்டார்கள். இதிலும் அப்படியே. இதில் வரும் கம்ரன் என்பவன் மட்டு இருந்த ஆசாமியா, அல்லது கற்பனை மனிதனா என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. இந்தப் புராணத்துக் கதை கற்பனை என்று சொல்ல முடியாதபடி பதினாலாம் நூற்றாண்டின் ஒரு தனிப் பாடல் பக்க பலமாக உதவுகிறது. அதில் வோருகல்லு அரசன் கம்மவாரில் பிறந்தான் என்றே தெரிவிக்கிறது. மேலும் கம்மவாரில் சாளுக்கிய வம்சத்தினர் என்று நினைக்கும்படி இருக்கும் நிடதவோலு,

---

* சமீபத்தில் வெளிவந்த சா. ச. 892-ஆம் வருஷத்து தானார்ணவனுடைய கண்டியம் சாஸனத்திலும் இப்படியே இருக்கிறது.

அடப்பா, எலமஞ்சி, கொல்லபூடி, கோகா, முரகொண்ட (முதிகொண்ட) என்ற வீட்டுப் பெயர்களும் துர்ஜய குலத்தினர் என்பதற்கு ஆதாரமாக இருக்கும் மல்லெல அல்லது மல்யால, சாகி, விப்பர்ல, ஆலூரி வம்சங்களும் வேறு சில கோத்திரங்களும் (விப்பர்ல, வலவுட்ல) மேலே சொன்ன கருத்தை பலப்படுத்துவதற்குப் போதுமானவை. கம்மவாரைத் தவிரக் காப்புக்களிலும் மல்யால, சாகி, அடப்பா, தோலேட்டி வீட்டுப் பெயர்கள் உள்ளவர்கள் இருக்கிறார்கள்.[1] இவர்களும் துர்ஜய வம்சத்தினர் என்பதற்கு ஓர் ஆக்ஷேபனையும் இல்லை. சாளுக்கிய வம்சத்தினராகிய தோலேட்டி இந்துசேகர சக்கரவர்த்தி, அடப்பா விஷ்ணுவர்த்தன சக்கரவர்த்தி பிரம்மாதிராயர்,[2] துர்ஜய வம்சத்து மல்யால குண்டய தளபதி ஆகியவர்கள் காப்பு ஜாதியாராய் இருக்கலாம் என்று ஊகித்தால் நிடதப்ரோலு மகதேவ சர்க்கரவர்த்தியின் பெயரால் உள்ள நிடதவோலு வீட்டுப் பெயர் கம்மவாரில் மட்டுமே இருக்கிறது. பைடிபால முதலிய காப்புக்களின் கோத்திரங்கள் கம்மவாரிலும் இருக்கின்றன. முன்னூற்றுக் காப்புகளைப்போல முன்னூற்றுக் கம்மவாரும் இருக்கிறார்கள். இவ்விஷயங்களை யெல்லாம் பார்த்தால் பழைய காலத்து நூலாகிய பத்மநாயக சரித்திரத்தில் காணப்படும் 'காப்புலெல்ல வெலம, கம்மலேரி' என்னும் பத்தியத்தில் உண்மை யிருக்கிறதென்றே சொல்லவேண்டி யிருக்கிறது. கம்மநாட்டில் குடியேறிய சில சாளுக்கியர்கள் கம்மவார் என்றும் மற்றவர்கள் காப்புக்கள் என்றும் அவரவர்கள் கைக்கொண்ட தொழிலுக்குத் தகுந்தபடி குடிப் பெயர்கள் மாறியிருக்கலாம் என்று ஊகிக்கவேண்டும்.

காப்பு என்ற சொல் முதலில் காப்பவன் அல்லது அரசன் என்ற பொருளில் ஏற்பட்டிருக்க வேண்டும். ராஜ வம்சத்தின

1. காப்புக்களில் அடப்பாவார், செட்டிபாலகோத்திரத்தாராகவும் மல்யால்வார் பைடிபால கோத்திரத்தார் ஆகவும் தோலேட்டிவார் பைடிபால கோத்திரத்தாராகவும் கிழக்குக்கோதாவரிஜில்லா சந்திபூடி கிராமத்தில் இருக்கிறார்கள். இது ராமச்சந்திரபுரம் தாலுகாவைச் சேர்ந்தது. சாகியார் கிருஷ்ண ஜில்லாவில் இருக்கிறார்கள்.

2. இவர் ஏழை பிராம்மண மந்திரியாய் இருக்கலாம். பிராம்மணர்களில் உள்ள அடப்பாவாரைப் போலவே கம்ம காப்பு ஜாதிகளிலும் அடப்பாவார் இருக்கிறார்கள்: அட்டப்பா விருது உள்ள ராஜ வம்சத்தினர் சிலர் அக்காலத்தில் இருந்திருக்கிறார்கள். அதனால் நான் இவரைச் சாளுக்கிய வம்சத்தினர் என்று சொல்லுகிறேன்.

ராகிய இந்த பூமி காப்பவர் முதலில் வசித்த நகரங்களே கம்பிலி, காம்பில்யம் முதலிய பெயர்களால் பிரசித்தி யடைந்திருக்கலாம். அங்கிருந்து பல திசைகளுக்கும் பரவிய காம்பு என்பவர் காப்புக் களா யிருக்கலாம். மிதிலா நகரத் தரசனும் ஸ்ரீ ராமனுடைய மாமனும் ஆகிய ஜனகமகாராஜனும் இந்த ஜாதியாக இருக்க லாமோ என்று ஸ்ரீ வீரபத்திரராவ் பந்துலு அபிப்பிராயப் படுகிறார்.† இவர் க்ஷத்திரியர் இல்லை என்பது யாராவது சொல்ல முடியுமா? இவருடைய பந்துக்களாகிய அயோத்தி ராஜவம்சத் தினரும் முதன் முதலில் தாங்கள் பிரவேசித்த இடத்தின் பெய ரால் சோழ, சாளுக்கியர் என்று அழைக்கப்பட்டுப் பல ஆயிரம் வருஷங்களுக்குப் பின் கம்மவாரானதாகத் தோன்றுகிறது. விவ சாயத் தொழில் (காப்பு) அரசர்களுக்குத் தொன்றுதொட்டு வந்த தொழில் என்பதற்கு ஜனக மகா ராஜாவே சாட்சி. இவர் கலப் பைக் கொடி உள்ளவர். காப்பு என்ற சொல்லுக்கு, கிராமாதி காரி (முன்சீப்) என்று ஸ்ரீ பண்டித வங்கூரி சுப்பராவ் பொருள் சொல்லுகிறார். (சதககௌல சரித்திர பக்கம் 40, 41)

இந்த வம்சத்தைச் சேர்ந்த அரசர்கள் கம்மவார் ஆன காலம் 10 முதல் 13–ம் நூற்றண்டு வரை இருக்கலாம். சந்திர வம்சத் தினர் என்று பல சாஸனங்களில் சொல்லிக் கொண்ட சாளுக் கியர்களும் ஓரிடத்தில் சதுர்த்த வம்சத்தினர் என்று சொல்லிக் கொண்டதாக சாஸன திருஷ்டாந்தம் கிடைக்கிறது. சிம்மாசலத்து ஸ்ரீ நரசிம்மஸ்வாமி கோவிலில் சர்வலோகாச்ரய ஸ்ரீ விஷ்ணு வர்த்தன விச்வேச்வர தேவராஜா சா. ச. 1299-ஆம் வருஷத்தில் தன் மனைவியாகிய மனுமருத்திரயம் அவர்களுடைய புண்ணியத் திற்காகச் செய்த தான சாசனத்தில் (S. I. I. Vol. VI. No. 840. A. R. No. 284 Q. of 1899) இந்தச் சுலோகம் காணப்படுகிறது.

"சாதுர்த்தாண்வய சிந்துசீத<கிரணே
பக்த்யாஸ்வதேசியுதோ
ஸ்ரீ விச்வேச்வர தேவ பூபதிலக:
ஸ்வாபீஷ்ட சம்ஸித்தயே"

இதனாலும் சாளுக்கிய அரசர்கள் காப்பு, கம்ம இனத்தினர்

† ஆந்திரர் சரித்திரம் பாகம் V பக்கம் 522.

என்று சொல்லுவதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால் இச் சுலோகத்தின் முதல் வாக்கியம் சாளுக்கியான்வய என்று இருக்கலாம்.[1] இவர்களுக்கு பந்துக்களாகிய ஹைஹய வம்சத்து கோள சீமை அரசர்களும் துர்ஜய வம்சத்தினரும் காப்பு கம்மவாரில் சேர்ந்தவர்கள் என்று சொல்ல வேண்டுமா? சாளுக்கியர்களில் முதல் புலிகேசி, இரண்டாம் புலிகேசி முதலியவர்கள் அசுவமேத யாகங்களைக்கூடச் செய்திருப்பதாக ஹொஸூர் சாஸனங்கள் முதலிய திருஷ்டாந்தங்கள் கிடைக்கின்றன.[2] அவர்கள் அக்காலத்தில் கலப்பில்லாத க்ஷத்திரியர்களாய் இருந்திருக்க வேண்டும். அவர்களுடைய சந்ததியார் காலக்கிரமத்தில் ராஜ்யங்களை இழந்தாலும் ராஜ்யத்திலிருந்தபோதுகூட சேனதிபதிகளும் சைனிகர்களும் பிழைப்புக்காகவும் நிலங்களை உழுது பயிரிட்டு காப்பு, கம்மவாராக ஸ்திரமாக விவசாயிகளாக மாறிவிட்டார்கள் என்பது பொய்யல்ல.[3] சா. ச. 1069-ஆம் வருஷம் கம்ம நாட்டில், கம்மநாட்டு ராஜபுத்திரர்கள், மந்தட்லு நாக்க நாயகர், தேசக்லு என்ற பெயர்கள் இருந்ததாக சாஸனங்களால் தெரிகிறது.[4] இவை எல்லாம் அவரவர்களுடைய தொழிலை ஒட்டிவந்த பெயர்களே. சாளுக்கியர்கள் முதலிலிருந்தே சூத்திரர்கள் என்றாலும் சோழ துர்ஜய வம்சத்தாரும் இப்படியே என்று சொன்னாலும் நம் நாட்டில் க்ஷத்திரியர்களே இல்லை யென்று சொல்லவேண்டும். இது அசம்பாவிதம். வேதகாலத்திலிருந்து தொழிலாலேயே யாவருக்கும் க்ஷத்திரியத் தன்மை ஏற்பட்டது. ஸ்ரீ ராமனுடைய மாமனாராகிய ஜனகரும் இப்படிப்பட்ட க்ஷத்திரியரே என்று முன் சொன்னோம்.

சாளுக்கிய அரசர்களில் மூன்று பிரிவுகள் உண்டு. பாதாமியிலும், கல்யாணிலும், வேங்கி தேசத்திலும் இந்த மூன்று பிரிவினரும்

1. இச்சாஸனம் கொஞ்சம் அழிந்திருப்பதால் எழுத்துக்கள் தெளிவாக இல்லை யென்றும் ஒருவேளை சாதுர்த்தாண்வய என்பது சாளுக்யான்வய என்று இருக்கலாமென்றும் சென்னை Ep. Supt. என்னிடம் தெரிவித்தார். அவருக்கு என் நன்றி.

2. J. A. H. R. S. Vol. VIII Page 12 & Hosur Plates. Ep. Ca. X.

3. கம்மவாரில் காப்புக்களின் விட்டுப் பெயர்களும் இருக்கின்றன.

4. A. R. No. 193 of 1899.

ஆண்டனர். வேங்கி தேசத்தில் ஆண்ட கிழைச் சாளுக்கியர்கள் இந்த பிரிவிலிருந்து கம்ம, வெலம ஜாதியாராக மாறினதாக அறிந்தோம். மற்றவர்களைப் பற்றித் தெரியாது. சுராஷ்டிரம் எனப்படும் குஜராத்தி தேசத்தை 10 முதல் 13 - ஆம் நூற்றாண்டு வரை ஆண்ட சோளங்கர்களும் சாளுக்கிய வம்சத்தினரே என்று சரித்திரக்காரர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் கம்மவாராக மாறினதற்கு ஆதாரங்கள் கிடைக்கவில்லை. சாளுக்கியர் முதலாக மற்ற எல்லோரும் க்ஷத்திரியர்கள் என்பதற்கு அடையாளமாக வர்மா என்ற பட்டத்தை உபயோகித்தார்கள் என்று பல சாஸனங்களால் தெரிகிறது. சங்க ஸ்மிருத்தியும் வர்மா என்பது க்ஷத்திரிய குலப் பெயர் என்றே சொல்லுகிறது,

பிராம்மணர்கள் தெய்வமல்லாதவரை தெய்வமாகவும் கடவுளை கடவுளல்லாமலும் செய்யும் சக்தியுள்ளவர்கள் என்று மகா பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. முற்காலத்தில் பிராம்மணர்களை அனுசரித்து க்ஷத்திரியத் தொழிலை மேற் கொண்டவர்களை (குடியானவர்களாகவோ, வேறு தொழிலாளிகளாகவோ அதுவரைக்கும் இருந்திருந்தாலும்) சூரிய சந்திர வம்சத்தினராகக் கருதினார்கள். இப்படியே பழைய நூல்களும் புகழ்ந்ததாகத் தோன்றுகிறது. வைசியர்களின் கோத்திரங்களை ஆராய்ந்தால் இந்த விஷயம் விளங்கும். இதை முன்பே சொல்லியிருக்கிறேன். வைசியர்களில் இக்ஷ்வாகு வம்சத்தினரும், மற்றவரும் இருக்கிறார்கள். சாளுக்கியரை வெலமவார் என்று சொல்ல ஒரு தடை இருக்கிறது. கி. பி. 1158—1196 வருஷங்களுக்கிடையில் ஆண்ட பிரதாப ருத்திர சக்கரவர்த்தியின் காலத்தில் வெலமவார் ஜாதிப் பிரிவினை செய்து கொண்ட பின்பும் சாளுக்கியர்கள் என்று சொல்லிக் கொண்ட பல ராஜபந்துக்கள் எந்தக் குலங்களில் சேர்ந்தார்கள் என்ற கேள்வி வரும். வெலம பந்துக்களைத் தவிர மற்றவர்கள் கம்மவாராகவும் ராஜ குலத்தாராகவும் மாறிவிட்டனரென்றே இதற்குப் பதில் சொல்ல வேண்டும். கம்மவாரிலும் ராஜ வம்சத்தில் இருக்கும் நிடதவோலு, எலமஞ்சி போன்ற வீட்டுப் பெயர்களே இதற்கு நிதரிசனம் ஆகும். இந்த வீட்டுப் பெயரைக் கொண்ட சாளுக்கியர்கள் பிற்காலத்தவரே.

## சூரிய சந்திர வம்சத்து அரசர்களின்—சட்ட விரோதமான சந்ததியார்.

ஆதி காலத்திலிருந்து மகா ராஜாக்கள் பட்டத்தரசிகளைத் தவிர வேறு மனைவிகளையும் மணந்து வந்ததாக புராணம் போன்ற பல நூல்களால் நமக்குத் தெரிகிறது. இம்மனைவிகளில் சுயஜாதிப் பெண்களும், வேறு ஜாதிப் பெண்களும் இருப்பார்கள். பணி விடை செய்யும் தாதிகளிலிருந்தும் கூட, சில சமயங்களில் மனைவி களை பொறுக்குவதுண்டு. இவர்களைத் தவிர விலைமாதரும் உண்டு. இந்த வழக்கம் சூரிய சந்திர வம்சத்து அரசர்களில் இருந்து வந்த தாகப் பழைய நூல்களின் மூலமும் அக்காலத்துச் சாஸனங்களா லும் உறுதிப்படுகிறது.

சூரிய சந்திர வம்சத்தினராகிய சோழ, சாளுக்கிய, தூர்ஜய வம்சத்து அரசர்களுக்கு இந்த மாதிரி மனைவிகள் இருந்ததாகத் தெரிவிக்கும் சாஸனங்கள் சிலவற்றை எடுத்துக் காட்டுகிறேன்.

சாளுக்கிய இரண்டாம் அம்மராஜ விஜயாதித்தியனுக்குச் (10-ஆம் நூற்ருண்டினன்) சாமகாம்பா என்னும் ஒரு பிராம் மணப் பெண் போகப் பெண்ணுக இருந்ததாய்க் கலுசம்பர்ரு தான சாஸத்தால் தெரிகிறது.

அமராவதியை ராஜதானியாகக் கொண்டு 12-ஆம் நூற் ருண்டின் கடைசியில் ஆண்ட கேத ராஜனுக்குக் கசவதேவி, பண் டாருவு நாகமதேவி, சோடமதேவி என்னும் போகப் பெண்கள் இருந்ததாக அவர்கள் எழுதுவித்த சா. ச. 1119-ஆம் வருஷத்து அமராவதிச் சாஸனத்தால் தெரிகிறது.[1] இப்படியே அவருக்கு அமரம்மா, கேதம்மா என்னும் வைப்பு மனைவிகள் இருந்ததாக அவர் எழுதுவித்த சா. ச. 113௦-ஆம் வருஷத்து உண்டவல்லி யைச் சேர்ந்த அனந்தசயனர் கோவில் சாஸனங்கள் தெரிவிக் கின்றன. சந்தவோலுவில் ஆண்ட வெல நாட்டு கொங்க ராஜனு டைய பணிப் பெண்களின் வம்சத்தில் சரணையா என்னும் வீரன் இருந்ததாக அவனுடைய வம்ச விவரங்களெல்லாம் சா. ச.

---

1 S. S. I. Vol. VI No. 228.

1083—ஆம் வருஷத்துத் திம்மாபுரச் சாஸனத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.[1] 14-ஆம் நூற்றாண்டின் காகதீய சக்கரவர்த்தியாகிய வீரப் பிரதாப ருத்திரதேவனுக்கு மாசல்தேவி என்னும் விலைமாது இருந்ததாகக் கிரீடாபிராமம் என்னும் நூலில் காணப்படுகிறது. இந்த மாசல் தேவியினுடைய சாஸனம் ஒன்று பெஜவாடாவில் காணப்படுவதால் இந்தச் செய்தி நிஜமே என்று தோன்றுகிறது.[2] கோட்டா தொட்டா பீமராஜனுடைய லஞ்சியப்ரோல சானி சாஸனம் ஒன்று சிம்மாசலக் கோவிலில் இருக்கிறது[3] மேலும் 12-ஆம் நூற்றாண்டின் வெலநாட்டு இரண்டாம் கொங்க ராஜனுக்கு, குண்டமாம்பா, ப்ரோலமாம்பா, சோமாண்டியம்மா என்னும் மனைவிகள் இருந்ததாகவும், வெலநாட்டு இரண்டாம் ராஜேந்திரச் சோழனுக்குக் குப்பாம்பா, கொங்கமாம்பா, அக்கம்மா, பண்டமதேவி என்னும் மனைவிகள் இருந்ததாகவும் அவர்களுடைய சாஸனங்களால் தெரிகிறது.[4] இவர்கள் எல்லோரும் பட்டத்து ராணிகள் அல்லாவிட்டாலும் சிலர் சுய ஜாதிப் பெண்களாகிய மனைவிகளே என்பதில் சந்தேகமில்லை.

ஆதி காலத்திலிருந்து இவர்களைப் போன்ற மனைவியருக்குப் பிறந்த குழந்தைகள் என்னவானார்கள்? இவர்களுக்குப் பிறந்தவர்களும், இவர்களுடைய பந்துக்களும் ராஜ வம்சத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்களா, என்பதை ஆராய வேண்டியிருக்கிறது. ஆழ்ந்து பார்த்தால் சுய ஜாதி மனைவிகளுக்குப் பிறந்தவர்கள் ராஜவம்சத்தில் சேர்ந்து அரசர்கள் என்று சொல்லிக் கொண்டதாகவே தோன்றுகிறது. விலை மாதர்களுக்கும், வைப்பாட்டிகளுக்கும் பிறந்த சந்ததியார் மட்டும் தம் தம் தாய்மார்களின் குலத்திலேயே சேர்ந்து விட்டதாகச் சொல்ல வேண்டும். ஆனால் எல்லோரையுமே வேசிகளின் வம்சத்தார் என்று சொல்ல முடியாது. சிலர் அரச வம்சத்தையே அனுசரித்துச் சில அரசர்களின் வீட்டுப் பெயர்களையும், கோத்திரங்களையும் வைத்துக் கொண்

1. சாஸன பத்திய மஞ்ஜரி 46—ஆம் சாஸனம்.
2. S. I. I. Vol. IV. Page 253.
3. S. I. I. Vol. IV. No. 249.
4. S. I. I. Vol. IV பார்க்க.

டிருந்தார்கள். இதனுல் சரித்திரக்காரர்கள் இவ் வம்சத்தாருடைய உண்மை நிலையை அறிந்து கொள்வதில் தவறு செய்யக்கூடாது. சுய ஜாதி மனைவிகளுக்குப் பிறந்தவர்களும் அவர்களுடைய உறவினர்களும் அரசர்களுடைய பந்துக்களாகவே அனுகு, லெங்க என்னும் பெயர்களுடன் இருந்ததாகத் தோன்றுகிறது. காகதீய கணபதி தேவ சக்கரவர்த்தி சோமி தேவி என்னும் பட்டகிஷியைத் தவிர நாரம்மா, பேரம்மா என்னும் இருவரை மணந்திருந்தான். இவர்கள் சோழ வம்சத்தவர்கள். இவர்களுடைய சகோதரனுகிய ஜயப்ப நாயகன் சக்கரவர்த்தியின் அனுகு என்ற பெயருடன் யானைப் படைத்தலைவனுக இருந்தான். இவன் பதின்மூன்ரும் நூற்ருண்டினன்.

## துர்ஜய குலத்தினரும், சோழ சாளுக்கியர்களும் கம்ம, வெலம ராஜகுலத்தாராய்ப் பிரிதல்.

கி. பி, 11—12 நூற்ருண்டுகளின் காலத்திலேயே துர்ஜய வம்சம் பல பிரிவுகளாகப் பரவியதோடு தெலிங்காணு சாஸனங்களின் ஒரு பகுதியாகிய கூடூர் சாஸனத்தால் விரியாலவாரு துர்ஜய வம்சத்தினர் என்று தெளிவாகத் தெரிவதாலும்,[1] விரியாலவாரு வேறு சில சாஸனங்களிலும்[2] அக்காலத்து பிரசித்தி பெற்ற சிற்றரசர்களாகக் காணப்படுவதாலும் விரியாலவார் வெலமவாரில் மட்டும் இருப்பதாலும் வெலமவாரில் சிலர் துர்ஜய வம்சத்தினர் என்றே முடிவாகிறது. வெலமவாரில் கொங்கண தேசத்துக் கும்பினிகள்கூட இருப்பதாகப் பத்மனுயக சரித்திரத்தில் காணப்படுகிறது.[3]

1 அனுபம துர்ஜயான்வய சுதாப்தி தனனேகுலு ராஜ சந்தனலு (ல்), சவினபிருந்த வென்னடுனு சம்ப வுடய்யெ னதிப்ரசித்துடை, விமதவிரோதிமண்டலிக வென்னடு வென்னுட வோலெ வானிகினி (ன்), கனுட்கு னெப்ர பூபதி ஜகத் வினுதுண்டு (த) யிஞ்ச கீர்த்திதோனு (ன்), பாவித கீர்த்தினுதனிகி பாண்டவமத்யம பிமுடோயனங், காவிரியால பீமன்ருப கஸ்மருடை (வு)தயின் செவாவிகினு (ன்)

தெலிங்காணு சாஸனங்கள் கூடூர் சாஸனம் பக்கம் 96.

2 தெலிங்காணு சாஸனங்கள் பக்கம் 68, 69, 105, 107.

3 கொங்கணுதிக சேதுவு கும்பினுலனு, ஆந்திர த்ரவிடாதி தேசமுலந்து வெலம, பேரு பிரக்யாதி னொந்தி விஸ்தார மகுசு.

பரிச்சேத பண்டய ராஜன் எழுதுவித்த ஸ்ரீ பிமேச்வரர் கோவில் சாஸனத்தாலும்[1] பரிச்சேத அல்லாட நாநதேவன் எழுதுவித்த சா. ச. 1205 காலத்து ஸ்ரீகாகுளம் ஈசுவரன் கோவில் சாஸனத்தாலும்[2] யானை லக்ஷ்மண கவி எழுதிய ராம விலாஸம் என்னும் நூலில் " சாகியார், வத்ஸவாய குலத்தார் ஆகிவிட்டார்கள் " என்று எழுதப்பட்ட செய்தியாலும் முன்பு விவரித்த சாகியார் சாஸனங்களாலும்[3] சோமதேவ ராஜீயத்தில் மந்தபாட்டி நாராயண ராஜு, காகதி ருத்திர குலத்தவன் என்று ஜக்க கவி எழுதியிருப்பதாலும்[4] இக்காலத்து ஆந்திர க்ஷத்திரியர்களுடைய முன்னோர்களில் சிலர் துர்ஜய வம்சத்தவர்கள் என்றே சந்தேகமறத் தெரிகிறது. இனிமேல் வரும் வீட்டுப் பெயர்களை கவனியுங்கள். இவற்றில் உள்ள ஆலூரி, மல்யால, சாகி முதலிய பெயர்கள் மேற்சொன்ன செய்தியை உறுதிப்படுத்துகின்றன. இன்னும் இவர்கள் வீட்டுப் பெயராகிய கட்டா, நிடதவோலு, எலமஞ்சி, பொந்தூரி, நெல்லூரி முதலிய வீட்டுப் பெயர்களைப் பார்த்தால் இவர்களில் சிலர் சோழ, சாளுக்கிய வம்சத்தினரே என்று சொல்லும்படி யிருக்கிறது. கம்மவாரில் துர்ஜய, சோழ, சாளுக்கிய வம்சத்தினர் கலந்திருந்தார்கள் என்று பல சான்றுகளை எடுத்துக் காட்டினேன். கொண்ட்ராஜு வெங்கட்ராஜுவின் (கி. பி. 1770) குலத்தாரும் மட்ல அனந்த ராஜனும் (கி. பி. 1565) விஜய நகர சாம்ராஜ்யத்தில் பிரதித்தி பெற்ற சேனாதிபதிகளா யிருந்த கோனேட்டிவாரும், சாளுவவாரும் தெலுங்குச் சோழ வம்சத்தாரென்பது உறையூர் நகரத் தலைவர் என்ற விருதினாலும், சூரிய வம்சத்தினர் என்று சொல்லிக் கொள்வதாலும் உறுதிப்படுகிறது.

காப்புகளில் இருக்கும் அடப்பா, தோலேட்டி முதலிய வீட்டுப் பெயர்களைச் சாளுக்கிய அரசர்கள் வைத்துக் கொண்டதாகத்

---

1 S. I. I. Vol. IV. No. 1106
2 S. I. I. Vol. IV. No. 986.
3 S. I. I. Vol. VI. Page 244.
4 ஸ்ரீ காகதி ருத்திரான்வய,
நாகாதிய மந்தபாட்டி. நாராயணதா
த்ரீகாந்த ஹ்ருதய கமல
ப்ராகார நிவேச சத்தியபாமாநிசா. ||

தெரிகிறதாலும் இவர்களே கம்ம, வெலம ஜாதியாராக மாறினர்கள் என்று பத்ம நாயக்க சரித்திரம் சொல்லுவதாலும் அதன் கதையை நாம் முழுக்க நம்பாவிட்டாலும், கம்ம, வெலமவாரில் சிலர் முதல் முதலில் காப்புலு என்று அழைக்கப்பட்டதாக அறிந்து கொள்ள வேண்டும். கீழே வரும் தெலுங்குப் பத்தியம் காப்புக்கள் கம்ம, வெலமவார் ஆன காலத்தைக் காட்டுகிறது.

" ஊரி வரத நீரு ஹுரக ஸரயு ஜேரி
தீர்த்த யோக்யமைன தெரகு காதெ ?
கால சோதித முன காகதீச்வரு கொல்சி
காபு லெல்ல வெலம கம்மலைரி

தொலிகால மூர்வி கொடவல
வெலியை யாலய முலந்து விஹரிஞ்சுடசே
னில காபு ஜனுலு கொந்தரு
வெலமலனன் ஜகதிலோன விச்ருதுலகுடன், "

காப்புக்களைப் பற்றி முன்பே தெரிந்து கொண்டிருக்கிறோம். இவர்கள் சூரிய சந்திர வம்சத்தினராய் இருந்து காம்பில்யம் முதலிய நகரங்களில் வசித்தவர்கள். பின்பு ஆந்திர தேசத்துக்கு வந்து காம்புலு, காபுலு, என்று அழைக்கப்பட்டதாகச் சான்றுகள் இருக்கின்றன. இவர்களைக் கும்பினிகள், அல்லது கும்பி, கூர்மர் என்றும் மராட்டியர் என்றும் மகாராஷ்டிர தேசத்திலும் நைஜாமிலும் சொல்லுவார்களாம். அவர்கள் தெலுங்கு தேசத்துக் கம்ம காப்பு, வெலம, ரெட்டி சமூகங்களைப் போலவே வியவசாயத்தை முக்கியமாகக் கொண்டிருந்த வீர வம்சத்தினர் என்றும் மற்ற சூத்திரர்களுக்கும் இவர்களுக்கும் மிகவும் வித்தியாசம் இருப்பதாகவும் அந்த அந்தத் தேசத்துச் சர்க்காரின் கெஜட்டுகளின் மூலம் தெரிகிறது.[1] இந்தக் கூர்ம வம்சத்தார்களும் கும்பி என்பவர்களும் ஒரு ஜாதியினரே என்றும் சூரிய வம்சத்தில் அடங்கிய சந்திர வம்சத்துக் கூர்ம ரிஷியின் வம்சத்தினர் என்றும் ஜயார்த்தப் பிரகாசிகை, மூன்ரும் பாகத்தில் ஸ்ரீ ஸரஸ்வதீ சுவாமிகள் சொல்லியிருக்கிறார். கூர்ம வம்சத்துக்குச் சம்பந்தப்பட்ட ராஜ

1 Hyderabad State Gazette Vol. XIII P. 247.

வம்சம் பல இன்னும் இருக்கின்றன. அவர்கள் இப்பொழுது சூரிய வம்சம் என்றே சொல்லிக் கொள்ளுகிறார்கள். சௌந்தரீ என்னும் சொல் ஆராய்ச்சியில் அவற்றைப் பற்றி விவரிப்போம். கூர்ம, அல்லது கும்பி வம்சத்தினரே காப்புக்களாகிக் கொங்கண தேசத்திலிருந்து வந்து வெலமவாரில் சேர்ந்திருப்பார்கள் என்றும் அதற்கு முன் ஆந்திர தேசத்தில் இருந்த கம்ம, வெலமவாராகச் சிலர் மாறிவிட்டார்கள் என்றும் பத்ம நாயக்க சரித்திரத்தைக் கொண்டு ஊகிக்கலாம். கொங்கண தேசத்துக் கும்பினிகளைப் போலவே ஆந்திர, திராவிட தேங்களில் வெலமவார் கீர்த்தி பெற்றனரென்று முன் சொன்ன பத்ம நாயக்க சரித்திரப் பத்தியங்களால் தெரிகிறது. அதில் வந்த இரு ஜாதியும் ஒன்றே என்று தெரிகிறது. ஆனால் ஆந்திர தேசத்தில் காப்பு ஜாதியினர் வேருகப் பிரிந்தே இருப்பதாலும் கம்ம, வெலமவாராக மாறினதாகச் சொல்லப்பட்டவர்கள் கம்ம நாட்டுக் காப்புக்கள் என்றும் மற்ற காப்புக்கள் வேறு பிரதேசங்களைச் சார்ந்தவர்கள் என்றும் ஊகிக்கலாம். பிற்காலத்தில் ஆந்திர தேசத்துக்குக் கூட்டங் கூட்டமாய் வந்த காப்புக்கள் வேருக இருந்தனரேயன்றிக் கம்மவாரில் சேரவில்லை. கம்மவாரில் சேர்ந்த சிலர் 'காப்பு' என்ற வீட்டுப்பெயரை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

தெலுங்கு மகாபாரதம் இயற்றிய காலத்திலேயே, (11, 12 – ஆம் நூற்றாண்டுகள்) காப்புக்கள் ஆந்திர தேசத்தில் இருந்ததாகப் பிரயோகங்களால் அறிகிறோம். 9–ஆம் நூற்றாண்டின் சாளுக்கிய பீமன் காலத்துக் கொறவி சாஸனங்களிலும் காப்பு, காம்பு என்ற சொற்கள் காணப்படுகின்றன. (தெலிங்கானு சாஸனம் பக். 163 பார்க்க) இந்தக் காப்புக்கள் முதல் பிரதாப ருத்ரன் காலத்தில் கம்ம வெலம வாராக மாறியதாகப் பத்ம நாயக்க சரித்திரம் சொல்லுகிறது. அது (கி. பி. 1158—1196). இதை இன்னும் ஆராய்ந்தால் பின்னுக்கே போகிறது. சா. ச. 1072 (கி. பி. 1150) காலத்திலேயே வெலமபல்லி என்னும் கிராமம் ஒன்று இருந்ததாக ஸ்ரீ பீமேசர் கோயிலில் ஹைஹய அரசன் ஒருவன் எழுதுவித்த சாஸனத்தால் தெரிகிறது.[1]

1 S. I. I. Vol. VI Page 368.

கம்மவார் சூரிய வம்சத்துச் சோழ அரசர்கள், துர்ஜய வம்சத்தினர் என்பதற்குப் பல உதாரணங்கள் காட்டினேன். சக, யவன, பல்லவர்களைப் போல் சோழர்களும் ஜாதியை விட்ட க்ஷத்திரியர்கள் என்று ஹரிவம்சம் முதலிய நூல்களிலிருந்து அத்தாட்சி எடுத்துக் காண்பித்தேன். வெல நாட்டுச் சோழர்களும் சதுர்த்த வம்சத்தினர் என்று சொல்லிக் கொண்டதை அறிந்தோம். துர்ஜய வம்சத்தினரே, சிலர் தொழிலைக் கொண்டு கம்ம நாட்டுக் காப்புக்களென்று அழைக்கப்பட்டுக் கடைசியில் கம்மவார் ஆனதாகச் சொல்ல வேண்டும்.

இந்தக் கிளையினரே அதற்கு முன் சொல்லி வந்ததுபோல் க்ஷத்திரியர்கள் என்றே சொல்லி வந்ததாகத் தெரிகிறது. இவர்களில் குடிமெட்ட சாகிவார் முக்கியமானவர்கள். பரிச்சேத ராஜாக்களும் வெல நாட்டு அரசர்களும் சொல்லிக் கொண்டது போல் சிலர் மட்டும் சதுர்த்தர் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இந்த மாறுதல்கள் எல்லாம் மதமாறுதலுக்குப் பிறகே வந்தன. கம்ம நாட்டு வாசிகளாகிய இந்தப் பிரிவினரே, க்ஷத்திரிய, சதுர்த்த வம்சத்துக்குப் பதிலாகக் கம்மவார் என்று அழைக்கப்பட்டனர். ஆந்திர க்ஷத்திரியர்களும் கம்மவாரும் அக்காலத்தில் ஒன்ருக இருந்து பிறகு கொஞ்சங் கொஞ்சமாகப் பிரிந்துவிட்டதாகத் தோன்றுகிறது. கம்ம நாட்டுப் பின்ன சோழன் மகளை, இக்காலத்து ஆந்திர க்ஷத்திரியர்களுக்கும் மூல புருஷனுகிய கணபதி தேவ சக்ரவர்த்தி 13 - ஆம் நூற்ருண்டில் மணந்ததால் அக்காலத்தில் இரு பிரிவினரும் சேர்ந்து இருந்ததாகத் தோன்றுகிறது. இவர்கள் 14 - ஆம் நூற்ருண்டில் இரண்டாம் பிரதாப ருத்திர சக்ரவர்த்தியின் காலத்தில் வேறுபட்டிருக்க வேண்டும்.

இந்தப் புதிய ஜாதி பிரிந்த காலத்தில் தான் கோத்திரப் புரட்சி ஏற்பட்டிருக்கவேண்டும். அப்பொழுது உண்டான கிராம, கோத்திரங்களே, இன்றைக் கம்ம, வெலம, காப்பு ஜாதிகளில் இருக்கின்றன. ராஜகுலத்தாரில் இப்பொழுது இருக்கும் ரிஷி கோத்திரங்கள் எந்தக் காலம் முதலாக வரிசையாக வந்தவை என்பதை அறிய ஆதாரம் இல்லை. மற்ற ஜாதியாரின் கோத்திரங்கள்

11, 12-ஆம் நூற்றூண்டின் காலத்திலேயே இருப்பதாக ஆதாரம் இருக்கிறது. இவற்றைப் பின்னால் பார்ப்போம்.

இந்தப் பிரிவுகள் வந்ததன் காரணத்தை அறிய முயல்வோம். 12, 13-ஆம் நூற்றாண்டுகளில் ஆந்திர தேசத்தில் ஏற்பட்ட மதப் புரட்சிகளைச் சேர்த்துப் பார்த்தால் இதன் உண்மை புலப்படும். இந்தச் செய்தி, ஸ்ரீ நாதகவி எழுதிய பல் நாட்டு யுத்த சரித்திரத் தால் சிறிது தெரிகிறது. இந்த யுத்தம் கி. பி. 1172—86 வருஷங் களின் இடைக்காலத்தில் நடந்திருக்கு மென்பது சரித்திரக்காரர் களின் அபிப்பிராயம். (ஆந்திரர் சரித்திரம் பாகம் V பக். 352) இந்த யுத்தத்துக்குப் பிறகே வெலமவார் ஏற்பட்டார்கள் என்று ஸ்ரீ மா. ராமா ராவ் பி. ஏ, எம். ஆர். ஏ. எஸ். அவர்கள் அபிப் பிராயப்பட்டார்கள்.[1] ஆனால் முன்னால் சொன்ன ஆதாரங்களி னாலும் பல்நாட்டு யுத்த வீரர்களில் பால நாயுடு தோழன் ஒரு வெலமன் என்று சொல்வதாலும் அந்த அபிப்பிராயம் ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று.

வெலமவாரின் மூல புருஷர்களில் ஒருவனும் பல்நாட்டு வீர னுமாகிய பிரம்ம நாயுடு தூர்ஜய வம்சத்தினனாய் இருந்தும் வீர வைஷ்ணவ மதத்தில் சேர்ந்தான். பஞ்சமர்கள் எல்லோரையும், தன் மதானுசாரப்படி தன் மதத்தில் சேர்த்தான்; சமூகச் சீர்திருத் தம் செய்தான் என்று பத்ம நாயக்க சரித்திரத்தால் தெரிகிறது. இதற்கு ஒப்புக்கொள்ளாத மற்ற ஜாதியினர் இந்தப் புதிய மதத்தி னரை ஜாதிப் பிரஷ்டம் செய்தார்கள். அந்தச் சமூகம் முழுவதும் வெலமவாராய் விட்டதாகத் தோன்றுகிறது. இது பல்நாட்டு யுத்தத்துக்கு முன் நடந்ததாகச் சொல்ல வேண்டும்.

இப்படி இவர்கள் சிறிது காலம் விலக்கப்பட்டிருந்து (ஏறக் குறைய ஒரு நூற்றாண்டு) குலத்தின் அவமானம் தாங்கமுடியாமல் கடைசியில் காகதியனும் தூர்ஜய குலத் தலைவனும் ஆந்திர தேசச் சக்கரவர்த்தியும் ஆகிய இரண்டாம் பிரதாப ருத்ரனிடம் தங்கள்

---

1 "We have stated that the community itself was formed after the Palnadu War" (J. A. H. R. S. Vol. VI Part I. Page 32)

குறையை முறையிட்டார்கள். சக்கரவர்த்திக்கும் முகம்மதியர்களுக்கும் நடந்த யுத்தத்தில் சேனாதிபதிகளாகவும் வீரர்களாகவும் இருந்து உதவினார்கள். கடைசியில் பிரதாப ருத்திரனால் ஒரு சமபந்தி போஜனம் ஏற்பாடு செய்வித்தார்கள். இந்தச் சக்கரவர்த்தி சமபந்தி போஜனம் கொடுத்ததாக, வெலம சரித்திரத்தில், வெலுகோடியார் வம்ச சரித்திரம், ராவ் வம்ச சரித்திரம், பத்ம நாயக்க சரித்திரம் ஆகியவை சொல்லுகின்றன. அரசன் சமபந்தி போஜனத்தால் கௌரவித்து எல்லோரையும் அழைத்தால் வருவார்கள் என்றும் அதோடு ஜாதி பகிஷ்காரம் நீங்கிவிடும் என்றும் நினைத்து வெலமவார் இந்த விருப்பத்தை அரசன் மூலமாக நிறைவேற்றிக் கொண்டனர். அதற்குள், காலப்போக்கில் பிரதாப ருத்திர சக்கரவர்த்தியின் ராஜ்யம் துருக்கர் படையெடுப்பினால் சிதைந்துவிட்டது. வெலமவார் விஷயத்தில் அவர் செய்த பிரயத்தினம் அவருடனே முடிவடைந்துவிட்டது. பத்ம நாயக்க சரித்திரத்தில் வெலமவார் ஜாதி பகிஷ்காரம் ஆன கருத்தே இந்தப் பத்தியத்திலும் காணப்படுகிறது.

சீசபத்தியம் :

> ரெட்டி சந்ததிகி மாரெட்டி பேதம்பைன
> குலிமுத்தரிஞ்சிரீ வெலம வாரு
> பத்ம நாயகமான பங்கம்பு காகுண்ட
> பலியுரை நெகடிரீ வெலம வாரு
> கடிதேரி காகதி கணபதி கொலிசியு
> னிலனேனு ப்ரபுவுலீ வெலம வாரு
> காபுல மாடகை கடகி வெலமலந்து
> நிலசின ரூடுலீ வெலம வாரு
>
> (ஆந்திரர் சரித்திரம் V)

சரித்திரக்காரர்களில் ஒருவராகிய ஸ்ரீ மா. ராமா ராவ் எம். ஏ. பி- இ. டி. அவர்கள், வெலமவார் பல ஜாதிக் கலப்பினால் குலப்பிரஷ்டர்களாகக் கருதப்பட்டதாக எழுதியிருக்கிறார். (காகதீய சரித்திரம்). பின்பு கம்ம நாட்டில் பிராம்மண மதாச்சாரம் மிக மிக முக்கியத்துவம் பெற்றது; அதனால் வேறு மதத்தில் புகுந்த துர்ஜய

வம்சத்தினரை க்ஷத்திரியர்கள் என்று அழைக்காமலிருந்ததாகத் தோன்றுகிறது. ஆந்திர தேசத்தில் வடக்கே சென்ற இவ் வம்சத்தாரின் விஷயத்தை அறியாத முகம்மதியர்,—இவர்களுடைய ஜாதியைப்பற்றிய கவலை அவர்களுக்கு இல்லாததால்,—வெலமவார் சொல்லிக்கொண்டபடி க்ஷத்திரியர்கள் என்றே அழைத்ததாகத் தோன்றுகிறது. இவர்கள், வீர சைவ, வீர வைஷ்ணவ மதாவேசங்களில் அகப்படாமல், (வைதிக) சைவ, வைஷ்ணவ மத சம்பிரதாயப்படி நடந்து கொண்டு சூரிய வம்சத்தினர் என்று சொல்லிக்கொண்டதாகத் தெரிகிறது. இப்படிச் சொல்லிக் கொண்ட காலம், இவ்வம்சத்தார் துருக்கர்களுக்கு அடங்கிப் பெத்தாபுரம் முதலிய சம்ஸ்தானங்களைச் சம்பாதித்த பிறகே தொடங்கியதென்று தோன்றுகிறது. பெத்தாபுரச் சம்ஸ்தானத்தார் எழுதுவித்த (லக்ஷ்மண கவி எழுதிய) ராம விலாஸம் முதலிய நூல்களுக்கு முன், சாகியாரின் சாஸனத்தில் தவிர, இக்காலத்து ஆந்திர க்ஷத்திரியர்களின் முன்னோர் க்ஷத்திரியர்களாக மட்டுமே இருந்ததாகக் காணப்படவில்லை. சதுர்த்தர்கள் என்று எழுதிக்கொண்ட பரிச்சேதர்களுடைய சாஸனங்களையும், கோட்டை அரசர்களையும் பற்றி முன்பே சொல்லியிருக்கிறேன்.

பெத்தாபுரச் சம்ஸ்தானத்தார் துருக்கர்களின் சிற்றரசர்களாகி, பிராம்மண மதத்தைப்பற்றி ஏதும் அறியாத அந்த ஜாதியாரால் (மத பேதம் அறியாததால்) வெலம வார் பழைய சூரிய வம்சத்தினராகவே அழைக்கப்பட்டனர். ‘யதா ராஜா, ததாப்பிரஜா’ என்றபடி அந்தத் தேசத்துக் குடிகளும் இவர்களை க்ஷத்திரியர்கள் என்றே அழைத்தனர். இவர்களும் இவர்களுடன் சேர்ந்த பிராம்மண பந்துக்களும் காலக்கிரமத்தில் கோதாவரியின் இருகரையிலும் குடியேறி, க்ஷத்திரியர்கள் என்றே சொல்லிக் கொண்டனர். ஆனாலும் இவர்கள் தூர்ஜய வம்சத்தினரே.[1] அக்காலத்தில் பிராம்மணர்களும் க்ஷத்திரியர்களும் சம்பந்தம்

1 ஆந்திர க்ஷத்திரியர்களின் ஒரு பிரிவான மந்த பாட்டி, உப்பல பாட்டி, ஸையப ராஜு, நம்பூர், குண்ட் ராஜு, பாத பாட்டி, சதரபல்லி, கட்டாரி, பெல்லம் கொண்ட, கனுமூரி, லகம் ராஜு, இவ் விட்டுப் பெயர்களை உடையவர்கள் எல்லோரும் காசியப கோத்திரத்தார் என்றும் காடிநிய வம்சத்தினர் என்றும் சொல்லிக்'கொள்வதால், இவர்கள் தூர்ஜய வம்சத்தினர் என்பது திட்டப்படுகிறது.

செய்துகொண்டதற்கு, முன்பே திருஷ்டாந்தங்கள் காண்பித்திருக்கிறேன். கம்மவாரில் இருப்பது போலவே, இந்த ஆந்திர க்ஷத்திரியர்களிலும் சோழ, சாளுக்கிய, துர்ஜய, ஹைஹய வம்சத்தினர் இருப்பதாக, அவர்களுடைய வீட்டுப் பெயர்கள் தெரிவிக்கின்றன. கம்மவாரிலும் இவர்களிலும் ஆலூரி, மல்யால, கட்டா, பொந்தூரி, நெல்லூரி, எலமஞ்சி, நிடதவோலு, சாகி, ராபர்த்தி, கோன, பெல்லம் கொண்ட, கனுமூரி, பூஸபாட்டி, கட்டாரி, உப்பல பாட்டி, ஜம்பனி, கோனேரு முதலிய வீட்டுப் பெயர் உள்ளவர்கள் இருப்பதால் இந்தக் கொள்கை உறுதிப்படுகிறது.

சதுர்த்த வம்சம் என்று எழுதிக்கொண்டவர்களும் தனஞ்ஜய கோத்திரத்தவர்களும் ஆன கோட்ட வம்சத்தினர் என்றே, க்ஷத்திரியர்களுக்குள் உள்ள, தாண்ட்ல, ஜம்பனி, தந்துலூரியார் சொல்லிக்கொள்வதாலும் கம்மவாரிலும், கோட்டவார், ஜம்பனிவார் இருப்பதாலும் ஆதியில் இந்த இரு குலத்தவரும் ஒன்றே என்று விளங்குகிறது. கோட்ட அரசர்கள் தனஞ்சய வம்சத்தார் என்பதற்கு, பூ ரமதேவி, கேத ராஜு இவர்களுடைய சாஸனங்களே ஆதாரம்.[1] கோட்டவாரு கம்மவாரே என்று பெதகாநெலவர்ரு லோகல் ரிக்கார்டுகளில் காணப்படுகிறது.

கம்மவாரும் வெலமவாரும் முதலிலிருந்தே ஒரு ஜாதியார் என்பதற்குக் காரணங்களை ஆராய்வோம். இவ் விருவருடைய கோத்திரங்களையும் பரீக்ஷித்ததில், ரேசெர்ல, இனகண்டி, பாலகுல புவ்வாட, விப்பர்ல, சாகண்டி ஆகிய கோத்திரங்கள் இரு சாராரிலும் இருக்கின்றனர். இவற்றைத் தவிர, மேக்கா, கோக்கர், பாக்கால கும்மடபு, கோன, மும்மலனேனி, வெல்லங்கிவார் இரு பிரிவினரிலும் இருக்கிறார்கள். வெலமவாரில் 'இன கண்டி' வீட்டுப் பெயராக இருக்கிறது. கம்மவாருக்கு, அதே கோத்திரமாக இருக்கிறது.

துர்ஜய குலத்தவர் தாம் வசிக்கும் இடத்தில் ஏதோ ஒரு வம்சத்துப் பெயரால் அழைக்கப்படுவது புதிய விஷயம் அல்லவே.

---

1 பெதமக்கென, வேல்பூரு, அமராவதி சாசனங்கள். (ஆந்திரர் சரித்திரம் V-ஆம் பாகம் பார்க்க.)

காகதிபுரத்தாரை—அதாவது ஒருகல்லு அரசர்களைக் காகதிய அரசர்கள் என்றும் நதவாட்டி சீமை, கொண்ட படமடி சீமை அரசர்கள் என்றும் சோழவாடியிலிருந்து ஆந்திர தேசத்துக்கு வந்தவர்களைச் சோழர்கள் என்றும் அழைத்தது போலவும் பொத்தப்பி நாட்டுச் சோழர்கள், ரேநாட்டுச் சோழர்கள் என்றும் அழைத்தது போலவும் பிற்காலத்தில் துர்ஜய வம்சத்தில் பல விடங்களுக்குப் போய்க் கம்மவார், கம்ம நாட்டவர் க்ஷத்திரியர் என்று அழைக்கப் பட்டிருக்கலாம். வெலமரும் அவர்கள் தழுவிய வீரவைஷ்ணவ மதம் காரணமாக ஜாதிப் பிரஷ்டம் அடைந்ததால் 'வெலமர்' என்று அழைக்கப் பட்டிருக்கலாம்.

வெலமர் பல்லவ வம்சத்தினர் என்று டாக்டர் ஆபர்ட் சாஸ்திரியும் காப்பு, ரெட்டி வம்சத்தினர் என்று கர்னல் மெக்கன்ஸி துரையும் சொன்னலும் சித்தூர் ஜில்லா மான்யுவலி (சரித்திரம்)ல் கம்ம, வெலமர் முன்பு ஒரே ஜாதியா யிருந்தவர்கள் என்றும் பெண்களுக்குக் கோஷா வேண்டாமென்று ஓலையில் கை யெழுத்திட்டவர்கள் கம்ம (ஓலை) வார் என்று ஆனதாகவும் ஓலையில் கையெழுத்திடாதவர்கள் எல்லோரும் வெலமவாரான தாகவும் காணப்படுகிறது; இது விஜயநகர ஸம்ஸ்தானதிபதி யாகிய வீர நரசிம்மராயர் காலத்தில் நடந்ததாக திராவிட பலிஜ வம்ச சரித்திரத்தில் இருக்கிறது. இவற்றைவிட முதலில் சொன்ன செய்திகளே நம்பத்தகுந்தனவாக இருக்கின்றன.

14-ம் நூற்றூண்டில் காகதீய ஸ்ரீ வீரப்பிரதாபருத்திரனுடைய ராஜ்யம் துருக்கர்களால் சிதைந்த பின்பு, வெலம, கம்ம, க்ஷத்திரியர்கள், தான் தோன்றிகளாய் நடக்கத் தலைப்பட்டனர். கம்மவார் சிலர் (பிரதாபருத்திரனுடைய மந்திரி கன்னம நாயுடு முதலியோர்) முகம்மதியர்களோடு கலந்துவிட்டனர்.[1] அதனல் ஆந்திர தேசத்தில் கமமவாரின் ஆட்சி நடக்கும் சந்தர்ப்பம் குறைந்தது. ரெட்டிகளுக்கும் வெலமவாருக்கும் பல யுத்தங்கள் நடந்தன. முடிவில், பல இடங்களில் கொப்புல காப்பைய நாயக்கன் தலைமையில் ரெட்டிகளின் ஆட்சியே ஸ்தாபிக்கப்பட்டது.

1 பாரதி பத்திரிகை. 16-வ. 2-ஆம் சஞ்சிகை.

இதற்குச் சம்மதிக்காத க்ஷத்திரியர்களும் வெலமரும் ஓட்ர தேசத்துக் கஜபதி அரசர்களையும் துருக்க ராஜாக்களையும் அடுத்து அவர்களுக்குச் சிற்றரசர்களாயினர். விஜயநகர ராய வம்சத்தார், ஆந்திர தேசத்தை ஆக்கிரமித்தபோது அவர்களுக்குச் சிற்றரசர்களாக இருந்து, அந்த ராஜ்யம் துருக்கர் கைவசமான பின் அவர்களிடம் சிற்றரசர்களாயினர். விஜய நகரம், பெத்தா புரம் இவை ராஜ வம்சத்தாரைச் சேர்ந்தன. பொப்பிலி, பிட்டா புரம், நூஜவீடு, வெங்கடகிரி, ஜடப்ரோலு முதலிய இடங்களில் வெலமவார் ஆண்டனர்.

இப்படிக் கம்மவார் மறுபடியும் தலையெடுத்து, 14-ஆம் நூற்றாண்டு முதலாக ரெட்டிகளுக்கும் விஜயநகர ராயர்களுக்கும் கஜபதிகளுக்கும் பின்பு முகம்மதியருக்கும் அங்கங்கே சிற்றரசர் களானார்கள். பிட்டாபுரம் முதலிய இடங்களில் சேனாதிபதிகளாக இருந்தார்கள். குடிபாடி கோட்டை, தத்தனூல கோட்டை, கண்டி கோட்டை, சிந்தபல்லிக் கோட்டை, தேவர கோட்டை, ராச்சூர்க் கோட்டை, பூவனூர்க் கோட்டை, புருஷோத்தம பட்டணம் முதலிய இடங்களில் ஸம்ஸ்தானாதிபதிகளாய் இருந்து பெயர் பெற்றனர். இப்படிப் பிரசித்தி பெற்றவர்களில் ராவெள்ள, ஸாயப்பனேனி, பெம்மஸானி, வாஸிரெட்டி, ஏர்லகட்ட, சூர்ய தேவர, மேதரமெட்ட, தாஸரி முதலிய வீட்டுப் பெயர் உள்ளவர் கள் முக்கியமானவர்கள். மற்ற சிலர் கொண்டபல்லி முதலிய இடங்களில் (தேசமுகே) தாற்காலிகத் தலைமை பெற்றனர் இவர் கள் சரித்திரங்களை அந்தந்த நூற்றாண்டில் அந்தந்தச் சரித்திரப் பகுதியில் எழுத வேண்டும். மேலும் கம்மவாரில் சாதாரணப் போர் வீரராகவும் சேனாதிபதிகளாகவும் அவர்களை அடுத்து இருந்த பலர் விஜயநகர ஆக்ரமிப்புக் காலத்திலும் முகம்மதியர் படையெடுப்புக் காலத்திலும் தெற்கே கன்னியாகுமரி வரையில் சென்று குடியேறினர். அதனால் இப்பொழுது சென்னை மாகாணத்துத் தமிழ் ஜில்லாக்கள் எல்லாவற்றிலும் கம்மவார் இருக்கிறார்கள்.

இப்படி ஆந்திர தேசத்து ஆரிய, ஆந்திர, க்ஷத்திரியர்கள் எல்லோரும் கடைசியில் கம்ம, வெலம, ராஜ, காப்பு, ரெட்டி

வம்சங்களாக மெள்ள மெள்ளப் பிரிந்து, அந்தந்தப் பிரதேச வாசிகளாகவும் தலைவர்களாகவும் ஆனதாகத் தோன்றுகிறது.

## சரித்திரக்காரர்களின் அபிப்பிராயம்

இது வரைக்கும் படித்தவற்றால், கம்மவார், சூரிய, சந்திர வம்சங்களில் ஜனித்த கரிகால் சோழ, துர்ஜய வம்சத்தினர்; ஆந்திர சோழர்களும் இவ்வம்சத்தினரே, இவர்களுடைய பந்துக்களாகிய சந்திர வம்சத்தினரும் கம்மவார் ஆனார்கள் என்பவற்றைத் தெரிந்து கொண்டோம். இவைகளைப் பற்றிச் சரித்திரக்காரர்கள் எவ்விதமான அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்னும் விஷயத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். ஆந்திர ஸாகித்ய பரிஷத்தின் 16-ஆம் வருஷாந்திர அழைப்புச் சங்கத்தின் தலைவர் திரிச்சிராப்பள்ளி ஸ்ரீ சங்கரலிங்கம் பிள்ளை, பி. ஏ.பி.எல் அவர்கள் தம் வரவேற்புப் பிரசங்கத்தில் இப்படிச் சொன்னார்.

'இரண்டாம் கரிகாலனுடைய வம்சத்தில், தெலுங்கு பிஜ்ஜன, சோழ பிஜ்ஜன எனப்படும் பிஜ்ஜன பிறந்தான். இவனுடைய சந்ததியாரே, ஆந்திர சோழர்கள் என்று அழைக்கப் பட்டார்கள். இவர்களிலிருந்தே கம்ம நாய்க்கர்களும் ரெட்டி ராஜாக்களும்[1] வெலமராஜாக்களும் வெளிப்பட்டுக் கோதாவரியின் தெற்குப் பகுதியில் தம் ஆட்சியை நடத்தினர். (ஆந்திர ஸாகித்ய பத்ரிகா. தொகுதி 16.பகுதி 4. பக். 190).

பிரம்ம ஸ்ரீ. சிலுகூரி வீர பத்திர ராவ் பந்துலு ஆந்திர சரித்திரத்தில் 5-ஆம் பாகத்தில் இப்படி எழுதியிருக்கிறார்.

"ஆந்திர சாதவாகன வம்சத்தரசர்களுக்குப் பின் 200 வருஷங்கள் இக்ஷ்வாகு வம்சத்தரசர்கள் ஆந்திர தேசத்தை

---

1 ரெட்டி ராஜாக்கள் ஒரிடத்திலாவது தாம் சோழ வம்சத்தினர் என்று சொல்லிக்கொள்ளவில்லை. எந்தச் சாஸனங்களிலும் தங்கள் பெயருடன் சோழப் பட்டத்தைச் சேர்த்துக்கொள்ளவில்லை ஆதலால் சோழர்கள் ரெட்டிகளின் முன்னோர் அல்லர். ஆனால் சோழர்களுக்கும் இவர்களுக்கும் சிறிது பந்துத்துவம் ஏற்பட்டது உண்மை என்று முன்பே சொல்லியிருக்கிறேன். ரெட்டி ராஜாக்கள் சூரிய, சந்திர வம்சத்தினர் என்பதற்கு ஆதாரம் இருந்தாலும் தெலுங்கு பிஜ்ஜன வம்சத்தார் என்பதற்கு ஆதாரம் இல்லை.

ஆண்டதாகச் சரித்திரம் தெரிவிக்கிறது. அதற்கு திருஷ்டாந்தம் இங்கே வெளி வந்த சிலா சாஸனங்களே ஆகும். ஆகையால் அயோத்தி, மிதிலை முதலிய நகரங்களிலிருந்து காப்புக்கள் இப்பிரதேசங்களில் குடியேறியதாகச் சொல்லலாம். இதில் பொய் ஒன்றும் இல்லை. இக்ஷ்வாகுக்களையே ஒக்காகலர், ஒக்கலர் ஒகலுகியர், என்று பிராகிருத பாஷையில் உள்ள சாஸனங்களில் சொல்லியிருக்கிறார்கள். இவர்களையே கன்னடத்தில் ஒக்கிலிகார் என்கிறார்கள். தெலுங்கில் இவர்களையே ரெட்டி, ரெட்டி காப்பு, தெலுங்குக் காப்பு, கம்ம காப்பு என்று வேறுவேறு காரணத்தால் வேறு வேறு பெயரால் அழைக்கப்படுகிறார்கள்-இவர்கள் எல்லோரும் வைசியத் தொழிலை மேற்கொண்டிருந்தாலும் க்ஷத்திரிய தர்மத்தைக் கைக்கொண்டு க்ஷத்திரிய தர்மத்தையும் நடத்தியதாகச் சரித்திரம் பறைசாற்றுகிறது." (பக். 5, 16, 527)

## சோழர்களைப் பற்றிய அவர் கொள்கை

"கிருஷ்ணா நதி முதல் காஞ்சிபுரம் வரையில் உள்ள கிழ்க் கரையைக் கம்ம நாட்டு ரெட்டிகளும் பாக நாட்டு ரெட்டிகளும் (கம்மவாரும் பாக நாட்டு ரெட்டிகளும்) சோழர் என்னும் பெயருடன் ஆண்டுகொண்டு பெயருக்கு மட்டும் காஞ்சிபுரச் சோழர்களின் சிற்றரசர்கள்" [1] என்று (பக். 384)

வெல நாட்டுச் சோழ வம்சத்தின் மூலபுருஷனாகிய மல்லவர் மாவையும், கொண்ட படமடி சீமை அரசனாகிய புத்த வர்மாவையும் பற்றி இப்படி எழுதுகிறார்.

இந்தக் குப்ஜ விஷ்ணு வர்த்தனனுடன் குந்தல தேசத்திலிருந்து வந்த புத்தவர்மா முதலிய சேனாதிபதிகள் சிலர் கம்ம

1 ரெட்டிகளில் உள்ள மோட்டாட்டி, பண்ட்ட, ரேநாட்டி, பாகநாட்டி பூமஞ்சி, ஒருகண்டி முதலிய பேதங்கள் கம்மவாரில் இல்லை. அதனாலும் கம்மவாரை ரெட்டிகள் என்று சொல்ல முடியாது. கம்மவாரின் முன்னோர்கள் சோழ வம்சத்தினர் என்றும் துர்ஜய வம்சத்தினர் என்றும் சொல்லிக் கொண்டபடி, ரெட்டிகள் எங்கும் சொல்லவில்லை. இவர்கள் இரு ஜாதியினரின் முன்னோர்களும் ரெட்டிப் பட்டம் தரித்ததால் இந்தச் சந்தேகம் உண்டாயிருக்க வேண்டும். எல்லோரும் அந்தக் காலத்தில் இந்த விருதை வகித்தது உண்டு. அதனால் கம்ம, வெலமர் முதலில் சூரிய சந்திர வம்சத்தினராய் இருந்து பின்பு காப்பு என்ற பெயரைச் சொல்லிக்கொண்டார்கள் என்பதே நியாயம்.

ராஷ்டிரத்தில் அதிகாரம் பெற்றனர். இவர்கள் சதுர்த்தர்கள் என்றும் துர்ஜய வம்சத்தினர் என்றும் சாஸனங்களில் சொல்லப் பட்டார்கள். பன்னிரண்டாம் நூற்றுண்டு வரையில் இவர் களுடைய செய்தி ஒன்றும் தெரியவில்லை. சாளுக்கியர் காலத்தில் கம்ம ராஷ்டிரத்தின் வடபகுதி வெல நாடு அல்லது ஆறுவேல நாடு என்றும் தென் பாகம் கம்ம நாடு என்றும் வழங்கின. திரிநயன பல்லவனுடைய காலத்தில் மல்ல வர்மா ஷட்ஸஹஸ்ர (ஆறுவேல) தேசத்தைச் சம்பாதித்தான். வேங்கி தேசத்தையும், சோழ தேசத்தையும், ராஜ ராஜ நரேந்திரனுடைய புத்திரனும் சாளுக்கிய சக்ரவர்த்தியும் ஆகிய முதல் குலோத்துங்க சோழன் காலத்தில் ஒரு குடைக் கீழ் ஆண்டபோது மல்லவர்மாவின் வம்சத்தினரே ராஜப் பிரதிநிதிகளாய் வேங்கி தேசத்தை ஆண்டனர். அப்பொழுது துர்ஜய குலத்தினராகிய இவர்களுடைய பந்துக்கள் இவர்கள் கீழே சிற்றரசர்களாகக் கம்ம நாட்டின் வட பகுதியை ஆண்டு வந்தனர். ஒரு காலத்தில் ஆந்திர சாம்ராஜ்யத்தில் சேர்ந்து மேற்குப் பகுதியாக இருந்த குந்தல, கொங்கண தேசங் களிலிருந்து வந்து கம்ம நாட்டை ஆண்டு புகழ் பெற்றவர்களே ஆந்திர தேசத்தின் மற்ற பகுதிகளுக்குச் சென்று அதிகாரம் வகித்தபோது கம்ம நாட்டு ரெட்டிகள் அல்லது கம்மவார் என்று பெயர் வந்திருக்கும். **இவர்கள் முதலில் சமண மதத்தினராய் இருந்து பிறகு சைவர் ஆனர்கள்.** (பக். 354, 355). வெலமரைப் பற்றியும் ஓரிடத்தில் இப்படி எழுதியிருக்கிறார்.

"பெயர் எப்படி வந்திருந்தாலும் சரி; வெலமர்களும் கம்மவாரைப் போலக் கலப்பு ஜாதியினரே என்று சரித்திரம் அறை கூவுகிறது· சரித்திரத்தில் ரெட்டி, கம்ம, வெலமவாருக்குச் சம்பந்தம் காணப்படுகிறது. அதனுலேயே இம் மூன்று ஜாதி யினரும் ஒரு கிளையிலிருந்து பிரிந்தவர் என்று சொல்லிவிடக் கூடாது. ஆந்திர சாம்ராஜ்யம் முன்னேறியபோது யது, வ்ருஷ்ணி, போஜ, அந்தகர்கள் என்னும் ஜாதியினருக்கும் யவன, சுக, பஹ்லவ ஜாதியாருக்கும் சம்பந்தங்கள் காரணமாக இந்த ஜாதிகளில் புதிய ரத்தம் பரவியது. இவர்கள் மேலும் முன்னேறி கங்கைக் கரையிலிருந்து கன்னியாகுமரி வரையில் பல தேசங்

களில் வேறு வேறு பெயர்களுடன் வேறு வேறு காலத்தில் அரசாண்டதாகச் சரித்திரங்கள் சாட்சி சொல்லுகின்றன. ஆந்திர சாம்ராஜ்ய வீழ்ச்சிக்குப் பின் வல்லப வம்சத்தினர் என்ற பெயருடன் சுராஷ்டிர தேசத்தை ஆண்டவர்களும் சாளுக்கியர் என்னும் பெயரால் குந்தல, வேங்கி தேசங்களை ஆண்டவர்களும் காகதியர் என்று தெலுங்கு தேசத்தை ஆண்டவர்களும் கம்ம வெலமவாரின் முன்னோர்களாகவே தோன்றுகிறது. இந்த இரு பிரிவினரும் தம் பெயர்களின் கடைசியில் ரெட்டிப் பட்டத்தை ஏற்றுக் கொண்டாலும் ரெட்டிகளின் எதிரிகளாகவே இருந்து வந்தார்கள்.[1]" (பக். 441, & 442)

இதைக் கொஞ்சம் ஆராய வேண்டும். கலப்பு ஜாதியே மிச்ரமம். அப்படி யென்றால், வேத காலத்திலிருந்து நம் நாட்டில், சுமார் கி. பி. 1000 வருஷங்கள் வரையில் தொழில் காரண மாகவே ஜாதி என்று பிரிந்ததாகத் தெரிகிறது. கம்ம, வெலமர் மிச்ர ஜாதி யென்றால் கலப்பு இல்லாத ஜாதி எது? ஸ்ரீ பந்துலு காரு மற்ற ஜாதிகளைப் போலவே வெலமர்கள் மிச்ர ஜாதி என்றால் குற்றம் இல்லை. பிராம்மண குலத்தில் க்ஷத்திரியர்கள் சேருவது போன்ற அத்தாட்சிகளைப் புராணங்களிலிருந்து எடுத்துக் காட்டி யிருக்கிறேன். வைசியர்களில் பல பிரிவு இருப்பது அவர்களுடைய கோத்திரங்களிலிருந்து தெரிகிறது. தொழிலைக் காரணமாகக் கொண்டு அரசர்கள் எல்லோரும் பரஸ்பர சம்பந்தம் செய்துகொண்டார்கள் என்று அறிந்தோம். பல்லவர்கள் க்ஷத்திரியர்கள், அப்படியே சக, யவனர்களும் க்ஷத்திரியர்கள் என்று ஹரிவம்ச மனுஸ்மிருதிகளிலிருந்து பிரமாணம் காண்பித்தேன். பிராம்மணர்கள் என்று சரித்திரக் காரர்களால் கருதப்பட்ட ஆந்திர சாதவாகன அரசர்கள் கி. மு.

---

1 ரெட்டி என்ற பட்டம் 'ராஜா' என்னும் பட்டத்தைப் போல் உபயோகப் பட்டது. இந்தப் பெயரைப் பலர் உபயோகித்திருந்தாலும் அவர்கள் ஒரே ஜாதியினர் அல்லர். அவர்களுடைய விரோதமே இதற்குச் சாட்சி. தவிர, பண்ட்ட ரெட்டி குலத்து அனபோத்து ரெட்டி கொம்மு சிக்கால சாஸனத்தில் தம் கோத்திரமாகச் சொல்லிக்கொண்ட 'போல் வோலி' கோத்திரம் கம்மவாரில் இல்லை. இச்சாசனம் சா. ச. 1344 காலத்தது. இது J. A. H. R. S. Vol. III-ல் பிரசுரிக்கப்பட்டது.

இரண்டு நூற்றாண்டுகளிலும் சக, யவன, பல்லவர்களுடன் சம்பந்தம் செய்து வந்ததாகச் சரித்திரத்தில் பிரமாணம் காட்டினார்கள். ஆரிய மதத்தில், முதலில் அப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக் கொண்டதாலேயே இவை போன்ற சம்பந்தங்கள் நிகழ்ந்தன. காகதியர்களும், சாளுக்கியர்களும் பிராமணர்களுடன் கொண்டு, கொடுத்துச் சம்பந்தம் செய்து கொண்டிருந்தவர்களே.

யது, விருஷ்ணி, போஜ, அந்தகர்கள் சந்திர வம்சத்தவர்கள். இவர்களுடைய பல பராக்கிரமங்களைப் புராணங்கள் வருணிக்கின்றன. அப்படிப்பட்ட இவர்களுக்குப் புதிய ரத்தம் சேர்ந்து தான் முன்னேற வேண்டும் என்ற அவசியம் உண்டா? இவர்களுக்கும் சக, யவனர்களுக்கும் உள்ள சம்பந்தத்தை இவர் விவரித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். சாத வாகனர்களுக்கு உள்ள சம்பந்தத்தை இவர்கள் தலையில் கட்டப் பார்ப்பது உசிதம் அன்று. இவரே கம்ம வெலமவார் சூரிய சந்திர வமிசத்தவர்களென்று முதலில் எழுதி யிருக்கிறார். அதனால் தங்கள் மதத்தில் சேர்ந்த க்ஷத்திரியர்களுடன் செய்யும் சம்பந்தங்களைப் புதியன வென்றும் கலப்பென்றும் எண்ணக் கூடாது. யது வமிசத்தில் சிலர் கம்மவார் அல்லர் என்று சரித்திரங்கள் சொல்லுகின்றன. விஜய நகரத்தரசர்களும் ராஷ்டிரகூடர்களும் யதுவின் சந்ததியார் என்று அவர்களுடைய சாசனங்கள் சொல்லுகின்றன. அவர்கள் கம்ம, வெலமவாருக்கு முன்னோர்கள் அல்லர் என்பது சரித்திரம் அறிந்த விஷயமாகும். விருஷ்ணி, போஜ, அந்தகர்களுடைய பிரிவுகள் இப்போது என்ன ஜாதியென்று சொல்லிக் கொள்கிறார்கள் என்று தெரியவில்லை. இவர்களுடைய வமிசத்தவர்கள் கம்ம, வெலமவாரில் சேர்ந்திருக்கிறார்களா என்பதற்கு ஆதாரம் ஒன்றும் கிடைக்கவில்லை.

இதுவரைக்கும் படித்தவற்றிலிருந்து கம்ம, வெலமவார் கரிகால, துர்ஜய வமிசத்தின ரென்றும் ஹைஹய சாளுக்கிய வமிசத்தினர் சிலரும் கரிகால துர்ஜய வமிசத்தினருடன் சம்பந்தம் செய்த சிலரும் இவர்களோடு சேர்ந்து விட்டார்க ளென்றும் சொல்லலாமே தவிர யது, விருஷ்ணி, போஜாந்தக வமிசத்தினர்

கம்மவாரில் சேர்ந்தவர் என்பதற்கு இன்னும் ஆதாரம் கிடைக்க வில்லை.

அசோக சக்கரவர்த்தியின் காலத்தில் (கி. மு. 3–ஆம் நூற்றுண்டு) போஜர்கள், காம்போஜர்கள், ஆந்திரர் ஆகியவர்கள் வேறு வேறு பிரிவினராக இருந்ததாக அசோகரின் 18-ஆம் சிலா சாசனம் தெரிவிக்கிறது. ஆகையால் இவற்றுள் எந்த எந்தப் பிரிவினர் கம்ம, வெலமவா ராஞர்கள் என்பதைத் தீர்மானிக்க ஆதாரம் கிடைக்கவில்லை. யதுவின் வமிசமாகிய ஹைஹய வமிசத்திலிருந்து வந்த கோளசீமை அரசர்கள் சாளுக்கிய அரசர்களின் பந்துக்களாக இருந்தனர். இவர்களும் கம்மவாரின் முன்னோர்களாகவே காணப்படுகிறார்கள். சுராஷ்டிரத்தை அதாவது கூர்ஜர தேசத்தை வல்லப வமிசம் என்னும் பெயரால் ஆண்டவர்களும் கம்ம, வெலமவாரின் முன்னோர்களே என்பது ஸ்ரீ வீரபத்திர ராவின் அபிப்பிராயம். ஆனல் இதற்கு அவர் ஆதாரம் ஒன்றும் காட்டவில்லை. இது இன்னும் ஆராயவேண்டிய விஷயம். மொத்தத்தில் கம்மவாரின் முன்னோர்கள் அயோத்தி, சிராவஸ்தி, மிதிலை, சேதி, மதுரை முதலிய பிராந்தியங்களிலிருந்து காலக்கிரமத்தில் ஆந்திர தேசத்துக்கு வந்தவர்களே என்று சொல்லவேண்டி யிருக்கும்.

கம்ம, வெலமவார்கள் சமண பௌத்த மதங்களில் சேர்ந்தனலேயே சதுர்த்தத்வம் (நான்காம் சாதி) வந்தது என்று முன்பே தெரிந்து கொண்டோம். வெலநாட்டரசர்களும் கோட்ட வமிசத்தாரும் இதற்கு உதாரணமாக இருக்கின்றனர். உண்மை நிலைமை இப்படி இருக்கக் கம்மவாரைப் பற்றிப் பல கற்பனை நூல்களும் கதைகளும் எழுந்து நிறையப் பரவிவிட்டன என்பது வருந்தத் தக்க விஷயம். இவர்களைப் பற்றிய உண்மையை அறிய விரும்புகிறவர்களுக்கு அவை பெருந் தடையாக இருக்கின்றன. இந்த மாதிரிக் கதைகள் சில பலிஜ வமிச புராணத்தில் காணப்படுகின்றன. இந்த நூல் முதலில் தமிழ்நாட்டில் தமிழில் வெளியாகி 1926-27-இல் ராசமகேந்திரவரம் "தெலக" என்ற பத்திரிகையில் வசன ரூபமாக வெளிவந்தது. இதில் கம்மவாரைப் பற்றி ஆதார மில்லாத கதை ஒன்று வெளிவந்திருக்கிறது. பலிஜ என்பவ

னுடைய வமிசத்தில் கம்ம பலிஜ, வெலம பலிஜ, ரெட்டி பலிஜ, காப்பு பலிஜ போன்ற பதினெட்டுக் கிளைகள் தோன்றிய தாகவும் அந்தப் பலிஜன் சந்திர வமிசத்தின் ஒரு பிரிவினன் என்பதாகவும் கௌரீ புராணத்தில் இருப்பதாகக் கண்டிருக் கிறது. இதுபோன்ற பொய்ப் புராணக் கதைகளுக்கு ஆதாரமோ மதிப்போ இருக்காது என்பது இந்த நூலினாலேயே தெரிகிறது. பலிஜர்களைப் பற்றி வெகுகாலம் உழைத்துப் பல சபைகளைக் கூட்டி மேலே கண்ட புஸ்தகத்தை ஆராய்ந்த 1901-ஆம் வரு ஷத்து ஜன சங்கியைக் கணக்குச் சூப்ரண்ட் ஆகிய டபிள்யூ. பிரான்ஸிஸ் ஐ. ஸீ. எஸ். அவர்கள் சர்க்காருக்கு அனுப்பிய அறிக்கையில் இப்படி எழுதி யிருக்கிறார்: "இவர்கள் (பலிஜர்கள்) அநேகமாக வியாபாரம் செய்யும் தெலுங்கர்கள். சென்னை மாகாணத்து எல்லா ஜில்லாக்களிலும் இவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் தேச (கோடை) பலிஜர் பேட்டைப் பலிஜர் என்னும் இரு பிரிவினர் முக்கியமானவர்கள். கோட்டைப் பலிஜர்கள் மதுரை, தஞ்சாவூர், விஜயநகரங்களை ஆண்ட பலிஜ (நாயக்க) ராஜ வமிசத்தைச் சேர்ந்தவர்கள். வளை விற்கும் பலிஜவார், உப்பு வாணிகம் செய்யும் (பெரிக) பலிஜர், இருவர்களும் பேட் டைப் பலிஜவாரைச் சேர்ந்தவர்கள். தமிழ் ஜில்லாக்களில் இவர்களை வடுகர் என்றும் கௌரவர் என்றும் சொல்லுவார்கள். மதுரை, தஞ்சாவூரை ஆண்ட நாயக்கர்கள் அல்லது பலிஜ ராஜாக்களுடைய சந்ததியார் க்ஷத்திரியர்களைச் சேர்ந்த காசியப கோத்திரத்தார் என்றும் விஜயநகர ராயர்கள் பாரத்வாஜ கோத் திரத்தார் என்றும் சொல்லுகிறார்கள். மற்றப் பலிஜர்கள் மகா பாரதத்தில் வரும் கௌரவரைச் சேர்ந்தவர்கள் என்று சொல் லிக் கொள்கிறார்கள். ஆனால் மற்ற ஜாதியார் இவர்கள் க்ஷத்திரி யர்கள் அல்லர் என்கிறார்கள். பலிஜர்கள் கம்ம, காப்பு ஜாதி களிலிருந்து தோன்றியவர்கள். இந்த ஜாதியிலிருந்தும் மற்ற ஜாதியிலிருந்தும் தோன்றிய கலப்பு ஜாதியே பலிஜர் என்கிறார் கள். இவர்கள் யாவரும் இப்போது பூணூல் தரிப்பதில்லை. வேத கர்மங்களைச் செய்வதில்லை. இவற்றை இன்னும் விவரமாக அறிய விரும்புகிறவர்கள் 1891-ஆம் வருஷ ஜனசங்கியை அறிக்கையையும் கர்நூல் சரித்திர 137-ஆம் பக்கத்தையும், பக்

கேனஸ் துரை எழுதிய மைசூர்ச் சரித்திர 1-ஆம் பாகத்தின் 168-170 பக்கங்களையும் வட ஆர்க்காட்டு ஜில்லா சரித்திரம் 1-ஆம் பாகம் 20-23 பக்கங்களையும் படித்துப் பார்க்கலாம்."

தென்னாட்டுப் பலிஜர்களுக்கு இருப்பதுபோல் ஆந்திர தேசத் தெலகர்களுக்கு ரிஷி கோத்திரங்கள் இல்லை; கிராம கோத்திரங் களே வழக்கத்தில் இருக்கின்றன. காப்பு குலத்தவர்களும் பலிஜ குலத்தவர்களும் ஆந்திர தேசத்தில் சமமாக மதிக்கப்படுகிறார்கள். ஆனால் தெலகர்களை அவர்களோடு சேர்க்கவில்லை. சில இடங் களில் காப்பு, பலிஜ, தெலக ஜாதியார் ஒருவர் வீட்டில் ஒருவர் சாப்பிடுவதில்லை. விசாகப்பட்டணப் பிராந்தியங்களில் இருக்கும் காப்புகளின் வீட்டில் தெலகர்கள் சாப்பிடுகிறார்கள். ஆனால், தெலகர் வீட்டில் காப்புகள் சாப்பிடுவதில்லை. பந்தர்ப் பிராந்தி யத்தில் தெலகர்களை மிக மட்டமாக நினைக்கிறார்கள். அதனால் இந்தப் பிரிவினர் ஒன்றாக இருப்பதில்லை. கம்ம பலிஜ, வெலம பலிஜ, ரெட்டி பலிஜ, காப்பு பலிஜ என்னும் சாதியினர் எந்தத் தேசத்திலும் இல்லை.

பலிஜ ஜாதி தனி ஜாதியேயன்றி கம்ம வமிசம் பலிஜர் களோடு சேர்ந்ததல்ல. பலிஜ வமிசம் சந்திர வமிசத்தின் ஒரு கிளையாக இருக்கும் என்று நாம் யூகிக்கலாம். இந்த வமிசத்தினர் வைஷ்ணவ மதத்தை ஏற்றுக் கொண்டு, தாங்கள் விஷ்ணு பாதத்தில் பிறந்தவர்கள் என்று எழுதிக் கொண்டதாகத் தஞ்சா வூர் நாயக்க மன்னர்களின் * நூல்களால் தெரிகிறது.

பலிஜர்களில் சிலர் கிருஷ்ண தேவராயருக்குச் சம்பந்தப் பட்டவர்கள் என்று, பின்னால் வரும் பத்தியத்தால் தெரிகிறது.

---

* "ஸ்ரீமத்வீர பலிஞ்ச வம்ச திலகஸ் ஸத்தர்ம்ம தம்மாட்சிதௌ நீரா" (சா. ச. 1149 வருஷத்துச் சாஸனம்). S. I. I. Vol. V. பக். 74.

"ஸ்ரீ சகவத்ஸர ஸ்ரீசதராதள சசிதர மிதமுகாம் ஜைத்ர ஹல தட்சத்ரி தீய்யயு, மேஷ சங்கிராந்த்தி நிமித்தமுனம் வீர பலஞ்ஜ்ய தர்ம்ம நிரதுண்டு, தாச நைதமி ஸெட்டி கப்ஜாத கேத்ரி கௌதமாம்பி கருனும் பிரீதி தனூஜுண்டு, மஹிதகுணாட் யுண்டு மல்லிஸெட்டி பக்தி பெட்டே". S. I. I Vol V. பக். 74. (இது சா. ச. 1111-ஆம் வருஷத்துச் சாஸனத்துக்கு ஒத்து வருகிறது.) இப்படியே வேறு சில இருக்கின்றன.

சா. ச. 1097-ல் பொன்னூரு பாவ நாராயணஸ்வாமி கோயிலில் எனுமதல பலிஞ்ஜ கொட்ல நாராயணதாசர், கோபாலதாசர் இவர்கள் எழுதுவித்த சாஸ னங்கள் இருக்கின்றன. அப்போதே பலிஜர் இருந்தது இவைகளால் தெரிய வரு கிறது( S. I. I. Vol. VI. No. 120).

அதனாலேயே கிருஷ்ண தேவராயரைப் பலிஜர் என்று சொல்லக் கூடாது. சந்திர வமிசத்தார் சிலர் காலக்கிரமத்தில் பலிஜ பட்டத்தை உபயோகித்திருக்கிறார்கள். சில க்ஷத்திரியர்களே பலவான் என்னும் பொருளில் பலிஜ என்னும் பட்டத்தை உபயோகித்திருக்கிறார்கள் :

"டவிளச்சுத ராயல தேவியைன
திருமலாம்பகு செலியலை தேசரில்லு
மூர்த்தி மாம்பனு பெண்வியை கீர்த்தி வெலய
செவ்வ விபுடு மகோன்னத ஸ்ரீ ஜெலங்கெ."

இதில் வரும் அச்சுத தேவராயர் கிருஷ்ண தேவராயருடைய தம்பி. செவ்வராஜ வமிசத்தார் இன்னும் தென்னாட்டில் இருக்கிறார்கள். இவர்கள் தாம் பலிஜர். வீர பலிஜ மதம் பெற்றுச் சந்திர வமிசத்தின் ஒரு பிரிவினர் பலிஜர் ஆகிவிட்டார்கள் என்று தெரிகிறது. பலிஜ செட்டிகளின் சாஸனங்கள் சில தென்னிந்தியச் சாஸனம் 4, 5-ஆம் பாகங்களில் காணப்படுகின்றன.* கிருஷ்ண தேவராயர் துளுவ வமிசத்தினர். இன்னும் இந்த ஜாதி கன்னட நாட்டில் இருக்கிறது. இவர்களுக்கும் தெலுங்கு நாயக்கர்களுக்கும், தெலகர்களுக்கும் சம்பந்தம் இல்லை. கம்மவார் சூரிய வமிசத்திலிருந்து வேறு மதத்திற்குப் போனபின் சதுர்த்தர்கள் ஆனதுபோல் பலிஜர் சந்திர வமிசத்தின் ஒரு பிரிவிலிருந்து வீழ்ச்சியடைந்து சதுர்த்தர்கள் ஆனதாகத் தோன்றுகிறது. அதனால் இந்த இரு ஜாதிகளும் முற்றும் ஒரே வமிசம் அல்ல என்று சொல்லலாம். பலிஜ புராணத்திலும் அவர்களே எழுதுவித்த கௌரீ புராணத்திலும் உண்மையைத் தெரிவிக்க முடியாமல் கதைகளுக்கு முக்கியத்வம் கொடுத்து உண்மையை மறைத்து விட்டார்கள். புதியனவாக அக்கதைகளால் கம்மவாருக்கு வந்த மாசுகளைப் போக்கடித்து உண்மையை வெளியிடுவதற்கே இந்த நூலை எழுதுகிறேன். சந்திர வமிசத்தின் ஒரு பிரிவினர் பலிஜரான பிறகு கம்மவார்களுக்கும் அவர்களுக்கும்

---

* ரகுநாதாப்யுத நாடகம் (விஜயராகவன் எழுதினது).
"வன ஜாக்ஷிபதமுல வரலு வாஹினிகி-கநுஜையை மிஞ்சு நாலாவஜாதி
ஆஜாதிலோ சால னதிகுலை னட்டி ஜகதின்
ராஜுலு கொந்தரு பிரக்யாதி கனிரி."

சம்பந்தம் நின்றுவிட்டது. அதனால் கம்ம பலிஜர் என்ற ஜாதியார் எங்கும் இல்லை. ஆனால் கம்ம காப்பு என்னும் ஜாதியார் மட்டும் சில இடங்களில் இருக்கிறார்கள். இதைக் கொண்டுதான் கௌரீ புராணம் இப்படிக் கதை கட்டியிருக்கிறது. இப்பொழுது கம்மவாரின் உண்மைச் சரித்திரம் ஆதாரங்களோடு ருசுப்படுத்தப் பட்டதால் உண்மையை அறியாத காலத்தில் தமிழில் வெளிவந்த கம்மவார் புராணம், பலிஜ புராணம் இரண்டையுமே முற்றும் ஆதாரமாக அங்கீகரிக்கக் கூடாது. பலிஜ வமிசத்தை இதோடு விட்டுவிட்டுத் தெலகர்களைப் பற்றி ஆராய்வோம். தெலகர்களைப் பற்றி ஸ்ரீ வீரபத்ர ராவ் பந்துலுகாரு தமது காகதீய ஆந்திர ராஜ யுக சரித்திரத்தில் 386-87 பக்கங்களில் இப்படி எழுதியிருக்கிறார்.

"தெலுங்கு தேசத்து ரெட்டிகளுக்குத் தெலகர்கள் என்று பெயர் வந்தது.* சாளுக்கியர்கள் தெலுங்கு தேசத்தின்மேல் படையெடுத்து வந்து ஜயித்தபோது அவர்களுடன் வந்த சேனையும் சேனாபதிகளும் முதலில் கம்ம நாட்டில் தங்கிப் பிறகு சுற்றுப்புறங்களுக்குப் போனார்கள். ஜனங்கள் புதியவர்களுக்கும் பழையவர்களுக்கும் வித்தியாசம் தெரியும் பொருட்டுக் கம்ம நாட்டுத் தலைவர்களைக் கம்மவார் என்றும் அதற்கு முன்பே தெலுங்கு நாட்டில் இருந்த தெலுங்குத் தலைவர்களைத் தெலகர் என்றும் வழங்கினார்கள். அதுமுதல் கம்மவாரும் தெலகரும் வேறு வேறு ஜாதியினராகவே இருந்து வரலாயினர். பிறகு கிறிஸ்து சக ஆரம்பத்தில் ஆந்திர சாம்ராஜ்யம் பரவிய காலத்தில் இவர்களும் அவர்களும் ஒன்றாய் விட்டனர்."

இதனால் தெலகர் முதலில் ரெட்டிகளாக இருந்தவர்கள் என்பது இவருடைய அபிப்பிராய மென்று தெரிகிறது. இதை ஒப்புக் கொள்ள முடியாது. கம்மவாரும் தெலகரும் ஒரே ஜாதியென்று இவர் எழுதுகிறார். அப்படியானால் சாளுக்கியர் காலத்

* ரெட்டிகளைத் தெலகர்கள் என்பதற்கு இடம் இல்லை. தெலுங்கு நாயகர்களுக்குத் தெலகர் என்ற பெயர் வந்ததென்றால் பொருந்தும். அதுவே பிற்காலத்தில் எழுதியது. இங்கே ரெட்டிப் பட்டத்தைக் குலப் பெயராக உபயோகிக்காமல் பட்டமாக உபயோகித்தார்கள் என்றால் அதற்கு ஆட்சேபம் இல்லை.

திலும் அதற்குப் பின்பும் இந்த இரு ஜாதியினருக்கும் உறவு முறை இருந்திருக்க வேண்டுமல்லவா? அப்படி இருந்ததாகத் தெரியவில்லை. தெலகர் என்ற பெயரே சாஸனங்களில் இல்லை. பந்துலு, தம் புத்தகத்தின் 386-ஆம் பக்கத்தில் இப்படி எழுதியிருக்கிறார். "இது கொஞ்ச காலம் கோனசீமை அரசர்களான க்ஷத்திரியர்களிடமும் கொஞ்சகாலம் கொலனு அரசர்களாகிய தெலகர்களிடமும் இருந்தது. இதன் சுற்று வட்டாரங்களையெல்லாம் கொலனு அரசர்களாகிய தெலுங்குத் தலைவர்களே ஆண்டார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. முன் சொன்ன கோட்டைகளை எல்லாம் தெலுங்குத் தலைவர்களே கட்டினார்கள். இவர்களுக்கும் வேங்கி ராஜப் பிரதிநிதிகளாகிய வெலநாட்டுக் கம்மவாருக்கும் பல யுத்தங்கள் நடந்தன. கடைசியில் தெலுங்குத் தலைவர்கள் வெலநாட்டுத் தலைவர்களுக்கு அடங்கிய மண்டலாதிபதிகளாகவே இருந்தனர்."

இவைகளின் உண்மையை ஆராய வேண்டும். வெலநாட்டுத் தலைவர்கள் (நாயகர்கள்) கம்மவார் என்பதே இவருடைய அபிப்பிராயம். கம்மவாருக்கும் தெலகர்களுக்கும் (11-12 நூற்றாண்டுகளில்) சண்டைகள் நடந்தனவென்று இவர் நம்புகிறார். சாளுக்கியர்கள் தெலுங்கு நாட்டை 7—ஆம் நூற்றாண்டில் ஜயித்து அது முதல் ஆண்டு வந்தார்கள். கம்மவார் தெலகர் அதுமுதல் வேறாக இருந்திருந்தால் இவர்கள் முன்னோர் சாஸனங்களில் 11–12 நூற்றாண்டுகளிலாவது கம்ம தெலக என்ற பெயர்கள் வேறு வேறாகக் காணப்பட வேண்டுமல்லவா? எந்தச் சாஸனத்திலும் கம்மவார் தெலகர் அல்லது தெலக நாயகர் என்ற பெயர்களே காணப்படவில்லை. தவிர முன்பே சொன்னபடி ரெட்டிகளிலிருந்து கம்மவார் தோன்றினா ரென்பது உண்மையல்ல. பலிஜர் அல்லது காப்பு ஜாதிகளிலிருந்தே தெலகர் தோன்றினார்க ளென்பதற்கு இடம் இருப்பதாலும் (1901-ஆம் வருஷ ஜனசங்க்யை அறிக்கை) சில பிரதேசங்களில் மட்டும் காப்புக்களுக்கும் தெலகர்களுக்கும் அதிக பேதம் காணப்படாததாலும் சில இடங்களில் தெலகர்களுக்குப் புல்ல பலிஜர் என்ற பெயர் இருப்பதாலும்[1] காப்புக்

* 1. புல்ல பலிஜர் என்றால் கீழ்ஜாதி பலிஜர்கள் என்று பொருள்படும்.

களிலிருந்தே தெலகர்கள் தோன்றினார்கள் என்பதுதான் பொருந்தும். இவர்களும் ரெட்டிகளிலிருந்து தோன்றியவர்கள் என்று சொல்வது பொருந்தாது.[1] அதுபோன்ற உதாரணங்கள் இருந்து ஸ்ரீ பந்துலுகாரு எடுத்துக் காட்டியிருந்தால் நன்றாயிருந்திருக்கும். வெறும் ஊகத்தால் மட்டும் ரெட்டிகளிலிருந்து தெலகர்களும் கம்மவார்களும் தோன்றினார்கள் என்று சொல்வது வீண் வார்த்தையாகும். ஆந்திர நாம சங்கிரகம் என்ற புத்தகத்திலும் கூட காப்பு, பலிஜ என்ற பெயர்களுடன் தெலகர் என்ற பெயர் காணப்படவில்லை- அப்படியே கம்மவார், ரெட்டி என்ற பெயர்களும் காணப்படவில்லை. காப்பு, பலிஜ என்ற பெயர்கள் சூத்திர சம்பந்தமான பெயர்களாகவே எழுதப்பட்டிருக்கின்றன. அந்தக் காலத்தில் தெலக, கம்ம என்ற பெயர்கள் அதிகமாகப் பரவாததனாலேயே அவை எழுதப்படவில்லை என்னலாம். ரெட்டி என்ற பெயர் முதலில் பட்டப் பெயராக இருந்து பிறகு ஜாதிப் பெயராக மாறிவிட்டது. இதைப் பற்றிப் பின்னால் ஆராய்வோம்.

7-ஆம் நூற்றாண்டில் நம் நாட்டில் தொழிலை ஆதாரமாகக் கொண்டே பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்ற வருணங்கள் வகுக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. இந்த நான்கு வருணங்களிலிருந்து தொழில் காரணமாக க்ஷத்திரியர்களாக மாறியவர்களைப் பற்றி முன்பே தெரிந்து கொண்டோம். மேலும் ஹைஹய வம்சத்தினர்களாகிய கோனசீமை அரசர்கள் க்ஷத்திரியர்கள் என்று பந்துலுகாரு எழுதியிருக்கிறார். கோனசீமையரசர்கள் பள்ளி என்ற ஊர் ஒன்று இருப்பதால் இவர் அப்படிச் சொல்லி யிருக்கலாம். கோன என்ற வீட்டுப் பெயர் இக் காலத்துத் தெலகர்களுக்கும் கம்மவார்களுக்கும்கூட இருக்கிறது. ஆகையால் அந்த அரசர்களும் இவர்களுடைய முன்னோர்கள்

1. பழைய காலத்திலிருந்த சூரிய சந்திர வமிசத்து அரசர்களுக்குப் பணிப் பெண்கள் மூலம் பிறந்த முறை தவறிய சந்ததியார் இதுபோன்ற ஜாதிகளில் சேர்ந்ததாகச் சொல்லுவார்கள். இக் காலத்திலும் கிராமங்களில் இதற்கு உதாரணம் இருக்கிறது அத்தகைய சிலர் தங்கள் பூர்வ வீட்டுப் பெயர்களையே கூட வைத்துக் கொண்டிருந்தார்கள்.

(பிராஹ்மணேந்த்ர விஜயம்)

என்று சொல்ல இடமிருக்கிறது. கோன அரசர்கள் 11-12 நூற்றூண்டினர்கள். அந்தக் காலத்தில் கம்மவார் தெலகர் என்ற வேறு பிரிவுகள் இல்லாததால் பிற்காலத்தில் ஏற்பட்ட இந்தப் பிரிவுகளில் கோன என்ற வீட்டுப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். அதனுல் பந்துலுகாரு எழுதியபடி 7-ஆம் நூற்றூண்டில் சாளுக்கியரின் படையெடுப்பைத் தவிர 10-12 நூற்றூண்டுகளில் ஏற்பட்ட வீர சைவ வீர வைஷ்ணவ, வீர பலிஜ முதலிய மதப் புரட்சிகளாலும் இந்தச் சாதிக ளெல்லாம் பிரிந்து போயின. பின்பு சிலரைத் தவிர மற்றவர்களுக்குள் சம்பந்தம் நின்று போய்விட்டது. சிலர் பலிஜர்களாகவும் சிலர் தெலகர்களாகவும் இருந்து விட்டார்கள் என்று நம்பலாம். கம்ம நாட்டுக் காப்புக்கள் சிலரும் (விவசாயம் செய்தவர்கள்) க்ஷத்திரியர்களும் மட்டுமே 12-ஆம் நூற்றூண்டிலோ அதற்குப் பிறகோ கம்ம வெலமவாராக மாறி யிருக்கவேண்டும். பத்ம நாயக்க சரித்திரத்திலும் இதையே காண்கிறோம். மிகப் பழைய புராணங்களில்கூட இந்தப் பெயர்கள் எல்லாவற்றையும் உபயோகிக்கவில்லை.[1] காப்பு என்ற ஒரு பெயரே காணப்படுகிறது. காப்புக்களை க்ஷத்திரியத் தொழிலை மேற்கொண்ட பொழுது க்ஷத்திரியர்களாகவும், சாதாரண உழவர்களாக இருந்தபோது காப்புக்களாகவும் வழங்கினுலும் உண்மையில் இந்த இரு ஜாதியும் ஒன்றே என்பது பழைய சரித்திரத்தைப் படித்தவர்களுக்கு விளங்கும். ஜனக மகாராசன் இந்த ஜாதியைச் சேர்ந்தவரே. அவர் க்ஷத்திரியர் அல்ல என்று யாராவது சொல்வார்களா? இக்ஷ்வாகு அரசர்களும் இந்த ஜாதியாரே.[2] ஆந்திர நாம சங்கிரகம் என்ற புத்தகத்தில் காப்புக்கள் சூத்திரர்கள் என்று எழுதி யிருக்கிறது. அந்தக் காலத்தில் இவர்கள் வேறு மதத்தைச் சேர்ந்ததால் இதுபோன்ற மற்ற க்ஷத்திரியர்களோடு சதுர்த்த வர்ணத்தவர்கள் ஆனதே இதற்குக்

1. 11-ஆம் நூற்றூண்டில் எழுதிய ஆந்திர மகாபாரதத்தில் "காப்பு லாவு டொரவு கல்கி காமனமு, ஸே யங்க விருஷ்டி தகின யட்லு கலுகு" என்று இருக்கிறது. (சௌப்திக பர்வம்-ஆஸ்வாஸம் 1-ப. 31).

2. இக்ஷ்வாகு அரசர்கள் தம் பிராகிருத சாஸனங்களில் தாங்கள் ஒகலு கேபர் என்று எழுதிக் கொண்டார்கள். கனாடத்தில் உழவர்களை ஒக்கலிகார் என்பார்கள். இதனுலும் இக்ஷ்வாகு வமிசத்தினர் பூமியைக் காப்பவர்கள் அல்லது உழவர் என வேண்டும்.

காரணம்.[1] ஆரியர் கொள்கைப்படி "தாச நாமித கோபால" என்னும் ஸ்ருதிப் பிரமாணத்தைக் கொண்டு பார்த்தால் வண்ணார், நாவிதர், இடையர் முதலிய சேவகத் தொழிலாளர்களே சூத்திரர்கள் என்று தெளிவாகச் சொல்லலாம். மேலே கண்ட சாதியார் எல்லோருக்கும் இவர்கள் சேவை செய்ததால் பழைய காலத்திலிருந்து இவர்களுக்குச் சூத்திரர்கள் என்ற பெயர் வழங்கியது. பெதமுன்னாட்டிக் காப்புகளும்கூட ஹைஹய வமிசத்தினருடன் சம்பந்தம் செய்து கொண்டு ரெட்டி விருது பெற்றதற்கு அத்தாட்சிகள் முன்னமே கொடுத்திருக்கிறேன். அதனால் காப்புக்களும் க்ஷத்திரிய வமிசத்தினரே என்பதில் சந்தேகம் இல்லை.

மேலே கண்ட விஷயங்களால் க்ஷத்திரிய வமிசத்தின் ஒரு பிரிவினர் பலிஜர் ஆனார்கள்; சூரிய வமிசத்துக் கரிகால துர்ஜய வமிசத்தினர், அவர்களுடைய பந்துக்களாகிய சந்திர வமிசத்தினர், சாளுக்கியர், ஹைஹயர் ஆகிய எல்லோரும் கலந்ததால் கம்ம, வெலம ஜாதிகள் ஏற்பட்டன; இது சாஸனங்களால் தெளிவாகிய விஷயம். இதை அறியாத சில சரித்திராசிரியர்கள், சூத்திரர்களில் சிலர் துர்ஜய குலத்தினரென்று சொல்லிக் கொண்டதால் மட்டும் அவர்கள் துர்ஜய குலத்தினர் ஆகமாட்டார்கள்; துர்ஜய குலத்து அரசர்கள் வேறு சூத்திர குலத்துப் பெண்களைக் கலியாணம் செய்து கொண்ட மாத்திரத்தில் அந்தச் சூத்திரர்கள் க்ஷத்திரியர்கள் ஆகமுடியாது" என்று அங்கங்கே எழுதி யிருக்கிறார்கள். இதைப்போல வேறொரு பொய் இருக்க முடியாது. துர்சயனும் அவனுடைய வமிசத்தினரும், அவர்களுடைய பந்துக்களாகிய சோழ சாளுக்கியர்களுமே க்ஷத்திரியர்கள் அல்லர்

---

1. பழைய நூல்களில் காப்பு என்ற பெயர் உழவுத் தொழில் செய்யும் எல்லா ஜாதியாருக்கும் பொதுவாக இருந்தது. சூத்திரர் என்று காணப்படவில்லை. *1816*-ஆம் வருஷத்துத் தெலுங்கு ரெகுலேஷனில் காப்பு என்ற பெயரை உழவர் என்ற பொருளிலேயே உபயோகித்திருக்கிறார்கள். அதற்கு முன்னும் அந்தப் பொருளிலேயே வழங்கி வந்தது உண்மை. இக்ஷ்வாகு வமிசத்தின் ஒரு கிளையினராகிய ஜனகன் முதலிய மிதிலா அரசர்கள் காப்பு குலத்தினரென்றும் ஜனகர் கலப்பைக் கொடியோனென்றும் புராணங்கள் சொல்வதாகவும் கிரிசதிகள் என்பவர்கள் பாகவதம் முதலிய நூல்களில் காணப்படுகிறார்கள் என்றும் மூன்றாற்றுக் காப்புக்கள் இந்த வமிசத்தாராக இருக்கலாம் என்றும் சரித்திரக்காரர்கள் கிளைக்கிறார்கள். (ஆந்திர சரித்திரம் 5-578.)

சதுர்த்தர்கள் என்று சில சரித்திராசிரியர்கள் எழுதுகிறார்கள். இவர்கள் இப்படி எழுதுவதால் நம் தேசத்தில் க்ஷத்திரியர்களே இல்லாமல் செய்து விட்டார்கள். வேத காலத்திலிருந்து நம் நாட்டில் க்ஷத்திரியர்களே இல்லை என்பது சிரிப்புக்கு இடமாகும். இவையெல்லாம் அவரவர் சொந்தமாகக் கற்பனை செய்த ஊகங்களே. மேலும் இவர்கள் தொழிலால் க்ஷத்திரிய சாதி ஏற்பட்டதை ஒப்புக் கொள்வதில்லை. இந்த முறை சுமார் 10-ஆம் நூற்றாண்டு வரையில் அமலில் இருந்து வந்ததைக் கவனிக்காமல் இவர்கள் மனம் போனபடி எழுதினாலும் உண்மை வெளிப்பட்டு விடுகிறது. முற்கால க்ஷத்திரியர்கள் எல்லோரும் 12-ஆம் நூற்றாண்டு வரையிலுங்கூடத் தொழிலால் க்ஷத்திரியர்களான எல்லோருடனும் சம்பந்தம் செய்து கொண்டிருந்தார்கள் என்பதை முன்னமே ருசுப்படுத்தினோம். இந்த வமிசத்தினர்கள் மதம் மாறியதால் சதுர்த்தர்களான நாள் முதல் இவர்கள் (க்ஷத்திரியர்களாக இருந்தும்) சூத்திரர்களாகவே மதிக்கப்பட்டார்கள். ஆதியிலிருந்து ராஜவமிசத்தாராக இல்லாதவர்கள் சூத்திரர்கள் என்றே சொல்லிக் கொண்டார்கள். இவர்களில் சிலர் உழவர்களாக இருந்தாலும் பிரசித்தி பெற்ற தலைவர்களாகவும் ஜனங்கள் மெச்சும் ராஜாக்களாகவும் மகாராஜாக்களாகவும் இருந்தார்கள். இவர்களை எல்லாத் திக்குகளிலும் எல்லா ஜாதியாரும் புகழ்ந்தார்கள். அதனாலேயே இந்த வமிசத்தினர்களாகிய இக்ஷ்வாகு அரசர்களையும், மிதிலை அரசர்களையும் மற்ற அரசர்களையும் சூரிய சந்திர வமிசத்தினரென்று புராணங்களில் குறிப்பிட்டனர்; கவிகள் இவர்கள் வீர தீர பராக்கிரமங்களை எல்லாம் நூலாக எழுதினார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த ராஜ வமிசத்தினரே காலக்கிரமத்தில் பல கிளைகளாகப் பிரிந்து புகழ் பெற்றனர்.[1] கம்ம நாட்டிலிருந்த இந்த ராஜ வமிசத்தினரே அதாவது துர்ஜய, சோழ, சாளுக்கிய ஹைஹய வமிசத்தினரே கம்மவார் ஆனதாக இதனால் தெளிவாகத் தெரிகிறது.

இதுவரைக்கும் கம்மவாரின் உண்மையான விருத்தாந்தத்தைப் பல ஆதாரங்களுடன் தெரிந்து கொண்டோம். ஆகையால்

---

1. ஸ்ரீ வெல்லால சதாசிவ சாஸ்திரியார் எழுதிய ஆந்திர சரித்திரம் II விமரிசனத்தைப் பாருங்கள்.

இந்தப் பிரிவினர் முற்காலத்திலிருந்து வைத்துக் கொண்ட விருதுகளில் முக்கியமானவற்றைப் பார்ப்போம்: ரெட்டி, நேடு, நாயடு, சௌதரி, வர்மா முதலிய பெயர்கள் தோன்றிய காலத்தையும் கம்மவார் என்ற பெயர் பிரசித்தியான காலத்தையும் அதற்குக் காரணங்களையும் தெரிந்துகொள்ள வேண்டி யிருக்கிறது. இவற்றை முறையாக ஆராய்வோம்.

## ரெட்டி

11–12 நூற்றூண்டுகளிலிருந்து வந்த பழைய சாஸனங்களை ஆராய்ந்ததில் சூரிய வமிசத்திலிருந்து வீழ்ச்சியடைந்து சூத்திரர்களான கம்ம,[1] வெலம, ரெட்டி ஜாதியார் எல்லோரும் ரெட்டி என்ற பட்டத்தை உபயோகித்ததாகத் தெரிகிறது. இந்தப் பட்டம் ராஷ்டிரகூடர்களால் ஏற்பட்டிருக்க வேண்டும்; ரட்டர், ரட்டகுடர், ரட்டடர் என்று வழங்கி வந்தவர்களே ராஷ்டிரகூடர்களாக இருக்கலாம். இந்தப் பெயர்களெல்லாம் ராஷ்டிரகூடர்கள் என்ற பொருளிலேயே தொனிக்கின்றன என்று சரித்திராசிரியர்கள் சிலர் எழுதியிருக்கிறூர்கள். சோழப் பட்டத்தை உபயோகித்தவர்கள் இந்தப் பட்டத்தை உபயோகித்ததாக ஆதாரம் இல்லை. மிகப் பழைய சாஸனங்கள் சிலவற்றில் ரட்டடிகம், ரட்டிகம் என்ற சொற்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அவை கிராமத்தின் உரிமை அல்லது தலைமை என்று பொருள்படும் பதங்களாக இருந்தனவென்று தெரிகிறது.[2] இந்த உரிமை உள்ளவர்களையே ரட்டடி, ரட்டி என்று சொல்லி வந்ததாக நினைக்க இடம் இருக்கிறது. ஆனல் ரெட்டி என்ற பதம் ரேடனு என்ற ஆந்திரச் சொல்லின் விகாரம் என்றுகூடத் தோன்றுகிறது. சாஸனங்களில் "றெண்டு, றேடு" என்ற சொற்களும் காணப்படுகின்றன. (S. I. I. Vol. IV). தெலுங்கு நிகண்டில் "றேடனு" என்ற பதம் ஒன்றுதான் காணப்படுகிறது. ரெட்டி,

1. மல்லல, ஹேமாத்ரி, ரெட்டி முதலியவர்கள் 12-ஆம் நூற்றூண்டினர்; கம்மவாரின் முன்னேர்கள்; துர்ஜய வமிசத்தினர்.

2. S. I. I. Vol. IV. No. 737, 1250, 1288, 1871 இவற்றில் அஷ்ட போக ஸர்வ சம்பத்துக்கும் உரிமை உள்ள பதவிக்கே ரட்டடிகம் என்ற சொல்லை உபயோகித்துள்ளனர்.

ரட்டடி, ரட்டி என்ற பதங்கள் விகாரப் பதங்களானதாலேயே எழுதப்படவில்லை என்று நினைக்கிறேன்.

"ரட்டி, றெட்டி, ரெட்டி, ரட்டடி" என்ற சொற்கள் பழைய சாஸனங்களில் இருக்கின்றன. தெலிங்கானு சாஸனங்கள் என்ற புத்தகத்திலிருக்கும் "பில்லல மர்ரி, அன்னவரம், சோமவரம் நாகுலபாடு, ராமன்னபேட்டா, தோசபாடு, நேள்ள செருவு முதலிய சாஸனங்களே இவைகளுக்கு ஆதாரம். பழைய சாஸனங்களிலும், பேச்சுத் தெலுங்கிலும் மகரமெய்க்கு அடுத்தபடி வரும் எழுத்துக்களை இரட்டித்து எழுதும் வழக்கம் இருந்ததாகத் தெரிகிறது. ஸம்ஸ்கிருதத்திலும் இப்படியே இருந்திருக்கிறது. உதாரணம் :

| | |
|---|---|
| 1. விதரண சம்ப்பன்ன | சா. ச. 1935 ராமன்ன பேட்ட [சாஸனம் |
| 2. கம்ட்டகோபால | பில்லஸமர்ரி எர்ர போதுலங்க [சாஸனம் |
| 3. ம்ம்க்கலுலு | சா. ச. 1225 நாகுலபாட்டி [சாஸனம் |
| 4. மும்மடி பிரம்பி செட்டி | சா. சா. 1221 அலம்புரம் [சாஸனம் |
| 5. தர்ம்மம், சதுர்ம்முக | தெலிங்கானு சம்ஸ்கிருத [சாஸனம். |

இதனால் 'ரேடனு' என்ற சொல் தெலுங்கு தேசத்தில் பாஷை அநாகரிக நிலையில் இருந்தபோது ஒருமையில் "றேட்டு, றெட்டு, றேண்டடு, றெண்டடு" என்றும், பன்மைச் சொற்களில், "றேட்டுலு, றெட்டுலு, றேம்ட்டுலு, றெம்ட்டுலு" என்றும் உபயோகித்திருக்கிறார்கள். 'ற'கர 'ர'கர பேதம் இல்லாத காலத்தில் இவை "றெட்டி" என்ற சொல்லாக மாறிவிட்டன. பிறகு இவையே "ரெட்டி, ரட்டி" என்று மாறிவிட்டதாகச் சொல்ல இடமிருக்கிறது. 13-ஆம் நூற்றாண்டில், "றெட்டி, ரெட்டி, ரட்டி" என்ற மூன்று வழக்குகளும் இருந்திருக்கின்றன என்றால் சில நூற்றாண்டுகளில் இவ்வளவு மாறுதல் ஏற்படுவது கூடுமானதுதான். அதிலும் வேத காலத்திலிருந்து வரும் ஆந்திர தெருக்களைப்

பற்றிச் சாஸனங்கள் கிடைக்கா விட்டதால் இந்த மாறுதல் நிகழ்ந்துதான் இருக்கவேண்டும்.

"ரேடு, ராஜ" என்ற சொற்களுக்குப் பரியாய நாமங்களாக கீழ்க்கண்டவைகளைச் சாம்பநிகண்டு சொல்கிறது: எகிமீடு, பாதுஸா, யேலிகா, மன்னீடு, சாகேபு, ராயடு, ஸாமி, பபுவு, ஜீய்ய, துபாஸி, வஜீருண்டு, ராயலு, துளெதாரி, ரா, ரேடு, தொர, ஒடையடு, நேடு. இவைகளில் வரும் ராயடு, நேடு, ராயலு, ராரேடு, தொர, ஒடையடு முதலியவற்றைக் கம்ம, வெலம, ரெட்டிகள் பட்டப் பெயர்களாக உபயோகித்தன ரென்பதைப் பழைய சாஸனங்கள் ருசுப்படுத்துகின்றன. (S. I. I. Vols. IV, V, VI.) இவை அரசர் என்ற பொருள்படும் சொற்கள். ரெட்டி என்பது விகாரமான சொல்லானதால் நிகண்டாசிரியர் அதைச் சொல்லாமல் ரேடுவை மட்டும் சொன்னரென்று தோன்றுகிறது. அதனல் ரெட்டி முதலிய சொற்களும் ரேடு என்ற சொல்லின் விகாரமென்று ஊகித்தல் பொருந்தும்.

கடப்பை மண்டலத்திலுள்ள 8-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த அம்மராஜ விஜயாதித்தன் முதலியவர்களுடைய சாஸனங்களிலும்[1] அதற்கு முந்திய ரேனட்டுச் சோழர்களின் சாஸனங்களிலும்[2] வேறு சில சாஸனங்களிலும் ரெட்டெட்லு, ரட்டகுள்ளு, ரட்டகுடி, ரடெட்ல, ரடிகுடி என்னும் சொற்கள் காணப்படுகின்றன. ரெட்டகுடர் என்பவர்களிலும் பல பிரிவுகள் இருந்ததாகச் சில சாஸனங்களால் தெரிகிறது.[3] இவற்றை யெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தால் ராட் என்னும் சம்ஸ்கிருதச் சொல்லிலிருந்தே, ரட்டுலு, ரட்டட்லு, ரட்டி, ரேடு, ரட்டகுடி என்ற சொற்கள் தோன்றி யிருக்கலாம் என்று படுகிறது. பெயர் எப்படி உண்டாயிருந்தாலும் ரெட்டி என்பது ராஜ என்ற பொருளிலேயே தோன்றியிருக்க வேண்டும். நாளடைவில் கிராமத்

---

1. ஆந்திரபாஷா சரித்திரம் 2-ஆம் பாகம். 1326-27 ஆம் பக்கங்கள்.

2. Ep. Ind. Vol XI-மாலெ பாடு சாஸனங்கள்.

3. அரவள மகேந்திர ரட்டகுடி, பல்லவ ரட்டகுடி, கல்கிரட்டகுடி, மாறபிடுகு ரட்டகுள்ளு, குருமாரி ரட்டகுள்ளு என்ற சில சொற்கள் சாஸனங்களில் இருக்கின்றன. இவர்கள் எல்லோரும் அந்த அந்தப் பிரிவின் அரசர்கள் என்று தோன்றுகிறது. Ep. colles 384 & 400 of 1904, 337 of 1905, 798 of 1907-பார்க்க.

தலைமை உத்தியோகத்தின் சின்னமாக மாறியிருக்க வேண்டும். இக் காலத்திலும் சில இடங்களில் கிராமாதிகாரிகளை ரெட்டி என்றே வழங்குகிறார்கள். அதனால் முதலிலிருந்தே ரெட்டி என்பது குலப் பெயராக இருக்கவில்லை. மேலேகண்ட பொருளிலேயே வழங்கி வந்திருக்கிறது என்பது வெளிப்படை.

கம்மவாரின் முன்னோரில் சிலர் ரெட்டிப் பட்டம் தரித்திருந்தாலும் ராஷ்டிரகூட வம்சத்தினர் அல்லர், கரிகால துர்ஜய வமிசத்தினர். அதுபோலவே ரெட்டிப் பட்டம் தரித்திருந்த சிலரும் சில சாஸனங்களில் சொன்னபடி[1] சூரிய சந்திர வமிசத்து அரசர்களாக இருந்திருக்கிறார்கள். சிலர் யது வம்சத்து ராஷ்டிரகூட சந்ததியாராக இருக்கலாம். ரெட்டி அரசர்கள்கூட நாயடு, நாயகுடு முதலிய பட்டங்களைக் கொண்டிருந்ததாக ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன.

ரெட்டி வமிசத்தினருக்கும் முன்னே விவரித்த சோழ அரசர்களுக்கும் உள்ள உறவுமுறையும் இதை உறுதிப்படுத்துகிறது. ரெட்டிப் பட்டத்தைக் கம்மவார் எவ்வளவு தூரம் உபயோகித்திருக்கிறார்கள் என்பதற்கு இன்றைக்கும் கம்மவாரிலுள்ள வானி ரெட்டி, கொம்மா ரெட்டி, தம்மா ரெட்டி, போதி ரெட்டி, வல்லப ரெட்டி, ஸூர் ரெட்டி, நன்னப ரெட்டி போன்ற வீட்டுப் பெயர்களே சாட்சியாக இருக்கின்றன. இப்படியே ராஜ பட்டத்தைக்கூட கம்மவார் போன்ற க்ஷத்திரியரல்லாத பிராம்மணர்களும் வைத்துக் கொண்டிருந்ததாக நியோகிப் பிராம்மணர்களின் வீட்டுப் பெயர்களால் தெரிகிறது. இவை உத்தியோகத்தால் வந்த பட்டங்கள்: கன்டம் ராஜு, அன்னம் ராஜு, தேசி ராஜு என்பவை அவை.[2]

கம்மவாராக மாறிய பிறகும் கம்மவார்கள் ராஜ பட்டத்தை உபயோகித்திருக்கிறார்கள். இதற்குக் கொசராஜு முதலிய இன்றைய வீட்டுப் பெயர்கள் உதாரணம். எருவ தொண்டைய

1. மாரசானி கேதி ரெட்டியின் சேஜர்ல சாஸனம் (S. I. I. Vol. VI. Nos. 598 & 600).

2. ராஜராஜ நரேந்திர பட்டாபிஷேக சஞ்சிகையில் நியோகிகளின் வீட்டுப் பெயர்கள் இருக்கின்றன.

ராஜனைப்பற்றி முன்னமே சொல்லி யிருக்கிறோம். பெம்மசானி திம்மராஜு முதலிய 16-ஆம் நூற்றாண்டுக் கம்மவாருக்குக்கூட இந்தப் பட்டங்கள இருந்ததாகச் சில தனிப்பாடல்களால் தெரிகிறது.

"பிரபலோத்தாடினி, பெம்மஸானி பெததிம்மாராஜ கன்டீரவா"

என்று ஒரு பாடலில் இருக்கிறது. அதனால் ரெட்டி, ராஜு முதலிய பட்டங்கள் தொழிலால் வந்தவை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

## ரெட்டிகளிலிருந்தா கம்மவார் தோன்றினர் ?

கம்மவார் ரெட்டிகளிலிருந்து தோன்றியதாகச் சில சரித்திராசிரியர்கள் நினைப்பதாக முன்னமே எழுதி யிருக்கிறோம். அதனை விளக்கி அங்கேயே கொஞ்சம் எழுதியிருக்கிறோம். இங்கே இன்னும் விரிவாக ஆராய்வோம்.

முற்காலத்தில் கி. பி. 1-8 நூற்றாண்டுகளின் இடையில் ரட்டு, அல்லது ரட்டகுடர் என்னும் வமிசத்தினர் நம் தேசத்தில் இருந்ததாகச் சில சாஸனங்களால் தெரிகிறதே. இவர்கள் க்ஷத்திரியர்கள். இந்த வமிசத்தில் பல கிளைகள் ஏற்பட்டதாகத் தெரிகிறது. அதனாலேயே பழைய சாஸனங்களில் பல்லவ ரட்டகுடி, சல்கிரட்டகுடி, மாற்பிடுகு ரட்டகுட்லு, குருமாரி ரட்டகுட்லு, ரட்டுலு மகாரட்டுலு என்பவர்கள் காணப்படுகிறார்கள். சுங்கர்களிலிருந்தும் பல்லவர்களிலிருந்தும் வேறு சில வமிசங்களிலிருந்தும் ரட்டுக்கள் பிறந்தார்கள் என்பதும் சல்கிரட்டர்களிலிருந்து சோழர்களும், பல்லவ ரட்டர்களிலிருந்து பல்லவர்களும் தோன்றினர்கள் என்பதும் சிலர் அபிப்பிராயம். ரட்டர்கள் அல்லது மகாரட்டிரர்கள் வமிசத்திலிருந்தே ராஷ்டிரகூடர்கள் தோன்றியதாகப் பல சரித்திராசிரியர்கள் நினைக்கிறார்கள். ரெட்டிகள் ராஷ்டிரகூடப் பிரிவிலிருந்து தோன்றினார்கள் என்பதும் ரட்டர், மகாரட்டர் என்பவர்கள் இவர்களே என்பதும் மகாரட்டர்களிலிருந்து இக்காலத்து மகாராஷ்டிரர்கள் தோன்றினார்கள் என்பதும் இக்கால ஆராய்ச்சியாளர்களின் அபிப்பிராயம். ரெட்டிகளுக்கும் மகாராஷ்டிரர்களுக்கும் சம்பந்தம்

உண்டென்று மகாராஷ்டிர கெஜட் ஒன்று சொல்கிறது. (மகா ராஷ்டிர கெஜட்டீர் Vol. XVI பக். 436).

14-ஆம் நூற்ருண்டுக்கு முந்திய சில சாஸனங்களில் மாரசானி கேத்தி ரெட்டி, பில்லல மர்ரி பேத்தி ரெட்டி, கோன கன்ன ரெட்டி, ரேசர்ல காமிரெட்டி முதலியோர் (மன்ம குலா பரணர்) சூரிய வமிசத்தினர் என்றும் சதுர்த்த வமிசத்தினர் என்றும் எழுதிக் கொண்டிருக்கிருர்கள்.[1] ரெட்டிகளுக்கு முன் னேர் என்று கருதப்படும் ராஷ்டிரகூடர்கள் தங்களை யது வமிசத்துச் சாத்தகியின் சந்ததியினர் என்று சொல்லிக் கொண் டார்கள். அதனல் இவர்கள் சந்திர வமிசத்தினரென்று வழங்கி வந்ததாகத் தெரிகிறது. இதைப்பற்றி முன்னமேயே எழுதி யிருக் கிரேம்.

14–ஆம் நூற்ருண்டில் ராஜமகேந்திரவரம், கொண்டவீடு இவற்றைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட ரெட்டி ராஜாக்கள் எல்லோரும் (அனவேமா ரெட்டி, வீரபத்ரா ரெட்டி முதலியவர் கள்) பல நூல்களையும் சாஸனங்களையும் எழுதுவித்தார்கள். அவற்றில் தங்களைச் சூத்திரர்கள் என்றே இவர்கள் சொல்லிக் கொண்டார்கள். இவர்கள் பண்ட ரெட்டிகள். பண்ட பதினலு குலத்தார் என்னும் ரெட்டி வமிசப் பிரிவுகள் கம்மவாரில் காணப் படவில்லை. பண்ட ரெட்டிகள் வேறு மதங்களுக்கு மாறியதனு லேயே சூத்திரர்கள் என்று வழங்கப்பட்டார்கள் என்று தோன்றுகிறது.

ரெட்டிகள் முதலில் சூரிய சந்திர வமிசத்தினர் என்றும் பிற்காலத்தில் சூத்திரர்கள் என்றும் சொல்லிக் கொண்டார்கள். சோழ வமிசத்தினரென்ருவது துர்ஜய வமிசத்தினரென்ருவது சொல்லிக் கொண்டதற்கு ஆதாரமில்லை. இவர்கள் சூரிய சந்திர வமசத்துக் கலப்பினுல் ஏற்பட்ட ராஷ்டிரகூட சந்ததியார் என்று சொல்லலாம். ரெட்டி என்ற பட்டம் குலச் சின்னமாகக் கருதப்படும் வரையிலும் இவர்கள் தம்மைப்போல் வீழ்ச்சி யடைந்து சதுர்த்தர்களான ராஜாக்கள் எல்லோருடனும் சம்பந்தம் செய்து கொண்டிருந்ததாகவே தோன்றுகிறது. துர்ஜய கரிகால

1. S. I. I. Vol. VI 598 & 600 தெலிங்கான சாஸனங்கள்.

வமிசத்தினனும் 13–ஆம் நூற்றூண்டினனும் ஆகிய மல்லியால குண்ட தண்டநாதன்,[1] 14–ஆம் நூற்றூண்டினனுகிய எறுவ பீமராஜன்,[2] 14-ஆம் நூற்றூண்டினனுகிய காகதீய இரண்டாம் பிரதாபருத்திர சக்கரவர்த்தி,[3] சாகி அரசர்களில் ஒருவனுகிய வத்ஸவாய ராஜன் (நலகாம வீராரெட்டியின் மகள் முக்தாம் பாவை மணந்தவன்) ஆகியவர்கள் ரெட்டிகளிடம் சம்பந்தம் செய்திருக்கிறுர்களே ஒழிய ரெட்டிகள் ஆகிவிடவில்லை. அவர்கள் துர்ஜய சோழ வமிசத்தினராகவே இருந்தனர். அந்தக் காலத்தில் எல்லா ஜாதியாரிடமும் உறவு முறைகள் இப்படியே இருந்தன.

துர்ஜய சோழ வமிசத்தினர்களே-அதாவது–கம்ம நாட்டுச் சோழ வமிசத்தினரும் துர்ஜய வமிசத்தினரும் கம்மவாராக மாறிவிட்டார்க ளென்று முன்னமே பல இடங்களில் சொல்லி யிருக்கிறேம். ரெட்டிப் பட்டம் தரித்த மல்லியால ஹேமாத்ரி ரெட்டியும் துர்ஜய வமிசத்தினன் என்று சொல்லிக் கொண்ட தற்குச் சாஸன ஆதாரம் இருக்கிறது. (S. I. I. Vol. IV பக். 468) ஆனல் இவன் ரெட்டி குலம் என்று சொல்லிக் கொள்ளவில்லை. ரெட்டிகளே கம்மவாராகி யிருந்தால் கம்மவாரின் வீட்டுப் பெயர் களில் ரெட்டிப் பட்டத்தோடு கலனேனி, நீடு என்றவை சேர்ந்து வந்திருக்க வேண்டும். கம்மவாரின் வீட்டுப் பெயர்கள் 1000–க்கு 10-ல் மட்டுமே ரெட்டிப் பட்டம் சேர்ந்து வந்திருக்கிறது.

கம்மவார் ராஜு, ரெட்டி, நீடு என்ற பட்டங்கள் எல்லா வற்றையும் உபயோகித்ததாகவும், ஆனல் ரெட்டிப் பட்டத்தைக் குறைவாக உபயோகித்ததாகவும் இவர்கள் வீட்டுப் பெயர்ப் பட்டியலைக் கொண்டு தெரிய வருகிறது. இந்த வீட்டுப் பெயர்கள் 15-ஆம் நூற்றூண்டுக்கு முந்தியவையே யன்றி இக்காலத்தவை அல்ல. இந்தப் பத்து ரெட்டிப் பட்டங்களுங்கூட ரெட்டிகளின் ஆட்சி தெலுங்கு தேசத்தில் ஓங்கிய காலத்தில் அவர்கள் தயவு சம்பாதிப்பதற்காக வைத்துக் கொண்ட பட்டங்களாகவே

1. இவன் கோனபுத்தா ரெட்டியின் மகள் குப்பாம்பாவை மணந்தான்.

2. இவன் அனவேமா ரெட்டியின் மகளை மணந்தான்.

3. இவனுக்கு ஜுட்டய லங்க கொங்கா ரெட்டி என்னும் மகன் இருந்ததாகச் சாஸனங்களால் தெரிகிறது—இவற்றல் ரெட்டிகளுக்கும் இவர்களுக்கும் இருந்த சம்பந்தம் புலனுகிறது.

இருக்கவேண்டும். வாசி ரெட்டி என்ற வீட்டுப் பெயர் வாசைய ராசனுடைய காலத்தில் (இவன் ரெட்டி அரசன்) ஏற்பட்டதாக ஊகிக்க இடமிருக்கிறது. இப்படியே மற்றவைகளும் ஏற்பட்டிருக் கலாம். வேறு சில ரெட்டிப் பட்டங்கள் சம்பந்தத்தின் மூலம் ஏற்பட்டிருக்கலாம். இன்னமுங் கூடக் கம்மவாரில் சிலர் ரெட்டிப் பட்டம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வரவர இது கௌரவச் சின்னமாகி விட்டது. "கம்மாவார் ரெட்டி ஜாதியார் அல்லர். முதலில் இவர்களுக்கு ரெட்டிப் பட்டம் இல்லை. கம்மவாரின் முன்னோர் சோழர்கள் என்றும் துர்ஜய வமிசத்தின ரென்றும் சொல்லிக் கொண்டார்கள். சாளுக்கிய, ஹைஹய வமிசத்தினர் கள்கூட இவர்கள் பந்துக்களாக இருந்திருக்கிறார்கள்" என்று இதுவரையில் சொன்னவற்றிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

தனிப்பட்ட ரெட்டி ஜாதியிலிருந்து கம்மவார் தோன்றி யிருக்க முடியாதென்று மேற்கண்டவற்றால் தெரிகிறது. காப்பு ஜாதியிலிருந்து கம்மவார் தோன்றினார்க ளென்பதும் இதுபோன்ற பொய் வார்த்தையேதான். கம்மவாரின் முன்னோர்களில் சிலர் கம்ம காப்புக்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கலாம். மோட் டாட்டி ரெட்டிகளுக்கும் கம்மவாருக்கும் சில கோத்திரங்கள் ஒன்றாக இருக்கின்றன. அதனாலேயே இருவரும் ஒரு ஜாதியினர் என்று சொல்லிவிட முடியாது. மதம் மாறித் திரும்பவும் ஹிந்து மதத்திற்குத் திரும்பிய எல்லா ஜாதியினரும் அவரவர்களுடைய பழைய வாசஸ்தலத்தின் பெயரையே கோத்திரங்களாக வைத்துக் கொண்டதாகத் தெரிவதால் கோத்திர ஒற்றுமையினால் ஜாதி ஒற்றுமை சொல்லமுடியாது. சூத்திரர்களி லுள்ள எல்லாப் பிரிவிலும் கிராம கோத்திரம் இருக்கிறது.

## போஜர்கள் கம்மவாரா?

ரட்டர், ராட்டர் என்பவர்களில் சிலருக்குப் போஜர் என்ற வேறு பட்டமும் இருந்தது; அவர்கள் இப்போது கம்மவார் களுக்குள் இருக்கிறார்கள் என்று ஆந்திரர் சரித்திரம் 3-ஆம் பாகம் 113-ஆம் பக்கத்தில் ஸ்ரீ வீரபத்திரராவ் பந்துலுகாரு எழுதியிருக்கிறார். ரெட்டி அல்லது ரட்டரிலிருந்து தோன்றிய ராஷ்டிரகூடர்களிலிருந்து கம்மவார் தோன்றவில்லை என்பது

மேலே சொன்ன விஷயத்தால் உறுதிப்படுவதால் இவர் வாதம் சரியல்ல.

ஒருவேளை ரட்டர்களின் ஒரு பிரிவினராகிய சல்கி ரட்டர்களிலிருந்தாவது அல்லது அதுபோன்ற வேறொரு பிரிவிலிருந்தாவது சூரிய வமிசத்துச் சோழர்கள் தோன்றியதாகக் கருதினலும், சல்கி ரட்டர்களாவது சோழர்களாவது போஜப் பட்டம் தரித்ததற்குச் சரித்திர ஆதாரம் இல்லை. சுலகர் சோழரல்லர் என்பது சில சரித்திராசிரியர்களின் கருத்து. ஸ்ரீ பந்துலுகாரு தம் கருத்துக்கு ஆதாரம் ஒன்றும் காட்டவில்லை. அதனல் இது அவருடைய ஊகமென்றே நினைக்கிறேன். போஜர்களும் ஆந்திரர்களும் வேறு வேறு ஜாதியினர் என்பது அசோகரின் 13-ஆம் சிலாசாஸனத்தால் தெளிவாக விளங்குகிறது. இதனலும் போஜர்கள் ஆந்திரர்கள் அல்லர் என்பது நன்கு விளங்குகிறது. ஒருவேளை இவர்களும் சோழர்களைப்போல் பழைய ஆந்திரர்களிலிருந்து பிரிந்தவர்களாக இருக்கலாம். புராண ஆதாரங்களைப் பார்த்தால் சந்திரகுலமான யது வமிசத்திலிருந்து யது, விருஷ்ணி, போஜ, அந்தகப் பிரிவுகள் ஏற்பட்டன என்பது தெரியும். இந்தப் பிரிவுகள் எந்த எந்த ஜாதிகளுள் கலந்திருக்கின்றன என்பதைச் சரித்திராசிரியர்களாலேயே நிச்சயிக்க முடியவில்லை. கோனசீமை அரசர்கள் யது வமிசத்தைச் சார்ந்த ஹைஹய வமிசத்தினர் என்று சொல்லிக் கொண்டார்கள். அவர்கள் கம்மவாரே என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. மற்ற வம்சங்களைப்பற்றி இன்னும் ஆராயவேண்டி இருக்கிறது. அதனல் போஜர்கள் கம்மவார்களுக்குள் கலந்திருக்கிருர்களா என்பதை இப்போது சொல்ல முடியாது. கூர்மி என்னும் ஜாதியார் போஜராஜ சந்ததியார் என்று சொல்லிக் கொள்கிருர்கள். இது உண்மையோ அல்லவோ தெரியாது. ஆனல் போஜர்களும் கம்மவாரின் முன்னேர்களும் ஒரே க்ஷத்திரிய வர்க்கத்தினர் எனலாம்.

## நாயடு, நாயகுடு, நேனி, நீடு என்னும் குலப் பெயர்கள்

ஒரு சமுதாயத்துக்கு அல்லது ஒரு படைக்குத் தலைவனயிருந்தவனை நாயகன் என்று சொல்லும் வழக்கம் இருந்தது. மூதலிலிருந்து கம்மவாரும் மற்ற ஜாதியினரும் இதே பொருளில்

இந்தப் பட்டத்தை உபயோகித்திருக்கிறார்கள். இதன் குறுக்கமே நாயடு என்று ஆயிற்று. அரசன் என்ற சொல்லுக்கு நேடு என்பது பரியாயப் பெயர் என்பதை முன்னமே சொல்லி யிருக்கிறோம். இதன் விகாரமாகவே நேனி என்ற சொல் பிறந்தது. நேடு என்னும் சொல்லின் மற்றோர் உருவமே நீடு. இவையெல்லாம் 12-ஆம் நூற்றாண்டுச் சாஸனங்களிலும்[1] அதன் பின்பு எழுதிய நூல்களிலும் காணப்படுகின்றன. இந்தப் பட்டங்களை ஒரு குலம், சமூகம் அல்லது படைக்கு அதிபதிகளே உபயோகித்திருந்தாலும் க்ஷத்திரியர்களே தம் பெயர்களின் முடிவில் அதிகமாக உபயோகித்ததாகச் சாஸனங்களால் தெரிகிறது. சேனைத் தலைவர்களாக இருந்த பிராம்மணர்களும் இந்தப் பட்டங்களை உபயோகித்து வந்தார்கள்.[2] இந்தப் பட்டங்களைக் கம்ம, வெலம, ரெட்டி, க்ஷத்திரியர்கள் எல்லோருமே உபயோகித்திருக்கிறார்கள். வேறு குலத்தினர் சிலரும் இந்தப் பட்டங்களை உபயோகித்திருந்தாலும் அவர்கள் க்ஷத்திரியர்கள் அல்லர் என்பதை அவர்கள் வீட்டுப் பெயர்கள் தெரிவித்து விடுகின்றன. நேனி, நீடுப் பட்டங்கள் கம்மவார்களின் வீட்டுப் பெயர்களோடு சேர்ந்து வருவதன்றி சொந்தப் பெயர்களோடும் அநேகமாகச் சேர்ந்து வருகின்றன. வெலமவாரிலுங்கூட இந்தப் பட்டங்கள் அதிகமாக இருக்கின்றன. ரெட்டிகளில் மட்டும் குறைவாக இருக்கின்றன. இந்த மூன்று குலத்தாரும் முற்காலத்திலிருந்தே இந்தப் பட்டங்களை அதிகமாக உபயோகித்திருக்கிறார்கள்.

நேனி, நீடு பட்டங்கள் ராஜ்யாதிகாரம் வகித்த வேறு குலத்தினரிடமும் காணப்படுகின்றன. யாதவ வமிசத்துப் போயர்கள் அதாவது இடையர்களில் சிலருக்கு நேனி, நீடு பட்டங்கள் இருந்ததாகத் தென்னிந்தியச் சாஸன IV, V பாகங்களால்

1. S. I. I. Vol. IV பார்க்க. இவற்றைப் பல் நாட்டுப் பிரம நாயனுடைய சோதரர்களாகிய மல்லிநீடு, ஸூர்நீடு, பேர்நீடு முதலியவர்கள் வைத்துக் கொண்டார்கள். விப்பர்த்தி அமரி நாயகன், பண்டாமுப்பி நாயகன், பண்டாரி மும்மடி நாயன், ஆலூரி-போத்தி நாயன், ஜெஜ்ஜப்ரோவி நாயகன், மொரமபூடி போத்தி நாயகன் முதலிய 11, 12, 13-ஆம் நூற்றாண்டினர்கள் இந்தப் பட்டங்களை வைத்துக் கொண்டிருந்தனர். சிந்தமனேனி, வல்லபனேனி. மிக்கிலினேனி என்ற வீட்டுப் பெயர்கள் கம்மவார் முதலிலிருந்து நீடு என்ற பட்டத்தை உபயோகித்ததற்கு உதாரணமாக நிலைத்திருக்கின்றன. (S. I. I. Vols. IV & V).

2. புடூரி தாமி நாயகன் என்னும் பிராம்மணனைக் குறித்து முகலிங்கேசவரர் கோயில் சாஸனம் ஒன்று சொல்லுகிறது. (S. I. I. Vol. V பக். 398)

தெரிகிறது. ஆனால் நடைமுறையில் இவைகளின் உபயோகம் மிகக் குறைவாகவே இருக்கிறது.

கம்மவார் தம் பெயர்களின் முடிவில் ராயடு, அப்பா, ஐயா, அன்ன முதலிய பட்டங்களைக் கௌரவத்துக்காகச் சேர்த்துக் கொள்கிறார்கள். இதுவும் பழைய வழக்கமே. இவற்றில் ராயடு, அப்பா என்பவை நீடு, ரெட்டி, நாயகன் என்பவற்றைப் போல் மிகப் பழையவை. அன்ன என்பது அவற்றுக்குப் பின் வந்தது. ஐயா என்பது சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலுமே அதிகமாகக் காணப்படுகின்றது. இவை அதிகமாக ஆக 11, 12-ம் நூற்றாண்டுகளிலிருந்த ரெட்டி, சோழ என்ற பட்டங்கள் குறைந்துவிட்டன.

## கம்மவார் சௌதரிகள் ஆனது

இப்போது கம்மவார் சௌதரி என்ற பட்டத்தைக் கௌரவமாகச் சேர்த்துக் கொள்ளும் விஷயம் எல்லோருக்கும் தெரியும். இந்தப் பட்டத்தைத் தனிப்பட்ட குலப் பெயராகச் சொல்லிக் கொள்ளும் வழக்கங்கூட மத்தியத் தெலுங்கு நாட்டில் வந்து விட்டது. நமக்குத் தெரிந்தவரையில் 18-ஆம் நூற்றாண்டுக்குப் பின்பே இந்தப் பட்டம் கம்மவாரில் வியாபித்திருக்கிறது. அதற்கு முன்னும் இல்லை என்று சொல்ல முடியாது. சா. ச. 1467-க்குச் சரியான குரோதி வருஷத்தில் ஏலீஸ்கான் என்பவன் நைஜாமைச் சேர்ந்த நாகுலபாடில் எழுதுவித்த ஒரு சாஸனத்தில், "சைது சிம்மனு பாரனு சௌதரி சக்கபண்டி நாகி ரெட்டி, பட்ன ரெட்டி" என்னும் தொடர் காணப்படுகிறது. இதில் வரும் சௌதரி என்ற சொல் முதலில் வரும் முஸ்லிமுக்கோ பின்னால் வரும் ரெட்டிக்கோ சேரலாம். மொத்தத்தில் அந்தக் காலத்தில் இந்தச் சொல் வழக்கிலிருந்தது தெரிகிறது. பல்நாட்டுச் சரித்திரத்தில் சௌதுரி ராமி ரெட்டி என்பவனுக்கு நாகம்மா என்னும் மகள் இருந்ததாக வருகிறது. இந்தச் சரித்திரத்தைப் பலர் எழுதியிருந்தாலும் ஸ்ரீ நாதகவி எழுதியதே மிகப் பழையது. அதில் காணப்படும் இந்த வீட்டுப் பெயர் கற்பனைப் பெயர் என்று சொல்ல முடியாது.

ஸ்ரீ நாதகவி 15–ஆம் நூற்றாண்டில் இருந்தவர். 12-ஆம் நூற்றாண்டில் இந்த வீட்டுப் பெயர் இருந்ததாக இவர் சொல்லு

கிறார். ஸ்ரீநாதன் காலத்தில் தெலுங்கு நாட்டுக்குள் முஸ்லிம்கள் புகுந்து விட்டனர். அதனால் சௌதரி என்பது தெலுங்குப் பெயரா முஸ்லிம் பெயரா என்பதில் எனக்குச் சந்தேகம் வந்தது. பத்திரிகைகளில் இதைப் பற்றிய விரிவான தர்க்கம் நடந்தது. (கம்ம மகாராஜு பத்ரிகா 1936-37 பார்க்க.) மொகலாயர் காலத்தில் சௌத் என்ற வரியை வசூல் செய்யும் அதிகாரம் மகாராஷ்டிரர்களுக்குக் கிடைத்தது. அவர்கள் கூட்டமாகப் புறப்பட்டுப் போய் இந்த வரியை வசூலித்தார்கள்; வரி கொடுக்காத இடத்தில் கொள்ளையடித்தார்கள். வரி கொடுக்காத சிற்றரசர்களைப் பதவியிலிருந்து நீக்கினார்கள் என்று நமக்குத் தேச சரித்திரம் சொல்லுகிறது. இந்த வரி சுமார் கி. பி. 1720-1820 வருஷங்களுக்கிடையில் அமலிலிருந்ததாகத் தெரிகிறது.

இந்த வரியை வசூல் செய்யும் கிராமத் தலைவனுக்கு மொகலாயரிடத்தில் வேலையி லிருந்த மகாராஷ்டிரர்கள் சௌதரி என்ற பட்டத்தைக் கொடுத்திருந்தார்கள் என்று நான் அபிப்பிராயப்பட்டேன். சில பண்டிதர்கள், "சௌதரி என்ற சொல் பழைமையானது, சக்ரதாரி என்ற சம்ஸ்கிருதச் சொல்லிலிருந்து தோன்றியது" என்று தர்க்கித்தார்கள். சௌத் என்ற சொல் பிராக்ருத பாஷையிலும் இருக்கிறது என்றார்கள். தலைவன் அல்லது பெரியதனக்காரன் , என்னும் பொருளிலேயே இது வழங்கப்படுகிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் கிராமங்களில் வரி வசூல் செய்யும் பெரிய தனம் இருக்கவில்லையே! இந்தச் சொல்லைச் சிலர் சகதரி என்றும் வழங்குகிறார்கள், சப்பர் தார்லு (ரச்சபண்டவாரு) என்னும் சொல்லின் விகார மென்றே சிலர் நினைக்கிறார்கள். இது எப்படி வந்திருந்தாலும் வீட்டுப் பெயர்களோடு எப்படிச் சேர்ந்திருந்தாலும் நம் நாட்டுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் வருமுன் சில கிராமங்களில் சில சௌதரிகள் இருந்ததாகத் தெரிகிறது. இன்னார் இன்ன கிராமத்தில் சௌதரித்தனம் செய்கிறார் என்ற வாக்கியங்கள் உள்ளூர்க் குறிப்புகளில் காணப்படுகின்றன.

சூரிய தேவர நகசிம்மராஜன் வேமுலபல்லி லிங்கமனீடு இவர்கள் புலிவர்ருப் பிராந்தியத்துக்குச் சௌதரிகளாக இருந்து சா. ச. 1741-க்குப் பல தலைமுறைகளுக்கு முன்பே சௌதரித்

தனம் செய்து வந்ததாக உள்ளூர்க் குறிப்பு Vol. 41–பக். 471–ல் இருக்கிறது. மோதுகூர் என்னும் கிராமத்துக்கு மொகலாயர்கள் காலத்தில் அலபர்த்தியார் சௌதரிகளாக இருந்ததாக ஓரிடத்தில் எழுதியிருக்கிறது. இந்த விஷயம் டி. எச். வி. ரங்காசார்லு எழுதிய குண்டூர் ஜில்லா ஸ்தல புராணத்தில்கூட இருக்கிறது. வாசி ரெட்டி லிங்கமனீடு தாடிகொண்ட வட்டத்திற்கும், வாசி ரெட்டி கங்கினீடு மோவஊருக்கும் சௌதரிகளாக இருந்தார்களென்பது[1] அவர்களுடைய வமிச சரித்திரத்தால் தெரிகிறது. அந்தக் காலத்தில் இப்படி ஒரு வட்டம் அல்லது பல கிராமங்களுக்குச் சௌதரிகள் இருந்தார்கள்.

குப்தி, கண்டிக்கோட்டை ராஜ்யங்களில் பிரங்கிகளை உபயோகித்துக் கூடப் பலாத்காரமாகச் சௌத் வரியை வசூலித்ததாகத் தாடிபர்த்தி உள்ளூர்க் குறிப்புச் சொல்லுகிறது. 18-19-ஆம் நூற்றாண்டுகளிலிருந்த ஜமீன்தார்களின் உத்தரவுகளில் "இன்ன கிராமத்துச் சௌதரிகளுக்கு" என்று அதிகார பூர்வமாக எழுதியிருப்பதை நானே படித்திருக்கிறேன். மிகச் சிதிலமான சில உத்தரவுகள் இன்னும் என்னிடம் இருக்கின்றன.[2] ஆந்திர வாரப்

---

"கங்கினீடனு பூபதி கனமுகானு, மோவு ஊரி புரம்புன
மோதமலர, சவுதரி விதானமுன க்யாதி சாலகாஞ்சி,
அதிகுட்ன ஜெப்பெ சத்கீர்த்தி னதிகமிஞ்சி."
"வீரபனீடுவின் இரண்டாம் சகோதரனுயெ மாதினீடு ஆத்மகூர், நிட்மர்கு வட்டங்களுக்குச் சௌதரியாக இருந்தார்."-வாசிரெட்டிவமிச சரித்திரம். பக்.66.

2. '...ஸ்ரீ வெங்கட்ரமண பிரசம்ன்ன......ராஜஸ்ரீ சாகர்லமூடி கரணல்கு... சேஷகிரி ராவு மேனேஜரு தாலூகே ரேபல்லெ நமஸ்காரம்.

சௌதர்லகு-ஆஸ்ன 1239 பசலி மஜ்கூருலோ கம்ப்பா கிரு(ஷ்ண) வதானுலு காரிகி வுண்டுருன்ன யினும் பொலம்லோனு-பண்டகு சால்து ஜஸ்தாதும்பால கனுபரசினுரு. கன்கு ஹாலுசாலு மாமூலுப்ரகாரம் தும்பால செல்வுபிச்சினு(மு). ஆவ மகஸ்லூலு மாவசேயிஞ்சு கொனி கொஞ்ச போனிச் சேதி. ஆன—ஸம் 4 தி 25 ஏப்ரிலு விக்ருதிஸம் || வைஸாக—ஆதிவாரம் த்ருமான் ராவு, லக்ஷ்மி நர்க கிரஸ்தாதாரு—

(Xஸம்ஸ்கிருதக் கையெழுத்திருக்கிறது).

| |
|---|
| ரேபல்லி தாலூகா<br>மேனேஜர் முத்திரை. |

(அசலுகு சரியைன நகலு)

குறிப்பு: இதே மாதிரி ஸன 1240, 1242 பசலிகளில் உத்தரவுகள் இருக்கின்றன; மேலே காட்டியது கிழக்கிந்திய கம்பெனியாரின் கலெக்டர்களின் கீழிருந்த மேனேஜர் ஒருவர் உத்தரவு. இது போலவே ஜமீன்தார்களின் கையெழுத்துக்களோடும் சில இருக்கின்றன.

பத்திரிகை (10–2–37) ஒன்றில் நிஜாமின் பூர்வ சரித்திரம் எழுதப்பட்டிருக்கிறது. மகாராஷ்டிர ராஜ்யம் சிதைந்த பின் சௌத்வரியை நிஜாம் அரசாங்கத்தார் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குச் செலுத்தும்படி ஏற்பாடாயிற் றென்றும், கி. பி. 1820-க்குப் பின் அந்த வரி ரத்துச் செய்யப்பட்டதென்றும் அதில் எழுதப்பட்டிருக்கிறது. கிழக்கிந்தியக் கம்பெனியார் காலத்தில் நம் நாட்டில் இந்த வரி வசூலித்த வட்டத் தலைவர்களைச் சௌதரிகள் என்று வழங்கியதாக ஊகிக்கிறோம். நிலவரித் திட்டம் நிர்ணயிக்கப்படும் வரையில் (ஸெட்டில்மென்ட்) இந்தச் சௌதரிகள் இருந்ததாகத் தோன்றுகிறது. கஞ்சம், விசாகப்பட்டணம் ஜில்லாக்களில் பட்நாயக வமிசத்தில் சௌதரி என்ற வீட்டுப் பெயர் உள்ளவர்கள் இருக்கிறார்கள். தோம கொண்ட சமஸ்தானத் தலைவர்களும் ரெட்டி வமிசத்தினருமாகிய காமினேனியாரின் மூல புருஷனுடைய பெயர் சௌதரி; இது அவர்களுடைய வமிச சரித்திரமாகிய உமாபத்யப்யுதயம் என்னும் நூலில் காணப்படுகிறது. ஆந்திர தேசத்தில் ரெட்டிகள், கம்மவார், பட் நாயக்கர் ஆகிய இந்த மூன்று ஜாதியினரே இந்தப் பட்டத்தை உபயோகித்திருப்பதால் இவர்கள் மட்டுமே பிரசித்தியடைந்து வரி வசூல் செய்தல் முதலிய தலைமைப் பதவிகளைப் பெற்றார்கள் என்று தெரிகிறது. இந்த வரியைச் சௌதாயி வரி என்று வழங்கியதாக முன்னமே சொல்லி யிருக்கிறோம். மொகலாயர் காலத்தில் பாரத தேசம் பூராவிலும் சௌதரிப் பட்டம் பரவியிருந்ததற்கு ஆதாரங்கள் பல இருக்கின்றன. கம்மவார் எழுதுவித்த நூல்களினாலோ சாஸனங்களினாலோ கம்மவாருக்கு இந்தப் பட்டம் இருந்ததாகத் தெரியவில்லை. துர்சய கரிகால வமிசத்தினராகிய இந்தக் கம்மவார் எழுதுவித்த ஆயிரக்கணக்கான சாஸனங்களில் இந்தப் பட்டம் காணப்படவில்லை; 16–ஆம் நூற்றாண்டினர்களாகிய பெம்மஸானி, ராவிள்ளவார்கள்கூட இதை உபயோகிக்கவில்லை.[1] இவர்களுடைய சாஸனங்களில் ரெட்டி, நாயடு, நீடு, ரேடு, ராஜு

1. 18-ஆம் நூற்றாண்டினனாகிய ராஜா வாசி ரெட்டி வெங்கடாத்ரி நாயுடுகூட சௌதரிப் பட்டத்தை உபயோகித்ததற்கு ஆதாரம் இல்லை. ராவிள்ள லிங்கராஜாவுக்கு அர்ப்பணமான ஸௌகந்திகப் பிரசவாபகரணம் என்னும் நூலில் அவர்கள் பட்டங்களெல்லாம் இருந்தாலும் சௌதரிப் பட்டம் மட்டும் இல்லை.

பட்டங்களும் இவற்றுக்குச் சமமான ஸம்ஸ்கிருத பட்டங்களும் இருக்கின்றன.

வங்காளத்தில் பெரிய தனக்காரர் என்ற பொருளில் பிராம் மணர்களுக்கும் மத்திய மாகாணத்தில் ரெயில்வே காங்க் மேஸ் திரிகளுக்கும் ஐக்கிய மாகாணத்தில் கூர்ம வமிச க்ஷத்திரியர் களுக்கும் கோயரகாச்சி என்னும் குசவாக க்ஷத்திரியர்களுக்கும் காய்கறி பயிர் செய்யும் ஒரு ஜாதியாருக்கும் இடையர்களுக்கும் வெட்டியான்களுக்கும் தோட்டித் தலைவர்களுக்கும் தலைவன் என்ற பொருளில் சௌதரி அல்லது சகதரி என்ற பட்டம் வழக் கில் இன்னும் இருக்கிறது. வங்காளத்து மகம்மதியர்கள்கூட இந்தப் பட்டத்தை உபயோகிக்கிறார்கள்.

கூர்மகுல க்ஷத்திரியர்களாகிய குவாலியர் சமஸ்தானத்துச் சிந்தியாக்களும் சத்தாரா வாசிகளாகிய பழைய ராஜ குடும்பத் தாரும் நாகப்பூரைச் சேர்ந்த பழைய பான்ஸ்லேக்களும் சௌதரிப் பட்டத்தைக் கௌரவத்துக்காக உபயோகிக்கிறார்கள். கூர்ம வமிசத்தினர் மகாராஷ்டிரர் ஆக்கிரமிப்புக் காலத்தில் தோன்றியவர்களாம். சிவாஜி மகாராஜாவும் இந்த வமிசத்தைச் சேர்ந்தவர். கோரக்பூரிலும் கூர்ஜரத்திலுங் கூடக் கூர்ம வமிசத் தார் இருக்கிறார்களென்று "அயோத்தி தேச ஜாதிகள், வமிசங் கள், குலங்கள்" என்ற நூலை இயற்றிய பண்டித கார்னே எழுதி யிருக்கிறார்.[1] கூர்ம வமிசத்துப் பெரிய மனிதர்கள் சௌதரிப் பட்டத்தைக் கௌரவத்துக்காக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.[2]

---

1. Sindhia of Gwalior, the ex Raja of Satara and the ex Bhonsla of Nagpur were Kurmis or of the classes akin to them. Mr. Campbell has pointed out that the Kurmi element was the foundation of the Maharashtra power and that Sivaji and many of his chiefs were Kurmis. There are also Kurmi Rajas in Gorakpur and Gujarat. Darsan singh of Australia of this caste earned the the title of Ghalib Jang for his brave services to the Kings of Oudh and his son Jailal acquired the title of Raja during rebellion"—Carney's Races, tribes and castes of Oudh.

2. "Well to do members of these classes adopt the Honorary distinction of Chowdhari. There were formerly many and stlll are some Kurmi landed proprietors in Oudh Tupa subdivision containing more than 50 villages formerly owned by them in Fizabad."

இப்படிப் பட்டவர்கள் பலர் அயோத்தி தேசத்தில் முற்காலத்தில் இருந்தார்கள். இக்காலத்திலும் மிராஸ்தார்கள் சிலர் இக்கூர்ம வமிசத்தினரே. முற்காலத்தில் பிஜாபாத்தில் 50 கிராமத்தினர் இந்த வமிசத்தினரே என்றும் இவர் எழுதி யிருக்கிருர். இவர்கள் எந்தக் காலம் முதல் கௌதரிப் பட்டத்தை உபயோகிக்கிருர் களோ தெரியவில்லை. இந்த விஷயத்தை வைத்துக் கொண்டு பார்த்தாலும் மொகலாயர் காலத்தில் சௌத் வரி வசூலித்த மகாராஷ்டிரர் உத்தியோகச் சின்னமாக ஏற்பட்ட பட்டமே இது என்று நினைக்க இடம் இருக்கிறது. இதற்கு முன் சொன்ன விஷயங்களால் இதற்கு முந்திய காலத்திலேயே சௌதரிப் பட்டம் இருந்த தென்பது விளங்குகிறது.

கூர்மகுல க்ஷத்திரியர் எனப்படும் மகாராஷ்டிரர்களையே சூரிய வமிசத்தின ரென்றும் கூர்ம குலத்திலிருந்தே கம்மவார் தோன்றின ரென்றும் நம்மவர் சிலர் தர்க்கிக்கிருர்கள். அவர்களும் கம்மவாரைப் போலவே ஒரு வேளை சூரிய வமிசம் அல்லது சூரியனைத் தொழும் வமிசமாக இருக்கலாம். ஆனல் கம்மவாரின் இனத்துக்கு மூல புருஷர்களாகத் தோன்றவில்லை. ஏனென்ருல் கம்மவார் வேத காலத்திலிருந்து ஆந்திரர்களே அன்றி வேறல்லர். ஒரு வேளை மிகப் புராதனமான ஆந்திரத்திலிருந்து மகாராஷ்டிரம் தோன்றியிருந்தாலும் கூர்ம என்னும் சொல் கம்ம என்று மாறியிருக்கா தென்று தோன்றுகிறது. கூர்ம என்பது கும்மர என்ருவது மாற இடம் இருக்கிறது; கம்ம என்று மாற இட மில்லை. ஆனல் (கும்மர) குயவர்கள் கூர்ம வமிசத்திலோ சூரிய வமிசத்திலோ தோன்றியவர்கள் என்று யாரும் சொல்லவில்லை. மேலும் முன்பு சொன்ன ஜாதியார் கூர்ம வமிசத்தின ரென்று சொல்லிக் கொள்ளும்போது அவர்களுள் சிலர் மட்டும் கம்மவார் என்று சொல்லிக் கொள்கிருர்கள் என்பதை நம்ப முடியுமா? கம்ம என்னும் சொல்லின் பிறப்பைப் பற்றி முன்பே விவரித்திருக் கிறேம். இந்த மாதிரி சொல் ஆராய்ச்சிகளில் இறங்கிக் குல நிர்ணயம் செய்வது விபரீதமே ஆகும். கூர்ம குலத்தினர்கள் க்ஷத்திரியர்களே என்ருலும் தாழ்ந்த குலப் பெண்களிடம் பிறந்த காரணத்தால் அவர்கள் க்ஷத்திரியர்களாகக் கருதப்படவில்லை. விக்கிரம சகம் 1963—க்குச் சரியான கி. பி. 1907—ல் பரேஹட்டா

என்னும் கிராமத்தில் ஒரு பெரிய சபை கூட்டினார்கள். அதற்குக் காசி முதலிய இடங்களிலிருந்து பண்டிதர்கள் வந்தார்கள். கூர்ம வமிசத்தினர் க்ஷத்திரியர்களே என்றும், கூர்மர் என்றும் (ராஜா) ரிஷிகுலத்தவ ரென்றும் சிவாஜி முதலிய வீரர்களும் இந்த வமிசத்தின ரென்றும் முடிவு கட்டியதாகத் தோன்றுகிறது.[1] கம்மவாரைப் பற்றிய கதைகளிலும் புராணங்களிலும் வேத காலத்திலிருந்த கூர்ம ரிஷியின் பிரஸ்தாபம் வரவில்லை.

தௌர்வாச தேவி புராணத்தில் காணப்படும் கம்ரனைப் பற்றிக் கம்ம வமிசத்து எந்த மகாராஜாவும் தம் சாஸனங்களிலோ நூல்களிலோ குறிப்பிடவில்லை. அதேபோல் கூர்மரிஷியைப் பற்றிப் பழைய ராஜாக்கள் நினைத்ததாகச் சாஸனங்களாலோ நூல்களாலோ தெரியவில்லை. இந்தக் கூர்மரிஷி மாலா மாலினி தேவதையின் பக்தராம். இந்தத் தேவதையின் பெயராவது கம்மாவாருக்குத் தெரியுமா? கனவிலுங்கூடத் தெரியாதென்றுதான் சொல்லவேண்டும். இந்தக் கூர்மரிஷி ஹைஹய வமிசத்தில் பிறந்ததாகச் சில கதைகள் இருக்கின்றன.[2] ஆனால் சரித்திர பூர்வமான ஆதாரங்கள் இன்னும் கிடைக்கவில்லை. வேதத்தில் கூர்ம என்ற சொல்லுக்குச் சூரியன் என்ற பொருள் இருக்கிறது.[3] கூர்ம வமிசத்தினர் பலர் தாம் சூரிய வமிசத்தின ரென்றே பல நூல்களில் எழுதுவித்திருக்கிறார்கள்.[4]

ஆனாலும் இதுபோன்ற ஊகங்களால் எங்கோ இருக்கும் கூர்ம க்ஷத்திரியர்களுக்கும் நமக்கும் முடிபோட்டுக் கொள்வதில் பிரயோஜனம் இல்லை. அவர்கள் ஒருவேளை சூரிய வமிசத்தின் ஒரு கிளையினராக இருக்கலாம்; அல்லது சந்திர வமிசத்து

---

1. கம்ர மகாராஜா பத்ரிகா 1936—37 பார்க்க.

2. கிருத்ஸமரிஷியின் குமாரர் கூர்மரிஷி கிருக்தம் (ருக்வேதம்) தைவத காண்டத்தில் இருக்கிறது. மகாபாரதத்தில் அநுஸாஸனிகபர்வம் 60-ஆம் அத்தியாயத்தில் அந்தக் கிருத்ஸமரிஷி ஹைஹய வமிசத்தின ரென்று இருக்கிறது.

3. "ஸ்ருப் ஸ்யஹ கூர்மோவை ஸ ஆதித்ய"—ஸதபதப் பிராம்மணம்—அத். 7-5.

4. ஐயார்த்தப் பிரகாசிகை 3-ஆம் பாகம் பார்க்க.

ஹைஹய வமிசத்தின் ஒரு பிரிவினராக இருக்கலாம். ஆனால் கம்மவார் கூர்ம வமிசத்தைச் சேர்ந்தவர்களென்று சொல்ல முடியாது. அவர்களுடைய தாய் பாஷையே வேறு. ஹைஹய வமிசத்தின ரென்று சொல்லிக் கொண்ட கோனசீமை அரசர்கள் கம்மவாரானாலும் அவர்கள் கூர்ம ரிஷி வமிசத்திலிருந்து மிகப் பழைய காலத்திலேயே பிரிந்திருக்க வேண்டும்.

இந்தக் கூர்மகுல வரலாறு விரிவாகப் பின்னால் வருகிறது. இங்கே அதை விட்டுவிட்டு இதுவரையில் நிச்சயமாகத் தெரிந்த விஷயங்களால் கம்மவார் துர்ஜய கரிகாலக் குலத்துச் சோழர்களென்றும் அவர்களுடைய பந்துக்களென்றுமே நம்ப வேண்டியிருக்கிறது. சௌதரி என்ற பட்டம் எந்தக் காலத்தில் எந்தப் பாஷையில் தோன்றியிருந்தாலும் யாராரோ முதலில் உபயோகித்திருந்தாலும்[1] மகாராஷ்டிரர்களோ பின் வந்த தலைவர்களோ ஏற்படுத்திய பட்டந்தான் இது. கிராமத்தில் வரி வசூல் செய்து முற்காலத்தில் (18-19-ஆம் நூற்றாண்டுகளில்) முறையாக ஆண்டு வந்த பெரிய தனக்காரர்கள் அல்லது தலைவர்கள் எந்தக் குலத்தாராக இருந்தாலும் அவர்களுக்கு இந்தப் பட்டத்தை அதிகார பூர்வமாகக் கொடுத்திருந்தார்கள். இது தெலுங்கு தேசத்தில் மட்டுமல்லாமல் வேறு பல இடங்களிலும் பல ஜாதியாருக்கும் வழங்கப்பட்டதற்கு இதுதான் காரணம். இது கம்மவாரின் குலப் பெயரன்று; பழைய காலத்திலிருந்து இருப்பதும் அன்று. ஜமீன்தார், தேஷ்முக், தேஷ்பாண்டே என்பவற்றைப்போல் சௌதரிப் பட்டமும் ஓர் உத்தியோகச் சின்னமே என்பதற்கு ஆதாரம் இந்தப் பட்டம் நைஜாம் சுபேதார் தாக்கீதுகளில் காணப்படுவதாகும். இப்போது ஆள்பவர்கள் இந்தச் சுபேதார்களே. அவற்றில் ஒன்றை உதாரணமாகக் காண்பித்தால் இந்த விஷயத்தைப் பற்றி இங்கே விவரிக்க வேண்டிய அவசியம்

---

1. பல்நாட்டு யுத்த காலத்துக்கு முன் இருந்த ராமி ரெட்டி சௌதரிப் பட்டத்தை விட்டுப் பெயராக உபயோகித்திருப்பதால் இது தெலுங்குப் பாஷையில் உண்டானதென்று சொல்லலாம். ஆனால் இதற்கு முன்பே இதை வேறு பாஷைக்காரர்கள் உபயோகித்திருக்கிறார்களா இல்லையா என்பதை நிர்ணயித்தாலொழிய இதை நிரூபிக்க முடியாது. வருங்காலத்து ஆராய்ச்சியாளர்களே இதை நிச்சயிக்க வேண்டும்.

இருக்காது.[1] 15-ஆம் நூற்றூண்டுக்கு முந்திய சாஸனங்கள் சில வற்றில் கவிஞர் சிலர் சௌரி என்னும் கௌரவப் பட்டத்தைச் சேர்த்ததாகக் காணப்பட்டாலும் அதிலிருந்து சௌதரிப் பட்டம் தோன்றிய தென்று சொல்ல முடியாது. முகம்மதியர் பிரதாப ருத் திரனுடைய ராஜ்யத்தை ஸ்வாதீனப் படுத்திக் கொண்ட பின் ஸாகி கன்ன மந்திரி குடும்பத்தினரும் வேறு சிலரும் முகம்மதிய மதத்தில் சேர்ந்து விட்டதாகப் புதிய ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆனால் இவர்களாலேயே சௌதரிப் பட்டம் மகம்மதியர்களுக்குள் தோன்றிய தென்று சொல்ல முடியாது. இவர்கள் சௌதரிப் பட்டம் தரித்ததற்கு ஆதாரம் இல்லை. இந்தப் பட்டம் ஜமீன்தார் பட்டத்தை விடக் குறைந்த தென்பது நன்றாக விளங்குகிறதல்லவா?

## கம்மவார் என்னும் சொல்லின் பிறப்பு

கி. பி. பத்தாம் நூற்றூண்டு முதல் கம்ம பிராம்மணர்களும், கம்ம கோமட்டிகளும் இருந்ததாகச் சில சாஸன ஆதாரங்களை முன்பே காண்பித்திருக்கிறேன். இப்படி கம்மவார் என்னும் பெயரோடு கூடியவர்கள் நான்கு ஜாதிகளிலும் இருந்ததாக தர்மநந்தன விலாஸம் என்னும் நூலில் தெளிவாகக் காணப்படு கிறது.[2] தெலுங்கு தேசம் முதலில் கர்மராஷ்டிரமாக இருந்தது,

---

1. Translation of a Sannad under the seal and signature of the Nawab Ausufquagn Nizamulmulk Nizamud Doulat Meer Nizam Alikhan Bahadar Phitee Jung Sepah Salahar Eyaur Vauphaudor.

"To the Naiks present and future, thr Dasamokus, Muzumdars, Zamindars, Chodhars. Ryots and Coolkurnees of the Rajamundry circar depending on the Soubah of Hyderabad, it is written at this time Kandregnia Ramjee, Jogee Pundit and Venkatarao... ... written the 24th of Toe great Shaban 1178 of the Hejery's (Extract from J. A. H. R. S. Vol. IV: P. 129).

2. 18-ஆம் நூற்றூண்டில் காள்ள கூரி கௌரி காந்த கவி இதை இயற்றினர். கஜபதி அரசர்களின் சேனாதிபதியும், பண்டுபல்லிபுரத் தலைவனும், கம்ம குலத்தவனும் ஆகிய வெலிசேடி கூராயுடு என்பவருக்கு இதைச் சமர்ப் பணம் செய்திருக்கிறார். தர்மநந்தன விலாஸம் இன்னும் அச்சிடப்படவில்லை. அந்நூலில் இந்த பத்யம் இருக்கிறது.

கம்மனிவில்து வையகுமுகம் முனபாஹாால நாருபாதபத்
மம்முல பிராம்மணுதுலு க்ரமம் முனபுட்டிரி பேததர்முலை
கம்மலனங்க பிராம்மணுலு க்ஷத்திரியு லார்யுலு சூத்ருவாந்திரதே
சம்முன முண்டரூத்ருலு பிரசம்சகு கெக்கிரியந்து கம்மலே.

(கலிங்க சரித்திரம் பக்கம் 154—155. ஸ்ரீ அடிதம் ராமாராவின் வியா ஸத்திலிருந்து).

இதன் விகாரமே கம்ம ராஷ்டிரம் ஆயிற்று; இதற்குள்ளடங்கிய பகுதியே கம்ம நாடு என்றும் சொல்லி யிருக்கிறேன். முதலில் கம்ம நாட்டிலிருந்து பிறகு வேறு பிரதேசங்களுக்குச் சென்றவர்கள் எல்லோரையும் கம்மநாட்டுவார், கம்மவார் என்று அழைத்தார்கள் என்று ஊகிக்கலாம். எல்லா ஜாதிகளிலும் கம்மவார் இருந்ததற்கு அதுதான் காரணம். ஆனால் இதை இப்படியே நிர்ணயித்துவிட முடியாது. கர்ம என்ற சொல்லிலிருந்து கம்ம என்று தோன்றியதாக சாஸன ஆதாரங்கள் ஒருபுறம் இருக்கின்றன. கூர்ம என்ற சொல்லிலிருந்து கூம்பி, கூம்மி, கம்ம என்று மாறி யிருக்கலாம் என்று சில பண்டிதர்கள் நினைக்கிறார்கள். கூர்ம என்பதைப் பற்றி பின்னால் சொல்லுகிறோம்.

கர்ம என்னும் சொல்லை விட்டுவிட்டு வார் என்னும் சொல் எப்படி வந்தது என்று பார்ப்போம். வாடு (அவன்) என்பதன் பன்மைச் சொல் வாரு என்று 8.9 நூற்றாண்டுகளிலிருந்து வழக்கிலிருக்கிறது. அந்தக் காலத்திய விஷ்ணுவர்த்தனனுடைய அஹதனகர சாஸனத்திலும் இதைப் பற்றிய பிரஸ்தாபம் இருக்கிறது. (ஆந்திர பாஷா சரித்திரம் பார்க்க).

ஆனால் "வார்" என்னும் சொல் தெலுங்கு பாஷைச் சொல் அன்று என்றும், உருது பாஷைச் சொல் என்றும் டாக்டர் ஸ்ரீ சிலுகூரி நாராயண ராவ் அவர்கள் அபிப்ராயப்படுகிறார். (ஆந்திர பாஷா சரித்திரம்). வாரு அல்லது வார் எந்தப் பாஷைச் சொல்லாய் இருந்தாலும் கம்ம நாட்டினர் மற்ற பிரதேசங்களுக்கு போன காலத்தில் கம்ம நாட்டுவார், கம்மவார் என்ற பெயர்கள் வந்திருக்கலாம். இது நடந்திருக்கக் கூடியதே. குண்டூர், நெல்லூர்ப் பிரதேசங்களுக்கு முற்காலத்தில் கம்ம நாடு என்ற பெயர் இருந்தது. அக்காலத்தில் ராஜ சேவை செய்த கம்மவார்களே சேனாதிபதிகளாகவும், சைனிகர்களாகவும் மற்ற ராஜ்யங்களுக்கு படையெடுப்புக் காலங்களில் போய்க் கொண்டிருந்ததாக சரித்திரம் கூறுகிறது. தமிழ் நாட்டில் இன்றைக்கும் 'போடா கம்மனாட்டி' என்று திட்டுவதும் வழக்கம் இருக்கிறது. இது ஒருவனை மிகக் கேவலப்படுத்தும் வசவு. முற்காலத்தில் கம்ம நாட்டுவார் இந்தப் பிரதேசங்களுக்கு எல்லாம் போய் அதிகாரம்

11

செலுத்தி இருந்தாலொழிய இந்தமாதிரி திட்டும் வழக்கம் இருந்திருக்காது. இவர்கள் அந்த நாடுகளை யுத்தத்தில் வசப்படுத்திக் கொண்டிருப்பார்கள். அதனல் அந்தப் பிரதேசத்தார் கம்ம நாட்டிவார், கம்மவார் என்று அவர்கள் சொல்லி அப்பெயர் தெலுங்கு தேசத்திலும் பரவி யிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

இன்னொரு காரணத்தாலும் வாரு என்ற சொல்லுடன் சேர்ந்த கம்ம என்பது நாட்டுக்குச் சம்மந்தப்பட்டே வந்திருக்கிறது என்று சொல்லலாம். கம்ம குலத்தினருக்கு கம்மவார் என்ற பெயர் வந்தது போல மற்ற குலத்தினருக்கும் பிராம்மணவார், க்ஷத்திரியவாா, வைசியவார், சூத்திரவார் என்ற பெயர்கள் தெலுங்கில் வழக்கத்திலில்லை. வாரு என்பது தெலுங்குச் சொல். அதனல் கம்ம என்னும் தெலுங்குப் பதத்துடன் அது கலந்தது. பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்பவை வடமொழிச் சொற்கள். அதனல் அவற்றுடன் தெலுங்குச் சொல்லாகிய வாரு சேரவில்லை என்ற தர்க்கத்தையும் கவனிக்க வேண்டியதுதான். ஆனல் கம்மநாட்டுவார் ஆனதால் கம்மவார் ஆயினர் என்பதற்கு எதுவும் குறுக்கே வராது. இந்தமட்டோடு இந்த விஷயத்தைத் தீர்மானிக்க முடியாது. ஏனென்றல் இந்தக் குலத்திற்கு உரிய கம்ம என்னும் சொல்லைப் பற்றி பல கதைகள் உள்ளன. அவற்றை வரிசையாகச் சொல்லுகிறேன்.

(1) முற்காலத்தில் காமாதிகரிஷி என்பவர் தவம் செய்தார். அரக்கர்கள் அவருடைய தபத்தைக் கெடுக்க முயன்றனர். ருஷி லக்ஷ்மி தேவியிடம் முறையிட்டார். லக்ஷ்மிதேவி அவருக்குத் தன் காதோலையைக் கொடுத்தாள். (கம்ம என்றல் ஓலை). அதிலிருந்து 500 பேர் தோன்றி அரக்கர்களை அழித்தார்கள். லெக்ஷ்மி தேவியின் காதோலையிலிருந்து வந்தவர்களே கம்மவார். இந்தக் கதை சித்தூர் ஜில்லா மான்யுவலில் காணப்படுகிறது.

(2) சந்திர வம்சத்தில் யயாதியின் சந்ததியில் துகினன் என்பவன் பிறந்தான். அவனுக்குத் தாழ்ந்த குலத்துப் பெண்ணுடன் நந்தன் என்பவன் பிறந்தான். அவனை உலகத்தார் பல

விதமாகத் தூஷித்தார்கள். அவன் அந்த அவமானம் பொறுக்க முடியாமல் தேசாந்திரம் போகப் புறப்பட்டான். வட பெண்ணை நதிக் கரைக்கு வந்து அதைத் தாண்ட விரும்பி ரேணுகா தேவியை வேண்டினன். ரேணுகாதேவி தன் காதோலை ஜோடியை அவனுக்குக் கொடுத்தாள்.[1] அவனுடைய சந்ததியாரே கம்மவார். இவர்களுடைய குலகுரு பலபத்ர பாஸ்கரையா என்பவர், என்று தமிழில் இருக்கும் கம்மவார் புராணத்தில் காணப்படுகிறது.

(3) சூரிய வமிசத்து திலீப ராஜனுடைய லட்ச சந்ததியில் பிறந்து சந்திர வமிசத்தினருடன் சம்பந்தம் செய்ததால் இவர்களுக்கு 'உபயானர்' என்னும் பெயர் வந்தது. இவர்களுக்கு மூல புருஷன் தருமபாலன். இவர்களுடைய ஆதிகுரு தருமசீலன் என்பவர். தருமபாலனுடைய மகளைச் சந்திர வமிசத்தினன் ஒருவன் அபகரிக்க முயன்றான். அவனுடைய தொல்லை பொறுக்காமல் தருமபாலன் வட பெண்ணை நதியைத் தாண்டிப் போக வந்தான். அங்கே ஜமதக்னி, ரேணுகாதேவி, பரசுராமன் இவர்களைப் பூசித்தான். ரேணுகாதேவி காதோலைகளை (கம்மலு)க் கொடுத்தாள். அவற்றின் மகிமையால் நதியைத் தாண்டி வேறோரிடத்தில் பெண்ணுக்கு மணம் செய்வித்தான். அவனுடைய சந்ததியாரே கம்மவார். பிரம்மாண்ட புராணத்தில் ஒரு கதை இப்படிச் சொல்லுகிறது. இதைப் பலிஜ புராணத்திலும் எழுதி யிருக்கிறார்கள்.[2]

(4) தெலுங்கு தேசத்தில் மகம்மதியர் படை யெடுத்தபோது சிலர் வட பெண்ணையைத் தாண்ட முயன்றார்கள். கங்கையை உத்தேசித்துப் பூசை செய்தார்கள். அதனால் இவர்கள் விவாக காலத்தில் கங்கையைப் பூசை செய்வார்கள். முதலில் இவர்கள் துவரைச் செடி மறைவில் ஒளிந்து கொண்டார்கள். அதனால் கலியாண காலங்களில் பந்தலில் துவரைச் செடி கட்டும் வழக்கம் உண்டு.

---

1. சிராலா என்னும் ஊரில் இப்பொழுதும் ரேணுகாதேவி பூஜை நடக்கிறது. இந்த ஊர் கம்ம நாட்டின் ஒரு பகுதியாகவே இருந்தது. இந்த ஊரார் கண்டிக்கோட்டை பிரதேசத்துக்கு (வட பெண்ணை நதிக் கரைக்கு) குடி போய் அங்கிருந்து மேலும் தெற்கே சென்றனர். கம்ம நாட்டுவார், கம்மவார் என்பதைவிட இந்தக் கட்டுக் கதை பிறந்தது என்று நினைத்துக் கற்பனை செய்திருக்கலாம்.

2. இந்தக் கதை, 'The aristocracy of Southern India' by Mr. A. Vadivel என்ற நூலில் விவரமாகக் காணலாம்.

இப்படியெல்லாம் ஒரு கதை சொல்லுகிறது. இந்த வழக்கங்கள் எங்கே நடக்கின்றனவோ தெரியாது. வட சர்க்காரில் இவை நடப்பதில்லை.

5. தௌர்வாஸ தேவீ புராணத்தில் சந்திர குலத்தில் கம்ரன் என்பவனுக்குப் பிறந்தவர் கம்மவார் என்று காணப் படுகிறது.

6. பிரதாபருத்திர மகாராஜாவின் ஓலை (கம்ம) ஒன்றை எதிரி அரசர்கள் அபகரித்துக் கொண்டு போய்விட்டார்கள். தைரியமாக அவர்களிடம் போய் அதை மீட்டவர்கள் கம்மவா ராகவும் கொண்டுவர முடியாதவர்கள் வெலமவாராகவும் ஆனார் கள். இந்த விஷயம் சர்க்காரின் 1891-ஆம் வருஷ ஜனசங்கியை அறிக்கையில் காணப்படுகிறது.[1]

8. கிருஷ்ணதேவராயர் காலத்தில் பிற ராஜ்யங்களுக்கு ஓலை கொண்டு போய்க் கொடுத்து வந்தவர்களைக் கம்மவார் என்றார்கள். இந்த விஷயம் "ப்ரௌடப் பிரபந்தம்" என்ற நூலில் காணப்படுகிறது.

8. வீரநரசிம்மராயர் காலத்தில் பெண்களுக்குக் கோஷா வேண்டாம் என்ற ஓலையில் கையெழுத்திட்டவர்கள் கம்மவாராக வும் இடாதவர்கள் வெலமவாராகவும் ஆனார்கள்.[2] 15-ஆம் நூற் றுண்டுக்கு முந்திய எந்தச் சாஸனத்திலும் கம்மவார் என்ற பெயரே இல்லை என்பதை முன்பே கண்டோம்.

சித்தூர் ஜில்லா மான்யுவல், கம்மவாரைப் பற்றிய தமிழ்ப் புராணம், பிரம்மாண்ட புராணம் இவைகளிலிருந்து எடுத்துக் காட்டிய கதைகள் உண்மை என்பதற்கு இதுவரையில் ஆதாரம் கிடைக்கவில்லை. அதுமட்டும் அன்று; அந்தக் காலத்தில் கம்ம வார் என்னும் ஜாதியாரே இல்லை என்பது சரித்திரங்கள் மூலம் விளங்கும்போது மேலே சொன்ன கதைகளை எப்படி அங்கீகரிக்க முடியும்? தௌர்வாஸ புராணத்துக் கம்ரனைப் பற்றிய கதையும்

1. இந்தக் கதை, "The aristocracy of Southern India" by Mr. A. Vadivel என்ற நூலில் விவரமாகக் காணலாம்.

2. இந்த விஷயம் சித்தூர் ஜில்லா மான்யுவலில் வெலமவாரைப் பற்றிச் சொல்லுமிடத்தில் காணப்படுகிறது.

வேறெங்கும் காணப்படவில்லை. சாஸனங்களிலோ மற்ற நூல்களிலோ காணப்படாத இந்தக் கம்ரன் கற்பனை மனிதன் என்றே தோன்றுகிறது. இவற்றைத் தள்ளிவிட்டால் சரித்திரக் கதைகள் மூன்று மிஞ்சுகின்றன. மிரௌடப் பிரபந்தத்தில் சொன்னபடி கிருஷ்ணதேவராயர் காலத்தில் கம்மவார் தோன்றினர்கள் என்பதைப் பற்றியும் வீரநரசிம்மராயர் காலத்தில் கோஷா முறையை விட்டவர்கள் கம்மவார் ஆனார்கள் என்பதைப்பற்றியும் சொல்லும் சித்தூர் ஜில்லா மான்யுவலைப் பற்றிக் கொஞ்சம் ஆராயவேண்டி யிருக்கிறது. கிருஷ்ணராஜ விஜயம் என்னும் நூல் தோன்றிய காலத்திலேயே க்ஷத்திரியர்கள், கம்மவார், வெலமவார் மூவரும் தனித் தனிப் பிரிவுகளாக இருந்தார்கள் என்பதாகக் கீழே காணும் பத்தியம் விளக்குகிறது :

> " வறலு கருலொக ரெண்டுவே லரசிகுட
> ராஜ¬லுனு வெலமலுங் கம்ம பிரஜலு கனுலு
> கலுகு ராயலதோ பேரி கெலுவ மனகு
> வசமெ யைன குதாயுன்ன வாடடஞ்சு."

மற்றோரிடத்தில் :

> " அநுசும் பல்லெமு கேல பூனுகொனி சௌர்யா ரூடுலென கம்மவார்
> வெருவென்டன்......................".

இவற்றால் கம்மவார் கிருஷ்ணதேவராயர் காலத்திலேயே பிரசித்தி அடைந்திருந்தார்களென்று தெரிகிறது.[1]

கிருஷ்ணதேவராயரும் வீரநரசிம்மதேவராயரும் 15—16-ஆம் நூற்றாண்டினர். அதற்கு முன்பே கம்மவாரும் வெலமவாரும் இருந்ததாக இனிமேல் விளக்குவோம். எனவே இவர்கள் காலத்தில் தான் அவர்கள் தோன்றினர்க ளென்பது சரியல்ல. பிரதாபருத்திரன் காலத்தில் எதிரிகளிடமிருந்து ஓலையை மீட்டவர்களே கம்மவார் என்ற ஒரு வரலாறே மிகுந்திருக்கிறது. இந்தப் பிரதாபருத்திரன் முதல் பிரதாபருத்திர தேவனு இரண்டாம்

1. கிருஷ்ணதேவராயர் காலத்தில் (சுமார் கி. பி. 1500) ரவெலமல்ல ராஜனைப் பற்றிய தனிப் பாடல் ஒன்று :

> " அல்லவெ கம்ம மூக்கலட்ட ஞவல ராவென வ்ச சந்த்ருடென,
> மல்லயபூப துர்ப்பர சமக்ரபலம்புலு மண்ட லாக்ர முல்."

வீரப் பிரதாபருத்திர தேவனு என்பது தெரியவில்லை. இவர்கள் முறையே 12–14-ம் நூற்றூண்டுகளில் தெலுங்கு தேசத்தை ஆண்டவர்கள். இரண்டாம் பிரதாபருத்திரன் காலத்திலேயே வெலமவார் இருந்ததாக, சா. ச. 1233–ம் வருஷத்து மேள்ள செருவு சாஸனத்தால் (தெலிங்கான சாஸனம் பக். 92) தெரிகிறது. மேள்ளச் செருவிலிருக்கும் ஸ்ரீ சுயம்பு தேவருக்கு வெலமவார் பூதானங்கள் செய்ததாக அந்தச் சாஸனம் சொல்லுகிறது. காகதி கணபதிதேவ சக்கரவர்த்தியின் காலத்திலேயே (அதாவது கி. பி. 1198-1261 வருஷங்களுக்கிடையில்) வெலமவார் இருந்ததாகப் பத்மநாயக்க சரித்திரத்தால் தெரிகிறது.[1] இதனுல் அக்காலத்திலேயே வெலமவார் பிரசித்தி பெற்றிருந்ததாகத் தெரிகிறது. சா. ச. 1072; கி. பி. 1150 காலத்திலேயே வெலமபல்லெ (ஊர்) ஒன்று இருந்ததாக ஸ்ரீ பீமேச்வரர் கோயிற் சாஸனம் ஒன்று சொல்லுகிறது.[2] இந்த ஜாதிப் பெயர் புதியதாக இருந்தால் அவ்வளவு சீக்கிரத்தில் சாஸனங்களில் எழுதி யிருக்க மாட்டார்கள். இதற்கு முந்திய சாஸனங்களில் கம்மவார், வெலமவார் என்ற பெயர்கள் காணப்படவில்லை. அதனுல் இதற்கு வெகுகாலத்துக்கு முன் இந்த ஜாதிகள் இருந்திருக்க முடியாது. முன் சொன்னபடி முதல் பிரதாபருத்திரன் காலத்தை யொட்டியே இந்த ஜாதிகள் ஏற்பட்டிருக்க வேண்டும். பல்நாட்டு யுத்தத்தின்போது வெலமவார் இருந்ததாக முன்பு எழுதி யிருக்கிறேம். இது முதல் பிரதாபருத்திரனுடைய காலத்தில் நடந்தது. அதற்குமுன், 12-ஆம் நூற்றூண்டில் வெலமவார் தோன்றியிருக்க வேண்டும். இந்தக் கொள்கையை பத்மநாயக்க சரித்திரம் பலப்படுத்துகிறது. இருந்தாலும் மேலே படித்த கதைகளை ஒன்று சேர்த்துப் பார்த்தால் ஒன்று விளங்கும். கம்மவார் சூரிய சந்திர வமிசத்தவர்; இவர்களில் சிலர் வடபெண்ணைக் கரையில் வசித்தனர் என்பதே அது. இந்த நதி கண்டி கோட்டைப் பிரதேசத்தில் ஓடுகிறது. சரித்திர ரீதியாக இதற்கு ஆக்ஷேபம் இல்லை. இதுபோல, தௌர்வாச தேவீ புராணத்துக் கம்ரன் விஷயம்

---

1. "கடிதேரி காகதி கணபதி கொலிசியு, விலஸேனு பிரபுவு வீவெலமவாரு"—பத்ம நாயக்க சரித்திரம்.
2. S. I. I. Vol. VI. No. 1102.

எப்படி யிருந்தாலும், கம்மவார் சூரிய சந்திர வமிசத்தினர். பிரதாபருத்திரனும் இவ்வமிசத்தினனே என்ற, அந்நூலின் சாரத்தை மட்டும் எடுத்துக் கொள்வோம்; கம்மவாரில் சிலர் சந்திர வமிசத்தினர் என்று சரித்திரச் செய்தி இருப்பதால் அதை ஒப்புக் கொள்ளலாம். லக்ஷ்மி தேவியும் ரேணுகா தேவியும் காதோலை கொடுத்த கதைகள் சுத்தப் புரட்டு என்றே சொல்ல வேண்டும்.[1] பலிஜவார் தமது பெருமை உயர்த்திக் கொள்ள, கௌரீ புராணம் எழுதியதுபோல் அந்தக் கதைகளும் எழுந்தவை. இவர்கள் வீர பலிஜ மதத்தில் சேர்ந்த பின் இதை எழுதி யிருப் பார்கள். வீர வைஷ்ணவம் முதலிய மதம் காரணமாகக் கம்ம வாரும் வெலமவாரும் வேறுபட்டதாகவும் இந்த மதமாற்றம் சுமார் பல்காட்டு யுத்த காலத்தில் நடந்த தென்றும் முன்பே சொன்னோம். இந்த யுத்தம் 12-ஆம் நூற்றாண்டில் நடந்த தென்று சரித்திராசிரியர்கள் எழுதி யிருக்கிறார்கள்.[2] அப்பொழுது பிரிந்த இந்த ஜாதியினரைப் பிற்காலத்தில் பிரிந்ததாகச் சொல் லும் கதைகளை நம்ப முடியாது. அதனால், மேலே கண்ட கதை கள் ஆதாரம் அற்றவை; கம்மநாட்டு க்ஷத்திரியர்கள் கம்மவார்; வீர வைஷ்ணவ மதத்தில் புகுந்ததால் இந்த ஜாதியிலிருந்து வெளியேற்றப்பட்டவர் வெலமவார்: அந்தக் காலத்திலேயே கம்ம நாட்டினருக்குக் கம்மவார் என்ற பெயர் வந்தது, என் பவற்றை உறுதியாக நம்பவேண்டும். இந்தப் பெயர் கி.பி 1000 வருஷ வாக்கில் ஏற்பட்டு முதல் பிரதாபருத்திரன் காலத்தில் தீர்மானமாக அமலுக்கு வந்திருக்கு மென்று முடிவா கிறது. அமராவதி ராம கவி 'திரௌபதி பரிணயம்' என்ற நூலை எழுதினார். அதில் வாசி ரெட்டி அரசர்களைப் பற்றி, (முக்த்யால சம்ஸ்தானதிபதிகள்) 'அவர்கள் மகா விஷ்ணுவின் பாதத்தில் கங்கையோடு கூடப் பிறந்தவர்கள்' என்று எழுதியதோடு, கம்ம வார் என்னும் பெயர் வந்ததற்குக் காரணம் காட்டுவதையும் பாருங்கள்:

---

1. பலிஜ என்பவனுக்குக் கம்ம பலிஜ, காப்பு பலிஜ, வெலம பலிஜ, செட்டி பலிஜ என்று பதினெட்டு ஜாதியினர் பிறந்ததாக எழுதிய செய்தி நம்பத் தகுந்தது அல்ல.

2. ஆந்திரர் சரித்திரம் V-ஆம் பாகம் பக். 170.

“ அம்மநுஜித் பதோத்பவ குலாட்யுலலோ ஜெககொந்த ராத்மபா
க்யம்முன கல்மி கம்மதன மந்துட்ட தானமனீஷ விப்ஸிதார்த்
தம்முல வித்து மர்த்திதகி ரம்மனி கம்மலிகிஞ்சி ஸர்வதே
ஸம்முல கம்புடன் தரணி ஸன்னுதி கெக்கிரிகம்ம வாரனன் ”

இந்த நூல் 18-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இதில் வரும் விஷயத்துக்கு ஆசிரியர் ஆதாரம் காட்டவில்லை. ஆகையால் இதற்குச் சரித்திரபூர்வமான மதிப்புக் கொடுக்க முடியாது. பக்தி பரவசத்தினால் சில ஜாதியார் விஷ்ணு பாதத்தில் பிறந்தோம் என்று சொல்லிக் கொண்டார்கள்.[1] வைதிக மதம் பரவிய காலத்தில் பிரம்மாவின் பாதத்திலிருந்து பிறந்ததாகச் சிலர் எழுதிக் கொண்டார்கள். இதுபோலவே மேலே சொன்ன விஷயத்தையும் எழுதியிருக்கலாம். கம்மவார் என்ற பெயர் வரக் காரணமாகிய கதைகளில் மற்றொரு முக்கிய வாதமும் இருக்கிறது. சூரிய வமிசத்திலோ சந்திர வமிசத்திலோ பிறந்த கூர்ம ரிஷியின் சந்ததியார் ஆகிய கூர்ம வமிச க்ஷத்திரியர்கள் சிலர் காலக்கிரமத்தில் கம்ம என்ற குலப் பெயரை வைத்துக் கொண்டார்கள்.[2] இந்த விஷயத்தைப் பற்றிச் சௌத்ரி என்ற தலைப்பில் சிறிது ஆராய்ந்திருக்கிறோம். கூர்ம என்பதிலிருந்தே கம்ம என்ற பெயர் வந்திருந்தால் கூர்ம வமிச க்ஷத்திரியர்களுக்குக் கம்ம என்ற பெயர் வந்திருக்க வேண்டும். சரித்திர பூர்வமாக அப்படி இருந்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால் கி. பி. சுமார் 1000-த்திலிருந்து கம்ம என்ற பெயரை க்ஷத்திரியர்கள் மட்டுமன்றி பிராம்மணர்களும் வைசியர்களும்கூட உபயோகித்ததாக சாஸன ஆதாரங்கள் இருக்கின்றன. அவற்றால் கம்மவாருக்கு வந்த இந்தப் பெயர் அக்காலத்து ஆந்திர தேசப் பகுதி என்று கருதப்பட்ட கம்ம ராஷ்டிரம், கம்மநாடு என்பவற்றால் வந்தவை என்றே தீர்மானமாகச் சொல்லலாம். கம்ம நாட்டின் எல்லா ஜாதியாரும் கம்ம என்ற பதத்தை உபயோகித்திருக்கிறார்கள் அல்லவா?

---

1. சாம்ப நிகண்டு ஆசிரியர் இதற்கு ஆதாரம் கற்பித்திருக்கிறார்: “கலப்பையைப் பிடித்தவர்கள், கடைசிக் குலத்தில் நிறமையுள்ளவர்கள், காப்புகள், கங்கையின் கூடப் பிறந்தவர்கள் ஆகிய இவர்கள் சூத்திரர்கள்” என்கிறார். நிகண்டு ஆசிரியர்கள் இப்படி எழுதியிருக்கும்போது மற்றவர்கள் இதை நிச்சயமாக நம்பித்தான் இருப்பார்கள். ஆனால் இது சரித்திர ஆதாரம் ஆகாது.

2. ஐயார்த்தப் பிரகாசிகை மூன்றும் பாகம் பார்க்க.

18—ஆம் நூற்றாண்டு வரைக்கும் நான்கு ஜாதிகளிலும் கம்மவார் இருந்ததாக "தர்ம நந்தன விலாசம்" என்னும் நூல் சொல்லுகிறது. ஆகையால் கம்மவார் என்ற பெயர் கம்ம நாட்டார் என்று பொருள்படும் பெயரே.

## கும்பினிகள் கம்மவார் ஆனூர்களா ?

கும்பினிகள் அல்லது கும்பிகள் என்றும், கூர்ம வமிசத்தினர் என்றும், மராட்டியர் அல்லது மகாராஷ்டிரர் என்றும் மகா ராஷ்டிர தேசத்தில் பல ஜாதியார் இருக்கிறார்கள். இவர்களில் கூர்ம வமிசத்தினர் சிலர் தங்களைச் சூரிய வமிசத்தின ரென்றும் கூர்மரிஷி வமிசத்தின ரென்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். கும்பி என்பவர்கள் ஆந்திர தேசத்துக் காப்புக்களைப் போன்றவர்கள் ; விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்டவர்கள் ; மராட்டியரைவிட ஆண்மை வாய்ந்தவர்கள், இம்மூன்று ஜாதியாரும் சம்பந்தம் செய்து கொண்டு இப்போது மராட்டியர் என்று சொல்லிக் கொள்கிறார்கள். "கூர்மரிஷி வேத காலத்திலிருந்தவர்; ஹைஹய வமிசத்தினர்; இந்த வமிசத்தினர் சிலர் சௌதரிப் பட்டம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் கம்மவார் இந்த இனத்தவரே" என்று பண்டிதர்கள் சிலர் சொல்கிறார்கள். ஆந்திர தேசத்து வெலமவாரைப் போலக் கொங்கண தேசத்தில் இந்தக் கும்பினிகள் கீர்த்தி பெற்றவர்கள். கம்மவார் கும்பி வமிசத்தினரா என்பதை முடிவுகட்ட இன்னும் சில விஷயங்களை ஆராயவேண்டி இருக்கிறது. கம்மவாரில் இப்பொழுது சுமார் 1000 வீட்டுப் பெயர்கள் இருக்கின்றன. கும்பிகளுக்கு 292 வீட்டுப் பெயர்களே இருக்கின்றன. இவை புனைவைச் சார்ந்த கும்பிகளுடையவை. இவர்களுடைய வீட்டுப் பெயர்களில் 102 சந்திர வமிசத்தினருடையவை, 78 சூரிய வமிசத்தினருடையவை, 81 வீட்டுப் பெயருடையவர்கள் பிரம வமிசத்தினர் என்று சொல்லிக் கொள்கிறார்கள். மிகுந்த 99 வீட்டுப் பெயருள்ளவர்கள் கலப்பு ஜாதியாகக் கருதப்படுகிறார்கள்.[1] இந்த வீட்டுப் பெயர்கள் கிடைக்கவில்லை.

1. பம்பாய் கெஜட்டீர் புனு-வால்யூம்கள் XXI & XVIII பாகம் 1.

புனவைச் சார்ந்த கும்பிகள் மகாராஷ்டிய ரென்றும் க்ஷத்திரியர் என்றும் சொல்லிக் கொள்வதோடு பூணூலும் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். கி. மு. 56-ல் உஜ்ஜைனி அரசனாக இருந்த விக்கிரம (விக்கிரமாதித்தனாக இருக்கலாம்) னும், கி. மு. 78-ல் பைட்டானை ஆண்ட சாலிவாகனனும் சுமார் கி. பி. 10-ஆம் நூற்றாண்டுக் கடைசியில் மாளவ தேசத்தை ஆண்ட போஜ ராஜனும் இவர்களுடைய மூல புருஷர்கள்; இவர்களில் 92 பிரிவுகள் இருக்கின்றன. இவைகள் புரட்சிக் காலங்களில் 56 தேசங்களிலும் பரவின. பான்ஸ்லே குடும்பத்தினர் (சிவாஜி முதலியவர்கள் இந்த வமிசத்தினரே) போஜராஜனுடைய சந்ததியார் என்றும், விக்கிரம சந்ததியார் சுக்க ராஜாக்கள் என்றும், சாலிவாகன சந்ததியார் ராஜகுமாரர்கள் (ராஜபுத்திரர்களாக இருக்கலாம்) என்றும் சொல்லிக் கொள்வதாக சர்க்கார் கெஜட்டுகளில் காணப்படுகிறது.[1] இவர்களெல்லோரும் க்ஷத்திரியர்களில் ஒரு பிரிவினர் என்பதல்லாமல் சூரிய வமிசம், சந்திர வமிசம், நாக வமிசம், யது வமிசம் எல்லாக் கலப்பும் இவர்களுக்குள் இருப்பதாக சொல்லிக் கொள்வதாகவும் கெஜட்டுகளில் காணப்படுகிறது.[2]

(ஜயார்த்தப் பிரகாசிகை 3-ஆம் பாகம் பார்க்க).

சரித்திரத்தில் மகாரட்டர் அல்லது ரட்டர் என்பவர்களே மகாராஷ்டிரர்கள் என்று ஸ்ரீ பாண்டார்க்கர் பண்டிதர் அபிப்பிராயப்படுகிறார்.[3] மகாராஷ்டிரம் என்னும் சொல் "மகாரத" என்னும் சம்ஸ்கிருத பதமே என்கிறார்.[4] இதனால் இவர்கள் ராஷ்டிரகூடர்கள் என்று சொல்லவேண்டி இருக்கிறது. இவர்கள் ஆந்திர தேசத்து ரெட்டி வமிசத்தினர் என்பதைப் பல சரித்திராசிரியர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். மகாராஷ்டிரர்கள்கூட

---

1, 2. Bombay gazetteer—Poona Vols. XXI & XVI Part 1. Printed in 1885—ஆந்திர தேசத்துக் குயவர்கூட சாலிவாகன வமிசம் என்று சொல்லும் வழக்கம் இருக்கிறது. ஆகையால் கூர்ம வமிசத்தில் கும்மரர் (குயவர்) தோன்றி யிருக்கலாமோ! ஆனால் கும்மரர்களுக்குப் பூணூல் இல்லை.

3, 4. Bombay gazetteer—Poona Vols. XXI & XVIII by Sir. J. Campbell K. C. I. E.

ரெட்டிகளுக்குச் சம்பந்தப்பட்டவர்க ளென்பது மகாராஷ்டிர கெஜட்டீரில் காணப்படுகிறது.[1]

இதைத் தவிரக் கம்மவாரில் பிரம வமிசத்தினரும் நாக வமிசத்தினரும் இருந்ததாக ஆதாரம் இல்லை. சந்திர வமிசத்துச் சாளுக்கியர் மட்டும் கம்மவாரில் சிலருக்கு மூல புருஷர்களாக இருந்திருக்கிறார்கள். இவர்களில் சிலர் பிராமண பந்துக்களாக இருந்ததும் உண்மையே. யது, விருஷ்ணி, போஜ, அந்தக வமிசப் பிரிவினர் கம்மவாருக்கு முன்னோர்கள் என்றே ஸ்ரீ சி. வீரபத்ர ராவ் பந்துலு அபிப்பிராயப்படுகிறார். நாக ஜாதியைச் சேர்ந்த கம்ரராஜன் ஒரு வேளை கம்மவாரில் சிலருக்கு மூல புருஷனாக இருந்தால் மராட்டியருக்கும் கம்மவாருக்கும் சம்பந்தம் இருக்க முடியும். ஆனால் இதுமட்டும் கிடைத்த சாஸனங்களால் கம்மவார் தூர்ஜய கரிகால வமிசத்தினர், அயோத்தியா, சாவஸ்தி முதலிய இடங்களிலிருந்து வந்தவர்கள், ஆந்திரர்கள் என்பதற்கு மட்டுமே ஆதாரங்கள் இருக்கின்றன. உஜ்ஜைனி, மாளவம் முதலிய இடங்களில் இருந்ததாகவோ மகாராஷ்டிரம் பேசியதாகவோ சொல்ல ஆதாரமில்லை.

சந்திர வமிச அரசர்கள் அதிஷ்டான அல்லது பிரதிஷ்டான புரத்தை ஆண்டதாகப் புராணங்கள் சொல்கின்றன. பிரதிஷ்டானபுரம் என்னும் பைத்தான் பிராந்தியத்தில் பௌத்த மதம் பரவிய காலத்தில் (கி. மு. 4-ஆம் நூற்றாண்டின் முதலில்) அந்தக தேசம் என வழங்கினார்கள். ஆந்திர சாதவாகன ராஜாக்கள் அந்தப் பிரதேசத்தை ஆக்கிரமித்து ஆண்டார்கள். சில காலம் அங்கே தங்கிய பின் தம் ராஜதானியைத் தானிய கடகத்துக்கு மாற்றிக் கொண்டார்கள். பைத்தானை யுவ ராஜஸ்தானமாக அமைத்துக் கொண்டார்கள். அப்போது அவர்களை "அந்தகர்கள்" என்று வழங்கியதாகச் சரித்திர ஆதாரங்கள் இருக்கின்றன. 'அந்தக' என்னும் சொல் ஆராய்ச்சியைப் பகுதானிய வருஷம் தை மாதம் பாரதி (தெலுங்குப் பத்திரிகை) யில் பார்க்கலாம். இந்தப் பைத்தானில் பிறகு மகாராஷ்டிர

1. "It is possible that the Marathas are connected with the Reddis of Telugu." Maharashtra Gazetteer Vol. XVI Page 436. (ஜயார்த்தப்பிரகாசிகை III-இலிருந்து)

பாஷை பிரசித்தத்துக்கு வந்தது. பழைய ஆந்திரர்கள் சிலர் சக, யவனர்களுடன் சம்பந்தம் செய்து கொண்டு ஆந்திர பாஷையை மறந்து விட்டார்கள். சகவாச தோஷத்தால் புதிய கலப்புப் பாஷையை ஏற்படுத்திக் கொண்டு ஆந்திரர்களிலிருந்து பிரிந்து விட்டதாக நினைக்கவேண்டி யிருக்கிறது. ஆனாலும் அவர்கள் ஆந்திரர்களை அநுசரித்து ஆரிய மதத்தினராகவே இருந்தார்கள். இப்படிப்பட்டவர்களே இக்காலத்து மகாராஷ்டிரக் கும்பிகள், கூர்மிகள், மராட்டியர் இவர்களுக்கு மூல புருஷர்களாக இருப்பார்களென்று நம்பவேண்டி யிருக்கிறது. பைத்தான் தேசத்துக்கு அந்தக தேசம் என்ற பெயர் முதலில் எப்படி வந்தது என்பது தெரியவில்லை. யது, விருஷ்ணி, போஜ, அந்தக வமிசங்களைச் சேர்ந்த அந்தகன் என்பவனுடைய பெயரால் இந்த வமிசம் ஏற்படிருக்கலாமா என்பதை ஆராயவேண்டும். ஆந்திரர்கள் அந்தகனைவிட முந்தியவர்கள் என்பதற்கு முன்பே வேதப் பிரமணம் காட்டி யிருக்கிறோம்.

கொங்கண தேசத்திலிருந்து கும்பினிகள் வந்து ரெட்டி நாயக்கர்களுடனும் லக்க நாயக்கர்களுடனும் தங்கு தடையில்லாமல் கலந்து விட்டார்களென்று பத்ம நாயக்கன் சரித்திரம் சொல்லுகிறது. இந்த லக்க நாயக்கர்கள் துர்ஜய வமிசத்தினராக இருந்திருப்பார்கள். ஏனென்றால் துர்ஜயன் லக்க பூமியை ஆண்டவன். பத்மநாயக சரித்திரத்துக் கதையினால் ஆந்திர தேசத்துக் கம்ம, வெலம, காப்பு, ரெட்டி இனத்தினருடன் கும்பி ஜாதியார் கொண்டு கொடுத்துச் சம்பந்தம் செய்து வந்தார்கள் என்பது தெரிகிறது. அதனால் இவர்கள் எல்லோரும் ஒரே ஜாதியிலிருந்து (பழைய ஆந்திர க்ஷத்திரிய ஜாதியிலிருந்து) தோன்றியவர்களென்று சொல்லலாம். ஆனால் கம்மவார் தனிப்படக் கும்பிகள் என்னும் மராட்டியர்களிலிருந்து தோன்றியவர்களென்றோ இந்த இரு ஜாதிகளின் மூல புருஷர்களும் சமானமானவர்களென்றோ சொல்ல முடியாது.

பல தேசங்களில் பிராம்மணர் க்ஷத்திரியர் முதலிய பல ஜாதியார் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் ஒரே வமிசம் என்றோ அவர்களின் மூல புருஷன் ஒருவனே என்றோ சொல்ல

முடியாதல்லவா? அது மாதிரியே மகாராஷ்டிர தேசத்துச் சூரிய சந்திர வமிசத்தினர் என்றதால் கும்பி அல்லது கூர்மிகள் ஆந்திர தேசத்துக் கம்மவாருக்கும் மூல புருஷர்கள் என்று சொல்ல முடியாது. கம்மவாரின் மூல புருஷர்களாக உறுதிப் படுத்தி யிருக்கும் கரிகால துர்ஜயர்களைக் கும்பிகளோ கூர்மி களோ தங்கள் மூல புருஷர்கள் என்று எங்கேயுமே சொல்லிக் கொள்ளவில்லை. அது போலவே கும்பி, கூர்மிகளின் மூல புருஷர்கள், கம்மவார்களின் மூல புருஷர்கள் என்பது எந்தச் சாஸனத்திலும் காணப்படவில்லை. அதனல் கூர்மிகளும் கம்ம வாரும் ஒரே க்ஷத்திரிய வமிசத்தின் பிரிவினர் என்று மட்டுமே நம்பலாம். கும்பிகள் இக்காலத்தில் விவசாயிகளாகவே இருக் கிறார்கள். கம்ம, வெலம, காப்பு இனத்தினர்களைப் போலவே இவர்களும் வீரத்தைக் காப்பாற்றி வருகிறார்கள். இவர்களில் சிலர் மகாராஜாக்களாகக்கூட இருக்கிறார்கள்.

புஷ்பகிரி ஸ்ரீ சங்கர மடாதிகாரிகள் சில வருஷங்களுக்கு முன்பு ஒரு சபை கூட்டினார்கள். அதில் க்ஷத்திரியர்களால் சூத்திர ஸ்திரீகளுக்குப் பிறந்தவர்களே கம்ம, வெலம, ரெட்டிகள்; அதனல் இவர்கள் சூத்திரர்களே என்று முடிவு கட்டிப் பிரசுரித் தார்கள். இதற்குச் சரித்திர பூர்வமான ஆதாரம் உண்டா என்பதைத் தெரிந்துகொள்ள இவர்கள் முயலவே இல்லை. ஆனல் பண்டிதர்களுடைய சகாயம் இல்லாமல் இதை நிர்ணயிக்க முடிய வில்லை. மார்க்கண்டேய புராணத்தில் இந்த விஷயம் காணப் படுகிறதாம். மகாபத்மன் என்பவனுக்கு ஒரு சூத்திர ஸ்திரீயிடம் நந்திராஜன் என்பவன் பிறந்தான். அவன் க்ஷத்திரியர்கள் எல்லோரையும் கொன்று வந்ததால் பயத்தினல் பல க்ஷத்திரியர் கள் சூத்திரர்கள் ஆகிவிட்டார்கள். அவர்களுடைய சந்ததியாரே இந்தக் கம்ம, வெலம, ரெட்டிகள் என்று வாதம் செய்தார்கள்.[1] கதைகளோடு கூடிய புராணங்களையே நம்புகிறவர்களுக்கு இது ரசிக்கலாம். உண்மையைத் தெரிந்துகொள்ள விரும்புகிறவர் களுக்கு இதனல் பயனில்லை. பிராம்மணேதர விஜயத்தில் ஸ்ரீ சூர்யதேவா ராகவைய சௌதரி அவர்கள் இவைகளை

1 பிராஹ்மணேதர விஜயத்தைப் பார்க்க.

எல்லாம் ஆதாரத்தோடு கண்டிருத்திருக்கிறார். சௌதரி அவர்களின் வாதத்தில் சரித்திர பூர்வமான சில பிழைகள் இருந்தாலும் மொத்தத்தில் அவர் உண்மையையே சொல்லியிருக்கிறார். புஷ்பகிரி ஸ்வாமிகளைப் போலவே பத்ம நாயக சரித்திராசிரியரும் கதைகளை ஆதாரமாகக் கொண்டு வெலமர்களின் பிறப்பைப் பற்றி எழுதியிருப்பதால் அதில் கண்டதை யெல்லாம் உண்மை யென்று ஒப்புக்கொள்ள முடியாது. முன்னே சொன்னபடி கம்மவாரும் வெலமவாரும் 10-14-ஆம் நூற்றாண்டுகளின் இடையில் தோன்றியவர்கள். சோழ, சாளுக்கிய, துர்ஜய குலத்தினரே இவர்கள் முன்னோர்க ளென்பதை உறுதியாக நம்பலாம்.

## வர்மா

வேத காலத்திலிருந்து பிராம்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வருணங்கள் தொழிலை யொட்டி ஏற்பட்ட பின், இவர்கள் முறையே சர்மா, வர்மா, குப்தா, தாஸ, என்ற பதங்களைத் தம் தம் பெயர்களின் பின் சேர்த்துக்கொண்டனர். இவ் விஷயம் வேத, புராண ஆதாரங்களாலும் இக்காலத்து வழக்கினாலும் பழைய சாஸனங்களாலும் நாம் அறிந்த உண்மை. எந்த ஜாதியாலும் நல்ல படிப்பாளிகள் பட்டு, பட்டாரகர் என்ற பட்டங்களை வைத்துக்கொண்டனர். கி. பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து 10-ஆம் நூற்றாண்டு வரைக்கும் ஆந்திர தேசத்தை ஆண்ட அரசர்களின் சாஸனங்களை ஆராய்ந்ததில், அவர்கள் எந்த ஜாதியினரா யிருந்த போதிலும் தொழிலால் க்ஷத்திரியர்கள் ஆனதால் 'வர்மா' என்றே அழைக்கப் பெற்றனர். அதனாலேயே, 'வர்மாந்த நாமாபி நரேந்திர சின்னம்' என்ற பழமொழி வழங்கியது. சுமார் கி. பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து இந்த நாட்டை ஆண்ட சாலங்காயனர்[1] விஷ்ணு குண்டி அரசர்கள்,[2] பல்லவர்கள்,[3] காங்க வம்சத்தினர்.[4]

1. தேவ வர்மா, ஹஸ்தி வர்மா, நந்தி வர்மா, சண்ட வர்மா, அல்லது ஸ்கந்த வர்மா முதலியவர்கள் சாலங்காயனர்—பேதவேகி சாஸனம்.

2. மாதவ வர்மா, கோவிந்த வர்மா, மாதவ வர்மா II, ஆகியவர்கள் விஷ்ணுகுண்டி அரசர்கள்.—ஈபூர்ச் சாஸனம்,

3. மகேந்திர வர்மா, சிம்ம வர்மா, அர்க்க வர்மா, உக்ர வர்மா, நந்தி வர்மா, சிம்ம வர்மா ஆகியவர்கள் பல்லவர்கள்—அமராவதி சாஸனம்.

4. மித வர்மா, இந்திர வர்மா, ஹஸ்தி வர்மா, தேவேந்திர வர்மா, இவர்கள் 5-7 ஆம் நூற்றாண்டுகளில் ஆண்ட கிழக் காங்க வமிசத்து அரசர்கள்.

தெலுங்குச் சோழர்,[1] காஞ்சிபுரச் சோழர்,[2] வெல நாட்டுச் சோழர், கதம்ப அரசர்கள்,[3] ஆனந்தஜ கோத்திரத்தார் ஆகியவர்கள் எல்லோரும் வர்மா என்ற பட்டங் கொண்டவர்களே என்பதை இவர்களுடைய சாஸனங்கள் தெரிவிக்கின்றன. (பெதவேகி, ஈபூர், அமராவதி, பீமேச்வரர் கோயில், கொணிதென, காஞ்சிபுரம், ஜிர்ஜிங்கி, கோதாவரிச் சாசனங்களைப் பார்க்க). கீழைச் சாளுக்கியர்களாகிய கீர்த்தி வர்மா முதலியோரும் வர்மாக்களே. பின்பு எந்தக் காரணத்தாலோ வர்மா என்ற பட்டம் மெல்ல மெல்ல மறைந்து 'ஆதித்திய' சோழப் பட்டங்கள் வெகுவாக உபயோகிக்கப் பட்டன. வர்மாப் பட்டம் க்ஷத்திரியருக்கு உரிய பட்டமாக வழங்கி வந்த தென்றாலும் அதை ஒரு ஜாதியார் மட்டுமே உபயோகித்ததாகச் சொல்ல முடியாது. அக்காலத்து ஆரியர்களில் இருந்த எல்லா ஜாதியினரும் தேசங்களைத் தம் பலங்கொண்டு ஆக்கிரமித்து க்ஷத்திரியர்கள் என்று சொல்லிக் கொண்டு வர்மாப் பட்டத்தை உபயோகித்ததாகத் தெரிகிறது. அதனால் கம்மவாரின் முன்னோராகிய மல்லவர்மா, புத்த வர்மா, தாஸவர்மா, நந்தி வர்மா முதலியவர்கள் கையாண்ட பட்டத்தை இக் காலத்திலும் கம்மவார் வைத்துக்கொள்வதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை. பட்டாரக என்ற பட்டத்தையும் இப்படியே பிராம்மணர்களும் அரசர்களும் வைத்துக்கொண்டதாகச் சாஸனங்கள் மூலம் தெரிகிறது. வர்மா என்றால் கவசம் அணிந்தவன் என்பது பொருள். அதர்வண வேதத்திலும் யஜுர் வேதத்திலும் இந்தப் பொருளையே காண்கிறோம்; அதனால் க்ஷத்திரியர்கள் எல்லோரும் இம் பட்டத்தை வைத்துக்கொண்டிருக்க வேண்டும். வர்மாவின் திரிபே வெலம என்ற கொள்கை இருக்கிறது. ஆனால் வர்மாப் பட்டம் எல்லோரும் வெலமர் அல்லர். ஆகையால் அது உண்மை அன்று. சமீப காலத்தில் பிராம்மணப் புரோகிதர்கள்

---

1. தாஸ வர்மா, புத்த வர்மா, மல்ல வர்மா, நந்தி வர்மா, தனஞ்ஜய வர்மா, போம்மக வர்மா ஆகியோர் ஆந்திர சோழர்கள். 8-ம் நூற்றாண்டில் புண்ணிய குமார சோழனுடைய மாலெபாடு சாஸனம். (J. A. H. R. H. S. Vol. XI)

2. தாமோதர வர்மா, அத்தி வர்மா முதலியவர்கள் ஆனந்தஜ கோத்திரத்தார். மேலைக் கதம்ப அரசர்களும் இப்படியே வர்மா பட்டம் பெற்றிருந்ததாக, பனவாசி முதலிய இடங்களில் உள்ள சாஸனங்கள் சொல்லுகின்றன.

3. கோபரி கேஸரி வர்மா, ஆதித்திய வர்மா முதலிய காஞ்சிபுரச் சோழர்கள்.

சிலர், கம்மவாருக்கு வர்மாப் பட்டம் வைத்துக்கொள்ளும் தகுதி இல்லே என்று நினைத்துத் தாசப் பட்டத்தைச் சொல்லி வந்தனர். அதை விட்டு விட்டு வர்மாவை உபயோகிக்கும்படி கேட்டுக் கொண்டும் அவர்கள் சொல்ல மறுத்ததாகத் தெரிகிறது. வர்மா பட்டத்தைப் பழைய காலத்திலிருந்து தரித்தவர்கள் எப்படிப்பட்ட வர்கள் என்பதை இவர்கள் தெரிந்து கொள்வார்கள். வர்மாக் களிலிருந்தே கம்மவாரினம் தோன்றியது என்பதையும் இவர்கள் தெரிந்துகொள்வார்கள். நியாய புத்தியோடு பழைய வழக்கங்களை அனுசரிக்க விரும்பும் சநாதனிகள் முக்கியமாக உண்மையைத் தெரிந்து கொள்ளட்டும்.

## வீட்டுப் பெயர்கள்

வேத காலத்திலிருந்து சுமார் கிறிஸ்து சக ஆரம்பம் வரையில் எந்த ஜாதியினருக்கும் வீட்டுப் பெயர்கள் இருக்கவில்லே. காலக் கிரமத்தில் பெயரை மட்டும் வைத்துக்கொண்டு இன்னர் என்று ஒருவரைக் கண்டு பிடிப்பது விவகார விஷயங்களில் கஷ்டமாக இருந்தது. தாயின் பெயரையோ தந்தையின் பெயரையோ சேர்த்துச் சொல்லி வந்தார்கள். இக்ஷ்வாகு மன்னர்களும் ஆந்திர அடிமை அரசர்களும் தாயின் பெயரையே சேர்த்துச் சாஸனங் களில் எழுதினர்கள். பழைய சாஸனங்களில் 10-ஆம் நூற்ருண்டி லிருந்து ஜனங்கள் தங்கள் பெயருடன் தந்தையின் பெயரைச் சேர்த்து எழுதும் வழக்கம் அதிகரித்தது; வீட்டுப் பெயர்கள் இல்லே. தமிழர்களிடம் இன்னும் இந்த வழக்கமே இருக்கிறது. பிரசித்தி பெற்ற ராஜ குடும்பங்களில் பிறந்த சிறந்த அரசர் களுக்கு இதுவும் அவசியம் இல்லாதிருந்தது. சொந்தப் பெயரே போதுமானதாக இருந்தது. வீட்டுப் பெயர் இல்லாவிட்டாலும் ஏதாவது ஓர் அடையாளம் இருந்தது. இக்ஷ்வாகு வமிசம், மௌரிய வமிசம், சாலங்காயன வமிசம், விஷ்ணுகுண்டி வமிசம், காகதீய வமிசம், துர்ஜய வமிசம், தெலுங்குச் சோழ வமிசம், வெல நாட்டுச் சோழ வமிசம் என்று ஏதோ ஒரு குறியீடு இருந்தது. சர்வ சாதாரணமாக இருந்த வமிசத்தினரைத் தந்தையின் பெயரோடு சேர்த்துக்கூடத் தெரிந்துகொள்வது சில சமயங்களில் கஷ்டமாக இருந்தது. அதனல் அவர்கள் வசிக்கும்

கிராமத்தின் பெயரையும் சேர்த்து வழங்கியதாகப் பூர்வ சாஸனங்களால் தெரிகிறது. முதல் முதலில் கிராம வாசத்தால் ஏற்பட்ட அந்த அந்த ஊர்ப் பெயர்கள் சில தலைமுறைகளுக்குப் பின் அவர்கள் வீட்டுப் பெயர்களாக நிலைத்துவிட்டன. பற்பல காரணங்களால் சிலருக்கு மட்டும் இந்த முறையில் மாறுதல் ஏற்பட்டது. "சாகிவார்" "வத்ஸவாயவார்" ஆனார்களென்று ஏனுக லக்ஷ்மண கவி எழுதிய "ராம விலாசம்" என்ற நூலினால் தெரிகிறது. வேறு பிரதேசங்களுக்குப் போன "சாகிவார்" தம் வீட்டுப் பெயர்களை மாற்றிக்கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. "ஆலம்வாரில்" சிலர் "பெம்மஸானி வார்" ஆக மாறினார்கள் என்பது உள்ளூர் குறிப்பில் ஓரிடத்தில் காணப்படுகிறது. ("பாரதி" பத்திரிகை சுக்ல வருஷத் தொகுதியைப் பார்க்க). பிராம்மணர்களில் "இந்துலூர் வார்" "கொலனுவார்" ஆகிவிட்டார்கள்.[1] தமிழர்கள் கூடத் தந்தையின் பெயரை மட்டும் முன்னால் எழுதிக்கொள்வதால் ஒருவனை அறிந்து கொள்வது கஷ்டமாக இருந்தபடியால் ஊர்ப் பெயர்களையும் தம் பெயர்களுக்கு முன் சேர்த்துக் கொண்டனர். தெலுங்கர்களின் ஊர்ப் பெயரே வீட்டுப் பெயராக இருக்க வேண்டுமென்ற நிபந்தனை இல்லாவிட்டாலும் அவர்களுக்கு ஏற்பட்ட வீட்டுப் பெயரையே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சிலருக்கு ஊர்ப் பெயர்கள் இருக்கின்றன. பிரசித்தி பெற்ற முன்னோர்கள் பெயரையே சிலர் தங்கள் பெயர்களுக்கு முன் அமைத்துக் கொள்கிறார்கள். சிலருக்குக் குணம், நடத்தை, திறமை, வீரம் முதலியவற்றாலும் பட்டங்களாலும் செய்யும் தொழிலாலும் வீட்டுப் பெயர் போன்ற குறிகள் வந்து விடுகின்றன. இவைகளெல்லாவற்றையும் இக் காலத்தில் வீட்டுப் பெயர்களாகவே உபயோகிக்கிறார்கள்.

இந்த வழக்கம் சுமார் 10, 11-ஆம் நூற்றாண்டுகளில் தொடங்கி வழக்கத்தில் வந்ததாகத் தெரிகிறது. இதற்கு முன்பும் ஓரளவு இந்த வழக்கம் உண்டு. மேற் சொன்ன முறையிலே, பெரியவர்கள் பெயர்களோ, ஊரோ, குணம், ஒழுக்கம்

1 காகதிய சஞ்சிகை அனுபந்தம் பார்க்க.

முதலியவை காரணமாகவோ கம்மவாரின் வீட்டுப் பெயர்களும் தோன்றின. இந்த நூலில் மற்றோர் இடத்தில் சொல்லப்படும் சிந்தம நாயக்கர் என்னும் பிரமுகருடைய பெயரால் சிந்தமனேனி வாரும் பென்னம நாயக்கருடைய பெயரால் பின்னமனேனி வாரும் வந்திருக்கலாம். 'வாசி ரெட்டி' என்ற வீட்டுப் பெயர் வேமராஜனால் ஏற்பட்டதாகச் சிருங்காரதாமம் என்னும் நூலில் காணப்படுகிறது. வேமா ரெட்டி என்றவர்கள் நால்வர் இருந்த தால் இந்த வேமா ரெட்டி இன்னா ரென்பது தெரியவில்லை.[1] முப்பானேனி, தாரபநேனி, ராமிநேனி, என்னும் வீட்டுப் பெயர் கள் ஸாகி வமிசத்து முப்பராஜு, தோரப ராஜு, ராம ராஜு முதலியவர்களுடைய பெயராலோ, முப்பி நாயுடு முதலிய வேறு பிரமுகர்களாலோ வந்திருக்க வேண்டும். ஸாகி கன்னம நாயுடுவின் பெயரால் கன்னம நேனியும், பல் நாட்டு வீரர்களில் ஒருவனாகிய தொட்டப்ப நாயகன் பெயரால் தொட்டப நேனியும், பிரம்ம நாயகன் பெயரால் பிரம்ம நேனி அல்லது பொம்மிநேனியும், சூர நீடு பெயரால் சூரநேனியும் மல்வி நீடுவின் பெயரால் மல்வி நேனியும், பேர் நீடுவின் பெயரால் பேரிநேனியும் கம்மவார் வீட்டுப் பெயர்களாயின என்று ஊகிக்க இடம் இருக்கிறது. ஆனால் இவ் வமிசத்தார் வெலமவார் ஆய்விட்டதாகச் சரித்திர ஆசிரியர்கள் நினைத்தார்கள். சில வீட்டுப் பெயர்கள் வந்த விதத்தை முன்பு சொல்லி யிருக்கிறோம். இவைகளில் வரும் நேனியும் ஸாணி என்னும் பெண்பால் பெயரும், புகழ் பெற்ற ஆண் பெண்களால் அக் குடும்பத்தாருக்கு ஏற்பட்டன. அவையே வீட்டுப் பெயர்களாயின.

---

1 இவர்கள் எல்லோரும் 14, 15-ஆம் நூற்றுண்டுகளில் ஆண்ட ரெட்டி ராஜாக்கள். வாசி ரெட்டி ராமலிங்கப் பிரபுவின் விருப்பப்படி, நிவி ரமணகவி இந் நூலை எழுதினர். அதில் இப்படி இருக்கிறது.

"ஏமேடி கூடஸ்து டெஸ்க வேமக்ருபாலு
ப்ரீதிசே புவி வாஸி ரெட்டி யய்யெ."

பிட்டாபுரத்துச் சில சாஸனங்கள் (S. I. I. Vol. Nos. 673 & 677) வாசி ரெட்டி போத்தி நீடு எழுதுவித்த சா. ச. 1352 வருஷத்துச் சாஸனங்கள்' கிடைத்திருக்கின்றன. இந்தப் போத்தி நீடு வேம ராஜனுடைய சிற்றரசன். இவருக்கு அக்காலத்திலேயே 'வாசி ரெட்டி' வீட்டுப் பெயர் வந்திருந்தது. அதனால் அதற்கும் முந்திய வேமா ரெட்டி ஒருவரால் இந்தப் பெயர் வந்திருக்கும். அனவேமா ரெட்டி அல்லது பெதவேமா ரெட்டி காலத்தில் இருக்கலாம். பேத்தி நீடுவின் தந்தை வாஸ்ய ரெட்டி; இவன் பேரால் இந்த வீட்டுப் பெயர் வந்திருக்கலாம்.

இந்த வீட்டுப் பெயர்களில் கூட, கம்மவார் முதலில் சூரிய வமிசத்து அரசர்களாய் இருந்தனர் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. சூரிய தேவரவார், கொஸராஜுவார், போகபதிவார், புரமாவார் (பெர்மாவார்) முதலியவர்கள் அதற்கு உதாரணமாய் இருக்கிறார்கள். நீடு, வேனி, ரெட்டி என்ற பட்டங்களோடு கலந்து வரும் வீட்டுப் பெயர்களும் ராஜ சம்பந்தம் உள்ளனவே. சாவர்த்திவார் சிராவஸ்தியிலிருந்து வந்தவர்கள்; சிராவஸ்தியே சாவர்த்தியாக மாறியது என்று ஊகிக்கலாம். ராவெள்ளவார் சந்திர வமிசத்தினர் என்று ஸௌகந்திகப் பிரஸவாபஹாரணம் என்னும் நூலில் காணப்படுகிறது.

கோன, எலமஞ்சி, ராபர்த்தி, எறுவஆலூரி, தூம்பர்த்தி அல்லது தூமாட்டி, பண்டாரி, விப்பர்ல, ஸாகி, ஸெஜ்ஜ, நிடுப்ரோலி, ராவெள்ள, கொட்டூரி, மொரமபூடி அல்லது மோரம்பூடி, வென்ன, விஞ்ஜமூ, கொன்டூரி, நல்லூரி, பாமுலபாட்டி, பட்டிப்ரோலு, நாதெண்ட்ல, ஈடுபுகண்டி, கொல்லூரி, கெக்கொண்ட, கொரிபர்த்தி, செல்லூரி, துரோணதி, கங்கனல, சிலுகூரி, முஸுனூரி, கொட்டி பர்த்தி, குருகன்டி, சிட்டி, கோட்ட, மந்தடி, ப்ரேகெட்டி, கட்டா: இவை கம்மவாரின் வீட்டுப் பெயர்கள். இவை 12-ஆம் நூற்றாண்டுக் காலத்திலேயே இருந்ததாக, அந்தந்த வீட்டுப் பெயர் உள்ளவர்கள் கோயில்களில் எழுதுவித்ததான சாஸனங்களால் தெளிவாகத் தெரிகிறது. இவர்களுடைய சரித்திரத்தை இப்புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில் காணலாம்.

கம்மவாருடைய வீட்டுப் பெயர்களில் முக்கால்வாசியும் ஆந்திர தேசத்துக் (முக்கியமாகக் கம்ம ராஷ்டிரத்தில் உள்ள) கிராமப் பெயர்களே. அவர்கள் வசித்த கிராமங்களின் பெயர்கள். இப்படியே, வேறு சில பிரதேசங்களில் இருந்தவர்களுடைய வீட்டுப் பெயர்களையும் பாருங்கள். கத்வால ஸம்ஸ்தானத்தில் உள்ள கிராமங்களில் வசித்தவர்கள் தரூர்வார், பூண்டூர்வார், நைஜாமில் சோழ, சாளுக்கியர்கள் வசித்த நெக்கொண்ட, ஜயபூர். ஸம்ஸ்தானத்தைச் சேர்ந்த கோட்டபாடு; ஜுஜ்ஜு ராம்பல்லி, பொம்மலாபுரி, மன்னெம் முதலிய ஊர்களின் பெயர்கள் வீட்டுப்

பெயர்களாயின. அடைப்பை, பல்லக்கு முதலியவற்றை அரசரிடம் பரிசு பெற்றவர் அடைப்பாவார் ஆயிருக்கலாம். கி. பி. 1657-ஆம் வருஷத்தில் ஆண்ட ராஜ ராஜ தேவன் காலத்துச் சாஸனம் ஒன்றில் ராவெள்ளவாரைப் பற்றிய பிரஸ்தாபம் வருவதால் அது அக் காலத்திலேயே இருந்திருக்கிறது. கி. பி. 1300-ல் எழுதப்பட்ட ஒரு சாஸனத்தில் தொண்டப்பவாரும் வொஜ்ல (வஜ்ஜல) வாரும் பிரஸ்தாபிக்கப் படுகிறார்கள். இவையும் அக்காலத்தில் ஏற்பட்டவையே. ஜம்முல பாலெம் என்ற கிராமத்தினருக்கு 'ஜம்பால' என்ற வீட்டுப் பெயர் வந்திருக்கலாம். ஜம்முலமடக, ஜம்முலபாலெம், ஜம்பால முதலியவை ராயல சீமையிலும் காணப்படுகின்றன.

சல்லபல்லி சம்ஸ்தானத்தில் அயோத்தியா என்னும் கிராமம் இருக்கிறது. இது அயோத்தியிலிருந்து வந்து குடியேறியவர்களால் நிருமிக்கப்பட்டிருக்க வேண்டும். கோனேரிவார் அங்கே வெகு காலமாக வசிக்கிறார்கள். இவர்களை அயோத்திய கோனேட்டிவார் என்கிறார்கள். இவர்கள் ராஜ பந்துக்கள். சென்னமல்லேச்வர ஸ்வாமியின் பெயராலோ அப் பெயரைக் கொண்ட குடும்ப முன்னோன் பெயராலோ 'சென்னமல்லு' என்ற வீட்டுப் பெயர் தோன்றியிருக்க வேண்டும்.

சென்ன மல்லன் என்றவன் மிகப் பழங்காலத்து ஆசாமியாய் இருக்கலாம். அவன் பெயரால் சென்ன மல்லேச்வர ஸ்வாமி தோன்றி யிருக்கலாம். சென்ன மல்லேச்வர மூர்த்தியைப் பாலகுரிகி சோமநாத கவி 15-ஆம் நூற்றாண்டில், 'சென்ன மல்லு சீசம்' என்ற நூலில் துதித்திருக்கிறார். ஆலமு (யுத்தம்) ஏனுகுல, கத்தி, கட்டாரி, வீரமஞ்ச, தண்டு முதலிய (கம்மவார்) வீட்டுப் பெயர்கள் அந்தந்தக் குலத்தில் இருந்த வீரர்கள் ஞாபகார்த்தமாகவும் அவர்களுடைய வீரச் சின்னமாகவும் வந்திருக்கலாம்.

இந்த ஊகங்கள் வருங்கால ஆராய்ச்சியின் மூலம் உறுதிப்படவேண்டியவை. கொல்விமலை சேலம் ஜில்லாவில் இருப்பது. அது காரணமாகக் கொல்வி என்ற வீட்டுப் பெயர் வர நியாயம் இல்லை. வீட்டுப் பெயர்கள் அமையும் காலத்தில் கம்மவார்

MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA ... LIBRARY.

கம்மராஷ்டிரத்திலேயே இருந்தார்கள் எனலாம். பெஜவாடாவுக்கு அருகில் உள்ள 'கொலனு கொண்ட' என்னும் கிராமத்தைப் பழைய சாஸனங்களில் கொல்லிகொண்ட என்று எழுதி இருக்கிருர்கள்.[1] கம்மராஷ்டிரத்துக்கு உட்பட்ட இந்தக் கிராமத்தின் பெயரால் 'கொல்லி' என்ற வீட்டுப் பெயர் வந்திருக்கலாம். இல்லாவிட்டால் கொல்லிப் பாகையால் வந்திருக்கலாம்.

## கோத்திரம் மாறுதல்

வைதிக மதத்தை அனுசரித்த நான்கு வருணத்தாருக்கும் முதலில் ரிஷி, கோத்திர, சூத்திரப் பிரவரங்களை ஏற்படுத்தி யிருந் தார்கள். கம்மவார் சூரிய, சந்திர வமிசத்தினரா யிருந்தபோது இவர்களுக்குக் காச்யம், ஆத்ரேய, மாளவ்யஸ, பாரத்வாஜ கோத்திரங்கள் இருந்ததாகச் சாஸனங்கள் சொல்லுகின்றன. ரிஷிகளும் பல குலத்திலிருந்து வந்தாக வைசியர் கோத்திரங்களை விவரிக்கும்போது சொன்ளும். வேத காலத்துக்குப் பிறகு தேசத்தில் பௌத்த ஜைன மதங்கள் வியாபித்தன. சூரிய சந்திர வமிசத்தினராகிய கம்மவார் இந்தப் புது மதங்களில் பல காலம் இருந்தார்கள். அதற்குப் பிறகு தோன்றிய பிராம்மண, சைவ, வைஷ்ணவ மதங்கள் அவர்களை ஆகர்ஷித்தன. மறுபடி அவற்றில் சேர விரும்பினுர்கள். இந்தக் காலம் சுமார் 1-ஆம் நூற்ருண்டிலிருந்து 11-ஆம் நூற்ருண்டு வரைக்கும் நீடித்தது. இந்த மதங்களில் எல்லோரும் ஒரே சமயத்தில் சேரவில்லை; சிறுகச் சிறுகக் காலக்கிரமத்தில் சேர்ந்தார்கள். வேறு மதத்தில் இருந்தால் சூரிய சந்திர வமிசத்தினராலும் இவர்களை நான்காம் வருணத்தினராகவே வைதிக மதத்தில் சேர்த்துக் கொண்டார்கள். சத் சூத்திரர்கள் என்று புதிதாக ஒரு பெயர் வைத்தார்கள். இந்தப் பெயர் 12-ஆம் நூற்ருண்டுக்குப் பிற்பட்ட சில சாஸனங் களில் காணப்படுகிறது. கம்மவாரின் முன்னேர்களில் சிலர் சத் சூத்திரர்கள் ஆனபிறகும் தங்களுடைய பழைய வமிசங்களையும் வமிச மூல புருஷர்களாகிய கரிகால தர்ஜயர்களையும் மறக்க வில்லை. நான்காம் மதத்தினராக இவர்கள் சேர்ந்தபோது ஆரிய

1. S. I. I. Vol. IV. No. 709.

மத முறைப்படி கோத்திரங்களை நிர்ணயிக்க வேண்டி யிருந்தது. அப்போதே வெகுகாலமாகிவிட்டதாலும் அவர்கள் பழைய ரிஷி கோத்திரங்களை மறந்து விட்டனர். துர்ஜய வமிசத்தினர் எந்த எந்தக் கிராமத்தில் வசித்தார்களோ அந்த அந்தக் கிராமப் பெயர்களையே கோத்திரமாக வைத்துக் கொள்ளும்படி அக்கால மத கர்த்தர்கள் அநுமதித்தார்களென்று தெரிகிறது. காச்யப கோத்திரத்தா ராகிய எறுவவார்கூட பாலமுக்கல, பாலுட்ல, கோத்திரத்தாராயினர். "கட்டா" கோத்திரமும் இப்படியே வந்தது. கோத்திரம் என்ருல் பூமி என்ற பொருளும் இருப்பதால் அவர்கள் இந்த முறையை மேற்கொண்டிருக்கலாம். சிலர் மட்டும் தம் வமிசத்து மூல புருஷர்கள், தாம் பூசிக்கும் தேவதைகள், அவர்களைப் பூஜிக்கும் புஷ்பம் முதலிய பெயர்களை கோத்திரப் பெயர்களாக வைத்துக் கொண்டார்கள். அநுபந்தத்தில் காட்டிய வீட்டுப் பெயர், கோத்திரப் பெயர்ப் பட்டியலைப் பார்த்தால் கோத்திரங்களைப் பற்றிய விவரம் நன்ருகத் தெரியும். இந்தக் கிராம கோத்திரம் ஏற்பட்டதால் விலை மதிப்பற்ற சரித்திர சம்பந்தப்பட்ட விஷயம் ஒன்றைத் தெரிந்துகொள்ள வழி ஏற்பட்டது. இன்ன வீட்டுப் பெயருடையவர்கள் இன்ன இடத்தில் வசித்தார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது. கிராம கோத்திரங்களை ஆராய ஆராய புதிய கோத்திரம் ஏற்பட்ட காலத்திலேயே கம்ம நாடு, வெலநாடு, வேங்கி நாடு எனப்படும் ஆந்திர தேசத்திலேயே கம்மவார்கள் அதிகமாக வசித்தார்கள்; பிற்காலத்தில் ராஜ்யங்களை நிர்வகிக்கும் பொருட்டு வேறு ராஜ்யங்களில் குடியேறினார்கள் என்பன தெரிகின்றன. இருந்தாலும் இன்றைக்கும் ஆந்திர தேசத்திலேயே கம்மவார் அதிகமாக இருக்கிருர்கள். ஜில்லாவாரி விவரம் முன்பே எழுதியிருக்கிறேம். ஒருமுறை கிராம கோத்திரம் ஏற்பட்ட பின் அவை மாறவில்லை. அநேகமாக வேறு கிராமங்களுக்குப் போனதாலும் சில குடும்பங்களுக்கு ஏற்பட்ட புகழ் காரணமாகவும் மட்டும் சில வீட்டுப் பெயர்கள் மாறின.

வெலமவாருக்கும் கிராம கோத்திரங்கள் இருப்பது ராவ் வமிச சரித்திரத்தில் தெளிவாகக் காணப்படுகிறது. சிலருக்கு

மட்டும் இன்னும் ரிஷி கோத்திரங்கள் இருக்கின்றன. அவர்களுக்கும் கிராம கோத்திரங்கள் அதிகமாகவும் ரிஷி கோத்திரங்கள் குறைவாகவுமே இருக்கின்றன. கிராம கோத்திரங்கள் 13–ஆம் நூற்றாண்டிலிருந்து அமலில் இருப்பதாக, சாகி மனும சாகி கணபய ராஜனுடைய அநுமஞ்சி பல்லெ சாஸனத்தாலும், ருத்ரம தேவியின் மெய்காப்பாளர்களுடைய ராவூர்ச் சாஸன (E. R. 1916-பக். 135) த்தாலும் உறுதிப்படுகிறது. தெலிங்கானு சாஸனங்களாலும் இந்த விஷயம் தெரிகிறது.[1] அதில் வட்லூரி புரத் தலைவனும் பெனுமதும் கோத்திரத்தால் பவித்திரனானவனும் ஆன, யர்ரமனயகனுடைய தானசாஸனம் எழுதப்பட்டிருக்கிறது. (பக். 159). 15-16-ஆம் நூற்றாண்டுகளில் ராவெள்ளவாரும் கிராம கோத்திர (வெல்லுட்ல) த்தையே உபயோகித்தார்கள்.[2]

கம்மவார் முதலில் சூரிய சந்திர வமிசத்தினராக இருந்தார்கள் என்பதற்கு இந்தக் கோத்திரங்களில்கூட ஆதாரங்கள் இருக்கின்றன. அயோத்யா கோத்திரத்தா ராகிய எண்ட்ற பல்லேவார், கடிபூடிவார், பொத்தூரிவார், பொஜ்ஜாவார், மன்னேவார், மன்னெம்வார் இவர்களும், ரகுபல்லெ கோத்திரத்தா ராகிய ஏள்ளவார், ஏலூருவார், வட்டிகுண்டாலவார் இவர்களும் தசசர கோத்திரத்தா ராகிய கொர்ரபாடிவார், இவர்களும் ஸ்ராவஸ்தி கோத்திரத்தா ராகிய கொண்டபனேனிவார் இவர்களும் சூரிய வமிசத்தின ரென்றும் அயோத்தி முதலிய பிரதேசங்களே இவர்கள் வாசஸ்தலங்கள் என்றும் நாம் அறிந்து கொள்ளலாம்.

ரகுபதிவார், சூரிய தேவாரவார் இவைகளும் இதையே காண்பிக்கின்றன. ராசேந்திர கோத்திரத்தா ராகிய உன்னம

---

1- சமீபத்தில் வெளிவந்த சா. ச. 1903-ஆம் வருஷ (கி. பி. 1171) சிரிபுர சாஸனத்தால் (Ep. Colle 48 of 1909 & சாஸன பத்ய மஞ்சரி 50.) தாண்டிபால—அதாவது தாடிபாள்ள கோத்திரம் பொல்லன எ பவனுக்கு இருந்ததாகத் தெரிகிறது. இதனால் 12-ஆம் நூற்றாண்டிலேயே கிராம கோத்திரம் இருந்தது வெளிப்படை. வேறு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு இதற்கு முன்பே இந்தக் கோத்திர முறை வந்திருக்கும்.

முசுநூள்ள, வெலந்நூள்ள கோத்திரத்தாராகிய தெலிக குலத்தவர்கள் சா. ச. 1076-இல் எழுதிய சாஸனங்கள் பாபட்லாவில் இருக்கும் ஸ்ரீ பாவநாராயணஸ்வாமி கோயிலில் இருக்கின்றன். பேடி சாஸனங்களிலும் தெலிக குலத்தினர் பெயர்கள் இருக்கின்றன.

2. வெல்லூர்ச் சாஸனத் தொகுதியைப் பார்க்க.

வாரும் பொன்னமவாரும் சோழர்களுள் ஒருவனுகிய ராஜேந்திரன் குலத்தினரென்று நினைக்க இடமிருக்கிறது. அன்னங்குல கோத்திரத்தாரும் கோட்டகுல அல்லது குலகோட்ட கோத்திரத்தாரும் கோமட்டி, கோமட்டி நீடி என்ற வீட்டுப் பெயர்கள் உள்ளவர்களும் ஆதியில் வைசியத் தொழில் செய்தவர்களாகத் தோன்றுகிறது. மற்றொரு விஷயம் வேடிக்கையாக இருக்கிறது. வீர சைவ மதத்தில் சேர்ந்தவர்கள் கிராம கோத்திரங்களை வைத்துக் கொள்ளும் பொழுது சில பக்தர்கள் மாரேடு (வில்வம்), கந்தசிரி, மல்லெபூவுல (மல்லிகைப் பூ) மொகலி ரேகுல (தாழை மடல்), பொன்னபூல (புன்னைப் பூ) முதலிய புஷ்பப் பெயர்களைக் கோத்திரங்களாக வைத்துக் கொண்டனர். வேறு சிலர் சிவ பெருமானுடைய பெயர்களாகிய சென்னமல்லு, சிவநீல, (சிவ லீலையாக இருக்கலாம்) ஸ்ரீகண்டம் என்பவற்றைக் கோத்திரங் களாக வைத்துக் கொண்டார்கள். வைஷ்ணவ மதத்தில் சேர்ந்த சிலர் லேபாக்ஷி, பத்மாவதி, ஸ்ரீவெந்தல, ஸ்ரீபர்த்தி, ஸ்ரீலக்ஷ்மி முதலியவற்றைக் கோத்திரங்களாக வைத்துக் கொண்ட விஷயம் கோத்திரப் பட்டியல் மூலம் தெரிகிறது; மொத்தத்தில் கம்மவாரில் பெரும்பாலோர் தம்தம் வாசஸ்தலத்தின் பெயர்களையே கோத் திரங்களாய் வைத்துக் கொண்டதாகத் தெரிகிறது. வல்லுட்ல என்பது எல்லுட்ல என்றும், கந்தஸ்த்ரீ என்பது கந்த ஸிரி என்றும், யினகண்டி என்பது எனகண்டி அல்லது யனகண்டி என்றும் திரிந்திருக்கலாம். காகதீய என்பது காகிதால கோத்திர மாய் மாறி யிருக்கு மென்று தோன்றுகிறது. இப்படிக் கம்மவார் கோத்திரங்கள் மாறிவிட்டன.

முன் சொன்னபடி கம்மவாரும் வெலமவாரும் ஒரே ஜாதி யினர் என்பதற்கு, கோத்திரங்களிலும் வீட்டுப் பெயர்களிலும் சில ஆதாரங்கள் இருக்கின்றன. வீட்டுப் பெயர்களில் மேகல வாரு, மேகா வாரு, கோகா வாரு, வெல்லங்கி வாரு, மும்மல நேனி வாரு, பாகால வாரு, கும்மடபு வாரு என்பவை இவ்விரு ஜாதியினரிடையிலும் இருக்கின்றன. கம்மவாரில் யன கண்டி கோத்திரம் அதிகமாக இருப்பதுபோல் வெலமவாரில் யின கண்டிவார் பிரசித்தி பெற்றிருக்கிறார்கள். விப்பர்ல, ரேசெர்ல,

சாகண்டி, பாலகுல, புவ்வாட, செரகு நூள்ள கோத்திரங்கள் இரு வகுப்பினருக்கும் பொதுவாக இருக்கின்றன. ஆகையால் இவ்விரு ஜாதியினரும் முதலில் ஒன்ருக இருந்தார்கள் என்பது தீர்மானமாகத் தெரிகிறது.[1] இவர்கள் பிரிந்து போனதன் காரணத்தை முன்பே சொல்லி யிருக்கிரேம்.

இப்பொழுது, கம்மவார் காசியப கோத்திரத்தை வைத்துக் கொள்வது சாஸ்திர சம்மதமாகுமா, என்று சிலர் கேட்கலாம். சூத்திர கமலாகர ஸ்மிருதியில், கோத்திரம் தெரியாதவர்கள் எல்லோரும் காசியப கோத்திரம் வைத்துக் கொள்ளலா மென்று சொல்லி யிருக்கிறது. மேலும் கம்மவாரின் முன்னேர்களான ஆந்திர சோழர்கள் முதலியவர்கள் காசியப கோத்திரத்தையே வைத்துக் கொண்டதாகச் சோழர்களின் சாஸனங்களில் காணப் படுகிறது. கோத்திரம் என்பது மதத் தலைவர்களின் (ஆசார்ய சிஷ்ய பரம்பரை) ஞாபகச் சின்னமே; கிராம கோத்திரத்தை விடத் தனிச் சிறப்பு எதுவும் அதற்கு இல்லை. ஆனல் பழமை காரணமாக மட்டுமே அதற்கு மவுசு இருக்கிறது. ஆகையால் காசியப கோத்திரத்தைக் கம்மவார் உபயோகிப்பதில் தடை ஒன்றும் இருக்கக்கூடாது. கம்மவாரின் ஒரு பிரிவான வெலமவார் இன்னும் ரிஷி கோத்திரங்களையே வைத்துக் கொண்டிருக் கிருர்கள். கம்மவார் பலர் இப்பொழுது காசியப கோத்திரத் தையே வைத்துக் கொண்டிருக்கிருர்கள்.

ஆனல் அவை சரியாக அமலுக்கு வரவில்லை. வேறு வேறு கிராமத்தி லிருப்பவர்கள் இடத்துக்குத் தகுந்தபடி புதிய ஆசாரங்களை யொட்டி, கோத்திரத்தை வைத்துக் கொள்வதால் தீர்மானமாக ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஜனமேஜய மகா ராஜனுடைய சாஸனத்தில்கூட[2] ஸ்ரீபாத கோத்திரம் என்ருல்

1. செருகு நூள்ள கோத்திரத்தாளுகிய கடிகநேலி ராமையா என்னும் பத்ம நாயக்க வமிசத்தினன் குவலயானந்தம் என்னும் அலங்கார சாஸ்திரத்தை இயற்றினன்.

பத்ம நாயக்க வமிசத்தைச் சேர்ந்த பாப்ப ந்ருபதி என்பவன் சிருங்கார சுதா சமுத்திர பூர்ண சந்திரோதயம் என்னும் நூலை அங்கிதம் பெற்றுக் கொண்டான்.

2. Ind. Ant. IV. P. 333, 334.

குருக்ஷேத்திரம் என்று அம் மகாராஜனுக்குச் சொன்னதாகத் தெரிகிறது. கோத்திரம் மத குரு பரம்பரை என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஜனமேஜய மகாராஜனைப்போல் ஸ்ரீ பாத கோத்திரம் வைத்துக் கொள்வதும் சாஸ்திர சம்மதமே.

## கம்மவார் வகை

கம்மவாரில் இப்போது ஜமீன்தாரீ கம்ம, பெத்த கம்ம, சின்ன கம்ம, கண்டி கோட்ட கம்ம, கம்ப கம்ம, மாச்ச கம்ம, இல்லுவெள்ளனி கம்ம, கூச்சி கம்ம, குடிபைட்ட கம்ம, எடமபைட்ட கம்ம, பங்காரு கம்ம முதலிய வகைகள் இருக்கின்றன. இவைகள் தனிப்பட்ட பிரிவுகள் அல்ல: பல்வேறு இடங்களிலுள்ள வழக்க மாறுபாட்டினால் ஏற்பட்ட பெயர் மாறுபாடுகளே. குடிபைட்ட, எடமபைட்ட என்னும் வித்தியாசம் திராவிடப் பிராமணர்களிடையேகூட இருக்கிறது.

இவர்கள் முதலில் கம்ம நாட்டில் இருந்ததால் கம்மவார் என்று பெயர் வந்தது. பல தேசங்களுக்குப் போய்ப் பழக்கங்கள் மாறியதால் வேறு வேறு பெயர்கள் வந்திருக்கலாம். ஜமீன்தார்களாக இருக்கும் கம்மவார்கள் ஜமீன்தாரி கம்ம என்றும், அவர்களைவிடச் சற்று வரும்படி குறைவாக இருந்தாலும் நடை உடை பாவனைகளில் அவர்களுக்குச் சமமாக இருந்து கோஷாவாக இருக்கும் கம்மவார்களைப் பெத்த கம்மவார் என்றும், சொந்த நிலம் இல்லாமல் பிறர் நிலங்களில் வேலை செய்யும் தொழிலாளிக் கம்மவார்களைச் சின்னக் கம்மவார் என்றும், கல்யாண சமயத்தில் பெண்களைக் கூடையில் வைத்துக் கல்யாணப் பந்தலுக்கு அழைத்துவரும் கம்மவார்களைக் கம்ப கம்மவார் என்றும், பெண்களை வயல் வேலைக்கு அனுப்பாமல் வீட்டுக்குள்ளேயே வைத்திருக்கும் கம்மவார்களை இல்லுவெள்ளனி கம்மவார் என்றும் வழங்கி யிருப்பார்கள். இப்படியே கம்பசாட்டு, கோடசாட்டு, பூச்சி கம்ம முதலிய பெயர்களும் வந்திருக்க வேண்டும். இவர்கள் எல்லோரும் ஒரே ஜாதியினரே. இந்தப் பாகுபாடு சுமார் 14-ஆம் நூற்றாண்டிலிருந்தே ஏற்பட்

டிருக்க வேண்டும். கம்மவார் எல்லோரும் ஒரே பந்தியில் சாப்பிடு வார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஒருவர் வீட்டுக் கலத்தில் உண்பதும் சம்பந்தம் செய்து கொள்வதும் மட்டும் இந்தப் பிரிவினருள் எல்லோருக்கும் பொதுவன்று. எல்லோரிடத்திலும் இதுபோன்ற சிறு வித்தியாசங்கள் இருக்கும். கண்டி கோட்ட கம்ம முதலிய பெயர்கள் அவர்கள் வசித்த பிரதேசம் காரணமாகவும் புகழ் காரணமாகவும் வந்த பெயர் களே. இந்த வகுப்பினர் மிகவும் பிரசித்தி பெறாததனாலேயே இவர்கள் பெயர்கள் சாஸனங்களிலும் நூல்களிலும் காணப்பட வில்லை. அந்த அந்தப் பிரிவிலுள்ள துர் வழக்கங்கள் குறைந்து எல்லோருக்கும் பொதுவாக உள்ள நல்ல வழக்கங்களை மட்டும் வளர்த்துக் கொண்டால் கம்ம குலம் ஒன்றே என்ற பாவம் உண் டாகும். இத்தகைய உட்பிரிவுகள் கம்மவாருக்குள் மட்டும் அல்ல, பிராம்மணர்கள் முதலிய எல்லா ஜாதியாரிடத்தும் இருக்கின்றன. சண்டைக்காகட்டும், சமாதானத்துக்காகட்டும், சமநிலை வேண்டும் என்னும் பழமொழியை நினைத்தாவது கம்மவாரில் பின்தங்கி யிருப்பவர்கள் தங்கள் குணம், ஒழுக்கம், ஆசார விவகாரங்கள் முதலியவற்றைச் சீர்படுத்திக் கொண்டு எல்லோரும் ஒன்றாகச் சேருவதே நல்லது. நாம் குறைந்தவர்கள் என்னும் தாழ்வு மனப் பான்மையோ நாம் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் என்னும் கர்வமோ இல்லாமல், ஆதியில் கம்மவார் எல்லாம் ஒன்றே என்ற பரந்த மனப்பான்மையுடன் ஒவ்வொரு கம்ம வீரனும் நடந்து கொள்ள வேண்டும். இந்தச் சரித்திரத்தைப் படித்தவர்களுக்குக் கம்மவாரின் முன்னோர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதும், அவர்கள் எத்தகையவர்களுடன் சம்பந்தம் செய்து கொண் டார்கள் என்பதும் இவற்றுக்குக் காரணம் அவர்கள் தகுதியே என்பதும் நன்கு தெரியும்.

## கம்மவாருக்கும் பூணூல் உண்டு

உபநயனம், என்பதற்கு மற்றொரு கண் என்பது பொருள். பிரம்மசாரி உபநயனத்துக்குத் தகுதி உள்ளவன் என்று வித்தியா ரண்ய பாஷ்யத்திலும் அதர்வண வேத 11-ஆம் காண்டத்திலும்

காணப்படுகிறது.[1] இதில் ஜாதி குறிக்கப்படவில்லை. ஆரியர்கள் தம் தெய்வங்களைப் பிரார்த்தனை செய்வதற்காக ஞானத்துக்குக் காரணமாகிய மந்திரோபதேசம் பெறுவதையே உபநயனம் என்ருர்கள். அதாவது அந்த மந்திரோபதேசத்தால் பிரம்மசாரி துவிஜன் (ஞானத்தால் மற்ரொரு ஜன்மம் எடுத்தவனுக) ஆவான். அவனுக்கு ஞானமும் திவ்விய திருஷ்டியும் உண்டாகும் என்பது அவர்களுடைய எண்ணம். உபநயனத்துக்கு பூணூல் தரிப்பதை ஒரு முக்கிய அங்கமாக அமைத்தார்கள். ஆரிய மதத்தில் சேர்ந்த எல்லா ஜாதியாரும்-அதாவது பிராமண, க்ஷத்திரிய, வைசியர்கள்-பூணூல் அணிந்து உபநயனத்துக்குத் தகுதியும் பெற்றிருந்தார்கள். ஆரியர்களில் முதலில் இந்த மூன்று ஜாதிகளே இருந்ததனுல் பூணூலாலேயே அவர்களை ஆரியர் என்று அறிய முடிந்தது.

கம்மவார் சூரிய, சந்திர வமிச க்ஷத்திரியர்கள் என்று தெரிவதனுல் ஆந்திரர்கள் ஆரியர்களோடு சேர்ந்த காலத்திலிருந்தே பூணூல் தரித்து உபநயனம் முதலிய சடங்குகளை மேற்கொண்டிருந்தார்கள். கி. மு. 3-ஆம் நூற்ருண்டில் சமண பௌத்த மதங்களில் சேர்ந்ததால் இந்த வழக்கங்களை கம்மவார் கைவிட்டிருக்க வேண்டும். இக்காலத்தில் ஆரியர்களாகிய பிராம்மண, க்ஷத்திரிய, வைசியர்களும் கம்மவார் வீடுகளில் உணவு கொள்ளும் சேணியர்கள், பட்டராஜுக்குள், அக்னிகுல க்ஷத்திரியர் எனப்படும் பள்ளிகள் (ஆந்திரப் பள்ளிகள், தமிழ்ப் பள்ளிகள் அல்லர்) முதலியவர்களும் பூணூல் அணிகிருர்கள்.

ஆரியர் காலத்தில் ஏற்பட்ட சூத்திரர்களுக்குக் கூடக் காலக்கிரமத்தில் உபநயனத்துக்குத் தகுதி இருந்தது. அவர்களும் வேதம் படித்தார்கள்; இதற்கு உதாரணம் தசரதன் கொன்ற முனி குமாரனே (வால்மீகி ராமாயணம்). இவன் வைசியனுக்கும் சூத்திர ஸ்திரீக்கும் பிறந்தவன் என்றும் வேத சாஸ்திரங்களை அத்தியயனம் செய்தவன் என்றும் சொல்லுகிருர்கள். ஹநுமான்

---

1. "அசார்ய உவன மானே பிரஹ்மசாரிணம் க்ருணுதே கர்ப்பமந்த:| தம் ராத்ரீஸ்திஸ்ர உதரேபிபர்த்தி தஞ்சாதம் திரஷ்டுமபி ஸம்யந்தி தேவா:|| (அதர்வண வேதம் 11-ஆம் காண்டம் 3.) இதனுடைய வித்யாரண்ய பாஷ்யம்; "பிரஹ்ம சாரிணம் மாணவகம் உபநயமான: ஸ்வசமீபம் உபகமயின்| ஆசார்ய; அந்த: வித்யாசரீரஸ்ய மத்யே கர்ப்பம் க்ருணு தேகாரேதி||.

வானரனாக இருந்தும் வேதம் முதலியவற்றைப் படித்திருந்ததாகச் சிலர் சொல்லுகிறார்கள். ருக்வேதம் 10-ஆம் மண்டலம் 3-ஆம் அநுவாகத்தில் 30 முதல் 34-ஆம் சூத்திரம் வரைக்கும் கவஷி அயிலூஷன் என்னும் சூத்திர ரிஷி பிரசாரம் செய்தார்.[1] பிரம்ம சூத்திரத்தில் இருக்கும் "அதாதோ பிரஹ்ம ஜிக்ஞ்யாஸ" என்னும் சூத்திரத்துக்கு சங்கராசாரியார் எழுதின பாஷ்யத்திலும் நான்கு விதச் சாதனைகளைச் சம்பத்தாகப் பெற்ற எல்லோரும் பிரம்ம விசாரணை செய்யலாம் என்று இருக்கிறதாலும், பிரம்ம வித்யை வேதங்களைவிடப் பெருமை பெற்றதாலும் இதைப் பிராம் மணர்கள் மட்டுமே கற்கவேண்டும் என்று வேதங்களில் எங்கும் காணப்படாததாலும் பெண்களுக்கும் சூத்திரர்களுக்குங்கூட பிரம்ம வித்யையையும் வேதத்தையும் கற்க உரிமை உண்டென்று இந்தப் பண்டிதர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். பராசர க்ருஹ்ய சூத்திரங்களிலும் விருத்த கௌதம ஸ்மிருதியிலும்[2] சூத்திரர் களுக்கு உபநயன அதிகாரம் இருப்பதாக எழுதியிருக்கிறது. இதனால் சூத்திர சாதியினருக்கும் இந்தச் சடங்குகள் இருந்தன.[3] அப்படிப்பட்டவர்களே காலக்கிரமத்தில் மேல் ஜாதிகளில் சேர்ந்ததாகவும் தோன்றுகிறது. இனிமேல் உபநயனத்தில் சொல்லப்படும் காயத்ரி மந்திர ஜபத்தின் உத்தேசத்தை ஆராய்வோம்.

அப்போதுதான் கொஞ்சம் உலக ஞானம் வந்து கொண்டிருக்கும் பிரம்மசாரிக்குத் தம் மதத்தில் ஆசையை உண்டாக்கவும், தாங்கள் தியானம் செய்யும் தேவதைகளிடம் பக்தியை மூட்டவும் உபநயனக் கொண்டாட்டமும் தேவதா மந்திரோபதேச

---

1. இதற்குப் பிரமாணம் ஐத்ரேயப் பிராம்மணம் 2-8-ல் இருக்கிறது. ருக் வேதத்தின் முதல் மண்டலத்தில் 17-ஆம் அநுவாகத்தில் இருக்கும் 19 முதல் 126 வரைக்கும் இருக்கும் சூத்திரங்களை கக்ஷவான் என்பவன் பிரசாரம் செய்தான். இவன் அங்கதேச ராஜனுடைய தாசி மகன் என்று ருக் வேதத்தின் அநுக்ரமணிகையிலும், வித்யாரண்ய பாஷ்யத்திலும், மகாபாரதத்திலும் காணப் படுகிறது. (புருஷார்த்தப் பிரகாசத்தையும் பார்க்க.) இவற்றைத் தவிர ஜான ஸ்ருதி என்னும் சூத்திரனும் குலம் இன்னதென்று தெரியாத ஜாபாலியும் இந்தச் சடங்குகளைப் பெற்று வேதாத்தியயனம் செய்ததாகக் காணப்படுகிறது.

1. "சூத்ராணாம துஷ்ட கர்மாணா முபநயனம்".

3. "அத்ரச சூத்ராவாஜ சனேயன : இதி வசிஷ்ட வாக்யாத். | "சூத் ரோவா சரீவ்ருத !" (அத். 14.)

மும் பூணூல் தரித்தலையும் ஆரியர்கள் செய்து வந்தார்கள்., அக் காலத்தில் சூரியன் அவர்கள் முக்கிய தெய்வங்களுள் ஒருவன். அதனால் சூரிய சம்பந்தப்பட்ட பிரார்த்தனையை முதலில் பிரம்ம சாரிகளுக்குக் கற்பித்து வந்தார்கள். இதுதான் காயத்ரி மந்திரம். சில ரிஷிகள் சற்றுப் பேதத்துடன் சொன்னாலும் மொத்தத்தில் இந்த மந்திரம் பின்வரும் உருவத்தில்தான் இருக்கிறது. "ஓம் பூர் புவ: சுவ: தத்ஸ விதுர்வ ரேண்யம், பர்கோ தேவஸ்ய தீமஹி, தியோயோன: பிரசோதயாத் |". சேவிக்கத் தகுந்தவனும் அஞ்ஞானத்தை அழிப்பவனும் தேஜஸ்வியும் ஆகிய சூரியனை, பூ, புவர், சுவர் லோகங்களுக்குத் தன் ஒளியைக் கொடுப்பவனை, எங்கள் புத்தியைப் பிரகாசப்படுத்துகிறவனைத் தியானிக்கிறோம்" என்பது இதன் பொருள். பாஷ்யக்காரர்கள் பலர் இதற்குப் பலவகையாக அர்த்தம் சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் ஆரிய மத சம்பிரதாயத்தை அறிந்தவர்கள் சூரிய பரமான இந்தப் பொருளையே ஒப்புக் கொள்கிறார்கள், ஆரியர்கள் தம் குழந்தை களுக்குச் சிறு வயதிலிருந்தே சூரியோபாசனையைக் கற்பித்து அதன்கூடவே வேதமும் கற்பித்தார்கள். அக்காலத்து ஆரியப் பிள்ளைகளுக்கு வேதங்களே பாடமாக இருந்தன. அப்போது எழுத்து இல்லாததால் மனன முறையிலேயே இவற்றைக் கற்பித்தார்கள். ஆரிய மதத்தில் சேர்ந்த எல்லோருக்கும் சூரியோ பாசன மந்திரமாகிய காயத்ரியை ஜபிக்க அதிகாரம் உண்டு என்பது மேலே சொன்ன விஷயங்களால் தெரியும். அதற்கு முதற்படி உபநயனம். பூணூல் போட்டுக் கொள்வது அதன் சின்னம்.

கம்மவாரின் முன்னோர்கள் க்ஷத்திரியர்களாக இருந்த காலத்தில் பூணூல் தரித்து காயத்ரியை ஜபித்து வந்தார்கள். ஜைன பௌத்த மதங்களில் சேர்ந்த பிறகு இவற்றை விட்டு விட்டார்க ளென்று முன்னமே சொல்லி யிருக்கிறோம். இவர்கள் திரும்பவும் சைவ வைஷ்ணவ மதங்களில் சேர்ந்த காலத்தில் பிறப்பாலேயே வர்ணப் பாகுபாடு ஏற்பட்டிருந்ததாலும், பிற மதங்களில் சேர்ந்தவர்களை மதாசாரியார்கள் மேல் ஜாதிகளில் சேர்க்காததாலும் நான்காம் வருணத்தில் சேர்ந்து சத்சூத்திரர்கள்

என்று பெயர் பெற்றதாகத் தெரிகிறது. இவர்களைப் போன்ற சத்சூத்திரர்களுக்காகவே சூத்திர கமலாகரம் என்ற ஸ்மிருதியைக் கூட இயற்றும்படி நேர்ந்தது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே சத்சூத்திரர்களாகிய கம்மவார் இப்போது பூணூல் தரிப்பது குற்றமென்று சிலரும், குற்றமில்லையென்று சிலரும் தர்க்கிக்கிறார்கள். பூணூல் ஆரிய மதத்தின் ஒரு சின்னமே ஒழிய அதில் விசேஷம் வேறொன்றும் இல்லை. சைவர்களுக்கு விபூதி ருத்ராக்ஷமும், வைஷ்ணவர்களுக்குத் திருமண் ஸ்ரீ சூர்ணமும், லிங்கதாரிகளுக்கு லிங்க தாரணமும்போல ஆரியர்களுக்குப் பூணூல் ஒரு சின்னமே.[1]

கம்மவார் இன்றைக்கும் உத்திரகிரியைகளிலும் கல்யாண சமயங்களிலும் பூணூல் தரிப்பது வழக்கமாக இருக்கிறது. இது தொன்றுதொட்ட வழக்கம்; புதிதல்ல. பூணூல் தரிப்பதற்கு முக்கிய காரணம் உபநயன சம்ஸ்காரமே. இதற்கு மூலகாரணம் சூரியோபாசனை என்று சொல்லியிருக்கிறேன். இவைகளை ஆதி மதத்தினர் எல்லோரும் அநுசரிப்பதற்குச் சாஸ்திரத்தில் தடையில்லை. காயத்ரி உபாசனை செய்யாமல் பேருக்குப் பூணூலை மாட்டிக் கொண்டிருப்பதால் எந்த லாபமும் இல்லை. காயத்ரி உபாசனையால் பல காரியங்கள் சித்திக்கும் என்பது ஆரியர்களின் நம்பிக்கை. தம் மதத்தினர் எல்லோரும் அந்த லாபத்தைப் பெற வேண்டும் என்பதே அவர்கள் விருப்பம். வேத காலத்து ஆசாரங்களே சிறந்தவை என்று நம்புகிறவர்கள் உபநயனத்தை மேற்கொள்ளச் சாஸ்திரத்தில் தடையில்லை என்று ஸ்ரீ. ஜீ. என். பி. சரஸ்வதி சுவாமிகள் பல சபைகளில் சொல்லியிருக்கிறார். கம்மவாரிலும் சிலர் இப்போது விழித்துக் கொண்டு உபநயன சம்ஸ்காரத்தை மேற்கொள்ளுகிறார்கள்.

முற்காலத்தில் ஒரு ஜாதியினர் வேறொரு ஜாதியில் சேரும் வழக்கம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இக்காலத்தில் அந்த வழக்கம் இல்லை; அதனால் அந்தச் சம்ஸ்காரத்தை ஒப்புக்கொள்ள

---

1. எல்லா ஜாதியாரும் யாகம் (யக்ஞம்) செய்வதுண்டு. அதற்கு உபவிதயே யக்ஞோபவிதம் மந்திரம் சொல்லாமல் பஞ்ச யக்ஞமும் செய்ய சூத்திரர்களுக்கு அதிகாரம் உண்டு என்கிறது பாரதம். இது சத்சூத்திரர்களை உத்தேசித்து எழுதியதுதான்.

முடியாது என்று சிலர் தர்க்கம் செய்கிறார்கள். கோவர்த்தன சங்கேசுவரபீடத்துச் சங்கராச்சாரியார் சமீபத்தில் இதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். இங்கே உள்ள கம்மவாரைப் போல வட இந்தியாவில் ஜாதி மாறிய கூர்ம க்ஷத்திரியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் உபநயன ஸம்ஸ்காரம் செய்து கொள்ளலாம், பூணூல் தரிக்கலாம் என்று ஸ்ரீ சுவாமிகள் அநுமதி கொடுத்திருக்கிறார். உன்னவ ஜில்லாவிலும் கொல்ஹாப் பூரிலும் தாமே இவற்றைச் செய்திருக்கிறார். இவற்றை எல்லோரும் செய்துகொள்ள வேண்டுமென்று பரேஹட்டா கிராமத்தில் 1912-ல் நடந்த சபையில் தீர்மானித்ததாகவும் தெரிகிறது.[1] இந்து மதம் இன்றைக்கும் சங்கர பீடாதிபதிகளுக்கு உட்பட்டே இருப்பதனால் அவர் தீர்மானமே முடிவானது. வெகுகாலத்திலிருந்து ஜாதி தருமத்தை விட்டிருந்தபடியால் இவர்கள் யாக்ஞவல்க்யர் முதலிய ரிஷிகள் விதித்த பிராயச்சித்தம் செய்து கொண்ட பின்பே பூணூல் தரிக்க வேண்டுமென்பது இவருடைய உத்தேசம். காசி பண்டிதராகிய ஸ்ரீமத் மாத்வ காதேசுவராசாரியார், ராத ரமண சேவாதிகாரி, பிருந்தாவன வாசி, ராதாசரண கோஸ்வாமி சபாபதி முதலியவர்களும் இதற்குச் சம்மதித்தார்கள். கம்மவார் உபநயனம் செய்து கொள்ள உரிமை உள்ளவர்கள் என்பதைக் காட்டவே மேலே கண்ட ஆதாரங்களைக் காட்டினேன். பழைய ஆரிய மதம் முழுவதும் அழுகி நாற்றமடித்து பல ஜாதிகளும் ஒன்றாய் வரும் இக்காலத்தில் இந்த ஆராய்ச்சிகளுக்கு என்ன மதிப்பு இருக்கும் என்பது எனக்குத் தெரியாத தன்று. கம்மவாரின் முன்னோர்கள் இந்தச் சம்ஸ்காரங்களை மேற்கொண்டிருந்தார்கள். ஆரிய மதத்தினர் எல்லோருக்கும் இதற்கு அதிகாரம் இருந்தது. பிற்காலத்தில் இந்த நிலை மெல்ல மெல்ல மாறிவிட்டது என்பவையே நாம் சரித்திரத்தால் அறிந்து கொள்ள வேண்டிய அமிசம்.

## கம்மவாரின் ஆசாரங்கள்

வேதகாலம் முதல் கம்மவாரின் முன்னோர்கள் ஆந்திரர்களில் ஓர் இனத்தாராக இருந்தார்கள். சூரிய சந்திர வமிசங்களில்

1. கம்ர மகாராஜா—1936–37 பார்க்க.

சேர்ந்து அவர்களுக்கு விதிக்கப்பட்ட தருமங்களை நிறைவேற்றி வந்தார்கள். வைசியத் தொழிலை மேற்கொண்ட வெகு சிலர் உழுது வாணிபம் செய்து வந்தார்கள். க்ஷத்திரியத் தொழிலுடன் உழவையும் செய்து வந்ததாகவே கொள்ள வேண்டும். அக் காலத்தில் விக்கிரக ஆராதனை இருக்கவில்லை. சமண பௌத்த மதங்களில் சேர்ந்த காலத்தில் இவர்களுக்கு வேறு ஆசாரங்கள் பிடிபட்டன. க்ஷத்திரியத்வம் குறைந்திருந்தது. ஒருபுறம் அஹிம்ஸை முறையும் ஒருபுறம் வாணிகமும் செழித்தன.

கிறிஸ்து சக முதல் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தப் பௌத்த சமண மதங்களுக்குப் போட்டியாகப் புதிய சைவ, வைணவ மதங்கள் தோன்றின. குப்த அரசர்கள் நம் நாட்டை ஆண்ட காலத்தில் அவை ஒளிவிட்டுப் பிரகாசித்தன. அஸ்வமேதம் முதலிய யாகங்கள் மேலோங்கின. மறுபடியும் சமண மதம் கிளைத்தெழுந்தது. ஒருபுறம் சைவ வைஷ்ணவ மதங்களும் மற்றொருபுறம் பௌத்த சமண மதங்களும் தேவாலயங்கள் என்ற பெயராலும் ஸ்தூபங்கள் என்ற பெயராலும் பல மத ஸ்தாபனங் களை அமைத்து விருத்திக்குக் கொண்டு வந்தன. அவைபோன்ற மதங்களிற் புகுந்த கம்மவாரின் முன்னோர்கள் அந்த அந்த மதங் களைப் போஷித்து அவற்றின் நியமங்களுக்குக் கட்டுப்பட்டிருந் தனர். இந்த ஸ்தாபனங்களை ஏற்படுத்திப் போஷித்து வந்த அரசர்களின் சரித்திரங்களை வரும் பகுதிகளில் தெரிந்த மட்டும் விவரிப்போம்.

கிறிஸ்து சகம் சுமார் 1600-லிருந்து கம்மவார் முக்கியமாகத் தேவாலயத்தைப் போஷிப்பதில் இறங்கினார்கள். இவர்களில் பலர் வீர சைவர்களும் பலர் வீர வைஷ்ணவர்களும் ஆனார்கள். நம் நாட்டில் படையெடுத்த மகம்மதியர்கள் சைவம், வைஷ்ணவம் என்ற பேதமின்றி கண்ணில் கண்ட கோயில்களை எல்லாம் அழித்தார்கள். அது முதல் அதாவது 14-ஆம் நூற் றாண்டு முதல் வீர சைவர்களும் வீர வைஷ்ணவர்களும் தங் களுக்குள் சண்டை போட்டுக் கொள்ளாமல் ஒற்றுமைப் பட்டார்கள் என்று தோன்றுகிறது. ஹேமாத்ரி கண்டத்தில் சொல்லியபடி பல தான தர்மங்கள் செய்து அறங்களை வளர்ப்

பதில் முனைந்தார்கள். இவர்கள் சத் சூத்திரர்கள் ஆன போதிலும் 16-ஆம் நூற்றுண்டு வரையில் க்ஷத்திரிய ஆசாரங்களை விடவில்லை என்றே தோன்றுகிறது. அதற்குப் பிறகு ஆசாரங்கள் வேருயின; கோத்திரங்கள் மாறின. அவற்றை சொல்வதற்காக ஒரு கூட்டம் ஏற்பட்டது. வந்தி மாகதர்களைப்போல் பட்ராஜுக்கள் ஏற்பட்டார்கள்.

பெருந் தொகையைக் கொண்ட கம்மவார் பல இடங்களில் வசித்தார்கள், அந்தந்தப் பிரதேச வழக்கங்களை அநுசரித்தார்கள். சிலர் பழம் பெருமை பெற்ற வேத மந்திரத்தையும், சிலர் புராண வழிகளையும் பின்பற்றினர். சிலர் இறந்த வீரர்களை (ஞாபகச் சின்னமாக) வழிபடுகிருர்கள். தோசை, முறம், திருமாங்கல்யம் இவற்றைத் தானம் செய்வது கம்மவார்ப் பெண்களின் வழக்கமாயின. இவை கட்டாயம் செய்ய வேண்டியவை. இவ் வழக்கம் இன்னும் அப்படியே நடக்கிறது. கல்யாண காலங்களில் நடை பாவாடை விரித்துக்கொண்டு போய்க் கிராம தேவதைகளை வழிபடும் வழக்கமும் சில இடங்களில் இருக்கிறது. கல்யாணப் பிள்ளை பெண் வேஷமும் கல்யாணப் பெண் ஆண் வேஷமும் போட்டுக் கொண்டு போய்த் தெய்வங்களை வணங்குவது உண்டு. இது காகதிய ருத்ரம தேவியின் வேஷத்தைப் பின் பற்றும் ஐதிஹ்யமாக இருக்கலாம். வீரர்களை அடக்கம் செய்த பெட்டிகள் பல கம்மவார் வீடுகளில் இருக்கின்றன. வேத கால வழக்கப்படியே கம்மவார் இப்பொழுதும் ஸத் சூத்திரர்கள் வீட்டில் சாப்பிடுவார்கள். இடையர், தெலகர், பலிஜர், வெலமவார், காப்பு, ரெட்டி, குயவர், சேணியர் முதலிய இனத்தவரே இக்காலத்துச் சத் சூத்திரர்கள். பட்ராஜுக்களுக்கும் பிச்சிகுண்ட்டுவாருக்கும் கம்மப் பிரமுகர்கள் நிலங்களைச் சாசுவதமாகத் தானம் செய்திருக்கிருர்கள். இப்படித் தானம் பெற்றவர்கள் பரம்பரையாகக் கம்மவாரை அண்டிப் பிழைப்பவர்கள்.

காஞ்சிபுரம் முதலாகத் (மலையாளம் தவிர) தென்னுடு பூராவிலும் வசிப்பவர்களில் இடது சாரி வலது சாரி என்ற பேதம் இருக்கிறது. இந்தப் பிரிவு ராஜ ராஜ நரேந்திரன் காலத்தில் ஆரம்பித்திருக்க வேண்டு மென்பது சில சாஸனங்கள் மூலம்

தெரிகிறது.[1] (J. A. H. R. S. Vol. IV) வலச்சாரியாரில், வைசியர்கள், கன்னர், வண்ணர், நாவிதர், வெள்ளாளர், பறையர், ரெட்டிகள், கம்மவார், பலிஜர், இடையர், பத்மசாலியர், ஜாண்டிரர், தொம்பர், லம்பாடி, குறவர், பூசாரி என்பவர் முக்கிய மான இனங்கள். இடச்சாரியில் தட்டார் ஐந்து பிரிவினர், (விச்வப் பிராம்மணர்கள்) சக்கிலியர், பள்ளிகள், பேரி செட்டிகள், தேவாங்க செட்டிகள் 'முதலியவர்கள் முக்கியமானவர் கள். வலச்சாரியார் மட்டுமே கல்யாண காலங்களில் 12 குஞ்சலு (ஓர் அளவு) நீளம் பந்தல் போடலாம், குதிரை ஏறலாம்; மற்றவர் அந்த அளவு பந்தல் போடக் கூடாது, குதிரை ஏறக் கூடாது என்றும் சொல்வார்கள். இந்த வழக்கங்கள் தெலுங்கு ஜில்லாக்களில் முற்காலத்தில் இருந்த மகாநாட்டு வேலை நிறுத்த ஆசாரங்களை நினைவூட்டுகின்றன. இந்த வலச்சாரி இடது சாரி முறையில் பிராம்மணர்களும் சாத்தானிகளும் சேரவில்லை என்று சொல்வார்கள். தென்னாட்டுக் கம்மவார் வலச்சாரியாகவே இருந்ததாகத் தெரிகிறது. இவ்விஷயத்தைப் பற்றி மதராஸ் மான்யுவலில் டாக்டர் மெக்ளீன் என்பவர் விவரித்திருக்கிறார். பல ஜாதியாரின் கொடி அடையாளங்களும் அதில் காணப் படுகின்றன. அவற்றை இங்கே விவரிக்கின்றேன்.

வடுக வல்லாளர்களுக்கு அன்னக் கொடி, ரெட்டிகளுக்குக் கலப்பை, கம்மவாருக்கு எருது, (பஸவசங்கர) கோமட்டிகளுக்குத் துணிக் கொடி, இடையர்களுக்குச் சக்கரம், தெலுங்கு இடையர் களுக்குச் சங்கு, கன்னட இடையர்களுக்குப் பஞ்சவர்ணக் கூடாரம், பத்மசாலியருக்கு வேங்கைப் புலி, பட்டு நூல் காரருக்கு இரு தலைப் பறவை, ஜாண்ட்ர ஜாதியாருக்கு முதலை ஆகியவை கொடிகளாம். இது போலவே, பேரி செட்டிகளுக்குக் (இவர்களே உண்மைக் கோமட்டிகள் என்பர்) கழுகுக் கொடி. இப்படிப் பல சின்னங்கள் இருந்தனவாம். இவைகள் முற் காலத்தில் யுத்த சமயத்தில் உபயோகிக்கப்பட்டன. வலச்சாரியில் 98 ப் பிரிவு களும் இடச் சாரியில் 98 ப் பிரிவுகளும் இருக்கனவாம். இவை களும் கொடிகளும் கரிகால் சோழன் காலத்தில் ஏற்பட்டவை

1 No. 341 of 1907 & No. 59 of 1914

யாம். 'இந்த இரு சாரிப் பிரிவும் அரசாங்க முறையில் ஏற்பட்டன. வர வர இதில் பிளவு தோன்றி ஆபத்துக் கிடமாய்க் கூட விரோதம் மூண்டது கல்யாண காலங்களில் இரு சாராரின் மேள தாளங்கள்கூட வேறு பட்டனவாகவே இருக்கும் என்று செங்கல்பட்டு ஜில்லா மான்யுவலில் காணப்படுகிறது- இந்த இரு சாரிப் பிரிவு, மைசூர் முதலிய கன்னட ஜில்லாக்களில் கூடப் பரவியது. காஞ்சிபுரத்தில் ஒரு சாரியாரின் தெருவுக்கும் கோவி லுக்கும் கூட மற்ற சாரியார் போகமாட்டார்களாம். இந்த வழக்கம் முதலில் தமிழ் நாட்டில் தோன்றியதே; பிற்காலத்தில் அங்கே குடியேறிய கம்மவாருக்குள்ளும் இந்த இரு சாரிகளும் தோன்றின. இந்த மூட வழக்கங்கள் இன்னும் அழியாதிருப்பது வருந்தற்குரியதே. இந்த தொண்ணூற்றெட்டு ஜாதியாரும் இரு சாரியுலும் சேர்ந்திருக்கிறார்கள். வெள்ளாளர்களும் ரெட்டிகளும் இடது சாரியினர் என்று மதராஸ் மான்யுவலில் காணப்படுகிறது. மெக்கன்ஸீ துரை லோகல் ரிக்கார்டில் (வால்யூம் X L VI Nos. 29 & 31) வேறு விதமாக எழுதி யிருக்கிறார். வேறு பல ஜாதியி னரைப் பற்றியும் இப்படியே மாறுபட எழுதப்பட்டிருக்கிறது. யுத்த காலத்தில் சௌகரியத்துக்காகத் தோன்றிய இந்தப் பிரிவுகள் பின்னால் மூட நம்பிக்கைகளுக்கு இருப்பிடமாயின. இவர்கள் இப்போது வலது மேலாக்கு, இடது மேலாக்கு என்று சில இடங்களில் சொல்கிறார்கள். அவர்களுடைய பெண்கள் இக் காலத்திலும் வலது மேலாக்கு இடது மேலாக்கு என்ற முறையை அனுசரிக்கிறார்கள்.

கம்மவாருக்குச் சுமார் 10-ஆம் நூற்றாண்டிலிருந்து வந்த வீட்டுப் பெயர்களைப் பற்றிச் சொல்லுகிறேன்.

## கம்மவாரின் வீட்டுப் பெயர்களும் கோத்திரங்களும்

(அகராதி)

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் |
|---|---|---|
| அண்ட்ர | — | ஸன்னூலு, துதுருள்ள |
| அம்பட்டி | — | நேதுட்ல, யேலூரி |
| அக்கின | — | செரகு நூள்ள |
| அக்கினேனி | — | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் |
|---|---|---|
| அட்லூரி | — | தாஸனூரள்ள |
| அடப்பா | — | முதுநூள்ள |
| அடுஸு மல்லி | — | ஆருநூள்ள |
| அட்டகட | — | கூடுட்ல |
| அட்டகாடி | — | கொத்துட்ல |
| அத்தலூரி | — | கந்தாளத்ரீ (கந்தவிரி) |
| அத்தாட்டா | — | பமிடிபாள்ள |
| அத்தூரி | — | |
| அத்தங்கி | — | |
| அத்தே பல்லி | — | |
| அனந்தனேனி | — | குந்தனூ |
| அனபால | — | தாள்ளூரு |
| அனுமோலு | — | தாள்ளூரு |
| அன்னமனேனி | — | பமிடிபாள்ள |
| அன்னம் | — | செருகுநூள்ள |
| அன்னெ | — | தாடிபாள்ள |
| அன்னேரி | — | தாடிபாள்ள |
| அப்பூரி | — | தாடிபாள்ள |
| அமரினேனி | — | பாலுட்ல |
| அமிவினேனி | — | பெட்லூரி |
| அம்மினேனி | — | கஞ்சர்ல |
| அயினல | — | |
| அரவபல்லி | — | விப்பர்ல |
| அரிபெனேனி | — | |
| அலவபர்த்தி | — | தாடிபாள்ள, செருகுநூள்ள |
| அல்ல | — | யினகண்டி, வெலக |
| அல்லீனி | — | |
| அல்லூரி | — | யனகண்டி |
| ஆசரிரு | — | ஆருவேள்ள |
| ஆடேரு | — | |
| ஆது கூரி | — | போகுநூள்ள |
| ஆதூரி | — | பாலேட்டி, பாப்பில்லி |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| ஆரெ | — | யேல்பு நூள்ள | |
| ஆரெக பூடி | — | வல்லுட்ல | |
| ஆலபாட்டி | — | தானுள்ள, பாலுட்ல | |
| ஆலமனேனி | — | எல்லுட்ல | 40 |
| ஆலமு | — | | |
| ஆலூரி | — | விப்பர்ல, பிடுகுநூள்ள, அரவ | |
| ஆலோவரி | — | தான்யால [பல்லீ | |
| ஆள்ள | — | குரிஜால, ஆல்ப்பூரி | |
| ஆள்ளூரு | — | ஆருநூள்ள | |
| ஆவுலபாட்டி | — | விப்பர்ல | |
| இன்டூரு | — | பிருகு நூள்ள | |
| இந்த்ரபுரமு | — | | |
| இனகொல்லு | — | ரெட்டுவாள்ள | |
| இப்பர்ல, அல்லது விப்பர்ல | — | | 50 |
| இம்மடி | — | | |
| இரிகினேனி | — | வேலுபு நூள்ள | |
| ஈடுபுகண்டி | — | ஜெரகுநூள்ள | |
| ஈதுல | — | செரநூள்ள | |
| உன்னம, உன்னவ | — | ராஜேந்திர | |
| உப்பல, உப்பாள்ள | — | விப்பர்ல | |
| உப்பல பாட்டி | — | உப்பு நூள்ள | |
| உப்புகுன்ட்ல | — | | 60 |
| உம்மனேனி | — | பட்டுநூள்ள | |
| உம்மினேனி | — | யெனகண்டி | |
| ஊனுபாது | — | | |
| எண்டபல்லி, எண்ட்ரபல்லெ | — | அயோத்ய | |
| எண்ட்லூரி அல்லது யண்ட்லூரி | — | சிலகநூள்ள | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| எட்டூரி | — | | |
| எத்தினேனி | — | | |
| எத்துல | — | பிமவரபு | 70 |
| எனமந்தல | — | | |
| எனிகள்ள அல்லது வெனிகள்ள | — | | |
| எரநூலி | — | ரேஷமு | |
| எரபோதுல | — | போகுநூள்ள | |
| எர்ரமனேனி | — | தாள்ளூரி | |
| எர்ரமஸானி | — | தாள்ளூரி | |
| எர்ரகுண்டல | — | மகராஜ | |
| எர்னேனி | — | பானுகூள்ள, வெய்மி நூன்ன | |
| எலம்பாட்டி | — | ஏருபுரி | |
| எலமஞ்சி அல்லது யலமஞ்சி | — | வல்லுட்ல | |
| எலிவெல | — | முஸாநூள்ள | 80 |
| எல்லண்டி | — | | |
| எல்லாட்டி | — | | |
| எல்லுட்ல | — | | |
| ஏஜெண்ட்ல அல்லது வேஜெண்டல | | | |
| ஏட்டிகூரு | — | | |
| ஏனுகுல | — | என்னூள்ள | |
| ஏமினேனி | — | | |
| ஏரமு | — | பாலுட்ல | |
| ஏருவ | — | பாலமுக்கல, பாலுட்ல | |
| ஏலூரு | — | எல்லுட்ல, ரகுபல்லெ | 90 |
| ஏள்ள | — | ரகுபல்லெ | |
| ஒட்டிகுண்ட | — | செருகூரு | |
| கங்கனால | — | கண்ட்ருள்ள | |
| கங்கணி | — | கண்ட்ருள்ள | |
| கஞ்சேர்ல | — | பமிடி பாள்ள | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| கஞ்ஜால | — | சந்த்ரபாள்ள | |
| கன்டிநேனி | — | பரம்படி | |
| கண்ட்டமநேனி | — | ஆவாலா | |
| கன்தேடி | — | | |
| கந்தர்ப்ப | — | | 100 |
| கந்தார | — | கோகுபூடி | |
| கந்தால | — | வஜ | |
| கந்தாளம் | — | | |
| கந்தி காயல் | — | யாலேட்டி | |
| கந்தி மள்ள | — | யார்லல | |
| கந்தி பேடல | — | மேடிபள்ள | |
| கந்துல குன்ட | — | ரேஷமு | |
| கட்டா | — | குரிஜால | |
| கட்டி கூட்டி | — | கொமெர நூள்ள | |
| கட்டு | — | மட்டநூள்ள, புலிபேள்ள | 110 |
| கட்டாரி | — | கனுபர்த்தி | |
| கடியால | — | விப்பர்ல, வல்லுட்ல | |
| கத்தி | — | | |
| கனகல பாட்டி | — | | |
| கனக மேடல | — | விப்பர்ல | |
| கனகால | — | சண்ட்ருள்ள | |
| கனுமூரு | — | அன்னங்குல | |
| கன்னெகண்டி | — | பச்ச நூள்ள | |
| கன்ய தார | — | | |
| கப்ப கன்டி | — | கஞ்செர்ல | 120 |
| கரதேட்டி | — | கொண்டுட்ல | |
| கர நூதல | — | | |
| கரிபெபேனி | — | | |
| கர்னமூ | — | கஞ்செர்ல | |
| கர்நாட்டி | — | | |
| கர்லபூடி | — | கொலுகு நூள்ள | |
| கலகர | — | வல்லுட்ல | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| கரபால | — | கண்ட்ருள்ள | |
| கவிஸி | — | | |
| கவிதேர | — | | 130 |
| கல்லா | — | பமிடிபாள்ள | |
| கல்லூரு | — | பகிபல்லெ | |
| கஸாகுர்த்கி | — | விப்பர்ல | |
| கஸாமூர்த்த | — | வல்லுட்ல | |
| கஸாமூர்த்தி | — | வல்லுட்ல | |
| காண்ட்ர | — | பாலுள்ள | |
| காம்பல்லெ | — | வல்லுட்ல | |
| காகரால | — | | |
| காகர்ல | — | தாட்டிபால, ஏகண்ட்ல, மாமிள்ள, விப்பர்ல | |
| காகுமாது | — | தான்யால | |
| காகுர்ல | — | டைநோள்ள | 140 |
| காகுல | — | டைநோள்ள | |
| காகூரி | — | | |
| காஜ | — | யவுஸாரு | |
| காட்ட கூட்டி | — | | |
| கர்ட்டர் | — | வல்லுட்ல, சொகுநூள்ள | |
| காட்டுரு | — | மூதுநூள்ள | |
| காட்ர கட்ட | — | குரிகிஞ்ஜ பாலெம் | |
| காத்தினேனி | — | | |
| கானுமில்லி | — | | |
| கானூரி | — | தேசெட்ல | 150 |
| காப்பு | — | புலிகோள்ள | |
| காமினி | — | வல்லுட்ல | |
| காமிநேனி | — | வல்லுட்ல | |
| காமே பல்லி | — | வல்லுட்ல | |
| காரஸானி | — | | |
| காருசெர்ல | — | தாட்டிபூல (தாடிபாள்ள) | |
| காருமஞ்சி | — | பமிடிபாள்ள | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| காருமூரி | — | விப்பர்ல | |
| காலயன் குராஸி | — | | |
| காலாரி | — | வல்லுட்ல | 160 |
| காஸரநேனி | — | | |
| காஸா | — | யாராயி | |
| காளஹஸ்தி | — | ராவிபாள்ள | |
| கிலாரி | — | கொர்னிபாள்ள, வல்லுட்ல | |
| கும்கா | — | பாலு நெய்யி | |
| குன்ட்ல | — | பகிடிபல்லி | |
| குந்தூரு | — | மாதுநூள்ள, சண்ட்ரூள்ள | |
| கும்பினி | — | | |
| குக்கன | — | மாருட்ல | |
| குக்கபுல்ல | — | | 170 |
| குடித்திபூடி | — | போகு நூள்ள | |
| குதுரவல்லி | — | | |
| குதுள்ள | — | | |
| குனுகோலு | — | சண்ட்ரூள்ள | |
| குரசல | — | | |
| குருபாட்டி | — | பாகுமானு, வல்லுட்ல | |
| குர்ர | — | குரிச கண்ட்ல, வல்லுட்ல | |
| குர்ரா | — | வல்லுட்ல, தாடிபாள்ள | |
| கூச்கி | — | கலுமூரி | |
| கூச்சிபூடி | — | | 180 |
| கூஸு | — | நாடிவுட்ல | |
| கூஸு பாட்டி | — | | |
| கென்ன | — | | |
| கென்னினி | — | | |
| கேதநேனி | — | | |
| கேஸானி | — | | |
| கொங்கா | — | பாலேட்டி | |
| கொங்கர | — | வல்லுட்ல | |
| கொங்கல | — | மாருட்ல | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| கொண்டபாட்டி | — | வல்லுட்ல, செருகுநூள்ள | 190 |
| கொண்ட | — | | |
| கொண்டபோலு | — | | |
| கொண்டப்ப நேனி | — | சிராவஸ்தி | |
| கொண்ட்ர | — | செருகூரு | |
| கொண்ட்ரகுன்ட | — | விப்பர்ல, செருகுநூள்ள | |
| கொண்ட்ரு | — | பாமுநூள்ள, பாலுட்ல | |
| கொட்டுரு அல்லது கோட்டூர் | — | பாமுநூள்ள, நூஜெள்ள | |
| கொடவலி | — | சிரிநூள்ள, திருநூள்ள | |
| கொடாவி | — | சிருநூள்ள, சிகநூள்ள | |
| கொணிதெல | — | | 200 |
| கொத்த | — | வனுகுநூள்ள, பைடிபால | |
| கொன்னிபாட்டி | — | பொன்னுலூரு | |
| கொப்பாகு | — | பமிடிசுக்கல | |
| கொப்பில்லி | — | நாயிநேனி | |
| கொம்மாரெட்டி | — | மாருட்ல | |
| கொம்மாலபாட்டி | - | வல்லுட்ல | |
| கொம்மி நேனி, கொம்மிநீடு | - | தாடிபாள்ள, போகோலு, விப்பர்ல, சண்ட்ருள்ள, கோகுநூள்ள, போகுநூள்ள | |
| கொம்மிஸானி | — | கொம்மூரி | |
| கொம்மு | — | | 210 |
| கொரகன்டி | — | போகுநூள்ள | |
| கொரமரானி | — | பமிடிநூள்ள | |
| கொர்ர கூட்டி | — | எல்லுட்ல | |
| கொர்ரபாட்டி | — | செருகூரு, தசரதுல, புரதாள்ள | |
| கொல்லப்பநேனி | — | | |
| கொல்லா | — | பமிடி பாள்ள | |
| கொல்லி | — | பைடி பாள்ள | |
| கொல்லூரு | — | | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| கொல்லின | — | தாட்டிபாள்ள | |
| கொஸராஜு | — | மோநூள்ள, மதநூள்ள | 220 |
| கோகா | — | | |
| கோகன்டி | — | ரேசெர்ல | |
| கோட்ட | — | ஜவ்புடி, வல்லுட்ல, பமிடிபாள்ள | |
| கோட்டா | — | தடிமர்த்தி | |
| கோடுள்ள | — | | |
| கோடூரு | — | பமிடிபாள்ள | |
| கோடெ | — | முஸுநூள்ள | |
| கோனங்கி | — | செருகூரு | |
| கோனபல்லி | — | | |
| கோனம நேனி | — | | 230 |
| கோனு | — | | |
| கோனேரு | — | செருகுநூள்ள | |
| கோமட்டி | — | வல்லுட்ல | |
| கோமட்டி வீடு | — | வல்லுட்ல | |
| கோய | — | வல்லுட்ல | |
| கோவி | — | கோகுநூள்ள | |
| கோவூரு | — | | |
| கோவெல மூடி | — | | |
| கங்கா | — | கொண்டபாள்ள | |
| கங்கிநேனி | — | புனுகோட்டி | 240 |
| கங்கிரெட்டி | — | | |
| கண்டா | — | பமிடி சுக்கல | |
| கந்தமுநேனி | — | கணபர்த்தி | |
| கட்டமு | — | | |
| கட்டி நேனி | — | | |
| கடிபூடி அல்லது | | | |
| கடிபூட | — | அயோத்ய | |
| கட்ட | — | முதுநூள்ள | |
| கட்டமு | — | செருகுநூள்ள, ராமநூள்ள | |
| கட்டமடுகு | — | அடுஸுமல்லி, பகிலிபாள்ள | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| கட்டி பாட்டி | — | | 250 |
| கண்வர்த்தி | — | பேரெமு | |
| கத்தெ | — | தான்யால, பாலகுல | |
| கனிபூடி | — | | |
| கன்னம நேனி | — | | |
| கன்தென | — | பாலுட்ல, பாலடுகு | |
| கரிகிபாட்டி | — | விப்பர்ல, புரியாள்ள, பமிடிபாள்ள | |
| கரிமிடி | — | ஜென்னூடி | |
| கரிமெள்ள | — | | |
| கர்னீடி | — | பமிடி பாள்ள | |
| கவினி | — | ரேசெர்ல, கொர்ரபாள்ள | 260 |
| காட்டி பாட்டி | — | குருகூள்ள | |
| காடிபர்த்தி | — | மாருட்ல | |
| காமிநேனி | — | பஸுபுநூள்ள | |
| காரபாட்டி | — | | |
| காலி | — | டக்குடேள்ள, மிஸிநில | |
| கிஞ்ஜுபல்லி | — | விப்பர்ல | |
| கிம்பல்லி | — | பமிடிபாள்ள | |
| கிரிசால | — | பாலுட்ல, சன்ட்ருள்ள | |
| குன்டா | — | பமிடிபாள்ள | |
| குன்டுபல்லி | — | மன்னவ, சாமஞ்சுல, மாருட்ல | 270 |
| குன்டூரு | — | பெத்தபாள்ள | |
| குண்டால | — | தாள்ளூரு, போகுநூள்ள | |
| குந்தெ | — | மினகன்டி | |
| குஜ்ஜர்ல பூடி | — | பேரால | |
| குட்ல | — | எர்ரநூள்ளு | |
| குடிபாட்டி | — | பெத்த பாள்ள | |
| குடுபூடி | — | | |
| குடேரி | — | சதகோடி | |
| குத்தா | — | பகிடிபாள்ள, பமிடிபாள்ள | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் |
|---|---|---|
| குதெ | — | பன்னூள்ள, போகுநூள்ள, விப்பர்ல 280 |
| கும்மடி | — | விப்பர்ல, தாள்ளூரு |
| குரஜால | — | குடிமெள்ள |
| குர்ர | — | தொர்னூள்ள |
| குர்ரமு | — | பகிடி பாள்ள, தாள்ளூரி, புலயாள்ள, வல்லுட்ல, சிலுகொலகல |
| குள்ளபல்லி | — | மாருட்ல |
| கூடவல்லி | — | |
| கூனூலு | — | கஞ்சர்ல |
| கொந்தி | — | பகிடிபாள்ள |
| கொட்டிபாட்டி | — | ராஜனுல அல்லது ராஜன்புல |
| கொட்டு முக்கல | — | பமிடிபாள்ள, யண்ட்ராஜுல 290 |
| கொடுகத்தி | — | |
| கொடுகுல | — | |
| கொப்பூரி | — | |
| கொரிஜலி, குருஜால | } | குருகுதூள்ள |
| கொர்த்தி | — | மொகலிரேகுல |
| கொர்ரெபாட்டி | — | |
| கொல்லபூடி | — | வல்லுட்ல |
| கோகராஜு | — | தாரிநேனி, கானூள்ள |
| கோகினேனி | — | கொர்ர பாள்ள, யேநூள்ள, கஞ்சர்ல, வீரங்கி 300 |
| கோனுகுன்ட்ல | — | ஏர்வாகுல, கஞ்செர்ல |
| கோபி | — | |
| கோபின | — | |
| கோரண்ட்ல | — | குரிஜால, கோகுநூள்ள, டங்குட்ரூ, டங்கு ஜால, ஆருநாள்ள, முப்பால |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| கோள்ளமூடி | — | | |
| சட்டமநேனி | — | | |
| சண்ட்ர | — | | |
| சக்கா | — | | |
| சதல வாட | — | முட்னூரு | |
| சனு கொண்ட | — | பாப்பில்லி | 310 |
| சன்னமோலு | — | | |
| சப்பி | — | | |
| சப்பிடி | — | பமிடி பாள்ள | |
| சலிகுண்ட்ல<br>சல்லகுண்ட்ல | } | பாப்பில்லி | |
| சல்லா | — | பாப்பில்லி, மாரேடு, திருநாள்ள, மாருட்ல | |
| சவிசேமல | — | மாருட்ல | |
| சாகண்டி | — | முஸுநூள்ள, பமிடிபாள்ள | |
| சாபரால | — | பமிடி சுக்கல | |
| சாவ | — | கோநூள்ள, யெனிகண்ட்ல | 320 |
| சாவால | — | கொம்முநூள்ள | |
| சாபோலு | — | கொம்மூரு | |
| சிந்த அல்லது சிந்தா | — | | |
| சிந்தமநேனி | — | பாலாத்ரி | |
| சிந்தல | — | ஸ்ரீவெங்தல, சிலகர்த்த | |
| சிம்பிலி | — | அருட்ல, நலகட்ல | |
| சிகுபாருடி | — | கனுமுநூள்ள | |
| சிட்டமூரி | — | | |
| சிட்டா | — | வாடபால | |
| சிட்டா லத்தன | — | மோம்பூள்ள | 330 |
| சிட்டூரி | — | | |
| சிடிகிடி | — | போகுநூள்ள | |
| சின்னம் | — | செருகுநூள்ள | |
| சிருமாமிள்ள | — | சோவாட | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| சிலுகூரி | — | மோடிபாள்ள, வல்லுட்ல | |
| சிரால | — | ஸ்ரீபர்த்தி | |
| சிலாதி | — | காமல்லி | |
| சும்சு | — | மல்லெ புவ்வுல | |
| சுண்டி | — | போடு | |
| சுண்டு | — | பமிடிபாள்ள, வோடேள்ள | 340 |
| சுண்டுரு | — | பெஞ்ஜெர்ல, விப்பர்ல | |
| சுக்கபல்லி | — | | |
| செம்பேடு | — | | |
| சென்னமல்லு | — | | |
| சென்னுபாட்டி | — | ராசனேள்ள, தாஸானுாள்ள | |
| செருகு | — | | |
| செருகூரி | — | எல்லுட்ல, மாருட்ல, யேருட்ல | |
| சேகண்ட | — | பமிடிபாள்ள | |
| சேபாத | — | | |
| சேப்ரோலு | — | தாள்ளூரி | 350 |
| ஜங்கம் | — | தேள்ளூரி | |
| ஜங்கா | — | முசிநூள்ள | |
| ஜம்பனி | — | பாலகுல | |
| ஜம்பானு | — | பாலுட்ல, நீருகொண்ட | |
| ஜம்பால | — | நீருகொண்ட—கனபர்த்தி (லச்சிநீடு) | |
| ஜம்பு கும்புல | — | | |
| ஜம்புல முடி | — | டங்குட்டுரு | |
| ஜட்டி | — | ஊாஸவலு, ஆவாலு | |
| ஜனருலம் | — | | |
| ஜம்மி கும்பு | — | சென்னமுடி | 360 |
| ஜம்முல | — | யெலுது நூள்ள, யெனிகண்ட்ல | |
| ஜருகுமில்லி | — | | |
| ஜருகுல | — | பாலேட்டி, வல்லுட்ல | |
| ஜாம்பல்லி | — | யேனேட்டி | |
| ஜாகர்லமூடி | — | சண்ட்ருள்ள | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| ஜாமண்டல | — | | |
| ஜாவம்புல | — | | |
| ஜாஸ்ட்டி | — | பஸிநீல, விப்பர்ல | |
| ஜாஸ்தி | — | பமிடிசுக்கல | |
| ஜில்லெல்ல மூடி | — | | 370 |
| ஜிவ்வாஜி | — | யண்ட்ராஜுல | |
| ஜீவி | — | | |
| ஜாஞ்ஜாராம் பல்லெ | — | | |
| ஜாஜ்ஜாரு | — | | |
| ஜாட்ல | — | வல்லுட்ல | |
| ஜெட்டி | — | கந்தஸிரி | |
| ஜொன்னலகட்ட | — | செருகுநூள்ள, தான்யால, வல்லுட்ல | |
| ஜ்யேஷ்டலு | — | கஞ்சர்ல | |
| தக்தூரி | — | | |
| தக்கெலபாட்டி | — | | 380 |
| தன்னீரு | — | செருகுநூள்ள | |
| தம்மா ரெட்டி | — | | |
| தம்மின | — | | |
| தம்மிநேனி | — | மல்லெபுவ்வுல | |
| தரிகொர்ப்பலி, தரிகோபுல | } | தள்ளூரு, பமிடிபாள்ள | |
| தலபநேனி | — | ஐநூரு, செரகுநூள்ள | |
| தலசில | — | தாடிபாள்ள | |
| தல்லபநேனி | — | வல்லுட்ல | |
| தாட்டி | — | பமிடிபாள்ள | 390 |
| தாடிகொண்டல | — | | |
| தாத்தா | — | | |
| தாத்திநேனி | — | துள்ளூரி, போகுநூள்ள | |
| தான்ரு | — | | |
| தாப்பா | — | | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| தாலூரி | — | ஆருகட்ல | |
| தாள்ள | — | கொண்டபல்லெ | |
| தாள்ளூரி | — | விப்பர்ல, ரேசெர்ல, செருகுநூள்ள | |
| திபிரிநேனி அல்லது திரிபுரநேனி | — | கனிகுல புவ்வாட | |
| திருகுதல | — | | 400 |
| திருவீதுல | — | செருகுநூள்ள, வல்லுட்ல | |
| துங்க | — | | |
| தும்மல | — | செருகுநூள்ள, சிவநீல, வல்லுட்ல | |
| தும்மல பல்லெ | — | மாரேடு | |
| துள்ளூரி | — | போகுநூள்ள | |
| தூமாட்டி | — | பேபாள்ள | |
| தேட்டி | — | | |
| தேள்ள | — | செருகுநூள்ள | |
| தொண்டபநேனி | = | பிப்பர்ல | |
| தொண்டமு | — | விப்பர்ல | 410 |
| தொட்டெம்பூடி | — | விப்பர்ல | |
| தொர்ரபாட்டி | — | புரதாள்ள | |
| தோகல | — | போகால | |
| தோட்ட | — | கைதால, வல்லுட்ல | |
| தோபடகூர | — | ஆருட்ல | |
| தண்டமூடி | — | மாருட்ல, செரகுநூள்ள | |
| தண்டு | — | | |
| தக்குபாட்டி | — | சிலகண்டி, ஸ்ரீகண்ட்ட, செர்லகண்ட்ட, அல்லது செர்ல கண்டி | |
| தக்கோட்டி | — | வல்லுட்ல | |
| தத்தா | — | ஈதமுக்கல | 420 |
| தப்பர | — | சுண்டூரு | |
| தரகம்பூடி | — | பரபுடி | |
| தரிசி | — | | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| தருரு | — | கொடதநூலு | |
| தாமிநேனி | — | | |
| தாமு சர்ல | — | போகண்ட்ல | |
| தாரிபிநேனி | — | ஜனுகுள்ள, வல்லுட்ல | |
| தாவுலூரி | — | முஷ்டிநாள்ள | |
| தாஷ்டி | — | | |
| தாஸர அல்லது தாஸரி | — | வல்லுட்ல, பமிடிபாள்ள, ரேசெர்ல | 430 |
| திருமர்த்தி | — | | |
| திவி | — | வலவுட்ல, வல்லுட்ல | |
| துக்கி பாட்டி | — | பமிடி சுக்கல | |
| துகலூடி அல்லது துகுலூட்டி | — | வருநாள்ள | |
| துக்கின | — | | |
| துக்கிநேனி | — | | |
| துக்கிரால | — | ரேசெர்ல | |
| துத்தலூரு | — | | |
| துத்துகூரு | — | | |
| துப்பட்டி | — | | 440 |
| தும்மல் | — | வல்லுட்ல | |
| துரம் | — | கண்ட்ரூரி | |
| துரிசால | — | | |
| துரசனுல | — | சண்ட்ரூள்ள | |
| துவ்வாட | — | | |
| துவ்விநேனி | — | | |
| துவ்வின்ன | — | | |
| தேவபக்துனி | — | சசுபுநாள்ள | |
| தேவரபல்லி | — | ஜடுநாள்ள | |
| தேவரின்டி | — | | 450 |
| தேவாதுல | — | | |
| தேவிநேனி | — | செருகூரு, பாலுட்ல | |
| தொண்டேட்டி | — | | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| தொட்டகட்ட | — | | |
| தொட்டா | — | கந்தாஸ்த்ரீ, புனுகோட்டி | |
| தொட்டபநேனி | — | விப்பர்ல | |
| தொனிபிநேனி | — | சேகுட்ல | |
| தொப்பல பூடி | — | வல்லுட்ல | |
| தொப்பர்ல | — | பாலால | |
| தொம்முலபாட்டி | — | | 460 |
| தோணுதுல அல்லது துரோணுதுல | — | செருகூரு | |
| தோமா | — | வல்லுட்ல | |
| தோவன்டி | — | | |
| தௌபாட்டி | — | | |
| தனியால | — | கனபர்த்தி | |
| தனெங்கல | — | கஞ்செர்ல | |
| தர்மாபுரமு | — | | |
| தர்ம வரமு | — | புனுகோட்டி | |
| நந்திகம் | — | | |
| நந்திபாட்டி | — | தான்யால | 470 |
| நந்த்யால | — | மிரியால | |
| நம்பூரு | — | மொகலி ரேகுல | |
| நனஸானி | — | வல்லுட்ல | |
| நன்னபநேனி | — | ராசநூள்ள | |
| நரஸவீடு } நரிசேட்டி } | — | உல்லோள்ள, பானேபல்லி | |
| நருட்ல | — | வல்லுட்ல | |
| நர்ரா | — | கஞ்செர்ல, ஈதமுக்கல, போகுநூள்ள | |
| நல்லபாட்டி | — | | |
| நலமோத்து or நரிமோத்து | — | மண்டிபூடி, நாதொண்ட்ல | 480 |
| நல்லபோத்துல | — | வல்லுட்ல, முஸுநூள்ள | |
| நல்லமோத்து | — | பஸுபுநூள்ள | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| கல்லா | — | சண்ட்ருள்ள | |
| கல்லானி | — | பாலேட்டி | |
| கல்லூரு | — | ஸ்ரீ யாள்ள | |
| கவுலூரு | — | பூரெட்டி | |
| காகண்ட்ல or | | | |
| காகெள்ள | — | | |
| காகபைரவி | — | | |
| காகிநேனி | — | | |
| காகுபாட or | | | |
| காகுபோடி | — | வல்லுட்ல, வுட்ல | 490 |
| காகுமோத்து | — | தாடிபாள்ள | |
| காகூரு | — | ஆத்மகூர்லு, செருகுநூள்ள | |
| காகோதுல | — | தாடிபள்ள | |
| காதவி | — | | |
| காதெண்ட்ல | — | சென்னமல்லு | |
| காம | — | | |
| காமினி | — | | |
| காயினேனி | — | புனுகோட்டி | |
| காயுடு | — | வல்லுட்ல, செரகுநூள்ள | |
| காரா | — | எல்லுட்ல | 500 |
| காரென | — | மினகண்ட்டி | |
| கார்ல | — | விப்பர்ல | |
| காலநேனி | — | கொனகோள்ள | |
| கிக்கு | — | கிடமூக்கல | |
| கிடதவோலு | — | | |
| கிம்மகட்ட | — | வெலிசெர்ல | |
| நீருகொண்ட or | | | |
| நீருகுண்ட | — | போகுநூள்ள | |
| துன்னு | — | பொன்னபூல | |
| துவ்வுல | — | விப்பர்ல | |
| தூக்கலபாட்டி | — | குருநாள்ள, மினகண்ட்டி | 510 |
| தூக்காரப்பு | — | பச்சநூள்ள | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| நாசக | — | அமரரிகி | |
| நாதக்கி | — | பிடுகுநாள்ள | |
| நாதலபாட்டி | — | எச்சர்ல | |
| நாதேட்டி | — | வல்லுட்ல | |
| நாலு | — | விப்பர்ல, வல்லுட்ல | |
| நெக்கலப்பு | — | — | |
| நெக்கொண்ட | — | — | |
| நெட்டெமு | — | ஸன்னூலு | |
| நெப்பல்லி | — | ராவி | 520 |
| நெலகுர்த்தி | — | பமிடிபாள்ள | |
| நெவிகுதுரு | — | பெனுகொண்ட, பச்சநாள்ள | |
| நெல்லூரு | — | பான்ப்பு நாள்ள | |
| நேமூல | — | மதநாள்ள | |
| நேரெல்ல | — | பேபாள்ள | |
| நேலபாட்டி | — | கந்தாஸ்த்ரீ | |
| பங்குலூரி | — | குந்துர்த்தி | |
| பன்டல | — | — | |
| பண்டா | — | செரகுநாள்ள | |
| பந்தல குண்ட | — | — | 530 |
| பகடம் | — | — | |
| பச்சா | — | குந்துர்த்தி | |
| பச்சார / பச்சால or / பச்சல | — | சிவநந்துல | |
| பட்டா | — | போகுநாள்ள | |
| பதகமூரி | — | கஞ்செர்ல, காசெர்ல | |
| பத்தி | — | பிஸனுள்ள | |
| பமிடி | — | பேபாள்ள | |
| பய்யாவுல | — | ஜெனுகுநாள்ள | 540 |
| பரிடால | — | — | |
| பரிமி | — | விப்பர்ல | |
| பருசூரி | — | போகுநாள்ள | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் |
|---|---|---|
| பர்வதநேனி | — | போகுநூள்ள |
| பலவநேனி | — | செருகூரு |
| பல்லபோத்துல | — | வல்லுட்ல, தாட்டிபால |
| பல்லம் ரெட்டி | — | தெம்பூள்ள |
| பல்லாது | — | பமிடிபாள்ள |
| பல்லெம் பாட்டி | — | |
| பஸாபுல | — | 550 |
| ப்ரத்திபாட்டி | — | வேமுநூள்ள, பீஸாநூள்ள ஸ்ரீவகோன்ன |
| பாகால | — | கஞ்சர்ல |
| பாட்டிபண்ட்ல | — | தாடிபாள்ள, பமிடிபாள்ள, காவட்ல |
| பாதரெட்டி | — | |
| பாதூரி | — | தான்யால |
| பாப்பஸானி | — | ஜிராபுரி |
| பாப்பிநேனி | — | விரள்ள |
| பாமுலபாட்டி | — | ஜின்னுவுல, செரகுநூள்ள, வல்லுட்ல |
| பாரர் | — | குண்டனமு, காகிலால, கவுலூன்ன |
| பாலடுகு | — | காகிதால, விப்பர்ல, ஸ்ரீ லக்ஷ்மி 560 |
| பாலிபி | — | |
| பாலூரு | — | புலுகன்டி |
| பாலேரு | — | பமிடிபாள்ள |
| பர்லேட்டி | — | கொப்பரிஸி, மாருட்ல, சேரகுநூன்ன |
| பாவுலபாட்டி | — | செரகுநூள்ள |
| பாவுலூரி | — | |
| பாலெம் | — | பேபல்வி |
| பிடிகிடி | — | பினகண்ட்டி |
| பிடிகிடி | — | போகுநூள்ள |
| பிடுகுராள்ள | — | 570 |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| பின்னக | — | செருகுநூள்ள | |
| பின்னமநேனி | — | பமிடிசுக்கல | |
| பிலாரி | — | | |
| புச்சகாயல | — | ஜெனுகு நூள்ள, வெல்லட்டூள்ள | |
| புச்சூர்ஸு | — | பெத்திவாரிபாலெம் | |
| புட்டகும்டி | — | கண்ட்ராள்ள | |
| புட்டா | — | நேட்டிகூரி, விப்பர்ல | |
| புட்டி | — | ஈதமுக்கல | |
| புணுகொல்லு | — | | |
| புதமாகுல | — | | 580 |
| புத்தும்பாக | — | | |
| புனஸுரு | — | | |
| புனுகுபாட்டி | — | விப்பர்ல | |
| புரமா | — | சொன்னமல்லு | |
| புரி | — | ஸன்னபுரி | |
| புரிமெட்ல | — | | |
| புலிபாட்டி | — | | |
| புவ்வாடி | — | பவ்வாடி, குரஜால, பாலுட்ல | |
| புஷ்பமு | — | | |
| பூநாட்டி | — | | 590 |
| பூஸபாட்டி | — | கோகுநூள்ள, கோவெல்ல | |
| பெண்ட்பால | — | ஏனூரி | |
| பெத்தி | — | கிஜநோள்ள, பிஜிநோள்ள | |
| பெணிகவிபாட்லி | — | கொலகுல | |
| பெம்மஸானி | — | பொனகன்டி, வல்லுட்ல or எல்லுட்ல | |
| பேரமு | — | கந்தபுஸிரி | |
| பேரினி, பேரிநேனி | — | ஈதமுக்கல | |
| பைடி | — | | |
| பைடிபால | — | | 600 |
| பைடிமுக்கல | — | | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் |
|---|---|---|
| பைநேனி | — | |
| பொண்டுரி | — | அன்னங்குல |
| பொட்டிமாகுல | — | |
| பொட்டு | — | |
| பொட்லூரி | — | கடிமெள்ள |
| பொத்தூரி | — | அயோத்ய |
| பொதிலி | — | வேதநூள்ள |
| பொனபாட்டி | — | |
| பொன்னம | — | புனுகோட்டி, ராஜேந்திர, புலிகோள்ள 610 |
| பொர்ர | — | |
| போகூரி | — | கந்தபுளிரி |
| போட்ரு | — | தள்ளூரி |
| போத்திநீடி | — | பொப்பிர்ல |
| போத்துன | — | போகோல |
| போத்துமர்த்தி | — | |
| போயனூரி | — | போகுநூள்ள |
| போலதூரு | — | அன்னங்குல |
| போலிநேனி | — | |
| போலு | — | செரகுநூள்ள, போகுநூள்ள 620 |
| போலுமெட்ட | — | |
| போலூரி | — | பாமுநூள்ள, பாமெர்ல, செரகுநூள்ள |
| போலேனி | — | பாகோலு |
| பௌணமு | — | |
| பங்காரு முக்கர | — | |
| பண்டாரு | — | வல்லுட்ல |
| பண்டி | — | செரகுநூள்ள, தாடிபாள்ள, வல்லுட்ல பமிடிபாள்ள |
| பண்ட்ல | — | வல்லுட்ல, வரிநூள்ள |
| பண்ட்லமூரு | — | பாலுட்ல, வரிநூள்ள |
| பண்ட்லமூரு | — | பாலுட்ல, சிந்தபாள்ள |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| பச்சல கூர | — | | 630 |
| பட்டா | — | டக்குட்டுரு | |
| படெ | — | ஐயவார்ல | |
| பத்தல | — | ஸாகமஞ்சி | |
| பத்தினி | — | | |
| பத்திநேனி | — | | |
| பத்துல | — | சொருநூள்ள | |
| பன்னூரு | — | கன்னூரு | |
| பலுஸு அல்லது புலுஸு | — | | |
| பல்லா | — | டக்குட்டுரு | |
| பாகார | — | துலஸிநூள்ள | 640 |
| பாசநேனி | — | | |
| பாசின | — | முதுநூள்ள | |
| பானங்கி | — | சேஜெர்ல | |
| பாப்பிநேனி | — | முதநல்லி | |
| பாயநேனி | — | யெனகண்டி | |
| பாவின | — | பெள்ளூள்ள | |
| பிக்கி | — | தும்மெதல | |
| பிக்கின | — | | |
| பிக்கிநேனி | — | | |
| பிலிகலகூடுரு | — | சண்ட்ரூள்ள | 650 |
| பிம்பாட்டி | — | | |
| புர்ரா | — | மோபூள்ள | |
| புவ்வா | — | முனுகோட்டி | |
| பெஜவாட | — | சண்ட்ரூள்ள | |
| பெல்லமு | — | பாலேட்டி | |
| பெல்லமு கொண்ட | — | ரேஷமல | |
| பைட்டினி | — | | |
| பொந்த்து | — | | |
| பொகடால | — | சாமஞ்சுல | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| பொக்காரப்பு | — | யவினி கோள்ள | 660 |
| பொஜ்ஜா | — | அயோத்ய | |
| பொத்துலூரி | — | ஸ்ரீபாள்ள | |
| பொப்பன | — | பேபாள்ள | |
| பொப்பா | — | சென்ன மல்லு, வல்லுட்ல | |
| பொப்பூரி | — | கந்தபுவிரி, செரகுநூள்ள | |
| பொம்மலாபுரி | — | | |
| பொம்மி நேனி | — | தாள்ளூரி, கொவெலகுண்ட, வெரிபோன்ன | |
| பொர்ரா | — | செரகுநூள்ள | |
| பொல்லினி | — | தாள்ளூரு | |
| பொல்லிநேனி | — | | 670 |
| போடபாட்டி | — | | |
| போடால | — | ச்யாமஞ்சுல | |
| போடி | — | வல்லுட்ல | |
| போடெம்பூடி | — | வல்லுட்ல | |
| போனல | — | | |
| போயபாட்டி | — | விப்பர்ல, மங்கமூடி | |
| போள்ளபூடி | — | | |
| பாவனேனி | — | | |
| பீமன | — | போகுநூள்ள | |
| பீமநேனி | — | | 680 |
| பைரப்பு | — | மாதுநூள்ள | |
| பைரபூடி | — | கந்தநூள்ள | |
| போகபதி | — | | |
| போகிநேனி | — | பைடிபாள்ள | |
| போகிரெட்டி | — | பெம்பாள்ள | |
| மங்கபாட்டி | — | | |
| மங்கலபூடி | — | | |
| மஞ்சால | — | போகுநூள்ள | |
| மஞ்சிகலபூடி | — | மதமஞ்சி | |
| மண்டவ | — | வேல்பூரி, விப்பர்ல | 690 |

| விட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| மண்டா | — | விப்பர்ல | |
| மண்டாதி | — | | |
| மண்டுரி | — | மிரியால | |
| மக்தபட்ல | — | | |
| மக்தரப்பு | — | | |
| மக்தலி | — | தாடிபாள்ள | |
| மக்தலப்பு அல் லது மக்தடப்பு | — | தாள்ளூரு | |
| மக்தாட்டி | — | பகிடிராள்ள | |
| மக்கென | — | மாருட்ல | |
| மச்சா | — | குக்திரிழி | 700 |
| மட்டிகூட்ட | — | விப்பர்ல, மேமேரதூள்ள | |
| மட்லூரி | — | செடிமெட்ல | |
| மத்திநேடி | — | இனியர்ல, புலிகோள்ள, டக்குட்டுன்ன | |
| மத்திநேனி | — | ஜாகள்ள. இனியர்ல | |
| மத்திபட்ல | — | செருகூரு | |
| மத்துகூரி | — | விப்பர்ல | |
| மத்தூரி | — | | |
| மனுப்ரோலு | — | ஆருட்ல | |
| மன்னம் | — | யீனிமர்ல (இனுமெள்ள) | |
| மன்னவ | — | | 710 |
| மன்னெம், மன்னெமு | } | அயோத்ய, கோகபூடி | |
| மரபட்டி | — | | |
| மர்ரி | — | சக்தநூள்ள | |
| மலஸானி | — | ஸ்ரீலக்ஷ்மி | |
| 1 மலிநேனி அல் லது மல்லிநேனி | — | வினுகண்டி | |
| 2 மல்யால அல் லது மல்லெல | — | யெனகண்டி | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| 3 மல்லம்பாட்டி<br>மல்லெம்பாட்டி<br>மல்லெம்பூட்டி | } | விப்பர்ல | 720 |
| 4 மல்லாதி | — | சிலகநூள்ள, பமிடிநூள்ளி | |
| 5 மல்வின | — | | |
| 6 மல்வி பெத்தி | — | போகுநூள்ள | |
| 7 மல்லீனி | — | | |
| மகிராடு | — | | |
| மாக்கிநேனி அல்லது மாக்கி நீடி | — | பூரிபாள்ள, கணபர்த்தி | |
| மாகன்டி | — | தாடிபாள்ள | |
| மாகம் | — | | |
| மாசவரபு | — | ஜன்னி ஆவுல, ஜவ்வால | |
| மாசிநேனி | — | யெனகன்டி | 730 |
| மாதாள | — | பகிபள்ள | |
| மாதிநேனி | — | கணபர்த்தி, தனேஞ்கல (தனிகுல) | |
| மான | — | பெஞ்ஜிள்ள | |
| மானமு | — | | |
| மானி கொண்ட | — | விப்பர்ல, தாள்ளூரி | |
| மாரபாட்டி | — | வல்லுட்ல | |
| மாரநேனி | — | | |
| மாரிநேனி | — | | |
| 1 மாராத்தி | — | | |
| 2 மாரின | — | | 740 |
| 3 மாரில்ல | — | தோஸநூள்ள | |
| 4 மார்த்த | — | | |
| 5 மாலபாட்டி<br>மாலெம்பாட்டி | } | தாள்ளூரு | |
| மிக்கிலிநேனி | — | தான்யால | |
| மினமலூரு | — | ஆருட்ல | |
| மின்னகன்டி | — | பகிடிபாள்ள, செரகுநூள்ள | |
| மிரியம்பல்லி | — | வல்லுட்ல | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| முகுந்த | — | கஞ்சேர்ல | |
| முக்கர | — | | 750 |
| முக்கமல்ல | — | | |
| முக்காமல | — | வல்லுட்ல | |
| முக்கால | — | செருநூள்ள | |
| முத்தலூரு | — | பச்சநூலு | |
| முத்தா | — | | |
| முத்தாரப்பு | — | சிங்கரெட்டி | |
| முத்துகூரு | — | | |
| முத்தபாட்டி | — | குந்தேள்ள | |
| முத்தின்ன | — | | |
| முத்திநேனி | — | | 760 |
| முனவா | — | | |
| முன்னம் | — | அயோத்ய | |
| முன்னூரி | — | | |
| முப்பாநேனி | — | வல்லுட்ல | |
| முப்பாரபு | — | எல்லுட்ல | |
| முப்பாள்ள | — | குலகோட்ட, மாருட்ல | |
| மும்மநேனி | — | | |
| மும்மலநேனி | — | சாகன்டி | |
| முரகொண்ட, முரிகொண்ட | } | சண்ட்ரூள்ள, பஸுபுநூள்ள | |
| முலகல | — | கோவெலகுண்ட | |
| முல்லங்கி | — | களிபல்லெ | |
| முவ்வா | — | முனுகோட்டி | |
| முஸுனூரி | — | தோஸபாள்ள | |
| முள்ளகூரு | — | ஈதமுக்கல | |
| முள்ளபூட்டி, முள்ளபூடி | } | போலேட்டி | |
| மூகிதி | — | வல்லுட்ல | |
| முலுபூரி அல்லது முலுபூரி | — | போகுநூள்ள | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| மெக்கின | — | வல்லுட்ல | 780 |
| மெட்ட | — | | |
| மெடபலிமி | — | | |
| மெரப்பலெ | — | | |
| மேகல | — | முஞ்ஜிர்ல, நாகுநாள்ள | |
| மேகா | — | விப்பர்ல | |
| மேடி கொண்டல | — | | |
| மேதர மெட்ட | — | தம்மலூரி | |
| மேலஸானி | — | தாடிபாள்ள | |
| மைநேனி | — | செரகுநூள்ள | |
| மொக்கபாட்டி | — | பாலுள்ள | 790 |
| மொரம்பூடி<br>மோரப்பூடி | — | | |
| மொரஸ | — | வல்லுட்ல | |
| மொவ்வ | — | மோவுநாள்ள | |
| மோட்டவர்த்தி | — | | |
| மோதுபல்வி | — | தாள்ளூரு | |
| மோபர்த்தி | — | யேமுநோள்ள | |
| மோபூரி | — | | |
| மோபெர்ல | — | | |
| யங்கல | — | பமிடிபாள்ள | 800 |
| யண்டபல்லி | — | | |
| யண்டூரு | — | | |
| யண்ட்ராதி | — | செருகுநூள்ள | |
| யண்ட்லூரி | — | | |
| யம்பரால | — | வல்லுட்ல | |
| யகுகுலபாட்டி | — | வல்லுட்ல | |
| யட்ல | — | பொனுகுநூள்ள | |
| யட்லபல்லி | — | பிமவரபு, மட்நூள்ள, மண்டபுரி | |
| யட்லபாட்டி | — | மஷ்டூள்ள | |
| யட்லூரி | — | பேநூள்ள | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| யனமதல | — | | |
| யன்னம் | — | | |
| யன்னுதி | — | செரகுநூள்ள | |
| யரகங்குல | — | | |
| யரகுன்ட | — | | |
| யரமாஸு | — | வேர்வாகல, யர்ரபாள்ள | |
| யர்ரம் நீடி | — | பாலுட்ல, அல்லது போலுட்ல | |
| யர்ரா | — | அயோத்ய | |
| யலமஞ்சி | — | வல்லுட்ல | |
| யலஸானி | — | விப்பர்ல | 820 |
| யலார்த்தி or யலமர்த்தி | — | | |
| யல்லங்கி | — | மண்டெலடி | |
| யாதகிரி | — | | |
| யினகுர்த்தி or இனகுர்த்தி | — | | |
| யிருகுல பாட்டி | — | | |
| யெகட்டேல | — | | |
| யெர்நீடி | — | பானுகுர்ல | |
| யெலிவெல | — | மூஸுநூள்ள | |
| யேஜெள்ள or யேஜெண்ட்ல | — | ஜன்னுவுல, சிருமாமிள்ள | |
| யேட்டிகூர | — | ஆருட்ல | 830 |
| யேட்டுகூரு | — | | |
| யேனுகுல | — | என்னூள்ள | |
| யேர்ப்பன்ன | — | | |
| யேர்லகட்ட | — | ரேசெர்ல | |
| ரகுபதி | — | வல்லுட்ல | |
| ரத்னல | — | | |
| ரவ்வரபு | — | | |
| ராகு / ராகெ | — | பகிடிபாள்ள | |

| வீட்டுப் பெயர்கள் | கோத்திரங்கள் | |
|---|---|---|
| ராசகொண்டல — | | 840 |
| ராசநேனி — | வல்லுட்ல | |
| ராபர்ல — | | |
| ராமபட்டி — | | |
| ராமஸானி — | தாளூரு | |
| ராமிநேனி — | வல்லுட்ல, மினகன்டி | |
| ராயம்கி — | யனகன்டி | |
| ராயபாட்டி — | கிட்டாள்ள | |
| ராயபூடி — | நூள்ள | |
| ராயநேனி — | | |
| ராயகோட்டு — | கஞ்செர்ல | 850 |
| ராயல — | பெட்டுநூள்ள | |
| ராயள்ளி — | பேரால | |
| ராயவரபு or ராயாரபு — | | |
| ராயா — | மதநோள்ள | |
| ராயின — | கஞ்சர்ல | |
| ராயடு — | மிதநூள்ள | |
| ராவி — | கஞ்செர்ல | |
| ராவி — | மாரேடு, வீரங்குல, கஞ்செர்ல, செரகுநூள்ள, வல்லுட்ல, போலோள்ள | |
| ராவுல — | | |
| ராவூரு — | பாப்மில்லி | 860 |
| ராவெல — | பெட்டுநூள்ள (பொட்னூரு) | |
| ராவெள்ள — | ஏசெர்ல, வல்லுட்ல, ஆனல | |
| ராஸுபல்லெ — | கண்ட கட்ட | |
| ராள்ளபல்லெ — | கஞ்செர்ல | |
| ரேகுல — | | |
| ரேவுபதி — | | |
| லக்கமஸானி — | ஆருட்ல | |
| லகுலபாட்டி ... | | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| லக்ஷபுரமு | — | | |
| லாகபூட்டி | — | மகராஜுால | 870 |
| லிங்கம் | — | பேபாள்ள | |
| லிங்கிநேனி | — | பமிடிபாள்ள | |
| லிங்குட்ல | — | எல்லுள்ள, பேரால | |
| லிப்பா | — | வல்லுட்ல | |
| லுகுளமு | — | | |
| லெக்குல | — | | |
| லேள்ள | — | சிலகோடி | |
| வங்கலபாட்டி | — | பாலுட்ல | |
| வங்காயல | — | | |
| வங்காயலபாட்டி | — | மாருட்ல | 880 |
| வண்ட்டால | — | | |
| வண்ட்டிகொண்ட | — | | |
| வகுளமு | — | | |
| வஜ்ஜ | — | வல்லுட்ல | |
| வட்டி கூட்டி | — | கொமரிநாள்ள | |
| வட்டிகுன்ட | — | யேருவாகுல | |
| வட்டி குண்டால | — | ரகுபல்லெ | |
| வட்டி or வட்டெ | — | | |
| வட்லதி | — | செருகுநாள்ள | |
| வட்லபூடி | — | | 890 |
| வட்லமூடி | — | | |
| வத்ஸல | — | | |
| வர்ஜ | — | தாட்டிபாள்ள | |
| வலபல்வி | — | | |
| வல்லம்கி | — | மண்டெபூடி | |
| வல்லபநேனி | — | தானெல்ல, பமிடிபூள்ள, தேசெட்ல | |
| வல்லபரெட்டி | — | தான்யால | |
| வல்லூரி | — | | |
| வல்லூரிபல்லெ | — | | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| வஸந்த | — | மல்லட்ல, மடமஞ்சி, | 900 |
| வாகெபல்லி | — | ராபாள்ள | |
| வாஸிரெட்டி | — | வல்லுட்ல | |
| விஞ்ஜமூ | — | செரகுதூள்ள | |
| விந்தல | — | | |
| விப்பர்ல | — | லேபாக்ஷி, பத்மாவதி | |
| விரிப்பினி | — | | |
| வீரகந்த | — | தான்யால | |
| வீரபனேனி | — | | |
| வீரமாசநேனி | — | தாஸநூள்ள | |
| வுப்பலபாட்டி | — | சிருமாமிள்ள | 910 |
| வுப்புட்டூரி | — | செருகுதூள்ள | |
| வுலவபல்லெ | — | | |
| ஊருமலூரு | — | | |
| வெனிகள்ள | — | சந்தநூள்ள | |
| வென்னம் | — | ரேசெர்ல | |
| வெலகபூடி | — | சென்னமல்லு | |
| வெலகா | — | வல்லுட்ல | |
| வெலிவோலு | — | | |
| வெலிசேட்டி | — | கந்தாள்ள | |
| வெல்லம்கி | — | புவ்வாட | 920 |
| வெல்லட்டூரு | — | சண்ட்ருள்ள | |
| வேஜெண்ட்ல | — | சிருமாமிள்ள | |
| வேதகிரி | — | | |
| வேமன | — | | |
| வேமிநேனி | — | தனம்கல | |
| வேமுல | — | மினகண்டி, நன்னூரு | |
| வேமுலபல்லெ | — | பைடிபாள்ள | |
| வேமூரு | — | வல்லுட்ல | |
| வேலூரி | — | சியாமநோள்ள | |
| வேஸங்கி | — | | 930 |
| வைகுண்டம் | — | பச்சுள்ள | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| வைனுவா | — | | |
| வோலேட்டி | — | பமிடிபாள்ள | |
| சன்ன | — | | |
| சரனு | — | | |
| சாகமூரி | — | | |
| சாவர்த்தி | — | | |
| சாசிபாட்டி | — | புரிகோள்ள | |
| சிங்காரபு | — | செருகுதூள்ள | |
| சுத்தபல்லெ | — | பட்டுதூள்ள (பொட்னூரு) | 940 |
| ஸ்ரீபாட்டி | — | | |
| ஸந்தடி | — | விப்பர்ல | |
| ஸந்திரெட்டி | — | பட்டுதூள்ள | |
| ஸகுர்த்தி | — | தாள்ளூரி | |
| ஸஜ்ஜா or ஸெஜ்ஜா | — | பைடிபாள்ள | |
| ஸத்தனகாரி | — | | |
| ஸனகா | — | சிங்கசால | |
| ஸனகொண்ட | — | | |
| ஸன்னபநேனி | — | | |
| ஸன்னபரெட்டி | — | ஸன்னூலு | 950 |
| ஸம்மெட்ட | — | | |
| ஸயிம்பு | — | பாலேட்டி | |
| ஸருகூரி | — | | |
| ஸருபூட்டி | — | ஆவுலபுரி | |
| ஸாகினி | — | | |
| ஸாகிநேனி | — | | |
| ஸாகென்ன | — | | |
| ஸாகி or சாகி | — | விப்பர்ல | |
| ஸாகிநேனி | — | பெருமாள்ள, பமிடிசுக்கல, தாஸ-தூள்ள | 960 |
| ஸாதிநேனி | — | | |
| ஸாதிரெட்டி | — | | |

| வீட்டுப் பெயர்கள் | | கோத்திரங்கள் | |
|---|---|---|---|
| ஸாது | — | | |
| ஸாப்பிநேனி | — | | |
| ஸாமிநேனி | — | பஸூநூள்ள | |
| ஸாயபநேனி | — | | |
| ஸிங்கமநேனி | — | எல்லுட்ல | |
| ஸிங்கமு | — | | |
| ஸிங்கு | — | வல்லுட்ல | |
| ஸிரிபுரபு | — | | 970 |
| ஸூங்கர | — | விப்பர்ல, நம்புள்ள, முனிகோள்ள | |
| ஸூங்கவல்லி | — | | |
| ஸூகவாஸி | — | | |
| ஸூதரகுண்ட | — | | |
| ஸூதி | — | விப்பர்ல, நம்பூள்ள, முனி கோள்ள | |
| ஸூதுலகுண்ட | — | | |
| ஸூரகொண்டல | — | | |
| ஸூரபநேனி | — | பமிடிபாள்ள | |
| ஸூரநேனி | — | | 980 |
| ஸூர்யதேவர | — | விப்பர்ல | |
| ஸூர்ரெட்டி | — | பெம்போள்ள | |
| ஸெப்பல்லி | — | வல்லுட்ல | |
| ஸேலம்நேனி | — | | |
| ஸேலம் | — | | |
| ஸோம்பல்லி | — | யனகன்டி, கொலுகுநூள்ள, பனுகுநூள்ள | |
| ஸோகின | — | | |
| ஸோமர | — | காசுட்ல | |
| ஸோமஞ்சி | — | | |
| ஸோமூரி | — | | |
| ஸ்வர்ண | — | காயநேனி | |
| ஹனுமார | — | சண்ருட்ள்ள | 991 |

இதில் சேராத வீட்டுப் பெயர்களும் கோத்திரப் பெயர்களும் இரண்டாம் பாகத்தில் அநுபந்தமாக வெளிவரும். இந்த வீட்டுப் பெயர்களில் உள்ள பருசூரிவார் சிலர் மல்லிபெத்திவாராகவும், சிலர் குடித்திபூடிவார் ஆகவும் மாறிவிட்டார்கள் என்ற வதந்தி இருக்கிறது. அது உண்மை என்று நினைக்கும்படி சில கதைகள் இருக்கின்றன. பருசூரிவாரில் ஒருவர் ஒரு சாப்பாட்டுப் பந்தியில் பரிமாறிக் கொண்டிருக்கும் போது 'மல்லி மல்லி, வா, வா; மல்லி பெத்தி ராயனே' என்று அங்கிருந்தவர்கள் யாரோ அழைத்தார்களாம். அது முதல் அந்த ஆசாமிக்கு அந்தப் பெயர் நிலைத்துவிட்டது. அதே வீட்டுப் பெயரும் ஆய் விட்டது. மற்றொருவர் எருமைகளுக்குக் கழுநீர் வார்க்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தாராம். (குடித்தி - கழுநீர்) பெரிய மனிதர் ஒருவர் அந்த ஆசாமியைக் 'குடித்திபூடி' என்று பெயரிட்டழைத்ததால் அந்தக் குடும்பத்தாருக்குக் குடித்திபூடி என்ற வீட்டுப் பெயர் வந்ததாம். இந்த மூன்று வீட்டுப் பெயர்களையும் உடையவர்களுக்குப் போகுநுள்ள கோத்திரம் பொதுவாய் இருப்பதால் இந்தக் கதைகள் உண்மையாய் இருக்கும் என்றே தோன்றுகிறது.

இது போலவே வாஸி ரெட்டிவார் 'போடெபூடி'வாராய் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். இந்த இரு சாராரின் கோத்திரமும் (வல்லுட்ல) ஒன்றாய் இருப்பதால் இதுவும் உண்மையே. ஆலம் வாரிலிருந்து பிரிந்தவர்களே பெம்மஸானிவூர்.

**(வேத காலமுதல் கி. பி. 10-ஆம் நூற்றுண்டு வரையில்)**
**கம்மவார் சரித்திரச் சுருக்கம்**

கம்மவாரின் முன்னோர் வேத காலத்தில் ஆந்திரருள் ஒரு பிரிவினராகப் பெயர் பெற்றனர்; ஆரியருடன் கலந்துவிட்டனர். அவர்களில் சிலர் சோழவாடியில் தங்கியதால் சோழர்கள் எனப் பெயர் பெற்றார்கள். சோழர்கள் கிறிஸ்து சகம் முதல் நூற்றுண்டுக்கு முன்பே இருந்தனர் என்றும் தெரிந்து கொண்டோம்.

சோழர்களும் ஆந்திரர்களும் சூரியாராதனை செய்ததால் சூரிய வமிசத்தினர் ஆனார்கள். பிரசித்தி பெற்ற இக்ஷ்வாகு, ஸ்ரீ ராமர் முதலிய அரசர்கள் இந்த வமிசத்தில் பிறந்தவர்களே.

இவ்வமிசத்தில் சுமித்திரன் என்பவனுடைய காலம் வரையில் புராணத்தில் காணப்படுகிறது. பிறகு பல கிளைகளாகப் பிரிந்த இவ்வமிசத்தினரைப் பற்றிய செய்தி வெகு காலம் வரையில் தெரியவில்லை. பிற் காலத்தில் ஜைன நூல்களில் இவர்களில் சிலரைப் பற்றிய செய்தியைக் காண்கிறோம். அவற்றை முன்பே சொல்லி யிருக்கிறேன். இக்ஷ்வாகு வமிசத்தில் பிறந்த வீர புருஷ தத்தன் முதலிய அரசர்கள் சிலர் கி. பி. 3–ஆம் நூற்றூண்டில் ஆந்திர தேசத்தை ஆண்டனர். சோழர்கள் என்று பிரசித்தி பெற்றவர்களுக்குக் கரிகாலன் மூல புருஷன். இவனும் இக்ஷ்வாகு வமிசத்தவனே. இவன் கி. பி. 5–ஆம் நூற்றூண்டில் சோழ தேசத்தைக் கைப்பற்றி ஆண்டு வந்ததாகத் தெரிகிறது. இந்த வமிசத்தின் ஒரு கிளையில் துர்ஜயன் என்ற வீரன் பிறந்தான். அவன் தேவகிரி (லக்கபூமி) ப் பிராந்தியத்தை ஆண்டான். இந்தத் துர்ஜயனும் கரிகாலனுமே கம்மவாரின் மூல புருஷர்கள் என்பது உறுதிப்பட்ட விஷயம்.

ஆந்திர தேசத்தில் இருந்த இந்தக் கிளையினரும் காஞ்சிபுரச் சோழர்களும் முதலில் ஆரிய மதத்தில் சேர்ந்து காசியபம் முதலிய ரிஷி கோத்திரங்களை வைத்துக் கொண்டு சூரிய வமிசத்தினர் என்று சொல்லிக் கொண்டார்கள். கி. பி. மூன்றும் நூற்றூண்டில் இவ்வமிசத்தார் சிலர் சமண, பௌத்த மதங்களில் சேர்ந்தார்கள். இந்த மதமாற்றம் அசோகன் காலத்தில் தொடங்கி வளர்ந்தது. இவர்கள் ஆரிய மத வழக்கங்களை விட்டு விலக விலகப் பிராம்மணர்கள் மத நூல்களில் 'இவர்கள் க்ஷத்திரியர்கள் அல்லர்' என்று எழுதி வந்தார்கள். ஆனால் இவர்கள் அவர்கள் எழுதியதை லக்ஷ்யம் செய்யாமல் க்ஷத்திரியர்கள் என்று சொல்லிக் கொண்டு மற்ற க்ஷத்திரியர்களுடன் சம்பந்தம் செய்து வந்தார்கள்.

சுமார் கி. மு. 3-ஆம் நூற்றூண்டு முதல் கி. பி. 10-ஆம் நூற்றூண்டு வரையில் இப்படி நடந்து வந்தாலும் நடுநடுவே சைவ வைஷ்ணவ மதங்களில் சிலர் திரும்பவும் சேர்ந்து கொண்டிருந்தார்கள். சூத்திரர்கள் என்று சொல்லிக் கொண்டார்கள்.

10-ஆம் நூற்றூண்டு வரையில் இவர்களைக் கம்மவார் என்று யாரும் சொல்லவில்லை. கம்ம ராஷ்டிரத்தில் வசித்தவர்கள்

மட்டும் கம்ம நாட்டு அல்லது கம்ம ராஷ்டிரத்து ராசவார் என்று அழைக்கப் பெற்றார்கள். விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவர்களைக் கம்ம நாட்டுக் 'காப்பு' என்றும் வழங்கியதாகத் தெரிகிறது. இவர்களையே சோழர்கள் என்றும் துர்ஜய வமிசத்தினர் என்றும் அழைத்தார்கள். இவர்கள் வர்மா என்ற பட்டம் வைத்துக் கொண்டார்கள். இவர்களுக்கு நெருங்கிய உறவினர்களான சந்திரவமிசத்துச் சாளுக்கியர்களும் ஹைஹயர்களும் இவர்களுடன் சம்பந்தம் செய்து ஒன்றுபட்டனர். மற்ற க்ஷத்திரியர்கள்—பல்லவ, காங்க ராஷ்டிரகூடர்—ஆகியவர்களுடன் இவர்களுக்கு இருந்த சம்பந்தம் மிகக் குறைவே; அவர்கள் இவர்களைப் போன்றவர்களோடு சேரவில்லை.

இவர்களுடைய தாய்மொழி ஆந்திரம். மற்ற விவகாரங்களுக்குப் பைசாச, பிராகிருத, சம்ஸ்கிருதங்களை வழங்கி வந்தார்கள். தமிழ் நாட்டுச் சோழர்கள் தெலுங்கு தேசத்தில் வசித்த தம் பந்துக்களுடன் சம்பந்தம் செய்து வந்தார்கள். இது 13-ஆம் நூற்றாண்டு வரையில் இருந்த நிலைமை. இவர்கள் வேங்கி தேசத்தைத் தாய் நாடாகப் பாவித்து வந்தார்கள். 10-ஆம் நூற்றாண்டு வரையில் இவர்களுக்கு வீட்டுப் பெயர் அதிகமாக ஏற்படவில்லை. தாய் தந்தையரின் பெயர்களோடு மக்கள் பெயர்களைச் சேர்த்துக் குறிப்பிட்டார்கள். இக்காலத்துப் பிரமுகர்களுடைய சரித்திரத்தைத் தெரிந்தமட்டும் சுருக்கமாக எழுதுகிறேன்.

## இக்ஷ்வாகு வமிசத்தரசர்கள்*

கிறிஸ்து சகத்துக்கு முன்னால் இந்நாட்டைக் ஆண்டு கீர்த்தி பெற்ற இக்ஷ்வாகு ராஜ வம்சத்தினரின் சரித்திரங்களைப் புராணங்களில் பார்த்திருக்கிறோம். சரித்திர, சாஸனங்களின் மூலம் ஆராய்ந்ததில் 3-ஆம் நூற்றாண்டுக்கு முந்திய அரசர்களின் விவரங்கள் தெரியவில்லை.

கி. பி. 200-இல் இக்ஷ்வாகு வமிசத்து வாசிஷ்ட புத்திர ஸ்ரீ சாதமூலன் என்பவன் ஆந்திர தேச மத்திய பாகத்தை ஆண்டு வந்தான். இவனுக்கு சாதி ஸ்ரீ (சாந்தஸ்ரீ), ஹம்ம ஸ்ரீனிகா

* எப்பிரொபிகா இண்டிகா 20-ஆம் வால்யூம்.

என்னும் சகோதரிகளும் வீர புருஷ தத்தன் என்னும் பிள்ளையும் இருந்தார்கள். இவனுடைய மனைவியின் பெயர் மாதாரி. பெண்ணின் பெயர் அட்வி சாதுஸ்ரீ (சாந்தஸ்ரீ). இந்த அரசன் கோடிக் கணக்கில் தானம் செய்ததாகச் சாஸனங்களில் காணப் படுகிறது. சாந்தமூலனுக்குப் பின் இவன் மகனாகிய வீர புருஷ தத்தன் பட்டம் ஏற்றான். சாதமூலன் ராஜ்யம் ஆளவில்லை என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் ராஜ்யம் ஆளாதவனுக்குக் கோடிக் கணக்கில் பணம் எங்கிருந்து வரும்? இவன் நிச்சயமாக ராஜ்யம் ஆண்டிருக்க வேண்டும்.

வீர புருஷ தத்தனுடைய காலத்தில் நாகார்ஜுன மலை முதலிய இடங்களில் பௌத்த விஹாரங்களும் ஆயக ஸ்தம்பங் களும் இவ் வம்சத்தாரால் நிருமிக்கப்பட்டிருப்பதாக இவர் களுடைய பிராகிருத சாஸனங்களால் தெரிகிறது. இந்த மகா ராஜனுடைய மனைவியராகிய பாப ஸ்ரீனிகா, பாதி தேவி, சகோதரி யாகிய அட்வி ஸ்ரீ ஆகியோர் ஆயக ஸ்தம்பங்கள் நிறுவிக் கீர்த்தி பெற்றார்கள். இவனுடைய அத்தையாகிய சாதுஸ்ரீ சைத்தியம் ஒன்றைக் கட்டுவித்துப் பெயர் பெற்றாள். இது இவனுடைய ஆட்சியில் 18-ஆம் வருஷத்தில் நடந்தது. இவனுடைய மனைவி யாகிய பாதி தேவியும் ஒரு சைத்தியம் நிருமித்தாள்.

இவனுக்கு இரண்டாம் சாதமூல ஸ்ரீ என்னும் மகனும் கொடபலிஸ்ரீ என்னும் மகளும் பிறந்தனர். இந்த சாதமூல ஸ்ரீ தந்தைக்குப் பிறகு ஆந்திர தேசத்தை ஆண்டதாகத் தெரிகிறது. இவன் ஆட்சியின் 11-ஆம் வருஷத்தில் இவனுடைய தங்கையும் மகாராஜ வனவாஸனுடைய மனைவியும் ஆன கொடபலி ஸ்ரீ ஒரு ஸ்தம்பம் நாட்டிச் சாஸனம் எழுதுவித்தாள். மொத்தத்தில் இக்ஷ்வாகு அரசர்கள் சுமார் கி. பி. 250-வருஷங்கள் வரைக்கும் ஆந்திர தேசத்தை ஆண்டார்கள். இவர்களுள் முதல் சாதஸ்ரீ அசுவமேதம் முதலிய யாகங்கள் செய்ததாக வீர புருஷதத்த னுடைய சகோதரியாகிய அட்வி சாது: ஸ்ரீ தேவியும் அத்தை யாகிய சாது: ஸ்ரீயும் (சாந்தஸ்ரீனிகா) எழுதுவித்த தர்ம சாஸ னத்தில் காணப்படுகிறது. மேலும் "இந்த அரசனுக்கு, 'விருபாக்ஷபதி மஹாஸேன பரிகஹித' விருது இருப்பதாகச்

சாஸனம் சொல்லுகிறது. பிந்தியவர்களுக்கு இதுபோன்ற விருதுகள் இல்லை; இக் குடும்பத்துப் பெண்கள் பௌத்த மதத்தில் சேர்ந்து விட்டார்கள். இவற்றால் முதல் சாத மூலன் ஹிந்து மதத்தவன், சிவதீக்ஷை பெற்றவன், பிற்பட்டவர்கள் பௌத்த மதத்தில் சேர்ந்து விட்டனர்" என்று சரித்திராசிரியர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.[1] பௌத்தச் சின்னமாகிய சிங்க லச்சினையும் இவர்களுடைய ராஜ முத்திரையில் இருக்கிறது. கம்மவாரின் மூல புருஷனாகிய கரிகாலன் இந்த இக்ஷ்வாகு வமிசத்தினனே என்று சரித்திராசிரியர்கள் நினைக்கிறார்கள்.[2]

## கம்மவாரின் மூல புருஷர்களும் பிரிவும்

(பத்தாம் நூற்றாண்டுவரை)

கரிகால் சோழனே ஆந்திர சோழர்களுக்கும் காஞ்சிபுரச் சோழர்களுக்கும் மூல புருஷன். உறையூரில் இருந்து ஆண்ட சோழர்களில் இவனே முதல்வன். இவனுடைய தந்தையாகிய சடைச் சோழனும் உறையூரில் இருந்து ஆண்டதாகச் சில நூல்களாலும் சாஸனங்களாலும் சரித்திராசிரியர்கள் நினைக்கிறார்கள்.[3] இவன் அயோத்தியில் இருந்து அரசாண்டதாக ஓர் அபிப்பிராயம் இருக்கிறது.[4] பொப்பூடி சிவன் கோயில் சாஸனம் இந்தக் கொள்கைக்கு இடம் தருகிறது. சா. ச. 1072-ல் திரிபுவன தேவ சோழனுடைய குமாரர்கள் இச் சாஸனத்தை எழுதுவித்தார்கள். நவ சோழ சரித்திரம் 15-ஆம் நூற்றாண்டின் முடிவில் தோன்றியது. இதன் ஆசிரியர் போ செட்டி லிங்கன கவி. இவர் கரிகாலனைப் பற்றி விரிவாக எழுதி யிருக்கிறார். "கரிகாலன் சிறந்த சிவ பக்தன். காவேரிக்குக் கரை எடுத்தவன். அம்முயற்சிக்குத் துணை செய்ய மறுத்த பாஸ்கர சோழனையும் முக்கட் சோழனையும் தன் பக்தியாலும் வீரத்தாலும் வசப்படுத்தியவன்" என்றெல்லாம் இவர் தம் நூலில் எழுதி யிருக்கிறார். இவன் நாகர்களை ஜயித்ததாக ஆந்திரர் சரித்திரம் சொல்லுகிறது. முக்கட்

1. J. A. R. S. Vol. XI. P. 130,
2. ஆந்திரர் சரித்திரம் V. பக். 18.
3. S. I. I. Vol. No. 628 & 650.
4. Report on epigraphy 1899. (A. R. No. 205).

சோழன் ஆந்திர சடைச் சோழ பீமனுடைய முன்னோர்களில் ஒருவனாக இருக்கலாம்.

கரிகாலன் காவேரி நதிக்குக் கரை எடுப்பித்த செய்தி பண்டிதாராத்ய சரித்திரத்திலும் நிர்வசோத்தர ராமாயணத்திலும் காணப்படுவதால் அது உண்மையாகவே இருக்கலாம். இவனுடைய காலம் இன்னதென்று சொல்ல ஆதாரம் இல்லாவிட்டாலும் இவன் சுமார் 1 அல்லது 2-ஆம் நூற்றாண்டினன் என்று சரித்திராசிரியர்கள் நினைக்கிறார்கள். அயோத்தியிலிருந்து புறப்பட்டு வந்த சூரிய வமிசத்தரசர்களில் இவன் முதல்வனாக இருக்கலாம். அதனாலேயே காஞ்சிபுரச் சோழர்களும் தெலுங்குச் சோழர்களும் இவனை மூல புருஷனாகவும் தங்களைச் சூரிய வமிசத்தினராகவும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இவன் திரிலோசன பல்லவனை ஜயித்ததற்குச் சில ஆதாரங்கள் உள்ளன. அதனால் இவன் 5-ஆம் நூற்றாண்டினன் என்பது சிலருடைய அபிப்பிராயம்.[1] கரிகாலனைப் பற்றிய செய்திகள் உள்ளூர் அறிக்கைகள் பலவற்றில் காணப்படுகின்றன. 7-ஆம் நூற்றாண்டின் மாலெபாட்டிச் சாஸனத்திலும் இவன் சூரிய குலத்தினனே என்று காணப்படுகிறது.[2] இவன் பெருங் காடுகள் பலவற்றை அழித்துப் பூமிகளாக்கி விவசாயம் செய்வித்தான் என்றும், பல குளங்கள் வெட்டுவித்தானென்றும், பொத்தப்பி என்னும் கிராமத்தை உண்டாக்கினானென்றும், பல அக்கிரகாரங்கள் தானம் செய்தான் என்றும் காணப்படுகிறது. பழந்தமிழ் நூல்களாகிய புறநானூறு, பொருநராற்றுப்படை, சிலப்பதிகாரம், பட்டினப்பாலை என்னும் நூல்களில் இவனுடைய புகழ் விரிவாகக் காணப்படுகிறது. இவற்றில் இவனுடைய வமிசத்

1. J. A. H. R. S. Vol. VII-இல் ரேநாட்டுச் சோழர்கள் என்னும் கட்டுரையைப் பார்க்க. திரிலோசன பல்லவனும் கரிகாலனும் என்ற நூலில் டாக்டர் என். வெங்கடரமணையா எம். ஏ. என்பவரும் கரிகாலன் ஐந்தாம் நூற்றாண்டினனே என்று எழுதியிருக்கிறார்.

2. Ep. Ind. Vol. XI

"ஜயதி நிர்த்தரேக விமலதாரக சுபாலோக ஏகன ஸ்வப்ரஸன்ன த்ரிபூர்ண ப்ரதிமலர கண்ட்டாஹார, தினகரகுலமண்டன ஸர(வ) மந்தாரு(ர) பாதபச்ய காவேர தனயலங்கனப், பிரசாமனப் பிரமுக நிநேகாதி சயன காரிகத் நிரை ராஜ்ய ஸ்திதி சக்தி மந்த கரிகால வம்சான்வயி காசியபகோத்ர."

o

தைப் பற்றி வேறு விதமாகக் காணப்படுகிறது.[1] கரிகாலனுடைய மனைவியின் பெயர் குணசீலை என்று நவசோழ சரித்திரம் சொல்லுகிறது. இவனுக்கு மஹிமான் பிறந்தான். அவனுக்கு இரண்டாம் கரிகாலன், தாசவர்மா, தொண்டைமான் என்னும் பிள்ளைகள் பிறந்தனர். மகிமான் பாணராஜன் மகளை மணந்தான். இவளுக்குப் பிறந்தவனே தொண்டைமான். பாணராஜர்கள் வடுகாவளியைத் தலைநகராகக் கொண்டு பாகராஷ்டிரத்தை ஆண்டவர்கள். கரிகாலனுக்குப் பின் அவனுடைய மகன் மகிமான் சோழன் சுமார் 500–525 வருஷங்களுக்கிடையில் ஆண்டதாக ஓர் அபிப்பிராயம் இருக்கிறது. இவன் உறையூரில் ஆண்டிருக்கலாம்.

## தாசவர்மா, இரண்டாம் கரிகாலன், தொண்டைமான்

மகிமான் சோழனுக்குப் பின் அவன் மக்கள் முறையே உறையூர், பொத்தப்பி நாடுகளைத் தலைநகராகக் கொண்டு ஆண்டதாகத் தெரிகிறது. தாச வர்மா பாக ராஷ்டிரத்தை ஜயித்ததாகச் சில சாஸனங்களில் காணப்படுகிறது. தாசவர்மா இரண்டாம் கரிகாலன் இவர்கள் மூலமாகவே பொத்தப்பி, கொணிதென, நெல்லூர்ச் சோழ வமிசங்கள் தோன்றியதாகச் சரித்திராசிரியர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்; இவர்கள் இருவரும் 6–ஆம் நூற்றாண்டில் ஆண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனாலும் சரியான காலம் நிர்ணயிக்கப்படவில்லை. தொண்டைமான் தமிழ் நாட்டில் தங்கிக் காஞ்சிபுரச் சோழர்களுக்கு மூல புருஷன் ஆனதாக ஊகிக்கலாம். தெலுங்கு பிஜ்ஜன என்னும் சோழ ராஜன் இரண்டாம் கரிகாலனுடைய வமிசத்தில் பிறந்ததாக II–ஆம் நூற்றாண்டில் எழுந்த ஓபிலி சித்தி சாஸனத்தில் காணப்படுகிறது.[2]

---

1. கரிகாலனுக்கு மாவன் பிறந்தான்; அவனுக்கு உதயன குமாரனும் தொண்டைமானும் பிறந்தார்கள் என்று காணப்படுகிறது மாவன் மகிமானாய் இருக்கலாம். தெலுங்குச் சாஸனங்களிலும் தெலுங்குச் சோழ சாஸனங்களிலும் காணப்படும் இரண்டாம் கரிகாலன், தாசவர்மா இவர்களைப் பற்றித் தமிழ் நூல்களில் காணப்படவில்லை.

2. ஆந்திர பத்திரிகா உகாதி சஞ்சிகை. நள ஸ்ரீ பத்திரிகை. (1916. பக். 161-164) I. S. I. I. Vol. VI.

## துர்ஜயன்

இவனைப் பற்றிய சில விஷயங்களை முன்பே சொல்லி யிருக்கிறேன். சூரிய வமிசத்தைச் சேர்ந்த ஹைஹய வமிசத்தில் தோன்றியதாகச் சொல்லும் துர்ஜயன் இவனே என்பதற்குக் காரணங்களையும் சொன்னேன். 12–ஆம் நூற்றூண்டுச் சாஸனங்களில் இவன் சூரிய வமிசத்தினன், கரிகால வமிசத்தினன் என்று காணப்படுகிறது. அதனால் இவனுடைய காலத்தை நிர்ணயிக்க முடியவில்லை. எப்படியும் இவன் 12-ஆம் நூற்றூண்டுக்கு முந்தியவன் என்பது முடிவு.

இந்த அரசன் தேவகிரியை ராஜ்தானியாகக் கொண்டு லக்க பூமியை ஆண்டானென்பது கர்ண பரம்பரைக் கதை.[1] கூர்ம, பிரம்மாண்ட புராணங்களில் வர்ணிக்கப்படும் துர்ஜயனே இவனு யிருந்தால் இவன் மகாபாரத யுத்தத்துக்கு முந்தியவனுக இருக்க வேண்டும்.

இவ்வரசனுடைய வமிசத்தினரே பல கிளைகளாகப் பிரிந்து 10 முதல் 14–ஆம் நூற்றூண்டு வரையில் ஆண்டார்கள். இவர்களைப் பற்றிய விவரங்களை இரண்டாம் பாகத்தில் காண்க. இக்காலத்துக் கம்ம, வெலமவாருக்கும் ஆந்திர க்ஷத்திரியர்களில் பலருக்கும் மூல புருஷன் என்று நிச்சயமாகச் சொல்லலாம். ஒருகல்லைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட காகதி அரசர்கள் இவ்வமிசத்தினரே. இவர்களில் முன்னவர்களான ப்ரோல ராஜாக்கள் I முதலியவர்கள் சமண மதத்தில் சேர்ந்தனர். பிறகு சைவ மதத்தில் சேர்ந்து சூத்திரர்களென்று சொல்லிக் கொண்டார்கள் என்று தோன்றுகிறது.

## மல்ல வர்மா

இவன் சந்திர வமிசத்தவன் என்று சில சாஸனங்களால் தெரிகிறது.[2] அவற்றைப் பற்றி முன்பே விவரித்திருக்கிறோம். ஐந்தாம் நூற்றூண்டில் தெலுங்கு தேசத்தின் ஒரு பகுதியையும்

---

1. தெலுங்கு, பாரதி தொகுதி 1—பகுதி 2 பார்க்க.

2. S. I. I. Vol. IV. Page 240 & Pithapur Pillar Inscription of Rudhreswara.

ஆண்ட பல்லவ அரசனிடம் இவன் சேனாதிபதியாக இருந்தான். இவன் பல்லவனுடைய தயவால் வெல நாட்டு ராஜ்யத்தைச் சம்பாதித்துக் கொண்டு ஆண்டதாகவும் சூத்திர குலத்தினன் என்றும் பல சாஸனங்களில் காணப்படுகிறது.

ஒரு சாஸனத்தில்[1] உள்ள சுலோகம் இது.

"ஸ்ரீ வல்லபஸ்யாங்க்ரி ஸரோஜ தோவா
நிரந்த்தரோதிவ்ய நதீப்ரவாஹ :
ஜாதாச்சுத்த ஸ்சரணப் ஜதோவா
சதுர்த்த வம்ச : சதுராननஸ்ய
வம்சேஸ்மின் ஸஹிமாம்சு நிர்மலயச வ்யாப்த க்ஷமா மண்டல
ஸ்ரீமான் விர ரஸாச்ரயோ குணநிதி : ஸ்ரீமல்ல பூபோஜனி
யேனத்ரயம்பக பல்லவாத்ரணசிரஸ் ஸாஹாய்ய காராசிராத்
ப்ராப்தோயம் வெல நாண்டு நாம விஷயஸ்-ராமந்த சிஹ்னை: ஸஹ :"॥

சந்திர வமிசத்தினரும் வேறு மதத்தில் சேர்ந்ததே இந்தப் பேதங்களுக்குக் காரணம். இவ் வமிசத்தினரே வெல நாட்டுச் சோழர்கள் என்பது இவர்களுடைய சரித்திரங்களின் மூலம் தெரிகிறது. மல்ல வர்மா காலத்தில் க்ஷத்திரியத் தொழில் செய்பவர்களே வர்மாப் பட்டம் வைத்துக் கொள்ளும் வழக்கம் இருந்தது. பிற்காலத்தில் இவ்வமிசத்தினர் சோழப் பட்டம் வைத்துக் கொண்டார்கள். இவன் ஆட்சிக் காலத்தில் வெல நாடு ராஜ்யம் சிறியதாக இருந்து முதல் கொங்க ராஜன் காலத்தில் ஆறாயிரம் (ஆறு வேல) கிராமங்கள் உள்ளதாகக் குலோத்துங்க சோழனால் மாற்றப்பட்டதென்று தெரிகிறது.[2] மல்ல வர்மாவின் சந்ததியார் நாளடைவில் மத மாற்றத்தால் சூத்திரர் ஆனார்கள். இவர்கள் சந்திர வமிசத்திலிருந்து சமண, பௌத்த மதங்களில் சேர்ந்த காலமும் சைவ, வைஷ்ணவ மதங்களுக்குத் திரும்பிய காலமும் தெரியவில்லை. மல்ல வர்மாவின் தந்தையின் பெயர் மூன்றும் கீர்த்தி வர்மா என்று பிட்டாபுர ஸ்தம்ப சாஸன (Ep. Indica Vol. IV)த்தால் தெரிகிறது. இக் "கீர்த்தி வர்மாவின் தந்தை இரண்டாம் ரண துர்ஜயன்; அவனுடைய தந்தை இரண்

1. S. I. I. Vol. IV. பக். 405.
2. S. I. I. Vol. IV. பக். 407.

டாம் கீர்த்தி வர்மா; அவனுடைய தந்தை ரண துர்ஜயன்; அவனுடைய தந்தை மல்ல வர்மா; அவனுடைய தந்தை கீர்த்தி வர்மா; அக்கீர்த்தி வர்மா யுதிஷ்டிரர் வளர்த்த இந்திரசேன வமிசத்தவன்" என்று அதில் காணப்படுகிறது. இவ் வெல நாட்டரசர்கள் முதலில் சித்தி புரத்தி (சுத்தபல்லெ) ல் இருந்து சித்திபுராதீசப் பட்டம் வகித்தவர்கள். பிற்காலத்தில் இவர்கள் சந்தவோலுவைத் தலைநகராகக் கொண்டு தம் ராஜ்யத்தை ஸ்தாபித்தனர். கம்மவாருக்குள் 'சுத்த பல்லெவார்' இவ் வமிசத்தினரே என்று நினைக்கிறேன்.

## புத்த வர்மா II

புத்த வர்மா துர்ஜய வமிசத்தில் பிறந்தவன்; இவன் சதுர்த்த குலத்தவன் என்றே சோழ ராஜன் சாஸனத்தில்[1] காணப்படுகிறது. இவன் சந்திர வமிசத்தவனாகிய கீழைச் சாளுக்கிய குப்ஜ விஷ்ணுவர்த்தனனுடைய சிற்றரசனாக இருந்தவன். கொண்டபடமட்டி சீமையில் 210 கிராமங்களுக்கு அதிகாரியாய் இருந்தவன் என்று சாஸனங்களில் உள்ள இந்தச் சுலோகத்தால் தெரிகிறது.

"யோவீரவைரி நரபால ஹடத்கிரீட
ஸங்கட்டக்ருஷ்ட மஸ்ருணீக்ருத பாதபீட:
ஸ்ரீ புத்த வர்ம ந்ருபதி: ப்ரதித ப்ருதிவ்யாம்
வீர: சதுர்த்தகுல சைல ம்ருகாதிராஜ: ॥ 3 ॥
விஹங்கராஜோ மதுகைடப த்விஷோ
ஜகஜ்ஜி கீஷோரிவ ராவணச்சித:
மருத் ஸுதஸ்தஸ்ய மஹாமஹி புஜஸ்
ஸகுப்ஜ விஷ்ணோ: ப்ரப்ரபூவ ஸேவக: ॥ 4 ॥
ஸபால யாமாஸ மஹீம் மஹி பதி:
பதி ப்ரஸாதோ பநதான்னதா ஹித:
கிரிப்ரதீசீம் ஸஹராஜ ஸஞ்ச்சலாஸ்
த்ரி ஸப்ததிக் ராம வதீம் சிதாஸிஹ ॥ 5 ॥

இதனால் இவன் ஏழாம் நூற்றாண்டினன் என்றும் இவ் வமிசத்தார் சூரிய வமிசத்திலிருந்து பௌத்தம் முதலிய மதங்களுக்குப் போய்த் திரும்ப ஆரிய மதத்துக்கு வந்தபோது சூத்திரர்

1. S. I. I. Vol. IV. P. 199 & 200.

ளாய் மதிக்கப் பட்டதாகவும் தெரிகிறது. தொழில் காரணமாக வர்மாப் பட்டம் தரிப்பது அக்காலத்து வழக்கம். அதனால் இவர்களும் பல்லவர்களைப் போன்றவர்களும் வர்மாப் பட்டம் ஏற்றார்கள். புத்த வர்மா கொண்டபடமட்டி சீமை அரசருக்கெல்லாம் மூல புருஷன். இந்தப் பிரதேசம் கொண்ட வீடு என்னும் மலை. இக்காலத்துப் பரிச்சேத க்ஷத்திரியருக்கும் கம்மவார் சிலருக்கும் இவனே மூல புருஷன். நாதெண்ட்லவார் இவ்வமிசத்தாராக இருக்கலாம். இவ்வமிசத்தில் இவனுக்கு முன் ஒரு புத்த வர்மா இருந்திருக்கிறான். அவன் ஐந்தாம் நூற்றாண்டில் இருந்த திரிலோசன சக்கரவர்த்திக்குச் சிற்றரசனாக இந்த ராஜ்யத்தை ஆண்டதாக முதிஞூரு சாஸனம் சொல்லுகிறது. கோன கண்ட்ரவாடியும் கொண்டபடமட்டி சீமையும் இவன் ஆட்சியில் இருந்தன. அவன் வமிசத்திலேயே இரண்டாம் புத்த ராஜனும் பிறந்தான்.

(L. R. Vol. II. Page 770)

## தெலுங்குப் பிஜ்ஜன

இம் மகாராஜன் சூரிய வமிசத்தில் கரிகாலன் மரபில் வந்தவன். இவன் தெலுங்குச் சோழர்கள் எல்லோருக்கும் மூல புருஷனாகக் காணப்படுகிறான். ஓமிலி சித்திச் சோழ ராஜன் சா. ச. 1146-இல் கொட்டிய தொனவில் எழுதிய சாஸனத்தால், கரிகாலன் வமிசத்தில் மஹிமானும் அவனுக்கு இரண்டாம் கரிகாலனும் தொண்டமானும் தாசவர்மாவும் பிறந்ததாகவும் தெரிகிறது.[1] பின்னால் வந்தவர்களின் பெயர்கள் காணப்படவில்லை. இவன் மகாபராக்கிரமசாலி; பரசுராமனைப்போல் இருபத்தேழு தடவை எதிரி ராஜாக்களை ஜயித்தானாம். கொடிய சர்ப்பம் ஒன்றை எதிர்த்துப் பிடித்ததற்காகப் பல்லவராஜன்,

1. அட்டி கரிகால ந்ருபதிகெ
புட்டெனு மஹிமானுசோடு புவினதனிகெதா
புட்டிரி கரிகாலுடு ஸிரி
கட்டனுகுலு தொண்டமாண கன தசவர்மல் ||
ஆகரி கால நரேந்திர
ப்ராகட வம்சமுனபுட்டை பாஸ்கர குலாத்
லகா சந்த்ருடு ரிபுசய பீகருடதி குண்டு சோட பிஜ்ஜன பிருதை: || 2
(S. I. I. Vol. VI. No. 628).

இவனுக்குக் கண்டகோபாலன் என்னும் பட்டத்தை அளித்துக் கௌரவித்தானென். இப்பல்லவன் யார் என்பது சரியாகத் தெரியவில்லை. அபராஜிதப் பல்லவனக இருக்கலாம். உஜ்யபுரியில், வெற்றிக் கொடியையும் அதன் கருட விக்ரெக சிகரத்தையும் இவன் ஸ்தாபித்தானம். திக்கன ஸோமயாஜி எழுதிய நிர்வசன உத்தர ராமாயணத்தில் இவனைப் பற்றி இப்படி வருணித்திருக்கிறார்.

பருஷபராக்ரமுண்டகுசு பல்லவு விடனுதக்குலைனபவ்
விருவுரனுதனிங் கலய னெவ்வி யனர்கள மத்ஸரம்புமை
முரரிபு ஸவ்விபுண்டு பதுமுவ்வுர கண்டட கங்க பெட்டெடதா
பிருது வெலுங்க பிஜ்ஜடரி பிகரபூரி புஜா பலம்புனன்.

இந்த மகாராஜன் சோழ பிஜ்ஜன என்றும் பெயர் பெற்றான். 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ராஷ்டிர கூட அரசனுகிய 4—ஆம் கோவிந்த ராஜனுக்கு எதிரியாய் இருந்து அவனைக் கொன்ற சாளுக்கிய இரண்டாம் அரிகேசரி தன் வேமுலவாட சாஸனத்தில் [1] தான் ஒரு பிஜ்ஜனைவைக் காப்பாற்றிய விஷயத்தை எழுதியிருக்கிறான். ஹைஹய வம்சத்துக் கால சூர்யப் பிரிவைச் சேர்ந்த பிஜ்ஜலன் 12-ஆம் நூற்றாண்டினன். ஆகையால் அரிகேசரி காப்பாற்றிய ஆசாமி இத் தெலுங்கு பிஜ்ஜனைவாகவே இருக்க வேண்டும். இவன் ராஷ்டிர கூடனகிய கோவிந்தராஜனேடு போர் செய்து தோற்ற சமயத்தில் இவனை அரிகேசரி காப்பாற்றி இருக்கலாம். அதனல் இவன் 10-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வாழ்ந்த சோழனக இருக்கலாம். இவன் ஆண்ட இடங்களைப் பற்றிச் சரியான விவரம் தெரியவில்லை; ஆனலும் பொத்தப்பி நாடு, பாகநாடு, கம்ம நாடு முதலிய பிரதேசங்களை ஆண்டதாக நம்பலாம். இம்மகாராஜனுக்கு 'ஜகதொப்ப கண்டடு', 'கண்டர கண்டடு' முதலிய விருதுகள் உண்டு. இவனுடைய ஆட்சி கடகம் வரையிலும் வியாபித்திருந்ததற்குக் கீழ்க் கண்ட பத்தியமே சான்று.

"தண்டி ஜக தொப்ப கண்டண்டு
கண்டர கண்ட்டண்டு வீர கலிபிஜ்ஜனயுத்

1 J. A. H. R. S. Vol. VI

தண்டுண்டுந்தா பதுமுவ்வுர
கண்ட்டண்டனுதார நிலிபெ கடக முலோனன் "

ஒபிலிசித்தி சாஸனம்

## வீரப்பிரதாப சோழ மகாதேவன் [1]

இவன் சாலிவாகன சகம் சுமார் 515 வருஷ வாக்கில் ஆந்திர தேசத்தின் சில பகுதிகளை ஆண்டான். பாவபட்டணம் அல்லது பாவபுரி என்பது பாபட்லாவின் பெயர். (குண்டூர் ஜில்லா) இங்கே இருக்கும் பாவநாராயண ஸ்வாமி கோவிலுக்கு இவன் பாவபட்ல, ஆமுதாலபல்லி என்னும் கிராமங்களை அக்கிரமாக்கி உற்சவங் களுக்கு மான்யமாகக் கொடுத்தான். இவனுக்குப் பின் இருமி காந்த சோழனும், பின்பு சோழபூபால தேவன் என்பவனும் (சா. ச. 775- வரை) ஆந்திர தேசத்தை ஆண்டதாகப் பாபட்லா உள்ளூர் அறிக்கையிலிருந்து தெரிகிறது. இந்தச் சோழர்களைப் பற்றிய சாசனங்கள் எதுவும் கிடைக்கவில்லை. அதனால் மேற் கண்ட அறிக்கையில் காணப்படும் அரசர்களின் பெயர்களையும் காலத்தையும்பற்றி நிச்சயமான அபிப்பிராயம் சொல்ல ஆதாரம் இல்லை. இது வருங்கால ஆராய்ச்சியாளர் ஆராய வேண்டிய விஷயம். இந்த வீரப்பிரதாப சோழமகாதேவன், ஒரு வேளை புண்ணிய குமார சோழ (ரேநாட்டு அரசன்) னுடைய தந்தை யாகிய பரிப்பிரதாப சோழனுடைய சம்பந்தியாய் இருக்கலாம். மேலே ஆராய்ந்தாலன்றி இவ்வூகம் தெளிவாகாது.

## புண்ணிய குமார சோழன் [2]

இவனுக்குப் போர்முக வர்மா என்ற மற்றொரு பெயரும் உண்டு. இவன் 7–ஆம் நூற்றுண்டில் ரேநாட்டை ஆண்டதாகத் தோன்றுகிறது. கடப்பை ஜில்லாச் சாஸனங்கள் இரண்டு மூன்றில் இவனுடைய பெயர் காணப்படுகிறது. ஒன்று தாமிர சாஸனம். மற்றவை சிலாசாஸனங்கள். மாலெபாடில் இருப்பது தாமிர சாஸனம்.

1. J. A. H. R. S. Vol. V. P. 84
2. Malepadu Plates in Ep. Ind Vol XI

மூன்று ராஜ்யங்களை உடையவனும்[1] (சேர, சோழ, பாண்டிய நாடுகள்) பெரும் சக்தி வாய்ந்தவனும் ஆன கரிகாலனுடைய வமிசத்தில் காசியப கோத்திரத்தானாகிய நந்தி வர்மா பிறந்தான். அவனுக்குச் சிம்மவிஷ்ணு, சுந்தரவர்மா, தனஞ்ஜய வர்மா முதலிய மூவர் பிறந்தனர். அவர்களில்[2] தனஞ்ஜய வர்மாவுக்குப் பரிப்பிரதாப சோழ மகாராஜன் என்னும் விருதைபுடைய மகேந்திர விக்கிரமவர்மா பிறந்து[3] சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்களுக்குத் தலைவனாகி இந்திரனைப் போல் பராக்கிரமம் பெற்றிருந்தான். இவனுக்கு முதிதசிலாக்ஷரன், நவராமன் என்ற பல விருதுகளும் இருந்தன. இவனுக்குக் குணமுதிதன், போர் முகவர்மா என்ற பிள்ளைகள் இருவர் இருந்தனர். போர்முக வர்மாவே புண்ணிய குமார சோழன் என்றும், இவனுக்குப் புருஷ சார்த்தூலன், மார்தவசித்தன், மதனவிலாசன் என்ற விருதுகள் இருந்தன வென்றும் இவனுடைய மாலெபாடு சாஸனத்தால் தெரிகிறது. இந்தத் தாமிர சாஸனம் எபிகிராபிகா இண்டிகா பகுதி XI - இல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இவன் ஆட்சிக் காலத்தில் 5 ஆம் ஆண்டில் சுப்ரயோகநதித் தென்கரையில் உள்ள ஹிரண்யராஷ்டிரத்தில் பரபுரு கிராமத்தில் 50 நிவர்த்தனம் (ஓர் அளவு) பூமியை ஆத்திரேய கோத்திரத்தானாகிய சிருவனஹல கேசவ சர்மா என்பவ (பிராம்மணனாக இருக்கலாம்) னுக்குக் கொட்டிகுல ராஜாவின் விருப்பப்படி தானம் கொடுத்ததாக இச் சாஸனம் தெரிவிக்கிறது. 7-8-நூற்றூண்டுகளில் இவ் வமிசத்தினர் ரேநாட்டை ஒரு நூற்றூண்டு காலம் ஆண்டதாகச் சாஸனங்களால் தெரிகிறது. இவனுடைய மனைவி வாஸந்தபோரி

---

1. உறையூர், ரேநாடு, சித்தி ராஜ்யங்களாக இருக்கலாம்.

2. இவனுடைய சாஸனம் ஒன்று கலமள்ளி கிராமத்தில் இருக்கிறது. இது கடப்பை ஜில்லாவைச் சேர்ந்தது சுந்தரவர்மாவின் வமிசத்தினன் என்று சொல்லிக்கொண்ட ஸ்ரீ காந்த சோழனுடைய சாஸனத்தைபபற்றி E. R. 1908-09 part II-ல் எழுதப்பட்டிருககிறது. தனஞ்ஜய எரிக சோழன என்பவன் 8-ஆம் நூற்றூண்டில் மைசூர் ராஜ்யததைச் சேர்ந்த ஆல்வாடி என்னும் 600 கிராமங்களுக்கு அதிபனாக இருந்தான் என்று தும்கூர் ஜில்லா மத்துகிரி தாலுக்கா அறிக்கைகளிலிருந்து தெரிகிறது. இவர்கள் எல்லோரும் ரேநாட்டு வமிசத்தினர் என்று ஆராய்ச்சியாளர் நினைக்கிறார்கள். J. A. H R. S. Vol. VII

3. பல்லவர்களிடம் இவர்கள் சிற்றரசர்களாக இருந்தனர் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் பல்லவ ராஜ்யமாகிய ஹிரண்யராஷ்டிரத்தையும் இவன் ஜயித்துச் சோழ மகாராஜ விருது பெற்றதாகத் தோன்றுகிறது.

சோழ மகாதேவி ஒரு சாஸனம் எழுதுவித்திருக்கிருள். தாரு முன்றி என்னும் கிராமத்து வஸந்தீச்வரர் கோயிலுக்கு விரிபரிதி கிராமத்திலுள்ள 300 கொல்த்த (ஓர் அளவு) பூமிகளைத் தானம் செய்ததாக அதில் எழுதி இருக்கிருள். இதுவும் புண்யகுமார னுடைய ஆட்சியில் 5-ஆம் வருஷத்தில் எழுதப்பட்டது. இந்த மஹாராஜா தானம் கொடுத்த பிரபுரு கிராமமே நெல்லூர் ஜில்லா கந்துகூருக்கு அருகில் இருக்கும் வுறவபல்லியாக இருக்கலா மென்பது ஆராய்ச்சியாளர்களின் நம்பிக்கை. நமக்குத் தெரிந்த வரையில் ஆந்த்ர சோழ அரசர்கள் எழுதுவித்த சாஸனங்கள் இதற்கு மூந்தியவை இல்லை. அதனுல் இந்த அரசனுடைய மாலெபாடு சாஸனம் மிக மிக மதிப்பு உள்ளது. இந்த மாலெ பாடு என்னும் ஊரின் பெயராலேயே கம்மவாரில் இன்றைக்கும் மாலெபாட்டி, மாலெம்பாட்டிவார் இருக்கிருர்கள். கம்மவாரின் முன்னோராகிய சோழர்கள் சிலர் இங்கே வசித்ததால் மாலபாடு இவர்களுடைய வீட்டுப் பெயர் ஆகியிருக்கலாம். மூன்றும் நூற்ருண்டில் ஆந்த்ர தேசத்தை ஆண்ட இக்ஷ்வாகு வம்சத்தினர் புண்ய குமாரனுடைய முன்னோர்களாய் இருக்கலாம். இவனுக்கு "சோழ மகா ராஜ ப்ருத்வீ வல்லப" என்ற பட்டம் உண்டென்று இவன் மனைவி ராமேச்வரத்தில் எழுதுவித்த சாஸனத் (E. R. 384 of 190½) தால் தெரிகிறது. இவனுடைய மனைவியாகிய வாசந்த போரி பாதாமிச் சாளுக்ய குலத்துப் பெண் என்று டாக்டர் ரமணையா அபிப்பிராயப் படுகிருர்.[1]

இந்தப் புண்ய குமாரனே தன் மகனுக்கு விக்ரமாதித்ய சோழனென்று பெயர் வைத்திருப்பா னென்று நம்புகிருர். இவனுடைய முன்னோர்களில் ஒருவனுகிய நந்திவர்மா கி. பி. சுமார் 550-575 வருஷங்களுக்கிடையிலும், சிம்ம விஷ்ணு 575-600க் கிடையிலும், மஹேந்த்ர விக்ரம சோழன் 600-625 வருஷங்களுக் கிடையிலும், இந்தப் புண்ய குமாரன் 625-675 வருஷங்களுக் கிடையிலும் ஆண்டிருக்கிருர்கள். இவர்கள் முதலில் பல்லவர் களுக்குக் கீழே சிற்றரசர்களாகவும், நாளடைவில் சுதந்திர அரசர் களாகவும் ஆண்டதாக ஊகிக்கிருர்கள்.[2] இம்மஹா ராஜனுடைய

1. Magazine, Madras Christian College, January 1929.
2. J. H. R. S. Vol VII.

காலத்தில் ரேநாடு ராஜ்யம் அபிவிருத்தி அடைந்ததால் இவனுக்கு ப்ருத்வீ வல்லப என்ற பட்டம் வந்திருக்க வேண்டும். இவனுக்கு அடுத்தபடி வந்த ரேநாட்டு அரசன் "சோழ மகா ராஜாதி ராஜ" என்ற பட்டம் தரித்தான்.

ஏறக்குறைய இதே காலத்தில் சோழர்கள் ஹேமவதி, நிடு கல்லு பிராந்தியங்களில் இருந்து ஆண்டதாகத் தெரிகிறது. சோழிக முத்த ராஜன், தனுஞ்ஜய எலசோழ ராஜன் ஆகியவர்கள் கங்கர்களுக்கும் பல்லவர்களுக்கும் கி. பி. 750-இல் கண்ட கோடையிலிருந்து ஆண்டதாக ரைஸ் துரை எழுதுகிறார்.[1] இந்த தனுஞ்ஜய எலசோழ ராஜன் புண்ய குமாரனுடைய தந்தையாகிய பரிப்ரதாபனுக்குச் சகோதரனு அல்லது சத்யாதித்யனுக்குப் பின் ராஜ்யத்துக்கு வந்தவனு என்பவற்றைத் தீர்மானிக்க ஆதாரம் இல்லை.

## சத்யாதித்யன்[2]

புண்ய குமார சோழனுக்குப் பிறகு சோழ மகா ராஜாதி ராஜ விக்ரமாதித்யன் ரே நாட்டை ஆண்டதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள்.[3] இந்த விக்ரமாதித்யன் காலத்திலேயே பல வழிகளில் அபிவிருத்தி அடைந்தது. அதனால் இவனுக்கு மகாராஜ என்ற விருது கிடைத்தது. இவனுக்குப் பின் இவன் மகனாகிய சக்திகுமார விக்ரமாதித்யன் ஆண்டதாகத் தோன்று கிறது. அதற்குப் பின் வந்தவன் அவன் மகன் சத்யாதித்யன். இவன் சுமார் 8-ஆம் நூற்றாண்டின் கடைசியில் ரே நாட்டையும் ஏழாயிரம் கிராமங்களையும் சித்தி என்னும் ஆயிரம் கிராமங்களை யும் ஆண்டான். இவன் தன்னை காசியப கோத்திரத்தவன் என்று எழுதிக் கொண்டான். இம் மகா ராஜன் குமரி புரத்தில் வசித்தவனும் காச்யப கோத்திரத்தவனும் ஆடிப தேவ சர்மா என்னும் பிராம்மணனுக்குச் சிறும்பூர் கிராமத்தில் ஐந்து மர்த்தி (ஓர் அளவு) பூமியை தானம் கொடுத்துச் சாஸனம் எழுதினர். ரே நாட்டு ராஜ்யம் கடப்பை, நெல்லூர் ஜில்லாக்கள் வரையிலும்

1. Ep. Car atic Vol VIII Introduction P. 7.
2. மாலபாடு சாஸனத்தைக் கொண்டு எழுதியது. E. P. Ind Vol XI
3. J. A. H. R. S. Vol. XIII P. 221.

பரவி இருந்ததால் அந்தப் பிரதேசங்களையும் இச் சோழர்கள் ஆண்டதாக இவனுடைய சரித்திரத்தால் அறிகிறோம். இவனுடைய ஆட்சி முறையின் விசேஷங்கள் ஒன்றும் தெரியவில்லை. ஆனாலும் மகாராஜ பட்டம் பெற்ற விக்ரமாதித்தியனுடைய பெயரானதை யால் சுதந்திர அரசனாக இருந்திருப்பானென்று தோன்றுகிறது. விக்கிரமாதித்தியனுடைய மனைவி, எளஞ் சேர்மு மகாதேவி (E. R. 400 of 1904) என்று சொல்லும் சாஸனம் ஒன்று இருக் கிறது. இவள் இவனுடைய தாயோ, பாட்டியோ தெரியவில்லை. எல சோழ மகாராஜனுடைய சாஸனம் ஒன்று நல்ல செருவுல பல்லெ என்னும் இடத்தில் கிடைத்தது. அதிலிருந்து சத்தியா தித்தியனுக்குப் பின் எலசோழ மகாராஜனே இக் நாட்டை ஆண்டானென்றும், பின்பு இந் நாடு அந்நியர் வசமாய் விட்டதென் றும் இவர்கள் அக் காலத்தில் வேறு தேசங்களுக்குப் போயிருப் பார்கள் என்றும் சரித்திராசிரியர்கள் ஊகிக்கிறார்கள்.

## முதல் பராந்தக தேவன்

9, 10 நூற்றாண்டுகளில் காஞ்சிபுரத்தில் இருந்து ஆண்ட சோழர்களில் நமக்குத் தெரிந்தமட்டில் இவனே முதலில் வைக்கத் தகுந்தவன். வீரசோழன், வீர நாராயணன், மதிராயி கொண்ட கோபர கேசரி வர்மா என்னும் விருதுப் பெயர்களும் இவனுக்கு உண்டு. இவனுடைய தந்தை ஆதித்தன். தாத்தா விஜயாலயன். இவனுடைய தந்தையாகிய ஆதித்தன் அபராஜிதப் பல்லவனை வென்று காஞ்சிபுரத்தில் சுதந்திரமாகச் சோழ ராஜ்யம் ஸ்தாபித்ததாகத் தெரிகிறது. இவன் கி. பி. 907 முதல் 945 வரையில் ஆண்டதாக ஒரு அபிப்பிராயம் இருக்கிறது.[1] 954—ஆம் வருஷம் வரையில் 47 வருஷ காலம் ஆண்டதாக ஒரு கொள்கை இருக்கிறது.[2] பாண்டியன் ராஜசிம்மனையும் வென்று மேலே சொன்ன விருதுகளைப் பெற்றான். இவன் வியாக்கிராக் கிரகாரம் எனப்படும் சிதம்பரம் கோயிலுக்குப் பொன் வேய்ந்த வன். சேர நாட்டு ராஜ குமாரியை மணந்தவன். இவன் சுத்த வீரனானதையால் வைதும்பனும் இலங்கைத் தலைவனும் ஆன பாண

1. J. A. H. R. S. Vol. X. P. 40
2. J. A. H. R. S. Vol X. P. 173 (டாக்டர் கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்.)

ராஜனை வென்றான். இவனுக்கு ராஜாதித்தன், கண்டராதித்த வர்மா, அரிஞ்ஜயன் என்ற மூன்று மக்கள் பிறந்தனர். ராஷ்டிர கூட அரசனாகிய நான்காம் கிருஷ்ணராஜனோடு போரிட்டு ராஜாதித்தன் இறந்தான். இந்த ராஷ்டிர கூட அரசன் கி. பி. 946-957 வருஷங்களுக்கிடையில் ஆண்டவன். கண்டராதித்த வர்மா காவேரியின் வட கரையில் தன் பெயரால் ஓர் ஊரை நிருமித்தான். பராந்தக சோழனுக்குப் பின் கி. பி. 947–949 வருஷங்களுக்கிடையில் அவனுடைய மூத்த மகன் ராஜாதித்த வர்மனே ஆண்டதாகத் தோன்றுகிறது. பின்பு அவனுடைய தம்பி கண்டராதித்தன் கி. பி. 949-950 இல் ஆண்டான். உத்தம சோழன் என்ற வீட்டுப் பெயர் உள்ள முதல் மதுராந்தகன் இவனுடைய மகன். இவன் மிகச் சிறியவனாய் இருந்ததாலோ, என்னமோ கண்டராதித்தனுக்குப் பின் அவன் தம்பி அரிஞ்ஜயனே பட்டத்துக்கு வந்தான். நவ சோழ சரித்திரத்தில் காணப்படும் வீரசோழன் இவனே என்று தோன்றுகிறது. அப்படி யிருந்தால் இவன் சிறந்த சிவ பக்தனாய்ப் பல கோயில் கள் கட்டுவித்தான் என நம்பலாம்.

## அரிஞ்ஜயன்

இவனை அரிந்தமன் என்றும் சொல்வார்கள். இவன் கி. பி. 954 வரைக்கும் காஞ்சிபுரத்தை ஆண்டதாகத் தோன்றுகிறது. இவன் ஆந்திர அரசர்களில் ஒருவனாகிய பீமனுடைய (சடைச் சோழ பீமன் அல்லது இரண்டாம் சாளுக்கிய பீமனாக இருக்க லாம்) பெண் வீமன் குந்தவி அல்லது குந்தவையையும், கொடைப் பிராட்டியார் என்னும் சேர ராஜ குமாரியையும், வைதும்பராணி யாகிய கல்யாணியையும் மணந்தான். வைதும்ப ராணிக்குச் சுந்தர சோழன் என்னும் இரண்டாம் பராந்தகன் பிறந்தான். இவனே அரிஞ்ஜயனுக்குப் பின் அரசன் ஆனான்.

## இரண்டாம் பராந்தக தேவன்

இவனுக்கு ராஜேந்திரன், ராஜகேசரி வர்மா, சுந்தர சோழன் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவன் கி. பி. 954-969 வருஷங்களுக்கிடையே காஞ்சிபுரத்தில் ஆண்டதாகச் சரித்திராசிரி

யார்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.[1] இவனும் சுத்த வீரனென்றே தோன்றுகிறது. செவ்வூர்ப் போரில் இவன் பங்கெடுத்துக் கொண்டான். இவனுக்குக் கரிகாலன் எனப்படும் இரண்டாம் ஆதித்தன், ராஜாச்ரய வரத்து ராஜ கேசரி வர்மா எனப்படும் ராஜ ராஜ தேவன் ஆகிய இரண்டு குமாரர்களும் குந்தவை என்னும் பெண்ணும் இருந்தார்கள். இந்தக் குந்தவையை இவன் பல்லவ அரசனாகிய வந்தியத் தேவனுக்கு மணம் செய்து கொடுத்தான். இவனுக்குப் பின் கரிகாலன் எனப்படும் இரண்டாம் ஆதித்தன் பட்டத்துக்கு வந்து கி. பி. 969-975 வருஷங்களுக்கிடையே ஆண்டான். ஆனால் இவன் வீர பாண்டியனுடன் செய்த போரிலோ அதன் பின்போ இறந்தான். அதனால் இவனுடைய தம்பியாகிய ராஜ ராஜ தேவன் அரசுக்கு வந்தான். இவனுடைய பெரிய தகப்பனார் மகனாகிய முதல் மதுராந்தகனும் (உத்தம சோழன்) ம் இக்காலத்திலேயே (கி. பி. 985 வரையில்) ஆண்டதாகச் சில சாஸனங்கள் மூலம் தெரிகிறது. ராஜ்ய விஷயமாக இவ் விருவர்களுக்கும் தகராறு இருந்ததாகவும், பின்பு இருவரும் சேர்ந்து ராஜ்யம் ஆண்டதாகவும் தெரிகிறது. இவர்கள் தகராறு செய்துகொண்டிருந்த சமயம் பார்த்து கோளம் பாதி ராஜன் இவர்கள் மேல் படையெடுத்துத் தன் கீழே சிற்றரசர்களாக்கிக் கொண்டான்.[2]

## ராஜ ராஜ தேவன்

இவன் கி. பி. 984 முதல், அதாவது மதுராந்தக உத்தம சோழன் இறந்தது முதல், கி. பி. 1012 வரையில் அரசாண்டதாகத் தெரிகிறது. இவன் இரண்டாம் பராந்தகனுடைய இரண்டாவது மகன். மேற்குச் சாளுக்கிய சக்கரவர்த்தியாகிய இரண்டாம் சத்தியாசிரயனுக்கும் இவனுக்கும் கி. பி. 997-ல் இருந்து போர் நடந்துகொண்டிருந்தது. அந்த யுத்தத்தில் இம் மகாராஜனே வென்றான். அருண்மோலி என்ற பெயரும் இவனுக்கு உண்டு. இவன் தன் மகள் குந்தவையைக் கிழைச் சாளுக்கியர்களில் ஒருவனாகிய விமலாதித்தனுக்கு மணம் செய்து கொடுத்தான்.

---

1 J. A. H. R. S. Vol X. P. 40

2 A. R. No. 325 of 1912 & J. A. H. R. S. Vol X. P. 40

இவன் சா. ச. 926 கி. பி. 1004-இல் தானங்கள் செய்து சாஸனம் எழுதுவித்தான். இவன் காந்தளூரில் ரத்தின சபை ஒன்றை நிருமித்தான். இவன் வேங்கி, கங்கபாடி, நுளம்பவாடி, கடமலை நாடு, கொல்லம், கலிங்கம், ஹீரமண்டலம், இரட்டபாடி, தாடிகயி பாடி முகலிய நாடுகளை வென்று ஆண்டதாகச் சாஸனத்தில் குறித்திருக்கிறன். இந்த நாடுகளின் எல்லை, மைசூர், சிலோன், கொல்லம் வரையிலும் பரவி யிருந்தது. தஞ்சாவூரில் ஒரு பெரிய கோயிலைக் கட்டி அதில் பல சாஸனங்கள் எழுதுவித்தான். இவனுக்கு ராஜ ராஜ கேசரி வர்மா என்னும் விருது உண்டு.

## சடைச் சோழ பீமன் [1]

தெலுங்குச் சோழர்களில் இவனைப் போல் பிரசித்தி பெற்றவர்கள் இல்லை என்றே சொல்லலாம். இவன் தெலுங்கு தேசத்தில் ரே நாட்டையும் பாக நாட்டையும் ஆண்டான். இவன் இளைஞனாய் இருந்த போதே ராஷ்டிரகூட அரசனுகிய கிருஷ்ண ராஜனுடைய சேனைகளை முறியடித்தான் என்று ஒரு சாஸனத்தால் தெரிகிறது. இவனுடைய சகோதரியின் கணவனுகிய கிழைச் சாளுக்கியன் பாதபன் ராஜ்யத்தை இழந்திருந்தான். அப்போது பீமன் மிகுந்த தீரத்துடன் சாளுக்கியர்களாகிய தானர்ணவனுடனும் கிருபகாமனுடனும் கடும் போர் செய்தான். அவர்களைக் கொன்று வேங்கி தேசத்தை மைத்துனனுகிய பாதபனுக்குச் சுவாதீனப்படுத்தினன். அவனுக்குப் பதிலாகத் தானே அந்நாட்டை ஆண்டு வந்தான். பிறகு ரே நாட்டை அபிவிருத்தி செய்து தொண்டை மண்டலம் முழுவதையும் வெற்றி கொண்டான். அங்கே ஆண்ட வைதும்ப ராஜனுகிய இரண்டாம் ஸந்த்ரைய்யாவை ஜயித்து வசப்படுத்திக் கொண்டான். காஞ்சிபுரத்திலிருக்கும் ராஜ சிம்மேஶ்வரர் கோயிலில் தன் திக் விஜயத்தைப்பற்றி சாஸனம் எழுதி யிருக்கிறன். இவனுக்கு அரசராபரணன், சமரைக வீரன், ரணரங்க ராக்ஷஸன், அஸஹாய விக்கிரமன், நகிர்வாய ப்ருஹஸ்பதி, ஸௌஜன்யதவனன், ஆகார பகீரதன், ராஜ மகரத்வஜன், விக்ராந்த சக்ராயுதன், க்ஷத்திரிய குல நிஸ்தாரகன், கொண்டலா சாஹஸன், கரிகால சோழன், அரிராஜ பீஷணனன், தியாக

1. J. A. H. R. S. Vol. x. 16 - 60 வியாசம்.

மஹார்ணவன், நரலோக ருத்ரன், முதலிய விருதுகள் உண்டென்று அதில் எழுதி யிருக்கிறது. இவன், அங்க, கலிங்க தேசங்களையும் ஜயித்திருந்தான். இவன் தக்ஷாராம பீமேசனுடைய பக்தன். இவன் ஸ்ரீ பீமேஸ்வரனுக்கு அகண்ட தீப தானம் செய்தான். தன் உருவமும், முத்திரைகளும் உள்ள பொன்னாற் செய்த பல ஆபரணங்களும், வீணை முதலிய வாத்தியக் கருவிகளும், ரத்தினம் பதித்த ஒட்டியாணம் முதலியவைகளும் சமர்ப்பித்ததாகத் தெரிகிறது. அங்கே இந்த மகாராஜா அன்ன சத்திரங்களையும், தோட்டங்களையும் ஏற்படுத்தினான். இவனுடைய முன்னோர்களில் ஒருவருக்கு முக்கட் சோழன் என்ற பெயர் இருந்ததால் அப் பெயரை இவனும் உபயோகித்தான். தன் சொந்த ராஜ்யமாகிய ரே நாட்டையும் பாதபன் சார்பில் வேங்கி நாட்டையும் எதிரில்லாமல் கி. பி. 998 வரையில் ஆண்டு பல தருமங்களைச் செய்து வந்தான். இவன் கலிங்க நாட்டரசனாகிய காமார்ணவனோடு போரிட்டு அவனைக் கொன்றான். காமார்ணவனுக்குப் பின் வந்த விஜயாதித்தனையும் கொன்றான். காமார்ணவனுடைய சகோதரியாகிய அங்கிதேவி தானார்ணவனுடைய தாயாகையால் கீழைச் சாளுக்கியர்களும் கலிங்க அரசனும் தானார்ணவனுக்கு உதவியாகப் போரிட்டார்கள். அவர்களையும் பீமன் கொன்றான். ரே நாட்டுச் சோழர்களும் கீழைச் சாளுக்கியர்களின் உறவினர், பந்துக்களுங்கூட அதனால் விவகார காலங்களில் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ள வேண்டி யிருந்தது. கி. பி. 999–க்குச் சமீப காலத்தில் தானார்ணவனுடைய மகன் சக்தி வர்மா (I) வோ, காஞ்சீபுரத்துச் சோழனாகிய ராஜ ராஜனோ[1] சடைச் சோழ பீமனைக் கொன்றதாகத் தோன்றுகிறது. அது முதல் வேங்கி ராஜ்யம் சக்தி வர்மனுக்கும் ராஜ ராஜனுக்கும் சொந்தமாயிற்று. ராஜ ராஜன் சக்தி வர்மனுக்கு உதவியாக வந்தவன். சடைச் சோழன் ஆந்திர அரசனென்றே பல சாஸனங்களில் காணப்படுகிறது. இவனுடைய மகளோ அல்லது சாளுக்கிய பீமனுடைய மகளோ ஆகிய குந்தவையைக் காஞ்சிபுரச் சோழனாகிய அரிஞ்ஜயன் மணந்தான்.[2]

1. திருவாலங்காடு சாஸனம்.
2. J. A. H. R. S. Vol. X. PP. 16, 60, 174.

## வெலநாட்டு இரண்டாம் மல்லராஜன்

சந்தவோலுவைத் தலைநகராகக் கொண்டு பல்லாயிரம் கிராமங்களையும் அடக்கிய வெல நாட்டு ராஜ்யத்தை 5-ஆம் நூற்றாண்டில் திரிலோசன பல்லவனுடைய சிற்றரசனாய் இருந்து முதல் மல்ல வர்மா சம்பாதித்துக் கொண்டான். இந்த வமிசத்தைச் சேர்ந்த இரண்டாம் மல்ல வர்மா சில வருஷங்களுக்குப் பின் ஆட்சிக்கு வந்தான். முதல் மல்ல வர்மாவுக்குப் பிற்காலத்து வமிசாவளி பிட்டாபுரச் சாஸனத்தில் காணப்படுகிறது. இரண்டாம் மல்லவர்மன் ஒரு சமயத்தில் இடியைக் கத்தியால் வெட்டினனும். அதனால் இவனுக்குப் பிடுவலாதித்தன் (பிடுகு—இடி) என்ற விருது வந்தது. இவன் கிழைச் சாளுக்கிய பீமனுக்குச் சிற்றரசனாய் இருந்ததாகத் தோன்றுகிறது. அதனால் இவனுடைய ஆட்சிக் காலம் சுமார் கி. பி. 934–945-ஆக இருக்கும்.[1]

## ஹைஹய வமிசத்தினர்

சந்திர குலத்தில் தோன்றிய ஹைஹய வமிசத்தினரும் கம்மவாரின் முன்னோரே என்று முன்பு படித்திருக்கிறோம். புராணங்களில் காணப்படும் ஹைஹய வமிசத்து அரசர்களுடைய கதைகள் நமக்குத் தெரிந்தவையே. இவர் வமிசத்திலேயே கார்ஜய ராஜனும் கூர்ம ராஜனும் பிறந்தார்களென்று பிரம்மாண்ட, கூர்ம புராணங்களில் காணப்படுகிறது. கூர்ம ராஜனுடைய சந்ததியினரே கூர்மி வமிசத்தவர் அல்லது கும்பிகள் என்று முன்பே சொன்னோம். ஹைஹய வமிசத்தவர் மாகிஷ்மதி நகரைத் தலைநகராகக் கொண்டு சேதி தேசத்தை ஆண்டவர்கள். பிற்காலத்தில் இவர்களே காலஞ்ஜர கோட்டைத் தலைவர்களாய்க் 'காலஞ்ஜபுரவராதீச' என்ற விருது பெற்றார்கள். இவர்களைக் கால சுர்யர், என்றும் களசுர்யர் என்றும் சொல்லுவார்கள். 5-ஆம் நூற்றாண்டில் இவர்களைப் பற்றிய விவரம் தெரியவில்லை.

6-ஆம் நூற்றாண்டின் கடைசியில் சங்கரகுணன் என்ற இவ் வமிசத்து அரசன் ஆண்டதாக அவன் எழுதிய அபோனு சாஸனத்தால் தெரிகிறது. காலசூரி வருஷம் 347-ல் இச்சாஸனம்

---

1. S. I. I, Vol. IV. Page 505. & J. A. H. R. S. Vol. V.

எழுதப்பட்டது. கி. பி. 595-96 வருஷங்கள் மேல்கண்ட வருஷத்துக்குச் சரியானவை என்று சரித்திராசிரியர்கள் கருதுகிறார்கள். (கலிங்க தேச சரித்திரம் 304-ஆம் பக்கம்). அதனால் இவ்வமிசத்தார் கி. பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து காலஞ்ஜர கோட்டையில் இருந்து அரசு செலுத்தியதாகத் தெரிகிறது.

கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் திரிபுராதீசன் எனப்படும் காலசூர்ய ராஜகுமாரி ஒருத்தியைச் சாளுக்கிய 4-ஆம் விஷ்ணுவர்த்தன சக்ரவர்த்தி மணந்தான் என்று ஒரு சாஸனம் தெரிவிக்கிறது. (J. A. H. R. S. III.) கொஞ்ச காலத்துக்குப் பிறகு காலசூர்ய வமிசத்தில் சுமார் 11-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் திரிபுரியைத் தலைநகராகக் கொண்டு முதல் யுவராஜ தேவன் என்பவன் ஆண்டதாகத் தெரிகிறது. இவனுக்கு ஓஹால என்னும் மனைவியும் லக்ஷ்மண ராஜன் என்னும் மகனும் இருந்தார்கள். "யுவராஜ தேவன்" 9 லக்ஷம் கிராமங்களை ஆண்டான். அவன் சத்பாவ சம்பூ என்னும் சைவ மத குருவுக்குச் சிஷ்யனானான். அவருக்குப் பரம்பரையாக வந்த கோளகி என்னும் சைவ மடத்துக்கு 3 லக்ஷம் கிராமங்களைத் தானம் கொடுத்தான் என்று மல்காபுர சாஸனத்தில் காணப்படுகிறது. இது எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியாது. இவனுக்குப் பின்பு இவனுடைய மகனாகிய லக்ஷ்மண ராஜனுடைய ஆட்சியைப் பற்றியோ பிந்திய அரசர்களைப் பற்றியோ எந்த விவரங்களும் இல்லை. கி. பி. 1015-1040 வருஷங்களுக் கிடையில் இவ்வம்சத்தில் கங்காய தேவன் என்பவனும், கி. பி. 1040-1070 வருஷங்களுக் கிடையில் இவன் மகன் கர்ண தேவன் என்பவனும் ஆண்டதாகத் தெரிகிறது. கர்ண தேவன் மாளவ அரசர்களுடனும் வங்காளத்து அரசர்களுடனும் யுத்தம் செய்தான். இவனுக்குப் பின் சில அரசர்களைப் பற்றிய விவரம் ஒன்றும் தெரியவில்லை. கி. பி. 1118-ஆம் வருஷத்தை ஒட்டி இவ்வம்சத்தில் ரத்ன தேவன் என்பவன் இருந்து ஆண்டதாகவும், அவன் கலிங்க கங்க ராஜனைத் தோற்கடித்ததாகவும் அவன் தான் எழுதுவித்த பாரோடு சாஸனத்தில் எழுதிக் கொண்டான். (Ind. Ant. XXII). 12-ஆம் நூற்றாண்டில் இப்பிரதேசத்தை முசல்மான்கள் ஆக்கிரமித்தார்கள். அதுவரையில் கால சூர்ய வமிசத்தினர்கள் ஆண்டு வந்தார்கள்.

ஹைஹய வமிசத்தில் பிற்காலத்தில் வந்த பிஜ்ஜலன் என்பவன் கி. பி. 1150-முதல் 1162 வரையில் கல்யாணபுரப் பிராந்தியத்தை ஆண்டு வந்த மேற்குச் சாளுக்கிய சக்கரவர்த்தி யாகிய த்ரை லோக்ய மன்னருடைய சேனைபதியாக இருந்தான். பிறகு கல்யாணபுர ராஜ்யத்தை ஆக்கிரமித்தான். இவன் சமண மதத்தினனாய் இருந்தும் வீர சைவ மத போதகரான பஸவேசுரருடைய தங்கை பத்மாவதியின் அழகால் கவரப்பட்டு அவளை மணந்தான். தன் சகோதரியாகிய நீல லோசனையைப் பஸவேச்வரனுக்கு மணம் செய்து கொடுத்ததாகப் பஸவ புராணத்தில் காணப்படுகிறது. இவன் சைவ மதத்தை ஏற்கா விட்டாலும் சைவ மதாபிமானியாகவே இருந்தான். இந்த பிஜ்ஜலன் காலத்தில்தான் சமணர்களுக்கும் சைவர்களுக்கும் பல யுத்தங்கள் நடந்தன. பலர் இறந்தனர். வீர சைவர்கள் ஒன்று சேர்ந்து, சமணனாகிய பிஜ்ஜலனைக் கொன்று தம் மதத்தைப் பரப்பவே யுத்தங்களை நடத்தினர்.

பிஜ்ஜலன் கி. பி. 1167-ல் மத வெறியர்களால் கொல்லப்பட்டான். இவனுக்குப் பின் சோமேச்வரன், ஸங்காமன், ஆஹவமல்லன் என்பவர்கள் கி. பி. 1182-வரையிலும் கல்யாணபுரத்தை ஆண்டார்கள்.[1]

பிறகு மேற்குச் சாளுக்கிய ராஜனாகிய 4-ஆம் சோமேச்வரன் இந்த ராஜ்யத்தை ஆக்கிரமித்ததாகத் தெரிகிறது. சாளுக்கியர் சிலர் முன்பாகவே தெலுங்கு தேசத்தில் குடியேறி 11-ஆம் நூற்றாண்டுக் காலத்தில் அங்கங்கே சிற்றரசர் (மகா மண்டலேசுவரர்)களாய் இருந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. பல்நாடு,

---

1. கிருஷ்ணதேவராயனுடைய மருமகனும் ஆரவிடு புக்கராய வமிசத்தவனும் ஆன ராமராயர் இவ்வமிசத்தினர் என்று தமிழ்ப் பலிஜ புராணத்தில் காணப்படுகிறது. பிஜ்ஜலனுடைய மகன் ஹெம்மல ராயர், அவருடைய மகன் தாத்த பின்னம ராயர், அவர் மகன் ராகவ தேவராயர், அவர் மகன பின்ன சௌரி, அவருடைய மகன் ஆர வீடு புக்கராயலு என்று வருணிக்கப் பெற்றிருக்கிறது. இது உண்மையானல் கால சூரிய வமிசத்தில் பிற்காலத்தில் வைணவ மதத்தை மேற்கொண்ட பிரிவினர் இவர்களாகவே இருக்க வேண்டும். இந்த பிஜ்ஜலன் கால சூரிய வமிசத்துப் பிஜ்ஜலன் என்பதற்கு இந்த வமிசாவளி ஒத்து வரவில்லை. இந்த பிஜ்ஜலனுடைய தந்தை சாளுக்கியனாம். இது சரிதிரத்துக்கு முரணாக இருக்கிறது.

கொலனு, நதவாடி, கோனசீமைகளில் இவர்களுடைய சாஸனங் கள் காணப்படுகின்றன.

நமக்குத் தெரிந்த வரையில் பல்நாட்டில் முதலில் ஆண்டவன் சாகி பேத ராஜு. குரஜால அல்லது மாதவீபுரம் வீரபத்திரேசுவரர் கோயில் சாஸனத்தில் இந்த அரசன் பெயர் காணப்படுகிறது. இவன் ஆட்சியைப் பற்றிய விசேஷங்கள் ஒன்றும் தெரியவில்லை. இவனுக்குப் பின் இவன் மகனுகிய வீரகாமன் பல் நாட்டை ஆண்டதாகத் தோன்றுகிறது. வீரகாமனுடைய சிற்றரசர்களில் ஒருவனுகிய ஆதித்தன் சா. ச. 1033-ஆம் வருஷத்தில் மகாதேவீதடாகம் (மாசெர்ல) என்னுமிடத்தில் ஆதித்யேச்வர ஸ்வாமிக்குப் பூமிதானம் செய்து சாஸனமும் எழுதுவித்தான்.

இந்த ஆதித்தனே, சா. ச, 1035-ஆம் வருஷத்தில் சென்னகேச்வர ஸ்வாமி கோவிலில் நாகஸ்தம்பம் ஒன்றை நாட்டினுன். வீரகாமனும் அவனுடைய தந்தையாகிய சாகிபேத ராஜனும் சாளுக்கிய சோழ சக்ரவர்த்தியாகிய குலோத்துங்க சோழ தேவனுக்குச் சிற்றரசர்களாகப் பல் நாட்டை ஆண்டார்கள் என்று சரித்திராசிரியர்கள் கருதுகிறுர்கள். இந்தப் பல் நாட்டு ஹைஹயர்களுக்குப் பிற்காலச் சரித்திரத்தை இரண்டாம் பாகத்தில் காணலாம்.

சாகி அல்லது ஸாகிவார் இன்றும் கம்மவாரில் இருப்பதாலும் பல் நாட்டு ஸாகிவார் வெலநாட்டுச் சோழர்களின் உறவினர்களாயிருப்பதாலும் இவர்கள் கம்மவாரே என்பதில் சந்தேகம் இல்லை.

நதவாடி சீமை, கொலனு, இவற்றை ஆண்ட ஹைஹயர்களைப் பற்றி இரண்டாம் பாகத்தில் பார்ப்போம். இப்போது கோன சீமை ஹைஹயர்களைப் பற்றித் தெரிந்துகொள்வோம்.

## கோன ராஜ பரே(ன்)டு

(கி. பி. 1040-1118) அவன் குலோத்துங்க சோழ சக்ரவர்த்திக்குச் சிற்றரசனுய் இருந்தான். மிகப் பராக்கிரமசாலி என்ற பெயருடன் கோன சீமையை ஆண்ட ஹைஹயர்களில் முதல்வன். இவன் தந்தையின் பெயர் 'கண்டவெண்ட' என்று ஒரு சாஸனத்தில் காணப்படுகிறது. இது விருதுப் பெயராக இருக்க

லாம். இவன் பெயர் மும்மடி பீமன் என்று பிட்டாபுர சாஸனம் தெரிவிக்கிறது. இவனுடைய பூர்வ விருத்தாந்தம் தெரியவில்லை. ராஜபனுக்கு லக்ஷ்மிதேவி, தொண்டாம்பிகை என்னும் இரு மனைவியர் இருந்தனர். தொண்டாம்பிகை சூரிய வம்சத்துப் பெண் என்று ஒரு சாஸனத்தில் காணப்படுகிறது. அதனால் இவள் தெலுங்குப் பெண் மணியாக இருக்கலாம்.

ராஜப அரசனுக்கு லக்ஷ்மி தேவியிடம் மும்மடி பீமராஜன், சோழமகிபதி அல்லது ராஜேந்திர சோழன் என்னும் இரு மக்கள் பிறந்தனர். இவர்கள் கோன சீமையை ஆண்டார்கள். தொண்டாம்பிகையிடம் சத்திய ராஜன், சத்தியாசிரயன் என்னும் இரு புதல்வர் பிறந்தனர்.[1] இவர்கள் சரித்திரத்தை இரண்டாம் பாகத்தில் காணலாம். இவ்வமிசத்திலேயே பிறகு வென்ன சோழ ராஜன் பிறந்தான். இவன் வமிசத்திலேயே வென்னம் என்ற வீட்டுப் பெயரை உடைய கம்மவார் தோன்றினர்கள் என்று முன்பு சொன்னோம். இவர்களில் சிலருக்குக் கோன என்னும் வீட்டுப் பெயர் இருந்தது. இக் காலத்திலும் கம்மவாரில் கோன என்னும் வீட்டுப் பெயர் இருக்கிறது. இவர்கள் கோன சீமை ராஜ வமிசத்தினரே என்பதில் சந்தேகம் இல்லை.

## விக்கிரம சோழன்[1]

கரிகால் சோழனுக்குப் பல தலை முறைகளுக்குப் பின் இம் மன்னன் ஆட்சி செய்திருப்பான். இவன் சிறந்த சிவ பக்தன். பூசல் நாயனர் இவன் காலத்தவர் என்றும், இவ் விருவருக்கும் ஈசுவரன் பிரத்தியட்சமாக வருவதுண்டென்றும் நவ சோழ சரித்திரத்தில் காணப்படுகிறது. இவனுடைய ஆட்சியைப்பற்றிய சாஸனங்கள் இல்லை. ஒரு வேளை இவன் கி. பி. 1100–இல் ஆண்ட குலோத்துங்க சோழனுடைய மகனாக இருக்கலாம். இது ஆராய வேண்டிய விஷயம்.

## உத்துங்க சோழன்[2]

சிறந்த சிவ பக்தர்களாகிய சோழர்களில் இவனும் ஒருவன். இவனுக்கு அஹிவர சோழன் பிறந்தான் என்றும் இவன் மிகப்

1. S. I. I. Vol. V P. 359

பராக்கிரமசாலி என்றும் தெரிகிறது. உத்துங்க சோழனுடைய பட்டத்து யானை மதங்கொண்டு அடங்காமல் அலைந்தபோது அஹிவரன் அதை அடக்கி வசப்படுத்தினன் என்றும், அவனுடைய திறமைக்கு மெச்சிய உத்துங்கன் உடனே அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்தானென்றும் நவசோழ சரித்திரத்தில் காணப்படுகிறது. இவனைப்பற்றியும் சாஸனங்கள் இல்லை.

## அஹிவர சோழன்[3]

இவனும் தன் பாட்டனையும் தந்தையையும் போலவே பக்தியாயிருந்தான்; மிகுந்த பராக்கிரமசாலி என்று நவ சோழன் சரித்திரத்தில் காணப்படுகிறது. வேறு ஆதாரங்கள் இல்லை.

## வர தரும சோழன்[4] (மனுச் சோழன்)

இவன் அரசாங்கச் சட்டங்களை நியாய நோக்குடன் கவனித்து ஆண்டவன். இவன் மகன் அஹிவர சோழன் (வீதிவிடங்கன்) ஒரு நாள் தேரில் போகும் போது கன்று தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டு மாண்டதாம். வரதரும சோழன் ஏழைகளின் குறையை நீக்க அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணி கட்டியிருந்தான். இறந்த கன்றின் தாய் மணியை அடித்தது. அரசன் வருந்தி, அந்தப் பசுவின் கன்றைக் கொன்றவன் தன் மகனே என்றறிந்தும் தயங்காமல், தேர்ச் சக்கரத்தை ஓட்டி அவனைக் கொன்ருன். வரதரும சோழனுடைய தரும பரிபாலனத்தையும் பக்தியையும் மெச்சிச் சிவபெருமான் மகனையும், கன்றையும் பிழைப்பித்தாரென்று நவ சோழ சரித்திரம் சொல்லுகிறது. இவனை மனுதர்மச் சோழன் என்றும் சொல்லுவார்கள்.

## சத்தியேந்திர சோழன்*

இவனுடைய கதையும் வரதரும சோழனுடைய கதையைப் போன்றதே. ஆனல் சோக முடிவைக் கொண்டது. இவனுடைய

1, 2, 3, 4, இக் கதைகள் கற்பனை என்று சொல்ல முடியாது. இவற்றில் வரும் பலர் சரித்திரத்தில் வரும் மனிதர்கள்; காஞ்சிபுரத்திலும் உறையூரிலும் ஆண்ட சோழர்கள். இவர்கள் கி. பி. 1000 வருஷத்துக்கு முன் ஆண்டவர்களாய் இருக்கலாம்.

* இக் கதையும் கற்பனை செய்தது என்று சொல்ல முடியாது.

மந்திரியின் பெயர் லக்ஷ்மணன். அரசனுக்கு ஒரு மகன். மந்திரிக்கும் ஒரே மகன். ராஜ குமாரனுடைய மகன் மிதவசனனும் மந்திரி குமாரனும் குதிரை யேறி உலாவப் போனார்கள். அப்பொழுது திருக்காள நாச்சியார் என்பவளுடைய அருமை மகன் மந்திரி குமாரனுடைய குதிரையின் காலின் கீழே சிக்குண்டு இறந்தான். மந்திரி குமாரன் பயந்து விட்டான்; ராஜ குமாரன் தன் நண்பனுடைய குற்றத்தைத் தன் மேல் சுமத்திக்கொள்ள எண்ணித் தன் குதிரையை மறுபடியும் அந்தச் சிறுவன் மேல் ஏற்றினான். ஏழையாகிய நாச்சியாரம்மாள் சத்தியேந்திர சோழனிடம் முறையிட்டாள். அவன் தன் மகனை விசாரித்து அவனுக்கு மரண சிக்ஷை விதித்தான். மந்திரி தடுத்தும் கேட்கவில்லை. ராஜ குமாரனே தன்னைக் கத்தியால் வெட்டிக்கொண்டு இறந்தான். அதைக் கண்ட மந்திரி குமாரனும் இறந்தான். இக் காட்சியைக் கண்ட நாச்சியார், அரசன், ராணி, மந்திரி, மந்திரியின் மனைவி எல்லாரும் தலையை வெட்டிக்கொண்டு கைலாசத்துக்குப் போனார்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இதுவும் ஆராய்ந்தறிய வேண்டியதே.

## மனுஜேந்திர சோழன்

இவனும் சிறந்த சிவ பக்தன். இவனைப்பற்றி நவ சோழ சரித்திரத்தில் ஒரு கதை இருக்கிறது. இவன் சிவ பூஜைக்காக எள்ளைப் பயிராக்குவானும். சிவபெருமானுடைய அம்பாரம் என்று எள்ளைக் குவித்து, அதன் மேல் சிவ முத்திரையிட்டு அதைச் சிவனுக்காகவே வினியோகிப்பானும். முடிவில் சிவ சாயுஜ்யம் பெற்றான்.

## உத்தம சோழன்

உத்தம சோழனையே முதல் மதுராந்தகன் என்பார்கள். இவனுக்குப் பரகேஸரி வர்மா என்ற மற்றொரு பெயரும் உண்டு. சுந்தர சோழன் இறந்த பின் இரண்டாம் ஆதித்தன் காலத்திலேயே இவனும் ராஜ்யத்தில் ஒரு பகுதியை ஆண்டு வந்ததாகத் தெரிகிறது. இவன் சுமார் கி. பி. 969–985 வருஷங்களுக்கிடையே ஆண்ட சோழன். நவ சோழ சரித்திரத்தில் காணப்படும் உத்தம

சோழன் இவனானால், இவன் சிறந்த சிவ பக்தன். தன் ராஜ்யத்தில் அகால மரணமும், பஞ்சமும் இல்லாமல் செய்வதாகச் சூளுரைத்து அப்படியே நடத்திக் காண்பித்தான் என்று அறிந்து கொள்ள வேண்டும். இவன் காலத்தில் சமண, சைவ, மதங்களுக்குள் த்வேஷம் இருந்து வந்தது. இவன் காலத்தில் கண பாலன் என்ற மற்றொரு அரசன் இருந்ததாகவும், அவனும் வீர சைவனாக இருந்ததாகவும் அதில் எழுதப்பட்டிருக்கிறது.

## கீழைச் சாளுக்கிய சக்கரவர்த்திகள்

இவர்கள் சந்திர வமிசத்தினர்; மானவ்யச கோத்திரத்தார்; ஹாரீத புத்திரர்கள்; கௌசிகருடைய வரப்ரசாதத்தால் ராஜ்யத்தைப் பெற்றவர்கள் என்று தங்களைப் பற்றித் தம் தம் சாஸனங்களில் இவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மேற்குச் சாளுக்கியர்கள், பாதாமிச் சாளுக்கியர்கள், கிழக்குச் சாளுக்கியர்கள் என்று இவர்களில் மூன்று பிரிவுகள் உண்டு. மேற்குச் சாளுக்கியர்கள் கல்யாணபுரியைத் தலை நகராகக் கொண்டவர்கள். சூர்ய வம்சத்தினராகிய சோழர்களுக்கு விரோதிகள். கிழைச் சாளுக்கியர்கள் வேங்கியைத் (ஏலூருக்கு அருகே இருக்கும் பெதவேகி சினவேகி) தலைநகராகக் கொண்டு, சூர்ய வம்சத்தினருடன் உறவை வளர்த்துக் கொண்டு, சோழர்களோடு கலந்துவிட்டார்கள். இவர்கள் ஆந்திர அரசர்கள் என்று பல சாஸனங்கள் சொல்லுகின்றன. இவர்களுக்கும் காகதீயர்களைப் போல் பன்றி இலச்சினை உண்டு. ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இரண்டாம் புலிகேசி வேங்கி தேசத்துக்கு வந்து விஷ்ணு குண்டி அரசர்களிடமிருந்து வேங்கி நாட்டை ஜயித்தான். ஜயித்த நாட்டைத் தன் தம்பியாகிய குப்ஜ விஷ்ணு வர்த்தனனுக்குக் கொடுத்தான். குப்ஜ விஷ்ணு வர்த்தனன் சுமார் கி. பி. 624 முதல்[1] சுதந்திரமாக ஆண்டான். இவன் யுவராஜாவாக இருந்தபொழுது சதாரா பண்டரபுர மண்டலத்தில் ஒரு கிராமத்தைத் தானமாகக் கொடுத்தான்[2] என்று சரித்திரம் சொல்லுகிறது. இவன் புலிகேசி

1. இது கி. பி. 603 முதல் 624 வருஷங்கள் வரையில் இருக்கலா மென்று அபிப்பிராய பேதம் இருக்கிறது. இவ்விஷயத்தை J. A. H. R. S. Vol IX-ல் பார்க்க.

2. Jour B. B. R. A. S. II. P. 11

யின் மகன் என்று சிலர் சொல்லுகிறார்கள். புலிகேசியின் தம்பி என்று சொல்லுவதற்கு திம்மாபுர சாஸனம் ஆதாரமாக இருக்கிறது.[1] இவன் அசுவமேத யாகம் செய்ததாக ஹோசூர் சாஸனத்தில் காணப்படுகிறது.[2] புலிகேசியின் தந்தை ரணராகன் என்னும் விருதுடைய இரண்டாம் விஜயாதித்தியன் என்றும், அவன் ஜயசிம்மன் எனப்படும் முதல் விஷ்ணுவர்த்தனனுடைய மகன் என்றும் தெரிகிறது. விஷ்ணு வர்த்தனன் முதல் விஜயாதித்தனுடைய மகன் என்றும் தெரிகிறது. விஜயாதித்தன் திரிலோசன பல்லவனோடு செய்த யுத்தத்தில் இறந்தான். ஒரு பிராம்மணன் இவனுடைய மகனை வளர்த்ததால் இவ்வமிசத்தினருக்கு விஷ்ணு வர்த்தனர் என்னும் பட்டம் வந்ததாகத் தோன்றுகிறது.[3]

குப்ஜ விஷ்ணுவர்த்தனன் பிஸ்டபுரத் (பிட்டாபுரப்)தைத் தலைநகராகக்கொண்டு வேங்கி நாட்டை 18 வருஷங்கள் ஆண்டான். இவனுடைய தான சாஸனங்கள் திம்மாபுரம், செஜ்ஜரால, சிபுருபல்லி ஆகிய இடங்களில் கிடைத்தன.[4]

இவன் அணுக முடியாமல் இருந்த துர்க்கங்களை யெல்லாம் ஜயித்து விஷமசித்தி என்று பெயர் பெற்றான்; யலமஞ்சிலிக்கு அருகே இருக்கும் கலவ கொண்ட என்னும் கிராமத்தை விஷ்ணு சர்மா, மாதவ சர்மா என்னும் பிராம்மணர்கள் இருவருக்குத் தானம் கொடுத்தான். சமண மதத்தினரையும் ஆதரித்தான். இவனுக்குப் பின் இவனுடைய மூத்த மகனாகிய ஜயசிம்மன் ஆட்சிக்கு வந்தான். இவன் 33 வருஷங்கள் சுமார் கி. பி. 673 வருஷம் வரையிலும் ஆண்டான். அக்கால நிலைக்குத் தக்கபடி இவன் முதலில் பிஸ்ட புரத்தையும், பிறகு வேங்கியையும், பிறகு சித்தியையும் தலைநகராகக் கொண்டான். இவனுக்குச் சர்வ சித்தி என்ற விருதுப் பெயரும் உண்டு. இவன் பெயராலேயே

---

1. ஆந்திர சரித்திரம் 1. பக்கம் 266 and No. 574-P. 17 th July 1908.
2. E. C. X.- J. A. H. R. S. Vol. VIII P. 12
3. S. I. I. Vol. II P. 50
4. J. A. X. X. இவன் தன் ஆட்சியின் 18-ஆம் வருஷத்தில் வந்த ஒரு சந்திர கிரகணத்தன்று ஒரு கிராமத்தைத் தானம் கொடுத்ததாக இதில் காணப்படுகிறது.

சர்வ சித்தி நகரம் ஏற்பட்டது. இது விசாகப்பட்டணம் ஜில்லாவில் இருக்கிறது. இவனுடைய தான சாஸனங்கள் புலம்பூர், பெத வேகி என்ற இடங்களில் கிடைத்தன. பெனுகபர்ரு என்னும் கிராமத்தை இவன் பிராம்மணர்களுக்குத் தானம் கொடுத்தான்.[1]

இவனுக்குப் பின் இவனுடைய தம்பியாகிய இந்திர பட்டாரகன் சில நாட்களே ஆண்டான். பிறகு பட்டாரகனுடைய மகனாகிய இரண்டாம் விஷ்ணு வர்த்தனன் பட்டத்திற்கு வந்து 9 வருஷங்கள் வேங்கி நாட்டை ஆண்டான். இவன் ரேயூர் என்னும் கிராமத்தை அக்கிரஹார மாக்கிப் பிராம்மணர்களுக்குக் கொடுத்தான்.[2] மட்டிவாடா என்னும் ஊரில் ஒரு தானம் செய்து சாஸனம் எழுதுவித்தான். பம்மிடி மூக்கல என்னும் கிராமத்தில் 12 கண்டிகை (ஓர் அளவு) நிலத்தை பர்வசர்மா என்னும் பிராம்மணனுக்கும், அதே அளவு பூமியை குத்திவர்மா என்னும் மற்றொரு பிராம்மணனுக்கும் தானம் செய்து சாஸனம் எழுதினான். யலமஞ்சிலியில் இவனுடைய நாணயங்கள் கிடைத்தன. இவனுடைய மகனாகிய மங்கியுவராஜன் விஜயசித்தி என்னும் விருதுடன் இவனுக்குப் பின் பட்டத்துக்கு வந்தான். யலமஞ்சிலியைத் தலைநகராகக் கொண்டு 25 வருஷங்கள் வேங்கி நாட்டை ஆண்டான். இவன் நாதுலபர்ரு,[3] செந்தலூர்,[4] என்னும் இடங்களில் தான சாஸனங்கள் எழுதுவித்தான். இவனுக்குப் பின் இவனுடைய மூத்த மகன் இரண்டாம் ஜயசிம்ம ராஜன் 13 வருஷங்கள் ஆண்டான். பெனுக பர்ருவில் இவனுடைய தான சாஸனம் ஒன்று சமீபத்தில் அகப்பட்டது. இவனுக்குப் பின் இவனுடைய தம்பியான கோகிலி ராஜன் ஆறே மாதங்கள் அரசாண்டான், இந்தக் குறைந்த கால அளவிலேயே இவன் 'கோடுங்கவிளங்கவாட' என்னும் கிராமத்தை 103 பிராம்மணர்களுக்குக் கொடுத்தான். முஞ்ஜேரு என்னும் கிராமத்தையும் இவன் பிராம்மணர்களுக்குத் தானம் செய்து சாஸனம் எழுதினான். இவனும் யலமஞ்சிலியைத் தலைநகராகக் கொண்டு

1. Ind Ant. XIII P. 137. & History of Andhras I. P. 268.
2. Ind Ant VII P. 185.
3. Ind. Ant. XX P. 105.
4. EP. Ant. IIL. P. 236.

ஆண்டான். இந்தக் கோகிலி ராஜனுடைய பெயராலேயே 'கொக்கிலி' கட்ட என்றும் ஏற்பட்டதாகத் தோன்றுகிறது. கம்ம, வெலமவாரில் கோகாவார் என்னும் வீட்டுப் பெயர்கூட இவனால் ஏற்பட்டதாகவே தோன்றுகிறது. இவனுக்குப் பின் இவனுடைய தம்பி மூன்றும் விஷ்ணு வர்த்தனன் 37 வருஷங்கள் ஆண்டான். இவன் நோயுற்றுப் படுத்திருந்த போது இவன் உடம்பு சரியாவதற்காக இவனுடைய பாட்டி சா. ச. 644-ஆம் வருஷத்தில் (கி. பி. 722) சமணப் பள்ளி ஒன்றுக்கு ஒரு கிராமத்தைத் தானம் செய்ததாகத் தோன்றுகிறது. இந்த கிராமத்தின் பெயர் முஷினி கொண்ட. அப்பொழுது நம் தேசத்தில் சமண மதப்பற்று ஒரு புறம் இருந்து வந்தது. இவனுக்குப் பின் இவனுடைய மகன் முதல் விஜயாதித்தன் பட்டத்துக்கு வந்து 19 வருஷங்கள் ஆண்டான். இவனுக்கு விஜய சித்தி, விக்ரம ராமன் என்ற விருதுப் பெயர்கள் உண்டு. இவனுக்குப் பின் இவன் மகனாகிய 4-ஆம் விஷ்ணு வர்த்தனன் 35 வருஷங்கள் வேங்கி நாட்டை ஆண்டான். இவன் சுமார் கி. பி. 799 வாக்கில் ஆண்டதாக சாத்தலூர், பாமுலபாடு, குண்டூர், உப்புட்டூர் சாஸனங்களை ஆராய்ந்தவர்கள் கண்டு பிடித்தார்கள். இவன் காலசுர்ய ராஜனாகிய த்ரிபுராதீச்வரனுடைய மகளை மணந்தான். முதல் விஜயாதித்யன் கும்மலூர், தினகாடு என்னும் கிராமங்களில் சில நிலங்களை மாதவ சர்மா என்னும் பிராம்மணனுக்குத் தானம் கொடுத்துச் சாஸனம் எழுதினான். இவனுக்கு இரண்டாம் விஜயாதித்யன், நிருபருத்ரன் என்னும் பிள்ளைகள் பிறந்தார்கள். நான்காம் விஷ்ணு வர்த்தனனுக்குப் பிறகு அவனுடைய மகனாகிய இரண்டாம் விஜயாதித்யன் சக்ர வர்த்தி ஆனான். இவன் பெஜவாடாவைத் தலைநகராகக் கொண்டு ஆண்டதாகத் தெரிகிறது.[1] இதற்கு முந்திய அரசர்களுடைய சரித்திரங்கள் நமக்கு விவரமாகத் தெரியவில்லை. ஆனால் மிகப் பராக்கிரமசாலி என்றும், 108 போர்களில் வெற்றி பெற்றவன் என்றும் சாஸனங்களின் மூலம் தெரிகிறது. இவன் வீரசைவன் ஆனதால் 108 சிவாலயங்களைக் கட்டுவித்தான் என்று பல சாஸனங்களின் மூலம் அறிகிறோம்.

---

1. J. A. H. R. S. Vol. III

இவனுக்குச் சாளுக்கியார்ஜ்ஜுனன், த்ரிபுவனங்குசன், ராஜ பரமேச்வரன், நரேந்த்ர ம்ருகராஜன் என்ற விருதுகள் உண்டு. இவன் மூன்றும் கோவிந்தன் என்னும் ராஷ்ட்ரகூட அரசனுடனும், மைசூர்க் காங்க அரசர்களுடனும் 12 வருஷங்கள் விடாமல் போர் செய்தான். இவன் சுமார் கி. பி. 799 முதல் 843 வரையில் 40 வருஷங்களுக்கு மேலாக ஆண்டான். கொர்ரபர்ரு என்னும் இராமத்தை ப்ராம்மணர்கள் 24 பேருக்கு அக்ரஹாரமாகக் கொடுத்தான்.[1] காமருபிகேயம் என்னும் கிராமத்தையும் பிராம்மணர்களுக்குக் கொடுத்ததாக யீதர என்னும் ஊர் சாஸனத்தால் தெரிகிறது.[2]

நரேந்திர மிருக ராஜனுக்குப் பின் அவனுடைய மகனாகிய 5-ஆம் காளீ விஷ்ணு வர்த்தனன் பட்டத்துக்கு வந்து ஒன்றரை வருஷகாலமே ஆண்டான். இவன் பெயர் கலவித்தராஜன் என்றும் சொல்லுவது உண்டு. இவன் ராஷ்டிரகூட அரசர்களுடன் செய்த போரில் இறந்திருப்பான் என்று சரித்திராசிரியர்கள் நினைக்கிறார்கள்.[3]

கலவித்தர ராஜனுக்குப் பிறகு அவனுடைய மகனாகிய குண காங்க விஜயாதித்யன் அரசனாகிச் சுமார் கி. பி. 894 முதல் ஆண்டான். இவனுக்கு ரணரங்க சூத்ரகன், விக்ரம தவளன், பரசக்ர ராமன், நிருபதி மார்த்தாண்டன் என்ற விருதுகள் உண்டு. இவனுக்கு யுத்த மல்லன் I என்னும் சகோதரன் இருந்தான். மற்றொரு சகோதரன் யுவராஜ விக்கிரமாதித்யன். விஜயாதித்தன் சாத்தலூரில் 100 பிராம்மணர்களுக்குச் சில பூமிகளை தானம் செய்து சாஸனம் எழுதினான். இவன் ராஷ்ட்ர கூட அரசனாகிய இரண்டாம் கிருஷ்ணராஜனுடன் போர் செய்து அவனைக் கொன்றதாகத் தெரிகிறது. இவன் நுளம்ப ராஜனாகிய மங்கி ராஜனைக் கொன்று அவனுடைய சைன்யத்தை வெற்றி கொண்டான். வைதும்ப ராஜனாகிய கந்த சங்கிலனுடன் யுத்தம் செய்து அவனை சிற்றரசனாக்கிக் கொண்டான். கோடமுப்பர்லு,

1. S. I. I. Vol I P. 33
2. Ind Ant XIII. P. 55
3. J. A. H. R. S. Vol. III History of Rajahmundry.

போணங்கி என்னும் ஊர்களை 105 பிராம்மணர்களுக்கு தானம் கொடுத்தான்.[1] தாண்டபர்ரு என்னும் கிராமத்தை விளையாதித்த சர்மா என்னும் பிராம்மணனுக்கு தானம் கொடுத்தான்.[2] இவன் வேங்கி தேசத்தை 44 வருஷங்கள் எதிர்ப்பில்லாமல் ஆண்டான். இவன் தாஹலீபுர அரசனைப் போரில் தோற்கடித்தான் என்றும், வல்லப ராஜன் எனப்படும் இரண்டாம் கிருஷ்ண ராஜனுடைய ராஜ்யத்தில் மான்ய கேதம் என்னும் இடத்தை எரித்து அதை அவனுக்கே திருப்பிக் கொடுத்தான் என்றும் தெரிகிறது.[3] இவன் சிம்மாசனம் ஏறும்போது பொன் துலாபாரம் ஏறி ஜனங்களுக்கு பங்கிட்டான். இவனிடம் பாண்டுரங்கன் என்னும் பிரஸித்தி பெற்ற பட்வர்த்தன வம்சத்து மந்திரி இருந்தான்.

இந்த அரசனுக்குப் பிறகு இவனுடைய தம்பிகளில் ஒருவனாகிய யுவராஜ விக்ரமாதித்தனும், அவனுக்குப் பிறகு அவன் மகனாகிய முதல் சாளுக்கிய பீமனும் ஆண்டார்கள். சாளுக்கிய பீமனுக்குத் துரோஹார்ஜுனன் என்ற விருது உண்டு. இவன் சா. ச. 814 (கி. பி.892)–ஆம் வருஷம் பட்டாபிஷேகம் செய்து கொண்டு 30 வருஷங்கள் ஆண்டான். இவனுக்கு இரமர்த்திகண்டன் என்ற விருது உள்ள மகன் இருந்தானும். அவன் அபிமன்யுவைப் போன்ற சூரனும். நிடதவோலுக்கும் பெருவங்கூருக்கும் அருகில் வல்லப ராஜாக்களுடன் நடந்த போரில் கடும் போர் செய்து இறந்தானும். இவன் எதிரிச் சேனைபதிகளாகிய தண்டென, குண்டயா என்பவர்களுடன் தன் யானை மேல் இருந்துகொண்டே பின்புறமாகப் போர் செய்து குண்டயாவைக் கொன்றதாகச் சாஸனங்களில் காணப்படுகிறது.[4] இந்த வீரனுடைய மகனுக்குப் புண்ணியம் தேடும் பொருட்டு சாளுக்ய பீமன் இரண்டு அக்ர ஹாரங்களை[5] தாரை வார்த்தான். இவனிடம் பிராம்மண வீரர்கள் கூட இருந்தார்கள். இவன் உத்தர கண்டேர் ஜில்லாவில் கூக்கி பர்ரு என்னும் கிராமத்தைப் போத்தமையா என்னும் பிராம்மண

1. No. 538 Public D 28-7-1909.
2. Ind. Ant XX Page 102 & (History of Rajahmundry)
3. J. A. H. R. S. Vol. III History of Rajahmundry.
4. J. H. R. S. Vol. III. History of Rajahmundry.
5. J. H. R. S. Vol. III. History of Rajahmundry.

னுக்கும், பாண்டி பாள்ள என்னும் கிராமத்தை ரங்காதி கக்கர என்னும் பிராம்மண வீரனுக்கும் கொடுத்தான்.[1] இந்தச் சாளுக்ய பீமன் தன் தலை நகரைச் சாளுக்கிய பீமவரத்துக்குக் கொஞ்ச காலம் மாற்றிக் கொண்டதாகத் தெரிகிறது. இது சாமல் கோட்டை ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் இருக்கிறது. இவனுடைய சாஸனம் ஒன்று அத்திவி கிராமத்தில் அகப்பட்டது. (C. P. No. 14 of 1917—18.)

சாளுக்ய பீமனுக்குப் பிறகு கொல்லபிகண்ட 4-ம் விஜயாதித்ய சக்ரவர்த்தி பட்டத்துக்கு வந்து ஆறே மாதங்கள் ஆண்டான். இவன் ராஷ்ட்ரகூட அரசனாகிய 3-ம் இந்த்ர வர்மனோடு செய்த விரஜாபுர (ஏலூராக இருக்கலாம்) யுத்தத்தில் இறந்தான் என்று சக்தி வர்மாவின் பென்னேரு சாஸனத்தில் காணப்படுகிறது. சாளுக்கியன் இறந்தாலும் அவன் கட்சியே இந்த யுத்தத்தில் ஜயித்தது.

பின்பு நான்காம் விஜயாதித்யனுடைய மகனாகிய ஆரும் விஷ்ணு வர்த்தனன் பட்டத்துக்கு வந்தான். இவனுக்கு முதல் அம்ம ராஜன் என்ற பெயரும் உண்டு. இவன் சுமார் கி. பி. 918—925 வரையில் 7 வருஷ காலம் ஆண்டான். இவன் தன் தலை நகரை ராஜ மஹேந்த்ரவரத்துக்கு மாற்றியதாக சரித்திராசிரியர்கள் நம்புகிறார்கள். இவன் குண்டூர் என்னும் கிராமத்தையும் அதைச் சேர்ந்த 12 பாளையங்களையும் சேர்த்து தன் குலத்தில் பரம்பரையாகச் சேனாதிபதிகளாக இருந்தவர்களில் பண்டநாதித்யன் என்னும் விருது உள்ள குந்தாதித்யனுக்குக் கொடுத்தான். சாஸனமும் எழுதினான்.[2] இக்காலத்து குண்டூர் நகரமே என்று சிலர் நினைக்கிறார்கள். இவன் துளம்ப ஐயப்ப ராஜனுடன் செய்த யுத்தத்தில் இறந்ததாகத் தெரிகிறது. இவன் த்ருஜ்ஜுமர் என்னும் கிராமத்தை மஹாகாலன் என்னும் சேனாதிபதிக்குக் கொடுத்தான்.[3] இவனுக்குப் பிறகு இவன் மகனாகிய யுவராஜ பேத விஜயாதித்யன் 15 நாட்களே ஆண்டான். இவனைப் பதவியி

1. J. A. H. R. S. Vol. III & Pandipaka Plates.
2. S. I. I. Vol. I. P. 39.
3. History of Andhras I. P. 282.

விருந்து விலக்கி யுத்த மல்லனுடைய மகனுகிய தாடப ராஜன் ஒரு மாதம் ஆண்டதாகத் தெரிகிறது. பின் இவனைக் கொன்று இரண்டாம் விக்கிரமாதித்தன் பதினொரு மாதங்கள் ஆண்டதாகத் தெரிகிறது. பல்லவ வமிசத்துக் கவி வர்மனுக்குத் தாளராஜன் வெல நாட்டுச் சிமையில் ஒரு கிராமத்தைக் கொடுத்தான்.

இந்தத் தாள ராஜன் முதல் யுத்த மல்லனுடைய மகன். இவனை இரண்டாம் விக்கிரமாதித்தன் கொன்ருன். முதல் அம்ம ராஜனுடைய இளைய மகனுகிய 3-ஆம் பீமராஜன் இந்த விக்கிர மாதித்தனைத் துரத்தி விட்டு ராஜ்யத்தை அபகரித்தான்.

இந்தப் பீமராஜன் வேங்கி தேசத்தை ஏழு மாதங்கள் ஆண் டான். பிறகு தாலபனுடைய மகனுகிய இரண்டாம் யுத்த மல்லன் இவனைக் கொன்ருன். யுத்த மல்லன் வேங்கி தேசத்தை 7 வரு ஷங்கள் ஆண்டான். இவனுடைய சாஸனம் ஒன்று பெஜவாடா வில் இருக்கிறது. இவனுக்குப் பாதபன் என்னும் மகன் இருந்தான்.

இரண்டாம் யுத்த மல்லனுக்குப் பிறகு 7-ம் விஷ்ணு வர்த் தனன் என்ற பட்டத்தைப் பெற்ற இரண்டாம் சாளுக்கிய பீமன் பட்டத்துக்கு வந்தான். இவன் சுமார் கி. பி. 934—945 வருஷங் களுக்கிடையே 12 வருஷங்கள் ஆண்டான். இவன் 4-ம் விஜயா தித்தனுடைய இரண்டாம் மகன். இவனுடைய சாஸனங்கள் பானகவரம், கோலவென்னு என்னும் கிராமங்களில் அகப் பட்டன.[1] இவன் கோதவல்லி என்னும் கிராமத்தை அக்கிரகார மாக்கித் தானம் செய்ததாகக் கோலவென்னு சாஸனம் சொல்லு கிறது. இவன் லோவ சிக்கய என்னும் சோழ ராஜனை வென்ரு னும். இவனுக்கு லோக மகாதேவி என்னும் மனைவியிடம் இரண் டாம் அம்மராஜனும், அங்கி தேவியிடம் தாஞர்ணவனும் பிறந் தார்கள்.

இவனுக்குப் பின் இரண்டாம் அம்ம ராஜன் ஆரும் விஜயா தித்த சக்ரவர்த்தி என்னும் பெயருடன் பட்டத்துக்கு வந்தான். சா. ச. 867 (கி. பி. 945) முதல் 25 வருஷங்கள் அரசாண்டான்.

---

1. I. A. XIII. E. I. V. } J. A. H. R. Vol. III. (History of Rajahmundry.)

ஆனால் தம்பியாகிய தானார்ணவனுக்கும் இவனுக்கும் மனஸ் தாபம் வளர்ந்து வந்தது. இவர்கள் பரஸ்பரம் ஒருவனுடைய மகனை மற்றொருவனைக் கொன்றனராம். எவ்வளவு கொடூரமான செய்தி! இரண்டாம் அம்மராஜனுடைய மைத்துனனாகிய பாஸ்கர கண்ட நாராயணன் என்பவனும் இவனுடைய விரோதி களோடு சேர்ந்து கொண்டான். இவன் (அம்மராஜன்) ராஷ்டிர கூட அரசர்களுடன் யுத்தம் செய்ய வேண்டி யிருந்தது. அந்த யுத்தத்தில் எதிரிப் படையில் எட்டு யானைகளை இவன் கொன்றான். இவனுடைய காதற் கிழத்தியாகிய சாமெகாம்பா சமண மதப் பற்றுள்ளவள். இவள் தூண்டுதலால் அம்மராஜன் இவளுடைய குருவாகிய அருக நந்தி என்பவருக்குக் 'கலுசம்பர்ரு' என்னும் கிராமத்தைத் தானம் கொடுத்தான். இவள் பட்வர்த்தன வம்சத்தில் பிறந்தவள். இந்த அம்மராஜன் சுமார் கி. பி. 970 வரையில் ஆண்டான். இவனுடைய தான சாஸனங்கள் 'பதங்கலு', மர்யம்பூடி, வண்ட்ரம், குரவாடு, முதலிய கிராமங் களில் அகப்பட்டன. பாம்பர்ரு என்னும் கிராமத்தைச் சேனாதி பதி ஒருவனுக்குக் கொடுத்தான்.[1] இவைகளால் இவன் முதல் சாளுக்கிய பீமனைப்போல், கவிஞர்களையும் பாடகர்களையும், வெகுமதிகளால் கௌரவித்துக் "கவி காயக கல்பதரு" என்னும் பட்டம் பெற்றான். 'யல-வர்ரு' என்னும் கிராமத்தைப் பிராம் மணர்களுக்கும்,[2] பல்லிபூடி என்னும் கிராமத்தைச் சமணப் பள்ளிக்கும்[3] தானம் கொடுத்தான். இவன் கலைகளை வளர்த் தான். இவன் சில சத்திரங்களையும், புதிய சமணப் பள்ளிகளை யும் பெஜவாடா, அத்திலி என்னும் இடங்களில் நிறுவினான். இவன் சிறந்த கொடையாளி என்று தெரிகிறது. மகாராஜன் குரவாடாவில் ஒரு பகுதியை அக்கிரகாரமாக்கினான். இவனுக்குத் திரிபுவனங்குசன் என்ற பட்டம் உண்டு. இவன் இறந்த பின் இவனுடைய தம்பியாகிய தானார்ணவன் பட்டத்துக்கு வந்தான். இது கி. பி. 970-ல் நடந்திருக்கலாம். இவன் காலத்தில் வேங்கியில் உள்நாட்டுக் கலகம் தலைவிரித்தாடியது. சூழ்ச்சிகள் அதிக

1. Ind. Ant. VIII. P. 73.
2. Ibid. XII. P. 91.
3. Ibid. IX. P. 47.

மாயின. பாதபன் என்னும் அரசன், தானே பட்டத்துக்கு அதிகாரி என்று சொல்லிக் கொண்டான். இவன் தானார்ணவனுடைய பங்காளி வருக்கத்தைச் சேர்ந்தவன் ; இரண்டாம் யுத்தமல்லனுடைய மகன்.

தானார்ணவனுடைய கட்சியில் முதிகொண்ட சாளுக்கிய சந்ததியைச் சேர்ந்த மல்லன, குண்டிய என்னும் சேனாதிபதிகள் இருந்தார்கள். அவர்கள் போரில் தன் கட்சியே ஜயிக்கும்படி திறமையோடு போரிட்டதால், இம் மகாராஜன் அவர்களுக்குப் பொத்தப்பி நாட்டைச் சேர்ந்த 300 கிராமங்களை வரி யில்லாமல் கொடுத்தான். கண்டியத்தில் கிடைத்த தாமிர சாஸனத்தில் இச் செய்தி காணப்படுகிறது.[1]

இதற்கிடையில் வீராதி வீரனும் தெலுங்குச் சோழனுமாகிய சடைச் சோழ பீமன் ஏழாம் விஜயாதித்தனாகிய பாதபனுடைய கட்சியில் சேர்ந்து தானார்ணவனுடன் போரிட்டான். தானார்ணவனைக் கொன்று, பாதபனுக்குப் பதிலாகத் தானே அரசாண்டான். இவன் பாதபனுடைய மைத்துனன். சடைச் சோழ பீமனுக்கு வல்லப ராஜனாகிய கர்ணனும் போரில் உதவி செய்தான். இவன் காலத்தில் பல போர்கள் நடந்தன. அநேகமாகக் கி. பி. 999-ஆம் வருஷம் வரையிலும் பாதபனே அரசனாக இருந்தான். பிறகு, தானார்ணவனுடைய மகனாகிய சக்தி வர்மா I சடைச் சோழ பீமனைக் கொன்று சாளுக்கிய சந்திரன் என்னும் விருதுடன் சிங்காசனம் ஏறினான். இவன் 12 வருஷங்கள் வேங்கி தேசத்தை ஆண்டான். இவனுடைய பொன் நாணயங்கள் சயாமிலும் அரக்கானிலும் அகப்பட்டன. அதனால் அந்தத் தேசங்களோடு வேங்கி தேசத்தார் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

சக்தி வர்மா I க்குப் பின்பு அவனுடைய தம்பியாகிய விமலாதித்தன் சா. ச. 933–ஆம் (கி. பி. 1011) வருஷத்தில் பட்டத்துக்கு வந்து 7 வருஷங்கள் ஆண்டதாகத் தோன்றுகிறது. இவனுடைய சாஸனம் ஒன்று ரணஸ்திபிண்டி என்னு மிடத்தில் அகப்பட்டது.[2] இவன் ஆரிய மகாதேவி என்பவளிடம் தானார்ண

1. J. A. H. R. S. Vol. XI. P. 81.
2. Ep. Ind. VI. Page. 347. & History of Andhras I. Page 291

வனுக்குப் பிறந்தவன். இவனுக்கு முந்திய அரசர்களும் சோழர்களுடன் சம்பந்தம் செய்திருக்கிறார்கள்; என்றாலும் சாஸன மூலமாக நமக்குத் தெரியும்படி காஞ்சீபுரச் சோழர்களுடன் சம்பந்தம் செய்துகொண்ட முதல் அரசன் இவனே. காஞ்சீபுரச் சோழனாகிய ராஜ ராஜனுடைய மகள் குந்தவியை இவன் மணந்தான்.[1] ஆகையால் இவன் கி. பி. சுமார் 1011-18 வருஷங்களுக்கிடையே இருந்து வேங்கி நாட்டை ஆண்டவன் என்று சொல்லலாம். இவன் சமண மதப் பற்றுள்ளவன் என்பது கன்னடச் சாஸனம் ஒன்றால் தெரிகிறது.[2] இவனுடைய மந்திரி காரஞ்சேடு என்னும் ஊரில் வசித்த 'வஜ்ஜிய ப்ரெக்கட' என்பவர்; நிருபகாமன் என்பவர் சேனாதிபதி.[3] இச் சாளுக்கிய வமிசத்தார் ஆந்திர சோழர்களுடனும் சம்பந்தம் செய்து வந்தார்கள் என்பதை முன்னமே சொன்னோம். இவனுக்குப் பிற் காலத்தவர்களும் அப்படியே செய்து வந்தார்கள். இவனுக்கு மும்மடி பீமன் என்ற விருது உண்டு. ரணஸ்திபிண்டி, பாருவளம் என்னும் கிராமங்களை இவன் அக்கிரகார தானம் செய்தான். இவை அமலாபுரம் தாலுக்காவில் இருக்கின்றன. 10-ஆம் நூற்றாண்டு வரையில் சாளுக்கியர் சம்பந்தப்பட்ட செய்திகளை இது வரைக்கும் சுருக்கமாகச் சொன்னோம்.

இவ்வமிசத்தில் பிற் காலத்தில் பல தலைமுறைகள் சென்றபின் 'அடப்பா, விஷ்ணு வர்த்தனப் பிரம்மாதிராயர், நிடுதப்ரோலி மகாதேவ சக்ரவர்த்தி வீரபத்திர ராஜா, யலமஞ்சிலி விச்வேச்வர ராஜா, யலமஞ்சி உபேந்திர சக்ரவர்த்தி; அம்பிகா தேவி, மகாராஜா முதலியவர்கள் தோன்றினர். இந்த அடப்பா, யலமஞ்சி, நிடதவோலுவார் இப்பொழுதும் கம்மவாரில் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் மேலே கண்ட சாளுக்கிய வமித்தினரே. 10-ஆம் நூற்றாண்டுக்கு மேற்பட்ட சாளுக்கியர்களைப் பற்றி இப் புத்தகத்தின் இரண்டாம் பாகத்தில் எழுதுகிறேன். சாளுக்கிய வமிசத்தினர் முதலிலிருந்தே தான தருமம்

1. S. I. I. Vol. III P. 126.
2. கலிங்க தேச சரித்திரம். பக். 456.
3. Ep. Ind. VI. P. 347

செய்து புகழ் பெற்றவர்கள். பல கோயில்களை எழுப்பிப் புண்ணியம் கட்டிக் கொண்டவர்கள். இவர்கள் எல்லா மதங்களையும் சமரசமாக ஏற்றவர்கள். ஆந்திர தேசத்தை இத்தனை நூற்றூண்டுகளாக விடாமல் ஆண்டவர்கள் சாளுக்கியர்களே என்று மேளதாளத்துடன் சொல்லலாம். இதற்கு இவர்களுடைய குணம், புகழ், நல்லொழுக்கம் இவையே காரணம் என்று சரித்திர ஆராய்ச்சியாளர்கள் ஒத்துப் பாடுகிறூர்கள். கம்மவாரில் சிலர் இவ்வமிசத்தினர் என்பதில் நாம் பெருமை கொள்ள வேண்டும்.

## கோட்டவார்

தரணிக் கோட்டையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு புகழ்பெற்ற கோட்ட வமிசத்தார் சிலர் இருந்தார்கள். இவர்களுள் 11, 12-ஆம் நூற்றூண்டுகளில் ஆண்டவர்களுடைய சரித்திரம் மட்டுமே நமக்குக் கிடைத்தன. அக் காலத்துக்கு முந்தியவர்களுடைய செய்தி நமக்குத் தெரியவில்லை.

"தரணிக் கோட்டையை 12-ஆம் நூற்றூண்டின் தொடக்கத்தில் ஆண்டவன் ப்ரோல நாயக்கன்; இவன் சந்தவோலுவை ராஜதானியாகக் கொண்டு ஆண்ட வெல நாட்டுக் கொங்க ராஜனுடைய மந்திரி; இவனுக்கும் பிற் காலத்துக் கோட்ட வமிசத்தரசர்களுக்கும் என்ன சம்பந்தம் என்பது தெரியவில்லை என்று ஆந்திர சரித்திரம் 5-ஆம் பாகம் 356, 357 பக்கங்களில் ஸ்ரீ வீரபத்திரராவ் பந்துலு எழுதி யிருக்கிறூர். இதற்கு ஆதாரமாகச் சா. ச. 1030-ஆம் வருஷத்து அமரேசுவரஸ்வாமி கோயிற் சாஸனத்தையும் காண்பிக்கிறூர். அது இந்த பத்தியமே.

"ஸ்ரீரராஜப் பிரதி சாஸனு
டாராதித நீலகண்ட்டு டபிநவ மதனு
காருடு ப்ரேலடு விபுதா
தாருடுனம் பென்ன ராம்பி தனயடு நெகடென்" ॥

ஆனல், அந்தச் சாஸனத்தில் இருக்கும் வேறு சில பத்தியங்கள் மூலமாகவும், கீழே வரும் உரை நடையாலும் அச் சாஸனம் குறிப்பிடுவது வேறு ஆசாமியை என்பது தெரிகிறது.

"ஸ்ரீமன் மகாமண்டலேச்வர குலோத்துங்க சோட கொங்க்க ராஜ—ல திவ்ய ஸ்ரீ பாத பத்மோப ஜீவியைன ஸெஜ்ஜ ப்ரோலெ

நாயக்குனி பெண்ட்லமு விண்ட்டல கொம்மாஸானி" என்ற வசனம் காணப்படுகிறது- சாஸனம் எழுதியது ஸெஜ்ஜ ப்ரோலி நாயக்கன் மனைவி. இந்த நாயக்கன் ராஜவோலு என்னும் என்னும் ஊரின் தலைவன். இச் சாஸனம் பூராவையும் சாஸன பத்திய மஞ்ஜரி 7–இலும், தென்னிந்தியச் சாஸன சம்புடம் VI No. 240–இலும் பிரசுரித்திருக்கிறார்கள். இந்தச் சாஸனத்தால் மேலே கண்ட ப்ரோலய கோட்ட வம்சத்தினன் அல்லன் என்பது நிச்சயமாகத் தெரிகிறது. இவன் தரணிக் கோட்டையை ஆண்டிருக்கலாம். தரணிக் கோட்டையை ஆண்டவர்கள் வேறு; கோட்ட வமிசத்தினர் வேறு என்பதைக் கோட்ட கண்ட பூபதி ராஜனுடைய மனைவியாகிய பூரம தேவியின் சாஸனத்தால் அறிகிறோம்.

ஸத்தெனபல்லி தாலுக்காவைச் சேர்ந்த 'பெதமக்கென' என்னும் ஊரில் ஒரு கற் கம்பத்தின் மேல் இச்சாஸனம் செதுக்கப்பட்டிருக்கிறது.

" அமலபயோதி ஜந்த்ருடுதயம்பகுனட்லனெ போலெவாரிஜா
தமுன விரிஞ்சி புட்டினவிதம்புன காஞ்சன தாருணீதரேந்
த்ரமுன ஸுராவனிஜ முதிதம்பயி யொப்புகதிஞ் ஜதுர்த்தவம்
சமுன ஜனிஞ்செ னுக்ரரிபு ஸைன்ய ஜயுண்டு தனஞ்ஜயுண்டிலன்" [1]

போலெ என்று சொல்லப்படும் இவ்வமிசத்தாருக்கு மூல புருஷன் தனஞ்ஜயன். 'உக்ரரிபு சைன்யஜயன்' என்ற பதப் பிரயோகத்தால் சந்திர வம்சத்தவனாகிய அர்ஜுனனைக் குறித்தே இதை எழுதி யிருக்கலாமோ என்ற சந்தேகம் எழுகிறது. ஆனால் தனஞ்ஜயன் என்ற பெயர் பலருக்கு இருந்திருக்கிறது. கி. பி. 340-ஆம் வருஷத்தில் ஆண்ட சமுத்திரகுப்தன் தன் அலகாபாத் சாஸனத்தில் குஸ்தல (கௌத்ஸல)[2] புரத்தரசனாகிய தனஞ்ஜயனைத் தான் வென்றதாக எழுதிக்கொண்டிருக்கிறான். கலிங்க சரித்திர அனுபந்தம் பாருங்கள். ரே நாட்டுச் சோழர்களுள்ளும் ஒரு தனஞ்ஜயன் இருந்திருக்கிறான். இவன் குந்தல தேசத்தை ஆண்டான். இவனுடைய வம்சத்தினர் பிற மதங்களில் சேர்ந்து

1. Social Records Vol. 45 & J. A H. R. S. Vol. II; History of Andhras V

2. இது கௌந்தல (குந்தல) தேசம் என்பது என் சந்தேகம்.

மறுபடியும் இந்து மதத்துக்குச் சதுர்த்தகளாகத் திரும்பி வந்து விட்டதாகத் தோன்றுகிறது. இத் தனஞ்ஜயனுடைய வம்சத்தில் பிரசித்தி பெற்ற அரசர்கள் பலர் பிறந்தனர். அவர்களுள் சோழ ராஜனும், அவனுக்குக் கண்ட பூபதியும், அவனுக்கு மும்மடி பிமன் என்பவனும், அவனுக்கு இரண்டாம் கண்ட பூபதி ராஜனும் பிறந்து ஆண்டதாகக் கண்ட பூபதியின் மனைவி பூரமா தேவியின் சாஸனத்தால் தெளிவாகத் தெரிகிறது.

' ஆதனி வம்சம்புனவிக்
யாதுலு நரபது லனேகு லிகின புட்டெடன்
சோடக்ஷ் மாதீ சுடுதத்
பூதல நாதுனகு கண்ட பூபதி புட்டெடன்
ஆமனு ஜாதி நாத ஸாதுடை யுதயிஞ்செ விரோதி காத்ரஸாத்
ராமுடு ஸத்ரு பத்ம ஹிம தாமுடு சாத்ரவதம்ஸ காமினீ
ராமுடராதி பங்க்திமுக ராமுடு பிகர வித்விஷத் புரி
பிமுடு வைஸிம்ஹ பலபிமுடு மும்மடி பிமுடிம்மஹின்" ||
அதனிகி நதஜ......
கதனுத்ய கிரீடமணி பிரபாவிதாள பூஷ்யி
க்ருத பதபத் முடுகண்ட
க்ஷிதிபதி யுதயிஞ்செ தானி கேதனி யந்துன் || "

(Social Records Vol. No. 45)

இந்த கண்ட க்ஷிதிபதியின் மனைவியே பூரணமா தேவி யென்பது இவற்றுக்குப் பின் வரும் பத்தியங்களால் தெரிகிறது. கண்ட பூபதி 12-ஆம் நூற்றூண்டில் இருந்தவன். ஆகையால் இவ் வம்சத்தில் நமக்குத் தெரிந்த மூல புருஷனுகிய சோழ ராஜன் 11-ஆம் நூற்றூண்டினன் என்று கொள்ள வேண்டும்.

இவ் வம்சத்தினர் ஒவ்வொருவரும் முறையே தரணிக் கோட்டையை ஆண்டவர்கள். இவர்களுடைய சரித்திரம் பூராவும் தெரியவில்லை. ஆனல் " சமதிகத பஞ்ச மகா சப்த மகா மண்டலேச்வர ஸ்ரீ தான்ய கடக புராதிச்வர, அமரேச்வர தேவர, திவ்ய ஸ்ரீ பாதபத்மாராதக பரபல ஸாதக கொம்மன தண்ட நாயக்க சிரச்சேத விஜய விரோதி ஜனவது மங்கள ஸூத்ர ஹரண விக்ரமாசரண சரணேத் தண்டராய சாணூர முராந்தக யூதியபேத

மத்த மாதங்க ஸம்ஹார கடக ஸாமந்த வேச்யா புஜங்க காண்டிய கெட நடநாரீ ஸூத்ரதார யேகாங்க வீர சாளுக்ய கடக ஸாமந்த சேகொலுவ சோட கடக ஸாமந்தமுங் கொலுவ கண்டர கண்ட கண்ட கிலான்ல விரோதி விலயானல ஸங்க்ராம ஸமரைக பீம களி கள மகடகே கண்ட பேருண்ட சித்தி சோட ம்ருக சார்த்தூல மல்லசோட மஸ்தக சூல நாமாதி" என்ற பல விருதுகள் கண்ட பூபதிக்கு இருந்தன என்று அந்தச் சாஸனத்தில் காண்கிறோம். அதனால் அவன் சிறந்த வீரன், சில மண்டலங்களுக்குத் தலைவனாய் இருந்து ஆண்டவன், சிவ பக்தன், கொம்மன என்ற சேனாபதியைக் கொன்று வெற்றி பெற்றவன், சாளுக்கியர்களும் சோழர்களும் கூடச் சிற்றரசர்களாகத் தன் தர்பாரில் இருந்து ஏவல் செய்யப் பெற்றவன், சித்தி சோழனாகிய மானுக்குப் புலியாகவும், மல்ல சோழனுக்குத் தலைக்கு வந்த சூலமாகவும் இருந்தவன்" என்பவற்றை அறியலாம்.

மேலே காணப்படும் சோழர்கள் இருவரும் தெலுங்குச் சோழர்களே; 13-ஆம் நூற்றாண்டில் இருந்த ஓபிலி சித்தி சோழனுடைய முன்னோராய் இருக்கலாம். தெலுங்குச் சோழர்களுக்கும் கோட்ட வம்சத்தாருக்கும் அரசாங்க விஷயமாகப் பகை இருந்ததென்பது தெரிகிறது. இவர்களைப் பற்றிய பிற்காலச் சரித்திரத்தை இரண்டாம் பாகத்தில் காணலாம்.

கோட்ட வீட்டுப் பெயரைக் கொண்ட கம்மவார் இவ்வம்சத்தினரே. கோட்டவார் என்னும் கம்மவாரின் ஒரு பகுதியினர் 17-ஆம் நூற்றாண்டிலிருந்து விஷ்ணு கோயில் கட்டி வந்ததாகப் பெதகாதெலவர்ரு என்னும் ஊரின் உள்ளூர் அறிக்கையில் காணலாம். ஆந்திர க்ஷத்திரியர்களுள் தனஞ்ஜய கோத்திரத்தார் தாங்கள் இவ்வம்சத்தினர் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். பெனுமச்சவார் தனஞ்ஜய கோத்திரம் என்றும், சூரிய வம்சம் என்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். பெனுமச்ச புச்சிராஜு தாம் எழுதிய பரதத்வப் பிரகாசம் என்னும் நூலில் அப்படி எழுதியிருக்கிறார். தாண்ட்ல, ஜம்பனி என்ற வீட்டுப் பெயர் உள்ளவர்களும் தாங்கள் கோட்ட வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அதனால் இப்பொழுது இருக்கும்

ஆந்திர க்ஷத்திரியர்கள் சிலருக்கும் கோட்ட வம்சத்தார் மூல புருஷர்களா யிருக்கலாம். கம்மவாருள்ளும் ஜம்பனி வீட்டுப் பெயர் இருக்கிறது. கோட்ட வம்சத்தரசர்களுள்ளும் சோழப் பட்டம் உள்ளவர்கள் இருந்ததாலும், இவ் வம்சத்தார் சூரிய வம்சத்தினர் என்று சொல்லிக் கொள்வதாலும் கோட்ட வம்சத்தினரையும் சூரிய வம்சத்தின ரென்றே நினைக்கவேண்டி யிருக்கிறது. சில பட்டங்களும் இவ்விஷயத்தைப் பலப்படுத்து கின்றன. 'களிகள மோள டக்கெ' போன்றவை தெலுங்குச் சொற்கள் அல்ல. இது உண்மையானல் கோட்ட வம்சத்தின் மூல புருஷனகிய தனஞ்ஜயன் பாரதத்து அர்ஜுனனக இருக்க முடியாது. ரே நாட்டுச் சோழர்களில் காணப்படும் தனஞ்ஜயனக இருக்கவேண்டும்—(புண்ணிய குமாரனுடைய சாஸனத்தில் காணப்படுகிறவன்). வெல நாட்டுச் சோழர்களுக்கும் கோட்ட வம்சத்தினருக்கும் உறவு முறை இருந்திருக்கிறது. இவ்விரு பிரிவினரும் சதுர்த்தர்க ளென்று சொல்லிக் கொண்ட சோழர் களென்று தோன்றுகிறது. திரிலோசன பல்லவனைப் பற்றிச் சொல்லும் பல்லவ சரித்திரத்திலிருந்து இவர்களும் துர்ஜய சந்ததியார் என்று ஊகிக்க இடமிருக்கிறது. கோட்ட வம்சத்தார் சோழப் பட்டம் தரித்தவர்களாகையால் இவர்கள் இக்காலத்துக் கம்மவாருக்கும் ஆந்திர க்ஷத்திரியர்களுக்கும் மூல புருஷர்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

## கரிகாலனைப் பற்றிய வேறு சில செய்திகள்[1]

இம் மன்னன் உறையூரில் ராஜ்யத்தை ஸ்தாபித்தவன். திரிலோசன பல்லவனைத் தோற்கடித்துத் தொண்டை மண்டலத்தை வசப்படுத்திக் கொண்டவன். பின்பு ஆந்திர தேசம் முடியத் தன் ஆட்சியைப் பரப்பியவன் என்று தோன்றுகிறது. அதனல் திரிலோசன பல்லவன் கொஞ்ச காலம் காளஹஸ்தியிலும் கொஞ்ச காலம் தரணிக் கோட்டையிலும் தன் ராஜ்யத்தை மாற்றி ஆண்டான். கடைசியில் கரிகாலனுக்கு அடங்கிய சிற்றரசனய் விட்டான் என்றும் தெரிகிறது.

---

1. "Trilochana Pallava & Karikala Chola" என்னும் புத்தகம்.

கரிகாலன் பொத்தப்பி நாடு தொடங்கி நெல்லூர் வரையில் (சித்தூர், கடப்பை, நெல்லூர் ஜில்லாக்கள்) இருந்த பல காடுகளை அழித்து நாடாக்கினன்; பொத்தப்பி நாடு, புலுகு நாடு என்ற இரு பிரதேசங்களாக வகுத்து அங்கே விவசாயத்தை விருத்தி செய்தான். இவன் 101 சிவன் கோயில்களைக் கட்டுவித்தானென்று 'நியாயகல்லு' என்னும் ஊரின் அறிக்கை சொல்லுகிறது. புஷ்பகிரி, கமலாபுரம், கொண்டூரு (கடப்பை ஜில்லா), எர்ரகுடி, சடிபிரேல, பட்டவிராலி, குல்லமல்லி லேமல்லி (குண்டூர் ஜில்லா), ஆகிய இடங்களில் பல கோயில்களைக் கரிகாலன் கட்டுவித்தானென்று அவ்வூர்ச் சரித்திரங்கள் தெரிவிக்கின்றன. கடப்பை ஜில்லாவில் உள்ள பிராம்மண பல்லிக்குப் பக்கத்தில் குசுமாசல க்ஷேத்திரம் என்ற ஸ்தலம் இருக்கிறது. இதற்கு மேற்கே கரிகாலன் ஒரு குளம் வெட்டுவித்ததாகவும், இவன் காலத்திலேயே அங்கே பிராம்மணர்கள் பலர் வந்து குடியேறியதாகவும் பிராம்மணபல்லி சரித்திரத்தில் காணப்படுகிறது. இவன் பெயராலேயோ, இரண்டாம் கரிகாலன் பெயராலேயோ ஏற்பட்ட ஓரூர் தென்னாட்டில் இருக்கிறது.

கரிகாலனுடைய தந்தை சடைச் சோழன் என்று பழந் தமிழ் நூல்களும் வேறு சில சாஸனங்களும் சொல்லுகின்றன. சந்தவோலுச் செய்தி யொன்று இவனை வீர விக்கிரமசோழன் என்றும், இவன் தந்தை தவளாங்க மூதிகொண்டசோழன் என்றும், இவனுடைய தந்தை அகோபலசோழன் என்றும் சொல்லுகிறது. ஆனால் இதை நம்ப வேறு ஆதாரங்கள் இல்லை.

கரிகாலனுடைய எதிரியாகிய திரிலோசன—அல்லது முக்கட் பல்லவனும் மிகப் பிரசித்தி பெற்றவனே. இவன் 700 அக்கிரகாரங்களைப் பிராம்மணர்களுக்குத் தானம் செய்தானென்றும், சமண, பௌத்த மதங்களைப் பரவாமல் தடுத்துச் சைவ மதத்தை வளர்த்தானென்றும் சரித்திர மூலம் அறிகிறோம். இவன் 70 அக்கிரகாரங்களைத் தானம் செய்ததாகச் சாஸனம் ஒன்றால் தெரிகிறது. இவன் குடும்பத்தோடு தினந்தோறும் காசிக்குப் போவானென்றும், இவனிடம் நினைத்தவுடன் நினைத்த இடத்துக்குக் கொண்டுபோகும் அதிசயப் பாதுகைகள் இருந்தனவென்றும் சொல்லுவார்கள். அதன் உதவியாலேயே தினந்தோறும் கங்கா

ஸ்நானம் செய்யும் பேறு இவனுக்குக் கிடைத்ததாம். இம் மன்ன னுடைய ஆட்சிக் காலத்துக்கு முன் சிவாலயங்களில் ஜங்கமர்கள், பவுண்டர்கள் என்னும் ஜாதியார் அர்ச்சகர்களாக இருந்து வந்தனராம். அவர்கள் வேத விதிப்படி பூஜை செய்வோர் அல்லர். அதனால் திரிலோசன பல்லவன் வேத விதிப்படி பூஜை செய்யும் பிராம்மணர்களைக் கோயிற் பூஜைக்கு அமர்த்தி, ஜங்கமர் முதலிய வர்களை விலக்கினனென்று பந்தர் ஸ்தல சரித்திரம் சொல்லுகிறது.

சைவ மதம் தமிழ் தேசத்துப் பக்தர்களாகிய நாயன்மார் களாலேயே உண்டானதென்றும், பிற்காலத்தில் இப் பல்லவன் காலத்தில் பிராம்மண மதமாயிற்றென்றும் சரித்திராசிரியர்கள் நினைக்கிறார்கள். கரிகாலனும் இப் பல்லவனும் ராஜ்யம் காரண மாக எதிரிகளானாலும், பல விஷயங்களில் இருவர் போக்கிலும் ஒற்றுமை இருந்திருக்கிறது. சைவ மதம் தழைக்கச் செய்த முயற் சியிலும், விவசாயத்தைப் பெருக்கிய முறையிலும், கோயில்களைக் கட்டுவித்த பணியிலும்இருவரும் ஒரேமாதிரி ஈடுபட்டிருக்கிறார்கள்.

நெல்லூர் ஜில்லாக் கோட்டைச் சரித்திரத்தால் திரிலோசன பல்லவனுடைய தந்தை தொண்டைமான் சக்ரவர்த்தி என்று தெரிகிறது. தல்பகிரி சரித்திரத்தால் இவனுடைய தாய் ஒரு பிராம் மணப் பெண் என்று தெரிகிறது. இதை மறைக்கவே பல்லவர்கள் தாங்கள் அசுவத்தாமாவின் சந்ததியார் என்று சொல்லிக் கொண்டு சாஸனத்தில் எழுதி இருக்கலாம். முற்பட்ட பல்லவ அரசர்கள் அப்படிச் சொல்லிக் கொள்ளவில்லை. இச் சரித்திர ஆரம்பத்தில் ஊகித்தபடி இவர்கள் அந்நிய நாட்டினராகிய பார்த் தியன் (யவனர்) சந்ததியார் என்னும் கொள்கை இச் செய்தியால் அடிபட்டுப் போகிறது. இவர்களும் ஆந்திரர்களைச் சேர்ந்தவர் களே என்று சொல்லலாம். ஆந்திர தேசத்தில் 'பல்லெகார்' என்னும் வகுப்பினர் தங்களைப் பல்லவர்களென்று சொல்லிக் கொள்வது உண்டு.

கரிகாலன் காசிக்குப் போயிருந்த பொழுது அவனுக்கு வந்த ஜுரத்தை நீக்கிய பிராம்மணர்களுக்குக் கடப்பை ஜில்லாவில் உள்ள புஷ்பகிரியைத் தானம் கொடுத்தானும். நியாயபல்லியும் பிராம்மணர்களுக்குத் தானம் கொடுத்த அக்கிரகாரமே. இச் செய்திகள் அந்த அந்த ஸ்தல சரித்திரங்களால் தெரிகிறது. கரி

காலனுடைய தந்தையாகிய சடைச்சோழன் பஞ்சத் திராவிட தேசங்களை ஜயித்து உறையூரில் இருந்து ஆண்டவன் என்று ஒரு சாஸனத்தால் தெரிகிறது. (S. I. I. Vol. No. 650) ஆனால் இதற்கு வேறு ஆதாரங்கள் இல்லை.

## துர்ஜய குலத்தினர் சதுர்த்தர்களான காலம்

விசேஷமான சில செய்திகளை இங்கே எழுதுகிறேன். 5-ஆம் நூற்றாண்டில் முக்கட் பல்லவன் ஆந்திர தேசத்தின் மேல் படையெடுத்தான். பல்லவன் அச்சமயத்தில் ஆந்திர தேசத்தை ஆண்ட துர்ஜய வம்சத்து அரசர்கள் மூவரைச் சிறைப் பிடித்துக் கொண்டு போனானென்றும், பின்பு கருணை சுரந்து அவர்களை விடுவித்து அவர்களுடைய ராஜ்யங்களையும் திருப்பிக் கொடுத்து விட்டானென்றும் மெக்கஞ்ஜீ உள்ளூர் அறிக்கையில் காணப்படுகிறது. அறிக்கையின் பகுதி 11, பக்கம் 770-இல் இருக்கும் முதனூர்ச் சாஸனத்தில் இவ்விஷயங்கள் இருக்கின்றன. கொண்டபடமடி சீமை, வெல நாடு, தரணிக் கோட்டை ஆகிய பகுதிகளை ஆண்ட அரசர்கள் 11, 12 நூற்றாண்டுகளில் எழுதுவித்த சாஸனங்களில், அவர்களுடைய ராஜ்யங்கள் திரிலோசன பல்லவனுடைய தயவால் சம்பாதிக்கப் பெற்றவை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் திரிலோசன பல்லவனிடம் தோற்ற அரசர்கள் மூவரும் துர்ஜயனுடைய வம்சத்தினரே என்றும் அவர்கள் கம்மவாரின் மூல புருஷர்கள் என்றும், ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள். வெல நாட்டு அரசர்களுக்கு மூல புருஷனாகிய மல்ல வர்மா, கொண்ட படமடி சீமை அரசர்களின் மூல புருஷனாகிய புத்த வர்மா, தரணிக் கோட்டை அரசர்களுடைய மூலபுருஷனாகிய தனஞ்ஜயன் ஆகிய மூவரும் திரிலோசன பல்லவனுடைய சம காலத்துச் சிற்றரசர்களென்றே தோன்றுகிறது. அக்காலத்தில் க்ஷத்திரியர்கள் மட்டுமே வர்மா என்ற பட்டம் வைத்துக்கொண்டிருந்ததாலும் இம்மூவரும் அப்பட்டத்தை வைத்துக் கொண்டிருந்ததாலும், இவர்கள் க்ஷத்திரியர்கள் என்பதில் சந்தேகமே இல்லை. இதைப் பற்றி முன்பே சொல்லி யிருக்கிறேன். இவ் வம்சத்தினர் தங்களைச் சதுர்த்தர்கள் என்று சொல்லிக் கொண்ட காலம் எது என்பதை அறிய முயல்வோம்.

உள்ளூர் அறிக்கைகள் சிலவற்றை ஆராய்ந்ததில் மேலே கண்ட அரசர்களுடைய காலம் வரையில் ஆந்திர தேசத்தில் பௌத்த, சமண, சார்வாக மதங்கள் ஏராளமாக எல்லா ஜாதியினரிடையிலும் பரவி யிருந்ததாகத் தெரிந்தது. பல்லவர்கள் தமிழ் நாட்டில் இருந்தவர்கள். சைவ மதப்பற்று மிகுந்தவர்கள். திரிலோசன பல்லவனும் சைவ மதத்தைத் தழுவிச் சைவப் பிராம்மண மதங்களை ஒன்று படுத்தினன். அம் மதத்தை அபிவிருத்தி செய்யப் பாடு பட்டு, வெற்றியும் பெற்றான். இதற்குத் தெளிவான ஆதாரங்கள் இருக்கின்றன.

இந்த முக்கட் பல்லவன் ஆந்திர தேசத்தை ஜயித்துத் துர்ஜய வம்சத்து அரசர்களை வசப்படுத்திக் கொண்டான். பிறகு ஆந்திர தேசச் சிவாலயங்களில் இருந்த ஜங்கமர்கள், பவுண்டர்கள் முதலிய (பிராமணரல்லாத) பூசாரிகளை நீக்கினன். வேத விதிப்படி அர்ச்சனை நடப்பதற்குப் பிராம்மண அர்ச்சகர்களை நியமித்தான். இவ்விஷயம் பந்தர் உள்ளூர் அறிக்கையால் தெரிகிறது. இவன் பௌத்த, சமண, சார்வாக மதங்களை அடியோடு அழித்தான் என்பது சந்தராப்பூர், மோட்டு பல்லி, காரஞ்சால, யாபூதி, ரேட்டூர், அனந்தவரம் ஆகிய ஊர்ச் சரித்திரங்களால் தெரிகிறது. மோட்டு பல்லியில் இருந்த பௌத்த விகாரங்களையும் காண்ட்ராஜுபாடு (நாகராஜுபாடு) வில் இருந்த சமணர் வீடுகளையும் இவன் நிலமட்டமாக்கினன். பௌத்த, சமண மதங்களிலிருந்த துர்ஜய வம்சத்துப் புத்த வர்மா முதலியவர்கள் தம் அரசனாகிய முக்கட் பல்லவனுடைய உத்சாகத்துக் கிணங்க இக்காலத்திலேயே பௌத்த, சமண மதங்களை விட்டுச் சைவர்களாகிச் சதுர்த்தர்கள் என்று சொல்லிக் கொண்டதாகத் தெரிகிறது. இவர்கள் பௌத்த, சமண மதங்களில் இருந்ததாலேயே இவர்கள் வம்சத்தில் பிற்காலத்திலும் புத்த, அருக வணக்கம் ஓரளவு காணப்படுகிறது. அக்காலத்தில் பௌத்த சமண மதங்களின் பேரிலிருந்த வெறுப்பினலேயே பிராம்மணர்கள் இவர்களைச் சதுர்த்தர்களாக்கினர்கள் என்று சொல்ல வேண்டும். அக்காலத்திலிருந்துதான் இவ்வம்சத்தினராகிய நதவாடி சீமை, கொண்டபடமடி சீமை, வெல நாட்டுச் சீமை அரசர்கள் சதுர்த்தர்க ளென்று சொல்லிக் கொண்டதாகத் தோன்றுகிறது. கோட்டை அரசர்களும் அப்படியே சொல்லிக்

கொண்டார்கள். துர்ஜய வம்சத்தினராகிய காகதீயர்கள் 11-ஆம் நூற்றாண்டு வரையில் சமணர்களாகவே இருந்தார்கள். ஆனாலும் மத வித்தியாசம் என்ற அற்ப காரணத்தினால் உறவு முறையை விட இஷ்ட மில்லாமல், சைவ மதத்தினராகிச் சதுர்த்தர்க ளென்று சொல்லிக் கொண்ட மேற் கண்ட அரசர்களுடன் சம்பந்தம் செய்து வந்தார்கள் என்று நாம் இப்போது நிச்சயமாக நம்பலாம். க்ஷத்திரியர்களாகிய அவர்கள் சூத்திரர்களோடு சம்பந்தம் செய்து வந்தார்கள் என்று நினைப்பது தவறு.

காகதீயர்களும் சைவ தீக்ஷை பெற்றுக் கொண்ட பிறகே சில சாஸனங்களிலும் நூல்களிலும் தங்களைச் சதுர்த்தர்களென்று சொல்லிக் கொண்டார்கள். மல்யால குண்டைய சேனாபதியும் அவர் மனைவி குப்பாம்பாளும் இப்படி மாறிய சைவர்களே என்பது அவர்கள் கட்டுவித்த சிவாலயங்கள் மூலம் தெரிகிறது. இவர்கள் தங்களுடைய சாஸனங்களிலே துர்ஜய குலத்தினரென்றும் சதுர்த்தர்களென்றும் எழுதி யிருக்கிறார்கள்.

காகதீயர்கள் முதலில் சமணர்களாக இருந்ததாலேயே துர்ஜய வம்சத்தில் 12—ஆம் நூற்றாண்டு வரையில் பெயரளவி லாவது பௌத்த, சமண மதத்தைச் சேர்ந்தவர் இருந்து வந்தனர். இவர்கள் சைவ தீக்ஷை பெற்ற பிறகு நம் தேசத்தில் அந்த மதங்கள் மெல்ல மெல்லக் குறைந்து விட்டன. க்ஷத்திரியர்களாகிய காகதீயர்கள் சதுர்த்தர்களுடன் ஏன் சம்பந்தம் செய்து வந்தார் கள் என்று இது வரைக்கும் சந்தேகப்பட்ட ஆராய்ச்சியாளர் களுக்குக் காகதீயர்கள் தம் சுய ஜாதியினருடனேயே சம்பந்தம் செய்து வந்தார்க ளென்பது புலப்படும்.

க்ஷத்திரிய சூத்திர சம்பந்தம் முற்காலத்தில் இல்லை என்பதை உறுதிப் படுத்தும் விஷயத்தால் பனிப் படலம் பிரிந்தது போல் பழைய சந்தேகம் ஒழிந்தது சந்தோஷம் தருகிறது.

முடிவு இதுதான் : க்ஷத்திரியர்களான துர்ஜய வம்சத்தினர் சிலர்—முக்கட் பல்லவனுடைய ஆட்சிக்கு உட்பட்டவர்கள்—முக்கட் பல்லவன் காலத்திலிருந்து சதுர்த்தர்கள் ஆனார்கள் என்பதே. வைஷ்ணவ மதம் தலை தூக்கிய காலத்தில் இவர்களுள் சிலர் பழையபடி க்ஷத்திரியர்கள் ஆனார்க ளென்று தோன்றுகிறது.

## அநுபந்தம்

### 1. ஆஞூரி போத்தி நாயுடுவின் ஸ்ரீ காகுளம் சாஸனம்:

"ஸ்வஸ்தி, ஸகல புவன ராஜ்ய லக்ஷ்மீ நிவாஸ சலமத்து கண்ட்ட சௌச காங்கேய ஸகல லக்ஷ்மீநிவாஸ விவேக கமலாசன ஷிஷ்ட ஸமுத்தரண பதிகார்ய்ய ஸாதக பரநாரீ தூர பதிமெச்சு கண்ட, துர்ஜய குல விபூஷண வார்த்தி வர்த்தன ஸௌதாகர ஸத்ய ரத்னாகர ஸ்வாமித்ரோகர கண்ட்ட ஸஹகார நிவாஸ பிடுவருதித்ய சதுர்த்த வம்ச ஆ (ஞூரி) புரவரா தீச்வர துங்கபத்ரா நதி தீர ஸ்ரீ சோட நாராயண தேவ திவ்ய ஸ்ரீ பாத பத்மாராதகுலேன ஸ்ரீமது ஆஞூரி மல்லிநாயுனி கொடுகு போத்தி நாயுடு ஸ்ரீ காகொலனி ஸ்ரீ வல்லபுனிகி தீபானகு பெட்டின மோதாலு 25, பறுதிகட பக்த்துமு ஸேநு வீனிஞ்ஜேகொனி நிமகெட போத்தன போயுடு நித்ய மானெடு நெஇ நடப கலவாடு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ—"

S. I. I. Vol. IV, PP 317.

### 2. எருவதொண்டைய ராஜுவின் மனைவி மயிலம தேவியின் ஸ்ரீபீமேச்வராலய சாஸனம்:

"......புலு 1043 ஸ்வஸ்தி ஸமஸ்த புவனாச்ரய...மகா ராஜாதி ராஜ ராஜ பரமேச்வர பரமபட்டரக ஸத்யாச்ரயகுல திலக ஸ்ரீமத் த்ரிபுவன மல்ல தேவர பிரவர்த்தமான விஜய ராஜ்யமுத்த ரோத்தராபி விருத்திகா ஸ்ரீமத் சாலுக்ய விக்ரம ஸம்வத்ஸர 46 ஸ்ராகி சைத்ர பஹுல அமாவாஸ்யையு புதவாரமுனண்டு ஸ்வஸ்தி ஸமதிகத பஞ்ச மகாசப்த மகாமண்டலேஸ்வர வீர மகேச்வர கோடுரு புரவரேச்வர சூர்யிய வம்சோத்பவ குல திலக காச்யப கோத்ர கரிகாலான்வய காமாதி ஸமஸ்த ப்ராஸஸ்த ஸகிதம் ஸ்ரீமந் மகாமண்டலேச்வர எருவ தொண்டயராஜுல மகாதேவி மயிலம தேவுலு ஸ்ரீ பீமேச்வர மகாதேவரகும் பெட்டின அகண்ட வர்த்திலோக தண்டுதிவிய 1; தீனிகினு சந்த்ரார்க்கமு நெயி சரியிம்ச்சுவாருக ஸ்ரீ பீமேச்வர மகாதேவர கிலர

முன நாவபோல புரோலயயு நெறிய போல பாதயயும் காட்ட போல பண்டயயு...திராசினுவய..."

S. I. I. Vol. IV, PP 420.

3. (எருவ) அனதேவ மகாராஜனுடைய ஸ்ரீ பிமேச்வராலய சாஸனம்:

நம். 1347

"ஸ்வஸ்தி ஸ்ரீ சகவருஷம்புலு 1326 அகு நேண்டி தாரண சம்வத்ஸர சிராவண சுத்த 15 ஸோ || ஸோமக்ரஹண புண்ய காலமு நந்து ராஜாதி ராஜ பரமேச்வர பூர்வ சிம்மாஸனதீச்வர பரம மாகேச்வர சோட வம்சோத் பவுடைன பக்தி ராஜுங்காரி குமாருடு அனதேவ மகா ராஜுங ஸ்ரீமத் தாக்ஷா ராம புராதீச்வ ருண்டைன ஸ்ரீ பிமேச்வர ஸ்ரீமங் மகா தேவுனி குடிமீந்தனி சுவர்ண கசிதமுசே (ஸி) ஸுவர்ண வ்ருஷபமுலானு, ஸுவர்ண கலசமுன்னு ஆச." (மீதிச் சாஸனம் பிரதி செய்ய முடியாத இடத்தில் இருக்கிறது) S. 1. I. Vol. IV, PP 474.

நம். 1348

"ஸுர்ய்யோ யஸ்யகுலே (ச்வ) ரோ (கு) ணநிதி: ஸ்ரீ சோட பக்த : பிதாஸார்த்தாஞம் சரணர்த்தி...வனம் ஷட்கால மீசார்ச் சனம்/ கிஞ்சாபா (ரி) தமன்ன (தா) நமகி (லே) ர்நித்ய...பூபு (ஜ:) தன்யோயம் (ப்ரு) சமன்ன தேவ ந்ருபதிர் ஜீயா பதிர் யச: பதி : || "

4. விப்ரல அமரி நாயக்கனுடைய பெஜவாடா சாஸனம்:

"ஸ்வஸ்தி ஸமடிகத த்வம்ச்ச மகாசப்த ஸாமந்த்த துரக ரேவம்த்த ங்ன்னி துர்ஜ்ஜயகுல விபூஷண தெலம தம்லின ஸான பெறயதி குரஜதி பட்டார திவ்ய ஸ்ரீ பாதபத் மாராதக பரபல ஸாதக சுவாமித்ரோக குலாம்த்தக சங்க்ராமபீம பபரி வலன பரசுராம சரணகத ஜீவரக்ஷ க்ருதயுக பாதாரண பரநாரீ தூர பர ஹிதாதி சரணகத நாராயண வெலங்கோடி மத்தான்வய பவித்ர ஸத்யநி போத்ர சவுச காங்கேய கொத்தங் கோன ராச குடிய கோபுல மாரி புலியமார்க்கொலுவ கடக முன்னெறுவ மம்ட்டவிக தூமகேதுலைன ஸ்ரீமது விப்பர்ல அமரி நாயகுண்டு சகவருஷம்புலு

1158 குனேன்டி பால்குண சுத்த பாட்யமி குருவாரமுன மல்லீச்வர ஸ்ரீ மகா தேவர ககம்ட்ட தீபமுனகிச்சின மோதாலு 25 ‖ வீரிஞ்சேகொனி கேதெபோயுண்டு தன புத்ராலு பௌத்ரிகமு நித்ய......கலவாடு ‖" S. I. I. Vol. IV, PP. 243.

5. ஸாகி மனுமசாகி கணபய ராஜுவின் அநுமஞ்சி பல்லெ சாஸனப் பகுதி:

"லக்ஷ்மீ வல்லப நாபிகாமரஸதோ த்விஸ்ஸப்த லோகப்ர்ஜா ‖ ஸர்க்காரம்ப விதுத் ஸுராவிர பவத்பிரம்மா சதுர்ப்பிர்ம்முகை தஸ்யை வாஸ்ஸ புஜோருபாத விஷயா தாவிர் பபூவுக்கில பிரம்ம க்ஷத்திரிய வைஸ்ய சூத்ர விதயா வர்ணும் சதுர்த்தாக்ரமாத். ‖

"தத்ராஸ்தி பாகுஜ குலாபரணம் தபோபிர்வ்
விப்பர்ல வம்ச இதி விப்ரக ரோபமாநுத்."

(Ins. No. 283 of 1924.)

6. ஸாகி போத்த ராஜுவின் பெஜவாடா சாஸனப் பகுதி:

"ஸ்ரீ ‖ ஆசித் துர்ஜய வம்ஸாப்தி ரராயோ ஹரிவிக்ரம:
பிராகிச ஸத்ரிச: ஸ்ரீ மாம் பச்சி மாதீச்வரோபமா: (1)
தஸ்யான்வவாயத பவத் தீமான் தோர மஹீபதி:
தஸ்ய புத்ரோபவத்ராஜா பீமோ பீம பராக்ரம: ‖ (2)
தஸ்யப்ராதாத்ம ஜோவீரஸ்த்யாகி போக புரந்தர:
சசாஸ நகரீம் ஜிஷ்ணோர்க்கந்தன ஸ்யேகநர்வ்வத: ‖ (3)
தத:ஸ்தஸ்யாக்ர ஜாத்பீம புத்ராத் வோரந்த்ரிபாத்புவி
ஜாதவான் போதபூபால ஸ்த்யாக ஸாகச சந்த்ர்மா: ‖ (4)"

—S. I. I. Vol. IV, PP. 244.

7. மல்யால காட்ட சேநாபதியின் கொண்டிபர்த்தி சாஸனப் பகுதி:

"மல்யாயாம் புரிபரிவ்ருடோ துர்ஜ்ஜ யாம்ஞய வல்லீ
குந்தத்யுதினி பயசோ தௌத திக்கும்பிகும்பம்
ஸித்தாஸிக்ருதரிபு ம்ருக லோசன: கேசரேந்த்ரப்ரக்ய:
ப்ரதன விஜயே ஸைன்ய போதன்ன பாக்ய: ‖"

—தெலிங். சாஸ. பக். 42.

இதில் வரும் அன்ன சேனாபதியே மல்யால வம்சத்தின் மூல புருஷன்.

8. கோட்டூரி எரியம நாயக்கனுடைய ஸ்ரீ பிமேச்வராலய சாஸனப் பகுதி:

"தஸ்யாபூதிஷ்ட ப்ருத்யோரகுகுல திலகந்யேவ வாயோஸ்தனுஜ: கொம்மாம்பா நந்தனோ த்விஜவிபுத தருஸ்ஸப்ப நாக்யாக்ரஸூனு: ஸ்ரீ மாநொர்ப்பாபிதான: பதிஹித சரிதைஸ் தோஷயித்வாநிஜேசம் கோஷ்டாகாராதி காராம்த்ருவமலபதய:ஸ்ரீநிதிஸ்சோடபூபாத் ‖"

—S. I. I. Vol. IV. P P. 374.

9. மல்யால சௌண்ட சேனபதியின் கொண்டிபர்த்தி சாஸனப் பகுதி:

"ஸ்ரீமத் துர்ஜய வம்ச வாரிதி விதுர்னிர்வ்யாஜ பிந்துஸ்ஸதாம்
பூமோதம் நபநாமதேய விதிதுர்மல்யால நாதோபவத்
கிர்த்யா யஸ்ய ஸிதீக்ருதே தினகரே ஜாதே ஸூதாம் ஸோஸ்ஸமம்
பேதத்யோத: மஸ்யலக்ஷண மபூதன்னக்ஷ மேதச்சிராத் ‖"

—தெலிங். சாஸ. பக். 19.

10. நல்லூரி வெல்லாலனுடைய சாஸனம்:

................................................"சக வருஷம் புலு 1037 ..................................................ஜூலப்ரவர்த்தமான விஜய ராஜ்ய ஸம்வத்ஸ 46 ஸ்ர கிகம் க்கொண்ட சோட வலனுன்டி குத்தவாதினுன்டி பெத்தடாகரேமி ஸ்ரீ பிமேச்வர மகாதேவரகு விஷூவுஸங்க்ராந்தி நிமித்தமுன ஜயங்கொண்ட சோடமண்டல முன வுணகோட்டத்து கண்ட்ரய பேரூரு நாட்டு க்ஷத்திரிய சிகா மணி நல்லூரு வெல்லாலுண்டு வாமனக்கியாண்டம் கோவம கம்க்கொண்ட சோட வலனுன்டி பன்டனி மாவிண்டிவாட மாரட்டடிகமு வலயு சுட்ட அலமு யேனு வுட்லு நேலகண்ட்ர ஸோஷ ஸல்வி ஸம்பதலதோம் கூடம் அடவல்ல தேவர நம்பி ராட்டிகி.. ......"

—S. I. I. Vol. IV, P P. 464.

11. அடப்ப விஷ்ணுவர்த்தன பிரம்மாதி ராயருடைய சாஸனப் பகுதி:

"ஸ்வஸ்தி ஸ்ஸமஸ்த புவனுச்ரய ஸ்ரீப்ருதி வல்லப மகா ராஜாதி ராஜ ராஜ பரமேச்வர பரம பட்டரக ரவிகுல திலக சோடகுல சேகர பண்ட்ய குலாந்தக சமஸ்த ராஜாச்ரய ராஜ.

ராஜேந்த்ர வீர மகேந்த்ர விக்ரம சோட விஜயாபரண ராஜ கேசரி வர்ம்ம பெர்ம்மனடிகளு கங்கா காவேரி பர்ய்யந்த ஸப்தமோ விஷ்ணு வர்த்தனு த்ரிபுவன சக்கரவர்த்தி ஸ்ரீ குலோத் துங்க சோட தேவர ப்ரவர்த்தமான விஜய ராஜ்ய ஸம்வத்ஸர 43 ண்ட ச்ரகிதின 330 னுத்தராயண ஸங்க்ராந்தி நிமித்த முனம் பெந்தல பாக பிமயயைன அடப்ப விஷ்ணுவர்த்தன பிரம்மாதி ராயரு தமையகு தர்ம்மார்த்த முகா ஸ்ரீ பிமேச்வர மகாதேவரகும் பெட்டின யகண்ட வர்த்திலோஹ தண்டு திவிய ॥ "(1)

—S. I. I. Vol. IV. P. P. 465.

**12. நிடுதப்ரோலி மகாதேவ சக்ரவர்த்தியின் மகளாகிய பினஉதய மகாதேவி எழுதிய க்ஷீரராமேச்வராலய சாஸனப் பகுதி:**

**நம். 124**

"சக வருஷம்புலு 1228 குனேன்டி பவுஷ்ய ப.7 மங்கள வரன ஸ்ரீ விஷ்ணு வர்த்தன மகாராஜு லைன நிடுதப்ரோலி மகாதேவ சக்ர வர்த்தி கூந்துரு பினவொதய மகாதேவி அம்மங் காரு தமதல்லி தண்ட்ருலகு தர்ம்முவு காநு யுத்தராயண ஸங்க் ராந்த்தி நிமித்யமுன க்ஷீரராமீச்வர ஸ்ரீ மகா தேவரகும் பெட்டின அகம்ட்ட திபமு பொலமு க.3 இ க்ஷேத்ரமு பானரான விப்பநு தனு யுரியுத்தரான பொலான ஸரிர்ய்யலோன ஸேனு க. 2 அந்த இனன்யமுலனு தேவரகுடி படுமடனு நிவ்யேசனமு 1 அந்த கோஷ்டகமு படுமடனு பெடலுந்த ககலேட்டி பொலன க்ரொ யேடி பொலமேர யுத்தரஸேனு க. 1 பெர ஸி 3 ஸேனுனு பெட லுனு இல்லு பட்டுனு வீனிம்ச்சே கொனிலோகெ போஇனி ஆன்ய போஇனி கொடுகு கொம்மன போயுண்டு நித்ய நந்தி மானிக மான்யெண்டு நெஇ ஆசந்த்ரார்க்கஸ்தைக கடபங் கலவாண்டுவி ॥ ......"

—S. I. I. Vol. VI, P P. 46-47.

முற்றும்